
கி.பி. 1800இல்
கொங்குநாடு
புலவர் செ. இராசு
இடைப்பாடி அமுதன்

DEPUTY DIRECTOR
DEPT. OF ARCHAEOLOGY
CHENNAI-600 008.

# கி.பி. 1800இல்

# கொங்குநாடு

புலவர் செ. இராசு

இடைப்பாடி அமுதன்

வெளியீடு:

**அனுராதா பதிப்பகம்**
9, ஜலகண்டபுரம் ரோடு,
இடைப்பாடி - 637 101
சேலம் மாவட்டம்.

**கொங்கு ஆய்வு மையம்**
58/2, பாலக்காட்டுத் தோட்டம்,
புதிய ஆசிரியர் குடியிருப்புப் பாதை
ஈரோடு - 638 011

**கி.பி. 1800இல் கொங்குநாடு**
புலவர் செ. இராசு / இடைப்பாடி அமுதன்

முதற் பதிப்பு : டிசம்பர், 2013

**விலை : ₹ 190/-**

© அனுராதா பதிப்பகம்

நூல் கிடைக்குமிடம்:

- அனுராதா பதிப்பகம், இடைப்பாடி - 637 101
  கைபேசி: 94873 23457 / 94422 23457

- கொங்கு ஆய்வு மையம், ஈரோடு - 638 011
  தொலைபேசி: 0424-2262664 / 97900 38380

**Ki-pi 1800-il KONGUNAADU**
by : **Pulavar S. Rasu / Idaippadi Amudhan**

| | | |
|---|---|---|
| First Edition | : | December, 2013 |
| Pages | : | 344 |
| Letter Size | : | 11 pt. |
| **Price** | : | **₹ 190/-** |

*Published by:*

**ANURADHA PATHIPPAGAM**
9, Jalakantapuram Road,
IDAPPADI - 637 101,
Salem District.
Mobile : 94873 23457

**KONGU AAIVU MAIYAM,**
58/2, Palakkaattu Thottam,
New Teacher's Colony Road,
ERODE - 638 011.
Tel : 0424 - 226 2664.

ஒளி அச்சு : சு. அசோக்குமார்

அச்சிட்டோர் : ஜோதி எண்டர்பிரைசஸ்,
சென்னை - 600 005.

த. ஸ்டாலின் குணசேகரன்
தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை
ஈரோடு.

# அணிந்துரை

**பொது**வாகவே இந்தியாவில் வரலாறு இருக்கும் அளவுக்கு வரலாற்றுப் பதிவு இல்லாமல் இருக்கிறது என்பதை அனைவருமே ஒப்புக்கொள்வர். எதையும் பதிவு செய்ய வேண்டும், ஆவணப்படுத்த வேண்டும், அடுத்த தலைமுறைக்கு அவற்றைப் பாடமாக விட்டுச் செல்லவேண்டும் என்ற சிந்தனை நம் முன்னோர்களிடம் மிகக் குறைவாகவே இருந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

மேலை நாடுகள் சிலவற்றில் அவரவரின் குடும்ப வரலாற்றைக் கூட வழிவழியாக, தலைமுறை தலைமுறையாக எழுதிப் பதிவு செய்து கண்ணின் கருமணி போல தொடர்ந்து அடுத்தடுத்த வாரிசுகள் அதனைச் செழுமைப்படுத்தியும் பாதுகாத்தும் வருகின்றனர். குடும்ப வரலாற்றைக் குறித்து வைப்பதில் குறையிருந்தாலும் அந்தந்த காலகட்டத்துச் சமூக வரலாற்றையாவது பதிவு செய்து பாதுகாத்திருக்கிறோமா என்பதும் கேள்விக்குறியே!

இத்தகைய நிலையிலும் வரலாற்று உணர்வு மிக்கவர்கள், சமூக அக்கறை மிக்க வரலாற்று ஆய்வாளர்கள், வரலாற்றைத் தனது வாழ்வியலாகக் கொண்ட விரல் விட்டு எண்ணத்தக்க சில வரலாற்றியல் வித்தகர்கள் நம்மிடையே தோன்றி வரலாற்றை வளப்படுத்தும் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருப்பது பெரும் பாராட்டிற்குரிய செயலாகும்.

அத்தகைய சிறப்பம்சங்கள் கொண்ட புலவர் செ. இராசு, இடைப்பாடி அமுதன் ஆகிய இரண்டு பெருமக்கள் இணைந்து 'கி.பி. 1800இல் கொங்குநாடு' என்னும் இந்நூலைப் படைத்துள்ளனர். இவர்களே தங்களது 'அனுராதா பதிப்பகம்', 'கொங்கு ஆய்வு மையம்' ஆகிய அமைப்புக்கள் மூலம் இந்நூலைப் பதிப்பித்தும் வெளியிட்டும் உள்ளனர்.

'பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ' என்ற பாரதியின் ஆவேசமிக்க கேள்விக்கு அடித்தளமிட்டவர்கள் ஆங்கிலேயர்கள். வணிகம் செய்ய வந்தவர்கள் படிப்படியாக ஆட்சி செய்யும் அளவுக்கு தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண்டனர். காலங்காலமாக இங்கிருந்த மண்ணின் மைந்தர்களைத் தாழ்த்தி, அழுத்தி தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் விதத்தில் அடிமைப்படுத்தினர்.

அக்காலச் சூழலில் அவர்களின் ஆட்சி அதிகாரத்தை ஆழப்படுத்திக் கொள்ள அவர்கள் எடுத்த நடவடிக்கைகளில் சில இக்காலத்தில் நமக்கு, நம்முடைய கடந்தகால வரலாற்றை அறிந்துகொள்வதற்கு ஏற்புடையதாக அமைந்திருக்கிறது. அவர்களின் நோக்கம் வேறாக இருந்தாலும் இந்தக் காலகட்டத்தில் நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அவர்களின் அக்கால நடவடிக்கைகளில் சிலவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்.

அன்றைய ஆங்கிலேய கவர்னர் ஜெனரல் மார்க்விஸ் வெல்லெஸ்லி பிரபு, 1799ஆம் ஆண்டு திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களை எதிர்த்து நடந்த நான்காம் மைசூர்ப் போரில் களப்பலியான பிறகு, மைசூர் ராஜாவுக்குக் கீழிருந்த பகுதிகளையும் அதற்கு முன்பு நடைபெற்ற போர்களில் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கிடைத்த பகுதிகளையும் கள ஆய்வு செய்யத் திட்டமிட்டார். அத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு அப்போது கிழக்கிந்தியக் கம்பெனியின் வங்காளப் பிரிவில் மருத்துவராகப் பணியாற்றி வந்த டாக்டர் பிரான்சிஸ் புக்கானன் என்பவரைத் தேர்வு செய்து அவருக்கு

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் பல்முனை ஆய்வு செய்யும் பணியை ஒப்படைத்தார். அதற்கான சிறப்பு உத்தரவை டாக்டர் புக்கானனுக்கு வழங்கினார். ஆய்வின் நோக்கங்களையும் டாக்டர் செய்யவேண்டிய பணிகளையும் விளக்கிச் சொன்னதோடு இறுதியில் விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவும் டாக்டரைப் பணித்தார் கவர்னர் ஜெனரல்.

கவர்னர் ஜெனரலின் இந்த விரிவான திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிட உடனிருந்து ஒத்துழைக்கும் விதத்தில் ஒரு பெரும் குழுவையே டாக்டர் புக்கானனுடன் அழைத்துச் செல்லவும் வழிவகை செய்துள்ளார் கவர்னர் ஜெனரல். சாலை வழிகளைக் காட்ட முறையான வரைபடம் (Map) டாக்டரிடம் வழங்கப்பட்டது.

1800ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் தேதி மதராசிலிருந்து புக்கானன் புறப்பட்டார். அவருடன் வழிகாட்டி, காவலர்கள், மொழிபெயர்ப்பாளர், படம் வரைபவர் என்று பலர் சென்றதோடு, குதிரைகள், மாட்டு வண்டிகள், கூடாரங்கள் என்று ஒரு பெரும் பரிவாரமே சென்றுள்ளது. போகிற இடங்களில் பல இடங்களில் கூடாரங்களை அமைத்து ஒரு நாள், இரண்டு நாட்கள் என்று அதில் தங்கியிருந்து ஆங்காங்கு கள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இன்று உள்ளதுபோன்று நல்ல போக்குவரத்து வசதியோ, சாலை வசதிகளோ, தொலை தொடர்புச் சாதனங்களோ, மின்சார வசதியோ இல்லாத காலத்தில் அவ்வாறு ஓர் ஆய்வுப் பயணத்தை மேற்கொள்வது ஏராளமான இன்னல்களையும் இடையூறுகளையும் சந்திக்கும் சூழல்களை உருவாக்கி யிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மனவலிமையும், கடமையுணர்வும் மிக்கவர்களாலேயே அத்தகைய பயணத்தை மேற்கொள்ள முடியும். திட்டமிட்டபடி வழிநெடுக உள்ள ஊர்களில் வாழும் மக்களின் வாழ்க்கையை சித்தரிக்க இந்த ஆய்வு மூலம் பெரும் முயற்சியை மேற்கொண்டுள்ளார் டாக்டர் புக்கானன்.

அந்தந்தப் பகுதிகளின் இயற்கை வளம், மக்கள் தொகை, விளைபொருட்கள், விலைவாசி, விவசாயம், தொழில், நீர்ப்பாசனம், மக்களின் பழக்கவழக்கங்கள், சாதிய அமைப்பு முறை, மண் வளம், கால்நடைகள் போன்ற அத்தனை முக்கிய அம்சங்கள் பற்றியும் ஆழமாக ஆய்வுகள் செய்துள்ளார்.

இவர் செல்லுகிற பகுதிகள் அனைத்திற்குமான மாவட்ட ஆட்சித் தலைவர்களாக விளங்கிய ஆங்கிலேயர்கள் அனை வருக்குமே இவரது பயணத் திட்டத்தையும் நோக்கங்களையும் விளக்கி ஆட்சியாளர்களிடமிருந்து முறையான சுற்றறிக்கை முன்கூட்டியே அனுப்பப்பட்டு விட்டது. டாக்டர் புக்கானனின் ஆய்வு முயற்சிக்கு அரசின் சார்பில் முழுமையாக ஒத்துழைக்கவும் ஆட்சித் தலைவர்கள் உத்தரவிடப் பட்டிருந்தனர்.

இரண்டொரு ஆட்சித் தலைவர்களைத் தவிர மற்ற ஆட்சித் தலைவர்கள் அனைவரும் டாக்டருக்கு நல்ல ஒத்துழைப்பை நல்கியுள்ளனர்.

டாக்டர் புக்கானன் மேற்கொண்ட இந்த ஆய்வின் மூலம் நமக்கு அக்கால அரிய தகவல்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அப்போதைக்குக் கண்ணில் கண்ட காட்சிகளைப் பதிவு செய்ததோடு அதற்கும் நூறாண்டுகளுக்கு முன்பு நடந்த வரலாற்று நிகழ்வுகள் பலவற்றை அம்மக்களிடம் கேட்டறிந்தும் பதிவு செய்துள்ளார்.

டாக்டர் புக்கானன் ஓர் ஆங்கிலேயர் என்பதையும், அவர் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் பணி செய்த அலுவலர் என்பதையும், ஆங்கிலேய கவர்னர் ஜெனரலின் உத்திரவுக்கு உட்பட்டு ஆய்வுகளை மேற்கொண்டவர் என்பதையும், ஆங்கிலேய ஆட்சியை வலுப்படுத்தும் நோக்கத் திற்காகவே இந்த ஆய்வை மேற்கொள்ளப் பணிக்கப்பட்டார் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டியது அவசியம். அதே சமயத்தில் டாக்டர் கொடுத்திருக்கிற தகவல்களும் புள்ளி விபரங்களும் நமக்கு மிகவும் பயனுள்ளவையாகும்.

நம்முடைய முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இவரின் ஆய்வுகள் நமக்குப் பெரிதும் உதவுகின்றன.

காலிங்கராயனைப் பற்றி இருநூற்றிப்பத்து ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் என்னென்ன வரலாற்று உண்மைகளை அறிந்து வைத்திருந்தனர் என்பதை இந்நூல் மூலம் நம்மால் துல்லியமாக அறிந்துகொள்ள முடிகிறது. காலிங்கராயன் கட்டிய கால்வாய் மூலம் மக்கள் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளனர் என்பதையும் இந்நூல் நமக்கு நன்கு உணர்த்துகிறது.

ஒவ்வோர் ஊரிலும் எத்தனை வீடுகள் இருந்தன என்பதையும் அந்த ஊரின் மக்கள் தொகை என்ன என்பதையும் புள்ளி விபரமாகவே இந்நூல் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். ஆட்சி அவர்களிடத்தில் இருந்ததால் ஆட்சித் தலைவர்கள் உள்ளிட்ட உயர்மட்ட அரசு அதிகாரிகள் டாக்டர் புக்கானனுக்கு அன்று அரசு சேகரித்த புள்ளி விபரங்களையே அளித்துள்ளனர்.

வங்காளத்தில் முழுமையாகப் பணியாற்றியவர் என்ற முறையில் இடையிடையே வங்க மக்கள் வாழ்வோடு ஒப்பிட்டு தனது கருத்தை டாக்டர் பதிவு செய்துள்ளார். தமிழகத்தில் காஞ்சிப் பகுதிக்குச் செல்லும்போது, "பாதைகளில் தர்மவான்கள் அமைத்தள்ள சுமைதாங்கிக் கற்கள் பல இடங்களில் இருக்கின்றன. பயணிகள் வசதிக்காக சத்திரங்கள் உள்ளன. இவை வங்காளத்தில் காணப்படுவதில்லை" என்று பதிவு செய்துள்ளார்.

"கல்கத்தாவில் உள்ளவர்களைப் போன்று ஆர்க்காட்டிற் கருகில் முஸ்லிம் பெண்கள் எருதுகளின் மீது சவாரி செய்து சென்றதைக் கண்டேன். அவர்கள் வெள்ளைப் பர்தா அணிந் திருந்தனர்" என்றும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். வெறும் மேலோட்டமான ஆய்வினை மட்டும் மேற் கொள்ளாமல் சில இடங்களில் புக்கானன் சிரத்தையெடுத்தும் சிரமத்தைப் பாராமலும் துல்லியமான ஆய்வுகளைச் செய்துள்ளார்.

புக்கானனின் ஆய்வில் நில அளவைகளில் ஏமாற்று வேலை நடந்திருப்பது அம்பலப்பட்டுள்ளது. ஒரு வல்லம் என்பது 4.284 ஏக்கர் பரப்பளவாகும். இதைக் கேட்டுத் தெரிந்து கொண்ட புக்கானன் பொள்ளாச்சிப் பகுதியில் விவசாயிகள் அனுபவித்த நிலத்தை இவரே உரிய கருவிகளைக் கொண்டு உதவியாளர்களின் ஒத்துழைப்போடு அளந்து பார்த்தபோது 4.284 ஏக்கர் என்பதற்குப் பதிலாக 5.88 ஏக்கர் நிலத்தை ஒரு வல்லம் என்று சொல்லிக் கொண்டு விவசாயிகள் அனுபவித்துக் கொண்டிருந்ததைக் கண்டுபிடித்தாராம்.

இதேபோன்று இப்போது ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானி நகரம் ஈரோட்டைக் காட்டிலும் சிறு நகரம்தான். ஆனால் இவர் ஆய்வினை மேற்கொண்ட காலகட்டத்தில் ஈரோடு நகரத்தைவிட பவானி நகரத்திற்குத்தான் அதிக முக்கியத்துவம் இருந்திருக்கிறது. மாவட்டத் தலைநகரமாகவே பவானி இருந்திருக்கிறது. இதைவிட சுவாரஸ்யமான செய்தி பவானியைக் காட்டிலும் அந்தியூரின் மக்கள் தொகை அப்போது அதிகமாக இருந்திருப்பதை இவர் ஆய்வு வெளிக்காட்டியதுதான்.

இப்படி எத்தனையோ நுட்பமான, நுணுக்கமான வரலாற்றுச் செய்திகள் இந்நூலில் கொட்டிக் கிடக்கின்றன.

சேலம் மாவட்டம் குறித்து புக்கானன் ஆய்வு செய்யப் பணிக்கப்படவில்லையாயினும் கர்னல் அலெக்சாண்டர் ரீடு என்ற சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இவ்வாறே ஆய்வு செய்து அரசுக்கு சமர்ப்பித்த அறிக்கையை வைத்து சேலம் மாவட்ட வரலாற்றுச் செய்திகளும் இந்த நூலில் சேர்க்கப் பட்டுள்ளன.

கோபால நாயக்கர் உள்ளிட்ட ஆங்கியேலர்களுக்கு எதிராக கொங்கு நாட்டில் அணி திரண்ட பாளையக்காரர் களின் வீர வரலாற்றையும் (கி.பி. 1800-1801 கிளர்ச்சிகளை) இந்நூல் பேசுகிறது.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு கொங்குநாடு இருந்த நிலையை படம்பிடித்துக் காட்டுகிறது இந்நூல். கொங்கு நாட்டின் வரலாற்றை இன்னும் ஆழமான ஆய்வுகள் மூலம் வெளிக்கொணர்வதற்கான திறவுகோலாக இந்நூல் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

கல்வெட்டறிஞராக உலகறியப்பட்டாலும் பெரும் புலவர், தலைசிறந்த ஆசிரியர், அகழ்வாராய்ச்சி வித்தகர், வட்டார வரலாற்று நாயகர், நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர் என பன்முக ஆளுமை மிக்க முனைவர் புலவர் செ. இராசு அவர்களும், அமைதியாகவும் ஆழமாகவும் வரலாற்றுப் பெரும் பணியை மேற்கொண்டு வருபவரும், சர் தாமஸ் மன்றோ குறித்து சமீபத்தில் அரிதினும் அரிதான தகவல்களைத் திரட்டி, ‘கொங்கு நாட்டில் தாமஸ் மன்றோ’ என்ற சிறந்ததொரு ஆய்வு நூலை வெளியிட்டவருமான இடைப்பாடி அமுதன் அவர்களும் இணைந்து இந்நூலை தமிழ்கூறும் நல்லுலகத் திற்குப் படைக்கின்றனர்.

இந்நூல் வரலாற்று உணர்வு மிக்க அனைவரிடமும் இருக்க வேண்டிய ஆவணமாகும். கடந்த கால வரலாற்றைப் படித்துத்தான் எதிர்கால வரலாற்றைப் படைக்க வேண்டும். கொங்கு நாட்டின் வரலாற்றை வெளிக்கொண்டு வரும் பதிவுகளில் இந்நூல் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பிடிக்கவல்ல ஆவணமாகும்.

- த. ஸ்டாலின் குணசேகரன்

A-38, சம்பத் நகர்,
ஈரோடு - 638 011
தொலைபேசி : 0424-2269186

# முன்னுரை

**கொ**ங்கு நாட்டின் வரலாற்றைப் பலர் எழுதியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களான சேலம் பகடால நரசிம்மலு நாயுடு (சேலம் ஜில்லா பூகோள சாஸ்திரம் / 1873 / அரை அணா), தி.அ. முத்துசாமிக்கோனார் (1933), தருமபுரி டி.கோபால செட்டியார் (1939), புலவர் குழந்தை, மயிலை சீனி. வேங்கடசாமி, முனைவர் மு. ஆரோக்கியசாமி, புஸ்நாகி ராஜண்ணன் போன்றோர் கடந்த 140 ஆண்டுகளாக எழுதி வந்துள்ளனர். பல்வேறு மாவட்ட கஜட்டியர்களும் கொங்குமண்டல சதகங்களும் இந்தப் பணியைச் செய்துள்ளன. இவர்கள் தமக்கேயுரிய எழுத்து நடையில் இரண்டாயிரம் ஆண்டுக்கால கொங்கு நாட்டின் வரலாற்றை எழுதிச் சென்றுள்ளனர். அந்த வகையில் 'கி.பி. 1800இல் கொங்குநாடு' என்னும் இந்நூல் குறிப்பிட்டதொரு காலத்தை ஒட்டிய கொங்கு நாட்டின் வரலாற்று நூல்கள் வரிசையில் சேர்க்க முனைந்துள்ள முயற்சி.

ஆறு ஆண்டுகட்கு முன்னர்தான் எங்களிடையே அறிமுகம் தோன்றியது. அப்போது கி.பி. 1800-1801ஆம் ஆண்டுகளில் டாக்டர் பிரான்சிஸ் புக்கானன் சென்னையிலிருந்து மேற்கொண்ட பயணத்தின்போது பெங்களூரு, மைசூர், கோயம்புத்தூர், மலபார், கனரா ஆகிய பகுதிகளில் விரிவாகச் சுற்றுப்பயணம் செய்து, அந்நாடுகளில் நிலவிய விவசாயம், தொழில்கள்-வணிகம், மதம்-மக்களின் பழக்கவழக்கங்கள், இயற்கை வளங்கள், புராதனங்கள் போன்றவற்றைக் கண்டு, கேட்டறிந்து தொகுத்துத் தந்துள்ள புத்தகத்தைப் பற்றி நாங்கள் அப்போதைக்கப்போது உரையாடி வந்தோம். அந்நூலில் கண்டுள்ள விவரங்களை முன்னிலைப்படுத்தி ஒரு நூல் எழுதும்

எண்ணம் இருவரிடையேயும் தோன்றியது. பண்டைய கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வரும் எங்களது எழுத்துப் பணிகளில் உதித்ததொரு கூட்டு முயற்சி இந்த நூல்.

1792-99ஆம் ஆண்டுகளில் சேலம் ஜில்லாவின் ஆட்சியராகத் திகழ்ந்த அலெக்சாண்டர் ரீடு என்பார் தென்னிந்தியாவில் மாவட்ட ஆட்சி முறையை முன்மாதிரியாக நடத்திக் காட்டியவர். இந்தியாவிலேயே ஒரு மாவட்ட வரைபடத்தை (சேலம்) முதன் முறையாக வடித்துத் தந்து இங்கிலாந்து அரசின் தனிப் பாராட்டையும் (கடிதம் நாள்: 4.10.1797) பெற்றவர் அவர். தன் பதவிக் காலத்தை முடித்துக்கொண்டு இங்கிலாந்திற்குத் திரும்பும் முன், சேலம் மாவட்டத்தில் அன்று நிலவிய நடப்புகளைத் தனது நீண்ட அறிக்கையின் மூலம் (4.4.1800) அரசிற்குச் சமர்ப்பித்தார். புக்கானன்-ரீடு ஆகிய இருவர் தரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, வேறு பல தரவுகளையும் சேர்த்து இந்த நூலைப் படைத்துள்ளோம்.

தனது பயணத்தின் குறிப்புகளில் கொங்குநாட்டுப் பகுதியில் நடந்த போர்களையும், அவற்றின் விளைவுகளையும், அப்போர்களில் ஈடுபட்ட மன்னர்/தளபதிகளையும் புக்கானன் ஆங்காங்கே தொட்டுக் காட்டியுள்ளார். ஆகவே, கி.பி. 1800 வாக்கிலான வரலாற்றைப் பற்றிய நூலாயினும் புக்கானன் குறிப்பிடும் சம்பவங்களைத் தெளிவாக்கிக் கொள்ள 18ஆம் நூற்றாண்டின் இப்பகுதி அரசியல் வரலாற்றையும் சேர்த்துள்ளோம். அதுபோலவே, சென்னையிலிருந்து 23.4.1800ஆம் தேதியன்று புறப்பட்ட புக்கானன் திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம், வேலூர், பள்ளிகொண்டா, குடியாத்தம் போன்ற பகுதிகளையும் சுற்றிப் பார்த்துத் தந்துள்ள குறிப்புகளையும் சுருக்கித் தந்துள்ளோம். அத்துடன் சென்னைக்குத் திரும்பும் வழியில் கிருட்டிணகிரி முதல் சென்னை வரையான தூரத்தில் அவர் கடந்து சென்ற திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற ஊர்களைப் பற்றிய குறிப்புகளையும் தந்துள்ளோம். தமிழ்நாட்டின்

அப்பகுதிகளில் அன்று நிலவிய சூழ்நிலைகளை அறிந்து கொள்ள அவை உதவுகின்றன. புக்கானன் சென்ற ஊர்களைக் குறிப்பிடும் வரைபடங்களை மூன்று இடங்களில் சேர்த்துள்ளோம்... வாசகர்கள் இந்நூலைப் பெரிதும் வரவேற்பார்கள் என்று திடமாக நம்புகிறோம்.

சென்னை ஆவணக்காப்பகத்தின் நூல்களும், ஆவணங்களும் இந்நூலாக்கத்திற்குப் பெரிதும் துணை புரிந்தன. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலிற்குச் சீரிய அணிந்துரை நல்கியுள்ள கொங்கு நாட்டுச் செல்வர் திரு. த. ஸ்டாலின் குணசேகரன் (தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை, ஈரோடு) அவர்களுக்கு எங்களது உளம் கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றோம். நூலினைப் பாங்குற வடிவமைத்துத் தந்துள்ள திரு. எஸ். அசோக்குமார், அட்டைப் படத்தை அழகுடன் வரைந்துள்ள ஓவியர் திரு. ஸ்யாம், நூலினை நேர்த்தியாக அச்சிட்டுள்ள ஜோதி எண்டர்பிரைசஸ் உரிமையாளர் திரு. கணேசமூர்த்தி ஆகியோருக்கு எங்களது மனமார்ந்த நன்றி உரித்தாகின்றது. இந்நூலினைப் பற்றி பின் அட்டையில் அறிமுக உரை தந்துள்ள எங்களது நண்பரும் கொங்குநாட்டு ஆர்வலரும் இந்நூலின் முதல் வாசகருமான புலவர் வெ. இரா. துரைசாமி (நாமகிரிப்பேட்டை) அவர்கட்கு நட்புடன் கூடிய நன்றி. இந்நூலினை வெளியிடும் வெளியீட்டாளருக்கு எங்களது பிரத்தியேக நன்றியை நவில்கின்றோம்.

**இடைப்பாடி அமுதன்**
69-A, மேட்டுத் தெரு,
அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி எதிரில்
இடைப்பாடி - 637 101.
தொ.பே. : 04283-224050

**செ. இராசு**
'புலவர் பூங்குடில்'
58/2, பாலக்காட்டுத் தோட்டம்
புதிய ஆசிரயர் குடியிருப்புப் பாதை
ஈரோடு - 638 011
தொ.பே. : 0424-2262664

# பொருளடக்கம்


1. கி.பி. 1700களில் கொங்கு நாடு 15
2. மைசூர்ப் போர்கள் 34
3. மைசூர்ப் போர்களின் முடிவு - புக்கானன் புறப்பாடு 43
4. மதராஸிலிருந்து காஞ்சிபுரம், பெங்களூரு வழியாகச் சீரங்கப்பட்டணம் 57
5. சீரங்கப்பட்டணத்திலிருந்து சேர நாட்டிற்குள்... 75
6. காவேரிபுரத்திலிருந்து பவானிக்கு 89
7. காவிரியின் கிழக்குப் பகுதிச் செய்திகள் 108
8. பவானி கூடலில் 122
9. பவானியிலிருந்து நீலகிரி வரை 139
10. கோயம்புத்தூரில் 158
11. கோயம்புத்தூரிலிருந்து ஈரோட்டிற்கு 176
12. சமகால நடப்புகள் 193
13. மீண்டும் காவிரியின் கரையோரமாக, காவிரியைக் கடந்தும்... 212

| | | |
|---|---|---|
| *14.* | தாராபுரம் பகுதியில்... | *235* |
| *15.* | பொள்ளாச்சியில்... | *246* |
| *16.* | ஆனைமலையும் அதற்குப் பிறகும்... | *260* |
| *17.* | கொங்குநாட்டில் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சிகள் | *273* |
| *18.* | பாராமகாலைப் பார்த்து சென்னை திரும்புதல் | *301* |
| *19.* | சென்னையை அடைதல் - பயணத்தின் முடிவு | *332* |
| *20.* | டாக்டர் புக்கானன் - வாழ்க்கைக் குறிப்பு | *339* |
| | உதவிய நூல்கள் | *342* |

# 1

# கி.பி. 1700களில் கொங்கு நாடு

***1792***ஆம் ஆண்டு...

*1799*ஆம் ஆண்டு...

கொங்கு நாட்டினுள் தத்தம் தடங்களைப் பதித்து, வரலாற்றுச் சுவடுகளாய் உருமாறிய ஆண்டுகள் இவை.

1792இல் காவிரிக்குக் கிழக்கிலும் வடக்கிலும் உள்ள பகுதிகள் ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்கு உட்பட்டன. மூன்றாம் மைசூர்ப் போரில் திப்பு சுல்தான் தோல்வி நிலையை எட்டியபோது கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் திப்புவிற்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கை யினால் கைமாறிய பகுதிகள் அவை. 1799ஆம் ஆண்டில், நான்காம் மைசூர்ப் போரில், திப்பு சுல்தானின் வீர மரணத் திற்குப் பின் (மே மாதம் 4ஆம் தேதி) காவிரிக்கு மேற்கு மற்றும் தெற்கில் உள்ள கொங்கு நாட்டுப் பகுதிகள் அக்கம்பெனியின் ஆட்சிக்குட்பட்டன.

கி.பி. 1800இல் நிலவிய கொங்கு நாட்டின் நிலையைப் பார்ப்பதற்கு முன், அதற்கு முந்தைய ஒரு நூறு ஆண்டில் தென்னிந்திய அரசுகள் கொங்கு நாட்டில் கோலோச்சிய அரசியல் சூழ்நிலைகளைக் காண்பது அவசியமாகிறது. அந்த அறிமுகம் 1800இன் நிலையைச் சரிவரச் சுவைத்து உணர உதவும்.

## மைசூர் ஆட்சிக்குட்பட்ட கொங்கு நாடு

பதினெட்டாம் நூற்றாண்டில் (1700-1799) மூன்று வகையினரின் ஆட்சிகள் கொங்கு நாட்டில் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன. அவற்றில், மைசூர் மன்னர்களின் வாரிசான சிக்க தேவராய உடையாரின் ஆட்சி முதன்மை யானது. அவர் 1673 முதல் முப்பத்தோறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அவர் காலத்தில் மைசூரின் ஆட்சி கொங்கு நாட்டில் விரிவடைந்தது. அதற்கு முன்பு மதுரை நாயக்கர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த கொங்கு நாடு சிறிது சிறிதாக மைசூரார் ஆட்சிக்குக் கைமாறியது. மைசூர் மன்னர்களில் சிறப்பாகக் குறிப்பிடப்படும் சிக்க தேவராய உடையார் தலையெடுத்த பின்னர் தாரமங்கலம் கெட்டி முதலிகளில் வணங்காமுடி கெட்டி முதலியும், சேந்தமங்கலம் ராமச்சந்திர நாயக்கனும் முழுதாகத் தோற்கடிக்கப்பட்டனர். சிக்க தேவராயனின் முன்னோர் காலத்திலேயே காவேரிபுரம், சாம்பள்ளி, பென்னாகரம், தருமபுரி, தேன்கனிக்கோட்டை, ஓசூர், டணாயக்கன் கோட்டை, சத்தியமங்கலம் போன்ற பகுதிகள் (1640களில்) மைசூர் வசம் சென்றன.

1667இல் நிகழ்ந்த மாபெரும் ஈரோட்டுப் போரில், மதுரை சொக்கநாத நாயக்க மன்னருடன் சேர்ந்து எண்ணில்லாக் கொங்குக் குறுநில மன்னர்களும் தோல்வியுற்றனர். அப்போரில் மைசூர் தொட்ட தேவராயன் (1659-1675) காலத்தில் இளவரசனாயிருந்த சிக்கதேவராயன் மைசூர் தரப்பில் தலைமை ஏற்றார். அந்தியூர், சங்ககிரி, ஈரோடு, தாராபுரம், மீண்டும் தருமபுரி, ஓமலூர், பரமத்தி, ஆத்தூர் (சேலம்) ஆகிய பகுதிகளை வென்றார். கொங்கு நாடு முழுவதையும் தன் ஆட்சிக்குக் கீழ் கொண்டுவர சிக்கதேவராயன் விரும்பினார். ஆனால் அது முழுமையாக நிறைவேறவில்லை.

### சிக்கதேவராயன்

சிக்கதேவராய உடையார் ஒரு தேர்ந்த வீரனாகவும் கல்விமானாகவும் விளங்கினார். அக்காலத்தின் தென்னிந்திய மன்னர்களில் சிறந்து விளங்கியவர் அவர். தலைநகர்

சீரங்கப்பட்டணத்திலிருந்த கஜானா நிறைந்து வழியும் அளவிற்குப் பொருட்களைச் சேகரித்து வைத்தார். ஒன்பது கோடி பகோடாக்களைச் சேர்த்து வைத்திருந்தாராம் (ரூபாய் 27 கோடி). மைசூர் மன்னர்களில் அதற்கு முன்பும் பின்பும் யாரும் சேர்த்து வைத்திராத தொகை அது. அவுரங்கசீப், சிவாஜி ஆகியோர் அவர் காலத்திய பெரும் மன்னர்கள். தென்னிந்தியாவில் சிவாஜிக்கு அடுத்து சிறந்த அரசனாக அவர் கருதப்பட்டார். நீர்ப்பாசனம், கட்டுமானப் பணிகள், நில அளவை போன்றவை அவர் மேற்கொண்ட சிறப்பான முயற்சிகள். சீரங்கப்பட்டணத்தின் அருகில் (தற்போதைய கண்ணம்பாடி அணைக்குப் பக்கத்தில்) அணையைக் கட்டி, காவிரியின் வடக்கு, தெற்குப் புறங்களில் வாய்க்கால்களை ஏற்படுத்தினார். சேலம் மாவட்டம் பூலாம்பட்டியில் காவிரியிலும் சத்தியமங்கலம் அருகில் பவானி ஆற்றிலும்கூட அணைகளைக் கட்டுவித்தார். 1699இல் சிக்கதேவராயன் தன் மனைவியுடன் திருச்செங்கோட்டிற்கு வருகை புரிந்தார்.

சிக்கதேவராயன் மறைந்தபோது (கி.பி. 1704) அவரது நாட்டின் எல்லைகளாக வடக்கில் மிடகேசி (மத்தகிரிக்கும் வடக்கே), தெற்கில் பழனி மலைகள், மேற்கில் குடகு நாட்டின் எல்லை வரை, கிழக்கில் வாணியம்பாடி வரை* பரவியிருந்தது. (பார்க்க: வரைபடம்). அவரது பிறப்பிற்கு ஒரு நூறு ஆண்டிற்கு முன்பு மைசூர் உடையாரின் நாடு தாரமங்கலம் கெட்டி முதலிகளின் நாடு அளவிற்கே இருந்தது எனலாம்.**

## சிக்கதேவராயனின் வாரிசுகள்: தளவாய்களின் ஆட்சி

சிக்கதேவராயனுக்கு ஒரு மகன் மட்டும்தான்; ஒரு மகளும் இருந்தாள். மகன் செவிடு மற்றும் ஊமை. இருப்பினும் தனக்குப் பிறகு, தன் மகன் அரியணை ஏறுவதை அவர் விரும்பினார். தனது இளமைக்காலச் சகாவும் அமைச்சருமாயிருந்த திருமலை அய்யங்காரிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்

* வாணியம்பாடி, திருப்பத்தூர் தாலுகாக்கள் சேலம் மாவட்டத்துடன் 1910 வரை இணைந்திருந்ததன் பின்னணி இதுவாகும்.

** புக்கானன் - II. பக். 172

திருந்தார். அவர் விருப்பம் ஈடேறியது. கண்டீரவ நரசராசா என்ற அம்மகன் சிக்கதேவராயனுக்குப் பிறகு (1704) மன்னன் ஆனான். மூக்கரசு என்றும் அவனுக்குப் பெயர். சிக்கதேவராயன் காலத்திலிருந்து தொடர்ந்த தாசராஜய்யா, பசவராஜய்யா மற்றும் நஞ்சராஜய்யா ஆகியோர் தளவாய்களாக (தளபதி) இருந்து ஆட்சியைக் கவனித்துக் கொண்டனர்.

1714இல் சிக்கதேவராயனின் பேரன் தொட்ட கிருஷ்ண ராய உடையார் (முதலாம் கிருஷ்ணராய உடையார்) மன்னன் ஆனான். அவன் பலம் பொருந்திய அரசன் அல்ல. மக்கள் மனதை அறிந்து ஆட்சி புரியும் இயல்பற்றவன். கொங்கு நாட்டில் இவன் குறித்த சிறப்புச் செய்திகள் உள்ளன. சங்ககிரி நகரில் மலையடிவாரத்தில் உள்ள சோமேஸ்வரர் கோயிலுக்கு வடபுறத்தில் இரண்டு வரிசைத் தெருக்களில் (கன்னட) பிராமணர் குடியிருப்பு ஒன்றைத் தோற்றுவித்தான். 32 வீடுகள் கொண்டவை; ஒவ்வொன்றும், 40×120 அடிகள் விஸ்தீரணம் கொண்டது. அத்துடன், சங்ககிரிக்கு வடகிழக்கில் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் தாழையூர் மற்றும் மாங்குட்டப்பட்டி என்கிற இரண்டு கிராமங்களிலும் (கன்னட) பிராமணர் குடியிருப்பை ஏற்படுத்தினான். 32 பேர்களுக்கு அக்கிராமங்கள் தானமாகத் தரப்பட்டன. தாழையூர் கிராமத்திற்கு 'அப்பிரதம கிருஷ்ணராஜபுரம்' என்ற பெயரையும் சூட்டினான். தாழையூர்-மாங்குட்டப்பட்டியில் அழகு வாய்ந்த மாந்தோப்புகள் இருந்ததாகவும், அளவில்லா அளவில் நெல், கரும்பு, பழங்கள் மற்றும் பிற தானியங்கள் விளைந்ததாகக் குறித்துள்ளான்...

திறமை குறைந்த தொட்ட கிருஷ்ணராயர் சுகபோகங் களை அனுபவிப்பதில் ஈடுபாடு கொண்டவன். நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட தேவராஜய்யா என்பவன் தளவாயாகவும், நஞ்சராஜய்யா என்பவன் சர்வாதிகாரி (நிதி) மற்றும் பிரதானியாகவும் (மந்திரி) தமக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் ஒன்றுவிட்ட சகோதரர்கள்.

கஜானா நிறைந்திருந்த மைசூர் அரசின்மீது கண் வைத்து, சுற்றிலுமிருந்த பீஜப்பூர், கடப்பா, கர்னூல், சீரா, ஆர்க்காடு

நவாபுகள் மைசூரைத் தாக்கினர். பணம் கொடுத்து சமாதானம் பேசப்பட்டது. போதாக்குறைக்கு மராத்தியர்களும் படையெடுத்து வந்தனர். அவர்களுக்கும் கப்பம் செலுத்தி சமாதானம் செய்து கொள்ளப்பட்டது.

1732இல் தொட்ட கிருஷ்ணராயன் சந்ததியின்றி இறந்தான். பங்காளிகள் வம்சத்திலிருந்து சாம்ராஜ உடையார் என்பவனை தேவராஜய்யாவும் நஞ்சராஜய்யாவும் அரியணை ஏற்றினர் (1732-1734). கைப்பாவையாக இருக்க வேண்டிய அம்மன்னன் சுயமாக முடிவெடுத்து, தேவராஜய்யாவையும் நஞ்சராஜய்யாவையும் அகற்ற முயன்றபோது சகோதரர்கள் இருவரும் சதி செய்து, ராஜாவையும் அவனது மனைவியையும் சிறைப்பிடித்து வெளியூருக்கு அனுப்பினர். அங்கே அவர்கள் நீண்ட நாட்கள் வாழவில்லை.

இரண்டாண்டுகளுக்குப் பிறகு புதிய ராஜாவை அரியணை ஏற்றும் அவசியம் நேர்ந்தது. சாம்ராஜனின் தம்பியான வெங்கட அரசுவைத் தவிர்த்து விட்டார்கள். காரணம், அவன் தேவராஜய்யா - நஞ்சராஜய்யாவின் சொல்லுக்கு இணங்கி ஆட்சி புரிபவன் இல்லை எனத் தெரிய வந்தது. ஆகவே, தூரத்துப் பங்காளி வகையில் ஒரு ஐந்து வயதுப் பாலகனை 1734இல் அரியணை ஏற்றினர். அவன் பெயர் சிக்க கிருஷ்ண ராய உடையார். அவன் 1766 வரை ஆட்சியிலிருந்தான்! ஆட்சி ஓரளவு நன்றாக நடைபெற்றது.

சிக்க கிருஷ்ணராயன் ஆட்சிக் காலத்தில் ஆர்க்காடு நவாபும் சீரா நவாபும் சீரங்கப்பட்டணத்தின் கஜானா மேல் பொறாமை கொண்டு, மைசூர் அரசு திறை செலுத்த வேண்டும் எனப் போரிட்டு வந்தனர். வயது முதிர்ந்த நிலையிலும் தளவாய் தேவராஜய்யா எதிரிகளின் படையெடுப்பைத் தடுத்துத் தோற்கடித்தான்.

தன் பங்கிற்கு நஞ்சராஜய்யா தெற்கில் தாராபுரத்தின் மீது படையெடுத்துச் சென்று (1746) அங்கிருந்த பாளையக்காரர் களை அடக்கினான். வெற்றியுடன் நஞ்சராஜய்யா திரும்பி வந்ததும், சகோதரர்களான தேவராஜய்யாவும் நஞ்சராஜய்யாவும்

# தென்னிந்தியா




1. கோலார்
2. பெங்களூரு
3. கிருட்டிணகிரி
4. சேலம்
5. தஞ்சை
6. திருச்சி
7. திண்டுக்கல்
8. கரூர்
9. ஈரோடு
10. தாராபுரம்
11. கோயம்புத்தூர்
12. கஜல்கட்டி
13. தலைக்காடு
14. சீரங்கப்பட்டணம்
15. பெத்தனூர்

தங்கள் குடும்ப நன்மையைக் கருதி, நஞ்சராஜய்யாவின் மகளை 17 வயது நிரம்பியிருந்த மன்னனுக்கு மணமுடித்து வைத்தனர்.

**ஐதராபாத் நிஜாம் – ஆர்க்காடு நவாப்**

மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் ஐதராபாத்தில் ஒரு நிஜாமை நியமித்தார். நிஜாமின் கீழ் நவாப் என்ற துணை ஆட்சியரை ஆர்க்காட்டில் நியமித்தார். தென்னிந்திய ஆட்சியைக் கவனித்துக் கொள்ளும் ஏற்பாடுகள் அவை. ஒரு கட்டத்தில் ஆர்க்காடு நவாபு தன்னாட்சி நடத்த விரும்பினார். கேள்வியுற்ற நிஜாம், மராத்தியரைத் தூண்டி விட்டார். வாய்ப்புக் கிடைத்த மராத்தியர் படையெடுத்து வந்தனர் (1740). நவாப் தோஸ்த் அலி கானும் (1732-40) அவரது மகனும் போரில் இறந்தனர். சிறுவனாயிருந்த பேரன் மொகமத்கான் என்பவன் ஆர்க்காட்டின் நவாப் ஆனான். அன்வருதீன்கான் என்ற திறமை வாய்ந்த, அரசியல் அனுபவமிக்க தளபதியைப் பிரதிநிதியாக்கி, அச்சிறுவன் சார்பில் ஆட்சி புரிய நிஜாம் நியமித்தார்.

அரசியல் வித்தகரான அன்வருதீன் கான் இளவரசனுக்குக் கெட்ட பெயர் ஏற்படும் வழிகளை உருவாக்கினார். அவற்றில் ஒன்று, நவாபின் படையிலிருந்த 'பதான்' படை வீரர்களுக்குக் கணிசமாகச் சம்பளம் பாக்கி இருந்தது. அவர்களை நவாபிற்கு எதிராக உசுப்பி விட்டார். இந்தப் பக்கம் நவாபிடம் கோள் சொல்லி, அவர்களிடம் கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டும்; இல்லையேல் தலைக்கு மேல் ஏறி விடுவார்கள் என்று தூபம் போட்டு வைத்தார் - பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டியையும் ஆட்டி விடும் கதை போல... விளைவு? போர் வீரர்களின் புரட்சி வெடித்தது. இளவரசு நவாப் கொல்லப் பட்டான். பக்குவமாக நிஜாமிடம் விவரத்தைச் சொன்னார் அன்வருதீன். வேறு வழியின்றி, அன்வருதீன் ஆர்க்காடு நவாபாக நியமிக்கப்பட்டார் (1745).*

---

* The History of Hyder Shah alias ........... p. 8-9

### மதுரை நாயக்க மன்னரின் வீழ்ச்சி

ஆர்க்காட்டின் நவாபாக தோஸ்த் அலி இருந்தபோது அவரது ஆட்சி விரிவாக்க எண்ணத்திற்கு உறுதுணையாக இருந்தான், மருமகன் சந்தா சாகிப். அது மதுரை நாயக்கர் ஆட்சியின் இறுதிக் காலம். உள்நாட்டுப் பிரச்சினைகளில் தவித்த மதுரை அரசி மீனாட்சிக்கு உதவுவதாக வாக்களித்த சந்தாசாகிப், அரசி மீனாட்சியைச் சதி செய்து ஏமாற்றி, மதுரை ஆட்சியில் அமர்ந்தான். திருச்சிராப்பள்ளி அவன் வசமானது (1736). திருச்சியில் தனி ஆட்சி நடத்த முற்பட்டான் சந்தா சாகிப். விதி யாரை விட்டது? 1741இல் மராத்தியர்கள் சந்தா சாகிப்பைத் தோற்கடித்துச் சிறை பிடித்தனர்; பூனாவிற்கருகில் சதாராவில் சிறை வைத்தனர். புதுச்சேரியில் தஞ்சமடைந்திருந்த சந்தா சாகிப்பின் மனைவி, பிரெஞ்சு கவர்னர் டூப்ளே மூலம் மராத்தியரிடம் பேச வைத்து, ஏழு லட்சம் ரூபாய் பணம் தந்து தனது கணவனை விடுவிக்கச் செய்தாள்.

### ஆர்க்காடு நவாப்: பதவிப் போட்டிகள்

1748இல் ஐதராபாத் நிஜாம் இறந்தார். அவரது மகனும் (நசீர் ஜங்), பேரனும் (முசாபர் ஜங்) வாரிசுப் போட்டியில் முனைந்தனர். அதன் எதிரொலி ஆர்க்காட்டிலும், திருச்சிராப்பள்ளியிலும், மைசூரிலும் கேட்டது. மகனை ஆங்கிலேயர்களும் பேரனை பிரெஞ்சுக்காரர்களும் ஆதரித்தனர். நிஜாமின் பேரன் தன் நிலையை உறுதிப்படுத்துவற்காகப் படையுடன் தெற்கில் வந்தான். சந்தா சாகிப்பை நவாபாக அறிவித்தான்; பிரெஞ்சுக்காரருடன் கூட்டணிக்கு ஏற்பாடு செய்தான். அப்போது சந்தா சாகிப்பின் குடும்பத்தினர் புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரரின் பாதுகாப்பில் இருந்தனர். இவர்களின் கூட்டணி ஒருபுறம் இருக்க...

ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர் களுக்கும் இடையே போர் மூண்ட செய்தி இந்தியாவிற்கு எட்டியது. ‘தென்னை மரத்தில் தேள் கொட்ட, பனை மரத்தில் நெறி கட்டிய’ நிலை...

முகலாயப் பேரரசர்
அவுரங்கசீப் கால ஏற்பாடு

↓

ஐதராபாத் நிஜாம்

(நிஜாம்-உல்-முல்க் 1748இல் மரணம்.
மகன் நசீர் ஜங் மற்றும் பேரன் முசாபர் ஜங்
இடையே பதவிப்போட்டி / முன்னவருக்கு
ஆங்கிலேயர் ஆதரவு; பின்னவருக்கு
பிரெஞ்சுக்காரர் ஆதரவு)

↓

ஆர்க்காடு நவாப்

↓

தோஸ்த் அலி
ற்றும் மகன்
போரில் மரணம்;
741)

மொகமத் கான்.
தோஸ்த் அலியின்
பேரன் (1745இல்
கொல்லப்பட்டான்)

அன்வருதீன் கான்
(1745இல் 'நவாப்'
ஆக்கப்பட்டான்)

சந்தா சாகிப் (தோஸ்த்
அலியின் மருமகன்)
(மதுரை ராணி
மீனாட்சியைக் கவிழ்த்து
தாமே மன்னா் ஆதல்)

பிரதிநிதி

பிரதிநிதி

← போர்/ஆம்பூர், 1749 →

தோல்வி - கொல்லப்
பட்டார்/மகன் முகமது
அலி திருச்சிக்கு ஓடுதல்

'நவாப்' ஆகப்
பிரகடனப்படுத்திக்
கொண்டான்.

← போர்/ஆர்க்காடு, 1751 →

ஆங்கிலேயர், மைசூர்
உதவி (நஞ்சராஜய்யா
ஹைதர் அலி பங்கேற்பு)

பிரெஞ்சுக்காரர்
உதவி

↓

(வெற்றி, 1751)

← போர்/திருச்சி, 1752 →

ஆங்கிலேயர், மராத்தியர்,
மைசூர் உதவி (முகமது
அலி 1795 வரை நவாப்
ஆக இருந்தார்)

பிரெஞ்சுக்காரர் உதவி
(சந்தா சாகிப்
தஞ்சையில்
கொல்லப்பட்டார்)

ஆர்க்காடு நவாப் அன்வருதீனின் ஆதரவை இங்கே இருதரப்பினரும் நாடினர். அப்போது அன்வருதீனின் வயது எண்பது! வாழ்வின் சாயும் கால நிலை...

சந்தா சாகிப், முசாபர் ஜங் பக்கம் கூட்டு சேர்ந்தான். பிரெஞ்சுப் படையும் அதில் இணைந்தது. இக்கூட்டணியினர் பெரும் படையைத் திரட்டி வந்தனர். அன்வருதீனுக்கு எதிரான போர் ஆம்பூரில் நடந்தது (1749). அன்வருதீன் தோற்றார். போரில் கொல்லப்பட்டார். ஒரு மகன் சிறைபடுத்தப்பட்டான். மற்றொரு மகன் முகமது அலி திருச்சிராப்பள்ளிக்குப் பயந்து ஓடி, கோட்டையில் ஒளிந்து கொண்டான். சந்தா சாயபு, ஆர்க்காடு நவாபாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான்.

## ஐதர் அலி – அறிமுகம்

மைசூரின் நஞ்சராஜய்யா 1749இல் தேவனஹள்ளி மீது (பங்களூருக்கு வடகிழக்கே) படையெடுத்து அந்தக் கோட்டையை முற்றுகையிட்டான். முற்றுகை, ஒன்பது மாதங்களுக்கு நீடித்தது. அந்த முற்றுகையின்போது துடிப்புடனும் சாமர்த்தியத்துடனும் விளங்கிய ஒரு குதிரைப் போர் வீரன் நஞ்சராஜய்யாவின் கவனத்தில் பட்டான். அவன்...

பின்னாளில் மைசூர் ராஜ்ஜியத்திற்கு அதிபதியாகவும் இந்திய சரித்திரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் அளவிற்கு முன்னேறியவன்... 'ஐதர் அலிகான் பகதூர்' என்று அறியப்படும் ஐதர் அலி.

ஐதர் அலியின் அண்ணன் ஒரு சிறு படையின் தலைவனாக தேவனஹள்ளி முற்றுகையின்போது கலந்து கொண்டான். ஐதர் அலி அதில் பங்கு பெற்ற ஒரு போர் வீரன். அவனுடைய தைரியமும் நிதானப் போக்கும் நஞ்சராஜய்யாவைக் கவர்ந்தன.

ஐதராபாத்திலிருந்த நிஜாம் நசீர் ஜங், பெரும் படையுடன் தெற்கில் வந்தான்; ஆங்கிலேயருடன் கூட்டு சேர்ந்தான். அதோடு நிற்காமல் மைசூர்ப் படையின் உதவியைக் கோரினான். மைசூர்ப் படை துணைக்குச் சென்றது. அவ்வாறு சென்ற படையில் ஐதர் அலியும் அவனது அண்ணனும்

இருந்தனர். போரில் நசீர் ஜங் வெற்றி பெற்ற பின்னர், ஒரு கட்டத்தில் வஞ்சகமாகக் கொல்லப்பட்டான். அதனால் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட ஐதர் அலி, இரண்டு ஒட்டகங்கள் நிறைய தங்கக் காசுகளையும், முன்னூறு குதிரைகளையும் ஐநூறு துப்பாக்கிகளையும் எடுத்துக்கொண்டு தேவனஹள்ளிக்கு வந்தான். மைசூர்ப் படை சீரங்கப்பட்டணத்திற்குத் திரும்பியது.

**திருச்சிராப்பள்ளி: சந்தா சாகிப், முகமது அலி – போட்டி**

திருச்சியிலிருந்த முகமது அலி, சந்தா சாகிப்புக்கெதிராகப் போரிட மைசூர் தளவாயிடம் உதவி கோரினான் (1751). போரில் வென்றால், திருச்சியையும் அதன் தெற்கிலுள்ள பகுதிகளையும் மைசூருக்குத் தருவதாகக் கூறினான். தளவாய் தேவராஜய்யாவுக்கு அப்போரில் தலையிட விருப்பமில்லை. ஆனால் தம்பி நஞ்சராஜய்யா ஈடுபாடு காட்டினான். முகமது அலியுடன் ஆங்கிலேயரின் கூட்டு ஏற்பட்டது.

அந்தக் காலகட்டத்தில்தான் (1751, ஆகஸ்ட்-நவம்பர்) ராபர்ட் கிளைவ் ஆர்க்காடு கோட்டையைக் கைப்பற்றி தனக்கும் ஆங்கிலேயருக்கும் புகழ் சேர்த்தான். அப்போது, சந்தா சாகிப் தன் மகன் ராஜா சாகிப்புடன் திருச்சியிலிருந்து படையை அனுப்பி (கோட்டைக்குள்ளிருந்த) கிளைவிற்கு எதிராக ஆர்க்காடு கோட்டையை முற்றுகையிடச் செய்தான். ராஜா சாயபு தோல்வி கண்டான்; ஆர்க்காடு கோட்டையை ராபர்ட் கிளைவ் பிடித்தான் என்பவை குறிப்பிடத்தக்கன.

நஞ்சராஜய்யா 5,000 குதிரைப் படையினர், 10,000 காலாட் படையினர் தொடர திருச்சியை நோக்கிச் சென்றான். அந்தப் படையிலும் ஐதர் அலி இருந்தான். தேவனஹள்ளியில் சேர்த்த 500 துப்பாக்கிகள் கொண்ட ஐதரின் முதல் தரப் படையும் சென்றது. திருமணமாகாத ராபர்ட் கிளைவ் (27 வயது) அப் போரில் முக்கியப் பங்காற்றினான். அவன் கண்ட வெற்றிகள் எதிரிகளிடையே அச்சத்தை உண்டாக்கின. சந்தா சாகிப் தோற்கடிக்கப்பட்டான். அவன் தலை துண்டிக்கப்பட்டது.

(ஜூன், 1752). துண்டிக்கப்பட்ட தலை சீரங்கப்பட்டணத்திற்கு அனுப்பப்பட்டு அங்கே மைசூர் வாயிலில் பார்வைக்கு வைக்கப்பட்டதாம்.* அந்தச் சம்பவம் ஐதர் அலியின் (வயது 30) மனதில் ஆழப் பதிந்து விட்டது. தஞ்சை மராத்தியரைப் பழிவாங்கி, அந்தத் தரணியை சந்தா சாயபுவின் மகன் ராஜா சாகிபுவிடம் ஒப்படைக்க உறுதி பூண்டான்.**

போரின் முடிவுக்குப் பின் நஞ்சராஜய்யாவுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. முகமது அலி மைசூருக்குத் தந்த வாக்குறுதி ஆங்கிலேயருக்குத் தெரியாமல் சொல்லப்பட்டது. ஆகவே அதைச் செயல்படுத்த முடியவில்லை. இருப்பினும், இரண்டு மாதங்கள் கழித்து திருச்சியைத் தருவதாக முகமது அலி கூறினான். தற்காலிகமாக சீரங்கத்தைத் தந்தான். வெறுப்புற்ற நஞ்சராஜய்யா பிரெஞ்சுக்காரருடன் (டூப்ளே) உறவாட முற்பட்டான்.*** திருச்சிக் கோட்டையைக் கைப்பற்ற எண்ணினான். ஆனால் ஆங்கிலத் தளபதி மேஜர் லாரன்ஸ் அதைத் திறம்படத் தடுத்து விட்டான்.

இடையில் இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. ஐரோப்பாவில் நிகழ்ந்த ஆங்கிலேய-பிரெஞ்சு உடன்படிக்கையின்படி (1754), இப்போர் முடிவுக்கு வந்தது. இங்கு பிரெஞ்சுக்காரர்களுக்கு ஏற்பட்ட பின்னடைவுகளால் டூப்ளேவின் பதவி பறிபோயிற்று. நஞ்சராஜய்யா திருச்சியில் தொடர்ந்தான். அப்போது மைசூரில் தேவராஜய்யாவிடமிருந்து அவசரச் செய்தி வந்தது.

### மைசூர்: பழுத்த மரத்தின் மீது கல்லடிகள்

திரும்பவும் மைசூர் - கொங்கு நாட்டிற்கு வருவோம்...

சிக்கதேவராயன் காலம் வரை வலுவுடனிருந்த மைசூர் அரசு பலம் குறைந்து வந்த நிலையில், ஐதராபாத் நிஜாம்

---

* Mysore - A Gazetteer, Rice, p.373

** The History of Hyder Shah...., p. 13

*** நஞ்சராஜய்யாவால் பிரெஞ்சுக்காரருடன் ஏற்பட்ட கூட்டு, பின்னர் ஐதர் அலியால் பின்பற்றப்பட்டு, திப்பு சுல்தானையும் விடாமல் பற்றியது. அவை காலத்தின் கட்டாயங்களாகின.

(சலாபத் ஜங்) திறை செலுத்தக் கோரி மைசூரை நெருக்கினான். பிரெஞ்சுப் படை அவன் உதவிக்கு வந்தது. சீரங்கப்பட்டணத் திலிருந்த தேவராஜய்யாவின் விழி பிதுங்கியது. 56 லட்சம் ரூபாய் திறை செலுத்த முடிவானது. கோயில் நகைகளையும் ராஜா-ராணியர் நகைகளையும் சேர்த்தாலும் மூன்றில் ஒரு பங்குப் பணம்கூடத் தேறவில்லை. நவகோடி (ஒன்பது கோடி) நாராயணன் என்று பெயர் வாஙகியிருந்த சிக்கதேவராயன் விட்டுச் சென்றிருந்த கஜானாவின் நிலை அதுதான். திருச்சிப் போரில் ஏற்பட்ட செலவுகள், மராத்தியருக்குத் தந்த உதவித் தொகைகள், முகமது அலிக்குக் கொடுத்த பத்து லட்சம் பகோடாக்கள் (30 லட்சம் ரூபாய்கள்) என்று நஞ்சராஜய்யா செலவழித்தது வீணாயிற்று.

திரும்பி வந்த நஞ்சராஜய்யா தன் படையின் எண்ணிக் கையில் மூன்றில் ஒரு பங்கைக் குறைத்தான். ஐதர் அலி திண்டுக்கல்லின் ஃபௌஜ்தாராக நியமிக்கப்பட்டான்.

காண்டேராவ் என்ற மராத்தியப் பிராமணன் ஐதரின் உதவியாளரானான். அவனை சீரங்கப்பட்டணத்தில் தனது ஆளாக அமர்த்திவிட்டு திண்டுக்கல் சென்ற ஐதர் அங்கு கொள்ளைகள் போன்று பல வகைகளிலும் சொத்துக்களைச் சேர்த்தான். தன் கீழ் தனிப் படைகளையும் அமைத்துக் கொண்டான்.

அச்சமயத்தில், 27 வயது நிறைந்த மைசூர் மன்னன் சிக்க கிருஷ்ணராயனுக்கு தான் தனித்து ஆட்சி புரியும் எண்ணம் உதித்தது (1756). அமைச்சர்களைச் சிறையில் தள்ளத் திட்டம் தீட்டினான். ஆனால், அது வெளிப்பட்டதும், தளவாய் தேவ ராஜய்யா மன்னனுக்குப் புத்திமதி கூறினான். நஞ்சராஜய்யா வுக்குப் பொறுக்கவில்லை. அரண்மனைக்கு ஆக்ரோஷமாகப் படையுடன் வந்தான். அரசனை சிம்மாசனத்தில் உட்கார வைத்து, அவன் கண் முன்னே சதி ஆலோசனை வழங்கியவர் களைப் பிடித்து வந்து, அவர்களின் காதுகளையும் மூக்கு களையும் அரிந்துவிடச் செய்தான். கொடூரம்... அதைக் காணச் சகியாத தேவராஜய்யா தன் ஆட்களுடனும் குடும்பத்துடனும்

தெற்கே கஜல்கட்டிக் கணவாய் வழியே சென்று சத்திய மங்கலத்தில் குடியேறினான் (1757). ஐதர் அலிக்குத் தான் முன்பு அளித்திருந்த சில நில உரிமைகளைத் தன் செலவுகளுக்காக தேவராஜய்யா திரும்ப எடுத்துக் கொண்டான்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போல, நஞ்சராஜய்யாவுக்குத் தொல்லை தொடர்ந்தது. மராத்தியர்கள் மைசூரைத் தாக்கினர் (பாலாஜி ராவ் தலைமையில்). சீரங்கப்பட்டணம் முற்றுகையிடப்பட்டது. கப்பம் கேட்டார்கள். பணமாகவும் நிலங்களின் வருமானமாகவும் 32 லட்சம் ரூபாய்களைத் தந்து நஞ்சராஜய்யா ஒப்பேற்றினான். காண்டேராவ் மூலம் தகவல் அறிந்த ஐதர் சீரங்கப்பட்டணம் திரும்பினான். மராத்தியருக்கு ஒதுக்கிய நில வருவாயைத் தள்ளி வைக்க நஞ்சராஜய்யாவைக் கேட்டுக் கொண்டான். பின்னர் சத்தியமங்கலத்திற்குச் சென்று தேவராஜய்யாவிடம் பேசினான். தனக்களித்த நில வருவாய் உரிமையைத் திரும்பத் தருமாறும், சமீபத்தில் தான் மலபாரில் புரிந்த போர்ச் செலவான மூன்று லட்சம் ரூபாய்களைத் தருமாறும் வேண்டினான். பதிலாக, மலபார் ராஜாவிடமிருந்து வரவேண்டிய பணத்தை தேவராஜய்யா வசூலித்துக் கொள்ளலாம் எனத் தெரிவித்தான். ஒத்துக்கொண்ட தேவராஜய்யா, தனக்கு நம்பிக்கையான ராஜபுத்திர படைத் தளபதி ஹரி சிங்கை மலபாருக்கு அனுப்பி, மைசூருக்குச் சேரவேண்டிய வருவாயை வசூலிக்கலானான்.

நஞ்சராஜய்யாவுக்கு மீண்டும் சிக்கல்... படை வீரர்கள் புரட்சி செய்தனர். பெரும் சம்பள பாக்கிக்காக அவனது மாளிகையின் முன் ‘தர்னா’ செய்தார்கள். இருக்கிற உணவுப் பொருட்களை விற்று சிறிது சரி செய்தான் நஞ்சராஜய்யா. திண்டுக்கல் சென்றிருந்த ஐதர் ஓடி வந்தான். சத்தியமங்கலத்திற்குச் சென்று மீண்டும் தேவராஜய்யாவிடம் கோரிக்கை வைத்தான். தம்பி நஞ்சராஜய்யாவுடன் ஒன்று சேர்ந்து நிலைமையைச் சீர்செய்ய வேண்டினான். நஞ்சராஜய்யாவை மைசூர் மன்னனிடம் வருத்தம் தெரிவிக்க வைத்து நிலைமையை ஒருவாறு சீராக்கப் பார்த்தான். ஆனால்

உடல்நலமின்றி இருந்த தேவராஜய்யா ஒரு வாரத்தில் அங்கேயே இறந்தான். நொந்து போன நஞ்சராஜய்யா படை வீரர்களின் பாக்கியை நேர் செய்ய ஐதரையும் காண்டேராவையும் கேட்டுக் கொண்டான். பொன், பொருள், யானை, குதிரை என்று விற்று அவர்கள் சமாளித்தார்கள். தனக்கு வேண்டப்பட்ட ஆட்களை கோட்டையின் முக்கிய இடங்களில் ஐதர் நியமித்தான். புரட்சி வீரர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள்.

## ஐதர் அலியின் முன்னேற்றம்

மலபாருக்குச் சென்றிருந்த ஹரிசிங் மீது ஐதரின் கண் விழுந்தது. போட்டியாளர் ஒருவனை விட்டு வைக்கக்கூடாது என்ற எண்ணம் உதித்தது. தனது எஜமானர் தேவராஜய்யா மரணத்தைக் கேள்வியுற்ற ஹரிசிங் மைசூருக்குத் திரும்பும் வழியில் அவிநாசியில் முகாமிட்டிருந்தான். திண்டுக்கல்லுக்குத் தன் படையை அனுப்பும் சாக்கில் சென்ற ஐதரின் படை இரவோடிரவாக ஹரி சிங்கையும் அவனது ஆட்களையும் கொன்றது. மூன்று பீரங்கிகளையும் பதினைந்து குதிரைகளை மட்டும் ராஜாவிடம் கணக்குக் காட்டி விட்டு, மீதிப் பொருட்களை ஐதர் வைத்துக் கொண்டான்.

மராத்தியர் மீண்டும் படையெடுத்தனர் (1759). பெங்களூரையும் சென்னப்பட்ணாவையும் முற்றுகையிட்டனர். மைசூர்ப் படையின் தலைமைத் தளபதியாக அறிவிக்கப்பட்ட ஐதர் சென்னப்பட்ணாவை மீட்டான். ஆனால் பெங்களூர் முற்றுகை மூன்று மாதங்களுக்கு நீடித்தது. சலிப்புற்ற இருதரப்பினரும் பேசினர். பழைய, புதிய கப்பமாக மொத்தத்தில் மராத்தியருக்கு 32 லட்சம் ரூபாய்கள் தர ஒத்துக் கொள்ளப்பட்டது. கடன்-உடன் பட்டு, ஐதர் ஏற்பாடு செய்தான். மராத்தியர் திரும்பி விட்டனர். சீரங்கப்பட்டணம் திரும்பிய ஐதருக்கு மன்னன் தனது தர்பாரில் உற்சாக வரவேற்பு தந்தான். அவையிலிருந்த நஞ்சராஜய்யா எழுந்து நின்று ஆரத்தழுவி வரவேற்றான். 'ஃபத்தே ஐதர் பகதூர்' என்ற பட்டத்தை ஐதர் அலிக்கு மன்னன் வழங்கினான். 'பகதூர்'

என்கிற பட்டம் உயர்வானது. அந்த அவையில் அவனுக்கு நிகரான வீரன் இல்லை என்று பொருள்!

பல ஆண்டுகளாக அரசனைப் பின்னுக்குத் தள்ளி விட்டு ஆட்சி புரிந்த தளவாய் ஒதுங்க வேண்டிய நேரம் வந்தது. நஞ்சராஜய்யாவுக்குப் பென்ஷனுடன் ஓய்வு தரப்பட்டது. கண்ணனூருக்கு (மைசூர் அருகில்) அனுப்பப்பட்டான். காண்டேராவ் மந்திரியாக்கப்பட்டான்.

பிரெஞ்சுக்காரர்கள் ஐதர் அலியுடன் கூட்டு வைக்க விரும்பினர். ஆங்கிலேயரை ஆர்க்காட்டிலிருந்து துரத்தத் திட்டமிட்டனர். வெற்றி பெற்றால் திருச்சி, மதுரை, திருநெல்வேலி பகுதிகளை மைசூருக்குத் தர பிரெஞ்சுக்காரர் சம்மதித்தனர். மைசூரிலிருந்து ஆர்க்காட்டிற்குச் செல்லும் வழியிலுள்ள பாராமகாலை (தற்போதைய கிருஷ்ணகிரி மாவட்டம் தருமபுரி மாவட்டத்தின் பெரும் பகுதி மற்றும் திருப்பத்தூர்) கடப்பா நவாபிடமிருந்து ஐதர் கைப்பற்றினான். ஆர்க்காட்டிற்குச் செல்ல வழி கிடைத்தது.

நஞ்சராஜய்யா இடத்திற்கு ஐதர் வந்தது மன்னரின் அவையிலிருந்தோருக்கு ஒப்பவில்லை. முன்பு நஞ்சராஜய்யா; இப்போது ஐதர் அலி என்ற வேறுபாடு மட்டுமே என்று எண்ணிப் புழுங்கினர். ஐதர் அலியின் நிலையை மாற்றத் திட்டமிட்டனர். அதற்குக் காண்டேராவும் உடந்தை. மராத்தியர்களும் அதில் சேர்ந்து கொண்டனர். இருப்பினும் பல்வேறு உபாயங்களைக் கையாண்டு தனது நிலையை ஐதர் அலி உயர்த்திக் கொண்டான்.

**ஐதர் அலி: ஆட்சிப் பொறுப்பில்**

ஐதர் அலி, மைசூரின் ஆட்சியை கி.பி. 1761 முதல் நடத்தினான். பெயருக்காக மன்னன் சிம்மாசனத்தில் தொடர்ந்தான். சிக்கதேவராயனுக்குப் பின் முளைத்த தளவாய்களின் ஆட்சி ஐம்பது ஆண்டுகள் நீடித்து முடிவுற்றது. பின்னர் 38 ஆண்டுகள் ஐதர் அலியும் திப்பு சுல்தானும் ஆட்சியை நடத்தினர்.

மைசூர் ராஜாக்கள் மதுரை நாயக்க மன்னர்கள் மீது தொடுத்த போர்கள் **60** ஆண்டுகளுக்கு மேல் **(1640-1700)** தொடர்ந்தன. அவை பெரும்பாலும் கொங்கு நாட்டில் நிகழ்ந்த போர்கள். தளவாய்களின் ஆட்சிக் காலத்தில் கொங்கு நாட்டில் பெருமளவில் போர்கள் நடக்கவில்லை - **1746**இல் நஞ்சராஜய்யாவின் தாராபுரம் படையெடுப்பைத் தவிர்த்து. ஆனால் **1761**க்குப் பிறகு பெரும்பாலான ஆண்டுகள் போர்களிலேயே கழிந்தன. அவற்றில் முக்கியமானவை மைசூருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே நடந்த நான்கு கட்டப் போர்கள். மைசூர்ப் போர்கள் என்று குறிக்கப் பெறும் அப்போர்களில் மூன்றில் கொங்கு நாடு அலைக்கழிக்கப்பட்டது. கொங்குநாடு முக்கியப் போர்க்களங்களைக் கண்டது. நான்காவது மைசூர்ப் போரின் இறுதியில் ஐதர் அலியின் மகன் திப்பு சுல்தான் சீரங்கப்பட்டணத்தில் இறக்க, கொங்கு நாடு முழுவதும் ஆங்கிலேயரின் ஆளுகைக்கு உட்பட்டது. அப்போது முதல் இப்பகுதியில் போர் மேகங்கள் சூழும் நிலை தோன்றவில்லை. ஆரம்பத்தில் தோன்றிய ஆங்கிலேயருக்கு எதிரான சில கிளர்ச்சிகளைத் தவிர்த்துப் பார்த்தால் பெரும்பாலும் அமைதி நிலவ ஆரம்பித்தது.

**டாக்டர் ஃபிரான்சிஸ் புக்கானன்**

அந்தச் சூழ்நிலையில் திப்பு சுல்தானிடம் புரிந்த போர்களின் விளைவாக, 1792 மற்றும் 1799ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த பகுதிகளில் விரிவாகச் சுற்றுப்பயணம் செய்து நாட்டின் நிலையை விளக்கமாக அறிந்து, விவரமான அறிக்கை தரும்படி டாக்டர் ஃப்ரான்சிஸ் புக்கானன் (Dr. Francis Buchanan, M.D., F.R.S.) என்ற மருத்துவரை கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி அனுப்பி வைத்தார். ஆண்டு, **1800.** அறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட விஷயங்கள்: விளை நிலங்கள், விளை பொருட்கள், கால்நடைகள், பாசன வசதி, நிலங்களின் குத்தகை முறை (நிலம் அரசுக்குச் சொந்தம்! பட்டா முறை அமலுக்கு வரவில்லை!!), பணப் பயிர்கள், சுரங்கம்-கனிமப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள், வெப்பநிலை -

பருவ காலங்கள், மக்கள் - அவர்களின் வாழ்க்கை நிலை, சாதி, சமயம் போன்றவை. முந்தைய வரலாற்று நிகழ்வுகளையும், ஆட்சியாளர்களைப் பற்றியும் கண்டு, கேட்டு எழுதியுள்ளார் புக்கானன். அவர் வங்காளத்தில் கிழக்கிந்தியக் கம்பெனிச் சேவையில் மருத்துவராகப் பணியாற்றி வந்தவர். பிற்காலத்தில் (1803-1804) கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லிக்கு மருத்துவ ராகப் பணியாற்றினார். அவர் தாவரவியலும் (Botany) படித்தவர். டாக்டர் புக்கானன் பற்றிய குறிப்புகளை இறுதி அத்தி யாயத்தில் காண்க.

தான் கண்டு, கேட்டவற்றைப் பதிவு செய்து புத்தகமாக வும் வெளிவர ஏற்பாடு செய்தார் புக்கானன். அப்புத்தகத்தின் தலைப்பு -

'மதராஸிலிருந்து புறப்பட்டு மைசூர், கனரா மற்றும் மலபார் நாடுகளிடையே மேற்கொண்ட சுற்றுப்பயணம்'*

சுற்றுப்பயணம் மேற்கொண்ட காலம்: 23.4.1800 முதல் 6.7.1801 வரை. அந்த நூலின் முதல் பக்கம்: அடுத்த பக்கத்தில்.

இரண்டு நூற்றாண்டு காலத்தைக் கடந்த நிலையிலும் புக்கானன் எழுதியவை வரலாற்று ஆர்வலர்களுக்குச் சுவை குன்றாமல் உள்ளன. புக்கானன் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தில் குறிப்பிடத்தக்க குறையொன்றும் உண்டு.

1792இல் திப்பு சுல்தானிடமிருந்து ஆங்கிலேயர் பெற்ற பகுதிகள், மலபார் மற்றும் சேலம் ஜில்லாக்கள். புக்கானனின் சுற்றுப்பயணம் மலபாரில் தொடர்ந்தது. மலபார் ஜில்லாவில் அவர் கண்டு, கேட்டவை அந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஆனால் சேலம் ஜில்லாவில் அவர் பிரயாணம் மேற் கொள்ளாததால், அம்மாவட்டத்திலுள்ள ஊர்களைப் பற்றிய விவரங்கள் இடம்பெறவில்லை. அதற்கான காரணம் -

யோசிக்க வேண்டியதுதான்.

* A Journey from Madras Through the Countries of Mysore, Canara and Malabar.

A

# JOURNEY FROM MADRAS

THROUGH THE COUNTRIES OF

# MYSORE, CANARA, AND MALABAR,

PERFORMED UNDER THE ORDERS OF

THE MOST NOBLE THE MARQUIS WELLESLEY,

GOVERNOR GENERAL OF INDIA,

FOR THE EXPRESS PURPOSE OF INVESTIGATING THE STATE OF

AGRICULTURE, ARTS, AND COMMERCE; THE RELIGION, MANNERS, AND CUSTOMS; THE HISTORY NATURAL AND CIVIL, AND ANTIQUITIES,

IN THE DOMINIONS OF

THE RAJAH OF MYSORE,

AND THE COUNTRIES ACQUIRED BY

THE HONOURABLE EAST INDIA COMPANY,

IN THE LATE AND FORMER WARS, FROM TIPPOO SULTAUN.

---

BY FRANCIS BUCHANAN, M. D.

FELLOW OF THE ROYAL SOCIETY, AND OF THE SOCIETY OF ANTIQUARIES OF LONDON; FELLOW OF THE ASIATIC SOCIETY OF CALCUTTA; AND IN THE MEDICAL SERVICE OF THE HONOURABLE COMPANY ON THE BENGAL ESTABLISHMENT.

---

PUBLISHED UNDER THE AUTHORITY AND PATRONAGE OF

THE HONOURABLE THE DIRECTORS OF THE EAST INDIA COMPANY.

ILLUSTRATED BY A MAP AND NUMEROUS OTHER ENGRAVINGS.

---

IN THREE VOLUMES.

VOL. I.

LONDON:

PRINTED FOR T. CADELL AND W. DAVIES (BOOKSELLERS TO THE ASIATIC SOCIETY), IN THE STRAND; AND BLACK, PARRY, AND KINGSBURY (BOOKSELLERS TO THE EAST INDIA COMPANY), IN LEADENHALL STREET;

BY W. BULMER AND CO. CLEVELAND ROW, ST. JAMES'S.

1807.

# 2

# மைசூர்ப் போர்கள்

*ஐதர் அலி - திப்பு சுல்தான் காலங்களில் (1761-1799) தென்னிந்திய ஆட்சியாளர்களில் பலம் வாய்ந்த சக்திகளாக இருந்தவர்கள் -*

- ☆ *மைசூர் அரசு*
- ☆ *ஆர்க்காடு நவாப்*
- ☆ *ஆங்கிலேயர்கள்*
- ☆ *பிரெஞ்சுக்காரர்கள்*
- ☆ *தென் கோடியில் திருவாங்கூர் மற்றும் கொச்சி ராஜாக்கள்*
- ☆ *மலபாரின் சாமுரி மன்னர்கள்*
- ☆ *ஐதராபாத் நிஜாம்*
- ☆ *கடப்பா, சீரா, சாவனூர் நவாபுகள்*
- ☆ *மராத்திய பேஷ்வாக்கள்*
- ☆ *மற்றும் சில குறுநில மன்னர்கள்/பாளையக்காரர்கள்*

*டாக்டர் புக்கானன் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் முந்தைய காலப் பின்னணியின் காரணகர்த்தாக்கள் இவர்கள். அவர்களைப் பற்றிப் பல இடங்களில் புக்கானன் குறிப்பிடு கிறார். ஆகவே இந்த ஆட்சியாளர்கள், அவர்களிடையே நிலவிய உறவு, பகை, புகைச்சல், போர் போன்றவற்றைக் காண்பது அவசியமாகிறது.*

## கி.பி. 1761–1762: சீராவின் நவாப் ஆக ஐதர் அலி

மேற்சொன்ன ஆட்சியாளர்களிடம் சூழ்நிலைக்கேற்ப ஐதர் அலி நட்பு கொள்ளவோ, போர் தொடுக்கவோ அல்லது ஒப்பந்தம் செய்யவோ முனைந்தார். அரசர்களின் பொதுவான நோக்கம் தங்கள் நாடுகளைப் பாதுகாப்பதுவும், அடுத்த நாட்டைக் கைப்பற்றித் தம் நாட்டை வலுப்படுத்துவதாகவும் இருக்கும். போர் வீரனாக இருந்து பல போர்களைக் கண்ட ஐதர் தென்னிந்தியாவில் தன்னிகரற்ற ஆட்சியாளராக மாற விருப்பம் கொண்டிருந்தார். அவர் பல வெற்றிகளைக் கண்டார். ஆனால் அவ்வெற்றிகள் பிற நாடுகளின் பகையைச் சம்பாதிக்கும் நிலைக்கும் வித்திட்டன.

அப்போதைய ஐதராபாத் நிஜாமின் சகோதரர்களிடையே வாரிசுப் போட்டி தோன்றியது. அப்போட்டியில் மூக்கை நுழைத்த ஐதர் அலி, ஆதோனியிலிருந்த நிஜாமின் சகோதரர் பசாலத் ஜங்குடன் கூட்டு சேர்ந்தார். அக்கூட்டணி வெற்றி கொண்டது. மூன்று லட்சம் ரூபாய்களை ஐதரிடமிருந்து பெற்றுக்கொண்டு அவரை சீராவின் நவாபாக நியமித்தார் பசாலத் ஜங். அந்த நேரத்தில் மராத்தியருக்குச் (முராரி ராவ்) சொந்தமான வேறு சில பகுதிகளையும் ஐதர் வென்றார். அச்செயல் மராத்தியருக்கு அவர்மீது பகையை உண்டாக்கியது. அவரை சீராவின் 'நவாப்' ஆகத் தன் தம்பி நியமித்ததை விரும்பாத நிஜாமின் வெறுப்பையும் ஐதர் சந்திக்க வேண்டி வந்தது.

## 1763: கனராவைக் கவர்தல்

சீரா போன்ற பகுதிகளைக் கைப்பற்றியபின் சித்தளதுர்க்கத்தில் ஐதர் முகாமிட்டிருந்தார். அப்போது கனரா தேசத்தை (இக்கேரி நாயக்கர் வமிசாவளி) வீரம்மா என்ற ராணி ஆண்டு வந்தாள். அவள் கணவனை இழந்தவள்; வாரிசில்லை. தத்துப்பிள்ளை சென்ன பாசப்ப நாயக்கன் மூன்று ஆண்டுகள் (1754-1757) ஆண்டான். அவனைப் பதவியிலிருந்து இறக்கிய வீரம்மா தன்னாட்சி புரிந்து வந்தாள் (1757-1763). பதவி இறக்கப்பட்டதாகக் கருதப்பட்ட மகன் ஐதரை அணுகினான்.

வெல்லக்கட்டியான சந்தர்ப்பத்திற்கு ஐதர் மகிழ்ந்து தலைநகர் பெத்தனூரை (Bednore) நோக்கி ஆர்ப்பரிக்கும் படையுடன் புறப்பட்டார் (1763). அடர்ந்த காடுகள் மிகுந்த பகுதி கனரா. பகைவர்கள் சாதாரணமாக நுழைய முடியாது. வழி காண்பதும் கடினம். விஜயநகர வீழ்ச்சிக்குப் பிறகு இக்கேரி நாயக்க மன்னர்கள் தன்னாட்சி செய்து வந்தனர். மொகலாய மன்னர் ஔரங்கசீப்பால் கூட நெருங்க முடியாத பகுதியாக விளங்கியது பெத்தனூர். அவ்வூர் 60,000 மக்கள் தொகை கொண்டிருந்த பேரூர்.

ஐதரின் படை சென்ற வழியிலிருந்த ஒரு ஊரில் அந்த நாட்டின் முன்னாள் அமைச்சர் சிறையில் அடைக்கப் பட்டிருந்தான். ஐதர் அவனை விடுவித்தார். பெத்தனூரின் அமைப்பு, அங்கு செல்ல வேண்டிய பாதை போன்றவற்றை அந்த அமைச்சன் வழிகாட்ட, பெத்தனூரில் நுழைந்து, வீரத்துடன் திகழ்ந்த ராணியைக் கைது செய்து சிறையில் அடைத்தார் ஐதர். அரண்மனையைத் தீக்கிரையாக்கினார். பெரும் செல்வம் குவிந்திருந்த அந்த நாட்டில் 12 மில்லியன் இங்கிலாந்து பவுண்டு (அன்றைய மதிப்பில் 12 கோடி ரூபாய்) மதிப்புள்ள பொன், பொருட்களைக் கவர்ந்தார். வளம் மிகுந்த அந்த ஊரைத் தலைநகரமாக மாற்றவும் எண்ணினார். ஊரின் பெயரை 'ஐதர் நகர்' என மாற்றினார். நாணயச் சாலையை அங்கு உருவாக்கி தன் பெயரில் நாணயங்களை வெளியிட்டார். அந்த நாட்டிற்குட்பட்ட மங்களூர், ஐதருக்கு ஒரு சிறந்த துறைமுக மாயிற்று. போர்க் கப்பல்கள் கட்டும் துறைமுகமாகவும் அது உருவானது. ஆனால் தலைநகரை அங்கு நிர்மாணிக்கும் திட்டம் நிறைவு பெறவில்லை.

பெத்தனூரின் வெற்றியால் ஐதரின் பெருமை தென்னிந்தியா மற்றும் பாரத தேசம் முழுவதும் பதவியது. பிற நாடுகளின் தூதர்கள் ஐதரின் அவைக்கு வந்து தங்களின் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். புகழைப் பெரிதும் விரும்பாத ஐதரின் அவைக்களத்தில் புலவர்களும் இருந்தனராம். அலெக்சாண்டர், தைமூர் போன்ற மன்னர்களைக் காட்டிலும் வீரம் மிகுந்தவர் ஐதர் என அவர்கள் புகழ்ந்துரைத்தனர்.

### 1764–65: நிஜாம், மராத்தியரிடம் சமரச முயற்சி

சீராவைக் கைப்பற்றியதால் ஏற்பட்ட நிஜாம் அலியின் கோபத்தையும், மராத்தியர்களின் பகுதிகளை வென்றதால் தோன்றிய மராத்தியர் சீற்றத்தையும் தணிக்க, தனது தூதர்களை அனுப்பி வைத்தார் ஐதர். நிஜாம் அலியின் சினம் குறைந்தது. ஆனால் மராத்தியரின் சீற்றம் தணியவில்லை. அவர்கள் படையெடுத்து வந்தனர். தாங்கள் இழந்த பகுதிகளை மீட்டனர். சீராவையும் பெத்தனூரையும் மட்டும் ஐதரால் தக்க வைக்க முடிந்தது. அவர் சிறையிட்ட (மதுகிரியில் - பெங்களூருக்கு வடக்கே) பெத்தனூர் ராணி, அமைச்சர் முதலியோரை மராத்தியர் விடுவித்து புனாவுக்கு அழைத்துச் சென்றனர். வழியில் ராணி இறந்து விட்டாள்.

### 1766: மலபாரைக் கைப்பற்றல் – கோயம்புத்தூரின் நிலை

மலபார் பகுதியில் இஸ்லாமியர்களில் 'மாப்ளாஸ்' (மாப்பிள்ளைமார்) பிரிவைச் சார்ந்த அலி ராஜா என்பவன் கண்ணனூரில் ஆண்டு வந்தான். ஐதரின் வெற்றிகளை அறிந்து, அவரின் ஆதரவை வேண்டி மங்களூரில் அவரைச் சந்தித்தான். ஐதரின் ஆதரவு கிடைத்தது. அதனால் தற்போதைய கேரளாவின் வட பகுதியில் ஐதரால் நிலை கொள்ள முடிந்தது. அதற்குத் தெற்கே கோழிக்கோட்டில் சாமுரிய மன்னன், அதற்கும் கீழே மலபார் நாயர்கள், பின் தெற்கே கொச்சி மற்றும் திருவாங்கூர் ராஜாக்கள் இருந்தனர். சாமுரிய மன்னனுக்கு மற்றவர்கள் சிற்றரசர் போன்றவர்கள். அவர்கள் 'நாயர்' பிரிவினர்.

கோழிக்கோடு சாமுரிய (Zamorin) மன்னனை வெல்ல ஐதர் முனைந்தார். நாயர்கள் - மாப்பிள்ளைமார்களிடையே பகை வளர்ந்து வந்த அந்த வேளையில் சாமுரிய மன்னனை வென்று சரணடைய வைத்தார் ஐதர். கப்பம் கட்டவும் வைத்தார். அவமானம் தாங்காமல் சாமுரிய மன்னன், மறுநாள் அரண்மனைக்குத் தீ வைத்துக் கொண்டு தன் குடும்பத்துடன் மடிந்தான்.

வெளியில் தப்பிச் சென்றிருந்த மன்னனின் வாரிசுகள், திருவாங்கூர் - கொச்சி ராஜாக்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து ஐதரை எதிர்க்க முனைந்தனர். பொன்னானி ஆற்றங்கரையில் ஐதரை எதிர்கொள்ளத் தயாராயினர். அந்த ஆற்றைக் கடந்து எளிதில் வெற்றி கொண்ட ஐதர் கொச்சி வரை சென்று அந்நாட்டு மன்னரைப் பணிய வைத்தார்; திறை செலுத்த வைத்து அவரே தொடர்ந்து நாட்டை ஆண்டு வர அனுமதித்தார். மற்ற நாயர் தலைவர்களுக்கும் அதே நிலையை உண்டுபண்ணினார். ஆனால் கோழிக்கோடு சாமுரிய மன்னனின் வாரிசுகளுக்கு அந்தச் சலுகை காட்டப்படவில்லை.

கோழிக்கோட்டிலும் பொன்னானியிலும் தமது படைகளை நிறுத்திவிட்டு, மைசூர் நாட்டின் கீழிருந்த கோயம்புத்தூர் ராஜாவிடம் கோழிக்கோடு-மலபார் பகுதிகளை ஐதர் ஒப்படைத்தார். காரணம்: கோயம்புத்தூர் ராஜா ஒரு பிராமணர். அவர் மலபார் நாயர்களின் பழக்க வழக்கங்களை அறிந்தவர். சமுதாய அமைப்பில் நாயர்களைவிடப் பிராமணர் உயர் அந்தஸ்தில் இருப்பதால், கோயம்புத்தூர் ராஜாவின் சொல் மலபார் நாயர்களிடையே எடுபடும், அவரால் அமைதியை நிலைநாட்டி ஆட்சியைத் தொடர இயலும் என எதிர்பார்த்தார் ஐதர்.*

மலபாரில் மழைக்காலம் துவங்கி விட்டதால் அங்கிருந்து கிளம்ப முற்பட்டார் ஐதர். கோயம்புத்தூருக்கு வந்தார். அங்கிருந்து சில காலம் மலபாரைக் கவனிக்க முற்பட்டார். தனது குதிரைப்படையின் ஒரு பிரிவையும் அங்கே நிறுத்தி வைத்தார்.** கோயம்புத்தூரிலிருந்த ராஜாவின் அரண்மனையில் தங்கினார். கோயம்புத்தூர் அமைதி தரும் இடமாக இருந்தது.

**கோயம்புத்தூர்க் காட்சிகள்**

கோயம்புத்தூரில் ஐதர் அலி மூன்று மாதங்கள் தங்கியிருந்தார். அக்காலத்தில் மைசூர் நாட்டிற்கு ஒரு முக்கிய

* The History of Hyder Shah... p.72

** மேலது நூல், பக். 75

கேந்திரமாகக் கோயம்புத்தூர் இருந்தது. சீரங்கப்பட்டணத்திலிருந்து தெற்கே மலைப்பாதைகளில் இறங்கி வந்தால் கஜல்கட்டி கணவாய், டணாயக்கன் கோட்டை, சத்திய மங்கலம் போன்ற இடங்களைக் கடந்து மலபாருக்குச் செல்லும் வழியில் கோயம்புத்தூர் மையத் தலமாயிருந்தது. அங்கிருந்து கிழக்கே கர்நாடக (தொண்டை நாடு) சமவெளிக்குச் செல்லவும் அந்த வழி நல்ல வழி. கோயம்புத்தூர் பிராந்தியம் ஐதர் அலிக்கு நல்ல வருவாய் தரும் பகுதியாகவும் இருந்தது. சுங்கச் சாவடிகளில் வசூலாகும் கட்டணம் நேரடியாக அரசின் கஜானாவிற்குச் செல்லும். உள்ளூர் ராஜாவிற்கு அதில் பங்கில்லை.

ஐதர் அலி கோயம்புத்தூரில் தங்கியிருந்தபோது அங்கு முகாமிட்டிருந்த படைகளுக்குப் பயிற்சியளிக்க முற்பட்டார். பெரும் படைப்பிரிவு ஒன்று பயிற்சியில் ஈடுபடுவது அப்பகுதி மக்களுக்குப் புதிய காட்சியாகத் தென்பட்டதாம்.* ஆர்க்காடு கோட்டையை ராபர்ட் கிளைவ் பிடித்த சமயத்திலும், திருச்சியில் ஆங்கிலேயர்-முகமது அலி ஒரு புறமும் பிரெஞ்சுக்காரர்-சந்தா சாகிப் மறுபுறமும் நின்று போரிட்ட போதும் அவற்றில் கலந்து கொண்ட ராஜா சாகிப் (சந்தா சாகிபின் மகன்), சந்தித்த தோல்விக்குப் பிறகு இலங்கைக்குத் தப்பிச் சென்றான். ஐதர் அலி பெத்தனூரை வென்ற சமயத்தில் சேதியைக் கேள்வியுற்று அங்கு வந்த ராஜா சாகிபிற்கு ஆதரவு தந்து தன் படையில் பதவி கொடுத்தார் ஐதர். பிரெஞ்சுக் காரரிடம் ராணுவ நடவடிக்கைகளைக் கற்ற ராஜா சாகிப் ஐதரின் படை வீரர்களையும் அந்த வகையில் தேர்ச்சி கொள்ள வைத்தான். அதில் ஒரு நடவடிக்கைதான் இந்தப் பயிற்சி களெல்லாம்.

அதைக் காண ஒரு லட்சம் பேர்களுக்கு மேல் மக்கள் வேடிக்கைப் பார்க்க கோயம்புத்தூர் வந்தனராம். ராணுவ வீரர்கள் மட்டும் தனியே 60,000 பேர் இருந்தனர். ஆக, கோயம்புத்தூரில் ஏகக் கூட்டம்.

---

* மேலது நூல், பக். 96-97

ஆனாலும் கோயம்புத்தூர் பகுதியில் பொருட்களின் விலை மலிவாக இருந்ததாம். ஓர் ஆடு அல்லது ஒரு டஜன் கோழிகளின் விலை இரண்டு ஷில்லிங் மட்டும்தானாம்! (இன்றைய மதிப்பில் சுமார் 80 காசுகள்). 12 படி அரிசியும் அதே விலைதான். ஓர் ஆள் ஒரு நாளைக்கு ஒரு படி அரிசிச் சோறு சாப்பிடுவானாம்! வாரத்தில் இரண்டு சந்தைகள் அங்குக் கூடின. மொத்தத்தில் 20,000 பட்டுத் துணிகள் விற்பனையாயின. கோயம்புத்தூரை அடுத்த சவுரிபாளையத்தில் (பீளமேடு?) 10,000 கிறித்துவ நெசவாளர்கள் இருந்தனராம்.

கோயம்புத்தூர் வழியே ஓர் ஆண்டில் 30,000 பொதி மாடுகள் புகையிலை ஏற்றிக்கொண்டு மலபாருக்குச் செல்லுமாம். திரும்பும் வழியில் பலவகைப் பட்டு, மிளகு, ஏலக்காய், கிராம்பு, தந்தம் போன்ற பொருட்களை அவை ஏற்றிக்கொண்டு வருமாம்.

ஆகவே, ஐதர் நீண்ட நாட்கள் அங்கு தங்கிப் பார்க்கப் பிரியப்பட்டிருக்கலாம் அல்லது அப்போதைய மலபார் நெருக்கடியால் அவசியம் ஏற்பட்டிருக்கலாம். மலபார் நாயர்கள் மாப்பிள்ளைமார்களின் புகைச்சல் சூடேறி, மீண்டும் நாயர்கள் கிளர்ந்தெழுந்தனர். ஐதர் கோயம்புத்தூரிலிருந்து மலபாருக்கு விரைந்தார். கிளர்ச்சியாளர்களை அடக்கினார். 15,000 பேர்கள் அங்கிருந்து மைசூர்ப் பகுதிகளுக்குத் துரத்தப் பட்டார்கள். அந்தோ! தட்பவெப்பநிலை மாற்றத்தினால், துரத்தப்பட்டவர்களில் 200 பேர்கள் மட்டும் பிழைத்தனராம். அச்சமயத்தில் பாலக்காட்டில் ஐதர் அலி ஒரு கோட்டையைக் கட்டுவித்தார். மலபாருக்குச் செல்லவும், அங்கிருந்து கவனிக்கவுமான ஏற்பாடு அது.

அக்காலத்திற்கு முன்பிலிருந்தே (சிக்கதேவராயன் காலம் முதல்) மைசூரின் ஆட்சிக்குட்பட்டிருந்த சிற்றரசர் கோயம்புத்தூரில் இருந்தனர். குரிக்காரரர் என்ற பெயரில் மைசூரின் ராஜப்பிரதிநிதிகளாக, 1688இல் கோயம்புத்தூரில் லிங்கராஜையா என்பவனும், சங்ககிரியில் சிக்கையா என்ப வனும் ஆண்டு வந்தனர். சிக்க கிருஷ்ணராயன் காலத்தில் (1734-

1766) சங்கரையா என்ற குரிக்காரன் கோயம்புத்தூரிலிருந்து ஆட்சி செய்தான். பின்னர் மாதையன் என்ற குரிக்காரன் 1750-60களில் இருந்தான். அவர்கள் பிராமணர்கள்.

கோயம்புத்தூரின் ராஜ வீதி அப்போது 'மாதே ராஜ மகால் வீதி'. அது நகரின் பிரதான சாலையாக இருந்தது. அவ்வீதியின் கோடியில் குரிக்காரர் கட்டிய அரண்மனை இருந்தது. அந்த அரண்மனையில் ஐதர் அலி அடிக்கடி தங்குவதுண்டு. திப்பு சுல்தானும் அங்கே தங்குவது வழக்கம். ஐதரின் காலத்தில் மாதண்ணன் என்பவன் கோயம்புத்தூர் படைத் தலைவனாக இருந்தான். அவனும் ஒரு பிராமணன் என்கிறார் ஆரோக்கிய சாமி (பக். 386).

## மைசூரின் புதிய ராஜாக்கள்

இதற்கிடையில் கைப்பாவை அரசன் சிக்க கிருஷ்ணராயன் இறந்ததாகச் செய்தி வந்தது (1766). இறந்த மன்னரின் மூத்த மகன் நஞ்சராஜனை (18 வயது) அரியணையில் அமர்த்த உத்தரவுகளை அனுப்பி வைத்தார் ஐதர் அலி. ஆனால், நேரில் சீரங்கப்பட்டணத்திற்குத் திரும்பியபோது (1767), புதிய மன்னன் தன் பேச்சைக் கேட்டு நடப்பவன் போல் ஐதருக்குத் தோன்றவில்லை. ஆகவே, அவனுக்கு மூன்று லட்சம் பகோடாக்களைத் தந்து (சுமார் ஒன்பது லட்சம் ரூபாய்கள்) ஓய்வு கொள்ள வைத்தார். 1769-1770இல் மராத்தியர் ஐதரின் வடக்குப் பகுதிகளைத் தாக்கினர். அதில் அவருக்குப் பின்னடைவு நேரிட்டது. எதிரிகளுடன் நஞ்சராஜன் ரகசியத் தொடர்பு வைத்திருந்ததாகத் தெரிய வந்தது. ஐதர் தயங்க வில்லை. கழுத்தை நெரித்து நஞ்சராஜன் கொல்லப்பட்டான் (1771). நஞ்சராஜனின் தம்பி சாமராஜ உடையாரைப் புதிய ராஜாவாக நியமித்தார். அம்மன்னன் ஆறு ஆண்டுகளுக்குப் பின் இறந்தான். குழந்தைகள் இல்லை.

புதிய ராஜாவைத் தேர்ந்தெடுப்பதில் சலித்துப் போனாலும் பெயரளவில் ஒரு மன்னன் தொடர்வதை ஐதர் விரும்பினார். அடுத்த முறை புது ராஜாவைக் கண்டுபிடிக்க ஒரு புதிய

உத்தியைக் கையாண்டார். காஸா சாமராஜ உடையார் என்ற சிறுவனைத் தேர்ந்தெடுத்தார் (1776). திப்பு சுல்தான் காலத்திலும் இந்த ராஜா தொடர்ந்தார். 1796இல் அவன் இறந்தான். அப்போது அந்த ராஜாவிற்கு மூன்று வயதில் ஒரு மகன் இருந்தான். அப்போது திப்பு சுல்தானின் ஆட்சி. புதிய ராஜாவை திப்பு நியமிக்கவில்லை. ராஜா என்று ஒருவர் தேவையில்லை என நினைத்தார். ஆனால் 1800இல் டாக்டர் புக்கானன் சீரங்கப்பட்டடணத்திற்கு வந்தபோது புதிய ராஜாவைக் கண்டார். அவர் (மூன்றாம்) மகாராஜா மைசூர் கிருஷ்ணராஜ உடையார் பகதூர்.

1799ஆம் ஆண்டில் திப்பு சுல்தான் இறந்த பின்னர் மைசூர் ராஜ்ஜியத்தை ஆள்வதற்கு கிழக்கிந்திய கம்பெனியார் அரியணை ஏற்றிய ராஜா அவர்; 1796இல் இறந்த சாமராஜ உடையாரின் மகன். ஏழு வயதுப் பாலகனாக அரியணையில் அமர்ந்திருந்த அந்த ராஜாவை புக்கானன் விவரிப்பதைப் பின்னர் காண்போம்.

## 3

# மைசூர்ப் போர்களின் முடிவு - புக்கானன் புறப்பாடு

### முதலாம் மைசூர்ப் போர் [1767–69]

தென்னிந்தியாவில் வலிமை பெற்றிருந்த மராத்தியர், ஐதராபாத் நிஜாம், ஆங்கிலேயர் ஆகியோர் ஒன்று சேர்ந்து மைசூரைத் தாக்கக் கூட்டணி சேர்ந்தனர். ஆர்க்காடு நவாப் முகமது அலி, ஆங்கிலேயரின் தயவில் இருந்தார். ஆகவே அவரும் இதில் அடக்கம், முகமது அலி தன் தலைநகரை ஆர்க் காட்டிலிருந்து மதராஸ்-சேப்பாக்கத்திற்கு மாற்றியிருந்தார்.

ஐதர் அலியின் முன்னேற்றம், பக்கத்து நாடுகளை ஆக்கிரமித்தல், விட்டால் தங்களையும் விஞ்சிவிடக் கூடியவன், போன்றவை அவர்களிடையே அச்சத்தையும் அழுக்காறையும் தோற்றுவித்தன. அக்கூட்டணியில் ஆங்கிலேயர் சேர வேண்டிய நேரடி முகாந்திரம் இல்லை. ஆனால் 1766இல் அவர்கள் ஐதராபாத் நிஜாமுடன் செய்து கொண்ட கூட்டு உடன்படிக்கையின்படி ஐதருடன் போரிட முகாந்திரம் கிடைத்தது. பிரெஞ்சுக்காரர்களின் பலம் குன்றியிருந்த அந்த வேளையில் ஐதர் மற்றும் நால்வரின் பல்வேறு அபிலாஷை களினால் மைசூர் நாடு போர்களைச் சந்திக்க வேண்டி வந்தது. அவை மைசூர்ப் போர்கள் என்று குறிப்பிடப்படுகின்றன.

மைசூர்ப் போர்களினால் கொங்கு நாடும் அதன் மக்களும் பட்ட தொல்லைகள், துயரங்கள், இழப்புகள், பயங்கரங்கள் போன்ற இடர்பாடுகள் எண்ணற்றவை. கட்டுப்பாடற்ற படைப் பிரிவுகள் தம் ஊர்களிடையே அடிக்கடி ஊடுருவினால் அச்சம், பொருள் இழப்பு, பயிர் இழப்பு, உயிர் இழப்பு போன்றவை பொது ஜனங்களுக்கு ஏற்படுமன்றோ...! காட்டில் பல யானைகள் மோதிக் கொண்டால் பிற சிறு உயிரினங்கள் பயம் கொள்ளும் நிலை போன்றதுதான்... இதில் விந்தை என்ன வெனில் போரிட்ட மன்னர்களில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மன்னன் யாருமில்லை. ஆகவே, யார் யாருடன் சண்டையிட்டார்கள் என்பதை நினைவில் கொள்வதிலும் சிரமம் தோன்றும். தன் பயணத்தின்போது அந்தந்த ஊர்களில் கண்டு, கேட்ட இவ்வாறான வரலாற்றுத் தகவல்களை புக்கானன் குறிப்பிடுகிறார். சில இடங்களில் அங்கே நிகழ்ந்த போர்களினால் ஏற்பட்ட அழிவுகளையும் குறிப்பிட்டுள்ளார்.

அப்போர்களினால் தமிழ் இனமும் மொழியும் முன்னேற வாய்ப்பில்லாமல் போயிற்று. நாட்டின் பொருளாதாரச் செழிப்பும் மக்களின் முன்னேற்றமும் மன்னர்களின் கவனத்தில் இருந்திருக்க வாய்ப்புக் குறைவு. அடிப்படையில் நிலையான ஆட்சி நிலவினால்தானே நாட்டின் முன்னேற்றம் கூடும்! மராத்தியர்கள் கிடைத்ததை அள்ளிச் செல்ல வந்தனர். மொகலாயர் ஆட்சி தாழ்வுற்ற நிலையிலும், ஐதராபாத் நிஜாம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, கூட்டணி சேர்ந்து பாராமகால் பக்கம் தலைகாட்டி லாபம் பெற முயன்றார். ஆர்க்காடு நவாபிற்கும் பாராமகால் மீது ஒரு கண் இருந்தது. ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கிடைத்ததெல்லாம் உபரியே... இழப்பதற்கு ஒன்றுமில்லை. மைசூர் மன்னனுக்கு கொங்கு நாட்டு மண், குறிப்பாகக் கோயம்புத்தூர் ஜில்லா வரி வசூலுக்கும், மலபாரை வேட்டையாடவும் வழிவிட்டது.

மராத்தியர்களும் நிஜாம் அலியும் மைசூரைத் தாக்கத் திட்டமிட்டனர். மராத்தியர்கள், பேஷ்வா மாதவராவ் தலைமையில் தெற்கே படையெடுத்து வந்தனர். நாட்டைப்

பிடித்து, ஆள்வதைவிடக் கொள்ளையடிப்பது அவர்களின் நோக்கம். அப்படையின் ஒரு பிரிவு பாராமகாலைச் சூறையாடியது (1767). ஐதர் அலி அதைத் தடுத்து நிறுத்தினார். ஆனால் இரண்டாண்டுகளுக்குப் பிறகு அவர்கள் படையெடுத்து வந்தபோது, நிஜாம் அலியின் படையும் வந்து சேர்ந்து கொண்டால் வம்பாகிவிடும் என்று நினைத்த ஐதர் 35 லட்சம் ரூபாய்களைத் தந்து மராத்தியரைச் சமாதானப்படுத்தி னார் - பணத்தில் பாதியை ரொக்கமாகவும் மீதிப் பாதியை கோலார்ப் பகுதியில் வரிவசூல் செய்து கொள்ளும் உரிமையு மாக ஏற்பாடு.

அடுத்து நிஜாம் அலி வந்தான். கூட ஆங்கியேலர்களின் ஒரு படைப்பிரிவும் வந்தது. நிஜாம் அலியுடன் தந்திரமாகப் பேசித் தன் வசம் இழுத்துக் கொண்டார் ஐதர். நிஜாம், ஆங்கிலேயரின் காலை வாரிவிட்ட செயல் அது. இடையே கண்ணனூரிலிருந்த பழைய தளவாய் நஞ்சராஜய்யா மராத்தியரிடமும் நிஜாம் அலியுடனும் தனக்கெதிராகத் தொடர்பு வைத்திருந்தார் எனக் கேள்வியுற்ற ஐதர், பொய்க் காரணம் சொல்லி நஞ்ச ராஜய்யாவை சீரங்கப்பட்டணத்திற்கு வரவழைத்து வீட்டுக்காவலில் வைத்தார்.

திடீரென்று நிஜாம் அலி - ஐதரின் படைகள் ஒன்று சேர்ந்து தமிழகத்தின் வடபகுதியிலிருந்த ஆங்கிலேயப் படையை (கர்னல் ஸ்மித் / ஆகஸ்ட் 1767) செங்கம் கணவாய்ப் பகுதியில் தாக்கினர். ஆங்கிலேயர் தோற்றனர். திருச்சியிலிருந்து கர்னல் உட் (Colonel Wood) தலைமையில் ஆங்கிலேயரின் ஒரு படைப்பிரிவு புறப்பட்டு வந்தது. இரண்டு கர்னல்களின் படைகளும் திருவண்ணாமலையில் சேர்ந்து கொண்டன. அங்கே ஐதர் அலி தோற்கடிக்கப்பட்டார் (செப்டம்பர், 1767) நிஜாம் அலி பின்வாங்கிச் சென்று விட்டான். ஐதரும் பின்வாங்கினார். அப்போது மதராஸிற்கு அருகில் சூலக்கிக் கொண்டிருந்த திப்பு (17 வயது) ஐதரின் நிலைமையைக் கேள்வியுற்றான். தந்தையுடன் சேர்ந்துகொள்ள மேற்கு நோக்கிக் கிளம்பினான்.

சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஐதர் அலி திருப்பத்தூர், வாணியம்பாடி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி னார். (நவம்பர், 1767)* திரும்பவும் கர்னல் உட், கர்னல் ஸ்மித் படைகள் ஒன்று சேர்ந்து அவ்வூர்களை மீட்டனர். (டிசம்பர், 1767). ஐதர் - நிஜாம் அலியின் படைகள் காவேரிப்பட்ட ணத்திற்கு வந்தன. கர்னல் உட் படையுடன் சேர்ந்து, கர்னல் ஸ்மித் காவேரிப்பட்டணத்தின் வடக்கில் முகாமிட்டார். தாக்குதல் நடத்த சமயம் பார்த்துக் கொண்டிருந்தார். இடையில், பம்பாயிலிருந்து புறப்பட்ட ஆங்கிலேயப் படை மேற்குக் கடற்கரையைத் தாக்க முற்பட்டது. அதுபோல வங்காளத்திலிருந்து வந்த ஒரு படை ஐதராபாத் நிஜாமின் வாரங்கல்லைத் தாக்கியது. கேள்விப்பட்ட ஐதர் ஒரு பெரும் படையைத் திப்புவுடன் மேற்குக் கடற்கரைக்கு அனுப்பினார். நிஜாம் அலியும் வடக்கு நோக்கிக் கிளம்பி விட்டான்.

கர்னல் ஸ்மித்துடன் சேர்ந்து கொள்ள சிங்காரப்பேட்டை கணவாய் வழியாக மேஜர் ஃபிட்ஜெரால்ட் (Major Fitzgerald) தலைமையில் ஒரு படைப்பிரிவு வந்து கொண்டிருந்தது. அப்படையைத் தாக்க ஐதர் முற்பட்டார். அதை அறிந்த ஸ்மித்தின் படையும் முன்னேறியது. இவற்றை எதிர்பாராத ஐதர் திக்குமுக்காடிப் போனார். ஃபிட்ஜெரால்ட் படையின் தாக்குதலில் ஐதரின் உயிருக்கும் ஆபத்து வந்தது. அவர்மீது விழவிருந்த எதிரியின் தோட்டா அவரது தலைப்பாகையைத் தட்டிவிட்டதாம். மற்றொரு தோட்டா அவர் குதிரையை வீழ்த்தியது. ஐதர் தப்பித்தார்; மேற்கு நோக்கிச் சென்றார் (டிசம்பர், 1767).

வடக்கு நோக்கிக் கிளம்பிய நிஜாம் அலி, ஆங்கிலேய ருடன் சமரசத்திற்கு முற்பட்டான்; ஐதர் அலியைக் கைவிட்டு விட்டான். ஆங்கிலேயர் - நிஜாம் இடையே உடன்படிக்கை ஏற்பட்டது (பிப்ரவரி, 1768). அதன்படி, மைசூர்ப் பகுதிகளில் தான் பெற்ற இடங்களை விட்டுக் கொடுத்தான்.

* இந்த வெற்றி இப்பகுதிகள் சேலம் மாவட்டத்துடன் 1792இல் இணைக்கப் பட்டதற்கான முகாந்திரம் ஆகும். 1910 வரை அவை சேலம் மாவட்டப் பகுதிகளாயிருந்தன.

ஐதர் மேற்குக் கடற்கரைப் பக்கம் சென்ற சமயத்தில் ஆங்கிலேயப் படைப் பிரிவுகள் களத்தில் இறங்கின. கர்னல் ஸ்மித் மீண்டும் காவேரிப்பட்டணத்தை ஆக்கிரமித்து, பின்னர் பள்ளிக்கொண்டா மற்றும் வேலூரைப் பிடித்தான் (மே, 1768).

கர்னல் உட் பாராமகாலின் தெற்கில் தருமபுரிக் கோட்டை, தென்கரைக் கோட்டை போன்ற கோட்டைகளைப் பிடித்து, தொப்பூர்க் கணவாயில் இறங்கி, ஐதரின் கீழிருந்த சேலம், ஆத்தூர், சேந்தமங்கலம், நாமக்கல், திண்டுக்கல், ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற கோட்டைகளைப் பிடித்தான். இதில் விடுபட்ட முக்கியமான கோட்டை



முதலாம் மைசூர்ப் போர்க்களங்கள்

சங்ககிரி மட்டும்தான். கர்னல் உட் மீண்டும் கர்னல் ஸ்மித் படையுடன் சேர்ந்து கொள்ளப் பணிக்கப்பட்டதால், அவன் திரும்பிச் சென்று தொப்பூர், பாராமகால் வழியே கோலார்-பெங்களூரை நோக்கிப் பயணித்தான். மராத்தியரும் (முராரி ராவ்) வந்து சேர்ந்து கொண்டனர். ஐதர் அலி பெங்களூர் நோக்கி வந்தார்.

உட்டின் படையைத் தாக்க முற்பட்ட ஐதர் அலி, ஸ்மித்-உட் படைகளுக்கிடையே மாலூர் என்ற இடத்தில் மாட்டிக் கொள்ளவிருந்தார். ஆனால் உட்டின் அஜாக்கிரதையால் ஐதர் தப்பித்தார். விளைவு - பின்னாளில் உட்டின் வேலைக்கு ஆபத்து நேரிட்டது.

களைப்புற்ற ஐதர், ஆங்கிலேயருடன் சமாதானம் மேற்கொள்ள நினைத்தார். தன் நோக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்தார். பாராமகால் பகுதியையும் பத்து லட்சம் ரூபாயையும் வழங்கிட முன்வந்தார். ஆனால் ஆர்க்காடு நவாப் முகமது அலியை அந்த உடன்படிக்கையில் சேர்க்கக்கூடாது என்று நிபந்தனை விதித்தார். (ஆர்க்காடு நவாப் மீதான ஐதரின் வெறுப்பிற்குக் காரணம். பார்க்க அத்தி.1) மறுபுறம் ஆங்கிலே யரும் அவர்தம் கூட்டாளிகளும் சங்ககிரி வரையுள்ள பகுதிகளைக் கேட்டனர். அதோடு நிஜாம், மராத்தியருக்கு ஏற்பட்ட போர்ச் செலவுகளுக்கும் பணம் கேட்டனர். ஐதர் மறுத்து விட்டார். ஆங்கிலேயரின் பேராசை பின்னர் வருத்தம் கொள்ளும் நிலையில் முடிந்தது.

அடுத்த மாதத்தில் கர்னல் உட்டை முள்ளு பாகளு (Mullu Bagalu) என்ற இடத்தில் ஐதர் தோற்கடித்தார். பாராமகால், கோலார்ப் பகுதிகளின் பல இடங்களில் ஐதர் அலி-ஆங்கி லேயர் படைகளுக்கிடையே சண்டைகள் நடந்தன (நவம்பர், **1768**).

பசலுல்லாகான் என்ற படைத்தலைவன் தலைமையில் ஐதரின் படையொன்று சீரங்கப்பட்டணத்திலிருந்து புறப்பட்டு, கஜல்கட்டி, காவேரிபுரம் வழிகளில் இறங்கி கோயம்புத்தூர்ப் பிராந்தியத்தில் நுழைந்தது. ஐதர் அலி

பாலக்கோடு (தருமபுரி) கணவாய் வழியே புகுந்து ஒரு சூறாவளிப் பயணம் மேற்கொண்டார். முன்பு உட் பிடித்த கோட்டைகளை மீட்டார் (டிசம்பர் 1768). தருமபுரி, தென்கரைக்கோட்டை, ஓமலூர், சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திண்டுக்கல், காவேரிபுரம், பாலக்காடு ஆகியவை அதில் அடங்கும். பசலுல்லாவின் படை மதுரை, திருநெல் வேலியை நோக்கிச் சென்றது. ஐதர் கிழக்குப் பக்கம் சென்றார். திருச்சி, தஞ்சை, கடலூரைப் பிடித்தார். ஆங்கிலேயர் சமாதானம் செய்து கொள்ள விரும்பினர். ஆர்க்காடு நவாபின் போக்கை விரும்பாத ஐதர் அதற்கு ஒப்பவில்லை.

கடலூரைத் தாண்டிவிட்ட ஐதர், பாராமகால் பகுதியிலிருந்த தனது படைகளை மதராஸிற்குப் புறப்பட்டு வரப் பணித்து தானும் புயலாகப் பறந்தார். மூன்றரை நாட்களில் 140 மைல்களைக் கடந்து மதராஸின் பரங்கிமலை வாசலில் அவர் நின்றபோது (மார்ச் 29, 1769) ஆங்கிலேயர் அசந்து விட்டனர். இனி தாக்குப்பிடிக்க முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட அவர்கள் ஐதர் அலியுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியதாயிற்று - தான் விரும்பியபடி ஆங்கிலேயருடன் போர் உடன்படிக்கையை எழுத வைத்த ஒரே இந்திய மன்னன் ஐதர் அலியாகத்தான் இருப்பார்.

இருதரப்பிலும் கைதானவர்களை விடுதலை செய்யவும் பிடித்த இடங்களைத் திருப்பித் தரவும் உடன்படிக்கை ஏற்பட்டது. இரு தரப்பு நாடுகளில் யாரையாவது வேறொருவர் தாக்கினால் மற்றவர் உதவிக்கு வரவேண்டும் என்பது அந்த உடன்படிக்கையில் ஒரு முக்கிய அம்சம். ஐதர் அதில் குறியாய் இருந்தார். ஆனால் ஆங்கிலேயர் அதைக் கடைப்பிடிக்கத் தவறியதால், பிற்காலத்தில் அவர்களிடையே போர் மூளும் நிலை ஏற்பட்டது.

1769ஆம் ஆண்டு உடன்படிக்கையுடன் முடிவுற்ற போர்களின் தொகுப்பு 'முதலாம் மைசூர்ப் போர்' என அழைக்கப்படுகிறது.

## இரண்டாம் மைசூர்ப் போர் (1780–1784)

ஆங்கிலேயருடன் ஐதர் அலி செய்து கொண்ட உடன் படிக்கை மராத்தியரைக் கட்டுப்படுத்தாதல்லவா? அவர்கள் ஐதரின் எல்லைப் பகுதிகளை ஆக்கிரமிக்க முற்பட்டனர். நிஜாமுடன் மறைமுகக் கூட்டு வைத்துக்கொண்டு கர்னூல், கடப்பா பகுதிகளை ஐதர் தாக்க முனைந்தார். வெற்றி தோல்விகள் மாறி மாறி வந்தாலும் மராத்தியரின் படை வலுவுள்ளதாயிருந்தது. தங்களுடைய ஒப்பந்த சரத்துப்படி மராத்தியரின் தாக்குதலைச் சமாளிக்க ஆங்கிலேயரின் உதவியை ஐதர் நாடினார். ஆங்கிலேயர் முன்வரவில்லை. மராத்தியர் வென்றனர். ஒரு கோடி ரூபாய் பணம் கேட்டனர். 12 லட்சம் ரூபாய் கொடுத்து சமாளித்தார் ஐதர் (1770). அடுத்த ஆண்டு மீண்டுமொரு தாக்குதல்; மராத்தியர் வென்றனர். ஐதர் பின்வாங்க நேர்ந்தது (1771). மேல்கோட்டை (மைசூருக்கு வடக்கில்) அருகே திப்புவின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டது. திப்புவிற்கு என்ன ஆயிற்று எனத் தெரியாத நிலையும் இருந்தது. ஆனால் தப்பித்து வந்து விட்டான். மீண்டும் அடுத்த ஆண்டு சீரங்கப்பட்டணத்திற்கு அருகிலேயே மராத்தியர் தாக்குதல் நடத்தினர் (ஜூன், 1772). 30 லட்சம் ரூபாய்கள் கொடுத்து அனுப்பி வைத்தார் ஐதர். அந்தச் சமயத்தில்தான் ஐந்தாம் படை வேலை செய்ததாகச் சந்தேகப்பட்ட மன்னன் நஞ்சராஜனைக் கொல்ல ஏற்பாடு செய்தார் ஐதர் (பார்க்க: அத்தி.2)

இவ்வாறு சீரங்கப்பட்டணத்திற்கு வடக்கிலும் வடகிழக்கிலும் மலபாரிலுமாகப் பல போர்களைச் சந்தித்துக் கொண்டிருந்தார் ஐதர். திப்புவும் தனியே போர்க்களங்களைக் கண்டான். ஒருகட்டத்தில், ஐதரின் துயரத்தை அதிகரித்துக் கொண்டிருந்த மராத்தியரின் திறமை வாய்ந்த தளபதி மாதவராவ் இறக்க, ஐதரின் கரம் ஓங்கியது.

மராத்தியருக்கு பம்பாயிலிருந்த ஆங்கிலேய அரசிட மிருந்தும், ஐதராபாத் நிஜாமிற்கு மதராஸ் அரசிடமிருந்தும் பகை தோன்றியது. ஐதருக்கும் மதராஸ் ஆங்கிலேயர் தக்க சமயத்தில் தனக்கு உதவ முன்வரவில்லை என்ற கோபம்

இருந்தது. ஆங்கிலேயருடன் கூட்டு வைத்துக் கொள்ள ஐதர் விரும்பிய போதெல்லாம் ஆர்க்காடு நவாப் முகமது அலி முட்டுக்கட்டையாயிருந்தார். ஆங்கிலேயர், பிரெஞ்சுக்கார ரிடையே ஏற்பட்ட போரில் ஆங்கிலேயர் புதுச்சேரியையும் மேற்குக் கடற்கரையிலுள்ள மாஹியையும் கைப்பற்றினர். தன் எல்லையிலிருந்த மாஹியை ஆங்கிலேயர் வென்றதால் ஐதர் சினம் கொண்டார். மராத்தியர்-நிஜாம்-ஐதர் ஆகியோரிடைய நட்பு தோன்றியது. பிரெஞ்சுக்காரரர் ஆதரவும் இருந்ததால் ஆங்கிலேயர் நெருக்கடிக்குள்ளாயினர் (1778).

இரண்டாம் மைசூர்ப் போரின் பின்புல நிகழ்ச்சிகள் இவை. இடையில் பூர்ணையா என்ற பிராமணர் - தாரா புரத்தைச் சேர்ந்தவர் - ஐதர் அலியிடம் வேலைக்குச் சேர்ந்தார். பிறகு அமைச்சர் அளவிற்குப் பதவி உயர்வு பெற்றார், அந்தக் கெட்டிக்காரர். ஐதர்-திப்பு-மைசூர் மன்னர்/ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சிகளில் தொடர்ந்து முக்கியப் பொறுப்பு வகிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்.

1780இல் ஐதர் அலி போருக்குத் தயாரானார். தென்னிந்தியா கண்டிராத வகையில் 90,000 பேர் கொண்ட படையுடன் சீரங்கப்பட்டணத்திலிருந்து ஜூலை மாதத்தில் கிழக்கு நோக்கிப் புயலாகப் பறந்தார். பாராமகால், சிங்காரப்பேட்டை கணவாய் வழியே சென்று கர்நாடகம் எனப்படும் ஆற்காடு-காஞ்சிபுரம் பகுதிகளில் ஊழித்தீயாகப் புகுந்தார். வழியில் தென்பட்ட விளைநிலங்கள், கால்நடைகள், வீடுகள், மக்கள் என்று சூறையாடல்கள் கணக்கற்று நடந்தன. பீதியில் மக்கள் சாரி சாரியாகத் தங்கள் ஊர்களைக் காலி செய்து கிளம்பினர். ஐதரின் இளைய மகன் கரீம் பரங்கிப்பேட் டையைத் தாக்கினான். மூத்த மகன், முப்பது வயது வாலிபன் திப்பு வடக்கிலிருந்து புலிபோலப் பாய்ந்து வந்தான். இடையில் ஐதர் சிங்கம் போல் சீறினார் - அவருடைய இலக்கு 'மதராஸ்'. பரங்கிமலை வரை சென்று தீப்பிழம்புகள் மதராஸ் கோட்டை வரை தென்படச் செய்தார். அது மதராஸைத் தாக்க ஐதர் செய்த இரண்டாவது முயற்சி.

அந்தச் சமயத்தில் நடைபெற்ற போர்களில் திப்பு காட்டிய தீரம், தந்தையின் வீரத்தையும் விஞ்சியதாயிருந்தது. ஆங்கிலேயரின் தளபதி சர் ஹெக்டர் மன்றோ காஞ்சிபுரத்தில் முகாமிட்டிருந்தார். குண்டூரிலிருந்து கர்னல் பெய்லியின் (Baillie) படைப்பிரிவு உதவிக்கு வந்து கொண்டிருந்தது. பெய்லியின் படை மன்றோவுடன் சேரும் முன் திப்புவால் தாக்கப்பட்டது (செப்டம்பர், 1780). பொழிலூருக்கு அருகில் பெய்லியின் படை நசுக்கப்பட்டது. தென்னிந்தியாவில் ஆங்கிலேயர் சந்தித்த மிக மோசமான தோல்வி அது. பெய்லி சிறை பிடிக்கப்பட்டு சீரங்கப்பட்டணம் நிலவறையில் வாடினார். ஆர்க்காட்டை முற்றுகையிட்டார் ஐதர்.

தங்களின் இக்கட்டான நிலையை உணர்ந்த கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்க்ஸ் ஐதராபாத் நிஜாமையும் மராத்தியரையும் தன்வயப்படுத்தினார். சர் அயர் கூட் (Sir Eyre Coote) என்ற புகழ்பெற்ற படைத்தலைவன் தலைமையில் வடநாட்டிலிருந்து ஒரு படையைத் தெற்கே அனுப்பினார். பிரெஞ்சுக் கப்பற்படை மதராஸ் அருகில் வந்து ஆங்கிலேயரைப் பயமுறுத்தியது. தஞ்சாவூர் பகுதியில் ஐதர் கலக்கம் தந்தார். கொலை, கொள்ளைகள் நடந்தன. அங்கிருந்த நெசவாளர், அவர்தம் குடும்பத்தினரில் கணக்கற்றோர் பிடிக்கப்பட்டு சீரங்கப்பட்டணத்தில் குடியமர்த்தப்பட்டனர். பின்னாளில் அவர்கள் முஸ்லிம்கள் ஆயினர். அச்சமயத்தில் கர்னல் பிரைத்வைட்டை (Colonel Braithwaite) தஞ்சைக்கருகில் அன்னசாகரம் என்கிற ஊரில் திப்பு தோற்கடித்தான். படைத்தலைவன் உட்பட நூற்றுக்கணக்கான ஆங்கிலேய வீரர்களைச் சிறைப்பிடித்தான் (பிப்ரவரி, 1782).

அப்போது ஐதர் அலியின் உடல்நிலை மோசமாயிற்று. முதுகில் தோன்றிய புற்றுநோயால் அவதியுற்றார். முஸ்லிம், இந்து, பிரெஞ்சு வைத்தியர்களின் வைத்தியங்களால் பலன் கிட்டவில்லை. சித்தூருக்கு அருகில் நரசிங்கராயன்பேட்டை என்னுமிடத்தில் தனது இறுதி மூச்சை விட்டார் (டிசம்பர் 7, 1782). அப்பகுதியில்தான் (அருகில் கோலார்) அவர் தன் முதல் மூச்சை வெளிப்படுத்தியதும் ஆகும்.

ஐதர் அலி இறக்கும் வரை பெயரளவில் 'தளவாய்' பதவியில்தான் இருந்தார். அரியணையில் ராஜா இருந்தார். ஆனால் ஐதரின் வாரிசு திப்புவின் காலத்தில் நிலை மாறியது. திப்புவின் போக்கு மாறுபட்டிருந்தது. ஐதர் இறந்தபோது படையில் 88,000 போர் வீரர்கள் இருந்தனர். மூன்று கோடி ரூபாய் பணமும் இருந்தது.

பல்வேறு இடங்களில் திப்பு-பிரெஞ்சுக்காரர்களின் படைகளும் ஆங்கிலேயர் மற்றும் அவர்களது கூட்டாளிகளின் படைகளும் பல போர்களைக் கண்டு, கடைசியில் இருதரப்பின ரும் சோர்வடைந்து சண்டைகளை நிறுத்திக்கொள்ள உடன் பட்டனர். மங்களூரில் 1784 மார்ச்சு 11ஆம் தேதி உடன் படிக்கை ஏற்பட்டது. இருதரப்பிலுமிருந்த போர்க் கைதிகளை விடுவிக்கவும், பிடித்த நாடுகளைத் திருப்பித் தரவும் முடிவாயிற்று. அத்துடன் முடிவுற்ற போர்கள் 'இரண்டாம் மைசூர்ப் போர்' எனக் குறிக்கப்படுகிறது.

அதன்பின்னர் திப்பு தன்னைப் 'பாதுஷா' என அறிவித்துக் கொண்டார். அவர் 'திப்பு சுல்தான்' ஆனார்.

## மூன்றாம் [1785—1792] – நான்காம் [1799] மைசூர்ப் போர்கள்

திப்பு சுல்தானின் காலத்தில் இரண்டு மைசூர்ப் போர்கள் நிகழ்ந்தன. ஒன்று 1792இல் முடிவுற்றது. மூன்றாம் மைசூர்ப் போர்களில் பெரும்பாலானவை கொங்கு நாட்டிலேயே நிகழ்ந்தன. ஆங்கிலேயர் தரப்பில், கவர்னர் ஜெனரலாயிருந்த காரன்வாலிஸ் நேரடியாகப் போரில் ஈடுபட்டார். திப்பு சுல்தான் தோல்வியுற்றார்; ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அதன்படி, தனது ராஜ்ஜியத்தில் பாதியையும், போர்ச் செலவுகளுக்காக மூன்று கோடி ரூபாய்களையும், உபரிச் செலவுகளுக்காக (போரில் கலந்து கொண்ட அதிகாரிகளுக்குப் பரிசு வழங்க) முப்பது லட்சம் ரூபாய்களையும் திப்பு சுல்தான் கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆட்பட்டார்.

இன்றைய சேலம், தருமபுரி, நாமக்கல், கிருட்டிணகிரி மாவட்டங்களில் அடங்கிய (ஓசூர்-தேன்கனிக் கோட்டைப் பகுதிகள் நீங்கலா) 'பாராமகால்-சேலம்' என்று பெயர் கொண்ட சேலம் ஜில்லாவும், திண்டுக்கல் பகுதியும், மலபார் ஜில்லாவும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. அப்போது ஆங்கிலேயரின் கூட்டாளிகளாயிருந்த மராத்தியருக்கும், நிஜாமிற்கும் அதே அளவு நிலப்பகுதிகள் பிரித்துத் தரப் பட்டன. அப்போதைக்குத் திப்புவால் மூன்று கோடி ரூபாயில் ஒரு கோடியை மட்டும் உடனடியாகத் தர முடிந்ததால், மீதித் தொகைக்குப் பிணையாக அவரது இரண்டு மகன்களைக் கேட்டார் காரன்வாலிஸ். மறுத்தால் மீண்டும் போர் மூளும் நிலை... இசைந்தார் திப்பு. அம்மகன்கள் மதராஸிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அது மூன்றாம் மைசூர்ப்போரின் முடிவு.

**பி**றகும் திப்பு சுல்தான்-ஆங்கிலேயர் பகை தொடர்ந்தது. சும்மா இருக்க மாட்டாமல் திருவிதாங்கூர் மேல் படை யெடுக்க முற்பட்டார் திப்பு. கிடைத்தது சந்தர்ப்பம்; திப்புவை மேலும் ஒடுக்க வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்த ஆங்கிலேயர் தமது கூட்டாளியான திருவிதாங்கூர் ராஜாவிற்குத் துணை நின்றனர். திப்புவைப் போருக்கு இழுத்தனர். சண்டைகள் நிகழ்ந்தன. அவை பெரும்பாலும் பாராமகால் பகுதிகளிலும் மைசூர்ப் பகுதிகளிலும் நடந்தன. திப்பு சுல்தான் தோல்வியடைந்தார். சீரங்கப்பட்டணம் முற்றுகையிடப் பட்டது. போர்க்களத்தில் தன் தலைநகரின் கோட்டையி லேயே வீரமரணமடைந்தார் (மே 4, 1799). அத்துடன் நான்காம் மைசூர்ப் போர் நிறைவுற்றது.

மூன்றாம்-நான்காம் மைசூர்ப் போர்களினால் கொங்கு நாட்டுப் பகுதிகளில் விளைந்த அழிவுகளை ஆங்காங்கே தொட்டுக் காட்டியுள்ளார் புக்கானன்.

இன்றைய கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டத்தின் ஒரு பகுதி (கரூர் உட்பட) மற்றும்

கொள்ளேகாலம் தாலுகா அடங்கிய கோயம்புத்தூர் ஜில்லா மேலும் ஓசூர்-தேன்கனிக்கோட்டைப் பகுதிகள் ஆங்கிலேய ருக்குக் கிடைத்தன. ஆக, கொங்கு நாடு முழுவதும் 1799இல் ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்குட் பட்டது. அத்துடன் மைசூர் நாட்டில் 38 ஆண்டுகள் (1761-99) நிலவிய முகமதியர் ஆட்சி முடிவுற்றது.

**புக்கானன் புறப்பாடு**

மதராஸ் கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி நிலவிய தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், மைசூர்ப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து, விவரங்களைச் சேகரித்து அறிக்கை தரப் பணிக்கப் பட்ட டாக்டர் புக்கானன், தனது பயணத்தை மதராஸிலிருந்து துவக்கினார். நல்ல கோடைக்காலம் - ஏப்ரல் 23, 1800 அன்று பிற்பகலில் மதராஸிலிருந்து காஞ்சிபுரம் நோக்கிக் கிளம்பி னார். அவருடன் பரிவாரங்கள் தொடர்ந்தன. வழிகாட்டி, காவலர்கள், மொழி பெயர்ப்பாளர், படம் வரைபவர் போன்றோர் உடன் இருந்தனர். குதிரைகள், மாட்டு வண்டிகள், கூடாரங்கள் என்று புடை சூழ்ந்து சென்றார். தான் கண்டு, கேட்டவற்றை அங்கங்கேயே பதிவு செய்தார். ஏழு ஆண்டுகள் கழித்து (1807) அவர் எழுதியவை லண்டனில் புத்தகங்களாக அச்சிடப்பட்டன.

உள்ளதை உள்ளபடி புக்கானன் எழுதியதாகக் கருதப்பட்டாலும், அவர் ஒரு ஆங்கிலேயர், ஆணவம் கொண்ட ஆட்சியாளர்களின் பிரதிநிதி, தங்கள் இனத்தின் மேல் குறை காண்பவரல்லர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தென்னிந்திய மக்களின் வாழ்வையும், பழக்க வழக்கங் களையும் ஒருசில நாட்கள் மட்டும் ஒரு ஊரில் தங்கி, முழுதாகப் புரிந்து கொண்டு சரியாக எழுதியிருக்க முடியுமா என்னும் வினா ஏற்பட்டாலும், தான் கேட்டதையும் கண்களால் கண்டதையும் அவர் குறிப்பிட்டுள்ளவற்றைப் புறந்தள்ள முடியாது. பல ஆண்டுகள் அவர் வடநாட்டில் இருந்தவர். ஐரோப்பியரின் வாழ்க்கை முறைகளையும் விஞ்ஞான

முன்னேற்றங்களையும் மனதில் கொண்டு, தென்னிந்திய மக்களின் போக்குகளையும் வாழ்க்கை வசதிகளையும் வளர்ச்சிகளையும் ஒப்பிட்டு அங்கங்கே எழுதியிருப்பதில் ஏளனமும் அபிப்பிராயப் பேதங்களும் தொனிக்கின்றன. அன்று ஐரோப்பாவை விட (இன்றும்தான்!) இந்தியாவில் கல்வியறிவு மிகவும் குறைவு என்பது வெளிப்படை. அவர் பிரயாணம் செய்த பகுதிகள் 150 ஆண்டுகளாகப் பல போர்களைக் கண்டு அமைதியான வாழ்க்கையையும் வசதிகளையும் பெற்றிராத காலமாகும்.

பின்வரும் அத்தியாயங்களில் வருபவை புக்கானன் எழுதியதை மொழிமாற்றம் செய்து தரும் முயற்சி போன்ற தாகும். அவர் எழுதியவை கவர்னர் ஜெனரலுக்குச் சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கை போன்றவை, ஆட்சியாளர்கள் ஐரோப் பியர்கள். அவர்கள் தென்னிந்தியாவின் நிலையை நுணுக்கமாக அறிந்துகொள்ள புக்கானன் தொகுத்துத் தந்த தகவல்களில் பல இன்று சரித்திரச் சம்பவங்களாகவும், வரலாற்றுத் தகவல் களாகவும் விளங்குகின்றன. மக்களின் வாழ்க்கை நிலை, இயற்கை வளங்கள், விளைபொருட்கள், விவசாயம், தொழில் துறைகள், நீர்ப்பாசனம் போன்றவற்றை நாட்குறிப்பு போல அவர் தந்திருந்தாலும், அவை உள்ளூர் வரலாற்றில் ஈடுபாடு கொண்டுள்ளவரின் மனதைக் கவரும் என்பதில் சந்தேக மில்லை.

# 4

# மதராஸிலிருந்து காஞ்சிபுரம், பெங்களூரு வழியாகச் சீரங்கப்பட்டணம்

'சீரங்கப்பட்டணத்திற்குச் சென்று, மைசூர் ராஜாவின் அனுமதியைப் பெறுவதற்கு முன் நான் எனது விசாரிப்புகளைத் தொடங்க இயலாது' என்று கூறியபடி மதராஸிலிருந்து கிளம்பினார் புக்கானன். கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி கோமகன் அவருக்கு இட்ட உத்தரவு இவ்வாறு உள்ளது:

> 'இப்போதைய மைசூர் ராஜாவின் பகுதிகள், கடந்த யுத்தத்தின்போது காலம் சென்ற சுல்தானிடமிருந்து (கிழக்கிந்தியக்) கம்பெனியார் பெற்ற பகுதிகள் மற்றும் அதற்கு முந்தைய யுத்தத்தில் (1792) காரன்வாலிஸ் கோமகன் பெற்ற மலபார்ப் பகுதிகள் ஆகியவற்றில் உமது விசாரிப்புகளை மேற்கொள்ளவும். விவரங் களைக் கண்டு தெரிவிக்கவும்...'

பிப்ரவரி 24, 1800 அன்று புக்கானனுக்கு கல்கத்தாவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 1792 போரின் முடிவில் காரன்வாலிஸ் பிரபு மலபார் மற்றும் சேலம் ஜில்லாக்களைப் பெற்றார். ஆனால் சேலம் பகுதிகளுக்குச் சென்று விவரங்களைச் சேகரிக்க புக்கானனுக்கு உத்தரவிடப்படவில்லை. ஆகவே, அவர் சேலம் ஜில்லாவிற்கு வரவில்லை. ஆனால் சேலம்

ஜில்லாவில் ஒரு இடத்திற்கு மட்டும் புக்கானன் சென்றார். அது பரமத்தி - விவரத்தைப் பின்னர் காண்போம்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் புக்கானன் சென்ற இன்னொரு முக்கிய ஊர் காவேரிபுரம். அவ்வூர் தாரமங்கலம் கெட்டி முதலிகளின் கோட்டை நகரம். மைசூர் ராஜாக்களின் எல்லையை ஒட்டி, கணவாய்ப் பகுதியில் காவிரியின் வலது கரையிலிருந்த பேரூர். 1792-93இல் அவ்வூர் சேலம் ஜில்லாவில் இருந்தது. 1799இல் கோயம்புத்தூர் ஜில்லாவில் (பவானி தாலுகா) சேர்க்கப்பட்டது. மேட்டூர் அணை கட்டப்பட்ட சமயத்தில் (1929இல்) காவேரிபுரமும் அதைச் சுற்றியுள்ள சில ஊர்களும் சேலம் ஜில்லாவிற்கு மாற்றப்பட்டன. அணை கட்டியபோது பேரூரான காவேரிபுரம் மற்றும் வேறு ஒன்பது ஊர்களும் அணைப் பகுதியில் மூழ்கி விட்டன.

இந்தப் பீடிகையுடன், புக்கானன் புறப்பாட்டைக் காண்போம். அவரும் பீடிகையுடன்தான் எழுதினார்:

'மைசூர் ராஜாவின் திவானிடம் உத்தரவு பெறாமல் நான் எனது விசாரிப்புகளைத் துவங்க முடியாது. ஆனாலும் மதராஸிலிருந்து கிளம்பும் வழியில் உள்ள பகுதிகளில் கவனித்தவற்றை எழுதினால் பயனில்லாமல் போகாது...' என்ற குறிப்புடன் சென்னையிலிருந்து சீரங்கப்பட்டணம் வரை அவர் கடந்து சென்ற இடங்களைப் பற்றி எழுதத் துவங்கினார். அவற்றில் தமிழ்நாட்டுப் பகுதிகளைக் கவனத்தில் கொண்டு கி.பி. 1800இல் புக்கானன் கண்ணுற்றதைக் காண்போம்!

ஏப்ரல் 23ஆம் தேதி - கடும் வெயில் என்று குறிப்பிடுகிறார். சென்னையிலிருந்து வேலூர் செல்லும் மார்க்கத்தின் வெயிலை நாமும் அறிவோம். ஆனால் அவர் சென்ற வழியிலிருந்த வயல் கள் வெப்பத்தைத் தணித்தன போலும்! அவர் எழுதுகிறார்.

'வழியில் சில இடங்கள் பசுமையாக உள்ளன. அவை மனதிற்கு இதம் தருகின்றன. ஏரி, குளங்களின் அருகிலுள்ள வயல்களில் நெற்பயிர்கள் கதிர் முற்றியிருக்கின்றன. வெயில் தாழ்ந்த மாலை வெளிச்சம்.. வங்காளத்தைப் போன்று இதுவும்

சமவெளிப் பகுதி... சாலைகள் நன்றாக உள்ளன. குடில்களில் பல மண்ணால் ஆனவை; ஓடுகளால் ஒழுங்காக வேயப் பட்டுள்ளன. வங்காளத்திலிருப்பவற்றை விடப் பார்க்க நன்றாக உள்ளன. ஆனால் குடிசைகள் வைக்கோல்களால் வேயப் பட்டவையல்ல - பனை ஓலைகளால் வேய்ந்தவை - ஓலைகள் ஒடிந்து ஒழுங்கற்று உள்ளன.

'பாதைகளில் தர்மவான்கள் அமைத்தள்ள சுமைதாங்கிக் கற்கள் பல இடங்களில் இருக்கின்றன. பயணிகளின் வசதிக்காக சத்திரங்கள் உள்ளன - இவை வங்காளத்தில் காணப்படுவ தில்லை; ஏழைகள் தங்க உதவுகின்றன; வசதியானவர்கள் தமக்கும், தமது கால்நடைகளுக்கும் தேவையான உணவுப் பொருட்களை சத்திரங்களில் வாங்குகின்றனர்.

பூந்தமல்லிக்கருகில்* இடது பக்கம் திரும்பி, குன்றத் தூருக்குச் சென்றார் புக்கானன். வழியில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து பிரியும் வாய்க்கால்களால் இரு போகம் விளைவ தாகவும், அறுவடையான தானியங்கள் களத்துமேட்டில் குவிக்கப்பட்டிருப்பதாகவும், அவை திருட்டுப் போகாமலிருக் கவும், நிலக்கிழாருக்குரிய பங்கைச் சரிவர செலுத்துவதைக் கண்காணிக்கவும் தலையாரி இரவில் காவல் காப்பதாகவும் குறிப்பிடுகிறார்.

அடுத்த நாள் காலையில் செம்பரம்பாக்கம் ஏரியைக் காணச் சென்றார் - பூந்தமல்லியிலிருந்து மூன்று மைல் தூரம். அந்த ஏரி வங்காளத்தில் இருப்பதைப் போல ஆழமாக வெட்டி ஏற்படுத்தப்பட்டதல்ல என்ற தகவலைத் தருகிறார். சுற்றிலும் கரைகள் அமைத்து அந்த ஏரியை உருவாக்கியிருக்கிறார்கள் எனக் கூறுகிறார். 'ஏரியின் பரப்பு எட்டு மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் உள்ளது; வறட்சிக் காலத்தில் சிறு ஓடைகள் மூலம் தண்ணீர் வெளியேற்றப்படும்; சமயங்களில் இந்த ஏரிக்கு நீர்வரத்து அதிகமாக இருக்கும்; மழை பொய்க்கும் ஆண்டிலும்

---

* சென்னைக் கோட்டையிலிருந்து தற்போதைய அண்ணா சாலை, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, ஆர்க்காடு சாலை வழியே சென்று பூந்தமல்லியை அடைந்திருக்கலாம்.

சுற்றியுள்ள 32 கிராமங்களுக்குப் பதினெட்டு மாதங்கள் வரை இந்த ஏரி நீராதாரமாய் இருக்கும்; பஞ்ச காலத்தில் இந்த மாதிரியான ஏரியின் பயன் வரப்பிரசாதமாயிருக்கும்' என்கிறார் புக்கானன்.

அன்று மாலை ஸ்ரீபெரும்புதூர் ஏரியைக் காணச் சென்றார். அங்கிருந்த ஏரியின் அமைப்பையும் இடத்தையும் விவரிக்கும் புக்கானன், அப்பகுதியில் ராகி போன்ற புன்செய்ப் பயிர்கள்தான் விளைகின்றன எனக் குறிப்பிடுகிறார். பனை மரங்கள் ஏராளம் உள்ளன; செம்பரம்பாக்கம் ஏரியைவிட இந்த ஏரி மிகச்சிறியது எனக் கூறுகிறார்.

'என்னுடன் வரும் வங்கத்தைச் சேர்ந்த ஓவியர் இப்பகுதிகளில் கிடைக்கும் பால், தயிர் குறித்து மிகவும் சந்தோசப்படுகிறார். காரணம் - அதிகமாகக் கிடைக்கிறது; விலை குறைவு; கல்கத்தாவில் கிடைப்பதைவிடத் தரமாக உள்ளது; மளிகைப் பொருள்களின் விலை இங்கு அதிகம் என்பதைப் பார்க்கும்போது பால், தயிர் ஆகியவை அவருக்கு உவகையைத் தருகின்றன.

'கர்நாடகப் பகுதியில்* கழுதையின் உபயோகம் அதிகம் - பெரும்பாலும் சாம்பல் நிறக்கழுதைகள் - கறுப்பு நிறக் கழுதைகளும் உண்டு. வெள்ளை நிறக் கழுதைகள் அரிதாகத் தென்படுகின்றன. வண்ணார், குறவர், பித்தளைப் பாத்திரங்கள் விற்கும் கன்னார், வளையல் விற்கும் வளையல்காரர், பூம்பூம் மாட்டுக்கார நாடோடிகள் ஆகியோர் கழுதைகளை உபயோகப்படுத்துகின்றனர்.

'மறுநாள் (ஏப்ரல் 25) காலையில் ஸ்ரீபெரும்புதூரை விட்டு வீரப்பெருமாள் பிள்ளைச் சத்திரத்திற்குச் சென்றேன்... இப்பகுதியில் பல ஏரிகள் உள்ளன. அவற்றின் அருகில் புளிய மரம், வேப்ப மரம், ஆலமரம் போன்ற மரங்கள் வைக்கப்பட்டு வளர்ந்துள்ளன. பனை மரங்களும் நிறைய உள்ளன...' எனக்

---

* கிழக்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கில் திருநெல்வேலி வரையுள்ள பகுதி கருநாடகம் / கர்நாடிக் / 'Carnatic' என்று அழைக்கப்பட்டது. தெற்கு ஆந்திராவில் உள்ள சில பகுதிகளும் இதில் அடங்கும்.

குறிப்பிட்டு வரும் புக்கானன், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதி களில் உபயோகப்படுத்தப்படும் எண்ணெய் வகைகளையும், அவை எந்தச் செடி - மரங்களின் வித்துக்களிலிருந்து தயாராகின்றன என்று விவரமாகத் தருகிறார். நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், ஆமணக்கெண்ணெய், காட்டாமணக் கெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய் (இதில் ஒரு அவுன்சைப் பிரசவித்த பெண்களுக்கு அருந்தத் தருவார் களாம்), வெள்ளரி எண்ணெய் போன்று பல எண்ணெய் வகைகள். வீரப்பெருமாள் பிள்ளை சத்திரம் 15,000 பகோடாக்கள் செலவில் (!) கட்டப்பட்டதாம்.

மறுநாள் காலையில் கிளம்பி பெரிய காஞ்சிபுரத்திற்குச் சென்றார். அங்குள்ள ஏரியைக் காலம் சென்ற நவாப் முகமது அலியின் திவான் வெட்டச் செய்தாராம். அந்த ஏரியின் இரு பக்கங்களில் சத்திரங்கள் கட்டப்பட்டிருந்ததாகவும், அவற்றின் அமைப்பையும் விளக்குகிறார். சத்திரங்கள் இரண்டு வகைகளாம். ஒன்று, பயணியர் தங்கும் அறைகள் கொண்டவை. மற்றது மண்டபம். நீர்நிலைகளும் இரண்டு வகைகள் என்கிறார் - ஏரி மற்றும் குளம்... 'வசதியுள்ள இந்து மக்கள் இவ்வாறு ஏரிகளையும் சத்திரங்களையும் கட்டுவிப்பதன் மூலம் நிலைத்த நற்பெயரைப் பெறுகின்றனர்.. அவை மக்களுக்கும் பெரிய அளவில் பயன்படுகின்றன...' என எழுதும் புக்கானன் காஞ்சிபுரம் நகரைப் பற்றிக் குறிப்பிடுவதாவது:

'நகரம் பெரிதாக உள்ளது... வீடுகளில் பல காலியாக உள்ளன. மாடி வீடுகள் இல்லை. தெருக்கள் போதுமான அளவில் அகலமாகவும் சுத்தமாகவும் உள்ளன. தெரு முனைகள் வலது/இடது கோணத்தில் திரும்புகின்றன. தெருவின் ஓரங்களில் தென்னை மரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சுற்றிச் சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. அச்சுவர்கள் சிவப்பு மற்றும் வெள்ளை வண்ணங்கள் நெட்டுவாக்கில் பூசப்பட்டுள்ளன.

'மண் சுவர்களின் மேல் வேயப்பட்ட ஓட்டு வீடுகள் - வீடுகளினுள் தொட்டிகள் உள்ளன. வங்காளத்தில் உள்ள

வீடுகளை விட இவை மிக வசதியாக உள்ளன. இவ்வீடுகளில் பெரும்பாலானவற்றில் சிவன், காமாட்சியம்மனை வழிபடும் பிராமணர்கள் வசிக்கின்றனர். நூறு பிராமணக் குடும்பங்கள் உள்ளன. நூறு நாட்டியப் பெண்கள் கோயில்களில் உள்ளனர்... மூன்று மைல் தொலைவில் சின்ன காஞ்சிபுரம் உள்ளது. அங்கு விஷ்ணு கோயில் உள்ளது.

'இங்குள்ள கோயில்களை விவரித்துக் கூற இயலவில்லை. ஏற்கனவே அவற்றைப் பற்றி பிறரால் விரிவாக எழுதப் பட்டுள்ளன.

'காஞ்சியில் சிறிய மசூதி ஒன்று உள்ளது.

'இங்குள்ள பிராமணர்களில் பாதிப்பேர் ஸ்மார்த்த பிராமணர்கள் - சங்கராச்சாரியாரைப் பின்பற்றுபவர்கள். அவர்கள் சிவனை வழிபடுகிறவர்கள். இருப்பினும் பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன் என்கிற மூவரும் ஒரே கடவுள்தான்; வெவ் வேறு ரூபங்களில் உள்ளனர் என்று அவர்கள் கருதுகிறார்கள். பசுஞ்சாணத்திலிருந்து செய்யப்பட்ட திருநீறை அவர்கள் நெற்றியில் படுக்கைவாக்கில் அணிந்திருப்பது அவர்களைத் தனித்து அடையாளம் காட்டும். முப்பது சதவிகித பிராமணர்கள் விஷ்ணுவை வழிபடும் அய்யங்கார்கள். அவர்கள் ராமானுஜாச்சாரியாரைப் பின்பற்றுபவர்கள். அவர்கள் முன் நெற்றியில் உயர வாக்கில் மூன்று கோடுகள் போட்ட திருமண் அடையாளத்தை அணிகிறார்கள். மூக்கிற்கு மேல் திருமண் கலவையில் ஒரு கோடு இழுத்து மூன்று கோடுகளையும் (கீழே) இணைக்கின்றனர். அவர்கள் சிவனை மதிப்பதில்லை; விஷ்ணு மற்றும் அவரது குடும்ப தெய் வங்களை மட்டும் வழிபடுகின்னர். அவர்களில் 'வடகலை' என்ற பிரிவினர் மரணத்திற்குப் பிறகு ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலுக்கு ஆன்மா சென்றடைகிறது என்று நம்புபவர்கள். இன்னொரு பிரிவினர் 'தென்கலை' என்பவர். இவர்களுக்கு வடகலையாரின் நம்பிக்கை இல்லை. இருபது சதவிகித பிராமணர் நெற்றியில் மூன்று வண்ணக் கோடுகள் போட்டு திருமண் அணியும் வைணவப் பிராமணர்கள்.




சென்னையிலிருந்து கிளம்பிய புக்கானன் தமிழ்நாட்டுப் பகுதியில் சென்ற ஊர்கள்,
தேதியுடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவர்கள் சிவனையும் வழிபடுகின்றனர். இவர்கள் மூன்று கடவுள்களில் விஷ்ணுவை பிரம்மாவின் தந்தையாகவும், பிரம்மாவை சிவனின் தந்தையாகவும் பாவிக்கின்றனர்...'

அடுத்த நாள் (27, ஏப்ரல்) ஓவலூர் சத்திரத்திற்குச் (Oulur Satghadam) செல்கிறார். அது ஒரு சத்திரம். ஏற்கனவே அவர் கூறியுள்ள சத்திரம், மண்டபம் என்ற வகைகளுடன் அங்கு தண்ணீர்ப் பந்தல்கள் இருப்பதையும் குறிப்பிடுகிறார். சில சத்திரங்களில் மளிகைப் பொருட்கள் விற்கப்படுவதாகவும் - குறிப்பாகப் பிராமணர்கள், தாசரிகளின் வசதிக்காக அவை விற்கப்படுவதாகவும் கூறுகிறார். (தாங்களே உணவை சமைத்துக் கொள்ள).

அடுத்ததாகப் புக்கானன் சென்றது - ஆர்க்காடு ஜில்லா. அப்போது வடார்க்காடு, தென்னார்க்காடு என்று பிரிக்கப் படாத மாவட்டம். ஆர்க்காடு நவாபின் ஆட்சிப்பகுதி அது. செஞ்சிக் கோட்டையின் வீழ்ச்சிக்குப் பின் கர்நாடகப் பகுதியின் தலைமையிடமாக ஆர்க்காடு உருவானது (1710 வாக்கில்). ஆனால் நவாப் முகமது அலி (வாலாஜா) காலத்தில் (1750-1795) தலைநகரம் சேப்பாக்கத்திற்கு (சென்னை) மாற்றப்பட்டது. ஆர்க்காடு நவாப்-ஆங்கிலேயரிடையேயான ஆட்சியுரிமை தெளிவாகி 1801 ஆகஸ்ட்டில்தான் ஆர்க்காடு ஜில்லா கலெக்டர் நியமிக்கப்பட்டார்.

ஏப்ரல் 28ஆம் தேதி காலை, நீண்ட பயணத்திற்குப் பிறகு ஆர்க்காட்டை அடைந்தார் புக்கானன். வழியில் பார்த்த காவேரிப்பாக்கம் பகுதியையும் அங்குள்ள ஏரியையும் பற்றி அவர் குறிப்பிடுகிறார்.

'காவேரிப்பாக்கம் ஏரி எட்டு மைல் நீளம், மூன்று மைல் அகலம் கொண்டது... இது மாதிரியான பொதுப்பணி வேலையை நான் முன்பு கண்டதில்லை. பலருக்கும் இந்த ஏரி பயன்படுகிறது; பார்க்கப் பரவசமாயுள்ளது. நிலங்கள் வளமாக, பசுமையாய் உள்ளன... காவேரிப்பாக்கம் ஊர் சுத்தமாக இல்லை (dirty). ஊரினுள் ஒரு மசூதி உள்ளது; அதைச் சுற்றியுள்ள கோட்டை பாழடைந்துள்ளது.

'கர்நாடகத்தின் கிழக்குப் பகுதியின் தலைநகரம் ஆர்க்காடு. முஸ்லிம்களும் ஆங்கிலேயர்களும் இப்பகுதியை நவாபின் நாடு எனக் குறிப்பிடுகின்றனர். நவாபின் படையொன்று இங்குள்ள கோட்டையில் நிறுத்தப்பட்டுள்ளது. இக்கோட்டை பெரிதாக உள்ளது; ஆனால் பழுதடைந்துள்ளது. படையினரின் இசையொலி கேட்க இனிமையாக உள்ளது. நான் வேறெங்கும் கேட்டதைவிட நன்றாக உள்ளது. நவாபின் மைத்துனர் இப்பகுதியைக் கவனித்து வருகிறார். அவர் கோட்டைக்கருகில் வசிக்கிறார். கோட்டை மதில்களிலிருந்து இறங்கி வரும் சுவரின் கரை விஸ்தாரமாயுள்ளது. (எதிரிகள் தாக்க வரும்போது எளிதில் பார்க்க வசதியாயிருக்கும்). வீடுகள் நன்றாகக் கட்டப்பட்டுள்ளன. மக்கள், இந்துஸ்தானி என்னும் முகமதியர் மொழியைப் பேசுகின்றனர். நாங்கள் வாங்கிய பொருள்களின் விலைகளை மும்மடங்கு உயர்த்திக் கூறுகின்றனர் - ஊருக்குப் புதியவர்கள் என்பதால்... இங்கு பருத்தித் துணிகள் நெய்யப்படுகின்றன. ஆனால் வங்கத்தைவிட விலை அதிகம்.

'மதராஸிலிருந்து காவேரிப்பாக்கம் வரை சாலைகள் சுமாராக இருந்தன. ஆனால் காவேரிப்பாக்கத்திலிருந்து ஆர்க்காடு பாதையில் எங்கள் வண்டியின் பயணம் எளிதாக இல்லை... வசதியுள்ள உள்ளூர்வாசிகள் மாட்டு வண்டியில் செல்கின்றனர் - கல்கத்தாவில் உள்ளவர்களைப் போன்று. ஆர்க்காட்டிற்கருகில் முஸ்லிம் பெண்கள் எருதுகளின்மீது சவாரி செய்து சென்றதைக் கண்டேன். அவர்கள் வெள்ளைப் பர்தா அணிந்திருந்தனர்...'

ஆர்க்காட்டின் கோட்டைக்குள் புக்கானன் முகாமிட்டிருந்தார். ஒருநாள் தங்கல். ஆர்க்காட்டிற்கு அருகிலிருக்கும் வாலாஜாபேட்டைக்கு அவர் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்த நாள் வேலூருக்குச் சென்றார். அங்கு இரண்டு நாள்கள் தங்கியிருந்தார். வேலூரைப் பற்றி அவர் சொல்வதைக் கேட்போம்:

'வேலூருக்குச் செல்லும் சாலைக்கருகில் மலையடி வாரத்தை ஒட்டி மணல், கற்குவியல்கள் தென்பட்டாலும், வழியில் பசுமையைக் காண முடிந்தது. காரணம் பாலாற்றின் தெற்குப் பகுதியில் உள்ளதால் மரம், செடி, கொடிகள், புதர்கள் மண்டியுள்ளன. பனை மரங்கள் அதிகம்... பாலாற்றின் வடிநிலப் பகுதியில் இரண்டாம் போகம் நெல்லும் விளைகிறது. வழியிலுள்ள கிராமங்களின் வீடுகள் பரிதாபமாக உள்ளன.

'ஏப்ரல் 30ஆம் நாள் வேலூரில் தங்கினேன் - என்னுடன் வருபவர்களுக்கு ஓய்வு தரும் முயற்சி அது. வேலூர்க் கோட்டை பெரிதாகவும் அழகாகவும் உள்ளது. காலம் சென்ற திப்பு சுல்தானின் குடும்பத்தினர் தங்கும் இடமாக இது உள்ளதால் ஆங்கிலேய வீரர்களின் பாதுகாப்பு பலமாக உள்ளது. நவாபிற்குச் சொந்தமான இந்நகரம் பெரிதாக உள்ளது; இந்து முறைப்படி நன்றாக அமைக்கப்பட்டுள்ளது. நகரைப் பார்த்தவாறு உள்ள குன்றின் உச்சியில் மூன்று சிறிய கோட்டைகள் உள்ளன. அவை கன்னட ராஜாக்களால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

'இந்தப் பகுதியில் வருவாய் வசூல், நீதி பரிபாலனம், வழிகாட்டி, சத்திரங்களின் காப்பாளர் போன்ற உத்தியோகங் களில் மிகப் பெரும்பான்மையானவர் பிராமணர்கள். பெரும்பான்மையான நிலங்களை அவர்கள் குத்தகைக்கு விட்டுள்ளார்கள். ஆனால் யூதர்களைப் போல அவர்கள் கலப் பையைப் பிடித்து உழுவதில்லை. அவர்களுடைய நிலங்களைச் சூத்திரர்களும் பஞ்சமர்களும் பயிர் செய்கிறார்கள்... விவசாயம் செய்யும் முஸ்லிம்களும் சிலர் உள்ளனர். சூத்திரர்களில் பல பிரிவினர் நிலங்களை வைத்துள்ளனர்; விவசாயமும் செய்கின்றனர். வங்கத்தில் இருப்பதைப்போல் இப்பகுதியில் சந்தைகள் இல்லை. விவசாயிகளிடமும் உற்பத்தியாளர்களிடமும் பொருட்களைக் கடைக்காரர்கள் வாங்கி அங்காடித் தெருவிலும் நகரங்களிலும் விற்கிறார்கள். பால், தயிர் போன்வற்றைப் பாதையின் ஓரத்தில் உட்கார்ந்தபடி பெண்கள் விற்கிறார்கள்...'

புக்கானன் அடுத்ததாகச் சென்ற இடம் பள்ளிகொண்டா (மே, 1). வழியில் விரிஞ்சிபுரத்தையும் கண்டார். அப்பகுதிகளில் இருபோகம் நெல் விளைவதாகக் குறிப்பிட்டுள்ளார். இடையிலுள்ள கிராமங்கள் பரிதாபமாக இருந்ததாகவும், விரிஞ்சிபுரம், பள்ளிகொண்டா நகரங்கள் அழிந்த நிலையில் தோன்றியதாகவும் கூறியுள்ளார். அவ்விரு நகரங்களிலும் பெரிய கோயில்கள் இருப்பதைக் குறிப்பிடுகின்றார். ரங்கநாதர் பள்ளிகொண்ட நிலையில் அவ்வூர்க் கோயிலில் தோன்றுவதால், ஊரின் பெயர் தமிழ்ச் சொல்லான 'பள்ளி'யைக் கொண்டு எழுந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார். அன்றைய தினம் ஊரில் நடைபெற்ற சுவாமி ஊர்வலத்தில் பிராமணர், வைசியர், சூத்திரர்கள் கலந்து கொண்டனராம். மற்றொரு வர்க்கமான சத்திரியர்கள் அதில் இல்லை. காரணம் - அவ்வர்க்கத்தினர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அப்பகுதியில் மறைந்து விட்டதாகப் பிராமணர்கள் கூறினராம்.

'அடுத்த நாள் (மே, 2) காலை பதினைந்து மைல் தூரம் சென்றேன். முதலில் பள்ளிகொண்டானில் பாலாற்றைக் கடந்து அதன் வடகரை வழியே சென்று குடியாத்தம் ஆற்றங்கரைக்கு (கௌண்டினிய ஆறு) வந்தேன். அதன் கரை வழியே சென்று குடியாத்தத்தை அடைந்தேன். இது ஒரு பெரிய நகரம்; பள்ளிகொண்டானிலிருந்து வடமேற்கில் ஐந்து மைல் தூரம். ஊரினுள் ஆறு செல்கிறது. கிழக்குப் பகுதியில் ஒரு மண் கோட்டை உள்ளது. அங்கிருந்து இடது பக்கம் திரும்பிச் சென்று குறுகலான பள்ளத்தாக்கை அடைந்தேன். அருமையாகத் தோற்றமளிக்கிறது - வேலூருக்கருகில் உள்ளதைப் போன்று. பாலாறு, குடியாத்தம் ஆறு - இவையிரண்டிலிருந்தும் வாய்க்கால் வழியே நீர் இங்கு வருகிறது... பள்ளத்தாக்கின் அருகில் குன்றுகள் உள்ளன. ஊருக்குப் பக்கத்தில், அக் குன்றுகளில் சுவர்களை எழுப்பி கோட்டைகளை அமைத்திருக்கிறார்கள். அவற்றுக்கு 'சாத்கடம்' (சாத்கர்/Satgur) என்று பெயர். தமிழில் ஏழுமலை துருகம் (தெலுங்கில் ஏழு கொண்டல துருகம்)... மலைக்குக் கீழே உள்ள ஊர் 'பேட்டை'.

'இப்பகுதியில் நவாபிற்கு ஒரு பெரிய தோட்டம் உள்ளது. அதை அவர் மதராஸிலுள்ள சில ஆர்மீனியர்களுக்குக் குத்தகைக்கு விட்டுள்ளார். அத்தோட்டத்தில் விளையும் பழங்கள் - குறிப்பாக ஆரஞ்சு - மிகவும் ருசியானவை. அவற்றில் பொறுக்கி எடுத்ததை நவாபிற்கும் பிற முக்கியப் புள்ளிகளுக்கும் அனுப்புகிறார்கள்.

'மதராஸிலிருந்து நான் புறப்பட்ட நாள் முதல் கடுமையான வெப்பம். என்னுடைய கூடாரத்தில் உள்ள வெப்பமானியின்படி 95 டிகிரி (ஃபாரன்ஹீட்) முதல் 98 டிகிரி வரை வெயில் கொளுத்தியது. வீடுகளில் வெப்பநிலை இரண்டு மூன்று டிகிரி குறைவாக இருக்கலாம்...!'

மே, *3:* 'பெத்தநாயக்கன் துருகம் கணவாய் வழியே கரடுமுரடான சாலையில் சென்று முதல் மலையைத் தாண்டினேன். வடக்கிலிருந்து தெற்காகச் செல்லும் அப்பள்ளத் தாக்கில் இறங்கினேன். அதில் இரண்டு வாய்க்கால்கள் செல்கின்றன. ஒன்றில் தெளிந்த நீர் ஓடுகிறது. இரண்டு வாய்க்கால்களும் சாத்கடத்தில் ஒன்று சேர்ந்து, ஆம்பூருக்கு அருகில் பாலாற்றில் கலக்கின்றன. அப்பள்ளத்தாக்கில் அதிகாரி ஒருவர் (பொறியாளர்) பல உதவியாளர்களுடன் முகாமிட்டுள்ளார். அவர்கள் ஆம்பூரிலிருந்து பெத்தநாயக்கன் துருகம் வரை சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சாலை நன்றாக அமைந்துள்ளது. ஆனால் அரை மைல் தூரத்திற்கு மிகவும் ஆழமான பகுதி. பயன்பாடு குறைவாக இருப்பினும் அந்த அரை மைலையும் முடிக்காதவரை இந்த உன்னதமான பணி நிறைவுறாது. அந்த மலைகளில் பல வகையான மரங்கள் வளர்ந்துள்ளன. அவற்றில் பல கட்டுமானப் பணிகளுக்கு உதவுபவை. அம்மரங்களின் மாதிரிகளைக் கொண்டு வந்து என்னிடம் காட்டினார்கள். அவற்றின் பெயர்கள் (தெலுங்கில்) ... (இருபது வகைகளான மரங்களின் பெயர்கள் மற்றும் அவற்றின் பயன்களைக் குறிப்பிடுகிறார்).

'அம்மலைத் தொடர்களின் மீது ஏறினேன்.* அங்கு அருமையான காட்சியைக் காணும் வாய்ப்பு கிடைத்தது.

அம்மலைகளிலிருந்து பாறைகளை உடைத்து பள்ளத்தாக்கில் சாலை அமைக்கும் பணிக்குப் பயன்படுத்துகின்றனர். அப்பாறைகளிலிருந்து பிளந்தெடுக்கும் படிமங்கள் 'கிரானைட்', 'க்வாட்ஸ்', 'மைக்கா' போன்றவற்றின் கலவையால் ஆனவை. இத்தாலியில் கிடைக்கும் (கிரானைட்) கற்களைப் போன்றவை இவை; கட்டடங்கள் கட்டுவதற்கு மிகவும் உகந்தவை, உறுதியானவை; நெடுநாள் தாங்குபவை... கர்நாடகப் பகுதிகளில், குறிப்பாக மகாபலிபுரத்திலுள்ள ஏழு கோயில்களை வடிக்கப் பயன்படுத்தப்பட்ட கற்கள் போன்றவை கிடைக்கின்றன. நீண்ட நாட்கள் தாங்கக்கூடிய கட்டடங்களைக் கட்ட மிகவும் உறுதி வாய்ந்த கற்கள் இவை...'

'நாயக்கனேரியில் தற்பொழுது தென்படுபவை, பாழடைந்துள்ள சத்திரம் மற்றும் கடைத்தெரு எனப்படும் இடத்தில் மோசமான நிலையிலுள்ள சில கடைகள். விவசாயிகளின் குடியிருப்புகள் திக்காலுக்கொரு பகுதியில் நாலைந்து வீடுகளைக் கொண்டுள்ளன. மக்களின் மொழி தெலுங்கு. இங்குள்ளவர்கள் மலைக்குக் கீழே இருப்பவர்களைப் போலில்லாமல் உதவும் உள்ளம் கொண்டவர்களாக உள்ளனர். எனது பணியாளர்கள் தமக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்குச் சிரமம் கொள்ளவில்லை.

'நாயக்கனேரியைச் சுற்றியுள்ள ஊர், இங்கிலாந்தில் பல இடங்களில் உள்ளவற்றைப் போன்று மேட்டுப் பகுதியாக உள்ளது. மலைத்தொடரைப் பார்த்தவாறு அமைந்துள்ளது. அம்மலைகளில் உள்ள ஊர்களில் குறிப்பிடத்தக்கது பெத்தநாயக்கன் துருகம்... திப்பு சுல்தானின் வீழ்ச்சிக்கு முன்பு வரை மைசூர் நாட்டின் எல்லைக் காவல் கோட்டையாக இருந்துள்ளது. முன்பு இது 'பெத்தநாயக்கர்' என்ற பாளையக் காரனுக்கு உரிமையாயிருந்தது. (திப்புவால் துரத்தியடிக்கப்

---

* அக்காலத்தில் அம்மாதிரி மலைகளின் மீது பணி நிமித்தமாகப் பல ஐரோப்பியர் சென்று பல நாட்கள் தங்கியிருக்கின்றனர். மக்கள் அதிகம் வசிக்காத அப்பகுதிகளில் ஊடுருவுவதால், ஐரோப்பியர் பலர் (இந்தியர்களும்தான்) மலைக்காய்ச்சல் என்னும் நோயால் பீடிக்கப்பட்டனர். மரணம் நேரிட்டவர்களும் உண்டு.

பட்ட) அப்பாளையக்காரனிடம் (1790-91 வாக்கில்) அக்கோட்டையைத் திரும்ப ஒப்படைத்தார் காரன்வாலிஸ் பிரபு. ஆனால் 1792இல் திப்புவுடன் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இக்கோட்டையின் பகுதி திப்புவின் நாட்டிற்குத் திரும்பச் சேர்க்கப்பட்டது. அதற்குப் பின்னர் நடந்த திப்பு சுல்தான் ஆட்சியில் நிகழ்ந்த இரவு நேரக் களியாட்டங்களால் இப்பகுதி அலைக்கழிக்கப்பட்டது. இப்போது தன் தலைவிதி குறித்து பிரிட்டிஷ் அரசின் முடிவை எதிர்நோக்கியிருக்கிறார் பெத்தநாயக்கன். 1799இல் திப்பு சுல்தானின் நாட்டைப் பிரித்தபோது இப்பகுதி பிரிட்டிஷ்காரர்களுக்குக் கிடைத்தது. தற்பொழுது இது கேப்டன் கிரஹாமின் அதிகாரத்தின் கீழுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ளது...'

**நா**யக்கனேரியும் பெத்தநாயக்கன் துருகமும் குடியாத்தத்திற்கு அருகில் இருந்தாலும் (14 மைல்கள்) அவை இன்று தமிழ்நாட்டுப் பகுதிகள் அல்ல. 1800இல் அவை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்தன. அடுத்த நாள் (மே, 4) புக்கானன் சென்ற இடம் வெங்கடகிரி - அது பெத்தநாயக்கரின் தலைமையிடம். அங்கு ஒரு கோட்டை இருந்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்டது. அவ்வூரைப் பற்றி புக்கானன் எழுதுகிறார்:

'அடுத்த நாள் காலையில் நான் நாயக்கனேரியிலிருந்து வெங்கடகிரிக்குச் சென்றேன். சுமார் ஒன்பது மைல் தூரம். பாதியளவு நிலங்கள் (உழவு) ஓட்டிப் போட்டிருந்தன. மீதிப் பாதி நிலங்கள் பயிரிடப்படுவதில்லை.

'நாயக்கனேரியிலிருந்து இரண்டு மைல் தொலைவில், மலையிலிருந்து அடித்து வரும் மழை வெள்ளத்தில் இரும்புத் தாதுக்கள், கறுப்பு மண் போல திரண்டு வருகின்றன. மழைக்காலம் முடிந்ததும் அவை உருக்கப்படுகின்றன. அதை 'மாலாவான்லு' என்கிற சாதியினர் - பறையர் என்று மதராஸ் பகுதியில் அழைக்கப்படும் வகுப்பினர் - உருக்குகின்றனர். மலை மேலுள்ள நீர்த்தேக்கத்திலிருந்து வரும் நீரைக் கொண்டு

பயிரிடப்பட்டுள்ள நெற்கதிர்கள் பார்க்கப் பூரிப்பாயுள்ளன... ஆனால் நெற்பயிர் ஐந்து சதம் நிலங்களில்தான் தென்படுகிறது.

'முன்பு, வெங்கடகிரி பெத்தநாயக்கன் பாளையக்காரனின் இருப்பிடமாயிருந்தது. உயர்ந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள அவனது கோட்டை அழிந்த நிலையில் உள்ளது. கல்லாலும் மண்ணாலும் ஆன சுவர்கள் சுற்றிலும் உள்ளன. கோட்டையின் முகப்பில் உள்ள கோபுரங்கள் அருகில் செல்லச் செல்ல மேலும் மேலும் உயரமாகத் தெரிகின்றன. உள்ளே நடுப்பகுதிக்கு வந்தால் ராஜாவின் இருப்பிடம் தென்படுகிறது. இவ்வூரில் மூன்று சிறிய கோயில்கள் உள்ளன. அவற்றில் இரண்டு பாதுகாக்கப்படுகின்றன. நாயக்கனின் மாளிகையில் எஞ்சியிருப்பதை நோட்டமிட்டால் அது எப்போதும் பிரம்மாண்டமாக இருந்திருப்பதாகத் தோன்றவில்லை. அறைகளில் சிலது மட்டும் நீள-அகலத்தில் ஏழு அல்லது எட்டு அடிகள் கொண்ட சதுரத்திற்கு மேல் இருந்திருக்காது போலத் தெரிகின்றன. வெளிப்புறக் கோட்டைச் சுவர்களுக்குள் நகரம் இருந்திருக்கிறது - இப்போது அது ஒரு கடைத்தெருவாக மாறியுள்ளது. இங்குள்ள வீடுகள் தமிழ்ப் பகுதியிலுள்ள வீடுகளை விடத் தரமாயில்லை. இவ்வீடுகள் மண் சுவர்களால் ஆனவை; ஓலைகளால் வேயப்பட்டவை. வீடுகளைச் சுற்றித் தடுப்புகளோ, வெயில் மழையைத் தவிர்க்க வெராந்தாவோ இல்லை... குடியிருப்பவரில் கிட்டத்தட்ட அனைவரும் தெலுங்கர்கள்.

'வெங்கடகிரி அருகிலும் கறுப்பு மண் இரும்புத் தாதுவிலிருந்து இரும்பை உருக்குகிறார்கள். வெங்கடகிரி அருகில் தண்ணீரில் பல வண்ணங்களில் எண்ணெய் மிதக்கிறது; நிலக்கரி உள்ள பகுதிகளில் உள்ள நீரில் தோன்றுவதைப் போல...' (அங்கே நிலத்தடியில் நிலக்கரி இருக்கிறதாம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்!)

இவ்வாறு சென்னையில் துவங்கிய தனது பயணத்தைத் தமிழகத்தின் வட எல்லையில் முடித்துக் கொண்டு கிளம்பிய

புக்கானன் சீரங்கப்பட்டணத்தை நோக்கி நடையைக் கட்டினார். சீரங்கப்பட்டணத்தை அடைந்து பதினைந்து நாள்களுக்கு மேல் தங்கி, மேற்கொண்டு திரும்பவும் பெங்களூரு வந்து, வடக்கே சீரா வரை சென்று, தெற்கில் திரும்பி மதுகிரி, தாவன்கரை, தும்கூர், மேல்கோட்டை வழியாகத் திரும்பவும் சீரங்கப்பட்டணம் வந்தார். பின்னர், பெரிய பட்டணா, நஞ்சன்கூடு, கொள்ளேகாலம் வழியாகக் கிழக்கு நோக்கிச் சென்று கோயம்புத்தூர் ஜில்லாவிற்குள் நுழைகிறார். அங்கிருந்து மாதேஸ்வரன் மலை வழியாக காவேரிபுரத்திற்கு வந்தபோது அவர் குறிப்பிடும் பகுதிதான் இன்றைய தமிழ்நாட்டு எல்லைப் பகுதி. ‘சேர நாட்டிற்குள் வருகிறேன்’ என புக்கானன் குறிப்பிடுகிறார். அதன் விவரத்தைக் காணும் முன், வெங்கடகிரிக்குப் பிறகு எந்தெந்த ஊர்களைக் கடந்து அவர் சீரங்கப்பட்டணத்தை அடைந்தார் என்பதைக் காண்போம்.

- **பாய்தமங்கலம்:** கோட்டை நகரம்; ஒரு பாளையக் காரனின் தலைமையிடம்.
- **தாய்க்குளம்:** கோட்டை நகரம்; முஸ்லிம் ஆமில்தார் இருந்தார். கன்னடம் பேசுபவர் ஊர்.
- **வாலூறு:** தமிழில் கல்லாறு. கோட்டை நகரம். கோட்டை மாளிகையில் ஒரு ராஜபுத்திர வமிசாவளி வசிக்கிறார்.
- **காட்கொல்லி** (Catcolli): பாலாற்றங்கரைப்பகுதி.

பெங்களூர், மே, *10:* ‘காலையில் வந்து சேர்ந்தேன். ஊர் குளிர்ச்சியாகவும் இதமாகவும் உள்ளது. அழிந்த நிலையிலுள்ள கோட்டைக்குள் சென்றேன். ஐதர் அலி கட்டிய கோட்டை. முஸ்லிம்களின் பாணியில் கட்டப்பட்டது. அது திப்புவால் அழிக்கப்பட்டுள்ளது. காரணம் - பிரிட்டிஷாரின் தாக்குதலைச் சமாளிக்க பெரிய அளவில் உதவாது. நகரத்திற்குச் செல்லும் வழியில் ‘கிரானைட்’டில் கட்டப்பட்ட மிகவும் அழகானதொரு கட்டடம் உள்ளது.

'அடுத்த நாள், ஐதர்-திப்புவால் கட்டப்பட்ட தோட்டத்திற்குச் சென்றேன். மிகவும் விஸ்தாரமானது... திப்பு அமைத்த தோட்டத்தில் மூன்று கிணறுகள் உள்ளன. கபிலை (பறி) ஏற்றம் மூலம் தண்ணீர் இறைக்கப்படுகிறது. ஐதர் அமைத்த தோட்டத்திற்கு ஒரு நீர்த்தேக்கம் வழியே தண்ணீர் வருகிறது. ஆள் வைத்து இறைக்க வேண்டாம். ஐதரின் தோட்டம் ஆங்கிலேயரின் ரசனையை ஒத்தவாறு உள்ளது. அவரது மகனின் ரசனைக்கு மாறுபட்டது... பெங்களூரில் முஸ்லிம்கள் நிறைய பேர் உள்ளனர். அரசு மாறிய பின் அவர்கள் மனக்கலக்கத்தில் உள்ளனர். ராணுவ வாழ்க்கையில் பழக்கப்பட்ட அவர்களால் நிர்வாக அமைப்பில் ஈடுபட முடியவில்லை. அல்லது திப்புவின் எதிரிகளின் இப்போதைய அரசின் ராணுவத்தில் சேர அவர்களுக்கு விருப்பமில்லை. அவர்களில் பலர் வசதியானவர்கள்; அவர்கள் வியாபாரத்தில் ஈடுபட முனைந்துள்ளனர். ஏழையாக உள்ளவர்கள் விவசாயம் செய்து பிழைக்க முற்பட்டுள்ளனர்.

'ஆச்சரியம் தரும்' விஷயம் ஒன்றைக் கேள்வியுற்றேன். (திப்புவின் மரணத்திற்குப் பின்) அரசு மாற்றத்தினால் பிராமணர்களுக்கும் கஷ்டங்களாம்... திப்புவின் மரணத்திற்குப் பிறகு இவ்வகுப்பார் தொடர் தொல்லைகளிலிருந்து விடுபட்டு, இப்போது அனைத்து முக்கிய அரசுப் பணிகளிலும் பங்கேற்று வருகின்றனர். திப்புவின் காலத்தில் கோயில்களில் இருந்த அர்ச்சகர்களுக்குத் தொல்லைகள் தொடர்ந்தன எனக் கேள்விப்பட்டேன். அர்ச்சகர்கள் பிராமணர்களைவிட குறைந்த மதிப்புடையவர்கள்...

'இப்பகுதியிலுள்ள கிராமங்களில் ஒன்றிரண்டு பேர் யானைக்கால் நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்... அவர்கள் ஏழைகள், வெட்டவெளியில் இருப்பதை விரும்புபவர்; உண்பதற்கு மீனை உபயோகப்படுத்துவதில்லை. [யானைக்கால் வியாதி வர மீன் உண்ணாமை ஒரு காரணமோ...?] யானைக் கால் வியாதியைப் போல குஷ்டம் பிடித்தவரும் உள்ளனர்...'

பங்களூரைப் பற்றி இவ்வாறு எழுதிய புக்கானன் அப்போது இரண்டு நாட்கள் மட்டும் அங்கு தங்கினார். அடுத்த தடவை அவர் பெங்களூர் வந்தபோது பன்னிரண்டு நாட்கள் (ஜூன் 21 - ஜூலை 3) தங்கினார்.

மேற்கொண்டு அவர் சென்னபட்டணம், மத்தூர் (Maduru) வழியே சென்று சீரங்கப்பட்டணத்தை அடைந்தார். அவர் எழுதுகிறார்.

'அடுத்த நாள் (மே, 17) சீரங்கப்பட்டணத்திற்கு எதிரில் காவேரிக்கரைக்கு வந்தேன்... பாதி தூரம் வந்த வழியில் மலைகள் அடர்ந்த ஒரு பகுதியை அடைந்தேன். திப்பு சுல்தானைத் தோற்கடிக்கும்படிச் செய்து, சீரங்கப்பட்டணத்தைக் கைப்பற்றும் நிலைக்கு வந்த காரன்வாலிஸ் பிரபு, அதற்கு முன்னர் இம்மலைகளின் தெற்குப் பகுதியில் முகாமிட்டிருந்தார் (1792). அவர் பெங்களூரிலிருந்து படையுடன் புறப்பட்டு வந்த வழியெங்கும் கால்நடைகளின் எலும்புக் கூடுகள் தென்பட்டன. ஆயிரக்கணக்கில் அவை பசியாலும் களைப்பாலும் மடிந்தன...'

சீரங்கப்பட்டணத்திற்குள் நுழையுமுன்னர் புக்கானன் குறிப்பிடுபவை இவை.

## 5

# சீரங்கப்பட்டணத்திலிருந்து சேர நாட்டிற்குள்...

மே *18, 1800*ல் தமது பிரயாணத்தின் தகுதிச் சான்றிதழ் களை சீரங்கப்பட்டணம் அரண்மனையில் சமர்ப்பித்தார் புக்கானன்.

அடுத்த நாள் மைசூர் திவான் பூர்ணையாவைச் சந்தித்தார். (பேட்டி கண்டார்!) மைசூர் ராஜா 'மைனராக' இருந்ததால் அரசாங்கத்தின் முக்கிய நிர்வாகஸ்தராகப் பூர்ணையா இருந்தார். புக்கானனின் பயணத்தின்போது தேவையான உதவிகள் அளிக்கப்படும் என்ற உறுதி கம்பெனியாரின் பிரதிநிதி கர்னல் குளோஸ் (Colonel Close, Resident) மூலம் கிடைத்தது. ஒரு பிராமணர் அவருடன் உடன் செல்ல நியமிக்கப்பட்டார். அவர் மூலம் புக்கானன் சந்திக்க விரும்பும் நபர்களைக் காண ஏற்பாடு நடக்கும். மொத்தம் 18 நாள்கள் புக்கானன் சீரங்கப்பட்டணத்தில் இருந்தார் - ஜூன் 6 வரை. பூர்ணையாவைப் பற்றியும் சீரங்கப்பட்டணத்தில் பார்த்த வற்றையும் புக்கானன் எழுதுகிறார்.

'பூர்ணையா ஒரு மாத்வா பிராமணர்; கோயம்புத்தூர்ப் பகுதியிலிருந்து (தாராபுரம்) வந்தவர். அவரது சொந்த மொழி தமிழ். அவர் கன்னடம், முஸ்லிம் பாஷை, மராத்தி பேசுகிறார். இந்த நாட்டைப் பற்றியும் அதன் விவகாரங்களையும்

அபரிமிதமாகத் தெரிந்து வைத்துள்ளார். பொதுவாகப் பிராமணர்களின் மெதுவான போக்கைவிட அவர் சுறுசுறுப்பாக உள்ளார். மக்கள் அவரை 'ஸ்ரீ மந்திரி' என்கின்றனர் - பூனாவில் உள்ள 'பேஷ்வா' போன்று. கருவில் இருந்த போதிருந்தே அவர் அதிர்ஷ்டம் செய்தவராகக் கருதப்படுபவர். திப்பு சுல்தான் ஆட்சியில் (திப்புவின் நம்பிக்கைக்குரிய) மீர்சாதிக்கிற்கு அடுத்தபடியாக அதிகாரம் கொண்டிருந்தார். திப்பு சுல்தான், பூர்ணையாவிடம், 'நீங்கள் இஸ்லாமிற்கு மாறி விடுங்களேன்' என்று ஒருமுறை கேட்டாராம். அந்தப் பிராமணர் சமயோசிதமாகத் தந்த பதில்: 'நான் உங்களின் அடிமை!' பதில் தந்ததும் அங்கிருந்து கிளம்பி விட்டாராம். அதைக் கேள்வியுற்ற திப்புவின் தாய், அது எவ்வளவு அபாயகரமான வேண்டுகோள் என்று மகனைக் கடிந்து கொண்டாளாம். பூர்ணையாவிற்கு மக்களிடம் அபரிமிதமான மதிப்பு இருந்தது. அந்த விஷயத்தை திப்பு அத்துடன் விட்டுவிட்டாராம்...

'எல்லோரும் அறிந்ததுதான் - சீரங்கப்பட்டணம்ஒரு தீவு; காவிரி நதியால் சூழப்பட்டுள்ளது. இப்போது பல இடங்களில் ஆற்றைக் கடந்து சீரங்கப்பட்டணத்திற்குச் செல்ல முடிகிறது. ஆனால் மழைக்காலத்தில் ஆற்றைக் கடப்பது அவ்வளவு எளிதல்ல. ஆற்றின் தெற்குப் பகுதியில் ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. அதன் வழியே மேல் பகுதியிலிருந்து வாய்க்கால் மூலம் சீரங்கப்பட்டணத்திற்குத் தண்ணீர் வருகிது...' என்று சீரங்கப்பட்டணம் நகரைப் பற்றியும், அங்கு ஒரு ஆண்டிற்கு முன் நடைபெற்ற நான்காம் மைசூர்ப் போரின் இறுதிக் கட்டமான போர்க்களக் காட்சிகளையும், திப்பு சுல்தானின் கடைசி நேரச் சூழலையும் சிந்தனைகளையும் விரிவாக எழுதுகிறார். மேலும் எழுதும்போது குறிப்பிடுகிறார்.

'சீரங்கப்பட்டண நகரத்தில் தெருக்கள் குறுகலாகவும், வங்காளத்தை விட்டு நான் கிளம்பிய பிறகு வேறெங்கும் பார்க்காத அளவில் அவை குழப்பமாகவும் அமைந்துள்ளன. வீடுகள் பொதுவாகச் சுமாராகவே உள்ளன. ஆனால், படைத் தலைவர்கள், அதிகாரிகள் போன்ற தலைவர்கள் நல்ல

குடியிருப்புகளில் இருக்கின்றனர். ஐரோப்பியர்களுக்கு அவ்வீடுகள் வெப்பமாகவும் அசௌகரியமாகவும் உள்ளன. கோட்டைக்குள் யாதொரு நபரும் வீடுகளின் மீது உரிமை கொள்ள திப்பு அனுமதித்ததில்லை. கோட்டைக்குள்ளிருந்த குடியிருப்புகளைத் தான் நினைக்கும் நபர்களுக்கு ஒதுக்குவார். அவரது மனம் சிறிது மாறினாலும் குடியிருப்பவர்களைக் காலி செய்ய வைப்பார். கடந்த போரில் இறந்தவர்கள் போக உயிர் தப்பியவர்கள், இறந்தவர்களின் குடும்பத்தினர் [அவர்களுக்குக் கிழக்கிந்தியக் கம்பெனி 'பென்ஷன்' வழங்கியது] ஆகியோரில் பலர் ஆர்க்காடு நவாபின் பகுதிகளுக்குச் சென்று விட்டனர். அங்கு பாதுகாப்பாகவும், இருக்க இதமாகவும் உள்ளதாக அவர்கள் கருதுகின்றனர். அக்குடும்பங்களில் பலர் கீழ் கர்நாடகப் பகுதியிலிருந்து சீரங்கப்பட்டணத்திற்கு வந்தவர்கள்தான். அவர்கள் காலி செய்த வீடுகளில் கோட்டைக் காவல் அதிகாரிகள் குடிபுகுந்துள்ளனர்.

'மைசூர் ராஜாவின் பழைய அரண்மனை பாழடைந்த நிலையில் உள்ளது. சீரங்கப்பட்டண முற்றுகையின்போது ராஜாவின் குடும்பம் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தது. ஐதரால் சிறை வைக்கப்பட்ட (ராஜா) கிருஷ்ண ராஜா* குழந்தையின்றி இறந்தார்; ஆனால் அவர் தன் மனைவியை ஓர் உறவினரின் பாதுகாப்பில் இருக்கச் செய்தார். அந்த உறவுக்காரனைத் தன் தத்துப்பிள்ளையாக ஏற்றிருந்தார். அந்த மகனும் விரைவில் இறந்தான் - அவன் இறந்த சூழ்நிலையில் சந்தேகத்திற்கு இடமுண்டு. அவனுடைய சிசு இப்போதைய ராஜா*... அந்தக் குழந்தை ஒரு மூதாட்டியின் பாதுகாப்பிலும் அதன் தாய் வழிப் பாட்டனார் (நந்தி ராஜா) மேற்பார்வை யிலும் வளர்ந்தது. அவர்கள் இப்போது ராஜாவின் கல்வியைக் கவனித்துக் கொள்கின்றனர். சீரங்கப்பட்டணத்தின் முற்று கைக்குச் சில நாட்கள் முன்பு ராஜாவின் குடும்பத்தினரிட மிருந்து அனைத்து நகைகளையும் மீர் சாதிக் (திப்புவின் வலது கரம்) பறித்துக் கொண்டான். ராஜா குடும்பத்திற்கு ஏற்பட்ட தொல்லை - துயரங்களால் அக்குழந்தையின் உடல்நலம் பாதிக் கப்பட்டு கெட்டது. இறப்பு எப்போது என்று நாட்களைக்

கழிக்கும் நிலை இருந்தது... பழைய அரண்மனையில் ராஜாவின் குடும்பத்தினர் வைக்கப்பட்டிருந்தனர். யுத்த சமயத்திலும் வெளியில் என்ன, ஏது நடக்கிறது என்பதை அவர்கள் அறியாமல் இருந்தார்கள். அப்போது நிலவிய குழப்பத்தில் தங்களின் பாதுகாப்புக் காவலர்களின் உதவியுடன் ஸ்ரீரங்கநாதர் கோயிலுககுள் அவர்கள் தஞ்சமடைந்தனர் - கடவுள் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையில் அல்லது கொள்ளை யடிக்க முற்படுவோரிடருந்து கோயிலின் பெரிய சுவர்கள் தடுக்க உதவியாயிருக்கும் என்று நினைத்திருக்கலாம் - சண்டை முடிந்து அந்த இளவரசனை அரியணையில் இப்போது அமர்த்தியபின் அவருக்குத் தகுந்த இருப்பிடம் தேவைப் படுகிறது.

'மைசூரிலிருந்த ராஜாவின் பழைய அரண்மனை திப்புவின் காலத்தில் இடிக்கப்பட்டு, ஒரு கோட்டை கட்டும் வேலை நடைபெற்றது. கணிசமான அளவுக்குச் செலவுகளும் செய்யப் பட்டன.

'ஜூலை மாதத்தில் ராஜா அரியணையில் அமர்த்தப் பட்டார். அப்போதே மைசூரில் பழையஅரண்மனை இருந்த இடத்தில் ஒரு புதிய அரண்மனை கட்டும் பணி துவங்கியது. இப்போது கட்டுமானப் பணி நல்ல நிலையில் உள்ளது. வசதிமிக்கதொரு இருப்பிடமாக விளங்கப் போகிறது.** அந்த இளம் ராஜா ஒரு அழகான சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதைக்

---

* புக்கானனின் வருகையின்போது ஏழு வயது சிறுவனாக இருந்த மைசூர் ராஜாவின் பெயர் கிருஷ்ணராஜ உடையார் III (1799-1868). அவருக்கு முன்பிருந்த ராஜாக்கள் சிலரின் பெயர்கள்:
கிருஷ்ணராஜ உடையார் II - 1734-1766
நஞ்சராஜ உடையார் - 1766-1770
பெட்டாட சாமராஜ உடையார் - 1770-1776
காசா சாமராஜ உடையார் IX - 1776-1796
கிருஷ்ணராஜ உடையார் III - 1799-1868
இது பிற்கால சரித்திர ஆசிரியர்கள் (வில்க்ஸ்/ரைஸ்) தரும் பட்டியல். இதில் புக்கானன் கூறுவது போல 'கிருஷ்ண ராஜா' என்பவர் கி.பி. 1800இல் இருந்த மைசூர் ராஜாவின் தாத்தா உறவாக வரவில்லை.

** அதுதான் தற்போதைய மைசூர் அரண்மனை

கண்டேன். அந்தச் சிம்மாசனம் கம்பெனியாரால் வழங்கப் பட்டது. ராஜாவின் உடல்நிலை நன்றாகத் தேறியுள்ளது. அவர் ஆறிலிருந்து ஏழு வயதிற்குள் இருப்பார். அவர் பேசுவதும் நடந்து கொள்வதும் தகுதி -மாண்புடன் அமைந்துள்ளன. கம்பெனியாரின்அரண்மனைப் பிரதிநிதியான கர்னல் குளோஸின் வழிகாட்டுதலில் இவை நிகழ்ந்துள்ளன. கர்னல் குளோஸ் ராஜாவை அவ்வப்போது ஓய்வாகவும் இனிமை யாகவும் பொழுதைக் கழிக்க ஏற்பாடு செய்கிறார்...' என்றெல்லாம் ஆட்சி மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார் புக்கானன்.

சீரங்கப்பட்டணத்திலிருந்த திப்பு சுல்தானின் அரண் மனையைப் பற்றியும் நிருவாகம் குறித்தும்விரிவாக எழுதியுள்ளார், புக்கானன். அவற்றில் சில:

- திப்பு சுல்தானின் அரண்மனை மிகவும் பெரிய கட்டடம். அறைகள் அழகாக உள்ளன. அவற்றில் துருப்புகள் தங்க வைக்கப்பட்டனர். ஆனால் அவற்றில் காற்று வசதி போதாமையால் அவதிதான்... திப்புவின் பிரத்தியேக அறைகள் சதுர அமைப்பில் உள்ளன.ஒரு பக்கத்தில் அவரது தனிப்பட்ட உபயோகம். மற்ற மூன்று பகுதிகளிலும் பொருட்களை வைக்கும் கிடங்குகள். அப்பொருட்கள் விற்பனைக்கானவை... அந்த மூன்று பக்க அறைகளில் தற்போது திப்புவின் ஐந்து மகன்கள் உள்ளனர். அவர்கள் இன்னும் வேலூருக்கு அழைத்துச் செல்லப்பட வில்லை. அழகாக இருக்கும் அவர்கள் விரும்பும்போது குதிரை ஏற்றம், உடற்பயிற்சி போன்றவற்றைச் செய் கின்றனர். அங்கிருந்து மைதானத்தில் நடைபெறும் படைவீரர்களின் அணிவகுப்பைக் காணவும் படையின ரின் இசையைக் கேட்கவும் அவர்களுக்கு அனுமதி உண்டு.

- வருவாய்த்துறை பிராமணர்களின் நிர்வாகத்தில் இருந்தது. அவர்களின் பேராசைகளால் ஊழல் மலிந்தது. அவர்கள் ஐதருக்கு நன்றி விசுவாசமாக இருக்கவில்லை. திப்புவால் அவர்களை விலக்க முடியவில்லை. காரணம், அவர்களைத்

தவிர்த்து நிர்வாகத்தை நடத்த இயலாது; தகுதி வாய்ந்த பிறர் நாட்டில் கிடையாது. அவர்களின் குற்றங்களைக் கண்டறிந்து தக்க தண்டனை வழங்குவதற்குப் பதிலாக நாட்டின் பல கோட்டப் பகுதிகளிலும் 'அசாஃப்' என்னும் ஆட்சியாளரை நியமித்தார். அதனால் கெடுதல்கள் அதிகமாயின. ஊழல்கள் மிகுதியாயின. புதிய வரிகளைத் திப்பு விதித்தாலும் உரிய வருவாய் கஜானாவிற்கு வருவதற்குப் பதில் இடையில் மறைக்கப்பட்டது.

- அரண்மனையின் முன்பகுதியில் வருவாய் அலுவலகம் இருந்தது. சில சமயங்களில் அங்கு மக்களைச் சந்திப்பார் திப்பு. அவருடைய தனியிடத்திற்குச் செல்ல அங்கிருந்து குறுகிய நடை வழி உண்டு. அந்த நடை வழியில் நான்கு புலிகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அவை அடக்கி வைக்கப்பட்டிருந்தாலும், சமயங்களில் பயங்கரமாகி விடும். அங்குள்ள அறையில்தான் திப்பு கடிதங்கள் எழுதுவார். மீர் சாதிக் தவிர மற்றவருக்கு அங்கு அனுமதியில்லை. அதற்குப் பின்னால் திப்புவின் படுக்கை அறை... அதிலிருந்து அரண்மனை முற்றத்தைக் காண கதவும் இரண்டு சன்னல்களும் உண்டு; மற்ற பக்கங்கள் அடைத்திருந்தன. அக்கதவு உட்பக்கத்தில் மிகவும் உறுதியாக உள்ளது. சன்னல்கள், இரும்புப் பட்டைகளைக் கொண்டு பாதுகாப்பாக இருந்தன. திப்புவின் படுக்கை ஊஞ்சல் போன்ற ஏற்பாடு. சன்னல் வழியே பார்த்தால் படுக்கை இருப்பது தெரியாது. ஆகவே அவர் உறங்குவதைப் பிறர் காண இயலாது. அப்படுக்கையில் எப்போதும் ஒரு வாளும், தோட்டாக்கள் நிறைந்த இரு துப்பாக்கிகளும் இருக்குமாம் - சுல்தானின் ஜாக்கிரதை உணர்வு...

- நகரின் கொத்தவாலிடம் உள்ள பதிவேட்டின்படி, நகரின் கோட்டைப் பகுதியில் **4,163** வீடுகளும், **5,499** குடும்பங்களும் உள்ளன. வெளிப்பகுதியில் **2,216** வீடுகளும் **3,335** குடும்பங்களும் உள்ளன. ஒரு வீட்டில் ஐந்து உறுப்பினர்

எனக் கணக்கிட்டால் கோட்டைப் பகுதியில் *20,815* பேர்களும், வெளிப்பகுதியில் *11,080* பேர்களும் உள்ளனராகக் கருதலாம். மொத்தம் *31,895* பேர்கள். கோட்டைப் படைப் பிரிவும் அதன் வீரர்களும் இக்கணக்கில் வரவில்லை. இந்நகரில் உள்ள ஒரு முக்கிய வியாபாரி, திப்புவின் காலத்தில் இங்கு ஐந்து லட்சம் பேர்கள் இருந்ததாகச் சொல்கிறார். அது மிகையான மதிப்பீடு. அனைத்தையும் கணக்கில் கொண்டு மதிப்பிட்டால் இந்நகரில் முன்பு *1,50,000* பேர்கள் இருந்ததாகச் சொல்லலாம்.

✪ இப்போதுள்ள மைசூர் நாடு முன்பிருந்த ராஜாங்கத்தை விடப் பெரிதாகவே உள்ளது. ஏனெனில் சீரா, பெங்களூரு, கோலார் பகுதிகளெல்லாம் முந்தைய மைசூர் ராஜ்ஜியத்தில் இல்லை. அவை முஸ்லிம்களிடமிருந்து ஐதர் வென்ற பகுதி. கோயம்புத்தூர், பாராமகால் பகுதிகளை அவர்கள் முன்பு வென்றிருந்தாலும், அவை கம்பெனியாருக்குக் கொடுக்கப்பட்டு விட்டன. மைசூர் ராஜ்ஜியம் மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மாகாணத்தின் தலைவர் சுபேதார். மாகாணத்தின் கீழ் தாலுக்காக்கள் உள்ளன. தாலுக்காவின் தலைவர் ஆமில்தார். ஆமில்தாருக்குக் கடுமையான தண்டனை விதிக்கும் அதிகாரம் இல்லை. அது திவானிடம் உள்ள அதிகாரம்...

இவ்வாறு குறிப்பிட்டு வந்த புக்கானன் சீரங்கப்பட்டணப் பகுதியைச் சுற்றிப் பார்த்து, அங்கு கண்ட விவசாயப் பணிகள், விளைபொருள்கள், உற்பத்திப் பொருள்கள், நீராதாரங்கள், விவசாய முறைகள், நிலங்களின் தன்மைகள், விவசாயக் கருவிகள், எரு வகைகள், தோட்டங்கள், பழ வகைகள், கால்நடைகள், பால், குதிரைகள், நிலக்குத்தகை முறைகள், வேலையாள் சம்பள முறைகள், வாராந்திர சந்தைகள், காசு-பணம், அளவைகள், சுரங்கங்கள், கனிமங்கள், காடுகள் போன்று பல்வேறு அம்சங்களையும் விரிவாகக் குறிப்பிடுகிறார்.

இறுதியாக கர்னல் குளோஸிடம் ஆலோசித்து மைசூர் ராஜாவின் கீழிருக்கும் நாட்டில் தான் மேற்கொள்ளவிருக்கும் விசாரிப்புகளின் இடங்களைத் திட்டமிட்டார். தனக்குத் தேவையான விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டி, படிவம் ஒன்றைத் தயாரித்து, அமைச்சர் பூர்ணையா மூலம் எல்லா ஆமில்தார்களுக்கும் தகவல் தரச் செய்தார். அதுபோன்றதொரு திட்டத்தைக் கம்பெனி நிர்வாகத்தின் கீழிருந்த பகுதிகளுக்காகத் தனியே தயாரித்தார். கம்பெனியின் கீழிருந்த கனரா மாவட்டத்தில் அப்போது நிலைமை அசாதாரணமாக இருந்ததால், அப்போதைக்கு அங்கு செல்வதைத் தள்ளி வைத்தார். கனரா பகுதிகளை இறுதியாகப் பார்க்க உத்தேசித்தார்.

அந்த வகையில், சீரங்கப்பட்டணத்தில் தன்னுடைய வேலைகளை முடித்துக்கொண்டு ஜூன் 6ஆம் தேதி காலை அங்கிருந்து கிளம்பினார். அவருடன் உடன் வருபவர்களை காவேரியின் வடக்குப் பகுதியிலுள்ள காய்நங்கூர் (Gaynangur) என்ற கிராமத்திற்கு வரச்செய்து, புக்கானன் அவர்களுடன் சேர்ந்து பெங்களூரை நோக்கிச் சென்றார் - பெங்களூரிலிருந்து முன்பு வந்த வழியாகவே திரும்பிச் சென்றார். ஜூன் 22ஆம் நாள் பெங்களூருக்குச் சென்றார். ஜூலை 2 வரை அங்கிருந்தார். பின்னர் தொட்ட பெல்லப்பூர் சென்று (ஜூலை, 18) பிறகு சீராவை அடைந்தார் (ஆகஸ்ட், 7). அங்கிருந்து பின்னர் தெற்காகத் திரும்பி வந்து, மீண்டும் சீரங்கப்பட்டணத்தில் தங்கினார். தன்னுடன் வந்த வண்டி-வாகனங்கள், குதிரைகள், சாமான்கள் போன்றவற்றைப் பழுது பார்த்து, மேலும் பயணத்தைத் தொடர ஓய்வு கொள்ளவும், தயார் நிலைக்கு வரவும் அங்கு தங்கினார். அப்போது காவிரியில் நீர் கரை முழுதுமாய் ஓடுவதைக் குறிப்பிடுகிறார். ஆனால் நீர் தெளிவாக இல்லாமல் செந்நீராய் ஓடியதாம். நகரம் தாழ்வான பகுதியாதலால் வீடுகள் ஈரம் படிந்ததாகவும் சுகாதாரமின்றியும் இருந்தன. கிழக்கு மூலையிலிருந்து வீசிய காற்றும் மனிதர்களுக்கு ஏற்றதாக இருக்கவில்லை.

செப்டம்பர் 5ஆம் நாள் சீரங்கபட்டணத்திலிருந்து கிளம்பி ஒரு 'கோஸ்'* தூரத்திலுள்ள பால்ஹள்ளியை அடைந்தார் புக்கானன். ஆனால் அவருடைய சாமான்கள் வழியில் காணாமல் போய்விட்டன. நாள் முழுவதும் தேடியலைந்த பின்னர் மாலையில் கிடைத்தன. அந்த அலைச்சலில் கால்நடைகள் அடைந்த களைப்பினால் மேலே செல்லவில்லை. அடுத்த நாள்தான் அங்கிருந்து கிளம்பினார்.

வழியில் ஒவ்வொரு ஊராகப் பார்த்து 10ஆம் தேதியன்று பெரியபட்டணாவிற்கு வந்தார். அவ்வூர் நந்திராஜ் என்ற பாளையக்காரனுக்கு உரிமையானது. அவன் குடகு ராஜாவின் சொந்தக்காரன். சிக்கதேவராயன் அதை வென்று மைசூர் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார்... புக்கானன் அங்கு மூன்று நாட்கள் தங்கினார். அங்கிருந்து கிளம்பி, சில இடங்களில் தங்கி, 23ஆம் தேதி **நஞ்சன்கூடு** நோக்கிப் புறப்பட்டார். வழியில், உடன் வந்த வழிகாட்டியைக் காணவில்லை. ஆகவே, மீண்டும் பழைய இடத்திற்கே சென்று புதிய நபர் ஒருவரைப் பிடித்தார். கபினி ஆற்றங்கரைப் பக்கமாக மீண்டும் பார்த்து வந்து அடுத்த நாள் நஞ்சன்கூட்டிற்கு வந்தார். அவ்வூரைப் பற்றி எழுதுகிறார்:

'இவ்வூர் ஈஸ்வரனுக்குப் புனிதமான இடம். ஈஸ்வரன் நஞ்சை உண்டதால் இவ்வூருக்குப் பெயர்க்காரணம் ஏற்பட்டுள்ளது. முதலில் பத்து முழம் நீள, அகல, சதுரத்தில் ஒரு சிறு கோயில் இருந்தது. அறுநூறு அல்லது எழுநூறு ஆண்டுகட்கு முன்பு இப்பகுதிகளில் காடுகள் மண்டியிருந்தன. அப்போதைய ராஜா மக்களைக் கூட்டி வந்து, தங்க வைத்து இருநூறு முழம் நீள, அகல, சதுரத்தில் கோயிலைக் கட்டினார். அப்போதிருந்து பிராமணர்களுக்கு நன்கொடைகள் வந்து சேர்கின்றன. தேவராயா என்ற மைசூர்த் தளவாய் இங்குள்ள

* **'கோஸ்' என்பது இந்துஸ்தானி வார்த்தை. ஒரு கோஸ் தூரத்தை 2 மைல்கள் என்றும் (பக். 191/பகுதி II / காவேரிபுரம்), 3 மைல்கள் என்றும் (பக். 166/பகுதி II / சிவசமுத்திரம்), 3½ மைல்கள் என்றும் (பக். 131, பக். 173/பகுதி II / சிங்காநல்லூர்) பலவாறு புக்கானன் குறிப்பிடுகிறார் - உள்ளூர் ஆட்கள் தெரிவித்த விவரத்தின்படி.**

பாலத்தைக் காட்டினார். அவருக்குப் பிறகு தளவாயாக இருந்த அவரது தம்பி நஞ்சராயா இக்கோயிலுக்குப் பல நற்காரியங் களைச் செய்தவர். நஞ்சராயாவிற்கு முன்பிருந்தவர்கள் வைணவத்தைப் பின்பற்றியவர்களாயினும், அவர் சிவனை வழிபடுபவராயிருந்தார். அவருக்குப் பிடித்தமான இக் கோயிலை 400 முழம் நீள, அகல, சதுரத்தில் விரிவாக்கினார். அவர் காலத்தில் இங்கே 300 பிராமண வீடுகள் இருந்தன. சூத்திரர்களின் வீடுகள் 700. நகரில் கோட்டையைக் கட்டிய நஞ்சராயா, சூத்திரர்களை நகரிலிருந்து துரத்தினார். பிராமணர்களும் கோயிலில் பணிபுரிபவர்களும் தவிர, பிறர் கோயிலுக்கருகில் குடியிருக்கத் தடை செய்யப்பட்டனர். பிராமணர்களுக்குத் தரப்பட்ட சலுகைகளைத் திப்பு விலக்கிக் கொண்டு சிறிதளவு மானியம் (மாதம் 100 பகோடா) மட்டும் தந்தார். இப்போதுள்ள ராஜா வந்தபிறகு மேல்கோட்டை கோயிலுக்கு அளிக்கப்படும் மானியமான 4,000 பகோடாக்கள் தரப்படுகின்றன... இப்போது இந்நகரத்தில் 120 பிராமணர் வீடுகளும் 200 சூத்திரர் வீடுகளும் உள்ளன. இவ்வூர், கௌண்டினி ஆறு கபினி நதியுடன் கலக்கும் இடத்தில் அமைந்துள்ளது...'

திடீரென்று, புக்கானனுக்கு 25ஆம் தேதியன்று தாங்க முடியாத உடல்வலி ஏற்பட்டதால் மேற்கொண்டு சத்தே காலத்திற்குப் புறப்படுவதற்குப் பதிலாக மைசூருக்குக் கிளம்பினார். நான்கு கோஸ் தூரம்... மைசூரில் சில நண்பர்களைச் சந்தித்தார். அப்போது சீரங்கப்பட்டணத்தில் நோய் பரவியுள்ளது என அவர்கள் தெரிவித்ததால், புக்கானன் மைசூரிலேயே தங்கிவிட்டார். தமது கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களைப் பற்றி அவர் எழுதுகிறார் பாருங்கள்...

'மைசூர் சீரங்கப்பட்டணத்தைத் தவிர மற்ற இடங்களில் கால்நடைகளுக்கான தீவனங்களைப் பெற கஷ்டப்பட வேண்டியிருந்தது. அரசாங்கத்தைச் சேர்ந்த ஊழியனுக்குக் காலங்காலமாய்த் தேவைப்படும் இத்தீவனம் இலவசமாகக்

கிடைக்கும் என நம்பினேன். ஆனால் சீரங்கப்பட்டணத்திலும், இங்கும் மதராஸ் அரசாங்க ஊழியர்களின் மனைவிமார்கள் மிக்க ஒத்தாசையாக இருந்தனர். அரசு அதிகாரிகள் அப்பெண்களின் போக்கில் தலையிடப் பயப்படுகிறார்கள். அப்பெண்கள் புத்திசாலிகள்... தேவையான புற்களை அதிக அளவில் கொண்டு வந்து தந்தார்கள்.

மூன்று நாட்கள் மைசூரிலிருந்துவிட்டு, இரண்டு கோஸ் தூரத்திலுள்ள ஓரக்கோடு என்ற இடத்திற்குச் சென்றார். பிறகு 'மலங்கி'க்குச் (ஐந்து கோஸ் தூரம்) செல்ல முனைந்தார். ஆனால், சாலை மிகவும் மேடு பள்ளமாய் இருந்ததால், சுற்றி வளைத்து மூலூர் என்கிற கிராமத்திற்கு வந்தார். புக்கானன் பயணம் செய்த தடத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவிற்குள் அவர் கால் பதித்த முதல் ஊர் அது. அங்கிருந்து கம்பெனியாரின் ஆட்சிப் பகுதி தொடங்கியது. அங்கிருந்து ஒரு கோஸ் தூரம் சென்று கொள்ளேகாலத்தை அடைந்தார். 'அறுநூறு வீடுகள் உள்ள நகரம் இது. தாலுகாவின் தலைநகரம். தாசில்தார் என்பவர் மூத்த அரசு அதிகாரி. (மைசூர் ராஜா நாட்டில் அந்த அதிகாரி 'ஆமில்தார்' என அழைக்கப்பட்டார்). மைசூர் ராஜ்ஜியத்தில் உள்ள அரசு அலுவலர்களுக்கும் கம்பெனி அலுவலர்களுக்கு மிடையே வேறுபாடு உண்டு. இங்கு இரண்டு பெரிய கோயில்கள் உள்ளன. கொள்ளையடிக்கப்பட்ட நகரம் என்பதால் கொள்ளேகாலம் என்று பெயர்...' என்கிறார் புக்கானன்.

கொள்ளேகாலம் அப்போது கோயம்புத்தூர் ஜில்லாவி லிருந்தது (1799 முதல் 1956 வரை). கொள்ளேகாலம் கொங்கு நாட்டுப் பகுதிதான். இன்று நாம் அடையாளம் காணும் கொங்கு நாட்டைவிட முன்காலத்தில் அது பரந்திருந்தது. எருமை நாடான மைசூரும் ஒரு காலத்தில் கொங்கு நாட்டுப் பகுதிதான். கொள்ளேகாலத்திலிருந்து சத்தேகாலத்திற்குக் கிளம்பி, அங்கிருந்து சிவசமுத்திரத்தை அடைந்தார் புக்கானன். சிவபெருமானின் பெயரில் அமைந்துள்ள அத்தீவையும், நீர்வீழ்ச்சியையும், அந்த நாட்டைப் பற்றியும், அதன் முந்தைய

அரச வம்சத்தைப் பற்றியும், அவர் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். பின்னர் அங்கிருந்து சிங்காநல்லூரு என்ற ஊருக்குச் சென்றார்.

அங்கிருந்து புக்கானன் எழுதுகிறார்: 'இங்குள்ள மலைகளின் தொடர் (கிழக்கில்) காவிரியிலிருந்து (மேற்கில்) கஜல்ஹட்டி வரை நீண்டுள்ளது. கொள்ளேகாலம் மற்றும் தலைமலைப் பகுதிகள் அடங்கியது. இங்கிருந்து மேற்காகப் பார்த்தால், தொடர் சங்கிலி போல மலைகள் பிணைந்து அமைந்துள்ளன. இவ்வூரில் ஒரு பாழடைந்த கோட்டை உள்ளது. ஐதரின் ஆட்சிக்கு முன் அக்கோட்டை மராத்தியர் களால் சூறையாடப்பட்டது. காரன்வாலிஸ் பிரபுவின் ஆக்கிரமிப்பிற்கு முன் புறநகர்ப் பகுதியில் நூறு வீடுகள் இருந்தன. ஆனால் ராணுவத்திற்குத் தானியங்கள் கொண்டு வந்த லம்பாடிகளால் கொள்ளையடிக்கப்பட்டதால், அவ்வீடுகளிலிருந்தோர் பசியால் மாண்டனர். இப்போது அங்கு 35 வீடுகள் உள்ளன. பசவ ஈஸ்வரன் கோயில் உள்ளது. லம்பாடியர்கள் எதிரி நாட்டு ஆட்களை மட்டுமன்றி, கண்களில் படும் மக்களையும் தீர்த்துக் கட்டுவர். அவர்களின் வீடுகளைச் சூறையாடுவர். ஜில்லா கலெக்டர் மாக்ளியாட் இப்பகுதிக்கு ஆட்களுடன் பனங்கொட்டைகளை அனுப்பி, பனைமரங்களை நட உத்தரவு செய்திருந்தார். ஒரு கோஸ் தூர நீளம் 200 கஜம் அகலம் கொண்ட நிலப்பரப்பில் பயிரிட ஏற்பாடு நடைபெறுகிறது. முன்பு ஈச்ச மரங்களிலிருந்து கள் தயாரிக்கப்பட்டது. ஆனால் திப்பு சுல்தானின் உத்தரவால் அம்மரங்கள் வெட்டப்பட்டன. போதைப் பானத்தைத் தடை செய்யும் நோக்கத்தில் திப்பு சுல்தான் இட்ட உத்தரவு அது...'

அங்கு இரண்டொரு இடங்களைப் பார்த்த பின்னர் அக்டோபர் 9ஆம் நாள் மார்த்தஹள்ளி என்ற ஊருக்குச் சென்றார் புக்கானன். அதற்குப் பின் அவர் பார்த்து வந்த பகுதிகளைப் பற்றி எழுதுகிறார்:

'நான் மூன்று சுல்தானி கோஸ் தூரம் சென்று மார்த்தஹள்ளியை (Marat-hully) அடைந்தேன். இங்குள்ள மக்கள் தூரத்தின் அளவை மணிக்கணக்கில் கணக்கிடுகின்றனர்.

ஆறு நாழிகை வழிப்பயணம். அல்லது ஆறு மணி நேரப் பயணத்தைக் கடந்தோம் என்கின்றனர். ஒரு மணி என்பது, இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ளதைப்போல், ஒரு நாளின் அறுபதில் ஒரு பகுதியாகும். அல்லது 24 நிமிடங்கள். தமிழ்ப் பகுதிகளில் தூரத்தைக் கணக்கிடுவதில் இந்த முறையைப் பின்பற்றுகின்றனர். ஒரு மணி நேரப் பயணம் என்பதை மதராஸில் உள்ள ஐரோப்பியர்கள் ஒரு 'மலபார் மைல்' என்று கூறுகின்றனர்.

'சதா தண்ணீர் ஓடும் இரண்டு சிற்றாறுகள் மாரட் ஹள்ளியில் ஒன்று சேர்கின்றன. பிறகு அந்த ஆறு பள்ளத்தாக்கில் ஓடி, தெற்கிலிருந்து வரும் பாலாறுடன் கலக்கிறது. இரண்டும் சேர்ந்த ஆறு காவிரியுடன் கலக்கிறது. மலைத்தொடர்களுக்குக் கீழே மேற்கிலிருந்து வரும் சிற்றாறுதான் நீளமானது. அதன் பெயர் 'பகளி' (Bagali) - மாதேஸ்வரன் மலையிலிருந்து உற்பத்தியாகிறது. கொள்ளே காலம் தாலுகாவில் இந்த மலையிலிருந்துதான் சந்தன மரங்கள் கிடைக்கின்றன. இம்மலையில் புகழ்பெற்ற கோயில் உள்ளது - மலையின் பெயரைக் கொண்டுள்ள கோயில் - மாட்-ஹள்ளியிலிருந்து நான்கு கோஸ் தூரம். கிழக்கிலிருந்து வரும் சிற்றாறு சிறியது. ஒரு கோட்டையின் அருகிலிருந்து அது புறப்படுவதால் அந்த ஆற்றின் பெயர் 'கோட்டை'.

**அக்டோபர் 10, 1800**

'மூன்று கோஸ் தூரம் கடந்து 'நடுக்காவலை' அடைந்தேன் - தமிழில் 'நடுவில் உள்ள காவல்' என்று பொருள். இந்த இடம் இம்மலைத் தொடரின் மத்தியில் உள்ளது; கர்நாடகாவிலிருந்து 'சேரதேச'த்திற்கான எல்லையில் அமைந்துள்ளது. நாம் அழைக்கும் கோயம்புத்தூர் பிராந்தியத்தையும் சேலம் ஜில்லாவையும் உள்ளடக்கியது சேரதேசம்.

'மாட்-ஹள்ளியை விட்டகன்ற சிறிது நேரத்தில் பாலாற்றை அடைந்தேன். அது தென்மேற்கிலிருந்து புறப்பட்டு ஒரு பள்ளத்தாக்கின் வழியே ஓடி நெல்லூரை அடைகிறது.

நெல்லூரிலிருந்து மிகச்சிறியதொரு பள்ளத்தாக்கு வழியே செல்லும் பகுதியில் பயிர் செய்வது இயலாத காரியம். ஆனால் சில சமதள இடங்களில் பயிர் செய்ய முடியும் - அது வழிப் போக்கர்களுக்கு இதமாகத் தோன்றும். பாலாற்றங்கரைகளில் பனை மரங்கள் நன்கு வளரும் என்று சொல்கிறார்கள். அம்மரங்களின் பொருட்களுக்கு கிராக்கி உள்ளதாம்...

'இம்மலைத் தொடர்கள் வடக்கு-தெற்காகவும் செங்குத் தாகவும் அமைந்துள்ளன. ஆனால் அதன் பாறைகள் கட்டடங்கள் கட்ட உபயோகப்படாது. ஓர் இடத்தில் சுண்ணம்புக் கல் அடர்ந்த பெரிய பாறைகளைக் கண்டேன். அப்பாறைகளின் தொகுப்பு பெரும் அளவில் உள்ளது. கறுப்பு மண் உருவில் இரும்புத் தாதுக்களும் அதிகம் தென்படுகின்றன. ஆனால் இப்பகுதியில் அவை உருக்கப்படுவதில்லை...'

இவ்வாறு புக்கானன் வாயால் சேர நாட்டிற்குள் நுழைந்தேன் என்ற அவரது அறிவிப்பைத் தொடர்ந்து கொங்கு நாட்டிற்குள் அவர் வருகைக்கு 'பராக்', 'நல்வரவு' என்று முகமன் கூறுவோமே!

# 6

# காவேரிபுரத்திலிருந்து பவானிக்கு

***அக்டோபர் 10, 1800:*** புக்கானன் எழுதுகிறார்: 'நான் இப்போது வந்துள்ள **நடுக்காவல்** கர்நாடகா மற்றும் சேர தேசத்தின் எல்லையில் அமைந்துள்ளது. இவ்விரண்டு தேசங்களும் இந்து (இந்துஸ்தான்) புவியியலில் இரண்டு பழமையான மண்டலங்கள். சில சிப்பாய்கள் காவல் காத்த ஒரு சிறு கோட்டையிலிருந்தது நடுக்காவல். அக்கோட்டை இப்போது பாழடைந்த நிலையில் உள்ளது. காவலர்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளனர்.

'வழிப்போக்கர்களின், வசதிக்காக, கெட்டி முதலி (Guttimodaly) என்பவர் ஒரு விசாலமான கட்டடத்தை வெகு காலத்திற்கு முன்புஇங்கு கட்டியுள்ளார். அவர் சேர தேசத்தில் சக்தி வாய்ந்த நபராக இருந்திருக்கிறார். இக்கட்டடம் சமீபத்தில் பழுது பார்க்கப்பட்டு ஒரு பிராமணரின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. அந்தப் பிராமணர் அரசாங்கத்திடமிருந்து மாதம் நான்கு ரூபாய் சம்பளம் பெறுகிறார். அவரிடம் ஏழு பசுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றிடமிருந்து கிடைக்கும் பாலை பயணிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டும். இது இந்திய சம்பிரதாயப்படியானதொரு ஏற்பாடு. பயணிகளுக்குப் பால் வழங்க இது உகந்த வழியா எனத் தெரியவில்லை. அந்தப் பிராமணருக்குப் பசுக்களைப் பேணும் நோக்கம் இல்லை. எவ்வளவு பால் கிடைக்கிறதோ அதைக் கறந்து தன்

உபயோகத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறார். மிச்சத்தைப் பணக்கார பிரயாணிகளுக்குப் பணம் பெற்றுக் கொண்டு தருகிறார்; விலையோ ஐந்து மடங்கு! ஒரு கடைக்காரரும் உள்ளார். அவருக்கு மாதச் சம்பளம் இரண்டு ரூபாய். பிரயாணிகள் வாங்குவதற்காக அவர் மளிகைப் பொருட்களை வைத்திருக்க வேண்டும். ஆனால், இங்கு வருபவர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைத் தாமே கொண்டு வருகிறார்கள் என்று அவர் குறை பட்டுக்கொள்கிறார்.

'அந்தப் பிராமணரும் கடைக்காரரும் சொல்வதன்படி, இக்கணவாய் வழியே தினம் சராசரியாக இருபது பொதிமாடுகள் பாரம் ஏற்றிச் செல்கின்றன. ஐதரின் காலத்தில்* இது போலப் பத்து மடங்கு பொதி மாடுகள் சென்றனவாம். லம்பாடிகள் என்ற கூட்டத்தார் 12,000 கால் நடைகளைத் திப்புவிடமிருந்து வாங்கி இவ்வாறான வணிகத்தில் ஏகபோக உரிமை கொண்டிருந்தனர். துணி, புகையிலை மற்றும் நெய் தவிர்த்த பிற தானியங்களை வாங்கி விற்கின்றனர். கீழ் நாடுகளிலிருந்து கொள்முதல் செய்து சீரங்கப்பட்டணத்திற்கு அனுப்புகின்றனர்.

'இன்று, மலைகளின் அடிவாரத்தில் மூன்று கோஸ் தூரம் கடந்து **'சிக்க காவல்'** இடத்திற்கு வந்தேன். பாதை மேடு பள்ளமாக இல்லை. ஆனாலும் பயணம் கடினமாக இருந்தது. ஏனெனில், நாங்கள் பாலாற்றை மாறி, மாறி நான்கு முறை கடக்கவேண்டியிருந்தது. இந்தச் சாலையைப் பாலாற்றின் ஒரு பக்கமாக அமைக்க ஏற்பாடு செய்தல் நலம்.

'சிக்க காவல் என்பதற்குச் சிறு காவல் என்று பொருள். இங்கு வழிப்போக்கர்களுக்காக ஒரு வீடு கட்டப்பட்டுள்ளது. இவ்விடத்தில் காவிரி ஆறு ஆலாம்பாடியிலிருந்து (கொள்ளே காலம் தாலுக்கா) தெற்கே வந்து சேர்கிறது. பள்ளத்தாக்கின்

---

* இது போன்று பல இடங்களில் புக்கானனின் குறிப்புகளிலும் சேலம் ஜில்லா கலெக்டர் அலைக்சாண்டர் ரீடுவின் குறிப்புகளிலும் ஐதர் அலியின் காலத்தை ஒப்பிட்டு விஷயங்களைக் கூறியுள்ளனர். ஆகவேதான் கொங்கு நாட்டு/'தமிழ் நாட்டுப் பகுதிகளில் 'ஐதர் காலத்தில்' என்ற சொல்வழக்கு ஏற்பட்டதோ..?

மேலிருந்து பார்த்தால் மலைகளின் கரடுமுரடான காட்சி களைப் பார்த்துப் பரவசப் படலாம்.

'இவ்விடத்திற்கருகில் உள்ள மக்கள் கன்னடம் மற்றும் தெலுங்கு பேசுகிறார்கள். தெலுங்கர்களை ஆலம்பாடி பாளையக்காரர் அருளப்ப நாயுடுகள் அழைத்து வந்து குடியமர்த்தியிருக்கலாம். தெலுங்கர்கள் 'பாய்' (bui) என்ற வகுப்பினர். அவர்கள் பல்லக்குத் தூக்குபவர்கள், சட்டத்தை மதிக்காத முரடர்கள். காவிரியின் இருபுறங்களிலும் உள்ள மலைப் பகுதிகளை அவர்கள் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந் தனர். ஐதரின் காலத்தில் காவேரிபுரத்தின் ஆமில்தாராக இருந்த திருமலை அய்யா என்ற பிராமணர் அக்கால ஆலம்பாடி பாளையக்காரனைப் பல முறை சந்தித்து, நல்ல வார்த்தைகள் பலவற்றை அவனிடம் பேசி, தம்மை ஒருமுறை வந்து சந்திக்குமாறு வேண்டினார். ஆயுதங்கள் தாங்கிய வீரர்களுடன் வந்து அவன் திருமலை அய்யாவைச் சந்தித்தான். அவன் வந்ததும், தாம் பேசிய பழைய நல்வார்த்தைகளையெல்லாம் மறந்து, அவனைச் சிறையெடுத்து தூக்கிலிடவும் செய்தார், திருமலை அய்யா. அவ்வாறு அந்தப் பாளையக்காரனுக்கு ஒரு முடிவு ஏற்பட்டது. இவ்வாறான நிகழ்ச்சிகளெல்லாம் ஆசிய ஆட்சியாளர்களிடம் சாதாரணமாக நிகழ்வதே!'

**அ**க்டோபர், *12:* 'ஐந்து மலபார் மணி தூரம் சென்று **காவேரிபுரத்தை** அடைந்தேன். நாற்பது, ஐம்பது ஆண்டுகட்கு முன்புவரை இப்பகுதியில் விவசாயம் நடைபெற்றதாம். அதன் பின்னர், அமைதி நிலவாததால் பயிரிடும் வேலை குறைந்து, தற்போது நிலங்கள் தரிசாகிப் போயுள்ளன. காவேரிபுரம் நகரத்தையொட்டி சில இடங்களில் பயிர்கள் தென்படு கின்றன. வயல்களைச் சுற்றி கற்களினால் ஆன வேலிகள் போடப்பட்டுள்ளன. ஆடு, மாடுகள் உள்ளே வராமலிருக்க (அயர்லாந்தின்) கால்வேயில் (Galloway) அமைக்கப்படும் தடுப்புச் சுவர்கள் போலத் தோன்றுகின்றன. காவேரிபுரத்தின் கல் வேலிகள் மோசமாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மராமத்தும் நடைபெறுவதில்லை.

'காவேரிபுரத்தின் கோட்டை கெட்டி முதலியால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது; அவர் அக்கம் பக்கத்திலுள்ள பல பகுதிகளின் பாளையக்காரராக இருந்தவர்; மலைப்பகுதிகளில் உள்ள பாளையக்காரரிடமிருந்து தமது நாட்டைப் பாதுகாக்க நடுக்காவலையும் கட்டினாராம். ஊரின் புறநகர்ப் பகுதி, கோட்டையிலிருந்து சிறிது தூரத்திலுள்ளது. அங்கே நூறு வீடுகள் உள்ளன. அதைவிட அதிகமாக அழிந்து போன வீடுகள் உள்ளன. ஆனால் முன்னெப்போதையும்விட இப்போது அதிக மக்கள் வசிக்கின்றனர். இடிந்த வீடுகளை ஹுசேன்சாகிப் (ஆமில்தார்?) திரும்பக் கட்டி நகரை விரிவாக்க முனைந்தார். ஆனால் ஆட்கள் வரவில்லை. கர்னல் ரீடுவின் கீழ் படையுடன் வந்த (1799) லம்பாடிகளால் இவ்வூர் பாதிக்கப்பட வில்லை. ஏனெனில், அவர் லம்பாடிகளின் செயல்கள்மீது கவனம் கொண்டிருந்தார். இருப்பினும் ஆற்றின் மறுபக்கம் இருந்த கிராமங்களை அவர்கள் கொள்ளையடித்தனர். இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசுபவர்கள். பிராமணர்களில் பலர் கன்னடம் பேசுபவர்கள்.

'புறநகர்ப் பகுதிக்கும் கோட்டைக்குமிடையே சுயம்வரப் பள்ளம் என்கிற ஓடை செல்கிறது. அது முன்பு சுயம்வர ஏரி என்ற பெரிய ஏரியை நிரப்பும். அது காவேரிபுரத்தின் தென் மேற்கில் 2அரை கோஸ் அல்லது ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. அந்த ஏரி 520 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் தந்தது. * ஆனால் அந்த ஏரி 50 ஆண்டுகளுக்கு முன்பாக உடைந்து விட்டது; இன்னும் பழுது பார்க்கப்படவில்லை. திப்புசுல்தான் அதற்குத் திட்டமிட்டார். ஆனால் 18,000 பகோடா செலவு ஆகும் எனத் தெரிந்ததும், அத்திட்டத்தை விட்டு விட்டார்.

'இங்கு கணிசமான அளவில் வியாபாரப் போக்குவரத்து நடைபெறுகிறது. தளவாய்ப்பேட்டை, கொமாரபாளையம், பூலாம்பட்டி (Pallaputti), நெரிஞ்சிப்பேட்டை, அம்மாப்

* ஸ்ரீபெரும்புதூர் ஏரி 2,137 ஏக்கர் நெல்வயல்களுக்கும் 436 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கும், கணிசமாக மேய்ச்சல் நிலங்களுக்கும் நீராதாரமாக இருந்தது என்று பிறிதொரு இடத்தில் புக்கானன் குறிப்பிட்டுள்ளார். (Buchanan, I/p.6)

பேட்டை, ஈரோடு, துடுப்பதி, சித்தோடு, அரவக்குறிச்சி, நங்கவள்ளி, ஓமலூர், சேலம், ராசிபுரம், நாமக்கல், சேந்தமங்கலம் மற்றும் திண்டுக்கல் என்று ஒரு பக்கமும் கூடாலு, நகரா, சீரங்கப்பட்டணம், கோபி, கொள்ளேகாலம், கௌடஹள்ளி மற்றும் பந்த்ஹள்ளி என்று மறுபக்கமுமாக வணிகமார்க்கம் இவ்வழியே உள்ளது. ஆகவே, இங்கு ஒரு சுங்கச்சாவடி ஏற்படுத்தப் பட்டுள்ளது. விசாரித்ததில் கடந்த இரண்டு மாதங்களில் கீழ்க்கண்ட சரக்குகள் இவ்வழியே சென்றன.

| | | | |
|---|---|---|---|
| ஜவுளி | 50 | பொதி | மாடுகளில் |
| புகையிலை | 300 | பொதி | மாடுகளில் |
| நெய் | 70 | பொதி | மாடுகளில் |
| விளக்கெண்ணெய் | 10 | பொதி | மாடுகளில் |
| கசகசா | 5 | பொதி | மாடுகளில் |
| கோணி(சாக்கு) | 5 | பொதி | மாடுகளில் |
| பனைவெல்லம் | 50 | பொதி | மாடுகளில் |
| கல் பாத்திரங்கள் | 5 | பொதி | மாடுகளில் |
| மொத்தம் | 495 | பொதி | மாடுகளில் |

'அதாவது, தினம் சராசரியாக எட்டு பொதிமாடுகள் சென்றன. ஆனால் காட்ஹள்ளியிலிருந்து கிளம்பிய பிறகு (அக்டோபர் 9) தினம் நாற்பது அல்லது ஐம்பது பொதி மாடுகள் சென்றதைக் கண்டேன். அது தற்செயலாக நேர்ந்ததாக இருக்கலாம். நடுக்காவலில் உள்ள கணக்கின்படி சுமார் 20 மாடுகள் இவ்வழியே சென்றன. அதில் பாதி (பத்து) இங்கிருந்து மேலே (மைசூருக்குச்) செல்வதாக எடுத்துக் கொண்டால், காவேரிபுரத்தில் உள்ள அலுவலர் தந்துள்ள கணக்கிற்கு ஒத்து வருகிறது. திப்புவின் காலத்தில் இந்த மார்க்கத்தில் சென்ற வணிகப் பொருட்கள் அதிகம். அப்போது உணவு தானியங்கள் கணிசமாகச் சென்றிருக்கலாம். இப்போது சீரங்கப்பட்டணத்தில் ஜனத்தொகை குறைந்து விட்டதால் அவற்றின் அவசியம் குறைந்திருக்கலாம்.'

இவ்வாறு காவேரிபுரத்தைப் பற்றி புக்கானன் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். காவேரிபுரம் வழியாகச் சென்ற சரக்குகள் 1800 இல் கணிசமாகக் குறைந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு ஒரு காரணம் அலெக்சாண்டர் ரீடு மதராஸ் கோட்டைக்கு 8.5.1799 இல் (திப்புவின் மரணத்திற்குப் பின்) எழுதிய கடிதமும் காரணமாயிருக்கலாம். காவேரிபுரம் கணவாய் வழியே படைகள் சென்றபோது சந்தித்த இடர்ப்பாடுகள் (இருபது மைல்தூரத்திற்கு சரிவர தண்ணீர்கூட கிடைக்காது..), கால்நடைகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் போன்றவற்றைக் குறிப்பிட்டு எழுதினார். ஜெனரல் ஃப்ளாயிட் அவருடன் அப்பகுதியில் சேர்ந்து பயணித்தபோது அத்தளபதி சந்தித்த கஷ்டங்களையும் குறிப்பிட்டார். அவ்வழியை விடுத்து ராயக்கோட்டை வழியாக சீரங்கப்பட்டணத்தில் தங்களுக்குத் தேவையான பொருட்களை இனி அனுப்பச் செய்யவும் என்று ஃப்ளாயிட் கூறியதையும் ரீடு குறிப்பிட்டிருந்தார்.

1792 இல் திப்பு - ஆங்கிலேயரிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி பாராமகால் - சேலம் ஜில்லாவின் கலெக்டராகப் பதவி ஏற்றபின், திப்புவுடன் ஏற்பட்ட உடன் படிக்கையின்படி காவிரி ஆறு இரு நாடுகளுக்குமிடையே (இயற்கை) எல்லையாக இருக்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. அதை உணர்ந்த ரீடு காவிரியின் மறுபுறத்திலிருந்த காவேரிபுரத்தைத் திப்புவிற்கு அளித்து காட்டுப்புத்தூரை சேலம் ஜில்லாவில் சேர்க்க ஏற்பாடு செய்தார் (1793). காட்டுப்புத்தூர்ப் பகுதி ஒரு தாலுகா ஆயிற்று. நான்காம் மைசூர்ப் போர் முடிந்த பிறகு (1799) காவேரிபுரம் கோயம்புத்தூர் ஜில்லாவுடன் சேர்ந்து ஆங்கிலேயர் வசம் வந்தது. அதற்குப் பிறகு அமைதி நிலவிய சூழ்நிலையில் காவேரிபுரம் பெரிய நகரமாக வளர்ந்தது. ஆனால் 1920களில் மேட்டூர் அணைத்திட்டம் உருவானபோது, காவேரிபுரம் சேலம் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது. அணையின் கட்டுமானம் முடிந்த பின் காவேரிபுரம் நகரின் ஒரு பகுதியும், பதினோறு கிராமங்களும் (பகுதியாக அல்லது முழுதாக)

நீர்த்தேக்கப் பகுதியில் மூழ்கின. * காவேரிபுரத்தின் மக்கள் தொகையை அருகிலுள்ள சில ஊர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அந்த நகரம் கொண்டிருந்த நிலை புரியும்.

| ஆண்டு | 1891 | 1931 |
|---|---|---|
| காவேரிபுரம் | 6725 | 10928 |
| பவானி | 7341 | 6896 |
| கோபிசெட்டி பாளையம் | 2104 | 16304 |
| சத்தியமங்கலம் | 3574 | 4434 |
| கொள்ளேகாலம் | 9946 | 13849 |
| திருச்செங்கோடு | 7511 | 12322 |
| நாமக்கல் | 6341 | 9306 |
| தருமபுரி | 7090 | 14815 |

அக்டோபர் 13 அன்று பத்து மலபார் மணி தூரம் (பத்து நாழிகை நடை தூரம்) சென்று நவப்பட்டியை அடைந்தார். முன்பு ஒன்பது பட்டிகளைக் கொண்ட தலைமை ஊர் நவப்பட்டி. இப்போது இருபது வீடுகள் மட்டும் இங்குள்ளன. தேன்கூடு போன்ற குடிசை வீடுகள்; 'சேரா' (chera) என்று பெயர். வட்ட வடிவில் மூன்று அடி உயரத்திற்கு மண்சுவர்களை எழுப்பி, அதன் மீது கூம்பு போல ஓலை/தட்டுகளால் வேய்ந்த கூரை வீடுகள் அவை. புகை வெளியே செல்லவும், காற்றும் வெளிச்சமும் உள்ளே வரவும் வாசல்தான் வழி.. ஒவ்வொரு குடும்பமும் உறங்குவதற்கும், சமைப்பதற்கும், பொருட்கள் வைக்கவுமாக மூன்று தனித்தனிக் குடிசைகளைக் கட்டிக் கொள்கிறது. வசதியான குடும்பத்தினர் மூன்றுக்கு மேற்பட்ட குடிசைகளைக் கட்டிக்கொள்கின்றனர் - ஆனால் குடிசைகளின் அமைப்பில் மாறுதல் ஒன்றும் செய்வதில்லை... எனக் குறிப்பிடுகிறார் புக்கானன். மேற்கொண்டு அவரது வாயால் கேட்போம்.

'காவேரிபுரத்திலிருந்து சிறிது தூரம் வரை சமவெளிப் பகுதி. அதற்குப் பிறகு உயர்ந்த மலைகள், காவிரி வரை நீள்கிறது.

* சேலம் மாவட்ட கஜட்டியர் - 1932- பக். lxxvi

அவை ஒரே மலையாக இல்லாமல், விட்டுவிட்டு இடையில் பள்ளத்தாக்குகளால் சூழ்ந்த பகுதி. இங்கிருந்து தெற்கில் பவானி ஆற்றுப் பகுதிவரை (பவானி நகரம்) சமவெளி.. ஆனால் அப்பள்ளத்தாக்குப் பகுதியிலும் சமவெளிப் பகுதியிலும் விவசாயம் செய்ய ஏற்ற நிலங்கள் இருந்தாலும், பல விளைநிலங்கள் பயன்படுத்துவோரின்றி உள்ளன. * திப்பு மற்றும் அவரது அதிகாரிகளின் அடக்குமுறைகளால் விவசாயிகள் தங்கள் ஊரைத்துறந்து, நியாயத்துடனும் மனிதாபிமானத்துடனும் நடந்து கொண்ட கர்னல் ரீடுவின் ஆட்சிப் பகுதிகளுக்குக் குடியேறிவிட்டார்கள் என்று மக்கள் சொல்கிறார்கள்.** சென்ற ஆண்டில் அவர்களின் கால் நடைகளில் பல நோயினால் மரித்து விட்டன.

'அம்மலைத் தொடர்களின் வடக்கில் தும்புளா (tumbula-துவளை?)அல்லது கொளத்தாறு என்கிற அழகிய சிறிய நதி செல்கிறது. அது கொளத்தூர் ஏரியில் கலக்கிறது. அங்கிருந்து அந்த ஆறு காவிரியில் கலக்கும் வரையான பகுதியில் நான்கு நீர்த்தேக்கங்கள் இருந்தன. அவற்றின் உற்பத்திப் பகுதியில் வெங்கடராயா என்பவர் தன் பெயரில் ஐந்தாவது நீர்த் தேக்கத்தை ஏற்படுத்தினார். ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் பெரும் மழையில் அனைத்து நீர்த்தேக்கக் கரைகளும் உடைந்து விட்டன. அவை பழுது பார்க்கப்படவில்லை. ஒரு பிராமணர் இந்த ஆண்டில் தும்புளாவில் சிறு அணை ஒன்றைக் கட்டியுள்ளார்; நெல் நடவு நடைபெறுகிறது.

'இந்த அணைக்கருகில் சாம்பள்ளி என்ற சிறிய நகரம் உள்ளது. அங்கே அழிந்த நிலையில் ஒரு கோட்டையுள்ளது. அதை கெட்டி முதலி கட்டினார். அவர் ஓமலூரில் வசித்தவர். அவ்வூர் இங்கிருந்து கிழக்கில் பதினாறு மலபார் மணி தூரத்தில்

---

* அப்போதெல்லாம் நிலம் அரசுக்குச் சொந்தம். தற்போதைய 'பட்டா'முறை தோன்றவில்லை. ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிய பின்னர் தனியார் நிலவுடைமையில் (ரயத்துவாரி) நிலப்பட்டா வழங்கப் பட்டது. அதற்கான முன்னோட்ட முயற்சியை அப்போது சேலம் ஜில்லா கலெக்டராக இருந்த அலெக்சாண்டர் ரீடு (1792-99) சேலம் ஜில்லாவில் மேற்கொண்டார்.

** அப்போது (1792-99) காவிரியின் இடது கரைப் பகுதியில் ஒகேனக்கல் முதல் ஈரோட்டிற்குத் தெற்கிலுள்ள கொக்கராயன்பேட்டை வரை ரீடுவின் கீழ் (சர்) தாமஸ் மன்றோ உதவி கலெக்டராக இருந்தார்.

உள்ளது. சுமார் நூறு ஆண்டுகட்கு முன்னர், வணங்காதிருந்த அம்மன்னனின் எதிர்ப்பை மீறி அவரது நாட்டை மைசூர் ராஜா பிடித்துக் கொண்டார் * அப்போது இக்கோட்டை அழிக்கப் பட்டது; பின்னர் கட்டப்படவில்லை.

'இப்பகுதியில் பனந்தோப்புகள் அதிகம் உள்ளன. ராகியும் பயிரிடப்படுகிறது. பனந்தோப்பு அமைக்க, ஆடிப்பட்டத்தில் நிலம் இரண்டு முறை உழப்படுகிறது. ஆடி மாதம் தொடங்கியதும் பனம்-பழங்கள் ஓரிடத்தில் குவித்து வைக்கப்படுகின்றன. மூன்றாவது உழவு முடிந்த பின் பனை விதைகள் மூன்று முழ தூர இடைவெளியில் நடவுகால்களில் ஊன்றப்படுகின்றன. வேலி அமைக்கப்பட்டு செடிகள் பாதுகாக்கப்படுகின்றன. ஒன்பது, பத்து ஆண்டுகளில் ஆறடி உயரத்திற்கு மரங்கள் வளர்ந்துவிடுகின்றன. அப்போது வேலிகள் எடுக்கப்பட்டு நிலம் மேய்ச்சலுக்கு விடப்படுகிறது. நல்ல மண் நிலங்களில் நட்டமரங்கள் முப்பது ஆண்டுகளில் 'கள்' தருகிறது. மற்ற நில மரங்களுக்கு நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. அத்தோப்புகளில் ஊடு பயிர் செய்யப்படுகிறது. விளைச்சல் பாதி அளவுதான் தேறும். பனை மரங்கள் ஆயிரம் ஆண்டுகள் உயிர் வாழும் (!?). மரத்திலிருந்து விழும் பழங்களிலிருந்தும் புதிய மரங்கள் வளர்கின்றன. பல இடங்களில் நான் பார்த்த அளவில் பனைமரங்கள் நீண்ட இடைவெளி விட்டுத்தான் தென்படுகின்றன. 'பனந்தெளிவு' ஆண்டில் ஐந்து மாதங்களுக்குத்தான் கிடைக்கிறது. தை முதல் ஆனி வரை பனைமரத்தின் ஓலைகளை வெட்டி மரத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வது ஒரு கடின காரியம். ஆரோக்கியமான ஒரு ஆள் நாற்பது மரங்களைப் பார்த்துக் கொள்ள முடியும். மரம் ஏறுதல் மற்றும் அது சார்ந்த தொழிலைச் செய்பவர் சாணார் என்கிற வகுப்பினர்.

'தூரத்தைப் பற்றி ஏமாற்றம்தான். தூரத்தின் சரியான அளவைக் காண இயலவில்லை. சிறிது தூரம் சென்று நெரிஞ்சிப் பேட்டையை அடைந்தேன் (அக்டோபர் 14) - ஐந்து மலபார்

---

* கி.பி.1641 இல் மைசூர் மன்னன் காந்தீரவ நரச ராஜா, காவேரிபுரத்தையும் சாம்பள்ளியையும் வென்றார்.

மணி தூரம் சென்றிருப்பேன். இடது புறம் காவிரிக்கரை; வலது புறம் உயர்ந்த மலைகள் - குறுகிய சமவெளிப் பகுதி. இருப்பினும் நெல் விளையும் பூமியல்ல.

‘நெரிஞ்சிப்பேட்டை ஒரு சாதாரண நகரம்; இருநூறு குடும்பங்கள் வசிப்பதாகச் சொல்லப்படுகிறது. முன்னூறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இப்பகுதியிலிருந்து கர்னல் ரீடுவின் ஆட்சிப் பகுதிக்குச் (சேலம் மாவட்டம்) சென்று விட்டார்களாம். காரணம், ஜமால் கான் (ஆமில்தார்?) அதிக வரி வசூல் செய்யத் தலைப்பட்டான். அதற்குக் காரணம், காரன்வாலிஸ் பிரபு திப்பு சுல்தானிடமிருந்து பெறவேண்டிய பணத்தை (ரூ.மூன்று கோடி) அதிக வரி வசூல் மூலம் பெற வேண்டியிருந்தது. முன்பு இவ்வூரில் அநேக வணிகர்களும் நெசவாளர்களும் இருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள்: முக்க செம்படவர், சாலியர் மற்றும் கைக்கோளர். முதலாமவர்கள் முழுவதுமாக இங்கிருந்து சென்று விட்டனர். அடுத்த இரு வகையினரில் எட்டு வீடுகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

‘இவ்விடத்தில் காவிரி ஆற்று நீர் மே 26ஆம்தேதி வாக்கில் உயரத் தொடங்குகிறது. * ஜூலை 13 முதல் ஆகஸ்ட் 13 வரை (ஆடி மாதம்) மழைக்காலம் தொடங்குவதற்கு முன், இங்கு ஆற்றில் அதிக நீர் ஓடும். (வட-கிழக்குப் பருவக்காற்றின்) மழைக் காலம் முன்னேறியதும் நீர் வரத்து குறைய ஆரம்பிக்கும்; ஆனால் ஆற்றில் ஜனவரி 11 வரை பரிசலில் செல்ல இயலாது.

* 1795, மே 22 ஆம் தேதியன்று காவிரியின் மறுகரையில், நெரிஞ்சிப்பேட்டைக்கு வடக்கில், சில மைல்கள் தூரத்திலிருந்த சோளப்பாடியிலிருந்து (சர்) தாமஸ் மன்றோ எழுதினார்; ‘நான் இப்போது காவிரிக் கரையில் இருக்கிறேன். இவ்விடத்தில் காவிரி 400 கஜ அகலமுள்ளது. கரை நிரம்ப ஆரம்பித்துள்ளது. இன்னும் ஒரு மாதத்தில், 20 அடி, உயரமுள்ள கரைகளின் உயரம் வரை நீர் நிறைந்து ஓடும்’ - The Life of Sir Thomas Munro/p.175. அக்காலத்தில் தென்மேற்குப் பருவக் காற்றினால் பெய்த மழை பற்றிய பதிவு இவை. தாமஸ் மன்றோ இன்னொரு பதிவையும் செய்துள்ளார். 1795 மே 17 இல் சோளப்பாடிக்கு வடகிழக்கிலுள்ள (சுமார் பத்து மைல்) மல்லிகுந்தத்தில் பிற்பகல் இரண்டு மணிக்குத் தொடங்கி இரண்டு மணி நேரம் அத்திக்கட்டிகளுடன் கன மழை பெய்ததாம். அது கோடை மழையாயிருந்திருக்கும்.

'நெரிஞ்சிப்பேட்டையில், காவிரியின் குறுக்கே மைசூர் ராஜா சிக்கதேவராயனின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சேட ராஜாவால் ஒரு அணை கட்டப்பட்டது. காவிரிக் கரையை யொட்டி இரு புறங்களிலும் அங்கிருந்து வாய்க்கால்கள் தெற்கு நோக்கிச் சென்றன. இடது புறக்கரையிலிருந்து ஐந்து மலபார் மணி நடை தூரத்திற்கும், வலதுபுறக் கரைப் பகுதியில் மூன்று மணி (நாழிகை) நேர தூரத்திற்கும் வாய்க்கால்கள் சென்றன. அவ்விரண்டு வாய்க்கால்களும் இப்போது அழிந்துள்ளன. காரணம் - அந்த அணை உடைந்து போன காரணத்தால். ஆனால் அது எப்போது உடைந்தது என்பது இப்போதி ருப்பவரில் அதிக வயதானவரின் நினைவிற்கும் தெரியவில்லை.

'சாம்பள்ளியிலிருந்து நெரிஞ்சிப்பேட்டை வரையுள்ள பாலமலைப் பகுதியில் மலையாளிகளின் பதினாறு கிராமங்கள் உள்ளன. மலைமீது அவர்கள் மைசூர்ப் பகுதியில் விளையும் புன்செய்ப் பயிர்களை விளைவிக்கின்றனர். அருகில் மா மற்றும் பலா மரங்கள் அதிகம் உள்ளன. அக்கிராமங்களில் தலா 5 முதல் 16 வரை வீடுகள் உள்ளன. ஆனால் அங்குச் செல்லக்கடின மாயிருப்பதால் நான் சென்று பார்க்கவில்லை. மேஜர் மாக்ளியாட்டின் ஜில்லாவில் (சேலம் மற்றும் வட கோயம்புத்தூர்) இது போன்று பல மலைகள் காவிரியின் இரு புறங்களிலும் உள்ளன. இங்குள்ள சமவெளிப் பகுதி மக்கள் அம்மலைகளில் வசிக்க இயலாது; அதுபோல மலையாளிகள் கீழே சமவெளியில் வசிக்க இயலாது. அவ்வாறு முயன்றால் இரு சாராருக்கும் உடல் நலம் பாதிக்கும்.

'அம்மலைகளில் மேல் கறுப்புக் கரடிகள் உள்ளன. அவை தொல்லை தராதவை. அவற்றின் முக்கிய உணவு: கரையான்கள், காட்டுப் பழங்கள், பனை மரங்கள்... பயிர்களில் சோளத்திற்கு மட்டும் அவை சேதம் விளைவிக்கின்றன. அக்கரடிக்கு யாரேனும் தொல்லை கொடுத்தால் அந்த நபரின் உயிருக்கு ஆபத்து நேரிடும். ஆனால் கரடி மனிதரை உண்பதில்லை. ஆகவே இக்கரடிகளின் நேர்முகமாக வந்து தொல்லை தருவது ஆபத்தானது. ஏனெனில், கரடியின் கண்கள் பின்னோக்கி

அமைந்துள்ளன. எதிரே வரும் மனிதனை கரடியால் உடனே பார்க்க இயலாது. மனிதன் பக்கத்தில் வந்து தொல்லை தர முற்படும்போது அதுவரை உணராத கரடி திடீரென்று தாக்கும்! இக்கரடி உடலுறுதி கொண்டது. புலியைக் கண்டும் அஞ்சாது. அது குகைகளிலும் பெரும் பாறைகளின் அடியிலுள்ள சந்துகளிலும் வசிக்கிறது. இவை உள்ளூர்வாசிகள் சொல்லக் கேட்டவை. இம்மாதிரியான விலங்கை நான் தென்னிந்தியா வில் பார்க்கவில்லை.

'இப்பகுதியில் 'கொத்துக்காடு'* விவசாயம் நடைபெறு கிறது. கொள்ளு, திணை, கம்பு ஆகிய பயிர்கள் விளைகின்றன..'

**அக்டோபர் 15:** 'பத்து மலபார் மணி தூரம் கடந்து **பவானி கூடலுக்குச்** சென்றேன். காவிரியின் வலது புறத்தில் உள்ள பகுதியில் மலை ஏதுமில்லை - பவானி ஆற்றுக்கருகி லிருந்து துவங்கிச் செல்லும் கூம்பு வடிவத்திலுள்ள (ஊராய்ச்சிக் கோட்டை) மலையைத் தவிர. குறைந்த அளவு நிலங்களில் மட்டும் விவசாயம் நடைபெறுகிறது. அதுவும் புன்செய் விவசாயம்தான். ஒரு இடத்தில் மட்டும் மூன்று ஏக்கரில் நெல் பயிரிட ஏற்பாடு நடக்கிறது. கம்பு அதிகமாகப் பயிரிடப் படுகிறது. காவேரிபுரத்திற்கு மேல் உள்ள பகுதிகளில் விளையும் கம்பைவிட இங்கு வளரும் கம்பு நன்றாக உள்ளது. (வழியில் கடந்து வந்த) **அம்மாப்பேட்டையில்** நாற்பது வீடுகள் உள்ளன; எல்லா வீடுகளிலும் ஆட்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் வியாபாரிகள். ஒரு இடத்திலும் விவசாயம் இல்லை. வழியில் இரண்டு சிறிய ஆறுகளைக் கடந்தேன் - சிற்றாறு மற்றும் பூனாச்சி. சிற்றாறில் ஒரு பெரிய நீர்த்தேக்கம் உள்ளது. தண்ணீர் வரத்து அதிகம்; ஆனால் அது உடைந்து போய் அக்கம் பக்கத்தில் வெள்ளச் சேதத்தை ஏற்படுத்தியது. அந்த நீர்த்தேக்கத்தைப் பழுது பார்க்கும் வேலை நடை பெறவில்லை. நீர் காணும் பகுதிகளில் பனை மரங்கள்

---

* மலையில் சரிவான பகுதியில், புன்செய்ப்பயிர்களை விதைத்து மண்வெட்டி அல்லது களைக்கொத்தால் கொத்துவதுதான் கொத்துக்காடு. கொல்லிமலையில் இப்போதும் கொத்துக்காடு வழக்கில் உள்ளது.

நடப்பட்டுள்ளன. பூனாச்சி ஆற்றிலும் ஒரு நீர்த்தேக்கம் உள்ளது. அதன் பாசனப் பகுதியில் நெல் நடப்படுகிறது. இப்பகுதியில் தெற்கு வடக்காகச் சுண்ணாம்புப் பாறைகள் தென்படுகின்றன. சிற்றாறின் கரைகளில் குவார்ட்ஸ் பாறைகள் உள்ளன.. என்று குறிப்பிட்டு வரும் புக்கானன் பவானியில் பார்த்தவற்றை, கேட்டவற்றை மிக விரிவாக எழுதியுள்ளார். பவானியிலிருந்து அவர் எழுதிய குறிப்புகள் மட்டும் 28 பக்கங்கள் அளவில் உள்ளன. அவரது முழுப் பயணத்திலும் அதிகக் குறிப்புகள் இடம்பெறும் ஊர்கள் மிகச் சில மட்டுமே! இதன் மூலம் கி.பி.1800இல் ஆங்கிலேயர் ஆட்சியின் துவக்கத்தில் பவானி பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணரலாம். இந்தப் பகுதியில் கர்னல் அலெக்சாண்டர் ரீடுவிற்கு 1799 இல் ஒரு சோதனையும் ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையின் விரக்திகூட அவர் தாய்நாட்டிற்கு நிரந்தரமாகத் திரும்பி விடும் எண்ணத்திற்கு வித்திட்டிருக்குமோ எனத் தோன்றுகிறது. அது ஆய்வுக்குரியது. விவரத்திற்கு வருவோம்..

**நா**ன்காம் மைசூர்ப் போரில் திப்பு சுல்தான் மே 4, 1799 அன்று இறந்தார். அந்தச் சமயத்தில் கர்னல் அலெக்சாண்டர் ரீடு காவேரிபுரம் கணவாயைத் தாண்டி சீரங்கப்பட்டணம் செல்லும் வழியில் ஹோனூர் என்னுமிடத்தில் முகாமிட்டிருந்தார். தனிப்படைப்பிரிவு ஒன்றைச் செலுத்தி, பாராமகாலிலிருந்து காவேரிபுரம் வழியாகச் சீரங்கப்பட்டணம் செல்ல அவருக்கு உத்தரவு. வழியில் காவேரிபுரம் கோட்டையை அவர் கைப்பற்றினார். அக்கோட்டைத் தலைவன் 140 வீரர்களுடன் சரணடைந்தான். (14.4.1799) கர்னல் ப்ரௌன் தாராபுரத்திலிருந்து புறப்பட்டு ஈரோடு வழியாக வந்து காவேரிபுரத்தில் ரீடுவின் படையுடன் சேர்ந்து கொள்ளப் பணிக்கப்பட்டிருந்தார். அதுபோல சீரங்கப் பட்டணம் பகுதியிலிருந்து ஜெனரல் ஃப்ளாயிட் தலைமையில் ஒரு படையும் ரீடுவின் படையுடன் காவேரிபுரம் கணவாயின் முனையில் சேர்ந்து கொள்ள தலைமைத் தளபதி ஹாரிஸ் உத்தரவிட்டிருந்தார்.

இவ்விரு படைகளில் ஒன்றாவது ரீடுவுடன் சேர்ந்து கொள்ளும் வரை அவர் அந்தப் பகுதியிலேயே முகாமிட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (14.4.1799 ஆம் தேதியிட்ட தலைமைத் தளபதி ஹாரிஸின் கடிதம்). ஆகவே ரீடு, காவேரிபுரம் கணவாய்ப் பகுதியிலேயே முகாமிட்டிருக்க வேண்டிய நிலை. அக்கணவாய்ப் பகுதியைக் கடந்து செல்வதில் ரீடுவின் படை மிகுந்த சிரமத்திற்குள்ளானது. மலைத்தொடர்கள், அடர்ந்த காடுகள், தண்ணீர்த் தேவை - போன்ற இடர்ப்பாடுகள். ரீடு கைப்பற்றிய காவேரிபுரம் பகுதியை ஆங்கிலேயப் படையொன்றின் பாதுகாப்பில் விடுத்து அவர் மேலே முன்னேறிச் செல்லத் திட்டம்.

அப்போது நடுக்காவலிலிருந்து ஐந்து மைல் மேற்கிலும் காவேரிபுரத்திலிருந்து 25 மைல் மேற்கிலும் உள்ள மோமிட்டி (Momity) என்ற ஊரில் ரீடு முகாமிட்டிருந்தார். அடுத்ததாக அவர் நகர்ந்த இடம், மார்த்தஹள்ளி, (Marat-hully) ரீடுவுடன் சேர்ந்து கொள்ள அனுப்பப்பட்ட படைகள் வந்த பிறகு ஹோனூர் (Honur) என்ற இடத்தில் அவர் முகாமிட்டார் (மே1). ஜெனரல் ஃப்ளாயிட்டும் அங்கிருந்தார். சீரங்கப்பட்டணத் திலிருந்த தலைமைத் தளபதி ஹாரிஸ் மே 1ஆம் தேதி மதராஸிற்குத் தகவல் தருகிறார். 'சீரங்கப்பட்டணத்தின் முற்றுகையில் முன்னேற்றம்.. ஜெனரல் ஃப்ளாயிட், கர்னல் ரீடு, கர்னல் ப்ரௌன் - இவர்களில் யாரிடமிருந்தும் தகவல் எதுவும் வரவில்லை.'

மே 2ஆம் தேதி தன் படை முன்னேறுவது குறித்துத் தகவல் அனுப்பினார் ரீடு. மே 4 ஆம் தேதி சீரங்கப்பட்டணம் கோட்டையினுள் நடந்த போரில் திப்பு வீர மரணமடைந்தார். ரீடுவிற்குத் தகவல் தெரிந்தது. 6 ஆம் தேதி ஹோனூரிலிருந்து கவர்னர் ஜெனரலுக்கு ரீடு கடிதம் எழுதினார். 'ஜெனரல் ஃப்ளாயிட் சீரங்கப்பட்டணம் நோக்கி நாளை படையுடன் கிளம்புகிறார். நான் பாராமகால் - சேலம் ஜில்லாவின் நிர்வாகத்தைக் கவனிக்க ஏற்பாடு செய்ய வேண்டிய நிலையிலுள்ளேன். எனது உதவி கலெக்டர்களில் மூத்தவரான ஜேம்ஸ் ஜார்ஜ் கிரஹாமை துணை சூப்ரின்டெண்டாக

நிர்வாகப் பொறுப்பைக் கவனித்துக் கொள்ளவும், வருவாய் வாரியத்திற்கான தகவல்/அறிக்கைகளை அவ்வப்போது அனுப்பி வரவும் பணித்துள்ளேன். ராணுவம் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனித்துக்கொள்ளுமாறு கர்னல் காமரூனைக் (Lt.col. Cameron) கேட்டுக் கொண்டுள்ளேன். அஞ்சட்டி துருகம், ஹூலியார் தூருகம், ரத்தினகிரி மற்றும் காவேரிபுரம் ஆகிய கைப்பற்றப்பட்ட கோட்டைகள் மற்றும் நமது ஆட்சிப் பகுதியின் எல்லைகளுக்குள் உள்ள கோட்டைகளை மேஜர் டவுட்டன் பொறுப்பில் விட்டுவிடலாம்.

'.... பாராமகால் - சேலம் ஜில்லாவுடனான எனது தொடர்பு இனி சில காலத்திற்கு இல்லாமல் போகும். அப்போது அப்பகுதியில் போர் ஏதேனும் ஏற்பட நேரிடலாம். கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை மற்றும் சங்ககிரி துருகம் தவிர மற்ற கோட்டைகளில் படைகள் குறைந்து போயுள்ளதால், கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள தளவாடப் பொருள்களை என்னுடைய படையுடன் சேர்த்து விடலாம்..

'....இந்தக் கடிதம் கிடைத்த பின், பாராமகால் - சேலம் ஜில்லாவின் பொறுப்புகளை என்னிடமிருந்து மாற்றி கர்னல் காமரூனிடமும் கேப்டன் கிரஹாமிடனும் ஒப்படைக்கத் தாங்கள் பரிசீலனை செய்யக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் திறமைசாலிகள்; பணிகளில் மிகுந்த ஊக்கம் காட்டுபவர்கள்.'

இவ்வாறான சூழ்நிலையில் மே 10, 1799 இல் ரீடு சீரங்கப்பட்டணத்தை அடைந்தார். திப்பு சுல்தான் மரணத்திற்குப் பிறகு மைசூர் ராஜ்ஜியத்தை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்பதில் ஆங்கிலேயர்களும், ஐதராபாத் நிஜாமும், மராத்தியரும் முனைந்தனர். அதைச் செய்து முடிக்கவும் தமக்குக் கிடைக்கும் பகுதிகளை ஒழுங்கு படுத்தவும், ஆங்கிலேயரின் தலைமைத் தளபதி ஜெனரல் ஹாரிஸ் தலைமையில் ஐந்து பேர் கொண்ட கமிஷனர்களின் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்திற்கு இரண்டு செயலாளர்கள். அவர்களில் ஒருவர் கொங்கு

நாட்டிற்குப் பரிச்சியமான கேப்டன் தாமஸ் மன்றோ, ரீடுவின் கீழ் சேலத்தில் உதவி கலெக்டராயிருந்த கேப்டன் மாக்ளியாட், திப்புவின் ராஜ்ஜியத்திலிருந்த பகுதிகளின் வருவாய்க் கணக்கைக் கண்டு, அவ்வப் பகுதிகளின் மதிப்பீட்டைக் காண நியமிக்கப் பட்டார். அப்போது அவரது ராணுவத் தகுதி: 'கேப்டன்'; நிர்வாகப் பதவி: சூப்ரின்டெண்ட் அந்தஸ்தில் - ரீடு, சேலம் ஜில்லாவில் வகித்து வந்த பதவிக்கான அந்தஸ்து.

***1795 முதல்*** திண்டுக்கல் ஜில்லா கலெக்டராக இருந்தவர் டி.பி. ஹுர்டிஸ். நிர்வாக அதிகாரி; ராணுவக்காரர் அல்ல. அவர் சிறிது காலம் ரீடுவின் கீழ் சேலம் ஜில்லாவில் உதவி கலெக்டராகப் பணியாற்றியவர்.

ஆகவே, திப்புவின் மறைவிற்குப் பின் சில வாரங்களில் ரீடுவின் உதவி கலெக்டர்களாக இருந்த,

- கேப்டன் கிரஹாம் சேலம் ஜில்லா கலெக்டர் பொறுப்பை நிர்வகித்து வந்தார்.
- கேப்டன் மாக்ளியாட் சூப்ரின்டெண்ட் அந்தஸ்தில் சீரங்கப்பட்டணத்திலிருந்தார் - ஜூலையில் சேலம் ஜில்லா - வட கோயமுத்தூர்ப் பகுதிகளின் கலெக்டராக நியமிக்கப்படவிருந்தார்.
- கேப்டன் தாமஸ் மன்றோ சீரங்கப்பட்டணத்தில் ஐவர் கமிஷனனின் செயலாளர்; கனரா ஜில்லாவின் கலெக்டராக நியமிக்கப்படவிருந்தார்.
- அலெக்சாண்டர் ரீடு நிரந்தர நிர்வாக உத்தியோகத்தில் இல்லை. இரண்டு மாத கால அளவிற்கு (மே-ஜூலை) லெஃப்டினண்ட் கர்னல் அந்தஸ்தில் ராணுவப் பணிகளை மட்டும் செய்து வந்தார். சீரங்கப்பட்டணத்திலிருந்து கிளம்பிச் சென்றவர் (17, மே) பெங்களூரு, நந்தி துருகம் போன்ற இடங்களைக் கைப்பற்றி அப்பகுதிகளின் பாதுகாப்பை மேற்கொண்டு வந்தார். 'சூப்ரின்டெண்ட் கலெக்டர் மற்றும் தனிப்படையின் லெஃப்டினண்ட் கர்னல்' என்று தான் எழுதிய கடிதங்களில் தன் பதவியைக் குறிப்பிட்டு வந்தார். மைசூர் ராஜ்ஜியத்தைப் பிரித்தல்

சம்பந்தமாக கர்னர்-ஜெனரல், தலைமைத் தளபதி ஆகியோர் அவரிடம் கேட்ட கருத்துகளுக்கு ஆலோசனை வழங்கி வந்தார். மே 27, 1799 இல் அவர் தலைமைத் தளபதி ஹாரிஸுக்கு எழுதிய கடிதத்தில் தாம் கைப்பற்றிய பெத்தநாயக்கன் துருகம், சூளகிரி, அஞ்செட்டி, காவேரிபுரம், ஆலம்பாடி, ஓசூர், பெங்களூரு, கபால துருகம், சாவன் துருகம், தியோன்ஹள்ளி, நந்தி துருகம் போன்ற 21 கோட்டைகளின் விவரங்களைத் தந்தார். அக்கோட்டைகளை ராயக்கோட்டையிலிருந்த படையும் (ரெஜிமெண்ட்), பெங்களூருலிருந்த படையும் (ரெஜிமெண்ட்) பாதுகாப்பதாகக் குறிப்பிட்டார்.

மே - ஜூன் மாதத்தில் அவர் செய்த முக்கியமானதொரு காரியம், பிரிஞ்சாரிகள் எனப்படும் லம்பாடிகள் மற்றும் ஐதராபாத் நிஜாமின் ஆட்கள் போர் முடிந்தபின் மக்களிடையே செய்த அட்டகாசங்கள், கொள்ளைகள், கால் நடைகளைக் கவர்தல், உயிர்க் கொலைகள் பற்றியது. குறிப்பாக பாராமகால் பகுதி, ராயக்கோட்டை-சீரங்கப்பட்டணம் மார்க்கப் பகுதிகள் சம்பந்தப்பட்டவை. பிரிஞ்சாரிகள் ஆங்கிலேயப் படைகளுக்கு உணவு தானியங்கள் வழங்குவதற்குத் துணைபுரிபவர்கள், முரட்டுத்தனம் கொண்ட அவர்கள் போர் முடிவுக்குப் பின் செய்த அட்டகாசங்களைத் தடுத்து, ஒழுங்குபடுத்துவதில் கவனம் செலுத்தி வெற்றி கண்டவர் ரீடு. படைகள் செல்லும் சமயத்தில் அவர்கள் புரிய முனைந்த கொள்ளைகளை ரீடு தடுத்து கட்டுக்குள் கொண்டு வருவதில் கருத்தாயிருந்தார். இதைப் புக்கானனும் சில இடங்களில் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

போருக்குப் பின் மைசூர் ராஜ்ஜியப் பிரிவினை சமாச் சாரத்தில் கவர்னர் ஜெனரல் மார்னிங்டன் கோமகன் ரீடுவுடன் கருத்துப் பரிமாற்றங்கள் கொண்டிருந்தார். அப்போது ஒரு கட்டத்தில் கவர்னர்-ஜெனரலுக்கு ரீடு எழுதினார் (பெங்களூரி லிருந்து/ஜூன் 10, 1799):

'தாங்கள் ராணுவத் தலைமையகத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் (மைசூர் நாட்டைப் பிரிப்பது சம்பந்தமாக) என்னு

டைய கருத்துகளைக் கேட்டனுப்புமாறு எழுதியிருக்கிறீர்கள். எனக்குத் தனியாக நீங்கள் எழுதியுள்ள கடிதத்திலும் அதே மாதிரியான விஷயங்களைக் கேட்டுள்ளீர்கள்.. மைசூர் நாட்டில் ஆங்கிலேயருக்கு மூன்றில் ஒரு பங்கு மட்டும் கிடைக்கும் என்றால் காவிரியின் தெற்கில் உள்ள பகுதி களையும், சீரங்கப்பட்டணம் தீவு உட்பட மலைத் தொடர் களுக்கு மேற்கிலுள்ள பகுதிகளையும் எடுத்துக் கொள்ளலாம்..'

அக்கடிதம் எழுதிய சமயத்தில் திப்புவிடமிருந்து மைசூர் ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியைப் பழைய மைசூர் ராஜாக்களின் வமிசாவளிக்கு வழங்குவது சம்பந்தமான கருத்து உருவாக வில்லை எனத் தெரிகிறது.

இவ்வாறு கவர்னர் ஜெனரலிடமும் தலைமைத் தளபதி ஹாரிஸூடனும் தொடர்பு கொண்டிருந்த ரீடுவிற்கு கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்து தொல்லை வந்தது. தான் எந்த நிர்வாக அந்தஸ்தில் உள்ளோம் என்ற சந்தேகம் அவருக்கு வந்தது. ஏனெனில், திண்டுக்கல் கலெக்டராக இருந்த டி.பி.ஹூர்டிஸை தலைமலை - மாதேஸ்வரன் மலைத் தொடர்களுக்குத் தெற்கிலும் காவிரிக்கு மேற்கிலும் உள்ள பகுதிகளின் (அன்றைய கோயமுத்தூர் ஜில்லா) நிர்வாகத்தை மேற்கொள்ளுமாறு மைசூர் ஆணையக் குழுவினர் உத்தர விட்டிருந்தனர். அதன் தொடர்ச்சியாக, ஹூர்டிஸ் அந்தியூர்க் கோட்டை ஆமில்தாருக்குச் (ரீடுவின் கீழ் இருந்தவர்) சில உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார். அந்த ஆமில்தார் ரீடுவிடம் அனுமதி கேட்டார். அதிர்ச்சியுற்ற ரீடு கவர்னர் ஜெனரலுக்கு எழுதினார் (23.6.1799) மைசூர் ஆணையர்களுக்கும் எழுதினார் - தன்னுடைய நிர்வாகத் தகுதியைத் தெளிவுபடுத்த வேண்டி, நான்காம் மைசூர்ப் போரின்போதும், போர் முடிந்த பின்னரும் கடுமையாக விசுவாசமாக உழைத்திட்டதற்குப் பரிசாக நேர்ந்த தன்னுடைய நிலையை எண்ணிப் பார்த்திருப்பார். அவரது உடல்நிலையும் அப்போது சரியத் தோன்றியது. ஒருவேளை, அந்த நிலைதான் அவரை நாடு திரும்ப முடிவெடுக்க வைத்ததோ?

ஜூலை 7 ஆம் தேதி, தான் நாடு திரும்ப எண்ணுவதாகவும், உத்தியோகத்தை ராஜினாமா செய்வதாகவும் எழுதினார். மதராஸ் கோட்டையிலிருந்து அனுமதி வந்தது. அவர் புரிந்த சேவைகளைப் பாராட்டுவதாகவும் அவர்கள் எழுதினர். ஆனால் அவர்கள் மேற்கொண்டு ஒரு உத்தரவையும் விடுத்தனர்: 'நீங்கள் பாராமகாலில் செய்த வருவாய் முறைகளைப் பற்றி அறிக்கை தந்து விட்டு நாடு திரும்புங்கள்' (கடிதம் நாள்: 13.7.1799) என்றார்கள். அதைச் சிரமேற் கொண்டு மதராஸிற்குச் சென்று எட்டு மாதங்கள் கடுமையாக முயற்சித்து, தனது புகழ் பெற்ற அறிக்கையை 4.4.1800 அன்று மதராஸ் கோட்டையில் சமர்ப்பித்தார். அத்துடன், சேலம் ஜில்லாவின் நில அளவையில் தனக்கு மிக்க உதவி புரிந்த சர்வேயர், மாதர் என்பவருக்கு ஆயிரம் பகோடா வெகுமதியையும் வாங்கித் தந்தார். ரீடுவின் அறிக்கையில் கண்டுள்ள அவரது கையொப்பமும், தேதியும், அவரது பதவியும் கீழே தரப்பட் டுள்ளன.



ரீடுவின் அறிக்கை முன்னூறு பக்கங்களுக்கு மேல் உள்ளது. அன்றைய (கி.பி.1800) பாராமகால் - சேலம் ஜில்லாவின் வருவாய், சமூக, பொருளாதார, இயற்கை வளம், மக்களின் நிலை போன்றவற்றைப் படம் பிடித்துக் காட்டுவது போல் உள்ளது. ஆகவேதான் டாக்டர் புக்கானன் சேலம் ஜில்லாவிற்குச் செல்லப்பணிக்கப்படவில்லை போலும். ரீடு செய்த வேலையைத் தேவையின்றி புக்கானன் செய்ய வேண்டுவ தில்லை என மேல் அதிகாரிகள் எண்ணியிருப்பார்கள்! ரீடுவின் அறிக்கை தரும் தகவல்களையும் அங்கங்கே காண்போம்...

## 7

# காவிரியின் கிழக்குப் பகுதிச் செய்திகள்

பவானியில் புக்கானன் காத்திருக்கும் வேளையில், அலெக்சாண்டர் ரீடு தரும் சில விவரங்களைக் காண்போம்:

அன்றைய சேலம் ஜில்லாவின் 'தலைக்காடு' பகுதியில் (தற்கால சேலம், நாமக்கல் மாவட்டங்கள்) சாலைகள் கரடு - முரடாகவும் குறுகலாகவும் இருந்தன. பாதைகளின் இருமருங்கிலும் வேலி, புதர்கள் மண்டியிருந்தன. ஆனால் 'பாராமகால்' பகுதியில் (ஏறக்குறைய தற்போதைய தருமபுரி, கிருட்டிணகிரி மாவட்டங்கள்) சாலைகள் சமமாகவும் அகன்றும் இருந்தனவாம். காரணம் நமக்குத் தெரிந்ததுதான்.

1800க்கு முந்தைய 200 ஆண்டுகளில் பாராமகால் பல போர்களின் நிலைக்களனாகத் திகழ்ந்தது. தொண்டை மண்டலம் - மைசூர்ப் பீடபூமி மற்றும் வடக்கிலிருந்து தெற்கில் மதுரை வரை செல்ல தொப்பூர் கணவாய் ஒரு முக்கிய வழி. ஆகவே, கிழக்கு -மேற்கு; வடக்கு - தெற்கு எனச் சாலைகள் அமைவதற்கு அவசியம் நேரிட்டிருக்கும். ஆம்பூரிலிருந்து திருப்பத்தூர் வழியாக ராயக்கோட்டைக்கும், திருப்பத்தூரி லிருந்து தருமபுரி வழியாகத் தொப்பூருக்கும், கிருட்டிணகிரி யிலிருந்து தொப்பூருக்கும் இடையேயிருந்த வழித்தடங்களில் மரங்கள் நடப்பட்டு, மைல் கற்கள் வைக்கப்பட்டன என்கிறார் ரீடு. (பத்தி 13) தலைக்காடு பகுதியிலும் இவ்வாறு சாலைகள் அமைக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ரீடுவின் கருத்தை அவருக்குப் பின் வந்த சேலம் கலெக்டர் மாக்ளியாட்டும் பிரதிபலித்தார். 1800 இல் அவர் மதராஸ் வருவாய்க் கழகத்திற்குக் கடிதம் எழுதினார்: 'தொப்பூருக்குத் தெற்கே மற்றும் காவிரிக்கு வடக்கே உள்ள பகுதியில் (தலைக்காடு) நல்ல சாலைகள் இல்லை!' சில வழித்தடங்களைக் குறிப்பிட்டு, சாலைகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற்குப் படைவீரர்களை அனுப்பிடவும் கோரினார். (கோயமுத்தூர் மேனுவல் 2/பக்.131). அச்சமயத்தில் கோயமுத்தூர் ஜில்லாவில் சாலைகள் இல்லை. ஒண்டித் தடங்கள்தான் இருந்தன. ஆகவே வண்டிகள் அதிகம் பயன்பாட்டில் இல்லை. பொதி மாடுகள், கழுதைகள் மூலம் சரக்குகள் எடுத்துச் செல்லப்பட்டன. சமயத்தில் பரிசல்கள் மூலம் ஆறுகளின் வழியில் எடுத்துச் செல்லப்பட்டன. (மேலது நூல். பக்.131)

சுங்கச் சாவடிகளில் சுங்கம் வசூலிக்கப் பட்டன. சுங்கச்சாவடிகள் பெரும்பாலும் சந்தை, கிராமங்களின் நுழைவாயில் மற்றும் சாலைகள் சந்திக்கும் இடங்களில் அமைந்திருந்தன. ஒரு வழித்தடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட சுங்கச் சாவடிகள் இருந்தால், ஒரு சாவடியில் வரி செலுத்தினால் போதும். அதற்கான சான்றிதழைப் பெற்றால், மற்ற சாவடிகளில் திரும்பவும் சுங்கம் செலுத்த வேண்டியதில்லை. உள்ளூரில் உற்பத்தியாகும் பொருள்களும், ஏற்றுமதி - இறக்குமதிப் பொருள்களும் சுங்கவரிக்கு உட்பட்டிருந்தன.

சேலம் ஜில்லாவில் மிக முக்கியமான உற்பத்தி மற்றும் வணிக நகரம் சேலம். அங்கிருந்து மாவட்டத்தின் வெவ்வேறு திசைகளில் ஐந்து முக்கிய சுங்கவரி வழித்தடங்கள் அமைந் திருந்தன. அவை: (பத்தி 228)

- கிழக்கில் ஆத்தூர்: 36 மைல் தூரம்; தென்னார்க்காட்டின் சின்ன சேலம் எல்லைக்குச் செல்ல; 5 சுங்கச் சாவடிகள். (வாழப்பாடி வழியாக)
- தென்கிழக்கில் தாத்தையங்கார் பேட்டைக்கு; திருச்சி ராப்பள்ளி நாட்டிற்குச் செல்ல ஒரு மார்க்கம்; 54 மைல்

தூரம்; 7 சுங்கச் சாவடிகள் (மல்லூர், மூணு சாவடி, பவித்திரம் வழியாக)

- தெற்கில் பரமத்திக்கு; காவிரிக் கரைக்குச் செல்ல ஒரு வழி; 42 மைல் தூரம்; 4 சுங்கச் சாவடிகள் (வெண்ணந்தூர், மணலி வழி)
- மேற்கில் பூலாம்பட்டிக்கு; காவிரியின் மறுகரையிலுள்ள நெரிஞ்சிப் பேட்டைக்குச் செல்ல; 34 மைல் தூரம்; 4 சுங்கச் சாவடிகள் (கொண்டலாம்பட்டி, இடைப்பாடி வழி),
- வடக்கில் தருமபுரிக்கு; 40 மைல் தூரம் ; 5 சுங்கச் சாவடிகள் (பூசாரிப்பட்டி, அதமன் கோட்டை வழி)

**சே**லத்தில் சாலைகள் இப்படியிருக்க, ஒரு பத்து ஆண்டுகள் கழித்து (1811), சேலம் - தருமபுரிப் பாதையில் நடந்ததொரு விபத்தைக் காண்போம்:

ஹென்றி பெவன் என்ற ஆங்கிலேயப் போர் வீரர் இங்கிலாந்திலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் சென்னைக்கு வந்து, அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று திருச்சியில் பணியாற்றி வந்தார். அவருக்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. சேலம் மற்றும் தருமபுரியிலிருந்து வரி வசூல் பணத்தை மதராசுக்கு எடுத்துச் செல்ல வேண்டி யிருந்ததால், அவரது படைப் பிரிவு பாதுகாப்பிற்காக உடன் செல்ல வேண்டும். திருச்சியிலிருந்து கிளம்பிய அவரது படைப் பிரிவினர், விலங்கு - பறவைகளை வேட்டையாடியவாறு வந்து தங்களது உணவுத் தேவைகளில் பெரும் பகுதியை நிறை வேற்றிக் கொண்டனர். வழியில் ஆடுகள் மிகக் குறைந்த விலையில் கிடைத்தனவாம். ஒரு பகோடாவிற்கு (ரூ.3.50) ஒன்பது ஆடுகள்; ஆனால் அந்த 9 ஆடுகளும் ஐரோப்பாவில் உள்ள மூன்று ஆடுகளுக்குத்தான் சமமானதாக இருக்கக் கூடியதாம்.

சேலத்தில் கலெக்டர் ஹார்கிரேவிடமிருந்து ஒரு லட்சம் ரூபாய் மற்றும் 20,000 தங்க பகோடாக்களும் (ரூ.70,000)

அவரிடம் ஒப்படைக்கப் பட்டன. தருமபுரியிலிருந்து மேலும் ஒரு லட்சம் ரூபாய்களை எடுத்துச் செல்ல வேண்டும். மொத்தத்தில் சுமார் 28,000 பவுண்டு நாணயங்கள்.. சேலத்தி லிருந்த ஊழியர்களும் மக்களும் அப்படைப் பிரிவினருக்கு உரிய மரியாதையைக் காட்டி, நன்கு உபசரித்தனராம். தொப்பூர் கணவாய் வழியே சென்று தருமபுரியை அடைய வேண்டும். பொதி மாடுகளின் முதுகுகளின்மீது ரூபாய்கள் மற்றும் பொற்காசுகள் கொண்ட மூட்டைகள் இருபுறமும் தொங்கவிடப்பட்டன. ஒவ்வொரு எருதின் மீதும் பத்தாயிரம் ரூபாய் அளவிற்கான காசுகள்.. அப்படியானால், பதினேழு எருதுகளுக்கும் மேல் சேலத்திலிருந்து பணமூட்டைகளைச் சுமந்து சென்றன. தொப்பூர் கணவாய் வழியே சென்றபோது இருட்டத் துவங்கி விட்டது. பாதை குறுகலானது. செங்குத்தான மேட்டுப் பாதை.. திடீரென்று மாடுகள் மிரள ஆரம்பித்தன, சத்தம் போட்டுத் திரும்பி ஓட முற்பட்டன. மிரண்ட மாடுகளின் மீதிருந்த மூட்டைகள் கீழே சரிந்து விழுந்தன. மாடுகள் மிரண்டதற்குக் காரணம் - புலி ஒன்று காட்டிய சொரூபமும் இருட்டில் பிரகாசித்த அதன் கண்களும். அந்தப் புலி, மாடு ஒன்றைக் கடித்துக் குதறியது.

படைப் பிரிவினர் இருட்டு வேளையில் என்ன செய்ய முடியும்? மாடுகளைப் பார்ப்பதா, புலியை விரட்டுவதா? இருட்டில் பதற்றத்துடன் வாளாவிருந்து விட்டனர். பொழுது புலர்ந்த பின்னர்தான் தெரிந்தது - மலைச்சரிவின் அடியில் மாடுகள் தென்பட்டன; பண மூட்டைகளும்தான்.

மேலும் தொடர்ந்தது, அந்தப் படைப் பிரிவு - மேற்கொண்டு சேதாரமின்றி..

ஹென்றி பெவன் தந்துள்ள தகவலின்படி, அன்று (1810) 2,70,000 ரூபாய்கள் சுமார் 28,000 பவுண்டிற்குச் சமமானது. அதாவது, சுமார் 9.50 ரூபாய்கள் = ஒரு பவுண்டு. புக்கானன் தந்துள்ள தகவலின்படி (பக்கம் 185/புத்தகம் இரண்டு) திப்புவின் காலத்தில், 18,000 பகோடாக்கள் 6,000 பவுண்டிற்குச் சமமானது. அதாவது, ஒரு பவுண்ட் = ரூ.9, (3 பகோடா × ரூ.3)

இந்தப் பண மாற்று விகிதம் சுதந்திர இந்தியாவில் 1966க்கு முன்பு 7.50 ரூபாய்கள் ஒரு பவுண்டிற்குச் சமமாயிருந்தது. இப்போது (2013, டிசம்பர்) 102 ரூபாய் = ஒரு பவுண்டு என்ற நிலைக்கு வந்துள்ளது. இப் பணமாற்று விகிதங்களின் பரிணாமங்களை மக்கள் தொகைப் பெருக்கம், தனி மனித வருமான வளர்ச்சி, நாட்டின் பொருளாதார முன்னேற்றம், உற்பத்திப் பொருட்களின் விருத்தி, மக்களின் வாங்கும் சக்தி, விலைவாசி உயர்வு போன்ற பல்வேறு பொருளாதாரக் கோணங்களில் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

முந்தைய அத்தியாயத்தில் பார்த்தபடி காவிரியின் மேற்குப் புறத்தில் புக்கானன் தொட்டுச் சென்ற சில விஷயங் களை ரீடு தரும் சில செய்திகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்!

'காவிரிக் கரையோரமுள்ள சேலம் ஜில்லாப் பகுதிக்குக் காவிரியின் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தத் தோதாக இல்லை. ஆனால் அது முற்றிலும் முடியாத காரியமாகவும் தென்படவில்லை. உதாரணமாக, நெரிஞ்சிப் பேட்டையில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணைக்கட்டின் எச்சத்திலிருந்து அது சாத்தியம் என்றே தெரிகிறது. காவிரி அங்கு 400 கஜ அகலமுள்ளது. அந்த அணை நமது பகுதியில் (கிழக்குப் பகுதியில்) 2796 ஏக்கர் நிலத்திற்கும், திப்பு சுல்தானின் பகுதியில் (மேற்குப் பகுதியில்) 800 ஏக்கர் நிலத்திற்கும் பாசன வசதியைத் தந்தது. 30.000 பகோடா செலவு செய்தால் அந்த அணையைப் பழுது பார்க்க முடியும்..' என்று ரீடு குறிப்பிட்டார் (பத்தி.10). ஆனால் அவர் எதிர்பார்த்த அந்த அணையின் பழுது பார்ப்பு மேற்கொள்ளப்படவில்லை.

ரீடு எழுதியதற்கு ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியின் கவனத்திற்கு வந்து ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் மேட்டூர் அணைத்திட்டம் உருவானதால் (மேட்டூர் அணை- நெரிஞ்சிப்பேட்டை இடையே ஐந்து மைல் தூரம்) இந்தக் கல்லணையின் மராமத்து வேலை நடக்கவேயில்லை. நாட்டின் சுதந்திரத்திற்குப் பின் வெட்டப்பட்ட காவிரி வாய்க்கால்களால் இப்பகுதிகள் (பவானி, மேட்டூர்,

இடைப்பாடி, சங்ககிரி, திருச்செங்கோடு தாலுகாக்கள்) பாசனத்திற்கு வழி கண்டிருக்கின்றன. நெரிஞ்சிப்பேட்டை அணையின் எச்சத்தை இன்றும் காணமுடிகிறது. அங்கிருந்து தெற்கில் சுமார் 500 மீட்டர் தொலைவில் காவிரியின் குறுக்கே தடுப்பணை ஒன்று கி.பி.2000க்கு முன்னர் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

'ஜூலை1796 இல் சர்வேயர்கள் கணித்தபடி காவிரியில் நீர் நிறையும்போது நாமக்கல் தாலுகாவின் ஒருவந்தூரிலிருந்து பவானி வரையான 52 மைல் தூரத்திற்குக் காவிரி 500 முதல் 900 கஜங்கள் வரை அகலமும் 4 முதல் 15 கஜங்கள் ஆழமும் உள்ளது; நீரின் வேகம் மணிக்கு 2½ முதல் 3 மைல் வரையுள்ளது. ஒருவந்தூரிலிருந்து திருச்சிராப்பள்ளி வரை காவிரி கணிசமாக அகலமாகவும் ஆழமாகவும் மிதமான வேகமாகவும் உள்ளது. மொளசிக்குக் கீழே காவிரியைச் சரக்குப் போக்குவரத்திற்கு முகத்துவாரம் வரைப் பயன்படுத்தலாம். ஏற்கனவேயுள்ள கம்பெனி எண்ணப்படி அப்பகுதியில் சர்க்கரை தயாரிக்கும் பணியை மேற்கொண்டால் மேலும் முக்கியத்துவம் கூடும். சேடர்பாளையத்திலிருந்து ஓடப்பள்ளி (ஈரோடு/பவானி எதிரில்) வரையுள்ள பகுதியில் 25 முதல் 30 டன் எடை தாங்கிச் செல்லும் படகுகளைச் செலுத்த முடியும்..' (பத்தி 7) என்றும் ரீடு குறிப்பிடுகிறார். மேட்டூர் அணை கட்டப்படாத காலம் அது என்பதை மனதில் கொள்வோம்.

அக்காலத்தில் (1800) காவிரியின் கிழக்கு, மேற்குக் கரைகளில் அமைந்திருந்த பரிசல்/படகுத் துறைகளையும் அவர் பட்டியலிட்டுள்ளார்.

| | படகுத் துறைகள் | |
|---|---|---|
| பகுதிகள் | கிழக்கிந்தியக் கம்பெனிப் பிரதேசம் | மைசூர்ப் பிரதேசம் |
| நங்கவள்ளி | நாகமலை | காவேரிபுரம் |
| | சோளப்பாடி | கவுண்டப்பாண்டி |
| | தெப்பம்பட்டி | சாம்பள்ளி |

| | | |
|---|---|---|
| | நல்லாக்கவுண்டம்பட்டி | நாட்டாமங்கலம் |
| | கோல்நாயக்கன்பட்டி | நம்பள்ளி |
| | பூலாம்பட்டி | நெரிஞ்சிப்பேட்டை |
| | நெடுங்குளம் | சிங்கம்பேட்டை |
| | கோனேரிப்பட்டி | சேந்தமுத்தம்பட்டி |
| | காவேரிப்பட்டி | கேசரிமங்கலம் |
| | கால்வாய் | கேசரிமங்கலம் |
| | புள்ளாக்கவுண்டம்பட்டி | பெரமச்சிப்பாளையம் |
| | கொமாரபாளையம் | பவானிகூடல் |
| சங்ககிரி | கலியனூர் | ஈரோடு |
| | சமயசங்கிலி | ஈரோடு |
| | பள்ளிபாளையம் | ஈரோடு |
| திருச்செங்கோடு | ஓடப்பள்ளி | ரெட்டிப்பாளையம் |
| | கொக்கராயன்பேட்டை | சாலம்பூர் |
| | புத்தூர் | காங்கேயம்பாளையம் |
| | இறையமங்கலம் | காளமங்கலம் |
| | மொளசி | அகரம் |
| | சோழசிராமணி | பாசூர் |
| | எளம்பிள்ளை | வண்டிப்பாளையம் |
| | அரசம்பாளையம் | கொளாநல்லி |
| | வரக்காட்டூர் | பார்வேலம்பாளையம் |
| பரமத்தி | ஆனங்கூர் | பாசிப்பாளையம் |
| | குன்னத்தூர் | பாசிப்பாளையம் |
| | கொந்தளம் | மாமரத்துப்பாளையம் |
| | வெங்கரை | - |
| | புதுப்பாளையம் | புகளூர் |
| | வேலூர் | புகளூர் |
| நாமக்கல் | மோகனூர் | மேலப்பாளையம் |
| | பள்ளப்பாளையம் | சேனப்பாடி |
| | ஒருவந்தூர் | சேனப்பாடி |

**வ**ந்த வழியில் புக்கானன் சந்தித்த சில சிறு தொல்லைகளில் ஒன்று தூரத்தைக் கணக்கிடுதல் பற்றியது. தூரத்தைக் குறிப்பிடும்போது, 'மலபார் மணி நேர தூரம், கோஸ் தூரம்,

சுல்தானி கோஸ் தூரம், நாழிகை தூரம்..' எனக் குறிப்பிட்டு வருகிறார். அதில் அவருக்கும் குழப்பம் ஏற்படுகிறது; நமக்கும் மயக்கம் தோன்றுகிறது. சேலம் ஜில்லாவில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி வந்த சமயத்தில் தூரத்தை அளப்பது இப்போதுள்ளதைப் போல மைல், பர்லாங், கிலோ மீட்டர் என்கிற அளவுகள் இருக்கவில்லை. தூரத்தைச் சொல்ல வரும்போது ஒரு நாழிகை தூரம் என்றொரு அளவை.. ஒரு நாழிகை= 24 நிமிடங்கள். முக்கால் நாழிகை தூரம் என்றால் ஒரு மைல் தூரம் என்ற கணக்காம். அதுவே வேகமாக நடப்பவருக்கும் சுமாரான வேகத்தில் நடப்பவருக்கும் வித்தியாசப்படுமல்லவா? பத்து மைல் தூரத்தை ஒரே சீரான வேகத்தில் கடக்கவும் இயலாது.

அதுபோல, நீட்டலளவைகளில் காலடி, மார் போன்ற அளவுகள் இருந்தன. அந்த அளவைகளும் இடத்திற்கு இடம் மாறுபட்டன. சேலம் ஜில்லாவில் சேலம், சங்ககிரி, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய நான்கு முக்கியப் பகுதிகளை மாதிரிகளாக எடுத்துக் கொண்டார் ரீடு. உதாரணமாக,

| | ஒரு காலடியின் நீளம் | ஒரு மார்நீளம் |
|---|---|---|
| சேலம் | 10 7/8 அங்குலம் | 6 3/8 அடிகள் |
| சங்ககிரி | 10 3/4 அங்குலம் | 7 1/6 அடிகள் |
| தருமபுரி | 10 1/2 அங்குலம் | 7 அடிகள் |
| கிருட்டிணகிரி | 10 18/19 அங்குலம் | 6 1/3 அடிகள் |

ஒரு காலடி நீளம் என்பது நெட்டையான மனிதனின் கால் பாதத்தின் நீளம்; ஒரு மார் என்பது ஒரு நெட்டை மனிதனின் இரண்டு கைகளையும் அகன்று விரித்தால் அவற்றின் நடு விரல்களுக்கிடையே உள்ள நீளம் ஆகும்.

மேற்கண்ட நான்கு மையங்கள் ரீடுவின் காலத்தில் நிலங்களின் வரி மதிப்பீட்டிற்கும் மாதிரிப் பகுதிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

நிலத்தின் பரப்பளவு அளவுகளும் தாலுகாக்களில் ஒரே விதமாக இல்லை. எடுத்துக்காட்டாக,

| | ஒரு சங்கிலி | ஒரு கோல் | ஒரு குழி | ஒரு ஏக்கர் |
|---|---|---|---|---|
| சேலம் | 64 மார்/ 408 ஆங்கில அடிகள் | | | |
| சங்ககிரி | 26 3/13 காலடிகள்/ 24' | | | |
| தருமபுரி | 27 3/7 காலடிகள்/ 24' | | | |
| கிருட்டிண கிரி | 38 காலடிகள்/ 33' (இது புன்செய் நிலத்திற்கான அளவை. நன்செய் நிலத்திற்கு வேறு அளவை) | 16½' | 33' = 33'×33' = 1089 சதுர அடி | 40 குழி. அதாவது 1089×40 = 43560 சதுர அடிகள் |

மைசூர் ராஜா (சிக்க தேவராயன்) நில அளவையை ஆரம்பித்தபோது 'குழி' என்னும் அளவையை (1700க்கு முன்பு) அறிமுகப்படுத்தியதாக ரீடு குறிப்பிடுகிறார்.

மேற்குறித்த அளவைகளில் கிருட்டிணகிரியின் அளவுகள் ஆங்கில முறைக்கு ஒத்துப் போனதால், அந்த அளவைகளைக் கணக்கில் கொண்டு வந்ததாக ரீடு தெரிவிக்கின்றார். 43, 560 சதுர அடிகள் கொண்டது ஒரு ஏக்கர் என்ற அவரது அளவை இன்றளவும் நிதர்சனம்.

**1800**ஆம் ஆண்டின் சேலம் ஜில்லா ஆட்சியைக் கவனிக்க முற்படும்முன், 1799 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாறுதலைக் கவனிப்போம்:

1799- நான்காம் மைசூர்ப் போரில் திப்பு சுல்தான் இறந்தார். அதன் பின்னர் கோயமுத்தூர் ஜில்லாப் பகுதிகள் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கிடைத்தது. சேலம் ஜில்லா ஆட்சி

யர்களில் ஏற்பட்ட மாற்றங்கள் கோயமுத்தூர்ப் பகுதிகளிலும் பிரதிபலித்தன.

*1799 ஜூலை 6 ஆம் தேதியில் மதராஸ் வருவாய்க் கழகம் வெளியிட்ட ஆணையின்படி,*

நொய்யல் ஆற்றுக்குத் தெற்கிலுள்ள கோயமுத்தூர்ப் பகுதிகள் ஒரு கோட்டமாக அறிவிக்கப் பட்டது. அதன் தலைநகரம் தாராபுரம். 1790 முதல் ஜில்லாவாக இருந்த திண்டுக்கல் கலெக்டரின் (டி.பி. ஹுர்டிஸ் - T.B. Hurdis) மேற்பார்வையில் அக்கோட்டம் இணைக்கப்பட்டது.

அதுபோன்று, நொய்யல் ஆற்றுக்கு வடக்கில் உள்ள கோயமுத்தூர்ப் பகுதிகள் (வடக்கில் கொள்ளேகாலம், மேற்கில் கோயமுத்தூர் வரையுள்ள பகுதிகள்) ஒரு கோட்டமாக உருவாக்கப்பட்டது. அதன் தலைநகரம் பவானி.

அலெக்சாண்டர் ரீடுவின் கீழ் ஒன்றாக இருந்த சேலம் ஜில்லா அப்போது இரண்டாகப் பிரிக்கப் பட்டது. அதன்படி, தற்போதைய சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் அடங்கிய ஒரு ஜில்லாவும் (சேலம் ஜில்லா), தற்காலத் தருமபுரி மற்றும் கிருட்டிணகிரி மாவட்டங்கள் மற்றும் திருப்பத்தூர்ப் பகுதிகள் அடங்கிய பகுதிகளைக் கொண்டு ஒரு ஜில்லாவும் (கிருட்டிணகிரி ஜில்லா) உருவாயின. சேலம் ஜில்லாவின் கலெக்டராக வில்லியம் மாக்ளியாட் நியமிக்கப் பட்டார். அவரது நிர்வாகத்தின் கீழ் பவானி கோட்டம் கொண்டு வரப்பட்டது. கிருட்டிணகிரி கலெக்டராக ஜார்ஜ் கிரஹாம் நியமிக்கப் பட்டார். மாக்ளியாட்டும் கிரஹாமும் ரீடுவின் கீழ் உதவி கலெக்டராகப் பணியாற்றியவர்கள். ஹுர்டிசும் சேலம் ஜில்லாவில் ரீடுவிற்குக் கீழ் நிலையில் பணியாற்றியவர்.

பவானி எவ்வாறு வடகோயமுத்தூரின் தலைமையிட மாயிற்று? ஆச்சரியக் குறி வெளிப்படும். இதற்கு விடைதேட கம்பெனி ஆட்சியின் நிர்வாக முறையைக் காணவேண்டும்.

*1799 ஆகஸ்ட் 14 ஆம் தேதியன்று சேலம் கலெக்டருக்கு அரசாங்கம் எழுதிய கடிதத்தின்படி, ஜில்லாவின் மத்தியில்*

அமைந்துள்ள எந்த முக்கிய ஊரில் கலெக்டர் தங்க விருப்பம் கொண்டுள்ளார் எனக் கேட்டது. அவ்வாறு தங்கும் ஊரின் பெயரில் ஜில்லாவின் பெயரைக் குறிப்பிட ஏதுவாக இருக்கும் எனவும் தெரிவித்தது. சேலம் கலெக்டராக இருந்த மாக்ளியாட் 1801 வரை அப்பதவியில் தொடர்ந்தார். பின்னர் அவர் மலபார் கலெக்டராக மாற்றப் பட்டார். (1801, செப்டம்பர்) வட கோயமுத்தூருக்கு உதவி கலெக்டர் நியமிக்கப்பட்டார். ஜார்ஜ் ரீடு என்பவர் உதவி கலெக்டராக இருந்தார். பின்னர் வில்லியம் கேரோ நியமிக்கப் பட்டார். மலபாருக்கு மாக்ளியாட் மாற்றப்பட்டபோது முதன்மைக் கலெக்டர் (prircipal collector) என்ற அந்தஸ்தில் சென்றார். அங்கிருந்தபடியே வடக்குக் கோயமுத்தூர் கோட்ட நிர்வாகத்தையும் சில காலம் (1803 வரை) அவர் பார்த்து வந்தார்.

பவானி கோட்டத் தலைமையிடமாக அமைந்ததற்கு மாக்ளியாட்டின் விருப்பம் காரணமாயிருந்திருக்கும். காரணம், சேலம் ஜில்லாவிலிருந்து காவிரியைக் கடந்தால் பவானி நகரம். கிழக்கில் தலைவாசல் முதல் மேற்கில் கோயமுத்தூர் வரை நீண்டிருந்த பகுதியை நிர்வகிக்க சேலமும் பவானியும் அவருக்கு ஏற்புடையதாக இருந்திருக்கும், பவானியிலிருந்து அவர் பல கடிதங்களை மதராஸ் கோட்டைக்கு அனுப்பியிருக்கிறார். அங்கிருந்து வந்த கடிதங்கள் (1802, 1803), 'கலெக்டர், வட கோயமுத்தூர் கோட்டம்' என்று எழுதப்பட்டன, கடித உறைகளும் கோயமுத்தூருக்குச் சென்று, பின்னர் 'பவானி'க்கு மாற்றி அனுப்பப் பட்டன. *

புக்கானன் வட கோயமுத்தூர்ப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்தபோது அவர் மாக்ளியாட்டை அப்பகுதிகளில் சந்திக்க வில்லை என்றே தெரிகிறது. தாராபுரம் கோட்டத்தில் அவர் திண்டுக்கல் கலெக்டர் ஹுர்டிசைச் சந்தித்திருக்கிறார்.

பவானியிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் காவிரியைத் தாண்டி கிழக்குத் திசையில் அமைந்துள்ள ஊர் சங்ககிரி. சேலம்

* நூலாசிரியரின் (2) பார்வையில் பட்டன.

ஜில்லாவின் ஒரு முக்கியமான கோட்டை கொண்டுள்ள ஊர். ஆங்கிலேயர் ஆட்சியில் ராணுவத்தளகர்த்தரின் தலைமையிடமாக இருந்த ஊர். அன்றைய நாளில் கொங்கு நாட்டில் வெள்ளையர்களின் பரிட்சயம் அதிகம் கொண்டிருந்த ஊர்களில் சங்ககிரியும் ஒன்று. பலமான கோட்டை இருந்தும் 18 ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்பும்கூட முக்கியமான போர் எதுவும் சங்ககிரிப் பகுதியில் நடந்ததாகத் தெரியவில்லை.

அலெக்சாண்டர் ரீடு சேலம் ஜில்லாவின் ஆட்சியரான போது (1792) ஜில்லாவிலிருந்த ராணுவப் படைகளும் அவரது மேற்பார்வையின் கீழ் வந்தன. கிருட்டிணகிரி, பென்னாகரம் மற்றும் சங்ககிரியில் 'பட்டாலியன்' என்ற அளவில் ராணுவப் படைப் பிரிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டன. 22 வது 'மதராஸ் பட்டாலியன்' என்ற படைப்பிரிவு சங்ககிரியில் அமைந்தது. அதன் தலைவராக கேப்டன் ஜேம்ஸ் ஓரம் என்பவர் பொறுப்பேற்றார். அப்படையின் வீரர்களின் மத்தியிலும் உள்ளூர் மக்களிடமும் மதிப்பைப் பெற்றிருந்தார். சங்ககிரியில் தற்போது அமைந்துள்ள பயணியர் மாளிகை உள்ள பாறைமீது அவரது இருப்பிடம் இருந்தது. ஆங்கிலேய அதிகாரிகளும் ராணுவ அதிகாரிகளும் தங்குமிடமாகவும் அது திகழ்ந்தது. அவர் சங்ககிரியிலிருந்து மாறுதலில் சென்ற பின்பு (1797) பல ஆண்டுகள் கழித்தும் அவரது மாளிகையையும் பெயரையும் ராணுவ வீரர்களும் மக்களும் நினைத்துப் பார்த்தனர் என்று 1824 இல் கர்னல் வெல்ஷ் என்ற ராணுவ அதிகாரி சங்ககிரியிலிருந்து குறிப்பிட்டுள்ளார். ஓரம் 1799 இல் மறைந்தார். அவருக்குப் பின் மேஜர் கும்பேஜ் என்பவர் அந்தப் படைப்பிரிவின் பொறுப்பை ஏற்றார்.

நவம்பர் 1799 இல் அன்றைய கவர்னர் கிளைவ் பிரபுவின் (ராபர்ட் கிளைவின் மகன்) திட்டப்படி 'தலைக்காடு' பகுதிக்கு ராணுவத் தலைமையிடமாக சங்ககிரி உருவாக்கப்பட்டது. ஒரு பட்டாலியன் அங்கு நிறுவப்பட்டது. பாராமகால் பகுதியின் பாதுகாப்பிற்காக கிருட்டிணகிரியிலும், பாலக்காட்டின் (ஓசூர்,

தேன்கனிக் கோட்டைப் பகுதிகள்) பாதுகாப்பிற்காக ராயக் கோட்டையிலும் பட்டாலியன்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. சங்ககிரி பட்டாலியனின் கீழ் 'கம்பெனி'கள் எனப்படும் ஐந்து சிறு படைப் பிரிவுகள் சேலம், நாமக்கல், ஆத்தூர்ப் பகுதிகளி டையே நிறுத்தப்பட்டன. ஈரோடு பகுதி சங்ககிரிப் படைப் பிரிவின் மேற்பார்வைக்குட்பட்டிருந்தது. தீரன் சின்னமலை சங்ககிரிக்குக் கொண்டு வரப்பட்டு அக்கோட்டையில் தூக்கிலிடப்பட்டதன் ஒரு பின்னணியை நாம் இங்கே உணரலாம். சேலத்தில் நிறுவப்பட்ட படை லெப்டினன்ட் மாக்டொனால்ட் என்பவரின் தலைமையில் இருந்தது. இவர் பின்னர், கேப்டன், மேஜர், கர்னல் என்ற அந்தஸ்துகளைப் பெற்றவர். 1799 நான்காம் மைசூர்ப் போரில் இறந்தார். இவர் பெயரால்தான் மகுடஞ்சாவடி என்கிற ஊர் அப்பெயரைப் பெற்றது. அவ்வூருக்கருகில் வழிப்போக்கர்களுக்காகச் சத்திரம் ஒன்றைக் கட்டினார். அதன் விளைவாகப் புதிய ஊர் ஒன்று பிறந்தது.

சங்ககிரியில் நிறுத்தப்பட்ட படைப்பிரிவு ஆரம்பகட்ட ஆங்கிலேய ஆட்சியின் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டப் பெரிதும் பயன்பட்டது. கொங்கு நாட்டில் நடைபெற்ற மக்கள் கிளர்ச்சிகளைப் (பரமத்தி அப்பாவு, தீரன் சின்னமலை, விருப்பாட்சி கோபால் நாயக்கர் போன்றோர் தலைமையில் நடைபெற்ற மக்கள் புரட்சிகள்) பல்வேறு வழிகளில் சமாளிக்கவும், போலிஸ் பிரிவு உருவாகாத அக்கால கட்டத்தில் மக்களை அஞ்சிடச் செய்யவும் அப்படைப் பிரிவு பெரிதும் துணையாக நின்றது. சங்ககிரிக் கோட்டையின் அமைப்பும், பலத்த பாதுகாப்பும் புரட்சியாளர்களைச் சிறைப் பிடிக்கவும், பாதுகாப்பில் வைக்கவும் உதவின. தங்க, வெள்ளி நாணயங் களாக வசூலாகிய வரிப்பணத்தில் செலவு போக மிச்சத்தை சென்னை, திருச்சி, மைசூர் போன்ற ஊர்களுக்கு அனுப்பி வைக்கவும் பாதுகாப்பு தேவைப்பட்டது. அதற்கும் இந்த இராணுவ வீரர்கள் தேவைப்பட்டனர். இன்றைய நிலையும் அப்படித்தானே! இன்றும் அரசின் பணத்தை வங்கியிலிருந்து

எடுத்து வர, கொண்டு செல்ல போலிஸ் பாதுகாப்பு தேவையல்லவா?

முக்கிய ராணுவக் கேந்திரமாக இருந்த சங்ககிரி அடுத்த 25 ஆண்டுகளுக்கு அந்த நிலையைத் தக்க வைத்துக்கொண்டது. அதன் விளைவாகவும், அதற்கு முன்பிருந்த மன்னர்கள் காலத்திலும் சங்ககிரி ஒரு முக்கிய அலுவல் கோட்டமாகவும் அமைந்திருந்ததால், இன்றுவரை சங்ககிரியில் பல கோட்ட அலுவலகங்கள் தொடர்கின்றன. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், சங்ககிரி ஒரு தாலுகாவாக இல்லாத காலத்திலும் (1860க்குப் பிறகு) அது கோட்ட அலுவலகத்தின் தலைமையிடமாக இருந்து வந்துள்ளது.

1823 இல் சங்ககிரியில் இருந்த படைப்பிரிவு சேலத்திற்கு மாற்றப் பட்டது. 1824 இல் ஆத்தூர் தனது ராணுவக் கேந்திர அந்தஸ்தை இழந்தது. 1832க்குப் பிறகு சங்ககிரியும் கிருஷ்ண கிரியும் ராணுவத் தலங்கள் என்ற பெயரை முற்றிலும் இழந்தன.

இனி, பவானியில் காத்திருக்கும் புக்கானனைப் பார்க்கச் செல்வோம்...

○

# 8

# பவானி கூடலில்

'பவானி கூடலில் காவிரியில் பவானி கலக்குமிடத்தில் ஒரு அழிந்த கோட்டை உள்ளது. அங்கே இரண்டு புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன; ஒன்று விஷ்ணுவிற்கும் மற்றொன்று சிவனுக்குமாக; கட்டி முதலி என்ற பாளையக்காரர் கட்டினார்; அவர் மதுரை ராஜாக்களின் கீழிருந்த சிற்றரசர். அருகிலுள்ள பகுதிகளை ஆண்டார். மதுரை ராஜாக்களின் ஆட்சியில் சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூருக்குத் தெற்கிலுள்ள பகுதிகள் இருந்தன. அவர்களைப் பொதுவாக 'அங்காரகா' (Angaraca) என்றழைப்பர்; சேர, பாண்டிய நாடுகளில் அவர்களின் ஆட்சி நிலவியது.

'இங்குள்ள ஒரு கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் அக்கோயிலின் தோற்றம் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் மாதம், நாள், (தமிழ்) ஆண்டின் பெயர்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதால், அக்கோயில் கட்டி முடிக்கப்பட்ட ஆண்டைக் கணக்கிடுவதில் சிரமம் உள்ளது. இங்குள்ள படித்த பிராமணர்களுக்கும் அது தெரியவில்லை; அவர்களுக்கு இப்பகுதி எப்போது மைசூரின் ஆளுகையின் கீழ் வந்தது என்பதும் தெரியவில்லை. இக்கோயிலைக் கட்டியவர் கட்டி முதலி என்பதைத் தவிர அவரைப் பற்றி அவர்களுக்குத் தெரிந்த ஒரு விஷயம், அவர் மதுரை ராஜாவின் தளவாய் ராமப்பையரின் சமகாலத்தவர் என்றும், அவர் மதுரைக்குத் திறை செலுத்துபவர்

என்பதுவும்தான்..' இவ்வாறு பவானியைப் பற்றி அறிமுக உரையாகக் குறிப்பிடுகிறார் புக்கானன். அவர் கூறும் மேலும் சில விவரங்கள்:

• பவானியின் புறநகர்ப் பகுதி வளர்ச்சி குன்றியுள்ளது. ஆனால் அவ்வூர் மேஜர் மாக்ளியாட்டின் கீழுள்ள பகுதிகளுக்குத் தலைமைக் கச்சேரி (அலுவலகம்) உள்ள ஊராகியுள்ளதால் விரைவாக வளர்ச்சியைக் காண உகந்த சூழ்நிலை நிலவியது.

• புதிதாகக் கட்டடங்களைக் கட்டும் திட்டங்களை மாக்ளியாட் அனுமதித்தார். வீடுகளைக் கட்ட முன்வருபவர் களுக்குக் கடன் வழங்கவும், அதைச் சுலபத் தவணைகளில் திருப்பிச் செலுத்தவும் அவர் அனுமதி தந்தார். பல புதிய வீடுகள் கட்டப்பட்டு வந்ததைப் புக்கானன் கண்டிருக்கிறார். தான் அதுவரை வந்த வழியில் அதுபோன்ற நிலையை வேறு இடங்களில் காணவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

'அக்டோபர் 16, 17 தேதிகளில் நான் பவானி கூடலில் இருந்தேன். சுற்றுப்புறங்களைப் பார்வையிடவும், மழையால் நனைந்து சேதாரமுற்றுள்ள எனது கூடாரங்களைப் பழுது பார்க்கவும் ஏற்பாடு செய்ய முனைந்தேன். மேஜர் மாக்ளியாட் அவரது இல்லத்தில் இல்லாதது ஒரு குறை. அவரது உதவி கிடைத்திருந்தால் மேலும் பல தகவல்கள் கிடைத்திருக்கும். இப்பகுதியில் நிலவும் ஏழ்மையும், அதன் விளைவாக மக்களின் ஒத்துழைப்பு கிடைக்காததும் எனது உடைமைகளைப் பழுது பார்ப்பதில் சுணக்கம் உள்ளது. எனது ஊழியர்களுக்கும் கால்நடைகளுக்கும் உணவு கிடைப்பதிலும் சிரமம் இருக்கிறது. எந்தப் பொருளாயிருந்தாலும் மிக அதிக விலை தரவேண்டியுள்ளது. இருப்பினும் அவற்றைச் சுலபமாக வாங்கவும் முடிவதில்லை. மதராஸ் அரசாங்கம் எங்களுக்குத் தேவையான உதவிகளை அளித்திட உத்தரவிட்டிருந்தாலும், உள்ளூர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாததால், உதாசீனம் பற்றிக் கலெக்டரிடம் புகார் செய்வோம் என்று

பயமுறுத்தினால் மட்டும் வாங்க முடிகிறது. இங்கிருந்து சீரங்கப்பட்டணத்திற்குச் செல்லும் பொருட்களை அங்குக் குறைந்த விலையில் வாங்கினேன். அதே பொருளுக்கு இங்கே அதிக விலை தரவேண்டியுள்ளது. இவ்வாறான நிலையை இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் ஐரோப்பியர்கள் அடிக்கடி எதிர் கொள்கிறார்கள். உள்ளூர் மக்களுக்குத் தொல்லை விளைவிக்கக்கூடாது என்று என்னுடன் வருபவர்களுக்குக் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளேன். அத்துடன் எந்தப் பொருட்களுக்கும் உரிய விலை தராமல் அவற்றை அவர்கள் பெறக்கூடாது என்பதை நான் கவனித்து வருகிறேன்..' என்று உள்ளூர் நிலைமைகளையும் தாங்கள் படும் சிரமங்களையும் புக்கானன் எடுத்துக் கூறியுள்ளார்.

**பருவகாலங்கள்:**

ஆறு பருவ காலங்களைப் பற்றி விவரமறிந்த ஒருவர் தெரிவித்தாராம். அவை:

*1* வசந்த காலம்: சித்திரை, வைகாசி மாதங்கள். காற்று தணிவாயிருக்கும். மேற்கிலிருந்து புயல், இடி, மழை வரும். அத்திகட்டி மழையைக் காணலாம். மரங்கள் பூக்க ஆரம்பிக்கும்.

*2.* வெயிற் காலம்: ஆனி, ஆடி மாதங்கள். எட்டு அல்லது பத்து நாட்களுக்கொரு தடவை மேற்கிலிருந்து மழை பெய்யும். சூறைக்காற்று வீசும், இடி இடிக்கும், அத்திக்கட்டி இராது. மேற்கிலிருந்து பலத்த காற்று வீசும்.

*3.* மாரிக் காலம்: ஆவணி புரட்டாசி மாதங்கள். இந்தப் பருவத்தில் ஐந்தாறு நாட்களுக்குப் பலத்த காற்றும், இடைவிடாத மழையும் மேற்கிலிருந்து வருகின்றன.

*4.* கூதிர் காலம்: ஐப்பசி, கார்த்திகை மாதங்கள். ஐப்பசியில் ஆறு அல்லது எட்டு நாட்களுக்கு ஒரு முறை பெரும் மழை வடகிழக்கிலிருந்து வருகிறது. நாள் முழுவதும் மழை பெய்கிறது. காற்று குறைவாக வீசுகிறது.

வெயில் குறைவு என உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றனர். கார்த்திகையில் இரண்டு, மூன்று நாட்களில் மட்டும் கிழக்கிலிருந்து மழை வருகிறது. குளிர்ந்த காற்று வீசுகிறது. மாத இறுதியில் பனி பொழிகிறது.

5. பின்பனிக் காலம்: மார்கழி, தை மாதங்கள். மார்கழி மாத மத்தியில் பகற் பொழுதில் மூன்று, நான்கு மணி நேரத்திற்குத் தூறல் போடுகிறது. மற்ற நேரங்களில் பனிப்பொழிவு அதிகம்.. குளிர் காற்று வீசுகிறது.

6. இலையுதிர் காலம்: மாசி, பங்குனி மாதங்கள்: பங்குனி இறுதியில் மேற்கிலிருந்து பலத்த சத்தத்துடன் காற்றும், இடியும், மழையும் வருகின்றன. மற்ற காலத்தில் வானம் தெளிவாகவுள்ளது. வெப்பம் ஆரம்பமாகிறது. தெற்கிலிருந்து தென்றல் காற்று வீசுகிறது.

**அளவைகள்:**

சேலம் ஜில்லாவில் கர்னல் ரீடு கொண்டு வந்த நீட்டலளவை, முகத்தலளவை போன்ற சீரான அளவுகளை இப்பகுதியில் கொண்டு வர மேஜர் மாக்ளியாட் முனைந்துள் ளார் எனத் தெரிவிக்கிறார் புக்கானன். ஆனால், புதிய ஆட்சி ஒன்றரை ஆண்டு காலம் மட்டுமே நடந்துள்ளதால் இந்த அளவைகள் முற்றிலும் நடைமுறைக்கு வரவில்லையாம். பவானி பகுதிகளில் மாக்ளியாட் கொண்டு வந்த மாறுதல்களில் சிலவற்றைக் காண்போம்:

நில அளவை: நஞ்சை நிலங்கள், 24'×24' = 576 சதுர அடிகள் = ஒரு குழி. நூறு குழிகள் = ஒரு காணி = 57,600 சதுர அடிகள். ஆகவே, ஒரு காணி = 1.322 ஏக்கர்

**எடை அளவை:**

| | | |
|---|---|---|
| 52 தானியங்கள் | = | 1 ஸ்டார் பகோடா |
| 10 ஸ்டார் பகோடா | = | 1 பலம் |
| 8 பலம் | = | 1 சேர் (0.594 ராத்தல்) |
| 5 சேர் | = | 1 வீசை |
| 8 வீசை | = | 1 மணங்கு (23.76 ராத்தல்) |

இந்த அளவைகளில்தான் வெற்றிலை, மிளகு, வெல்லம், புளி, சீரகம், வெந்தயம், கடுகு, சர்க்கரை, வாசனைப் பொருட்கள், பருத்தி நூல், கச்சாப் பட்டு, கசகசா, பூண்டு, இஞ்சி, நெய், மருந்து ஆகியவை விற்கப்பட்டனவாம்.

**நாணயங்கள்:**

சுல்தானி ரூபாய் என்ற வெள்ளி நாணயம் கணக்கில் இருந்தது. அரை, கால், அரைக்கால், வீசம் என்ற சில்லரை ரூபாய்க் காசுகள் இருந்தன. பதினாறில் ஒரு பாகம், வீசம்.பல விதமான பிற நாணயங்களும் புழக்கத்தில் இருந்தன. ஆனால் அவற்றிற்கும் சுல்தானி ரூபாய்க்குமிடையே மதிப்பு நிர்ணயிக்கப்பட வில்லை. அதைப் பணமாற்றம் செய்பவர் (ஷராப்) பார்த்துக் கொண்டார்.

புக்கானன் வந்தபோது வெளிச் சந்தையில் நிலவிய பிற நாணயங்களுக்கான மாற்று விகிதத்தைத் தருகிறார்:

**தங்கக் காசுகள்:**

| | |
|---|---|
| வராகன் சுல்தானி அல்லது திப்புவின் பகோடா | = 3.625 சுல்தானி ரூபாய் |
| பகதூரி வராகன் அல்லது ஐதரின் பகோடா | = 3.625 சுல்தானி ரூபாய் |
| பூ வராகன் அல்லது ஸ்டார் பகோடா | = 3.25 சுல்தானி ரூபாய் |
| பரங்கியர் வராகன் அல்லது பரங்கிப்பேட்டைப் பகோடா | = 2.75 சுல்தானி ரூபாய் |
| சுல்தானி பணம் | = 0.2335 சுல்தானி ரூபாய் |
| வீரராயப் பணம் | = 0.2222 சுல்தானி ரூபாய் |

**வெள்ளிக் காசுகள்:**

| | |
|---|---|
| சுல்தானி ரூபாய் | = 1.00 |
| பாண்டிச்சேரி ரூபாய் | = 1.00 |
| கம்பெனி ரூபாய் (மதராஸில் அச்சிட்டவை) | = 0.9062 சுல்தானி ரூபாய் |
| ஆர்க்காடு ரூபாய் | = 0.875 |

மைலி பணம் அல்லது
மதராஸ் இரண்டு பணம் = 0.1481
சின்னப் பணம் அல்லது
மதராஸ் ஒரு பணம் = 0.0740

**செப்புக் காசுகள்**

ஆனைத் துட்டு அல்லது மதராஸ்
யானை டப்பு = 0.0146 சுல்தானி ரூபாய்

ஆனைக் காசு அல்லது மதராஸ் காசு = 0.0029 சுல்தானி ரூபாய்

பணமாற்றம் செய்து தருபவர் தமக்கான கட்டணத்தைக் கழித்துக் கொண்டு தருவார். ஒரு ரூபாயை செப்புக் காசாக மாற்ற இரண்டு காசுகள் கட்டணம். இந்த நிலை 1950கள் வரைகூட நிலவியது. தங்கத்தைக் கொடுத்து வெள்ளிப் பணம் கேட்டால் கட்டணம் இல்லை. ஆனால் வெள்ளிக் காசுகளைக் கொடுத்து தங்கக் காசுகளாக மாற்ற ஒவ்வொரு பகோடாவிற்கும் ஒன்பது காசுகள் கட்டணம்.

**சாலை அளவுகள்:**

தூரத்தின் அளவை ஒரு ஆள் நடக்கும் நேரத்தைக் கொண்டு குறிக்கப்பட்டது. ஒரு ஆள் ஒரு நாழிகையில் (இந்துக்களின் ஒரு மணி) / (24 நிமிடங்கள்) நடக்கும் தூரம் ஊர் நாழி வழி எனப்பட்டது. அது கர்நாடகத்தில் (தொண்டை மண்டலம்) வழங்கும் ஒரு 'கோஸ்' (coss) தூரம். 7½ ஊர் நாழி வழி ஒரு காதம் அல்லது பொதி சுமந்து செல்லும் கால்நடையின் ஒரு நாள் பயண தூரம். 2½ ஊர் நாழி வழி ஒரு சுல்தானி கோஸிற்குச் சமம். கோஸ் என்னும் வார்த்தை வட இந்தியாவிலிருந்து (உருது) வந்த சொல்.

**நில அளவை:**

மேஜர் மாக்ளியாட்டின் கீழிருந்த புதிய கோட்டத்தின் நில அளவை நடைபெறுவதாக பவானியிலிருந்த முக்கிய உள்ளூர் அதிகாரி (தாசில்தார்) கூறியதாகப் புக்கானன் குறிப்பிடுகிறார். முதலில் விளை நிலங்கள் மட்டும் அளவை செய்யப்பட்டன வாம். பெரிய குன்றுகள், தரிசு நிலங்கள் அளவைக்குட்படுத்தப்

படவில்லை. முன்பெல்லாம் தண்ணீர் பாயும் நிலங்களின் விளைச்சலில் மூன்றில் இரண்டு பங்கை அரசு எடுத்துக் கொண்டதாம். முப்பது ஆண்டுகட்கு முன்பு ஐதர் அலி அதை மாற்றி, வீரராயப் பணமாக வரி செலுத்தும் முறையைக் கொண்டு வந்தாராம். அதனால் பெரும்பாலான பழைய விவசாயிகள் - அவர்களில் பெரும்பாலானோர் பிராமணர்கள் - ஓடிவிட்டனர். அவர்களின் நிலங்கள் மற்ற விவசாயிகள் மற்றும் பண்ணையாட்களாக இருந்த சூத்திரர்களின் தலைகளில் கட்டப்பட்டன. திப்பு சுல்தான் வந்த பின், வீரராயப்பணத்திலிருந்து கண்டராயப் பணமாக உயர்த்தினார். அதனால் பழைய விவசாயிகள் அனைவரும் சென்று விட்டனர். ஆகவே நிலங்கள் அனைத்தும் சூத்திரர்களிடம் சேர்ப்பிக்கப் பட்டன. அவர்கள் அதிக வரி செலுத்த வேண்டி வந்தாலும், வேளாண்மையை மேம்படுத்திச் சமாளித்தனர் என்கிறார் புக்கானன்.

திப்பு சுல்தான் விதித்த அதிக வரி பின்னர் எடுக்கப்பட்டு விட்டதாம். அத்துடன், விவசாயிகளின் ஏழ்மையைக் கருதி, ஐதர் விதித்த வரி அதிகமில்லை என்ற கருத்து நிலவியதாம். வரியைப் பணமாகச் செலுத்துவதை விவசாயிகள் வரவேற்றனர். காரணம் அரசாங்கத்தை அவர்கள் ஏமாற்ற முயற்சிக்கலாம்; மேலும் தங்களது உடனடித் தேவைகளுக்காக, விளைச்சலை விற்றுக் கொள்ளலாம். ஆனால் சந்தைக்குத் தானியங்களின் வரத்து திடீரென அதிகமானால் விலை பாதிக்கப்படுகிறது. ஆகவே, சீரங்கப்பட்டணத்தில் திவான் பூர்ணையா கொண்டு வந்த திட்டமாகிய ஆண்டுக்கு இவ்வளவு தானியத்தை வரியாகச் செலுத்த வேண்டும் என்பது சரியாகப் படுகிறது என்கிறார் புக்கானன். வரியை ஒழுங்காகச் செலுத்தி வரும் விவசாயியை நிலத்திலிருந்து அகற்றும் நிலை இல்லை. ஏழை விவசாயிக்கு ஒரு ஆண்டிற்கான விவசாயக் கடன் தொகை வட்டியில்லாமல் வழங்கப்பட்டது.

பவானியில் நிலவிய நில அளவை, விளைச்சலின் மீதான வரி ஆகியவற்றை சேலம் ஜில்லாவின் நிலைமையுடன் காண்பது

அவசியமாகிறது. அலெக்சாண்டர் ரீடுவின் ஆளுகையில் சேலம் ஜில்லாவில் நில அளவை தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. (1793 ஜனவரி முதல் 1796 வரை) சேலம் ஜில்லாவில் நடைபெற்று முடிந்த நில அளவை இங்கிலாந்து அரசின் கவனத்திற்குச் சென்றது. ரீடுவின் முயற்சிகளைப் பாராட்டி கடிதமும் எழுதியது (கடிதம் நாள்: 4.10.1797). அப்பணியில் வில்லியம் மாக்ளியாட் (சேலம்), தாமஸ் மன்றோ (தருமபுரி), ஜார்ஜ் கிரஹாம் (கிருட்டிணகிரி) ஆகிய உதவி கலெக்டர்களின் உழைப்பும் குறிப்பிடத் தக்கவை.

சேலம் நில அளவையின்போது, நிலத்தின் தரமும் குறிக்கப்பட்டது. நன்செய், புன்செய், தரிசு போன்று. நிலத்திற்கேற்ப வரிகள் நிர்ணயிக்கப் பட்டன. முந்தைய ஆட்சியில் (திப்பு சுல்தான்) அதிக வருவாய் வந்த ஆண்டின் வரி மதிப்பு (1788), கடந்த ஆண்டில் வசூல் ஆன தொகை, விவசாயிகள் எதிர்பார்த்த விளைச்சல் மதிப்பு மற்றும் அந்தந்த கிராமத்தை ஏலம் எடுக்க முன்வந்த **படேல்** போன்றவரின் மதிப்பு ஆகிய அளவுகோல்களைக் கவனத்தில் வைத்து உதவி கலெக்டர்கள் நில வரியை நிர்ணயித்தனர். ஆனால் விளைவு என்னவென்றால், மூன்று உதவி கலெக்டர்களும் தங்கள் அணுகு முறையில் வரி விதிக்க முயன்றதால் மூன்று கோட்டங்களின் நிலங்களுக்கிடையேயான வரி விதிப்பு மாறுபட்டது. கிருட்டிணகிரி கோட்டத்தில் கூடுதல் வரி; சேலம் கோட்டத்தில் மிகக் கூடுதல்; தருமபுரி கோட்டத்தில் குறைவு. அப்படியிருந்தும் மொத்த ஜில்லாவின் வரி வசூல் எதிர்பார்த்ததை விடக் குறைவாகிப் போனதால் மதராஸ் கோட்டையிலிருந்த வருவாய்க் கழகம் ரீடுவை உலுக்கியது - காரணத்தைக் கூறச் சொல்லி (1797). அவரால் உடனே சரியான 'ஜவாப்' தர இயலவில்லை. திப்புவுடனான நான்காம் மைசூர்ப்போர் மூளும் நிலை எதிர்ப்பட்டதால் ரீடுவின் கவனம் அதில் செல்லத் துவங்கியது (1798) பாராமகாலும் மைசூரும் அண்டைப் பகுதிகளல்லவா? போருக்கான முஸ்தீபுகளை சேலம் ஜில்லாவில் முழு மூச்சுடன் மேற்கொண்டார் ரீடு (1798-99).

திப்புவுடனான யுத்தம் ஏற்பட்டது. முடிவில் திப்பு மரணமுற்றார். அலெக்சாண்டர் ரீடு சென்னைக்குச் சென்று தனது புகழ்பெற்ற அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தார் (4.4.1800).

**புக்கானன் காட்டும் கிராம ஆட்சி முறை:**

கிராமத்திற்கு மணியக்காரர் என்பவர் இருந்தார். அதுபோல கணக்குப் பிள்ளையும் இருந்தார். சிறிய கிராமம் என்றால் இரண்டு மூன்று கிராமங்களுக்கு ஒரு கணக்குப் பிள்ளை. கார்த்திகை மாதத் துவக்கத்திலிருந்து 45 நாட்களில் கிராமத்தில் உள்ள விவசாயிகள் எதிர் வரும் ஆண்டில் தாங்கள் விவசாயம் மேற்கொள்ளவிருக்கும் நிலங்களைக் கணக்குப் பிள்ளையிடம் தெரிவிக்க வேண்டும். அந்த நிலங்களின் விவரம் உண்டான வரியை ஊர்த் தலைமை விவசாயியிடம் கணக்குப்பிள்ளை தெரிவிப்பார். அந்த ஊருக்கான மொத்த நிலவரியைச் செலுத்துவதற்கு எல்லா விவசாயிகளும் கூட்டாகப் பொறுப்பேற்க வேண்டும். எட்டு மாதத் தவணைகளில் மணியக்காரர் வரியை வசூலிப்பார். அவருக்கு கணக்குப்பிள்ளை துணை புரிவார். வசூலான தொகையைத் தாசில்தார் அலுவலகத்தில் உடனே செலுத்திவிட வேண்டும். தவணையைச் செலுத்தத் தவறும் விவசாயியை மணியக்காரர் தாசில்தார் முன்பு கொண்டு செல்வார். தாசில்தார் அந்த விவசாயியை சிறையில் தள்ளுவார். அந்த விவசாயியின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தோ அல்லது மற்ற விவசாயிகள் அவனுடைய பாக்கித் தொகையைக் கட்ட முன் வந்த பின்னரோதான் விடுதலை செய்யப்படுவார். இந்த வகையில் ஊரில் மற்ற விவசாயிகளும் உஷாராகிவிடுவர். அரசை ஏமாற்ற நினைக்கும் விவசாயி தானாக மாட்டிக் கொள்வார்.

மணியக்காரருக்கு அவ்வூரிலுள்ள நிலத்தில் விவசாயம் செய்ய அனுமதியில்லை. கிராமத்தில் உள்ள இன்னொரு அதிகாரி, காவல்காரனாகவும், சேதி சொல்பவனாகவும் இருந்த தோட்டி. நீர்ப்பாசனம் உள்ள கிராமங்களில் நஞ்சி (nunjy) என்ற

ஆள் இருப்பான். அவனது வேலை - ஏரி அல்லது நீர்த் தேக்கத்தைப் பார்த்துக் கொள்வதும் கால்வாய் வழியே தண்ணீரைத் திறந்துவிடுவதும் ஆகும்.

மேற்கண்டவர்களின் சம்பளம் மொத்த கிராம நில வருவாயில் 6½ சதவீதம் ஆகும். மணியக்காரருக்கு 2, கணக்குப் பிள்ளைக்கு 2, தோட்டிக்கு 1¼, நஞ்சிக்கு 1¼ என்ற கணக்கு. சிறிய ஊராயிருந்தால் இந்தச் சம்பள விகிதம் சற்று கூடும்; பெரிய கிராமமாயிருந்தால் குறையும். மொத்தத்தில் கட்டுப்படியாகும் சம்பளம் கிடைக்கும்.

கிராமக் கோயில்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டன. அந்த நிலங்களைக் குறைந்த அளவு குத்தகையில் கோயில் பூசாரி ஓட்டிக் கொள்ளலாம். முன்பெல்லாம் அரசு அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்றால் அவர்களுடன் வரும் குதிரை போன்ற கால்நடைகளுக்குத் தீவனம் மற்றும் விறகுகளை கிராமத்தார் வழங்க வேண்டும். மாக்ளியாட் வந்த பிறகு அந்த வழக்கத்தை நிறுத்தி விட்டாராம்.

மாக்ளியாட்டின் கீழிருந்த பகுதி தாலுகாக்களாகப் பிரிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு தாலுகாவும் 28,000 முதல் 45,000 ஸ்டார் பகோடா அளவிற்கு (அல்லது 10293 பவுண்ட் முதல் 16,545 பவுண்ட்) வருவாய் உள்ள பகுதியாகும். **தாலுகாவின் சிப்பந்திகள்:** ஒரு தாசில்தார், ஒரு சிரஸ்ததார்; மூன்று குமாஸ்தாக்கள்; ஒரு ஷராப் (பணம் மாற்றுபவர்) ஒரு கொல்லர் (பொக்கிஷதாரர்); கடிதங்கள் எழுத ஆறு பேர்; முப்பது அல்லது நாற்பது சேவகர்கள்; மேலும் தாலுகா முழுவதுமாக 500 அல்லது 600 காவல்காரர்கள் அல்லது படைவீரர்கள்.இவர்கள் அனைவரும் மாதச் சம்பளக்காரர்கள்.

**தாசில்தாரின் வேலைகள்:** தாலுகாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டும். கிராம அதிகாரிகளை மேற்பார்வை யிட வேண்டும்; அவர்கள் விவசாயிகளைத் துன்புறுத்து கிறார்களா என்று கவனிக்க வேண்டும். குத்தகைக்கு விடாத நிலங்களில் அவர்கள் விவசாயம் மேற்கொள்கிறார்களா எனப்

பார்க்க வேண்டும். ஏரிகள், குளங்கள், கால்வாய்களின் பராமரிப்பைக் கண்காணிப்பார். கிராம அதிகாரிகள் வசூலித்த குத்தகைப் பணத்தைப் பெற்று உடன் கருவூலத்தில் சேர்க்க வழி செய்வார். அவர் 'சிவில் மாஜிஸ்திரேட்' பணியையும் மேற்கொள்வார். அவர் தீர்ப்பளிக்கும் வழக்குகள் கலெக்டரின் மேல் முறையீட்டிற்குட்பட்டவை. 'போலிஸ்' அதிகாரியாகவும் அவர் பணி புரிவார். குற்றவாளிகளை சாட்சியங்களுடன் விசாரித்து கலெக்டருக்கு விவரமாகத் தெரிவிப்பார். திருப்தி கொண்டால் கலெக்டர் தண்டனை வழங்குவார்; இல்லையெனில் தன்னளவில் விசாரணை மேற்கொண்ட பின் தண்டனை வழங்குவார். கலெக்டரின் உத்தரவின்றி கசையடி, தடியடி போன்ற தண்டனைகளை வழங்க தாசில்தாருக்கு அதிகாரமில்லை.

கொலை, கொள்ளை போன்ற கடுங்குற்றங்கள் புரிபவர் மீதான தண்டனைகளைப் பற்றியும் புக்கானன் எழுதுகிறார்:

'... கொலை, கொள்ளைகள் அடிக்கடி நடக்கின்றன... இந்த மாதிரிக் கொடுஞ்செயல் புரிபவரை ராணுவ கோர்ட்டில் நிறுத்தித் தண்டனை பெறச் செய்ய வேண்டும். (சமீபத்தில்) எட்டு கிராமங்களின் தலைவர்கள் கலகக்கார தூந்தியாவிடம் (Dundia) சென்று இப்பகுதிகளில் கொள்ளையிட உத்தரவு வாங்கி வந்தனர். சுமார் ஐநூறு முரடர்களைச் சேர்த்துக் கொண்டு அவர்கள் சத்தியமங்கலத்தில் கொள்ளையடித்தனர். அவர்களில் முப்பது பேர் பிடிபட்டனர்; அவர்கள் சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பு தூக்கிலிடப்பட்டனர். இம்மாதிரியான கொள்ளைகளைத் தடுத்திடக் கடுமையான தண்டனையை வழங்காவிட்டால் விவசாயிகள் இந்த மாதிரிக் கொள்ளைகளில் ஈடுபட்டு நகரங்களைக் கொள்ளையடித்துக் கிடைப்பதில் பங்கு பிரித்துக் கொள்வதற்குத் தயாராயிருந்தனர். இந்தியா முழுவதிலும் ராணுவத்திலுள்ளவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள்; அவர்கள் இம்மாதிரிக் கொள்ளைகளில் ஈடுபட இசைவு கொண்டவர்கள்...'

தமிழ்மொழி சம்பந்தமாகப் புக்கானன் கூறுவதைக் கேட்போம்.

'சிரஸ்ததாரும் குமாஸ்தாக்களும் கணக்குகளை எழுது கிறார்கள். முன்பெல்லாம் கணக்குகள் கன்னட மொழியில் எழுதப்பட்டன. ஆனால் கம்பெனியின் ஆட்சி வந்த பிறகு மராத்திய மொழியில் எழுதப்படுகின்றன. இவ்விரண்டு மொழிகளுமே இங்குப் பொருத்தமற்றதாகவே தெரிகிறது. இங்குக் கணக்குகள் கண்டிப்பாகத் தமிழர்களின் மொழியி லேயே எழுதப்பட வேண்டும். * அப்படி எழுதினால் மதராஸி லுள்ள வருவாய்த் துறை அலுவலகங்களுக்கும் மொழி பெயர்த்து எழுத வேண்டிய நபரின் உதவி தேவைப்பட்டது.

புக்கானன் கூறும் மேலும் சில தகவல்களைக் காண்போம்:

'அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து விவரமறிந்த விவசாயிகளை அழைத்து வந்த மணியக்காரர், 'அரசாங்கம் என்னதான் எனது அதிகாரம், சம்பளம் சம்பந்தமாகச் சட்டம் கொண்டு வந்தாலும் நான் எனது தலைமைக்கான அதிகாரத்தை வைத்திருப்பேன்' என்று கூறுகிறார். ஏனெனில் அவர் மட்டும்தான் அந்த ஊரிலுள்ள பத்ரகாளியம்மனுக்கு ஆண்டுதோறும் பலியிடும் உரிமையைப் படைத்தவர். பத்ரகாளி என்பவள் கிராம தேவதை; ஒவ்வொரு ஊருக்கும் காளியம்மன் கோயில் உள்ளது.

'திப்புவின் ஆட்சியின்போது இந்த மாதிரிக் கோயில் களுக்கு வழங்கி வந்த மானியத்தை நிறுத்தியபோது வருவாய் அலுவலர்கள் மக்களிடம் பணம் வசூலித்து வழக்கமாகப் பண்டிகையை நடத்தினார்கள்.. இப்போது இந்த மானியத் தொகையைத் திரும்ப வழங்குவதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

'ஐதர் அலி காலத்தில் பணக்கார விவசாயி என்பவரிடம் சதா முப்பது ஆண் வேலையாட்களும், பதினைந்து பெண் வேலையாட்களும் இருப்பர். மேலும் அவரிடம் பன்னிரண்டு

* The accompts ought certainly to be kept in the language of the Tamuls, which is that of the country, and which would not require the revenue officers of Madras to become acquainted with an additional dialect. (vol. 2/216).

ஏர்களும், 48 எருதுகளும், 150 பசுக்களும், 200 ஆடுகளும் இருக்கும்... ஆனால் இப்போது நான்கு ஏர்களும் எட்டு எருதுகளும் இருந்தாலே ஒருவர் பணக்கார விவசாயி என்று கருதப்படுகிறார். பொதுவாக இரண்டு ஏர்களை வைத்திருக்கும் ஒருவர் 24 ஏக்கர் புன்செய் நிலங்களில் விவசாயம் செய்கிறார். இது எவ்வாறு சாத்தியம் என்று பார்த்தால் தெரிகிறது. ஒரு ஆள் ஒரு கலப்பையை எடுத்துக் கொண்டு இரண்டு எருதுகளுடன் விடியற்காலையில் சென்று உழுகிறான். உச்சிப் பொழுது நெருங்கும் வரை வேலை செய்யும் அவனுக்கு ஒரு மணி நேர ஓய்வு தரப்படுகிறது. காலை உணவு சாப்பிடுகிறான். பிறகு மாலை வரை வேறு இரண்டு எருதுகளைப் பூட்டி உழுகிறான். அதாவது ஒரு ஏருக்கு நான்கு எருதுகள் வீதம் உழைப்பு..

'பண்ணை வேலையாளைப் படியாள் என்று அழைக்கிறார்கள். அவர்களில் சிலர் திருமணம் போன்ற செலவுகளுக்கு வேலை பார்க்க ஒத்துக் கொள்கிறார்கள். முன்பணம் மாதச் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளப்படுகிறது. மொத்தக் கடனும் தீரும் வரை படியாட்கள் அங்கேயே தொடர வேண்டியுள்ளது. அந்த ஆட்கள் தங்க வீடு ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர்களின் மனைவியர் வேலை செய்ய முனைந்தால் அவளுக்கும் சம்பளம் உண்டு.

'நீர்ப் பாசனம் பெறும் நிலத்தை இங்கு 'நஞ்சை' என்று அழைக்கிறார்கள். அந்த மாதிரி நிலங்கள் இங்கு குறைவு. நன்செய் விவசாயத்தைப் பற்றிஅந்தப் பகுதிக்குச் செல்லும் போது குறிப்பிடுவேன். பவானி ஆற்றில் இங்கிருந்து ஒரு வாய்க் கால் செல்கிறது. ஒரு அணை மூலம் அது வெளிப்படுகிறது. ஆனால் அந்த வாய்க்கால் நீரினால் பாசனம் பெறுவது பக்கத்திலுள்ள ஈரோடு பகுதியாகும்.

'இந்தப் பகுதியில் (பவானி) புன்செய் விவசாயம்தான் பிரதானமாக நடைபெறுகிறது. அதில் கம்பு விளைச்சல் அதிகம். அரிசிக் கம்பு, நாட்டுக் கம்பு என்று இரு வகைக் கம்பு பயிரிடப்படுகிறது..'

இவ்வாறு கூறி வரும் புக்கானன் இரண்டு வகைக் கம்புகளைப் பயிரிடும் விதம், உழுதல், எருவிடுதல் அவற்றுக் கான பருவ மாதங்கள், கலப்பைகள் அமைந்துள்ள விதம், எத்தனை முறை உழப்படுகிறது, களை பறித்தல், அறுவடை செய்யும் முறை, தானியத்தைப் பிரித்தெடுக்கும் விதம், கம்பந் தட்டுகளைக் கட்டுதல் - அவற்றை வீட்டுக் கூரைகள் அமைக்கவும், தீவனமாகவும் பயன்படுத்தும் வழக்கம், தானியங்களை சேமிக்கும் காலம் (பத்து ஆண்டுகள் வரைகூடச் சேமிக்கலாமாம்!) என விரிவாக எழுதுகிறார். கரிசல் பூமியில் பருத்தி பயிரிடுவதைக் குறிப்பிடுகிறார். சுழற்சி முறையில் அங்கு இரண்டாம் ஆண்டு பருத்தி, மூன்றாம் ஆண்டு கம்பு, நான்காம் ஆண்டு சோளம் பயிரிடப்பட்டு வந்தனவாம். பவானி கூடல் பகுதியில் இவைதான் முக்கியப் பயிர்கள். சாமை, வரகு, எள்ளு, (கார் எள்ளு, வெள்ளை எள்ளு), அவரை, துவரை, வெள்ளரிக்காய் போன்றவையும் கலந்து பயிரிடப் பட்டன. தினை, உளுந்து, பச்சைப்பயிறு, கொட்டை முத்து (ஆமணக்கு) போன்றவையும் பயிராயின.

வனப் பகுதியைக் குத்தகைக்கு விடவில்லை என்கிறார் புக்கானன். விரும்புபவர்கள் காட்டிற்குச் சென்று மூங்கில்களையோ மரங்களையோ வெட்டிக் கொள்ள முடியும் என்கிறார். தரிசு நிலத்தில் கால் நடைகள் மேய்வதற்கும் குத்தகை/வாடகை வசூலிக்கப்படவில்லையாம். நல்ல புல்வெளியில் மேய்ச்சல் செய்தால் மட்டும் போனால் போகிறதென்று சிறிதளவு குத்தகை கிடைத்ததாம். தேன் எடுக்கும் விவசாயிகள் அதை அரசாங்கத்திற்குத் தந்துவிட வேண்டும். அம்மரங்களிலிருந்து கிடைக்கும் மெழுகை அவர்கள் வைத்துக் கொள்வார்களாம்.

பர்கூர், பூனாச்சி, கஜல்கட்டி ஆகிய இடங்களில் சந்தன மரங்கள் வெட்டப்படுகின்றன. அவற்றைப் பவானிக்குக் கொண்டு வர ஆட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒரு அடி, ஒன்றரை அடி நீளத்தில் பருத்த கட்டைகள் வெட்டப்பட்டு, குச்சித் துண்டுகள் தனியே வைக்கப்படுகின்றன. கெட்டி மரத் துண்டுகள் பவானி கூடலுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.




கொங்கு நாட்டில் புக்கானன் சென்ற ஊர்கள் (அக்டோபர்-நவம்பர், *1800*). சாலைகளும் பிற ஊர்களும் தற்கால நிலையின்படி குறிக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | ஊர் | சென்ற நாள் |
|---|---|---|
| 1. | காவேரிபுரம் | 12.10.1800 |
| 2. | மேட்டூர்/சோளப்பாடி | - |
| 3. | நவப்பட்டி | 13.10.1800 |
| 4. | சாம்பள்ளி | 13.10.1800 |
| 5. | நெரிஞ்சிப்பேட்டை | 14.10.1800 |
| 6. | அம்மாப்பேட்டை | 15.10.1800 |
| 7. | பவானி | 15.10.1800 |
| 8. | ஆப்பக்கூடல் | 18.10.1800 |
| 9. | அந்தியூர் | - |
| 10. | நல்லராயன்பாளையம் | 19.10.1800 |
| 11. | கோபிசெட்டிப்பாளையம் | - |
| 12. | கொடிவேரி அணை | 20.10.1800 |
| 13. | சத்தியமங்கலம் | 21.10.1800 |
| 14. | முடுக்கந்துறை | 23.10.1800 |
| 15. | சிறுமுகை | 26.10.1800 |
| 16. | மேட்டுப்பாளையம் | - |
| 17. | பேரூர் | - |
| 18. | கணியூர் | 1.11.1800 |
| 19. | அன்னூர் | - |
| 20. | அவிநாசி | 2.11.1800 |
| 21. | திருப்பூர் | 3.11.1800 |
| 22. | பல்லடம் | - |
| 23. | தளவாய்ப்பாளையம் | 4.11.1800 |
| 24. | சென்னிமலை | 5.11.1800 |
| 25. | பெருந்துறை | 6.11.180 |
| 26. | ஈரோடு | 7.11.1800 |
| 27. | பாசூர் | 9.11.1800 |
| 28. | கொளாநள்ளி | - |
| 29. | கொடுமுடி | 10.11.1800 |
| 30. | புகளூர் | 11.11.1800 |
| 31. | பரமத்தி | 12.11.1800 |
| 32. | மூலனூார் | 16.11.1800 |
| 33. | பொன்னாபுரம் | 21.11.1800 |
| 34. | குடிமங்கலம் | 22.11.1800 |
| 35. | பூசாரிப்பட்டி | 24.11.1800 |
| 36. | ஆனைமலை | 27.11.1800 |
| 37. | கொல்லங்கோடு | 29.11.1800 |
| 38. | பாலக்காடு | 30.11.1800 |
| 39. | மோகனூார் | - |
| 40. | திருச்செங்கோடு | - |
| 41. | கொமாரபாளையம் | - |
| 42. | சங்ககிரி | - |
| 43. | இடைப்பாடி | - |
| 44. | பூலாம்பட்டி | - |
| 45. | தாரமங்கலம் | - |
| 46. | ஓமலூர் | |
| 47. | மேச்சேரி | - |

ஆனால் அவற்றை மேலும் தரம் வாரியாகப் பிரித்து 'பாலிஷ்' செய்யாமல் அப்படியே கிடத்தப் பட்டுள்ளன. மைசூர்ப் பகுதியில் கிடைக்கும் சந்தனக் கட்டைகளை விட இவை தரம் குறைவு என்கிறார். பவானியில் அதுவரை சந்தனக் கட்டைகள் விற்கப்படவில்லை என்றும் சொல்கிறார். ஆனால் எதுவும் திருட்டுப் போகவில்லை. அத்துடன், விளைந்த மரங்கள் மட்டுமே வெட்டப்படுகின்றன. அதுவரை சேர்ந்துள்ளவை சுமார் 400 மரங்கள் இருக்கும். ஒவ்வொன்றும் எட்டு மணங்கு எடை உள்ளது. நாற்பது சேர், ஒரு மணங்கு.

இவ்வாறு பவானியில் தனது பயணக் குறிப்புகளைத் தந்த புக்கானன், அக்டோபர் 18 ஆம் நாள் பவானி ஆற்றின் வடக்குக் கரைப் பக்கம் சென்று ஆப்பக்கூடலை அடைந்தார்.

○

## 9

# பவானியிலிருந்து நீலகிரி வரை

'ஏழு இந்திய மணி நேர தூரம் பவானி ஆற்றின் வடகரை வழியே சென்று **ஆப்பக்கூடலை** அடைந்தேன். வழியில் நான் பார்த்து வந்த பகுதி சமவெளியாக இருந்தது. அதிக மக்களைக் கண்டேன். தரிசு நிலங்கள் குறைவு. எட்டு அல்லது பத்து ஏக்கர் நிலங்களில் மட்டும் நெல் பயிரிடப்பட்டிருந்தது. காடுகளிடையே புதர் வேலிகள்தான் தென்பட்டன. விவசாயம் சீராக நடைபெறுவதாகத் தெரியவில்லை. மலைகளுக்கு மறுபுறம் (மைசூர்) உள்ள இடங்களில் உள்ளதை விடவும் சுமார்தான். ஆற்றிலிருந்து தூரம் செல்லச் செல்ல, நிலங்களின் பாதி அளவு தரிசுதான் என்று சொல்கிறார்கள். மலைகளுக்கு அருகில் அந்தியூர் உள்ளது. அது ஒரு முக்கிய நகரம். காவேரிபுரம் மற்றும் பவானி பகுதிகளின் தலைமை நகரம். அங்கிருந்து பக்கத்தில் ஏழு நீர்நிலைகள் உள்ளன. அவை நெல் விளையும் நிலங்களுக்கு நீராதாரமாயுள்ளன...' என்று கூறுகிறார் புக்கானன். இந்தத் தொடர் ஏரிகள் வடக்கிலுள்ள மலைகளிலிருந்து புறப்பட்டு வந்து ஆப்பக் கூடல் என்கிற சங்கமத்தில் இணைந்து பவானி ஆற்றில் கலக்கிறது.

பவானியிலிருந்து வடமேற்கில் 12 மைல் தொலைவில் **அந்தியூர்** உள்ளது. அது கட்டி முதலிகள் ஆண்ட முக்கிய ஊர்களில் ஒன்று. 1891 இல் அந்தியூரில் 7647 பேர்களும், பவானியில் 7341 பேர்களும், காவேரிபுரத்தில் 6725 பேர்களும்

இருந்தனர் என்ற விவரம் அந்தியூரின் முக்கியத்துவத்தை உணர்த்தும்.

'ஆப்பக்கூடலில் ஈஸ்வரன் கோயிலொன்று உள்ளது. நூறு வீடுகள் உள்ளன; ஆனால் ஒரு கடைகூட இல்லை. கடைகள், கடைவீதி போன்றவை இப்பகுதியில் இல்லை என்றே தெரிகிறது. மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை சந்தையில் வாங்கிக் கொள்கிறார்கள். ஆப்பக்கூடலை முன்பு ஐதர் அலி, வால்மன்தாஸ் என்ற சேட்டுவிடம் 60,000 பகோடாக்களைப் பெற்றுக் கொண்டு 'ஜாகீராக'க் கொடுத்து விட்டார். அப்போது அவ்வூரில் முன்னூறிலிருந்து நானூறு வீடுகள் வரை இருந்தன. அந்த ஊரின் தலைவர் (மணியக்காரர்), 'ஐதர் அலி பணத்தைப் பெற்ற பின் ஐந்து ஆண்டுகள் கழித்து - 35 ஆண்டுகட்கு முன்னர் - மராத்தியர்கள் படையெடுத்து வந்து ஊரை நாசம் செய்து விட்டனர், அதற்குப் பிறகு இவ்வூர் முந்தைய நல்ல நிலையைப் பெறவேயில்லை' எனத் தெரிவித்தார். அவருக்கு வேறு எந்தப் படையின் தாக்குதலைப் பற்றியும் தெரியவில்லை. மராத்தியர் செய்ததாக அவர் கூறும் அழிவு தளபதி மெடோஸ் செய்ததாகவே இருக்கவேண்டும். * வரலாற்று ஞானம் என்பது ஒரு இந்துவின் மனதில் குழப்பமாகவே உள்ளது. மெடோஸ் படைகள் செய்த அழிவிற்குப் பின்னர் ஒரு கொடிய பஞ்சம் தொடர்ந்தது. அது இப்பகுதி மக்களின் வாழ்வை அழித்தது...

'பவானிகூடலின் விவசாயிகள் தெரிவிக்காத ஒரு பயிர் சணல். அது இங்கு ஆற்றங் கரையில் நிறைய பயிராகிறது. விவசாயிகள் சணலை நட்டு, வளர்த்து, அதை நீரில் ஊற வைக்கும் சமயம் வரும்போது தெலுங்குச் செட்டியார்களிடம் விற்கிறார்கள். அவர்கள் சணல் நாரைப் பிரித்தெடுத்து சாக்காகத் தைக்கிறார்கள்.. சணல் சுமாரான மணல் பூமியில்

* திப்பு சுல்தான் ஆங்கிலேயருக்கிடையே 1790 இல் கோயமுத்தூரிலிருந்து சேவூர், சத்தியமங்கலம், பவானி, ஈரோடு, தாராபுரம், கரூர்ப் பகுதிகளில் சண்டைகள் நடந்தன. மதராஸ் கவர்னராயிருந்த மெடோஸ் என்பவர் ஆங்கிலப் படைகளின் தலைமைத் தளபதி. அச்சமயத்தில் திப்பு சுல்தான் படைகளும் ஆங்கிலேயரின் படைகளும் சத்தியமங்கலத்திலிருந்து பவானி, ஈரோடு வரை ஊடுருவிச் சென்றன. அப்போது ஆங்கிலேயர்ப் படையினர் செய்த நாசங்களைக் குறிப்பிடுகிறார் புக்கானன்.

நன்கு விளைகிறது; கரிசல், செம்மண் நிலங்களிலும் பயிரா கிறது. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக ஒரே நிலத்தில் விளைவிக்க இப்பயிர் ஏற்றதல்ல. இவ்விதை களைக் கால்நடைகள் உண்கின்றன. ஆனால் சினையாகியுள்ள பசுக்கள் இதைச் சாப்பிட்டால் கருச்சிதைவு ஏற்படுவதாகச் சொல்லப் படுகிறது... ஆப்பக்கூடல் அருகில் தினை அதிகம் பயிராகிறது. அரிசிக் கம்புபோல் அது பயிரிடப்படுகிறது' என்று ஆப்பக்கூடல் பகுதியைப் பற்றிச் குறிப்பிட்டுள்ளார் புக்கானன்.

**அ**டுத்த நாள் ஒன்பது மணி நேரத் தூரம் கடந்து **நல்லராயன் பாளையத்திற்குச்** சென்றார் - சிறிய கிராமம்; ஆற்றங்கரையோரத்தில் உள்ளது. ஆற்றில் சதா தண்ணீர் ஓடு மாம். ஆழமான குளங்கள் பல இருந்தன; அங்கே முதலைகளும் இருந்தனவாம். அவ்வூரைப் பற்றி அவர் குறிப்பிடுகிறார்:

'இங்கு நெல் அதிக அளவில் பயிரிடப்படுவதால், விவரமறிந்த விவசாயிகளைக் கூட்டி வைத்து நன்செய் நிலத்தில் சாகுபடி செய்வது பற்றிக் கேட்டேன். நன்செய் நிலத்தில் மழைநீரை மட்டும் நம்பி நெல்லைப் பயிரிடமுடியாது. கால்வாய் அல்லது ஏரிகள் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பவானி ஆற்றில் கட்டப்பட்டுள்ள அணையின் மூலம் சத்தியமங்கலத்திற்குக் கீழே மூன்று மலபார் மணி நடை தூரத்திற்கு ஆற்றின் இரு புறங்களிலும் வாய்க்கால் செல்கிறது. தெற்குப் பகுதியில் செல்லும் வாய்க்கால் **கோபால செட்டிப் பாளையம்** பகுதியில் புகுந்து அதிக அளவு நிலங்களுக்கு நீரைத் தருகிறது. வட பகுதிக் கால்வாய் சத்தியமங்கலம் வழியே சென்று ஆயிரத்து நூறு கண்டகம் அளவு நன்செய் நிலங் களுக்கும், 132 கண்டகம் அளவு புன்செய் தோட்டங்களுக்கும் நீர் வழங்குகிறது. இவற்றில் 200 கண்டகம் அளவு நிலங்களுக்கு நீர் கிடைப்பதில்லை. அணைக்குச் செய்ய வேண்டிய சிறு மராமத்து வேலையை மேற்கொண்டால் இந்த 200 கண்டகம் நிலங்களும் பயன்பெறும். ஒரு கண்டகம் என்பது 75,600 சதுர அடிகள்...' (அதாவது சுமார் 1¾ ஏக்கர். ஆகவே, 1300×1¾=2275 ஏக்கர் நிலங்கள் அங்கே பாசனம் பெற்றிருந்தன.)

இவ்வாறு குறிப்பிட்டு வந்த புக்கானன், அந்தப் பகுதியில் திப்புசுல்தான் ஆட்சியில் நிலவிய நிலவரி முறையையும், அதைக்குறைத்து மதிப்பீடு செய்ய விவசாயிகள் - அவர்களில் பெரும்பாலும் பிராமணர்கள் - சொல்லும் பொய் முறைகள், அதை மறைக்க ஆட்சி அலுவலர்களுக்குத் தரும் கையூட்டுகள், விவசாயிகளின் கைகளில் மிஞ்சும் பணம் போன்றவை நாட்டியக் காரிகளுக்கும் கோயில் தர்மகாரியங்களுக்கும் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். நெல், எள்ளு, சணல் போன்ற பயிர்களின் நடவு முறைகளையும் குறிப்பிடுகிறார்.

**கொடிவேரி:**

மறுநாள், அக்டோபர் 20 அன்று ஆறு மலபார் மணிநேர தூரம் சென்று கொடிவேரி அணைக்குச் சென்றார். அங்கிருந்து தெற்கில் பிரியும் கால்வாயையும், அதனால் பயனுற்ற நெல் வயல்களையும் பற்றி ஏற்கனவே நல்லராயன் பாளையத்தி லிருந்து குறிப்பிட்டதை நினைவு படுத்துகிறார். அந்த அணை 120 ஆண்டுகளுக்கு முன்னர் (கி.பி.1680) கட்டப்பட்டதாக அவரிடம் சொன்னார்களாம். அணை நன்றாகக் கட்டப் பட்டிருந்ததாகக் கூறுகிறார். (ஆனால் அந்த அணை சுமார் 1595 வாக்கில் கட்டப்பட்டதாக கோயமுத்தூர் கெஜட்டியர் (1966) குறிப்பிடுகிறது பக்.257)

'கொடிவேரிக்கு அடுத்துள்ள பகுதியில் பெரும்பாலான நிலங்களுக்குப் பாசன வசதி இல்லை. அவற்றில் ஆறில் ஒரு பங்கில்கூட வேளாண்மை நடைபெறவில்லை. மண் நல்ல மண். நிலங்களைச் சுற்றியிருந்த பழைய வேலிகளும் அங்கே முன்பு விளைச்சல் நடைபெற்றிருந்ததற்கான தடயங்களும் தென்படுகின்றன. அந்த விவசாய முறை தற்போதுள்ளதை விட மேலாக இருந்தது என்பதைக் காட்டுகிறது. தளபதி மொடோஸ் (அன்றைய மதராஸ் கவர்னர்) முன்பு (1790 இல்) செய்த ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட நாசம் இது. மழை இருந்தும் இரண்டு வருடங்களாக அப்போது விவசாயம் நடக்கவில்லை. இருந்த தானியங்களையும் இரு தரப்புப் படைகளும் எடுத்துச் சென்று விட்டன. மக்கள் மலைப் பகுதிகளுக்கு ஓடி விட்டனர்.

அங்குச் சிறிதளவு தானியங்களை உற்பத்தி செய்தாலும் பிடுங்கிச் செல்ல ராணுவக்காரர்கள் வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இருந்தனர். ஆனால் அங்குச் சென்றவர்களில் பலர் பசியாலும், **மலை** நோய்களாலும் மாண்டனர்...' எனக் குறிப்பிடுகிறார் புக்கானன்.

**கட்டி முதலி:**

'இங்குள்ளவர்களின் கூற்றின்படி, எட்டு அல்லது பத்து கட்டி முதலிகளின் வம்சாவளியினருக்கு இப்பகுதி உரிமையாயிருந்தது. அவர்களிடமிருந்து சுமார் இருநூறு ஆண்டுகட்கு முன்னர் மைசூர் மன்னர் இப்பகுதியைப் பறித்தார். வெற்றி கொண்ட சிக்க தேவராயர், மைசூர் உடையார்களில் ஐந்தாவது மன்னர்...'

**திப்புவின் ஆட்சியில் வரி வசூல்**

'இங்குள்ள விவசாயிகள் திப்புவின் காலத்தில் தந்த நிலவரி அளவிற்கே தற்போதும் செலுத்துவதாகச் சொல்கிறார்கள். 'ஐதர் அலி காலத்தில் செலுத்திய ஒவ்வொரு வீரராயப் பணத்திற்குப் பதிலாகத் திப்பு காலத்தில் ஒரு சுல்தானி பணம் தந்தோம்' என்கின்றனர். முன்பிருந்த அரசாங்கத்தின் வருவாய் அதிகாரிகள் அடிக்கடி வந்து வரி வசூல் செய்வர்.ஒரு முறைக்கு இரு முறையாகவும் வசூலிப்பர். ரசீது தருவார்கள். ஆனால் சமயத்தில் அது பொய் ரசீதாக இருக்கும். விவசாயிகளிடம் வரி நிலுவையை விட்டுச் செல்வார்கள்; ஆனால் அவர்களிடமிருந்து கிடைத்ததை எடுத்துச் சென்று விடுவர். மேலதிகாரிகள் வந்தால் அவர்களுக்குக் கையூட்டுக் கொடுத்து நிலைமையை மறைப்பார்கள். அரசாங்கத்தின் பொதுப்பணி வேலைகளைச் செய்யும் ஆட்களுக்கு முழுதாகக் 'கூலி' தந்துவிட வேண்டும் என்பது திப்புவின் உத்தரவு. ஆனால் வேலையின் கண்காணிப்பாளர் கூலியைத் தராமல் வயிற்றுப் பசியைப் போக்கிட தானியம் மட்டும் தருவார். இதனால் தொல்லையுறும் மக்கள் சுல்தானைப் பார்க்க முயன்றால் அதுமுடியாத காரியம். ஆனால் சிலர் திப்புவைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தைப்

பெறுவர். அவர்கள் அன்புடன் வரவேற்கப் பட்டாலும் மீர் சாதிக்கைப் (திப்புவின் நெருங்கிய தளபதி. அமைச்சர் பூர்ணையாவை விடவும் நெருக்கமானவர்) பார்க்கச் சொல்வார்கள். ஆனால் புகார் கூறியவர் நிலவறைச் சிறையில் அடைக்கப்படுவார்கள். 'குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு விட்டனர்' என்று திப்புவிற்குச் செய்தி செல்லும். ஆகவே மீர் சாதிக்கைப் பற்றி புகார் சொல்லும் துணிவு வராது...'

**சத்திய மங்கலம்:**

'மூன்று மலபார் மணி நேர தூரம் கடந்து சத்தியமங்கலம் சென்றேன். சமஸ்கிருதத்தில் இவ்வூருக்கு 'உண்மையாலும் நல்ல ஊர்' என்று பொருள். இங்குள்ள கோட்டை விசாலமானது. கற்களினால் கட்டப்பட்டது. படைத் தளம் உள்ளது. ஆனால் வீடுகள் சில மட்டுமே உள்ளன. இக்கோட்டை சுமார் 200 ஆண்டுகட்கு முன்னர் மதுரை மன்னர் திருமலை நாயக்கரால் கட்டப்பட்டது. சரித்திரத்தில் தேர்ச்சி கொண்ட இங்குள்ள வியாபாரிகள், இக்கோட்டையைக் கட்டி ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மைசூரின் கண்டீரவ நரச ராயரால் கைப்பற்றப்பட்டது என்கிறார்கள். அப்போதிருந்து கன்னட நாட்டைச் சார்ந்துள்ள இப்பகுதியில் கன்னட மொழி அதிகம் பேசப்படுகிறது. சேர தேசத்தின் ஒரு பகுதியான இங்கு தமிழ்தான் முதன்மையான மொழியாயினும் இன்றைய நிலை வேறு.. அதற்கு முன்பு இப்பகுதி பாண்டியர்களைச் சார்ந் திருந்தது என்று சொல்கிறார்கள். பாண்டியர் இலங்கையின் அரசன் ராவணனின் ஆளுமையில் இருந்தனர்...' என்றும் சொல்லப் பட்டதாக எழுதுகிறார் புக்கானன்.

'சத்தியமங்கலம் நகரம் சமவெளிப் பகுதியில் கோட்டை யிலிருந்து சிறிது தொலைவில் உள்ளது. ஐதர் அலியின் காலத்தில் 780 வீடுகள் இருந்தன. இப்போது 555 மட்டும் உள்ளன. இங்கு பெரியதொரு விஷ்ணு கோயில் உள்ளது. அக்கோயிலுக்குரிய தேர் நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் மிகப்பெரியதாக உள்ளது. ஆனால் அதில் உள்ள உருவங்கள் கிருஷ்ணரின் லீலைகளைக் காட்டும் காதல்களைக் கொண்

டுள்ளன. நான் இதற்கு முன் இவ்வாறு ஆபாசமான காட்சிச் சித்திரங்களைக் காணவில்லை' என்றும் கூறுகிறார்.

அப்பகுதி அப்போது சுகாதாரக் கேடாக இருந்தது போலும். காவேரிபுரத்திலிருந்து வந்த பிறகு புக்கானனுடன் வந்த ஆட்களில் யாரேனும் சிலர் தினம் காய்ச்சல் கண்டனர். பகற்பொழுதில் அதிக வெயில்! அவ்வப்போது பெரும் மழை பொழியுமாம். இரவு ஏதோ குளிராயிருந்தது. ஆனால் உள்ளூர்க்காரர்களோ அது அதிகக் குளிர் என்றனராம்.

'கொடிவேரிக்கு மேல்பகுதியில் கால்வாய்கள் இல்லை. ஆனால் பல ஏரிகள் உள்ளன. சத்தியமங்கலத்தில் நான்கு பெரிய ஏரிகள் உள்ளன - ஒவ்வொன்றும் 150 கண்டகம் நிலங்களுக்கு மேல் நீர் தரும். அவற்றில் ஒன்று பாதியளவு மட்டும்தான் நல்ல நிலையிலுள்ளது. மற்றவை அழிந்த நிலையிலுள்ளன. ஒரு கண்டகம் என்பது இரண்டரை முதல் நான்கு சேய் (cheis) அளவு நிலம் என்று இங்குள்ள அலுவலர்கள் சொல்கிறார்கள்.

'இப்பகுதியிலுள்ள சிற்றாறுகளில் கறுப்பு மணலாக இரும்புத் தாது கிடைக்கிறது. இங்கிருந்து ஏழு மலபார் மணிநேர தூரம் வடகிழக்கில் உள்ள இடத்தில் இரும்புத் தாது உருக்கப் படுகிறது.

'நான் சத்தியமங்கலத்தில் இரண்டு நாள்கள் தங்கினேன். அருகிலுள்ள மலைப் பகுதிகளில் வளரும் மரங்களின் மாதிரிகளைக் காணலாம் என எண்ணினேன். ஆனால் சிரஸ்ததாரின் ஒத்துழைப்பு இல்லாததால் அது முடியவில்லை..

'இங்குள்ள மக்களுக்கு ஒரு குறை. இப்பகுதியின் பணக்கார வணிகர்கள் நகரங்களில் வசிப்பதில்லை; கிராமங்களில்தான் தங்குகிறார்கள். அவர்கள் இங்கு பொருட்களை வாங்கி சீரங்கப்பட்டணத்திற்குக் கொண்டு செல்கிறார்கள். பலவித பருத்தித் துணிகள், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், நெய், புகையிலை, கோணித் துணிகள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் இவையெல்லாம் கொண்டு செல்லப்படுகின்றன. எல்லாம் ரொக்கத்திற்கு விற்பனையாகின்றன.

'இப்பகுதியிலுள்ள நெசவாளர்கள் 800 தறிகள் வைத்துள்ளனர். அவர்களில் ஐம்பது பேர் சாக்குத் துணி நெய்பவர். அவர்கள் உபயோகிக்கும் பருத்தி நூல் உள்ளூர் தயாரிப்பு. துணிகளின் ஓரத்திற்கான பட்டு நூல் சேலத்தி லிருந்து வருகிறது. நெய்த துணி அக்கம் பக்கத்தில் விற்பனை யாகிறது. அல்லது சீரங்கப்பட்டணத்திற்குச் செல்கிறது. ஐந்து மாதங்களுக்கு முன்பு சேலத்திலிருந்து வந்த வணிகப் பிரதிநிதி பக்கத்துக் கிராமங்களைச் சுற்றிப் பார்த்து, ஒவ்வொரு ஊரிலும் ஒரு தலைமை நெசவாளரை நியமித்தார். அவர் மற்ற நெசவாளருக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான பணத்தை முன்பணமாகத் தருவார். முன்பணத்திற்குத் தலைமை நெசவாளர் பொறுப்பாளி. ஒவ்வொரு துணிக்கும் (36 முழம்) தரகுத் தொகையாக 7½ பென்னி காசுகள் (பென்ஸ்) கிடைக்கும். சேலத்திற்குக் கொண்டு செல்லும் துணிகளின் வண்டிச் சத்தத்தை வணிகப் பிரதிநிதி ஏற்றுக் கொள்வார்; அவர் அத்துணிகளை சேலத்தில் சலவை செய்து கொள்வார்; 'சேலம்பூரு' என்னும் துணிக்கு மட்டும் அவர் முன் பணம் தருகிறார். அத்துணி வங்கத்தின் 'பாஃபட்' துணிபோல் உள்ளது. அது 36 முழம் நீளம்; இரண்டேகால் முழம் அகலம் கொண்டது. அத்துணியில் மூன்று ரகங்கள் உள்ளன. அவை 4½ ரூபாய் (9 ஷில்லிங் 1½ பென்ஸ் என்று புக்கானன் குறிப்பிட்டுள்ளார்), 4 ரூபாய், 3½ ரூபாய் என்கிற விலைகளில் விற்கப்படுகின்றன. இத்துணிகளின் விலை மலிவாகத் தோன்றுகிறது. அத்துணிகள் வணிகப் பிரதிநிதி வருவதற்கு முன்பு இங்கு தயாரிக்கப்பட்டதில்லை.

'உள்ளூர் வியாபாரிகளும் நெசவாளர்களுக்கு முன்பணம் தருகின்றனர். அதன் மூலம் அவர்கள் நெசவாளர்களைக் கடனாளியாகவே இருக்கச் செய்கின்றனர். முன்பணம் வாங்கிய நெசவாளர்கள் துணியை அவருக்கே கொடுக்க வேண்டிய நிலை; அதுவும் குறைந்த விலையில். ஒரு வியாபாரி புதிய நெச வாளரைப் பிடிக்க வேண்டுமானால் பழைய வியாபாரிக்கான கடனைத் திருப்ப வேண்டிய பணத்தையும் தருவார். அதன்

மூலம்அந்த நெசவாளி தான் நெய்த துணியை புதிய வியாபாரிக்குத் தர வேண்டும். ஒரு சில நெசவாளர்கள், தாம் நெய்த துணியை வெளிச் சந்தையில் நல்ல விலைக்கு விற்கும் அளவிற்கு வசதியாக உள்ளனர். உள்ளூரில் விற்கும் துணிகள் சலவை செய்யாமல் விற்கப்படுகின்றன.

'இப்பகுதியின் நெசவாளர்கள் கைக்கோளர் மற்றும் சேடர்கள் ஆவர். இவ்விரு வகையினரும் 22 முழம் மெல்லிய மஸ்லின் துணி, 22 அல்லது 24 முழம் பட்டு ஓரம் கொண்ட மஸ்லின், சிவப்பு ஓரம் கொண்ட மொத்தமான சேலைத் துணி - 19 முழ நீளம்; 2¼ அல்லது 2½ முழ அகலத்தில், உருமாலை அல்லது கைக்குட்டைத் துணி - இரண்டு × ஆறு முழம் சதுரத்தில், பர்கலா என்ற மொத்த ரக வெள்ளைத் துணி - 20 முதல் 22 முழ நீளத்தில், ஆகிய துணிகளை நெய்கின்றனர். இத்துணிகளுக்குச் சமீபத்தில் புது வரி விதித்துள்ளார்கள். 'நைஸ்' துணிக்கு 5¼ பென்ஸ் வீதமும், மொத்த ரகத்துணிக்கு 2¾ பென்ஸ் வீதமும் வரி. அதை எதிர்த்து நெசவாளர்கள் வேலையை நிறுத்தி விட்டார்கள்; கலெக்டரைப் பார்த்து முறையிட்டுள் ளார்கள். முன்பு ஒவ்வொரு தறிக்கும் ஆண்டுதோறும் செலுத்தி வந்த வரிக்குப் பதிலாக இந்தப் புதிய வரி கொண்டு வரப் பட்டுள்ளது.

'இங்குள்ள சேடர்கள், மலைக்கு அந்தப் பக்கமுள்ள தெலுங்கு தேவாங்கர்களைச் சார்ந்தவர்கள். அவர்களிடையே திருமண உறவு உண்டு. அவர்கள் இன்று தெலுங்கு பேசு கிறார்கள். அவர்களில் பெரும்பகுதியினர் லிங்கம் தரிக்கின்ற னர்; சிலர் பிராமணரைப் பின்பற்றி விஷ்ணுவை வழிபடு கின்றனர்.. லிங்கம் தரிப்பவருக்குத் தனியே குருவானவர் இருக்கிறார்; அவர் பெயர் சீரங்க தேவரு; அவருடைய மடம் கும்பகோணத்தில் உள்ளது. நான்கைந்து ஆண்டுகட்கு ஒரு முறை அந்தக் குரு தனது பிரதிநிதியை இங்கு அனுப்பி தட்சிணையைப் பெறுகிறார். குரு நேரில் வரும்போது உபதேசம் செய்கிறார்..'

**23** ஆம் தேதி ஏழு மலபார் மணி நேர தூரம் கடந்து பவானி ஆற்றின் தெற்குக் கரையிலுள்ள **முடுக்கந்துறை** (Moducundery) அடைந்தார். வழியில் புக்கானனின் குழுவினருக்குக் குழப்பம் நேரிட்டது. அவ்வூர் ஆற்றின் வடக்குக் கரையில் உள்ளது என்று யாரோ சொல்ல, இவர் ஒரு பக்கம் செல்ல, அவருடைய கூடாரம், பெட்டி, படுக்கைகள் மற்றொரு புறமாகவும் சென்று விட்டன. இத்தனைக்கும் ஐந்து வழிகாட்டிகள் உடன் வந்தனர். வடக்குப் பக்கத்துக்கு ஆட்களை அனுப்பி, காணாமற் போனவர்களைத் தேடிக் கண்டு பிடித்துக் கூட்டி வந்தனர். பரிசல் மூலம் ஆற்றைக் கடந்தார் புக்கானன். சேர்ந்த இடம் **தோத்தாரப்பாளையம்** (Dodarapalayam). அங்கு **50** நெசவாளர்களின் வீடுகள் இருந்தன. அவர்கள் அனைவரும் கன்னட தேவாங்கர்கள். புதிய தறி வரி பற்றி அவர்களுக்கு விசனம். தறி ஒன்றுக்கு இருபது பணம் அளவிற்குக் கட்ட வேண்டி வரும். முந்தைய வரி ஐந்து பணம் மட்டுமே!

மாக்ளியாட் ஜில்லாவின் மேற்குப் பகுதியில் கன்னட தேவாங்கர்கள் அதிகம் இருந்தனர். ஆனால் அவர்களின் முன்னோர் அணிந்திருந்த லிங்கத்தை அவர்கள் இப்போது விட்டுவிட்டனர். இப்போது அவர்கள் வைணவர் ஆகி விட்டனர். அவர்களில் பலர் எழுபது ஆண்டுகட்கு முன்னர் ஏற் பட்ட பஞ்சத்தால், நாமக்கல்லிலிருந்து வந்து குடியேறிய வர்கள். அவர்கள் லிங்கம் தரித்த கன்னட தேவாங்கர்களிடமும் தெலுங்கு தேவாங்கர்களிடமும் மணவினை கொள்வதில்லை. அவர்கள் அனைவரும் நெசவாளர்கள் அல்லது துணி வியாபாரிகள்.

அவ்வூரிலிருந்து ஒரு மைல் தூரத்தில் மாவுக்கல் படிந்த கனிமங்கள் இருந்தன; தரமானவை, அதிலிருந்து பலவிதச் சமையல் பாத்திரங்களைச் செய்கின்றனர். அவை சூட்டைத் தாங்குகின்றன; எளிதில் உடையக்கூடியவை அல்ல. அப்பாத்திரங்களைச் செய்வதனால் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. சீரங்கப்பட்டணம் வரை அவை ஏற்றுமதியா கின்றன. அப்பகுதியில் மக்கள் தொகை கணிசமாக இருந்தது.

**அ**டுத்த நாள் புக்கானன் **தணாயக்கன் கோட்டைக்குச்** சென்றார். அவர் குறிப்பிடுகிறார்: 'அக்கோட்டை பவானி ஆற்றின் வடக்குப் பகுதியில் உள்ளது. மோயாறு பவானியுடன் கலக்குமிடத்திற்குச் சற்று மேலே உள்ளது. கோட்டை பெரிதாக உள்ளது. ஐம்பது வீடுகள் மட்டும் அங்குள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கோட்டைக்கு வெளியில் 107 வீடுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அக்கோட்டை மதுரை ராஜாவின் கீழிருந்த தணநாயக்கன் என்ற பாளையக்காரரால் கட்டப்பட்டதாம். அந்தப் பாளையக்காரனின் சந்ததியினரிட மிருந்து மைசூர் ராஜா அதைப் பிடித்தார். அப்பகுதியிலுள்ள வர்களில் பலர் கன்னட மொழி பேசுகின்றனர். *

'சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு முப்பது அல்லது நாற்பது நாயர்கள் வயநாடு பகுதியிலிருந்து வந்து, கம்பெனி ஆட்சிக்குட்பட்ட மலை மேலிருந்த ஒரு கிராமத்தின் தலைவனைச் சந்தித்து 60 அல்லது 70 ஆட்களைத் திரட்டி அவர்களுடன் பேசி, தங்களுடன் சேர்ந்து கொள்ளச் சம்மதிக்க வைத்தனர். இரு கூட்டமும் சேர்ந்து சமவெளியிலிருந்த மூன்று கிராமங்களில் கொள்ளையடித்துச் சென்றனர். நூறு கண்டசாரா காவல்காரர்கள் மற்றும் சில சிப்பாய்களை அனுப்பிய பிறகு நடந்த கைகலப்பிற்குப் பின் அந்த கிராமத் தலைவனையும் ஏழு ஆட்களையும் கைது செய்தனர். அவர்களில் மூவர் நாயர்கள். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அக்கொள்ளைக்காரர்கள் மலை மீதிருந்த கிராமங்களில் தொல்லைகள் தந்தனர். ஆனால், அவர்கள் சமவெளி கிராமங்களில் இதற்கு முன் செய்ததில்லை.

'நான் கடந்து வந்த பகுதியில் நல்ல நிலம் உள்ளது; ஆனால் முற்றிலும் தரிசாக உள்ளது. காரணம், திப்பு சுல்தானின்

---

* தணாயக்கன் கோட்டையைக் கட்டியவர் பெருமாள் தண்டநாயகன் என்ற, ஒய்சள மன்னன் மூன்றாம் வல்லாளனின் அமைச்சர் (13, 14 ஆம் நூற்றாண்டு) அல்லது மாதப்ப தண்டநாயகன் 1318 இல் கட்டியதாகக் கருதப்படுகிறது. (நீலகிரி மாவட்ட கஜட்டியர், 1995/பக்.210). திப்பு சுல்தானின் மரணத்திற்குப் பின் (1799) ஆங்கிலேயருக்குக் கிடைத்த பகுதிகளில் தணாயக்கன் கோட்டை தாலுகாவும் ஒன்று. அப்போது, தற்கால நீலகிரி மாவட்டம் தணாயக்கன் கோட்டை தாலுகாவில் இருந்தது. 1830 வரை அந்நிலை தொடர்ந்தது (மேலது நூல், 1 பக்.216)

படைகள் பல முறை சீரங்கப்பட்டணத்திற்கும் கோயமுத்தூருக்கும் இடையே சென்றன. இப்போது இங்கு புன்செய்ப் பயிர்கள் மட்டும் பயிரிடப்படுகின்றன. முன்பு இங்கிருந்து மூன்று மலபார் மணி நேரத் தூரத்தில், கோட்டைக்கு மேல், ஒரு அணை இருந்தது. அதிலிருந்து 500 கண்டகம் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைத்தது. அந்த அணை சுமார் 100 ஆண்டுகட்கு முன்பு லிங்கையா என்பவனால் கட்டப்பட்டது. ஆனால் அந்த அணை அடுத்த ஆண்டே வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டது. அதற்குப் பிறகு அது கவனிப்பாரற்று உள்ளது. கலெக்டர் மாக்ளியாட் அதைப் பழுது பார்க்க முயன்றார். ஆனால் மழைக் காலம் வந்ததால் வேலை நிறுத்தப் பட்டுள்ளது.

'அருகிலுள்ள மலைகளில் மூங்கில், கடினமான மரங்கள், தேக்கு, வேங்கை, பலா போன்ற மரங்கள் வளர்கின்றன. படகர்கள் தேனையும் மெழுகையும் எடுக்கின்றனர். அங்கிருந்து மலபார் வரையான மலைப் பகுதியில் அவர்கள் வசிக்கின்றனர். அவர்கள் சிறிய கிராமங்களில் குடிசைகளில் வசிக்கின்றார்கள்; கொத்துக்காடு விவசாயம் செய்கின்றனர். ஆனால் கலப்பையும் வைத்துள்ளனர். அவர்கள் எடுக்கும் தேனும் மெழுகும் கணிசமான அளவுக்கு உள்ளன. அதற்கு அவர்கள் பணம் கொடுப்பதில்லை. ஏனெனில் காட்டிலாகா அதிகாரிகள் இங்கு இல்லை...'

அடுத்த நாளும் (25.10.1800) புக்கானன் தணாயக்கன் கோட்டையில் தங்கினார். அங்கிருந்து நெடுந்தூரம் நடந்து, களைத்து, மேற்கத்திய மலைகளின் ஒரு கோம்பையைக் காணச் சென்றார். அவ்வூரில் இருளர்கள் வாழ்ந்தனர். அவர்கள் இயற்கையோடு ஒன்றிப் போவது போல நிர்வாண நிலையில் இருந்ததாக அவருக்குச் சொல்லப் பட்டது. மரங்களுக்கு அடியில் படுத்து உறங்குவர் - உடலைப் போர்த்திக் கொள்ள எதுவுமின்றி. சீறி வரும் புலிகளைக் கண்டும் அவற்றி லிருந்து தொல்லை நேராதபடி பார்த்துக் கொள்கிறார்கள். அவருடன் வந்த மொழி பெயர்ப்பாளர் கூறினாராம் - இருளர் பெண்கள்

தம் குழந்தைகளைப் புலிகளின் பாதுகாப்பில் விட்டு காட்டிற்குச் சென்று, கிழங்குகளைப் பறித்து வருவார்களாம்..

மலைகளின் மேல் இருளர்களின் கிராமங்கள் இருந்தன. அவர் பார்த்த ஒரு கிராமத்தில் ஏழெட்டு குடிசைகள் இருந்தன. அருகே ஆடுகளை அடைக்க சதுரவடிவில் பட்டிகள் அமைத்திருந்தனர். இரவில் அவற்றைப் புலிகளிடமிருந்து பாதுகாக்க பட்டியைச் சுற்றி தீ மூட்டிவிடுவார்களாம். அவர்களின் குடிசைகள் சிறியன; ஆனால் கூடுமானவரை சுத்தமாக இருந்தன. மூங்கில்களால் கூடைபோல நெருக்கிக்கட்டி உள்ளே களி மண்ணால் பூசியிருந்தார்கள். அவர்களிடம் கோழி, ஆடுகள் நிறைய உள்ளன. சில பசுக்களையும் வைத்துள்ளார்கள். பசுக்களைப் பால் கறப்பதற்கு மட்டும் பயன்படுத்துகின்றனர். ஏனெனில், அவர்கள் உழுவதில்லை. உணவிற்காகக் காட்டுக் கோழிகளை வலை மூலம் பிடிப்பதில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். சிலசமயம் அவர்கள் வலைகள் மூலம் புலியைப் பிடித்துக் கொல்கிறார்கள். அவர்களின் வீடுகளுக்கருகில் வாழை, எலுமிச்சை மரங்களை வளர்க்கின்றார்கள். பக்கத்து நிலங்களில் கொத்துக்காடு முறையில் வேளாண்மை செய்கின்றனர். வருடத்திற்கொரு முறை நிலத்தை மாற்றிச் செய்கின்றனர். இவை போக, வள்ளிக் கிழங்கைப் பறித்து உண்கிறார்கள். மரம், மூங்கில் முதலியவற்றை மலைக்குக் கீழேயுள்ள மக்களிடம் கொண்டு சென்று விற்கிறார்கள். வயல்வேலைகளில் ஆண்களும் பெண்களும் சரிசமமாக உழைக்கிறார்கள். அவர்களின் நிலங்கள் நல்ல மண் கொண்டவை. இரண்டு பருவ மழைகளாலும் நீர் கிடைக்கிறது. அவர்களுக்கு நிரந்தர வீடுகளும் வயல் நிலங்களும் இருந்தாலும், (அஸ்ஸாம் - கிழக்கு வங்கத்தின்) சிட்டகாங் மலைகளில் உள்ள பொமாங்-கிரி மற்றும் பிற மலைவாழ் மக்களைவிட வசதியானவர் இல்லை. இவர்களின் வீடுகள் சுமாராகத்தான் உள்ளன. ஆண்-பெண்களின் உடைகள் மிகக் குறைவு; அழுக்கானவையும் கூட; திரிபு கன்னட மொழி பேசுகிறார்கள். ஆகவே, ராமகிரி

யில் புக்கானன் குறிப்பிடும் தமிழ் பேசிய இருளர்களைவிட இவர்கள் வேறானவர்கள்.

அம்மலைக் கோம்பையிலிருந்து பவானி ஆற்றின் முழு அளவையும் கண்டாராம். அத்துடன் சேர நாட்டின் (கொங்கு நாடு) சங்ககிரி துருகம் வரையுள்ள பகுதியைப் பார்த்தாராம். தூரத்திலிருக்கும் மலைகளும் தென்பட்டனவாம். அம்மலைக் கருகில் வற்றாத ஒரு ஊற்றிலிருந்து வந்த குளிர் நீரைத் தாகம் தணிக்கப் பருகினார் புக்கானன். இந்தியாவில் அது போன்ற குளிர் நீர் கிடைக்கும் ஊற்றுகள் அரிது என்கிறார் அவர்.

புக்கானனின் பயணத்தில் நீலகிரி மாவட்டத்தைப் பற்றிய குறிப்புகள் இவ்வளவுதான். ஏனெனில், அக்காலத்தில் நீல மலையிலிருந்து வெளியாரிடம் போக்கு வரத்து குறைவு என்றே சொல்ல வேண்டும். நீல மலையின் மீது ஏறிய ஐரோப் பியர்களில் புக்கானன் இரண்டாவது நபர். அவருக்கு முன்னர் *1602, 1603* ஆம் ஆண்டுகளில், தக்க துணையுடன், ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் நீலகிரியில் தோடர்களின் குடியிருப்புகளைக் காணச் சென்றாராம். * அதற்குப் பிறகு இரு நூறு ஆண்டுகள் கழித்துச் சென்ற ஐரோப்பியர் புக்கானன்தான். இப்போதைய நீலகிரி மாவட்டத்தினுள் *1819* வரை எந்த ஐரோப்பியரும் வசிக்கவில்லை, (நீலகிரி மாவட்ட கஜட்டியர்/ பக் *867*). நீல மலையின் மேல் புக்கானன் ஏறிச் சென்ற இடம் ஆரக்கோடு என்கிற ஊராகத்தான் இருக்க வேண்டும். ரங்கசாமி சிகரம் என்றழைக்கப்படும் காடுகளுக்குத் தெற்கே கோத்தகிரி தாலுக்காவில் உள்ள ஊர் அது.**

புக்கானனுக்குப் பிறகு தணாயக்கன் கோட்டை வழியே சென்று நீலகிரியின் தொடர்ச்சியான தலைமலைகளில் குறுக்கும் நெடுக்குமாகத் திரிந்து, மலைகளைக் கடந்து சீரங்கப்பட்டணத்திற்குச் சென்ற ஒரு பயணி ஹென்றி பெவன் என்ற ஆங்கிலேய ராணுவக் கேப்டன். திருச்சிராப்பள்ளி

* நீலகிரி மாவட்ட கஜட்டியர், 1995/பக். 223.

** மேலது நூல் / பக். 867

யிலிருந்து மைசூர் - பெங்களூருக்குச் செல்லவும், வழியில் சத்தியமங்கலம் - கஜல்கட்டிப் பாதையைச் செப்பனிடவும் அவரிருந்த படைக்கு உத்தரவிடப் பட்டது. அது 1809 ஆம்ஆண்டு. ராணுவப் படை வீரர்கள் சமாதான காலத்தில் ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு ஒரு முன்னோடி அது. ஹென்றி பெவன் நீலமலைப் பகுதியில் தனக்கேற்பட்ட அல்லது கேட்டறிந்த தீரச் செயல்களை விவரித்துள்ளார். அதில் ஒரு பகுதியைக் காண்போமே!

'...சத்தியமங்கலத்தைக் கடந்தால் ஏராளமாக யானை களைக் காணலாம். ஆனால் அவை நெருங்கி வரத் தயங்கும். மலைப் பகுதியின் அடிவாரத்தில், நான் இரண்டு புள்ளி மான்களையும் ஒரு காட்டுப் பன்றியையும் சுட்டேன். மலைச் சாலையைப் பழுது பார்த்து வந்த சில வீரர்கள் அருகிலிருந்த குழிகளிலிருந்து சில குட்டி யானைகளை மீட்டனர். யானைகளைப் பிடிக்க சுமார் 18 அடிகள் ஆழம், 25 அடிகள் நீளம், 14 அடிகள் அகலம் கொண்ட குழியைப் பறித்து, அதன் மேற்ப்பகுதியை மூங்கில் தடுக்குகளால் மூடி அதன்மீது இலை - தலைகளைப் பரப்பி வைப்பார்கள். குழியைச் சுற்றிலும் வாழை மரங்கள் மற்றும் செடி கொடிகள் வைக்கப்பட்டிருக் கும். பெரிய யானைகளை அக்குழியில் எளிதில் விழ வைக்க முடியாது. அவற்றைத் துரத்தி விரட்டும்போதுதான் பதற்றத்தில் குழிகளில் மாட்டிக் கொள்ளும்.. இதுபோல மான், காட்டுப் பன்றி, காட்டெருது போன்ற விலங்குகளும் பிடிக்கப்படும் - ஆனால் அதற்கான குழிகள் சிறியனவாக இருக்கும்.

'நாங்கள் தலைமலைக்கு வருவதற்கு முன்பு, படை வீரர்கள் அங்கு முகாமிட்டு வேலைகள் செய்து கொண்டிருந்தனர். அவர்களுடன் ஒரு டாக்டரும் தங்கியிருந்தார். அந்த முகாமிற்கு அருகில் ஒரு நாள் ஒரு கரடி அந்த மருத்துவரைத் தாக்கி மண்டையில் அடித்தது. மருத்துவரும் அந்தக் கரடியைத் தாக்கினார். அப்போராட்டத்தில் கரடியின் பிடியில் மருத்துவர் மாட்டியிருந்தார். (கரடிப் பிடியை எண்ணிக் கொள்ள வேண்டும்). அவருடைய தாக்குதலில் கரடி இறந்தது. ஆனால்

அவருடைய மண்டையில் பட்ட பலத்த அடியால் படுகாய முற்றவர், சில நாட்களில் இறந்தார். கரடிகள் சாதாரணமாகப் பயந்த சுபாவமுடையவை. ஆனால் கரடியின் குட்டி, தாயின் முதுகில் தொற்றிக் கொண்டு செல்லும்போது அதை யாராவது பிடுங்கினால் அக்கரடிக்கு ஆக்ரோஷம் வந்துவிடும். அப்படிப் பட்ட சூழ்நிலையில் அந்த மருத்துவர் மாட்டியிருப்பார்...

'... பின்னர் நாங்கள் அந்த முகாமில் சேர்ந்து மேலே சென்றதற்குச் சில நாள்களுக்கு முன்பு திருச்சி படையிலிருந்த மற்றொரு அதிகாரி வேறொரு படைப் பிரிவுடன் கஜல்கட்டிக் கணவாய் வழியாகப் பம்பாய்க்குச் சென்றார். வேட்டை யாடுவதில் அவர் வல்லவர். சமயத்தில் விடுப்பு எடுத்துக் கொண்டும் வேட்டையில் ஈடுபடுவார். உடன் இரண்டொரு வீரர்களையும் உள்ளூர்க்காரர்களையும் கூட அழைத்துச் செல்வார். அவர் இப்பகுதியில் சென்று கொண்டிருந்த போதும் வேட்டையாடச் சென்றார். அப்போது தலைமலைக்கு அருகில் ஒரு இடத்தில் அவ்வூர் மக்கள் கரடியால் இறந்த மருத்துவரின் (டாக்டர் கில்லெஸ்பி) நினைவாக மாலை நேரங்களில் விளக்கு ஏற்றுவதைப் பார்த்துக் கேள்விப் பட்டாராம்.. இதை அவர் சொல்லக் கேட்டேன்..

'அந்த மருத்துவர் இறந்த இடத்திற்கு அருகாமையிலிருந்த ஒரு குளக்கரையிலிருந்து ஒரு மான் சென்ற தடயத்தைக் கண்ட அந்த அதிகாரி, காட்டினுள் சென்றார். உடன் வந்த ஆட்களைப் புதர்ப் பக்கத்தில் கூச்சல் போடச் செய்தார். ஒரு பெரிய மான் துள்ளி ஓடியது; அவர் அதைச் சுட்டார். மீண்டும் அத்துப்பாக்கி யில் குண்டை ஏற்றுவதற்குள் அந்த மானிடமிருந்து மரண ஓலம் கேட்டது. மெதுவாகப் புதருக்குள் மறைந்து சென்றார். அவர் பின்னால் இரட்டைக் குழல் துப்பாக்கியைப் பிடித்தபடி ஒரு ஆள் தொடர்ந்தார். இருபது தப்படிகள் நடந்து தலையை உயர்த்திப் பார்த்தார். நாலு கஜம் தூரத்தில் ஒரு பெரும் சிறுத்தையின் கண்களைக் கண்டார். அந்த உருவம் தன்னை உற்றுப் பார்ப்பதையும் கண்டார். சிறுத்தையைச் சுட துப்பாக்கியை ஏந்தினார். சிறுத்தையோ தன் முன் உடலை உயர்த்தி தோள் பட்டையைச் சிலுப்பி அவரைத் தாக்க

எத்தணித்தது. அவருடைய துப்பாக்கி சிறுத்தையின் தோள் பட்டையின்மீது இரண்டு குண்டுகளைப் பொழிந்தது. இரண்டாவது துப்பாக்கிக்காக பின்னால் வந்தவரைக் கேட்டார். ஆனால் அதை வாங்குவதற்குள், காயம்பட்ட சிறுத்தை அவர் மேல் பாய்ந்தது. கையிலிருந்த துப்பாக்கியின் அடிப்பாகத்தினால் அதைத் தாக்கினார். அதையும் மீறி அது அவரைத் தாக்கிக் கீழே தள்ளியது. சிறுத்தையுடன் அவர் உருண்டார். சிரமத்துடன் தாக்குதலைச் சமாளித்தார். சிறுத்தை ஓடிவிட்டது. வெளியே வந்தவர், உடன் வந்தவர்களுடன் சேர்ந்துகொண்டு சிறுத்தை இன்னும் அங்கிருக்கிறதா என அறிந்து கொள்ள சில எருமைகளை கானகத்திற்குள் ஓடவிட்டனர். சிறிது நேரத்திற்கு அமைதி நிலவியது. அவர் மீண்டும் காட்டிற்குள் சென்றார். இறுதியில் குண்டடிபட்ட அந்தச் சிறுத்தை இறந்து கிடப்பதைக் கண்டார். அதனருகில் தவறவிட்ட அவரது துப்பாக்கியையும் கண்டார்..'

நீலகிரியின் தொடர்ச்சியான தலைமலைக் கானகத்தினுள் செல்ல நேர்ந்தால் சந்திக்கக் கூடிய சில்லிடும் அபாயத்தை நேரடிக் காட்சிகளாகப் பதிவு செய்துள்ளார் ஹென்றி பெவன்.*

**நீ**லமலையில் ஒரு நாளைக் கழித்த பின், ஏழரை மலபார் மணிநேர தூரம் கடந்து பவானி ஆற்றின் கிழக்குத் திசையில் வலது கரையில் உள்ள **சிறுமுகை**க்குச் சென்றார் புக்கானன், தெற்கிலிருந்து பவானி ஆறு ஓடையாக ஓடி வரும் இடம் அது. முன்பு உழவு செய்த நிலத்தின் ஒரு பகுதியில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டிருந்தது - அதுவும் ஆற்றங்கரையோரங்களில் மட்டும். மண் வளமானது. அங்கிருந்து சற்று தூரத்திலுள்ள மேல் பகுதியில் மண்ணும் கற்களுமாக உள்ள நிலம். அங்கு வளர்ந்து வந்த மரக்கன்றுகளைப் பார்க்கையில் நீண்ட நாட்களாக அப்பகுதி ஆளரவமற்று இருந்ததாகத் தெரியும். (நீண்ட காலமாகப் போர் நடைபெற்ற பகுதியாயிருந்ததால், மரம், செடி, கொடிகளை அழித்திருப்பார்கள். ராணுவ வீரர்களுக்காக உணவு தயாரிக்க விறகு மற்றும் கால்நடைகளின்

* Thirty Years in India - Major Bevan - vol 1/1839/pp. 56-60

தீவனத்திற்காக). சிறுமுகை ஒரு சுமாரான கிராமம். * இருபது வீடுகள்தான் இருந்தன. சில கடைகள் இருந்தன. கடைகள் உள்ள கிராமம் அந்தப் பிராந்தியத்தில் அரிதானது. திப்புவின் ஆட்சிக் காலத்தில் அவ்வூரில் ஒரு ஆமில்தார் (கோட்டைத் தலைவர்) இருந்தான். அவன் கோயமுத்தூர் அசாஃப்பின் (ஆளுநர்) கீழ் இருந்தவன். கிராமத்தில் அழிந்துபோன குடிசைகள் பல இருந்தன. மழையில்லை என்று மக்களுக்குக் குறை. காய்ந்திருந்த நிலங்கள், கால் நடைகளுக்கும் தீவன மில்லாத பூமி ஆகியவை அவர்களின் மனக்குறையை உறுதி செய்தன.

புக்கானனுடன் சென்றவர்களில் 15 பேர் காய்ச்சலால் உடல் நலமின்றி இருந்தனர். அடுத்த நாள் மேலும் 7½ மலபார் மணி நேர தூரம் கடந்து **கூலூர்** கிராமத்திற்குச் சென்றார். அங்கு ஒரு கடையும் இல்லை. வழியில் ஒரு மண்கோட்டை இருந்தது. வழிப்பகுதியின் பூமியில் வளமான மண் இல்லை. ஆகவே விவசாயம் இல்லை. அப்பருவத்தில் இரண்டு நாள்களில் மட்டும்மழை இருந்ததாம். முந்தைய 15 நாள்களில் மழை இல்லை. அதிக மழை இருந்திருந்தால் விவசாய வேலைகள் நடந்திருக்கும். மக்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசினர். சிலர் தெலுங்கும் பேசினர். ஆனால் வழியில் கன்னடம் பேசியவர் இல்லை.

அடுத்த நாள் அக்டோபர் 28, 1800 அன்று எட்டு மலபார் மணி நேர தூரம் கடந்து புக்கானன் அடைந்த ஊர் **கோயமுத்தூர்...** வழியில் அவர் பார்த்த பூமி பாறைகளும் கற்களும் இன்றி பொதுவாக நல்ல மண் கொண்டிருந்தது. தணாயக்கன் கோட்டையிலிருந்து கோயமுத்தூர் வரை வழியில் மர வகைகளை நட்டிருந்தனர். அவற்றைத் தவிர அந்தப் பிராந்தியத்தில் நிலம் வெறுமைதான் - சீரங்கப் பட்டணத்தைச் சுற்றியிருந்த பகுதிகளைப் போன்று.

---

* 1826 இல் கவர்னராயிருந்த சர் தாமஸ் மன்றோ, சிறுமுகையிலிருந்துதான் நீலகிரிக்குச் சென்றார் - கோத்தகிரி வழியே. நீலகிரி மலைகளுக்குச் செல்லும் முதல் சாலை சிறுமுகையிலிருந்து கோத்தகிரி வரை 1820 இல் அமைக்கப்பட்டது - நீலகிரி மாவட்ட கஜட்டியர் -1995- ப. 1297

புக்கானன் தந்துள்ள இக்குறிப்பின் மூலம் அப்பகுதியில் கடந்த ஆண்டுகளில் படைகள் சென்ற வண்ணமிருந்தன. சண்டைகள் நடந்தன. வழி நெடுக மரம், செடி, கொடிகள் அழிக்கப் பட்டன. ஊர்கள் வெறிச்சோடிப் போயின. மக்கள் எவ்வாறு அச்சத்தில் ஆழ்ந்திருப்பர்; துன்பப் பட்டிருப்பர்; தம் ஊர்களை விட்டு அகன்றிருப்பர் என்பனவற்றை உணரலாம்..

இந்த வெறுமை நிலைக்கான காரணத்தை, அக்கால கட்டத்தில் ஆந்திரப் பிரதேசத்தில் கடப்பா ஜில்லா கலெக்டராயிருந்த தாமஸ் மன்றோ தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் *(1801, மே 3)* விளக்குகிறார்: '....நான் பயணம் செய்யும் இடங்களில் மரங்களைக் காண முடியாது. ஸ்காட் லாந்திலுள்ள நிலையைவிட மோசம். பெனுகொண்டா விலிருந்து குத்தி, ஆதோனிமுதல் கிருஷ்ணா வரையுள்ள வழியில் இருபது மைல்களுக்கு ஒரு மரத்தைத்தான் காண முடியும். அப்பகுதியின் மொத்தத்திலும் ஒரு இடத்தில் ஐம்பது மரங்களைக் காண முடியாது. வெற்று நிலத்திற்கான காரணம், ஸ்காட்லாந்தில் உள்ளதைப் போல் மண் குறைபாட்டினால் இல்லை. இப்பகுதியில் பூமி நல்ல மண் கொண்டது. தானியங்களும் மரங்களும் நன்கு உற்பத்தியாகும். இந்த வெறுமைக்குக் காரணமாக நான் நினைப்பது இப்பகுதி சதா பெரும் குதிரைப் படைகளின் போர்க்களங்களாகத் திகழ்ந்தமைதான். அப்படைகளுடன் பெரும் அளவில் யானை களும் ஒட்டகங்களும் பின்தொடர்ந்து செல்லும். மரங்களின் கிளைகள் அவற்றின் உணவிற்காக வெட்டப்பட்டன. மரங்களின் அடிப்பகுதி வெட்டப்பட்டு, விறகாகி குதிரைகளின் உணவுக்கான தானியங்களை வேக வைக்க உபயோகமாயின. அத்துடன் நீண்ட காலமாகத் தொடர்ந்த மக்கள் நலனில் அக்கறையில்லாத அரசாங்கங்கள் மரக்கன்றுகளை நடும் எண்ணமில்லாத தாயிருந்தன. இங்கே பயணம் மேற்கொண்டு செல்லும்போது, பாராமகாலில் இருந்த மாதிரி மரத் தோப்புகள் இங்கிருக்கக் கூடாதா? தகிக்கும் வெயிலில் சற்று இளைப்பாறலாமே என்று தோன்றும்...' *

* Life of Sir Thomas Munro /G.R.Gleig 1849/p.161

# 10

# கோயம்புத்தூரில்

'கோயம்புத்தூர் என்றழைக்கப்படும் இவ்வூரின் பரம்பரைத் தலைவர் ஒரு வேளாளர். முன்பு அவருடைய முன்னோர்கள் அருகிலுள்ள மலையடிவாரத்தில் குடியிருந்தனர். இவ்வூர்ப் பகுதி அப்போது வனமாக இருந்தது; மலசர்கள் என்ற முரட்டு மலைவாசிகள் நான்கைந்து குடிசைகளில் இருந்தனர். அவர்களின் தெய்வமான கோணியம்மாவிற்கு ஒரு கோயிலும் இருந்தது; அக்கோயில் இப்போதும் உள்ளது; அந்த ஊரின் பெயர் கோயம்பதி/கோயம்பட்டி... (Coimpuddi)*

'இப்போதுள்ள ஊர்த் தலைவரின் மூதாதையர், அந்த மலைவாசிகளின் அனுமதியைப் பெற்று இவ்வூருக்கு வந்து, ஒரு கோட்டையைக் கட்டி வசிக்கலாயினர். அம்மக்கள் இறந்த பின்னர், அவ்வேளாளர் தலைவரின் கனவில் கோணியம்மன் தோன்றி தனது கோயிலை விரிவு படுத்தி, ஒரு பூசாரியை நியமிக்கக் கட்டளையிட்டாள். அப்படிச் செய்தால் அந்தத் தலைவரின் அதிகாரம் கூடும் எனக் கூறினாள். கோட்டக்கார (cotegara) காளியப்பன் என்று பெயரை மாற்றிக் கொள்ளவும்

---

* மிகச் சிறிய கிராமம், 'பட்டி' என்று அக்காலத்தில் வழங்கப்பட்டது. சிக்கதேவராயன் (1673-1704) காலத்திய நாட்டு அமைப்பைக் குறிப்பிடும் அலெக்சாண்டர் ரீடு, 'each gurry or district was divided into hoblies consisting of an unequal number of grams or large villages under which were several **putties** or cottages---' எனக் குறிப்பிட்டுள்ளார். (Baramahal Records 1/பக்.139). பேரூருக்கு அருகில் உருவான புதிய ஊர் 'பு(த்)தூர்' ஆகியிருக்கும்.

சொன்னாள். ஊரின் பெயரையும் கோயம்புத்தூரு என்று மாற்றச் சொன்னாள். அந்த வழியில் வந்துள்ள இப்போதையத் தலைவர் இருபதாவது வம்சாவளி நபராம். அத்தலைவர் முதலில் மதுரை ராஜாவிற்குத் திறை செலுத்தி வந்தார். இந்த நாட்டை சுமார் 150 ஆண்டுகட்கு முன்பு (கி.பி.1650) மைசூர் மன்னர் பிடித்தார். அதன் பின்னர் அக்கோட்டை விரிவு படுத்தப் பட்டது.

'ஐதர் அலி ஆட்சியைப் பிடித்ததற்குச் சிறிது காலம் முன்பும், அதன் பிறகும் இந்த நாட்டை மாதண்ணன் என்பவன் நாற்பது ஆண்டு காலம் ஆண்டு வந்தான். * அவன் லிங்கம் தரித்த ஒரு லிங்காயத்து அவன் ஒரு வீட்டை இங்கு கட்டினான். உள்ளூர் மக்கள் அதை அரண்மனை என்று அழைத்தனர். அது ஒரு மிகப் பெரிய கட்டடம். ஆனால் நேர்த்தியாகக் கட்டப்

---

* புக்கானனின் குறிப்புகளை வேறு நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளவற்றுடன் ஒப்பிட்டுக் காண்பது அவசியமாகிறது. ஏனெனில் அந்த அரண்மனை, கோயம்புத்தூர் நகரின் மையப் பகுதியிலிருந்ததாலும், 'ராஜவீதி'யாகிய பிரதான சாலையையும் அது அடையாளப் படுத்துவதால் மேலும் விவரங்களைக் காண்பது நலம்.

'கோயம்புத்தூர் நகரின் முக்கியச் சாலை 'மாதே ராஜமகால் தெரு' என்பதாகும். மாதையா என்பவன் மைசூர் மன்னர் சிக்கதேவராயாவின் (1673 - 1704) கோயம்புத்தூர்த் தலைவனாகக் கருதப்படுகிறான். அவனுடைய அரண்மனை அந்தத் தெருவில் இருந்தது. மாதையனை, மாதண்ணன் என்ற ஐதர் அலியின் தளபதியுடன் சேர்த்து குழப்பிக் கொள்ளக் கூடாது. ஐதரலிக்காக, மாதண்ணன் இவ்வூரைக் காத்து வந்தான். ஐதரலியும், திப்பு சுல்தானும் தங்களது தெற்கு - மேற்குப் பகுதிகளில் போர் புரிந்த சமயங்களில், இந்த அரண்மனையில் தங்கியிருந்ததாகச் சொல்லப்படுகிறது..' என்று கோயம்புத்தூர் கஜட்டியர் கூறுகிறது. (இணைப்பு 1933/பக்.221),

'---கள்ளிக்கோட்டையிலும் பொன்னானியிலும் தனது பாதுகாப்புப் படைகளை நிறுத்தி விட்டு, சமூரியர்களின் நாட்டை கோயம்புத்தூர் ராஜாவின் பொறுப்பில் ஐதர்அலி விட்டார்; அந்த ராஜா ஒரு பிராமணர்; மைசூரின் கீழிருந்த ஒரு குறுநில மன்னன்; அவர் பிராமணர் என்பதால், நாயர்களின் மரியாதையைப் பெறுவார்...' என்று திப்பு சுல்தானின் மகன் குலாம் முகம்மதுவின் மேற்பார்வையில் வெளியான ஐதர் அலி - திப்பு சுல்தான் வரலாற்று நூல் குறிப்பிடுகிறது. (The History of Hyder Ali Khan Bahadur.../p.72). ஆகவே, லிங்காயத்தான மாதண்ணன் வேறு நபராக இருக்க வேண்டும். அவர் படைத் தலைவனாயிருந்திருக்கலாம்.

'1734-65 இடையே மைசூரை ஆண்ட சிக்க கிருஷ்ணராஜாவின் ஆட்சியில், சங்கரையா என்ற குரிக்காரன் (பிரதி நிதி) கோயம்புத்தூரில் அன்றாட நிர்வாகத்தைக் கவனித்து வந்தான்' என்கிறார் ஆரோக்கியசாமி. (The Kongu Country/p.378). அத்துடன், அக்காலத்தில் செப்பேட்டுச் சாசனம் ஒன்றில், மைசூர் ராஜாவின்

பட்டதல்ல. மண்ணால் செய்த வேலைப்பாடு. இப்போது அது இங்குள்ள குதிரைப் படையின் தலைமைத் தளகர்த்தரின் இருப்பிடமாக உள்ளது. மாதண்ணனின் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் செழிப்புடன் இருந்தது. ஆனால், அதன் பிறகு நடந்த சண்டைகளினால் சேதமடைந்து விட்டது. சுமார் எட்டு ஆண்டுகட்குமுன்பு அந்தக் கோட்டையை திப்புசுல்தான் இடித்து விட்டார்.

'இவ்வூர் ஆங்கிலேயரின் கைக்கு வந்ததிலிருந்து, குறிப்பாக குதிரைப் படையின் ரெஜிமெண்ட்டின் தலைமையிடமாக மாறியுள்ள பிறகு, பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக் கிறது. இங்கு இப்போது 2,000 வீடுகள் உள்ளன. ஐதர்அலி காலத்தில் இருந்த வீடுகளைவிட இது 5/8 பகுதிதான். (ஐதரலி காலத்தில் 3200 வீடுகள் இருந்தன!) இவ்வூரில் சுமாரானதொரு மசூதி உள்ளது; திப்பு கட்டியது; அவர் அவ்வப்போது வந்து இந்த அரண்மனையில் தங்குவது வழக்கம்; இவ்வூரில் பெரிய கோயில் எதுவும் இல்லை. இங்குள்ள படைப்பிரிவின் அதிகாரிகள் என்னை அன்புடன் வரவேற்றனர்; நான் வந்த வழியில் பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் அந்தக் கரிசனம் இருந்தது. ஆங்கிலேயரின் விருந்தோம்பல் உலகின் பிற பகுதிகளைவிட மதராஸ் அரசாங்கத்தின் கீழ் உள்ள அதிகாரிகளிடம் அதிகம் வெளிப்படுகிறது..'

என்று கோயம்புத்தூர் நகரத்தின் தோற்றத்தையும், அதன் பூர்வ குடியையும், கி.பி.1800 இன் நிலையையும் எடுத்துக் கூறுகிறார் புக்கானன்.

---

கோயம்புத்தூர்ப் பிரதிநிதியான (குரிக்கார) மாதையா குறிப்பிடப்பட்டுள்ளான்; சங்கரையாவும் மாதையாவும் உறவினர்களாக - சகோதரர்களாக - இருக்கக்கூடும் என்கிறார் அவர்.

ஆகவே, கோயம்புத்தூரில் 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் ராஜா போன்று ஒருவர் ஆண்டார். அவர் மைசூரின் பிரதிநிதியாகவோ குறுநில மன்னனாகவோ இருந்தார் எனக் கொள்ளலாம். அக்காலத்தில் சங்ககிரியிலும் மைசூர் ராஜாவின் பிரதிநிதியாக ஒரு குரிக்காரன் இருந்தான். மைசூர் மன்னன் சிக்கதேவராயன் தனது நாட்டிலிருந்த73 குர்ரிகளை 84 ஆக உயர்த்தினார். ஒவ்வொரு குர்ரிக்கும் பட்டக்காரர் (நிர்வாகத்திற்கு) மற்றும் குரிக்காரர் (ராணுவம்) நியமிக்கப் பட்டனர். ஐதர் அலி காலத்தில் 84 குர்ரிகள் 144 ஆக உயர்ந்தன. (Baramahal Records 1).

அடுத்த இரண்டு நாட்களை புக்கானன் கோயம்புத்தூரில் கழித்தார்; அக்கம் பக்கத்து ஊர்களைப் பார்த்தார். அக்டோபர் 30 ஆம் தேதி காலையில் கிளம்பி இரண்டு மைல் தூரத்திலுள்ள **பேரூருக்குச்** சென்றார். அவ்வூரையும் அங்குள்ள கோயிலைப் பற்றியும் அவர் கூறுவதைக் காண்போம்:

'புகழ்பெற்ற பேரூர்க் கோயிலில் ஈஸ்வரன் குடிகொண் டுள்ளார். அது மேல் சிதம்பரம் என்று அழைக்கப்படுகிறது - பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள சிதம்பரத்திலிருந்து வேறு படுத்திக் காண்பதற்காக. இக்கோயிலிலுள்ள விக்கிரகம் நெடுங்காலத்திற்கு முன்பு அமைக்கப்பட்டது; ஆனால் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்புதான்** மதுரை ராஜாவால் அதன் மேல் கோயில் கட்டப்பட்டது. கோயிலுக்கு நான்கு ரதங்கள் உள்ளன; ஒரு அழகான குளம் உள்ளது. இந்துக்களின் வழக்கப்படி கோயில் கட்டட அமைப்பு உள்ளது; ஆனால் அது நேர்த்தி குறைவாகத் தென்படுகிறது. அதிலுள்ள சிலைகள் அழகாக இல்லை; அத்துடன் ரசனைக் குறைவாகவும் (indecent) உள்ளது. * அங்கு பொருத்தப்பட வேண்டிய சில கல் தூண்கள் கிடத்தப்பட்டுள்ளன; வேலை நடைபெறவில்லை போலும். அந்த வேலையை மேற்கொண்ட ராஜா காலமானதால் நிறைவுறவில்லை. அக்கற்கள் புதியன வாகத் தோன்றுவதால் இங்குள்ள பிராமணர்கள் கூறுவதைப் போல அவ்வளவு பழங்காலத்தவையல்ல எனத் தெரிகிறது. ஐதர் காலத்தில் பிராமணர்களுக்கு நிறைய மானியம் கொடுக்கப் பட்டது. ஆனால் திப்பு அதை நிறுத்தி விட்டார்; அதோடு மட்டுமல்லாது, இக்கோயிலிலிருந்து தங்கம் - நகைகளை அவர் கைப்பற்றவும் செய்தார்; விக்கிரக வழிபாடு உள்ள கோயில் களை இடிக்க அவர் உத்தரவு பிறப்பித்திருந்தார். ஆனால் அந்த

* வேறொரு இடத்தைப் பற்றி, 1862 இல் ஜி.யு.போப் கூறியுள்ளார். '....தேர்களில் காணப்படும் அருவருப்பூட்டும் உருவங்களும் ஓரளவு மறைந்து வருகின்றன..' - 'இந்திய மக்கள்: மதம்-பழக்க வழக்கங்கள் - நிறுவனங்கள்', அலைகள் வெளியீட்டகம், டிச.,2008, பக்.27.

** 'முன்னூறு ஆண்டுகட்கு முன்புதான்' எனக் குறிப்பிட நினைத்தவர், 'மூவாயிரம் ஆண்டுகட்கு முன்புதான்' என எழுதியுள்ளாரோ...?

உத்தரவிலிருந்து இக்கோயிலுக்கும், சீரங்கப்பட்டணம் மற்றும் மேல்கோட்டைக் கோயிலுக்கு மட்டும் விதிவிலக்குத் தந்தார். அவர் இட்ட உத்தரவு பொதுவாக நிறைவேறவில்லை; அவரே நேரில் சென்று அழித்த கோயில்களைத் தவிர... இக்கோயிலைப் பார்த்த திப்பு, அதன் வேலைப்பாடுகளைக் கண்டு இடிக்க வேண்டாமென்று தவிர்த்து விட்டார்.

'இக்கோயில் ஹூர்டிஸின் ஜில்லாவில் உள்ளது. (நொய்யலின் தெற்கில்). கோயிலின் குறைந்த பட்ச வழிபாட்டுச் செலவுக்கு அவர் மானியம் தந்துள்ளார்; ஆனால் பிராமணர் களின் கூப்பாடு, எதிர்பார்ப்புகளைவிட மிகக் குறைந்த அளவு மானியம் மட்டுமே கிடைக்கிறது என்பதுதான்... திப்புவின் காலத்திலும்கூட பூஜை, வழிபாடுகள் தடைப்படவில்லை. மறைமுகமாக மானியம் கிடைத்தது.

'பேரூரின் அருகில் சமையல் உப்பும் வெடியுப்பும் தயாரிக்கப்படுகின்றன. மாக்ளியாட் கொண்டு வந்துள்ள எடையளவுகள் கோயம்புத்தூரில் பயன்பாட்டிற்கு வர ஆரம்பித்துள்ளன; ஆனால் விவசாயிகள் இன்னும் பழைய எடையளவுகளைத்தான் கணக்கில் கொள்கின்றனர். மாதத்திற்கொருமுறை 'ஷராப்'களைக் கூட்டி வைத்து அவர்களின் ஆலோசனைகளின் பேரில், தாசில்தார் பலவேறு நாணயங்களின் மாற்று விகிதங்களை நிர்ணயிக்கிறார். எதாவது குறிப்பிட்ட நாணயங்களின் தேவை கூடுதல் அல்லது குறைவாகப் போயிருந்தால், அதற்கேற்ப பணமாற்று விகிதம் மாற்றப்படுகிறது. பக்கத்தில் நெல் விளையும் நிலங்கள் அதிகம் உள்ளன. அவற்றுக்கான நீர் ஏரிகளிலிருந்து கிடைக்கிறது. நொய்யலிலிருந்து வெட்டப்பட்டுள்ள கால்வாய்கள் வழியே அந்த ஏரிகளுக்கு நீர் வரத்து உள்ளது. ஆண்டில் ஒரு போகம் மட்டும் விளைகிறது. ஜூன் 10 முதல் ஆகஸ்ட் 10 வரை நாற்றுகள் மூலம் நடவு வேலை ஆரம்பமாகிறது.. கரும்புச் சாகுபடி மிகக் குறைவு.

'கோயம்புத்தூர் நகரின் அருகில் புன்செய் நிலங்களில் கம்பு, சோளம், பருத்தி ஆகியவற்றின் சாகுபடி முக்கி

யமானவை. கரிசல் நிலங்களில் சுழற்சி முறையில் ஒரு ஆண்டில் பருத்தியும் மறு ஆண்டில் சோளம், கம்பு, தினை, கடலை போன்றவையும் பயிராகின்றன. ஒரே ஆண்டில் இரு போகம் எடுப்பதில்லை. வேளாண்மை முறை பவானி கூடல் பகுதியில் இருந்தது போலவேதான்...' என்கிறார் புக்கானன். கேழ்வரகு, புகையிலை, வெற்றிலை சாகுபடிகளை விளக்கமாகக் கூறியுள்ளார்.

அவர் தரும் மேலும் சில தகவல்கள்:

- இந்தப் பகுதி விவசாயிகள் எருவிற்காக சாணக் குவியல் களைச் சேர்த்து வைப்பதில்லை. இலை, தழைகளை உரமாக உபயோகப் படுத்துகின்றனர். சும்மா கிடக்கும் காடுகளில் ஆடு, மாடுகளைக் கட்டி வைக்கின்றனர். உழுவதற்கு முன்பு அவற்றின் கழிவுகள் எருவாகின்றன. ஒவ்வொரு விவசாயியும் ஆடு, மாடுகளை வைத்துள்ளான்.
- கோயம்புத்தூரின் மலைக்கருகில் மேட்டாங்காட்டில் கேழ்வரகு பயிரிடப்படுகிறது. மற்ற பகுதிகளில் அது தோட்டங்களில் பயிராகிறது. கால் நடைகள் அந்த நிலங்களில் கட்டி வைக்கப்படுகின்றன. ஏப்ரல் 10 முதல் ஜூன் 10 வரை நான்கைந்து முறை நிலம் உழப்படுகிறது. களைகளை நீக்க, ஒரு மாதம் கழித்து உழவுகால்களில் ஆறு அங்குல இடைவெளியில் ஏர் பிடிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு வரும் மூன்று மாதங்களில் ஒரு மாதத்தில் நல்ல மழை பெய்தால் அப்போது விதைக் கேழ்வரகு தூவப்பட்டு உழப்படுகிறது. களைக்கொத்தினால் களைச் செடிகள் அகற்றப்படுகின்றன. கதிர் பிடித்து, முதிர்ந்திட ஆறு மாதம் ஆகிறது.
- ஒரு கலப்பை, இரண்டு எருதுகள், ஒரு ஆள் இருந்தால், ஒரு பருவத்தில் மூன்று வல்லம் அளவான 12¾ ஏக்கர் மேட்டாங்காடு நிலத்தில் சாகுபடி செய்யலாம். அதுபோல ஒரு விவசாயியிடம் நான்கு கலப்பைகள், ஐந்து ஆட்கள், எட்டு எருதுகள், பெரிய அளவில் ஒன்றிரண்டு கபிளை

ஏற்றம் இருந்தால் எட்டு வல்லம் (33 1/3 ஏக்கர்) மேட்டாங் காட்டிலும் ஒரு வல்லம் தோட்டத்திலும், ஆக 37½ ஏக்கர் நிலங்களில் பண்ணையம் பார்க்கலாம்.

- புன்செய் நிலங்களில் பெரும்பகுதி கபிளைத் தோட்டம் அல்லது வேளாண்மைத் தோட்டம் என்று வரி விதிப் பிற்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது.. சில தோட்டங் களில் எட்டு முழ ஆழத்தில் தண்ணீர் கிடைக்கிறது. பிற இடங்களில் 18 முழ ஆழத்தில் கிடைக்கிறது. சிலதில் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. அந்த நிலங்களின் மதிப்பு குறைவுதான். புகையிலை, சோளம், கேழ்வரகு, கம்பு, கோதுமை, வெங்காயம் மற்றும் காய்கறிகள் இத்தோட்டங்களில் பயிரிடப்படுகின்றன. கேழ்வரகு - புகையிலை - சோளம் என்ற பயிர் சுழற்சி முக்கியமாக மேற்கொள்ளப்படுகிறது.

- கோயம்புத்தூரிலிருந்து வடக்கே ஐந்து மைல் தொலைவிலுள்ள தொப்பம் பேட்டையிலும், அங்கிருந்து சற்று தொலைவில் ஹுர்டிஸ் மாவட்டத்திலுள்ள இரு ஊர்களிலும் கறுப்பு மணலிலிருந்து இரும்பு உருக்கப்படு கிறது. அது பற்றிய விவரம் உரிய தருணத்தில் கிடைக்காத தால், புக்கானன் அதை விரிவாக ஆய்வு செய்ய வில்லையாம்.

- கோயம்புத்தூரின் முக்கிய வியாபாரிகள் கோமுட்டிகள். மலபார் பகுதியுடன் பிரதானமாக அவர்கள் வியாபாரம் செய்வதாகக் கூறுகிறார்கள். பாலக்காடு, கோழிக்கோடு, கொச்சி, தலைச்சேரி, அங்காடபுரம் போன்ற ஊர்களுடன் வணிகம் செய்கின்றனர். புகையிலை, பருத்தி, நூல், துணி, சர்க்கரை, வெல்லம், வெற்றிலை, சீரகம், கொத்தமல்லி போன்றவற்றை ஏற்றுமதி செய்கின்றனர். மலபாரிலிருந்து பாக்கு,கரும் மிளகு, மஞ்சள், இஞ்சி, சாதிக்காய், லவங்கம், கிராம்பு, குங்குமம், பேரிச்சை, கற்கண்டு, வங்காள சர்க்கரை, கந்தகம், ஈயம், பித்தளை, காகிதம், பட்டு, பட்டுத்துணி, கம்பளித் துணி, பருத்தித் துணி, துண்டு,

சால்வை போன்ற பொருட்களை இறக்குமதி செய்கின்றனர்.

- கோயம்புத்தூரிலிருந்து திருவனந்தபுரத்திற்கும் வயநாட்டிற்கும் நேரடி வணிகம் இல்லை.
- சேலம், தஞ்சாவூர், நாகப்பட்டினம் பகுதிகளிலிருந்து பட்டும் துணிகளும் வருகின்றன. வெற்றிலையும் மலபார் மிளகும் அங்குச் செல்கின்றன.
- கோயம்புத்தூரைச் சுற்றிலும் பல நெசவாளர்கள் வாழ்ந்தனர். நகரில் சேடர் மற்றும் கைக்கோளர் இருந்தனர். கிராமப்புறங்களில் மேஸ்தர்கள், கன்னட தேவாங்கர் மற்றும் பறையர் வகையறா நெசவாளர்கள் இருந்தனர். மொத்தத்தில் **459** தறிகள் இருந்தன.

  சேடர்கள் மிக நேர்த்தியான துணிகளை நெய்தனர்; மிக மெல்லிய, மஸ்லின் துணி போன்றவை.. அவற்றில் சாதாரணத் துணிகளின் விலை மலிவானதாகவும், வேலைப்பாடு கொண்ட துணிகள் விலை அதிகமாகவும் இருந்ததாக புக்கானனுடன் வந்த வங்காள அரசு ஊழியர்கள் தெரிவித்தனராம். கைக்கோளர் நெய்த துணிகள் மொத்தமாக இருந்தன; விலையும் அதிகம்.

- கோயம்புத்தூர்ப் பகுதியில் விளையும் பருத்தி உள்ளூர்த் தேவைகளுக்கு அதிகம். ஆகவே மலபாருக்கு ஏற்றுமதியாகிறது. பஞ்சாகவும் நூலாகவும் விவசாயிகளின் பெண்களும் பிற பிற்பட்ட வகுப்புப் பெண்களும் நன்றாக நூல் நூற்பார்கள். * பறையர் வகுப்புப் பெண்கள் மிகச்சிறப்பாக நூற்பார்கள். நெசவாளர்களின் பெண்கள்

---

* இதை, சர்தாமஸ் மன்றோவும் குறிப்பிட்டுள்ளார்.'ஓமலூரிலிருந்த ஒரு விவசாயியின் மனைவி, தாசில்தார் அலுவலகத்திற்குச் சீற்றத்துடன் சென்று தங்கள் நிலத்திற்கான வரியைக் குறைக்க வேண்டுகோள் வைப்பாள். அது நிராகரிக்கப் பட்டால், தன் கோபத்தை வெளிப்படுத்தி, சத்தம் போட்டு தாசில்தார் ஊழியர்களை ஆத்திரம் தீர திட்டிக்கொண்டு வீடு வரை செல்வாள்.. ஆனால் அதே பெண் அடுத்த நாள் விடியற்காலையில் தனது வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து அமைதியாக நூல் நூற்பதைக் காணலாம்' என்று மன்றோ, தனது தந்தைக்கு 10-5-1796 அன்று எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நெய்கின்றனர். பட்டு நூல், பொன் நூலிழை, சிவப்புப் பருத்தி நூல் ஆகியவை சேலம், தஞ்சாவூர், தரங்கம்பாடி போன்ற ஊர்களிலிருந்து தருவிக்கப்படுகின்றன.

- சிவப்பு மற்றும் கருப்பு வண்ணங்களில் நூல்களுக்குச் சாயம் ஏற்றுகின்றனர். சிவப்பு, சாயம் போகும்; கருப்பு, கெட்டிச் சாயம். கருப்பு என்று இவர்கள் கூறுவது அடர்த்தியான நீல நிறமே; அவரிச் செடியிலிருந்து பெறும் நீலத்தைப் போன்றது. பாலச்செடியிலிருந்தும் இந்தச் சாயத்தைப் பெறுவதாகச் சொல்கிறார்கள். பொள்ளாச்சி யில் இந்தச் சாயத்தைச் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் புக்கானன் பொள்ளாச்சிக்குச் சென்றபோது அந்தத் தகவலில் உண்மையில்லை எனப் புரிந்ததாம்.. இவ்வாறு கூறி வரும் புக்கானன் அந்தச் சாயத்தைத் தயாரிக்கும் செய்முறையை விரிவாக எழுதுகிறார்.

- உள்ளூரில் விற்பனையாவது போக மீதித் துணிகள் மலபாருக்கும் சீரங்கப் பட்டணத்திற்கும் செல்கின்றன. சேலத்திலுள்ள கும்பினியின் வணிகப் பிரதிநிதி 'மோட்டா' துணி நெய்யும் நெசவாளர்களுக்கு (கைக்கோளர்) இரண்டு முறை முன்பணம் வழங்கியுள்ளார். அந்த நெசவாளர்கள் தொடர்ந்து துணி நெய்து தர விருப்பம் கொண்டுள்ளனர். அவர்களின் துணி எதுவும் திரும்ப வருவதில்லை. ஆனால் அவற்றில் 'முதல் தரம்' துணிகள் சிலவற்றை 'இரண்டாம் தரமாக' மாற்றி வணிகப் பிரதிநிதி பணம் தருவார். அந்த விலையும் நெசவாளர்களுக்குத் திருப்திதான்.*

- இங்குள்ள நெசவாளர்கள் வேளாண்மை செய்வதில்லை. ஆனால் அவர்களில் சிலர் நிலம் வைத்துள்ளனர். அதில் சாகுபடி செய்ய பிற வகுப்பு ஆட்களை அமர்த்துகின்றனர்.

---

* நெசவாளர்களின் துணிகளுக்குக் கட்டுபடியாகும் விலையை வணிகப் பிரதிநிதிகள் ஆரம்பத்தில் தர மறுத்தனர். நல்ல விலை தர, சேலம் ஜில்லாவிலிருந்த உதவி கலெக்டர்கள் வில்லியம் மாக்ளியாட், தாமஸ் மன்றோ ஆகியோரின் முயற்சிகளை (1792- 94) இங்கு நினைவு கூற வேண்டும். குறிப்பாக, தாமஸ் மன்றோ அதற்காக மேலதிகாரிகளிடம் போராடினார். அதன் விவரங்களை, இடைப்பாடி அமுதனின் 'கொங்கு நாட்டில் தாமஸ் மன்றோ' நூலில் காணலாம். (பக்.153-159)

நெசவுத் தொழிலைப் பற்றியும் நெசவாளர்கள் குறித்தும் கோயம்புத்தூரிலிருந்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார் புக்கானன். பிற்காலத்தில் தென்னிந்தியாவின் 'மான்செஸ்டர்' என்று அழைக்கப்படும் அளவிற்குக் கோயம்புத்தூர் வளரவிருக்கும் நிலையை அவர் முன்பே உணர்த்தியுள்ளார். இங்குள்ள கரிசல் மண் பூமி குறித்தும், பருத்தி விளைச்சல் பற்றியும் அவர் தந்த குறிப்புகள் பிற்காலத்திய தொழில் அபிவிருத்திக்குக் கட்டியம் கூறியது போலுள்ளது!

கோயம்புத்தூர் ஜில்லாவில் முக்கியமான ஊர்களில் கி.பி. 1800 இல் இருந்த தறிகளின் எண்ணிக்கையை புக்கானன் தரும் விவரங்களுடன், அந்தக் காலக்கட்டத்தில் (1793) சேலம் ஜில்லாவின் முக்கிய ஊர்களிலிருந்த தறிகளின் எண்ணிக் கையைக் காண்போம். (பாரமகால் ஆவணங்கள்7):

| பகுதிகள் | நெசவாளர்கள் | தறிகள் |
|---|---|---|
| சேலம் | - | 556 |
| ஆத்தூர்.. | - | 225 |
| சேந்தமங்கலம்... | - | 638 |
| நாமக்கல்... | - | 198 |
| பரமத்தி.. | - | 298 |
| காட்டுப்புத்தூர் | - | 48 |
| தருமபுரி | 143 | 121 |
| அதமன்கோட்டை | 127 | 127 |
| பென்னாகரம் | 148 | 167 |
| தென்கரைக்கோட்டை | 67 | 64 |
| நங்கவள்ளி | 169 | 162 |
| திருச்செங்கோடு | 219 | 213 |
| எடப்பாடி | 242 | 228 |
| மல்லசமுத்திரம் | 85 | 84 |
| சங்ககிரி துருகம் | 170 | 152 |
| ஓமலூர் | 124 | 120 |

சேலம் மாவட்டத்தில் கைக்கோளர்கள் மொத்த ரகத் துணிகளை 12 முதல் 72 முழம் நீளங்களில் நெய்தனர்.

நீளத்திற்கேற்ப சேலம்பூர் - நெடுமுழம் 72 முழங்கள், கைலி 36 முழங்கள், பச்சோரம் 18 முழங்கள் எனப் பெயரிட்டனர். சேடர்கள் தலைப்பாகை, வேட்டி, சேலை, கைக்குட்டைகள் மற்றும் மஸ்லின் சேலைகளை நெய்தனர். பறையர்கள் மிக நேர்த்தியான தலைப்பாகை மற்றும் கைக்கோளர் நெய்யும் துணிகளை நெய்தனர். அவர்களின் நெசவு மற்ற சாதியினர் நெய்ததைவிட சிறப்பாக இருந்தது. சாலியர்கள், சேடர்கள் நெய்த துணிகளையே நெய்தனர். மீனவர்கள், கைக்கோளர் நெய்த துணிகளையும் தலைப்பாகைத் துணியையும் நெய்த னர். குறும்பர்கள் கம்பளிகளையும் சனப்பர்கள் சாக்குகளையும் நெய்தனர்.

**கோ**யம்புத்தூரிலிருந்து, அங்கு வசித்த சில சாதியினரைப் பற்றியும் புக்கானன் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுவதைக் காண்போம்.

'இங்குள்ள **கைக்கோளர்**களின் நாட்டாண்மைக்காரர் சொல்வதின்படி, சிறித்தாலி, (Siritali) தாத்தய நாட்டார், கொங்கர் என்று மூன்று பிரிவினர் உள்ளனர். அவர்களில் கொங்கர் பிரிவைச் சார்ந்தவர் இந்த நாட்டாண்மைக்காரர். மற்ற பகுதிகளில் வேறு வகைப் பிரிவினர் உள்ளனர். உதாரணமாக சத்தியமங்கலத்தில் சோழர், கோல்கொண்டாக் காரர், மதுரை (Murdea), மற்றும் கொங்கர் என்ற பிரிவினர் உள்ளனர். ஒரு பிரிவினர் மற்ற பிரிவினருடன் திருமண உறவு கொள்வதில்லை.. ஆண்கள் பலதார மணம் புரியலாம். பெண்கள் பூப்பெய்தியபின் திருமணத்திற்குத் தகுதி பெறுகிறார்கள். சிறித்தாலி வகுப்புப் பெண்களைத் தவிர, பிறர் விதவைத் திருமணம் செய்ய அனுமதியில்லை. ஆண்கள் வைப்பாட்டி வைத்துக் கொள்ள அனுமதியில்லை. ஒரு பெண் தெரிந்திராத ஆணுடன் உறவு வைத்திருந்தால், அவள் சாதி விலக்கம் செய்யப்படுவாள். ஆணால் திருமணமான ஒரு பெண் கைக்கோள ஆளால் ஆசை காட்டி கற்பழிக்கப் பட்டால், அந்த ஆளும் அப்பெண்ணின் கணவனும் தலா இரண்டு பணம்

அபராதம் செலுத்த வேண்டும். சமுதாயத் தலைவரால் அந்த விவகாரத்திற்கு சுமூக முடிவு காணப்படும். கைக்கோளர் மாமிசம் உண்ணவும் மது அருந்தவும் அனுமதிஉண்டு. அவர்களில் பெரும்பாலோர் பழங்கதைகளைப் படிக்கின்றனர்; கணக்குகள் எழுதத் தெரிந்தவர்கள். இறந்த உடலை சிலர் அடக்கம் செய்கின்றனர்; சிலர் எரியூட்டுகின்றனர். இரு நிலைகளிலும் ஒரு பிராமணரால் மந்திரம் வாசிக்கப்படுகிறது; அவ்வாறு செய்தால் நல்ல மனிதரின் ஆன்மா சொர்க்கத்திற்குச் செல்லுமாம்; கெட்ட மனிதரின் ஆன்மாவிற்கு மறுபிறப்பு உண்டு. மனிதராகவோ மிருகமாகவோ பிறப்பார். அவ்வாறு மந்திரம் வாசித்து காரியம் செய்யாவிட்டால் அந்த ஆன்மா ஒரு முனியாகவோ, பூதமாகவோ மாறிவிடுமாம்.

'கைக்கோளர் சிவனை வழிபடுகின்றனர். இருப்பினும், காமாட்சியம்மன் என்கிற பார்வதியைத் தங்கள் வகுப்பின் கடவுளாகக் கருதுகிறார்கள். பார்வதி உருவத்திற்குச் சில கோயில்களில் கைக்கோளர் பூசாரி பூசை செய்கிறார்; சில கோயில்களில் பண்டாரங்கள் செய்கின்றனர்; பெரிய கோயில்களில் பிராமணர் செய்கின்றனர். ஆனால் விக்கிரகங்களுக்கு மிருகங்களைப் பலி தரும்போது பூசை செய்பவர் அங்கு இருப்பதில்லை. கைக்கோளர் சக்தி மற்றும் முனிகளுக்கும் மிருக பலி தருகின்றனர். கைக்கோளர்களுக்கு ஸ்மார்த்த பிராமணர் குருவாக உள்ளார்; அவர் உபதேசம் செய்கிறார்; படைத்த உணவையும் நீரையும் திருநீறையும் பக்தர்களுக்கு வழங்குகிறார்; ஆண்டிற்கொருமுறை தட்சிணை பெறுகிறார்; பஞ்சாங்கிகள் என்கிற சோதிடர்கள் கைக்கோளர்களுக்குப் புரோகிதர்களாக இருக்கின்றனர். இறந்த பெற்றோரின் நினைவாக வருடாந்திர, மாதாந்திர காரியங்களின்போதும், புதுமனை புகும்போதும், திருமணம், இறுதிச் சடங்கின்போதும் மந்திரம் ஓதுகின்றனர்.

'கைக்கோளர்கள் நெசவாளர்களாகவும், கணக்குப் பிள்ளைகளாகவும், பள்ளி ஆசிரியர்களாகவும், வைத்தியர்களாகவும் உள்ளனர். இப்பகுதியிலுள்ள எல்லா நாட்டியப்

பெண்களும் வாத்தியக்காரர்களும் முன்பு இந்த வகுப்பினைச் சேர்ந்தவர்கள்; ஆனால் தற்போது அந்த வழக்கம் இல்லை. அந்த நாட்டியப் பெண்களும் வாத்தியக்காரர்களும் இப்போது தனி வகுப்பாக உள்ளனர். அவர்களில் சிலர் முக்கியமான கோயில்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். இந்த வாத்தியக் காரர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகச் சொற்பம். இருப்பினும் காலையிலும் மாலையிலும் அக்கோயில் சாமிகள் முன்பு அவர்கள் வாசிக்க வேண்டும். அரசு அதிகாரிகள் வந்தால், நகரின் வெளிப்புறத்திலிருந்து அவர் தங்கும் இடம் வரை நாட்டியம் - வாத்தியம் என்று வரவேற்புத் தரவேண்டும்; அழகான பெண்கள் பாடவும் ஆடவும் பணிக்கப்படுவர். அவர்களில் பலர் பிராமணர்களின் ஆசை நாயகிகளாக இருப்பர்.. பெரும்பாலும் பிராமணர்களே அரசு அதிகாரிகள்; அவர்களில் பெரும்பாலானோருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியர் உண்டு. பிராமணப் பெண்கள் மிகவும் அழகாக இருப்பர்; ஆனால், அவர்கள் கிளர்ச்சியூட்டுவர்களாக இல்லாத தாலும், படிப்பறிவு இல்லாததாலும் நாட்டியப் பெண்களை அவர்களின் கணவர்கள் நாட விருப்பம் கொள்கின்றனர். நாட்டியக்காரிகளின்மீது முஸ்லிம் அதிகாரிகளுக்கு அதிக நாட்டம் உண்டு. அவர்கள் தம் வருமானத்தில் பெரும்பகுதியை அப்பெண்ணுக்காகச் செலவழிப்பர். பிராமணர்கள் அந்த அளவுக்குப் பணம் தர மாட்டார்கள்; ஆனால் தங்களுடைய அரசு அதிகாரத்தினால் அப்பெண்களின் இச்சையைப் பெறுவர்.. நடனப் பெண்கள் வாத்தியக் குழுவுடன் தனிப்பட்ட வகையில் முஸ்லிம்கள் மற்றும் அவர்களின் நண்பர்கள் மத்தியில் ஆட அழைக்கப்படுகிறார்கள். இருபது முதல் இருநூறு பணம் வரை தருவார்கள்.

'...ஆனால், இப்போது தனிப்பட்ட ஆடல் கச்சேரிக்கு நாட்டிய, வாத்தியக்காரர்களை அழைப்பதில்லை. திருமணச் கச்சேரிகளுக்கு மட்டும் அழைக்கிறார்கள்; அதுவும் சொற்ப பணத்திற்கு - பத்துப் பணம்கூடத் தேறாது. கவர்ச்சியற்ற நாட்டியப் பெண்களை வாத்தியக்காரர்கள் திருமணம் செய்து கொள்கின்றனர். நட்டுவாங்கம் என்பவர் நாட்டியக் குழுவின்

தலைவர். பையன்களை அவர் இசைக்குப் பழக்குவார்; பார்வைக்கு அழகாக இருக்கும் பெண்களுக்குப் பாடவும் ஆடவும் கற்றுத் தருவார்; வாய்ப்பிருந்தால் அழகான பிற வகுப்புப் பெண்களையும் பணம் கொடுத்து இத் தொழிலுக்கு அழைத்து வருவார். நாட்டியக்காரிக்கு வயதாகி விட்டால், கோயிலிலிருந்து நீக்கப்படுவாள்; அனாதை நிலைக்குத் தள்ளப்படுவாள். அவளுக்கு அழகான பெண் இருந்து அவளிடம் அன்பு செலுத்துபவர்களாயிருந்தால் அந்த நிலை வராது. என்னைப் பொருத்த வரை அப்பெண்களின் நாட்டியம் அற்பமானதாகவும் கவர்ச்சியற்றதாகவும் உள்ளது; இசையோ அதைவிடக் கொடுமை! (புக்கானன் - குழுவினருக்கு அந்த மாதிரியான நாட்டியக் கச்சேரியைக் கானஏற்பாடு செய்திருப்பார்கள் போலும்...!) ஆனால் நீண்ட நாள் பழக்கத்தினால் சில ஐரோப்பியர்கள்கூட இதை விரும்புகிறார்கள்; அப்பெண்கள் அவர்களைக் கவர்ந்து விட்டார்கள்... அப்பெண்களோ சாதாரணமாகத்தான் தோன்றுகிறார்கள்; ஆடையில் நளினம் இல்லை; உடல் சுத்தம் குறைவு; நோய் கண்டவர்களும் கூட.. (புக்கானன் ஒரு மருத்துவர்!)

'**பாஞ்சாலர்** என்று ஐந்து வகைத் தொழிற்கலைஞர்கள் பொன், இரும்பு, பித்தளை, தச்சு, கல்தச்சு வேலைகள் செய்வோர் உள்ளனர். பிராமணர்கள் அவர்களை சூத்திரர்கள் என்பர். அவர்களோ அதை மறுத்து, தங்களை விஸ்வகர்மா சாதி, மிரம்ம லோகத்தில் உள்ள அவரின் ஐந்து மகன்கள் நாங்கள் என்கின்றனர். தென்னிந்தியாவில் அவர்கள் பிராமணர்கள் போன்று பூணூல் அணிகின்றனர். இந்த ஐந்து வகைத் தொழில்களில் தாங்கள் விரும்பும் வேலையை அவர்கள் மேற்கொள்ளலாம்; ஆனால் அவர்களில் உட்பிரிவுகள் உள்ளதால் திருமணத் தொடர்பில் தடை உள்ளது. ஒருவன் பிற நாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்ய இயலாது. உதாரணமாக, தெலுங்கு பாஞ்சாலர் இந்த நாட்டுப் பெண்ணைக் கைப்பிடிக்க முடியாது. இதைத் தவிர்க்க, தங்களுக்குத் தெரிந்த குடும்பங்களிடையேதான் உறவு கொள்கின்றனர். ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து

கொள்ளலாம். கைம்பெண்கள் மறுமணம் செய்ய அனுமதி இல்லை; அவர்கள் மற்ற ஆணுடன் சேர்ந்து வாழ அனுமதி இல்லை. கணவன் இறந்ததும் பெண் உடன்கட்டை ஏறவேண்டும்; ஆனால் கடந்த நூறு ஆண்டுகளில் இந்த வழக்கம் இல்லை. ஒரே பிரிவில் ஆண்-பெண் கள்ள உறவு இருந்தால், அவர்கள் குருவின் முன் நிறுத்தப்பட்டு, ஆணுக்கு அபராதமும் பெண்ணுக்குக் கசையடித் தண்டனையும் வழங்கப்படுகிறது. ஆனால் சில சாங்கியங்களைச் செய்து, அப்பெண்ணைப் புனிதமாக்கி கணவன் திரும்ப ஏற்றுக் கொள்கிறான். பிற சாதி ஆணுடன் உறவு வைத்துள்ள பெண் சாதி விலக்கம் செய்யப்படுகிறாள்.

'இவர்களில் சிலர் மாமிசம் உண்கின்றனர்; சிலர் இல்லை; மது அருந்தத் தடையில்லை. இவர்கள் மிருகப் பலி செய்வதில்லை; ஆனால் ஆண் கழுதையொன்றைப் பலியிடும் வழக்கம் இருந்ததாக இவர்கள் கேள்விப்பட்டிருந்தாலும், அவ்வழக்கம் இப்போது இல்லை. இவர்களின் தெய்வம் காமாட்சியம்மன் அல்லது காளியம்மன் - பார்வதியின் சொரூபம் என்கின்றனர். பிராமணர் பூசை செய்கின்றனர்... எழுதப் படிக்க அவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். விஸ்வ புராணம் என்கிற புத்தகம் உள்ளது; அதைப் படிக்கிறார்கள். இவர்களுடைய குருவானவர் சுய சாதியைச் சார்ந்தவர். இவர்களுக்கு நான்கு மடங்கள் உள்ளன. துங்கபத்திரை நதிக்கு அப்பால் ஒன்று; மற்றொன்று திருநெல்வேலியில்; இன்னொன்று அந்தியூரில் உள்ளது. நான்காவது மடம் பற்றி கோயம்புத்தூர் ஆட்களுக்குத் தெரியவில்லை..

'**தொறையர்** என்னும் பிற்படுத்தப்பட்ட சாதியினர் கன்னட தேசத்தார். ஆனால் பெரும்பாலானோர் நீண்ட காலமாக இங்குள்ளனர்; வெற்றிலை பயிரிடும் வேலையைச் செய்கின்றனர். முன்பு அவர்கள் ஆயுதம் தாங்கிய சேதியாளர் களாக இருந்தனர் - நில வருவாய் வசூலில் ஈடுபட்டனர்; ஆனால் இப்போது படைகளின் எண்ணிக்கை குறைந்துள்ள தால் அவர்கள் சில்லரை தானிய வியாபாரத்திலும் விறகு

வெட்டுவதிலும் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குப் பரம்பரைத் தலைவர் உள்ளார்; கொத்துக்காரர் (Gotukara) அல்லது எஜமான் என்று பெயர்; அவர், வழக்குகளை விசாரித்துத் தண்டனை வழங்குகிறார். அவர்கள் மாமிச உணவை உண்கின்றனர்; மது அருந்தக் கூடாது. மனைவியின் அனுமதியின்றி மறுமணம் இல்லை... விதவை மறுமணத்திற்குத் தடையில்லை.. கள்ள உறவு வைத்திருக்கும் பெண்ணை, கணவன் தள்ளி வைப்ப தில்லை; அவளுக்குச் சாட்டை அடி தந்து தண்டிப்பதோடு சரி. ஒரு பெண் புது நபருடன் உறவு வைத்தால் தன் சாதியை இழக்கிறாள்...

'இந்தச் சாதியினருக்குத் தனியாக இரு கடவுள்கள் உண்டு. ஆண் மற்றும் பெண் தெய்வங்கள். ஆண் தெய்வத்தை வெற்றிலைக் காட்டில் வைக்கின்றனர். அவர்களே பூசாரிகள்.. பெண் தெய்வ உருவம் வனத்தினுள் வைக்கப்படுகிறது. இவை தவிர, செல்லும் வழிகளில் காணும் விக்கிரகங்களையும் வணங்குகின்றனர். திருநீறு அணிகின்றனர். அவர்களுக்குள் 'குழு' இல்லை. பஞ்சாங்கியர் அவர்களுக்குப் புரோகிதராக உள்ளனர்; திருமணம், புது வீடு புகும் சமயங்களில் புரோகிதர் மந்திரம் ஓதுகிறார்..

'**பள்ளியர்** என்கிற வகுப்பார் தமிழ் பேசும் பகுதிகளில் அதிகம் உள்ளனர். தங்களைச் சூத்திரர் என்கின்றனர்; --- அவர் களிடையே பல உட்பிரிவுகள் உண்டு; உட்பிரிவினரிடையே திருமண சம்பந்தம் இல்லை. அரசப்பள்ளி என்கிற உட் பிரிவினரைப் பற்றி எனக்குத் தகவல் வந்துள்ளது. அவர்கள் உழவு வேலை செய்கின்றனர் - விவசாயியாகவும், வேலைக் காரருமாகவும், சுமை தூக்குபவராகவும் உள்ளனர். அவர்களுக்கு எஜமான் என்ற பரம்பரைத் தலைவர் உள்ளார். எல்லா நிகழ்ச்சிகளிலும் அவருக்கு முதல் வெற்றிலை தரப்படுகிறது. அவர்களுக்கு ஒரு சபை உண்டு. அதில் வழக்கு தொடுக்கப் பட்டால் சபையோரின் ஆலோசனையின் பேரில் தலைவர் தீர்ப்பு வழங்குகிறார். அவர்களில் சிலர் எழுதப் படிக்க, கணக்கு எழுதத் தெரிந்தவர்கள்.மாமிச உணவு உண்ணவும், மது

அருந்தவும் தடையில்லை. பல தார மணம் புரியலாம்.விதவை மறுமணம் அனுமதிக்கப்படுகிறது. சாதியினருக்குள் கள்ளத் தொடர்பு இருந்தால் கணவன், மனைவியைச் சவுக்கால் அடித்துத் தண்டனை தருவான்; பின் அவளைத்திரும்ப ஏற்றுக் கொள்வான்; உறவினர்களுக்கு அபராதத் தொகை செலுத்துவான்; சில சமயம் அம்மனைவியைத் துரத்தி விடுவான்; அப்போது அப்பெண்ணைக் கெடுத்தவன், தன் உறவினர்களுக்கு அபராதத் தொகை செலுத்தி அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்வான். பிற சாதி ஆணுடன் தொடர்பு கொண்ட மனைவி, தன் சாதியை இழப்பாள்; ஆனால் ஒரு ஆண் அவ்வாறு உறவு கொண்டிருந்தால், அது அபராதமாகக் கருதப்படமாட்டாது.

'பள்ளியரிடைய ஆண் கடவுள் மன்னார்சாமி; பச்சை யம்மன் அவர்களுடைய தாய்; அக்கோயில்களில் அச்சமூகத் தாரே பூசாரிகள். அவர்களின் கோயில்களில் கல் உருவங்களில் அத்தெய்வங்கள் வைக்கப்படும்; கோயம்புத்தூர்ப் பிரதேசத்தி லுள்ள வழக்கப்படி, கோயில் வளாகத்தில் குயவர் வேலைப் பாடு கொண்ட குதிரை, யானை, முனி, பூதம் போன்ற காவல் தெய்வங்கள் வைக்கப்பட்டுள்ளன. மன்னாருக்கும் பச்சை யம்மனுக்கும் மிருக பலியிடுவதில்லை; முனிசாமிக்கு அப்பலி கொடுக்கப்படுகிறது. மாரியம்மா, புத்தாலியம்மா போன்ற சக்தி உருவங்களுக்கும் பலி நேர்த்தி செய்யப்படுகிறது. இவர்களின் திருமணம், புதுமனை புகுவிழா, பிறப்பு, இறந்தோரின் நினைவு நாள் போன்ற நிகழ்ச்சிகளில் பஞ்சாங்கி என்னும் கிராம சோதிடர்கள் புரோகிதராக இருந்து மந்திரம் சொல்கின்றனர். இவர்களில் சிலர் சிவனையும், சிலர் விஷ்ணுவையும் வழிபடுகின்றனர். இவ்வழிபாட்டினருக்கு அந்தியூரிலுள்ள பள்ளிஸ்வாமி என்பவர் குரு. அவர் பரம்பரைக் குரு; லிங்கம் தரித்துள்ளார். வைணவ வழிபாட்டினருக்குத் திருவைணவ பிராமணர்கள் குருவானவர்கள்.

'கோயம்புத்தூருக்கு மேற்கிலுள்ள மலைப் பகுதிகளில் **மலசர்கள்** (மலைவாசியர்), **முதுகர்,** இருளர், மற்றும் தோடர்

வசிக்கின்றனர். தோடர்கள் நிலத்தில் உழுது விவசாயம் செய்கின்றனர். மற்றவர்கள், கொத்துக்காடு முறை விவசாயம் புரிகின்றனர்; தணநாயக்கன் கோட்டைக்கு அருகிலுள்ள மலைப் பகுதியினரைப் போல, தோட்டப் பயிர்களுடன் தேன், மலை இஞ்சி ஆகியவற்றையும் அவர்கள் விற்கின்றனர். அந்த நிலத்திற்காக அவர்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்துவதில்லை. மலையிலுள்ள மரம் - மூங்கில்கள் வேண்டுமானால் அம்மலைவாசிகளை அமர்த்தி வெட்டிக் கொள்ளலாம்..'

இவ்வாறு இரண்டு நாட்களைக் கோயம்புத்தூர்ப் பிராந்தியத்தில் கழித்த புக்கானன் அக்டோபர் 31 ஆம் நாள் அங்கிருந்து கிளம்ப நினைத்தார். ஆனால் அவருடன் வந்த ஆட்களில் பலருக்கு உடல்நிலை சரியில்லாதிருந்ததால் மேலும் ஒரு நாள் அங்குத் தங்கினார். நவம்பர் ஒன்றாம் தேதி, அவர் கணியூரை நோக்கிக் கிளம்பினார்.

# 11

# கோயம்புத்தூரிலிருந்து ஈரோட்டிற்கு

'நவம்பர் ஒன்றாம் தேதியன்று பத்து மலபார் மணிநேர தூரம் கடந்து **கணியூருக்குச்** சென்றேன். அது ஒரு சிறிய கிராமம்; கடைகள் எதுவும் இல்லை; நொய்யல் ஆற்றிலிருந்து வடக்கில் சிறிது தூரத்தில் உள்ளது. கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள பகுதி முழுவதிலும் சாகுபடி செய்யப் பட்டிருந்தது; ஆனால் மரங்கள் எதும் தென்படவில்லை. சில இடங்களில் போடப்பட்டிருந்த இந்த வேலிகளைப் பார்க்கும்போது, அங்குள்ள மற்ற நிலங்களிலும் வேலிகள் அமைக்கப்பட்டால் அவை எவ்வாறு செழிப்பாயிருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. கணியூருக்குப் பக்கத்தில் விளை நிலங்களில் பல கேட்பாரின்றி உள்ளன; ஆனால் மரங்கள் பல உள்ளன. மண் வளம் சுமார்தான்; நொய்யலிலிருந்து சற்று தூரத்தில் உள்ளவையெல்லாம் புன்செய் நிலங்கள்தான்..' என்று கணியூரைப் பற்றிச் சில தகவல்களைத் தரும் புக்கானன், அடுத்த நாள் மேலும் பத்து மலபார் மனிநேர தூரம் சென்று **அவிநாசியை** அடைந்தார். அங்கிருந்து அவர் மேலும் தரும் குறிப்புகள்;

'இது தாசில்தார் இருக்கும் ஊர். இப்பகுதி பார்க்க நன்றாக உள்ளது; பாதி நிலங்கள் பயிரிடப்பட்டுள்ளன. பெரும் பகுதி நிலங்களில் இளந்தை முள்ளு அல்லது கள்ளி/கிளுவைச் செடிகளைக் கொண்டு வேலிகள் போடப்பட்டுள்ளன.

அவ்வேலிகளை ஆண்டிற்கொருமுறை பராமரிக்க வேண்டும்; ஆடு மாடுகள் நுழையாதவாறு இடைவெளிகளில் புதிய முள் குச்சிகளை நட்டு செப்பனிட வேண்டியுள்ளது.

'இங்கு முக்கியமான பயிர், கொள்ளு. கம்பும் பயிராகிறது. சிறிது தூரத்திலுள்ள நிலங்கள் தரிசாகத் தெரிகின்றன. அநேக பனந்தோப்புகள் இருக்கின்றன. விளைச்சலில்லா இப்பகுதியில், அவை பார்க்க நன்றாக உள்ளன. இங்குள்ள இரண்டு ஏரிகளில் ஒன்று மழை நீரால் நிரம்புகிறது; அது இருபத்திரண்டு காணி நிலத்தின் நெற் பயிருக்கு நீர் தரும். ஆனால் அந்த ஏரி பராமரிப்பின்றி உள்ளதால் பத்து காணி நிலத்திற்கு மட்டும் நீர் கிடைக்கிறது. மற்றொரு ஏரிக்கு **சேவூர்** ஓடையிலிருந்து நீர் கிடைக்கிறது. அந்த ஏரியும் பழுதடைந்துள்ளதால் எண்பது காணி நிலத்திற்குப் பதிலாக 32 காணி நிலங்களில் மட்டும் நெல் பயிராகிறது.

'தளபதி மெடோஸின் ஆக்கிரமிற்கு முன்பு அவிநாசியில் இருநூறு வீடுகள் இருந்தன. இப்போது ஐம்பதாகக் குறைந் துள்ளன. அவற்றில் சிவன் கோயிலைச் சார்ந்த பிராமணர்கள், வாத்தியக்காரர்கள், நாட்டியக்காரர்கள் ஆகியோர் முக்கியமாக வசிக்கின்றனர். காசியிலுள்ள வாரணாசிக் கோயிலின் புனிதம் அளவிற்கு இவர்களின் கோயில் புனிதமானது என்று இவர்கள் கூறுகின்றனர்; ஆனால் மற்றவர்கள் அதைக் கேட்டு நகைக்கிறார்கள். * இப்பகுதியில் கைக்கோளர், சேடர், பறையர் ஆகிய பல நெசவாளர்கள் உள்ளனர்.

'கோயம்புத்தூர்ப் பிராந்தியம் முழுவதும் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. குறிப்பாக இப்பகுதியில் அதிகம். 'பக்ரி'கள் என்று முஸ்லிம்கள் அழைக்கும் ஆடுகளில் நீண்ட

* அவிநாசி அப்பர் கோயில், 'தெற்கு வாரணாசி – காசி வாரணாசி' என்று இன்றும் அழைக்கப்படுகிறது (The Hindu/2-11-2012- Friday Review-p.3)

**ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளிலேயே பாடல்பெற்ற தலமான அவிநாசி சிவன் கோயிலை புக்கானன் விரிவாகக் காணவில்லை போலும்! ஆயிரம்ஆண்டுகட்கு முன்பான கல்வெட்டுகளும், சிக்கதேவராயன், கிருஷ்ண தேவராயர், போசள மன்னன் வல்லாளன் III, கொங்குப் பாண்டியர், கொங்குச் சோழ மன்னர் என்று பல மன்னர்கள் இக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்துள்ளனர். புக்கானனிடம் இவற்றைத் தாசில்தாரோ, பிறரோ முறையாகத் தெரிவிக்கவில்லை போலும்.**

கால்களுடைய வெள்ளாடும் செம்மறி ஆடும் அடங்கும். செம்மறி ஆட்டில் குறும்பாடு மற்றும் செம்மறி ஆடு என்று இரண்டு வகைகள். மலைக்கப்பால் (மைசூர்) உள்ள வெள்ளாடுகளைப் பார்க்கையில் இங்குள்ளவை மட்டம்தான். ஆனால் செம்மறி ஆடுகள் சிறிதாக இருந்தாலும் தரமானவை சீக்கிரம் குண்டாகிறது; அவற்றின் மாமிசம் உண்பதற்கு மிகவும் சுவையாயுள்ளது. இங்கு புற்களை மட்டும் உண்டு வளரும் ஆடுகள், கங்கைக் கரையில் வளரும் ஆடுகளை விட சத்துள்ளதாக உள்ளன; அங்கே தானியங்களையும் கொடுத்து வளர்த்தால் மட்டும் நல்ல பிடிப்பாக ஆடுகள் வளரும். இங்கு முஸ்லிம்கள்கூட ஆடுகளுக்குத் தானியங்களைக் கொடுத்து, கொழுக்கவைக்க எண்ணுவதில்லை. ஒரு வெள்ளாடு அல்லது செம்மறியின் பெட்டைக்கு மூன்று அல்லது நான்குபணம் விலை. அதுபோல ஆண் ஆட்டிற்கு ஐந்து அல்லது ஆறு பணம் விலை..

'செம்மறி ஆடும் குறும்பை ஆடும் ஆண்டிற்கொருமுறை குட்டி போடுகின்றன; இரண்டு மாதங்களுக்குப் பால் தருகின்றன. ஒரு நாளைக்கு இரண்டுமுறை பால் கறக்கலாம். நீண்ட வெள்ளாடு ஆண்டிற்கு இரண்டுமுறை குட்டி போடுகின்றது. செம்மறி ஆட்டைவிட இரண்டு பங்கு பால் தருகிறது. இந்த ஆடுகளின் பாலுடன் எருமை, பசு மாட்டுப் பாலுடன் கலந்து வெண்ணெயைத் திரட்டுகிறார்கள். உடன் வந்துள்ள எனது வங்காள அலுவலர்கள் இந்த வெண்ணெயும் தயிரும் வங்கத்தில் கிடைப்பதைவிட நன்றாக உள்ளது என்கின்றனர். காரணம் அங்குப் பெரும்பாலும் பசுவின் பாலிலிருந்து மட்டும்தயிர் - வெண்ணெயை எடுக்கிறார்கள்.

'கோயம்புத்தூரில் தனியாக ஆட்டுப் பட்டிகள் இல்லையாம். ஆடுகளைச் சாகுபடி செய்யும் நிலங்களில் கட்டிவைப்பார்கள். அதனால் எரு விருத்தியாகிறது. கோவையின் அருகிலுள்ள பகுதிகளில் குறும்பர்கள் குறும்பை ஆடுகளை மேய்க்கின்றனர். அவர்கள் விவசாயம் செய்வ தில்லை; ஆடு மேய்ப்பதே அவர்களின் தொழில்; ஆட்டு



புக்கானன் காட்டும் செம்மறி ஆடு



புக்கானன் காட்டும் குறும்பை ஆடு

ரோமத்திலிருந்து மொத்த ரகக் கம்பளிகளைத் தயாரிக்கின்றனர். ஒவ்வொரு ஆளும் 50 முதல் 100 ஆடுகள் வரை வைத்துள்ளான். நாள் முழுவதும் அவற்றை மேய்ப்பதுதான் அவன் வேலை. இரவில் ஆடுகளை பல்வேறு விவசாயிகளின் நிலங்களில் கட்டி வைக்கின்றனர். அவற்றின் எருவிற்காக அந்த நில உடமையாளர்கள் நூறு ஆடுகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு தானியம் வீதம் கொடுக்கின்றனர். குறும்பர்கள் ஆடுகளுக்கு வரி செலுத்துகின்றனர்; நெய்யும் கம்பளிகளுக்கும் கலால் வரி கட்டுகின்றனர்.'

**அ**விநாசியிலிருந்து நவம்பர் 3 ஆம் தேதியன்று கிளம்பிய புக்கானன் நொய்யலாற்றைக் கடந்து **திருப்பூருக்குச்** (Tripura!) சென்றார். அவர் எழுதுகிறார்:

'வரும் வழியில் சனங்கள் அதிகம் காணப்படவில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் அழிந்த நிலையில் பல வீடுகள் உள்ளன. நிலங்களின் விளை நிலங்களில் மண் சுமார்தான்; வேலிகள் போடப்பட்டிருந்தன. பவானி ஆற்றைவிட நொய்யல் சிறியது; சென்ற இரவில் பெரும் மழை பெய்திருந்தாலும் ஆற்றைச் சுலபமாகக் கடக்க முடிந்தது. ஆற்றைக் கடந்ததும் ஹுர்டிஸின் மாவட்டம் வந்தது. திருப்பூர் நகரில் முன்னூறு வீடுகள் உள்ளன; பெரிதான வாரச் சந்தை உள்ளது. நான் கவனித்த வரை, பெண்கள் என்னைப் பார்ப்பதற்குச் சங்கோசப்படவில்லை. மலைகளுக்கு அப்பால் இருந்த பகுதிகளிலும் (மைசூர்) அப்படித்தான்... ஆனால், நொய்யல் - கோயம்புத்தூருக்கு வடக்கில் உள்ள பகுதியில் என்னைக் கண்டதும் பெண்கள் ஓடிச் சென்று சுவர் - வேலிகளுக்குப் பின்னால் மறைந்து நின்று பார்த்தனர்; வங்காளத்துப் பெண்களும் அப்படித்தான் செய்தனர்.

'இப்பகுதியின் தாசில்தார் **பல்லடத்தில்** வசிக்கிறார். அங்கு ஒரு கோட்டை உள்ளது; முப்பது வீடுகள் மட்டும் உள்ளன. அவற்றில் பதினைந்தில் பிராமணர்கள் உள்ளனர். இந்தத் தாலுகா வட - தெற்காகப் பதினைந்து மலபார் மணிநேரத்

தூரமும், கிழ - மேற்காகப் பன்னிரண்டு மலபார் மணிநேரத் தூரமுமாகப் பரந்துள்ளது. தாசில்தார், இந்தப் பகுதியின் விவரங்களுடன் என்னைப் பார்க்கத் தயாராக வந்தார். தரிசு நிலங்கள் இல்லை; சாகுபடி செய்யாத நிலங்களுக்குச் சிறிதளவு புல்வரி கிடைக்கிறது என்றார். தளபதி மெடோஸின் ஆக்கிரமிப்புச் சமயத்தில் (கி.பி.1790) இப்பகுதி பாதிக்கப்படவில்லை. ஏனெனில், இது போர் நடந்த தடத்திலிருந்து சற்று உள்ளே இருக்கிறது. சென்ற ஆண்டு அநேகக் கால்நடைகள் திடீர்த் தொற்று நோயினால் மடிந்தன.

'கலெக்டர் ஹுர்டிஸின் பிராந்தியத்தில் பல வகை நில அளவைகள் நிலவுகின்றன. இந்தப் பகுதியில் மட்டும் குறைந்த பட்சம் மூன்று வித அளவைகள் உள்ளன. பல்லடத்தில் ஒரு சங்கிலி அல்லது கயிறு என்பது 216 அடிகள் கொண்டது. ஒரு வல்லம் (Bulla) விளைநிலம் என்பது 3 x 2 சங்கிலி அளவு = 6.426 ஏக்கர் நிலமாகும்; மாதப்பூர் (madupura/madupuru) பிர்க்காவில் ஒரு வல்லம் விளை நிலம் 4.284 ஏக்கர் அளவு; திருப்பூரில் ஒரு வல்லம் நிலம் 2.41 ஏக்கர் அளவாகும். வருவாய்த் துறைக் கணக்குகள் சிக்கதேவராயன் காலத்திய அளவுகளிலேயே எழுதப்படுகின்றன. நில அளவைகள் போல முகத்தலளவையும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. ஒருபடி அளவு என்பது 64 முதல் 72 ரூபாய் எடையளவு தானியம் ஆகும் - அதாவது 56 முதல் 63 கன அங்குலம் அளவுகள். 4 படிகள் = ஒரு வல்லம்; 16 வல்லம் = ஒரு மொடா (morau); ஆறு மொடா = ஒரு பொதி. இவ்விதமான எடையளவு இப்பகுதியில் ஒரே மாதிரியாக உள்ளது. ஒரு தோலா = 20¼ பவுண்டுகள் என்ற அளவு. நில வரி பணமாக வசூலிக்கப்படுகிறது.

'இந்தச் சுற்று வட்டாரத்தில் நஞ்சை நிலத்தில் ஒரு போகம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஏரிகளிலிருந்தும், நொய்யலாற்று வாய்க்கால்கள் மூலமாகவும் நீர் கிடைக்கிறது. வாய்க்கால் தண்ணீருக்குத் தனி வரி.. நொய்யலாற்றில் 32 அணைகள் உள்ளன. அவற்றில் நான்கு, இந்தத் தாலுக்காவில் உள்ளன; அதில் இரண்டு நீண்ட காலமாகச் சேதமடைந்

துள்ளன. மீதி இரண்டும் பராமரிப்பில்லாததால் அதிகத் தண்ணீர் வருவதில்லை. மொத்தத்தில் முன்பு பயிரிடப்பட்டு வந்த நிலங்களில் மூன்றில் ஒரு பங்கு அளவில் மட்டும் இப்போது சாகுபடி நடைபெறுகிறது..

'கடந்த ஆறு வருடங்களாக மழைக்குப் பஞ்சம்; அதனால் புன்செய் நில விவசாயம் பெரிதும் பாதித்துள்ளது; முன்பு வெள்ளாமை செய்த நிலங்களில் 3/8 பங்கு தரிசாக உள்ளது; கால் நடைகள் மேய்வதற்குச் சிறிது நிலத்தை விட்டு வைப்பது வழக்கம் - அந்தக் கணக்கில் இந்தத் தரிசு சேர்த்து கொண்டது. அந்தத் தரிசும் மேய்ச்சலுக்காகக் குத்தகைக்கு விடப் பட்டுள்ளது; சொற்ப வருமானம் கிடைக்கும். இங்கு அதிகம் விளைவது கொள்ளு; அடுத்ததாகக் கம்பு; பிறகு சோளம்; அப்புறம் உப்புப் (Upum) பருத்தி. பிற பயிர்களின் சாகுபடி மிகவும் குறைவானதே.

'நான்கு ஏர் - அவற்றில் உழ நான்கு ஆட்கள், எட்டு மாடுகள், உதவிக்குத் தேவைப்படும்போது பெண் வேலை யாட்களை அமர்த்திக் கொண்டால், ஒரு விவசாயி 25 ஏக்கர் நிலத்தில் வேளாண்மை செய்யலாம்.. கபிளை ஏற்றங்களின் மூலம் நீர் இறைத்துப் பயிர் பண்ணும் தோட்டங்கள் இந்தத் தாலுகாவில் அதிகம்.. 25 ஏக்கர் நிலங்கள் இருபது மாடுகளை மேய்ப்பதற்குப் போதுமானது. வறட்சி மாதங்களில் அம்மாடுகளை மலையடிவாரத்திற்குக் கொண்டு செல்வார்கள். அல்லது இங்கு அதிகம் பயிராகும் சோளம், கம்மந் தட்டுகளைத் தீவனமாகத் தருவார்கள்..' என்று குறிப்பிட்டு வரும் புக்கானன், தாசில்தார் தந்த மேலும் சில புள்ளி விவரங்களைத் தருகிறார். கூடவே தாசில்தார் பற்றியும் விமர்சித்துள்ளார்.

'....தாசில்தார் தந்துள்ள இந்த மாதிரி விவரங்கள் சரியானவை போலத் தோன்றுகிறது; அலுவலகக் கணக்குகளிலிருந்து எடுத்துத் தந்துள்ளார். அவர் கணக்குப் புத்தகங்களை மட்டும் தெரிந்தவர்; சரியான தகவல்களைத் தருவதற்காகத் தயாரித்து வந்துள்ளார்; ஆனால் என்னைப்

பொருத்தவரை அவற்றை நம்புவதற்கில்லை. மேலும், அவர் வெளியூர்க்காரர் என்பதால் இப்பகுதி விஷயங்களை நேரடியாகத் தெரிந்தவரில்லை. அத்துடன், பக்கத்தில் இரும்பு எங்கு விற்கப்படுகிறது என்பதை நகரம் முழுவதும் விசாரித்தும் அவரால் தகவல் தரமுடியவில்லை; எல்லோரும் கூறினார்கள் - இரும்பு சென்னிமலைப் பகுதியிலிருந்து வருகிறது என்று; ஆனால் குறிப்பாக எந்தக் கிராமத்திலிருந்து வருகிறது எனச் சரியாகச் சொல்லவில்லை..'

**அ**டுத்ததாகப் புக்கானன் சென்ற ஊர், **தளவாய்ப் பாளையம்** பத்து மலபார் மணிநேர தூரம். அங்கு இரும்பு உலைக்களங்களைக் காண முடியும் என நம்பினார்; ஆனால் ஏமாற்றமடைந்தார். அவர் அன்று கடந்து வந்த பகுதியில் சில நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. மீதி நிலங்கள் வெறுமையாயிருந்தன. மண் சுமார்தான்; இருந்தும்,அங்கு ஒரு காலத்தில் வேளாண்மை நடைபெற்ற தடயங்கள் தெரிந்தன; தரிசாயிருந்த நிலங்களில்கூட நல்ல வேலிகள் இருந்ததைக் காண முடிந்தது. நெல் விளையும் பூமி குறைவுதான்; ஆனால் அதிலும்கூட அப்போது பயிர் செய்யப்படவில்லை. ஒரு பெரிய ஏரியைக் கடந்து அவர் சென்றார்; ஏரியில் நிறைய தண்ணீர் இருந்தது; இருப்பினும் சாகுபடி நடக்கவில்லை. அவர் வேறொரு பெரிய ஏரியையும் தாண்டிச் சென்றார். ஒரு ஓடையின் நீர் அதற்குள் சென்றது; ஆனால் அந்த ஏரியின் கரை உடைந்திருந்தது. நொய்யலிலிருந்து பிரியும் வாய்க்கால்களும் அவற்றின் பிரிவுகளும் சிறியனதாக இருந்தாலும், அவற்றினால் ஏரிகளை நிரப்ப வழிவகைக் காணலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுகிறார்:

'நான் தளவாய்ப் பாளையத்தை நெருங்கியதும், அங்கு கூம்பு போன்ற அமைப்புள்ள சிறு மலைகளைக் கண்டேன். சின்னமலைகள் என்று அவற்றுக்குப் பெயர்க் காரணம். தளவாய்ப் பாளையம் ஒரு சாதாரண கிராமம். கடை இல்லை; இருபது வீடுகள் மட்டும் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் மழை குறைவு; ஏரிகள் நிரம்பவில்லை; அப்பிராந்தியம்

முழுவதும் நிலை இதுதான் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். தானிய விளைச்சலோ வழக்கமான அளவில் பாதிகூட தேறவில்லையாம். கோயம்புத்தூர்ப் பகுதிகளில் உள்ள செடிகளின் பெயர்கள் திருச்சிராப்பள்ளியில் வழங்கும் பெயர்களிலிருந்து வித்தியாசப் படுகின்றன. இரண்டு பகுதிகளிலும் தமிழ்தான் பேசப்படுகிறது; இருந்தும் இந்த வேறுபாடு. கோயம்புத்தூர்த் தமிழ் மதராஸிலிருந்து என்னுடன் வந்துள்ள அலுவலர்களுக்கு நன்றாகப் புரிகிறது - அவர்கள் வேறு தேசத்தவராக இருந்தாலும்..'

அடுத்த நாளான நவம்பர் 5-ஆம் தேதி சிறிது தொலைவு கடந்து சென்னிமலைக்குச் சென்றார், புக்கானன். சென்ற வழியில் **கோட்டம்பள்ளி** (Cottumbully) என்ற இடத்தில் இரும்பை உருக்கும் ஒரு உலைக்களத்தைக் கண்டார்; சென்று பார்த்தார். சக்கிலியர் இரும்பை வடித்தனர். மலைகளுக்கு அந்தப் பக்கம் உள்ள உலைக்களம் போலத்தான் இங்கும் இருந்தது. ஆனால் இங்கு வருந்தத்தக்க நிலையிலிருந்ததாம். அவர் எழுதுகிறார்:

‘இரும்பை உருவாக்கும் உலைகள் திறந்த வெளியில் கட்டப்பட்டுள்ளன. அதனால் மழைக்காலத்தில் அவை பயன்படாது. நெருப்பை எரிய வைக்கும் காற்றுத் துருத்தி வெள்ளாட்டின் தோலால் செய்யப்பட்டது; அதன் மூலம் மிகக் குறைவான காற்றை மட்டும் வெளிக் கொணர முடியும். வேலை செய்யும் ஆள் ஒரு கல்லின் மீது உட்காருகிறான். அந்தப் பையை அவனது இரண்டு கால்களுக்கிடையே வைத்துக் கொள் கிறான்; வலது கையால் துருத்தியை அமுக்கி மேலே எடுப்பான். அந்தப் பை ஒவ்வொரு தடவையும் பாதிதான் காலியாகும். வீட்டுச் சமையல் கட்டில் பயன்படும் இரட்டை ஊது குழாயில் வெளிப்படும்அளவு காற்றுதான் இந்தப் பை மூலம் வெளிப்படும். உலையின் ஒரு முனையில் உருக்கிய இரும்பை வெளியில் எடுக்க ஒரு திறப்பு உள்ளது; நிலத்தை ஒட்டியவாறு. இரும்புத் துண்டை எடுத்த பிறகு, உலையில் கரிகள் நிரப்பப்படுகின்றன. உலை எரிய ஆரம்பித்தபின் ஒரு

பெரிய கரண்டியளவு கரிகளும் (இன்றைய அளவில் சுமார் 825 மில்லி லிட்டர் அளவு), ஒரு கிண்ணத்தில் தாது கொண்ட மணலும் (சுமார் 550 மில்லி லிட்டர் அளவு) அதில் போடப்படுகின்றன. இவ்வாறு காலையிலிருந்து மாலை மூன்று, நான்கு மணி வரை வேலை தொடர்கிறது. அப்போது இரும்புக் கட்டி உருவாகி வெளியே எடுக்கப்படுகிறது. இதில் கரிக்கான செலவு மிக அதிகம். மலைகளிலிருந்து வரும் ஓடைகளின் நீர் மணலை அடித்து வரும். குறிப்பாகக் காங்கயம் பகுதியில் நொய்யலின் தெற்கிலுள்ள வீர சோழாவரம் என்ற கிராமத்திலிருந்து நிறைய மணல் அடித்து வருகிறது.

'சாணார் என்கிற சாதியினர் சென்னிமலை அருகில் இரும்பை வார்க்கின்றனர். உலையிலிருந்து இரும்புக் கட்டியை வெளியே எடுத்ததும் அதைக் கோடாலி மூலம் இரண்டாகப் பிரிப்பதாக அவர்கள் சொல்கின்றனர். அது கொல்லர்களுக்கு விற்கப்படுகிறது. அதை அவர்கள் உலையில் வைத்துத் திரும்பத்திரும்பத் தட்டி சிறு, சிறு கட்டிகளாகச் செய்கின்றனர். ஒவ்வொரு உலையிலும் நான்கு சாணார்கள் வேலை செய்கின்றனர். ஒவ்வொருவரும் வேலையின் ஒவ்வொரு பகுதியைக் கவனிக்கின்றனர். மழைக்காலத்தில் அவர்கள் மணலைச் சேகரிக்கின்றனர்; பிறகு கரித்துண்டுகளைச் சேகரிக்கின்றனர்; இறுதியாக, பனை, தென்னை மரங்களின் அறுவடைக் காலங்களின் மூன்று மாத இடைவெளியில் மீண்டும் இரும்பை உருக்க ஆரம்பிக்கின்றனர். உருக்கும் இரும்பில் முப்பதில் ஒரு பாகத்தை அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்துகின்றனர். அத்துடன் கரித் துண்டுகளுக்காக வெட்டும் மரங்களுக்கும் மகமை செலுத்துகின்றனர். பெருந் துறை வட்டத்தில் கிட்டத்தட்ட ஒவ்வொரு கிராமத்திலும் கருப்பு மண்ணிலிருந்து இரும்பைத் தயாரிக்கும் வேலை நடைபெறுகிறது.

'நொய்யலாற்றின் பகுதிகள் முழுவதிலும் மாவுக்கல் பாறைகள் கிழக்கு மேற்காக செங்குத்தாகக் காணப்படுகின்றன.. நான் இன்று பார்த்து வந்த பகுதிகள் தளவாய்ப் பாளையம்

பகுதியைப் போன்றே உள்ளன. மக்கள் மழையில்லை என்று குறை பட்டுக் கொள்கிறார்கள்; ஆனால் ஒரு பெரிய ஏரியைக் கடந்து வந்தேன்; அந்த ஏரி நிறைய தண்ணீர் இருந்தது; ஆனால் பாசனத்திற்குப் பயன்படுத்தப் படாமல் இருந்தது.

'கோயம்புத்தூரின் பிற பகுதிகளைப் போல இங்கும் பெரும்பாலும் கிளுவை முள் செடிகளால் வேலி போடப் படுகிறது.. கிளுவை மரங்களிலிருந்து மூன்று, நான்கு முழக் குச்சிகளாக வெட்டி மார்ச் 12 முதல் ஏப்ரல் 10 வரையான காலத்தில் (பங்குனி) நிலத்தில் ஒரு ஜான் ஆழத்தில் பதிக்கிறார்கள். பதித்ததிலிருந்து அது கால்நடைகளுக்கு எதிரான வேலியாகிறது. கள்ளி, வேலமர முள் வேலிகள் இங்கு பரவலாகக் காணப்படுகின்றன; அவை எந்த மண்ணிலும் வளரும்; ஆனால் கிளுவைச் செடிகளுக்குச் சற்று நல்ல மண் தேவை.

**'சென்னிமலை'** (China mali!) மக்களுக்கு எந்தத் தகவலையும் எனக்குத் தர விருப்பமில்லை; அல்லது அவர்கள் அந்த அளவிற்கு விவரம் தெரியாதவர்களாயிருக்க வேண்டும்.. ஒருமுறை உருக்கி, வெட்டி எடுக்கப் பட்ட இரும்பில் பாதித் துண்டை எடை போட அந்த நகரம் முழுவதிலும் தேடியும் வழி காண முடியவில்லை. இப்பகுதி மக்கள் மைசூர்ப் பகுதியினரைக் காட்டிலும் விவரம் குறைந்தவர்களாகத் தெரிகின்றனர்; அத்துடன், பெரும்பாலான கைவினை வேலைத் திறனில் கல்கத்தா அல்லது மதராஸ் பகுதியினரைக் காட்டிலும் மேலும் பின்தங்கியவராக உள்ளனர். கைவினை வேலைகள் வெளி நாட்டினரால் அறிமுகமாகாத வங்காளத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இதேதான் நிலை. நெசவுத் தொழிலில் மட்டும் கிட்டத்தட்ட நன்றாகத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

'ஐதர் அலி காலத்தில், சென்னிமலையில் சுமார் இருநூறு வீடுகள் இருந்தன; இப்போது 125 ஆகக் குறைந்துள்ளன. அவற்றில் 17 வீடுகள் பிராமணர்களுடையவை; அவர்கள் 18 வீடுகளை நாட்டியக்காரிகளுக்காகவும் இசைக் கலைஞர் களுக்காகவும் வைத்துள்ளனர். மீதியுள்ள 90 வீடுகள் தொழில்

செய்து பிழைப்பவருடையன; அவற்றில் **41** வீடுகள் நெசவாளர்களுடையவை, ஐந்து வீடுகள் கடைக்காரர்களுடையவை, ஏழு வீடுகள் விவசாயிகளுடையவை.

'சமீபத்தில் **சின்னம்மை** இந்நகரில் பரவியது அதனால் நூறு பேர்கள் இறந்தனர். இச்சிறிய ஊரில் இப்பெரும் இழப்பு மிகக் கொடுமையானது! அம்மைப்பால் ஊசி குத்திக் கொள்ளுதலைப் பற்றி இப்பகுதி மக்களுக்குத் தெரியவில்லை; அதைப் பற்றிச் சொன்னால், அவர்கள் ஆச்சரியமும் வெறுப்பும் கொள்கிறார்கள். அம்மைக்கு மருந்தாக வேப்பிலையை நம்புகிறார்கள்; வைரஸ் கிருமியினால் நேரும் இந்தக் கடும் நோய்க்கு வேப்பிலையைச் சாற்றுகிறார்கள். ஏனெனில் அம்மையைக் கொண்டு வரும் மாரியம்மனுக்கு வேப்ப மரம் புனிதமானது; மாரியம்மன் கோயிலுக்குப் பூசாரி, பண்டாரம் ஆவார். அம்மைக் காலங்களில் அப்பூசாரிக்கு அன்பளிப்புகள் கிடைக்கின்றன - பிராமணர்கள்கூடத் தருகின்றனர். இப்போது இந்த நோய் நின்று விட்டது. அதற்காக (அன்று) இரவில் ஒரு பெரும் பலி தந்திட எண்ணியுள்ளார்கள் - நோயைத் தணித்துள்ள தெய்வத்திற்கு நன்றி தெரிவிப்பதற்காக. அப்பலியிடும் நிகழ்ச்சியில் பிராமணர்கள் கலந்து கொள்வதில்லை. கூடியிருக்கும் பாட்டுப் பாடுவோர், தாரை - தப்பட்டைகள், பிற வாத்தியங்கள் மற்றும் பிற ஆட்கள் போடும் சத்தத்தால் நான் இன்று உறங்குவதற்கு வாய்ப்பில்லை..'

**ந**வம்பர் ஆறாம் தேதி சென்னிமலையிலிருந்து ஐந்து மலபார் மணி நேர தூரம் கடந்து **பெருந்துறைக்குச்** (Perinduru!) சென்றார். 'கடந்து வந்த வழியில் மண் சுமார்தான். பெரும்பாலான நிலங்களில் பயிர் சாகுபடியைக் காணவில்லை. சில இடங்களில் வேலிகள் இருந்தன; பல இடங்களில் பனந்தோப்புகள் இருந்தன. தாசில்தார் சொல்வதின்படி, இப்பகுதியில் நெல் விளையும் பூமி மிகவும் குறைவு. நொய்யலில் இருந்து இரண்டு கால்வாய்கள் வருகின்றன. ஒரு கால்வாய் இங்குள்ள ஏரியை நிரப்புகிறது; மற்றொன்று நேரடிப் பாசனத்திற்குப் பயன்படுகிறது. ஆனால் இவ்விரண்டு

வழிகளிலும் பாசனம் பெறும் நிலங்கள் அதிகமில்லை. சென்னிமலைப் பகுதியில் நெல் விளையும் பூமி இல்லை. இப்பகுதியில் கபிளை ஏற்றம் மூலம் நீர் பாய்ச்சும் நிலங்கள் அதிகம் உள்ளன. அவற்றுக்கான குத்தகைத்தொகை மேட்டாங்காட்டு நிலங்களுக்கானதைவிட அதிகம். இந்தத் தாலுகாவின் முக்கால் வாசிப் பகுதி தரிசு நிலங்களாகவே உள்ளன. காரணம், போதிய சனத்தொகை இல்லை என்று தாசில்தார் சொல்கிறார். எனக்குப் புரிவது என்னவெனில், மக்கள் தொகையை அவர் கூட்டிச் சொல்கிறார்; தரிசு நிலங்களில் பெரும்பாலானவற்றின் மண் சுமாரானவைதான் என்கிறார்; அந்த நிலங்களில் ஒன்றிரண்டு முறை சாகுபடி செய்தும் போதிய பலன் கிட்டாததால் அவை தரிசாகவே விடப்பட்டன என்றும் அவர் சொல்வதை என்னால் ஏற்க முடியவில்லை. ஏனெனில், இப்போது பயிர் செய்துள்ள நிலங்கள்கூட தரிசு நிலங்களின் மண்போன்று சுமாரான மண்ணுள்ள பூமிதான்..

'கடந்து வந்த வழியில், முழுவதும் அழிந்த நிலையிலிருந்த ஒரு கிராமத்தைப் பார்த்தேன். ஐதர் அலி இறந்ததற்குப் பின்னர் ஒரு ஆண்டில்கூட சரியான மழையில்லை என்று மக்கள் சொல்கிறார்கள். இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளது. ஆனால் தாமதமாக வந்த மழை.

'இந்தத் தாலுக்காவில் 800 தறிகள் உள்ளன. முக்கிய நகரமான பெருந்துறையில் 118 வீடுகள் உள்ளன; அவற்றில் 24 பிராமணர்களுடையவை. அவர்களில் பெரும்பாலானோர் இங்குள்ள ஒரு கோயிலைச் சார்ந்தவர்கள். இங்கு ஒரு மண் கோட்டை உள்ளது; அதனுள் யாரும் குடியிருக்கவில்லை. நகரில் அழிந்துபோன வீடுகள் பல உள்ளன. முன்பு அந்தக் கோயிலுக்கு 10,000 கோபாலி பணம் (சுமார் 139 பவுண்ட்) வருவாய் வரும் அளவிற்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இப்போது 1018 ரூபாய் அளவிற்கு (சுமார் 103 பவுண்ட்) வருவாய் வரும் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கிராம தெய்வங்களுக்குச் சிறிதளவு 'இனாம்' நிலம் அல்லது பாதி குத்தகையில் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும்,

ஆண்டவன் சேவையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம்களுக்கும் பிராமணர்களுக்கும் குத்தகை இன்றி அல்லது சிறிதளவு குத்தகைத் தொகைக்கு நிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நிலம் பெற்றுள்ள முஸ்லிம்கள் சில மதச் சடங்குகளை மேற்கொள்ள வேண்டும்; ஆனால் அந்தப் பிராமணர்கள் தாங்கள் விரும்பினால் மேற்கொள்ளலாம். இந்த இனாம் நிலங்களை அவர்கள் 'போக்கியத்திற்கு' அடமானம் வைக்கலாம். போக்கியம் என்பது குறிப்பிட்ட சில ஆண்டுக் காலத்திற்கு முன்பணம் பெறுவதாகும்; அந்தக் காலத்தில் அந்நிலத்தில் விளையும் பொருட்களை வட்டிக்குப் பதிலாக எடுத்துக் கொள்ளலாம்; குறிப்பிட்ட காலத்திற்குள் வாங்கிய முன் பணத்தை பணம் தந்தவர் வைத்துக் கொள்ளலாம். இவ்வகையில், பரவலாக இந்தியா முழுவதும், மதக் காரியத் திற்காக ஒதுக்கப்படும் நிலங்கள், வேறு காரியத்திற்காகப் பயனாகும் நிலை உள்ளது..' என பெருந்துறையிலிருந்து புக்கானன் குறிப்பிட்டுள்ளார்.

**ந**வம்பர் ஏழாம் தேதி, எட்டு மலபார் மணிநேர தூரம் கடந்து* **ஈரோட்டிற்குச்** சென்றார் புக்கானன். சென்னிமலை -பெருந்துறைப் பகுதியைப் போன்றே இப்பகுதியும் இருந்த தாம்; நெல் விளையும் பூமி இல்லை. அவர் குறிப்பிடுகிறார்:

'ஈரோட்டில் ஒரு பெரிய மண்கோட்டை உள்ளது; ஒரு பட்டாலியன் (சுமார் 100 பேர்) சிப்பாய்கள் அதில் உள்ளனர். இப்பகுதியில் சிப்பாய்ப் பணிக்கு ஆட்கள் சுலபமாகக் கிடைக்கிறார்கள். திப்புவிடமிருந்த படைவீரர்கள் இப்போது கம்பெனி சேவையில் சேர ஆரம்பித்துள்ளனர்; சமீபத்தில் சிப்பாய்களின் சம்பளத்தை உயர்த்தியதின் விளைவு கண்கூடாகத் தெரிகிறது. ஐதர் அலியின் காலத்தில் புற நகர்ப் பகுதியில் 3000 வீடுகள் இருந்தன. திப்புவின் அரசாங்கம் அவற்றில் மூன்றில் ஒரு பங்கைக் குறைத்தது; மிச்சத்தை தளபதி

* இப்போதைய சாலை தூரத்திற்கும் (18 கி.மீ./11 மைல்) புக்கானன் கடந்து சென்ற பாதை வழிக்கும் சம்பந்தமில்லை எனத் தெரிகிறது. சென்னிமலை பெருந்துறை பயண தூரத்தையும் (14கி.மீ.மைல்) புக்கானன் கடந்து சென்ற நேரத்தையும் ஒப்பிடுக.

மெடோஸின் ஆக்கிரமிப்பு அழித்தது. இப்போது அது புத்துயிர் பெற்றுக் கொண்டிருக்கிறது; தற்போது 400 வீடுகள் உள்ளன. சூழ்நிலை நன்றாக உள்ளது; ஆரோக்கியமாக உள்ளது. இவ்வூர் விரைவில் பழைய முக்கியத்துவத்தை அடையக்கூடும்; மையத்தில் அமைந்துள்ள இவ்வூர் ஒரு ராணுவக் கேந்திரமாகும் தகுதியைக் கொண்டுள்ளது. இந்தத் தாலுக்காவில் 205 நெசவாளர்கள் உள்ளனர். கைக்கோளர், சேடர், பறையர் ஆகியோர். பறையர் நெய்யும் துணிகள் மிக நன்றாக இருப்பதாகச் சொல்கிறார்கள் - ஆனால் மொத்தரகத் துணியாகும்.

'பவானியிலிருந்து ஈரோடு வழியாக ஒரு அருமையான கால்வாய் செல்கிறது; பதினைந்து மலபார் மணி நேர தூரத்தைச் சுற்றியுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் தருகிறது. இந்த ஊரில், அந்தக் கால்வாய் ஒரு உயர் அழுத்த செயற்கை மேல்வாய்க்கால் (aqueduct) மூலம் நீரேற்றம் செய்யப்படுகிறது. இக்கால்வாய், முன்பு கரூர் வரை அமைந்திருந்ததாகச் சொல்லப் படுகிறது. அது, நொய்யல் ஆற்றின்மீது அமைக்கப்பட்ட ஒரு உயர் அழுத்த செயற்கை வாய்க்கால் மூலம் தண்ணீரைச் செலுத்தியதாம். அப்படியிருந்திருப்பின் அது பெரும் சாதனையாக இருந்திருக்கும். இக்கால்வாய் காலிங்கராயன் என்ற வசதி மிக்க வேளாண் விவசாயியால் வெட்டப்பட்டதாம். அவர் தனது சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் உதவியால் கால்வாயை வெட்டினாராம். அது நானூறு ஆண்டுகட்கு முன்பு செய்த வேலை. அவருடைய குடும்பம் இப்போது இல்லை; அவரது குடும்பத்தினர் இந்த சாதனைக்காக, நிலமாக எந்தப் பிரதிபலனும் பெறவில்லை எனத் தெரிகிறது. இந்த வாய்க்கால் 1045 கண்டகம் நிலங்களுக்கு (சுமார் 3459 ஏக்கர்) நீர்ப் பாசனம் தருகிறது; அவற்றில் 83 ஏக்கர் நிலம் மட்டும் தரிசாக உள்ளது. இந்தத் தாலுக்காவில் புன்செய் தரிசாக சுமார் 1713 ஏக்கர் நிலங்கள் உள்ளன.'

அடுத்த நாளும் புக்கானன் ஈரோட்டில் தங்கியிருந்தார். ஈரோட்டின் தாசில்தார் ஒரு பிரர்மணர்; புத்திசாலி. அவரிடமிருந்து புக்கானன் பெற்ற தகவல்களைப் பார்ப்போம்:

பாசனம் பெறும் நிலங்களில் இருவகை சாகுபடிகள் நடைபெறுகின்றன. முளைவிட்ட விதை மூலம் மற்றும் நாற்று நடுவதன் மூலமாக ஒரு வகை நெல் மிளகு சம்பா (mulaghi!). அது விளைந்து கதிர் முற்ற எட்டு மாதங்கள் ஆகின்றன; ஜூலை 13 முதல் ஆகஸ்ட் 19 வரை (ஆடி மாதம்) விதைக்கப்படுகிறது. அதே ஆண்டில் அப்பயிர் மீண்டும் சாகுபடி செய்யப் படுவதில்லை. நல்ல மகசூல் உள்ள ஆண்டில் ஏக்கருக்கு சுமார் 30 'புஷல்' * விளைச்சல் கிடைக்கிறது!

மற்றொரு வகை நெல் ஒரு ஆண்டிற்கு இரண்டுமுறை பயிரிடலாம் - இரண்டு முறையும் சேர்த்து, நல்ல மகசூல் உள்ள ஆண்டில் ஏக்கருக்கு 45 முதல் 49 புஷல்கள் (1638 முதல் 1784 லிட்டர்கள்) வரை விளைச்சல் கிடைக்கிறது. முதல் பயிர் அன்னதானம் (anadanum) எனப்படுகிறது. அது மே 12 முதல் ஜூலை 12 வரை (வைகாசி-ஆனி மாதங்கள்) பயிரிடப் படுகிறது. கதிர் முற்ற ஐந்து மாதங்கள்.. அது ஏக்கருக்கு 25 புஷல்கள் விளைச்சல் தருகிறது. சம்பா, தேவராய சம்பா மற்றும் **செந்தலை** (shindalay) என்று மூன்று வகைகளான நெல் இரண்டாம் பட்டத்தில் விதைக்கப்படுகிறது. நவம்பர் 14 முதல் ஜனவரி 10 வரை (கார்த்திகை, மார்கழி மாதங்கள்). விளைய ஆறு மாதங்கள் ஆகின்றன. அவற்றில் சம்பா நெல் ஏக்கருக்கு 24 புஷல்கள் விளைகிறது; மற்ற இரண்டிலும் ஏக்கருக்குச் சுமார் 20 புஷல்கள் கிடைக்கின்றது.

இது பற்றி புக்கானன் தொடர்கிறார்; 'இங்குக் கிடைக்கும் பாசன நீர் நல்லராயன் பாளையத்தில் (பார்க்க: அத்தி.9) கிடைப்பதைப் போல ஒழுங்காகவும் நன்றாகவும் கிடைத்தாலும் இங்குள்ள விளைச்சல் மிகவும் குறைவு; அதனால் இங்குத் தந்துள்ள விவரங்களும் அங்குக் கிடைத்த விவரங்களும் தவறானவை என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. நல்லராயன் பாளையத்தின் நெல் விளையும் நிலம் நல்ல வளமுடன் இருப்பதாகத் தோன்றுவதற்கு அங்கு நடவு மூலம் சாகுபடியாகிறது. இங்கு நேரடி விதைப்பின் மூலம் பயிரிடுதல்

* ஒரு புஷல் (bushel) = எட்டு 'காலன்'கள் (gallon) = சுமார் 36.4 லிட்டர் அளவு.

இன்னும் தொடர்வதால் இந்த வேறுபாடு. இங்குள்ள பாசன நிலத்திற்குத் தீர்வை அதிகமில்லாததால் விவசாயிகள் நாற்று நடவு முறைக்கு முழுவதுமாக மாறவில்லை..'

புன்செய் நிலப் பயிர்களாக ஈரோட்டுப் பகுதியில் கம்பு, மொச்சைக் கொட்டை, சோளம், எள்ளு, சாமை, உளுந்து, பச்சைப் பயிறு, துவரை, பருத்தி ஆகியவை பயிராயின; தோட்டப் பயிர்களாகச் சோளம், கேழ்வரகு, புகையிலை, ஆகியவற்றை புக்கானன் குறிப்பிட்டுள்ளார். திப்புவின் ஆட்சித் துவக்கத்தில் தென்னை மற்றும் பனந் தோப்புகள் இருந்தன. ஆனால் அவை இப்போது அழிந்து விட்டன. இப்போது நடுவதற்காக 20,000 தென்னங் கன்றுகளையும் ஒரு லட்சம் பனங் கொட்டைகளையும் தருவித்து அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.. 'இந்தப் பகுதியில் மரங்கள் இல்லாத நிலையில் பனந் தோப்புகள் அமைவது வீடு கட்ட மிகவும் உதவும்; நல்ல மண்ணில் பனைமரம் முப்பது ஆண்டுகளிலும், பிற மண்ணில் 50 ஆண்டுகளிலும் நன்கு வளர்ந்து நிற்கும்' என்கிறார் புக்கானன்.

ஈரோட்டிலிருந்து கிளம்பி, காவிரிக் கரையோரமாகத் தெற்கே சென்றார் புக்கானன். அடுத்து அவர் சென்ற ஊர் பாசூர்...

# 12

# சமகால நடப்புகள்

**பு**க்கானனை விடுத்து, *கி.பி.1800* வாக்கில் கொங்கு நாட்டில் நிலவிய வேறு சில நடைமுறைகளையும், கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியில் விளைந்த மாற்றங்களையும் காண்போம்.

## அம்மை தடுப்பூசி குத்துதல்

அம்மை நோய் கண்டு சென்னிமலையில் மட்டும் *கி.பி.1800*இல் நூறு பேர் இறந்தனர் என்று புக்கானன் குறிப்பிட்டுள்ளார் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்கு முன்பு கொங்கு நாட்டில் அம்மை தடுப்பூசி போட்டுக் கொள்ளும் மருத்துவம் நடப்பில் இல்லை. புக்கானன் சென்னிமலையிலிருந்து சின்னம்மைக்கான தடுப்பூசி பற்றிக் குறிப்பிட்டதற்குச் சில நாட்கள் முன்பு, கிழக்கிந்தியக் கம்பெனி அரசாங்கம் அம்மை தடுப்பூசி போட்டுக் கொள்வதின் அவசியத்தையும் அதனால் விளையும் பயனையும் மக்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென மாவட்டக் கலெக்டர்களுக்குக் கடிதம் எழுதியது *(18.10.1800)*. கலெக்டரும் அவ்வாறு செய்ததாகப் பதில் தந்தார் **(27.11.1800)**. சின்னம்மையால் பாதிக்கப்படாத நபர்களின் பட்டியலைத் தருமாறு வருவாய்க் கழகம் கோரியது. பின்னர் உள்ளூர் மக்களிடையே அம்மை ஊசி போட்டுக் கொள்வதற்கு எதிராக

நிலவும் மூட நம்பிக்கையைப் போக்க வேண்டிய அவசியம் குறித்து மக்களிடையே விளக்கிச் சொல்லி, அவர்களின் மனோபாவத்தை மாற்ற முயற்சி மேற்கொள்ளவும் கேட்டுக் கொண்டது. அதற்கான எதிர்பார்க்கப்படும் செலவையும் தெரிவிக்கக் கோரியது. (ஜூன் 1801). கலெக்டரும் தன் யோசனையைத் தெரிவித்தார். உள்ளூர் மருத்துவர்களை இந்த வேலைக்கு அமர்த்தலாம் எனப் பதில் எழுதினார் (ஜூன் 19, 1801). சேலம் கலெக்டர் மேற்கொண்ட பிரச்சாரத்தையும், முயற்சிகளையும் பாராட்டிய வருவாய்க் கழகம், அம்மை தடுப்பூசி போடும் பணியில் பிராமணர்களை அமர்த்துமாறு பணித்தது. (ஜூன் 27, 1801). அதற்காக நூறு பேர்களுக்கு ஊசி போட்டால் 20 பகோடா வெகுமதி அளிக்கப்பட்டது. ஊசி போட்டுக் கொண்டவர்களுக்கு இலவச அரிசி வழங்கப் பட்டது. மருத்துவர்களையும் (சர்ஜன்) இதற்காக அரசு நியமித்தது. அதைத் தொடர்ந்து ஒரு முயற்சியாகச் சிறையி லிருந்த கைதிகளுக்கு அம்மை தடுப்பூசி போட பவானி சப்-கலெக்டர் சிறை அதிகாரிக்கு எழுதினார் (மார்ச், 1802). கைதிகளின் சம்மதத்தின் பேரில் அவர்களுக்கு அவ்வூசியைப் போடலாம் என்று அறிவுறுத்தினார். அம்மை ஊசி போடுவதை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதற்காக வட கோயம்புத்தூர் கலெக்டருக்கு மதராஸ் கவர்னர் பாராட்டு தெரிவித்தார் (வருவாய்க் கழகம் கடிதம், 28.7.1803)

அப்போது சேலம் ஜில்லாவிலிருந்த (1794-99) கிறித்துவ மத போதகர் அப்பே துபுவா இந்தப் பணியை மேற்கொண்டு செய்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கன. சேலம்- கோயமுத்தூர்-மைசூர்ப் பகுதிகளில் அம்மை ஊசி போடும் வழக்கத்தை மேற்கொண்ட முன்னோடி அவர். சங்ககிரியில் இருந்த இராணுவ வீரர்களிடையே அம்மைப்பால் குத்தும் முறையை ஆரம்பித்தார். அவர் சங்ககிரியில் அம்மை தடுப்பூசி போடுவதன் மூலகர்த்தா. சங்ககிரியிலிருந்த மதம் மாறிய ஒரு கிறிஸ்துவன் சிப்பாய்களுக்கு அம்மை குத்தும் வேலையைச் செய்து வந்தான்.

புக்கானன் வந்து சென்ற இருபது ஆண்டுகளுக்குப் பின் (1819) சேலம் ஜில்லாவில் காலரா பரவி கொடுந் துயரத்தை விளைவித்தது. மக்கள் பீதியில் உறைந்து போனார்கள். சனங்கள் கொத்துக் கொத்தாக இறந்தார்கள். இறந்தவர்களின் உடல்களுக்கு இறுதி மரியாதை செலுத்தி எரிக்கவோ அடக்கம் செய்யவோ முடியாத நிலை... இறந்த உடல்களைத் தூக்கி எறிந்தனராம்... அந்த இடுக்கண் நேரத்தில் ஐரோப்பியர்கள் தாங்கள் ஊசி, மருந்து போட்டுக் கொண்டு, தெருத் தெருவாகச் சென்று அநேகருக்கு மருந்து வழங்கினராம்; அதனால் பலர் உயிர் பிழைக்க நேர்ந்தது. மாவட்ட கலெக்டர், வருவாய்க் கழகத்தின் அனுமதிக்காகக் காத்திருக்காமல், அதிகம் பாதித்த ஓசூர், கிருட்டிணகிரி தாலுக்காக்களுக்கு இரண்டு டாக்டர் களை அனுப்பி, நிவாரண வேலைகளைச் செய்தார். செலவு ரூபாய் 952. அச்சமயத்தில் உள்ளூர்வாசிகள் செய்தது - தப்பட்டை அடித்து 'மாரியாத்தா'வுக்குக் கோபம் பொங்கி யுள்ளது; அதைத் தணிக்க ஆடு, கோழிகளை மாரியம்மனுக்குப் பலிதரக் கேட்டுக் கொண்டனராம்- சென்னிமலையில் அம்மைக்காக மாரியம்மனுக்குப் பலியிட்டதாக புக்கானன் கேள்விப்பட்டது, பிற்காலத்திலும் மக்களிடையே நிலவி யதைக் காணலாம்.

**நாணயங்கள்**

**ஆ**ங்கிலேயர்களின் ஆட்சிக்கு முன்பு நிலவிய மன்னர் களின் காலங்களில் பலவகையான நாணயங்கள் வெளியாயின. இன்றுள்ளதைப் போன்று ஒரே நாடு, ஒரே ஆட்சிமுறை என்ற நிலை இல்லாததால் வெவ்வேறு காலங்களில் வெளியான, வெவ்வேறு நாட்டின், பலவித நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. அந்த நாணயங்களின் மதிப்பு அவற்றை வடித்தெடுக்கும் உலோகங்களின் விலையை ஒட்டி அமைந்தது. காரணம், தொழில் வளர்ச்சி குறைவாயிருந்த அக்காலத்தில் பணவீக்கம் குறைவே. ஆனாலும் நாலாவித நாணயங்களின் மாற்று விகிதத்தை சாமானிய மக்கள் சரியாகத் தெரிந்து கொள்ள இயலாத நிலையிருந்தது.

அக்காலத்தில் (கி.பி.1800, அதற்கு முன்பும் பின்பும்) பண மாற்று விகிதத்தைக் காண அலுவலர் இருந்தார். அவர் 'ஷெராப்' என்று அழைக்கப்பட்டார். பண்ட மாற்று முறையில் பொருட்களை விற்றல்- வாங்குதல் அதிக அளவில் நடைபெற்றன. போதிய எண்ணிக்கையில் நாணயங்கள் இல்லாமை, அவற்றின் சரியான மாற்று விகிதத்தினை அறியாமை, குறைவான தேவைகள் போன்ற காரணங்களால் பண்ட மாற்று வழி மக்களுக்கு எளிதாக இருந்திருக்கும். தன் பொருள், தன் உழைப்பு, தன் தேவைகளின் மதிப்பு போன்றவற்றை உணர்ந்தவனுக்குத் தனக்குத் தேவைப்படும் பொருட்களின் மதிப்பைத் தானே நிர்ணயம் செய்ததால் மனத்திருப்தி ஏற்பட்டிருக்கும்.

சேலம் ஜில்லாவின் கலெக்டராக அலெக்சாண்டர் ரீடு சேர்ந்தபோது (1792), அம்மாவட்டத்தில் புழக்கத்தில் இருந்த நாணயங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

'முன்பு சேலத்தில் கணிசமான அளவில் நாணயங்கள் அச்சிடப்பட்டன. நாணயச்சாலைகளின் வாடிக்கையாளர் களாக சௌகார்களும், வணிகர்களும் அடிக்கடி வந்து வேண்டிய அளவு உலோகங்களைத் தருவர்; அடக்க விலையுடன் லாபத்தைக் கூட்டி விற்பார்கள். அத்துடன், நாணயங் களை வார்த்தெடுக்கும் செலவுகள், அரசுக்குச் செலுத்த வேண்டிய தீர்வை (கலால் வரி) ஆகியவை, நாணயங்களின் மதிப்பிற்கேற்றவாறு, குறிப்பிட்ட சதவிகித அடிப்படையில் சேர்க்கப்படும். மேலும், நாண்யச் சாலையில் பணியாற்றும் நாணயச்சாலைத் தலைவர், பொன்வேலை ஆசாரி, நாணயங்களை வார்ப்பவர், அவற்றின் மதிப்பீட்டாளர், கணக்காளர், கொல்ல நாயக்கர், தோட்டி (கூட்டுபவர்) ஆகியோரின் வேலைக்கான சம்பள மதிப்பும் சேர்க்கப்படும். இந்த வேலைகள் முழுவதும் நாணயச்சாலைத் தலைவரின் வழிகாட்டுதலின் மேற்பார்வையில் நடைபெறும்; அவர் ஒவ்வொரு நாள் மாலையிலும் கோட்டைத் தலைவரிடம் நாணயத்தில் பதிக்கும் முத்திரைகள், அன்றைய உலோக வரவு-

செலவுகள், ஒவ்வொரு வகைக் காசுகளின் வார்ப்பு நிலைகள் (அச்சு முடியாமல் உள்ளவற்றின் நிலை- work in progress) போன்ற விவரங்களைச் சமர்ப்பிப்பார்...!

- இது ஆங்கிலேயர் கொங்கு நாட்டில் ஆட்சிபுரிய ஆரம்பித்தற்கு முந்தைய நிலவரம்.

ரீடு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, சேலம் ஜில்லாவில் ஐம்பது வகைகளான நாணயங்கள் புழக்கத்தில் இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கம்பெனியின் கணக்குகள் கீழ்க்கண்ட நாணயங்களில் மட்டும் எழுதப்பட்டன :

| | |
|---|---|
| மைலி காசு அல்லது கம்பெனிக்காசு: **3600** காசுகள் | = ஒரு நட்சத்திரப் பகோடா |
| அணா அல்லது 1/16 கோபாலி பணம்: 443 அணா | = ஒரு நட்சத்திரப் பகோடா |
| அணா (அ) 1/16 கண்டிராயப் பணம்: 192 அணா | = ஒரு நட்சத்திரப் பகோடா |
| மைலி (அ) வெள்ளிப் பணம்: **45** பணம் | = ஒரு நட்சத்திரப் பகோடா |
| கோபாலி பணம்: 28 பணம் | = ஒரு நட்சத்திரப் பகோடா |
| கண்டிராயப் பணம்: 12 பணம் | = ஒரு நட்சத்திரப் பகோடா |
| கம்பெனி ரூபாய்: $3\frac{13}{20}$ ரூபாய் | = ஒரு நட்சத்திரப் பகோடா |
| பாண்டிச்சேரி ரூபாய்: $3\frac{3}{10}$ ரூபாய் | = ஒரு நட்சத்திரப் பகோடா |
| கோபாலி சக்கரம்: $2\frac{4}{5}$ கோ.சக்கரம் | = ஒரு நட்சத்திரப் பகோடா |
| கண்டிராய சக்கரம் (பகோடா): $1\frac{1}{5}$ க.சக்கரம்* | = ஒரு நட்சத்திரப் பகோடா |

நட்சத்திரப் பகோடா (star pagoda) மற்றும் கண்டிராயச் சக்கரம் (Countray chuckrum) நாணயங்கள் மற்றும் அவற்றின் சில்லரைகள் மட்டும் பிரதானமாகக் கணக்கில் கொள்ளப் பட்டன. கண்டிராயப் பகோடா, கண்டிராயப் பணம் என்பவை மைசூர் மன்னன் காண்டீரவ நரசராஜ உடையார் (1638-1659) பெயரைக் கொண்டதாயிருக்கும். 'கண்டிராயப் பணம் என்று மைசூர் மன்னர்களில் ஒருவரின் பெயரால் அழைக்கப் படுவதாகச் சொல்லப்படுகிறது' என்கிறார் ரீடு.

---

* 1799இல் 1¼ கண்டிராய பகோடா, ஒரு ஸ்டார் பகோடாவிற்கு சமம் என்று மாக்ளியாட் குறிப்பிட்டுள்ளார் - The History of Hyder Ali Khan... (p.376.)

இந்த நாணயங்கள் கி.பி.1800இல் கொங்கு நாட்டில் நிலவிய காசுகளாகும்; அவற்றில் ஒன்றின் மாற்று விகிதம் மற்றதின் விகிதத்தைக் கணக்கிடும்போது சிறிதளவு வித்தியாசப் படுகிறது என்பதை லீ ஃபானு விளக்கியுள்ளார் (சேலம் மானுவல்/பக்.248). சுருக்கமாகச் சொல்வதானால், 3600 காசுகள் = 45 பணம் = ஒரு பகோடா; 80 காசுகள் = ஒரு பணம் என்று கணக்கில் கொள்ளப்பட்டன. ஒரு பகோடாவின் மதிப்பு, ரூபாய் கணக்கில் பார்த்தால் சுமார் 3¼ ரூபாய்கள் (1792). சேலம் உதவி கலெக்டர் மாக்ளியாட், கலெக்டர் ரீடுவிற்கு 26.11.1793இல் எழுதிய கடிதத்தில் பரமத்தி தாலுகாவிலிருந்த கோயில் நாட்டியக்காரிகளுக்கு மாதச் சம்பளமாக 1-27-79 பகோடா வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார் - ஒரு பகோடா, 27 பணம், 79 காசுகள். அக்கடிதத்தில் நாட்டியக்காரிகளின் பெயர்களையும் பட்டியலிட்டார். அதில் கண்டிருந்த சில பெயர்களை இங்கே அறிவோம்...: சுப்பி, அலமேலு, மருதாயி, கருப்பி, சின்னக் கருப்பி, மாணிக்கம், ருக்குமணி, வெங்கட லட்மி, வள்ளி, முத்து.

ஒரு பகோடா = 45 பணம் = 45×80 காசுகள் என்ற நாணய விகிதங்கள் 1820 வரை - அதற்குப் பின்னரும்கூட - சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் நடைமுறையில் இருந்ததைக் காணலாம்.

திப்பு சுல்தான் 1799இல் இறந்த பிறகு அவரது நாட்டை ஆங்கிலேயர்கள், ஐதராபாத் நிஜாம், மைசூர் ராஜா, மராத்தியர் என்று நான்கு கூறுகளாகப் பிரித்துக் கொண்டனர். அதில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த பாகம்- மங்களூர், ஹனோவர், பஞ்சமகால் போன்ற தற்போதைய கருநாடக மாநிலப் பகுதிகள், கோயமுத்தூர் ஜில்லாப் பகுதிகள் (நீலகிரி, கொள்ளேகாலம் உட்பட) புங்கனூர்- ஓசூர்- ஆலம்பாடி- தலைமலை- தாளவாடிப் பகுதிகள் என்று (1792 மதிப்பின்படி) 7,77,170 கண்டிராயப் பகோடா வருமான மதிப்புள்ள பகுதிகளாகும். அம்மதிப்பீட்டில் கோயம்புத்தூர் ஜில்லாப் பகுதிகளின் வருவாய் மதிப்பு விவரம் :

| | | |
|---|---|---|
| கோயம்புத்தூர் | 80,000 | கண்டிராய பகோடாக்கள் |
| தணாயக்கன் கோட்டை | 35,000 | ” |
| சேவூர் | 27,000 | ” |
| சென்னிமலை | 27,000 | ” |
| தாராபுரம் | 64,000 | ” |
| சத்தியமங்கலம் | 30,000 | ” |
| அந்தியூர் | 8,000 | ” |
| பெருந்துறை | 14,000 | ” |
| அரவக்குறிச்சி | 20,000 | ” |
| ஈரோடு | 20,000 | ” |
| கரூர் | 41,000 | ” |
| கூடுஹள்ளி (கொள்ளேகாலம்?) | 15,000 | ” |
| காவேரிபுரம் | 4,000 | ” |
| | 3,85,000 | ” |

ரீடு சேலம் ஜில்லாவில் ஆட்சிப் பொறுப்பேற்றதும் சேலத்திலும் கிருட்டிணகிரியிலும் நாணயச்சாலைகளை நிறுவினார். ஆனால் அவ்விரண்டு இடங்களிலும் வார்க்கப் பட்ட நாணயங்கள் மதராஸில் வார்க்கப்பட்ட பகோடாவை விட மாற்றுத் தரம் சற்று குறைவாக இருந்ததாக வருவாய்க் கழகம் தெரிவித்தது. சேலத்தில் 7,000 பகோடாக்கள் அச்சிடப்பட்டதாக மாக்ளியாட் சென்னைக்கு அறிவித்தார்- மாதிரி நாணயங்களுடன் (மார்ச் 1793). மேற்கொண்டு அச்சிட வேண்டாமென்று வருவாய்க் கழகம் ரீடுவிற்கு எழுதியது (மார்ச் 30, 1793). சேலத்தில் நரசிங்கராவ் என்பவரின் பொறுப்பில் நாணயங்களை அச்சிடும் பணி விடப்பட்டது. செம்புக் கலப்பு தூக்கலாக இருந்ததால் சேலம் பகோடாவின் எடை மதராஸ் பகோடாவின் எடையைவிடச் சற்று அதிகமிருந்தது. நரசிங்கராவ் ஏமாற்றுப் பேர்வழியாகி விட்டார் என்று மாக்ளியாட் குற்றம் சாட்டினார். 7000 பகோடாக்ள் போக, 4000 பகோடாக்கள் அவர் பாக்கி தர வேண்டியிருந்தது. நரசிங்கராவை மாக்ளியாட் கைது செய்து சிறையிலடைத்தார்.

கிருட்டிணகிரியில் மூன்று கட்டங்களாக 6788, 17173 மற்றும் 14,876 பகோடாக்கள் அச்சிடப்பட்டன- சர்க்கார் உபயோகத்திற்கும், வணிகர்களின் உபயோகத்திற்குமாக. அம்மூன்றில் முதலில் அச்சானதைவிட இரண்டாவது, மூன்றாவதாக அச்சிடப்பட்டவை பரவாயில்லை- மதராஸ் பகோடாவைவிட முறையே இரண்டு கேழ்வரகு தானியம், ஒன்றரை நெல் அளவிற்குத் தங்கத்தின் எடை கூடுதலாக இருந்ததாக உதவி கலெக்டர் கிரகாம் தெரிவித்தார்.

கர்நாடகத்தில் (சென்னை- ஆர்க்காடு பகுதிகள்) புழக்கத்திலிருந்த பகோடா போன்று அச்சிட முடிவு செய்த வருவாய்க் கழகம், கிருஷ்ணகிரி, சேலம் நாணயச்சாலைகளை மதராஸ் நாணயச்சாலை அதிகாரியின் மேற்பார்வையில் விட்டது; ஸ்டார் பகோடா, பணம், ஆர்க்காடு ரூபாய், துட்டு களை அச்சிட முடிவெடுத்தது. நாணயங்கள் அச்சிடப்பட்டன. (ஜூன் 1793). பின் எப்போது கிருஷ்ணகிரி, சேலம் நாணயச் சாலைகள் நிறுத்தப்பட்டன என்ற விவரம் தெரியவில்லை.

1798இல் மற்றும் 1800இல் ஒரு பகோடாவின் மாற்று விகிதம் 3.50 ஆர்க்காடு ரூபாய்களுக்குச் சமம் என்று மதராஸ் அரசாங்கம் அறிவித்தது. சரியான சில்லரைக் காசுகளின் செலாவணிக்காக 1809இல் மதராஸ் அரசாங்கம் செப்புக் காசுகளை வெளியிட்டது. அதன்படி,

| | |
|---|---|
| கால் 'டப்பு' | ஒரு ரூபாய்க்கு 192 |
| அரை டப்பு | ” ” 96 |
| ஒரு டப்பு | ” ” 48 |
| இரண்டு டப்பு | ” ” 24 |

சர் தாமஸ் மன்றோ கவர்னராயிருந்தபோது (1820-27) பகோடா, வராகன், பணம் போன்ற சிக்கல் தந்த பல வகையான நாணயங்கள் மாற்றப்பட்டு 'ரூபாய்' நாணயங்கள் (ரூபாய்- அணா- பைசா) மட்டும் புழக்கத்திற்கு வந்தன. பழைய வராகன்/பகோடாவின் மாற்று விகிதமாக மூன்றரை ரூபாய் என்று அறிவிக்கப்பட்டது.

## ஜமீன்தாரி நில உடைமை

ஆங்கிலேயரின் ஆட்சி கொங்கு நாட்டில் ஏற்படுவதற்கு முன் மைசூர் மன்னர்கள்- ஐதர் அலி- திப்பு சுல்தான் ஆட்சி நிலவியது. அதற்கு முன் சுமார் 150 ஆண்டுகள் கொங்கு நாடு, மதுரை நாயக்கர்களின் ஆட்சிப் பகுதியாயிருந்தது. மதுரை நாயக்கர்கள் நாட்டை 72 பாளையங்களாகப் பிரித்து ஆட்சி செய்தனர். அப்பாளையக்காரர்கள் சிற்றரசர்கள் போல ஆண்டனர்.* ஆனால் மைசூர் மன்னர்களின் ஆட்சியில் அந்த நிலை சற்று மாறியது. பாளையக்காரர்கள் பெருகினர். மக்களிடமிருந்து வரி வசூல், காவல் பணி, நீதி நிர்வாகம் போன்றவற்றை மட்டும் அவர்கள் கவனித்து வந்தனர். சிறு படைகளையும் அவர்கள் வைத்திருந்தனர்.

ஆங்கிலேயரின் ஆட்சி சேலம் ஜில்லாவில் உதயமான போது அலெக்சாண்டர் ரீடுவின் உறுதியான நிர்வாகம் தோன்றி ஏழு ஆண்டுகள் நீடித்தது; கொங்குநாடு ஐரோப்பிய ஆட்சியாளர்களைக் காண ஆரம்பித்தது. அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த காரன்வாலிஸ் பிரபு, வங்காளத்தில் இருந்ததைப் போல் சேலம் ஜில்லாவில் ஜமீன்தாரி நில உடமை முறையைக் கொண்டுவர ரீடுவிடம் வலியுறுத்தினார். ரீடு அதைப் பெரிதாகச் சட்டை செய்யவில்லை. அரசாங்கம் - ஜமீன்தார் - விவசாயிகள் என்ற நிலவரி வசூல் அமைப்பில் அவர் ஆர்வம் காட்டவில்லை. தற்காலத்தில் உள்ளதைப் போல, நிலவரி வசூலைத் தனிப்பட்ட விவசாயி அரசாங்கத்திற்குச் செலுத்தும் முறை அவரது குறிக்கோளாயிருந்தது. மதராஸ் கோட்டையிலிருந்த ஆட்சியாளர்களுக்கும் ரீடுவின் போக்கில் உடன்பாடில்லை. இருந்தும் ரீடுவின் நேர்மையாலும், மாவட்ட நிர்வாக முறைக்கு சேலம் ஜில்லா அடித்தளமாக அமையவிருந்த சூழ்நிலையாலும், மதராஸ் ஆட்சியாளர்களால் ரீடுவை ஓரளவுக்கு மேல் நெருக்க முடியவில்லை. ஆகவே, ரீடு

---

* அவ்வாறான பாளையக்காரர்களில் சிலர் : கன்னிவாடி, நிலக்கோட்டை, விருப்பாட்சி, பழனி, எட்டயபுரம், ஏழாயிரம் பண்ணை, பாஞ்சாலங்குறிச்சி, நெல்கட்டாஞ்செவ்வல், ராஜபாளையம், அரியலூர், துறையூர், தலைமலை (சேந்தமங்கலம்), தாரமங்கலம்.

சேலத்தை விட்டுச் சென்ற பிறகு (1799), ஜமீன்தாரி முறையைக் கொண்டு வர மதராஸ் அரசாங்கம் முழு முயற்சியை மேற் கொண்டது. தனி 'கமிஷன்' அமைத்து அதை நிறைவேற்றியது.

சேலம் ஜில்லாவில் ஜமீன்தார் முறை 1803இல் தற்போதைய சேலம், நாமக்கல் மாவட்டங்களில் முதலில் ஏற்பட்டது. தலைக்காடு என்று அழைக்கப்பட்ட இம்மாவட்டங்களின் மலைகள் நீங்கலாக உள்ள நிலங்கள் 129 மிட்டாக்களாகப் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டன. அதிக விலை கூறியவருக்கு மிட்டா ஒதுக்கப்பட்டது. அவர்கள் மிட்டாதார்கள் என்று அழைக்கப்பட்டனர்- ஜமீன்தார் என்று பிற மாவட்டங்களில் இருந்த பெயர் சேலம் ஜில்லாவில் தோன்றவில்லை. அடுத்த ஆண்டு தற்போதைய தருமபுரி, கிருட்டிணகிரி மாவட்டங்கள் அடங்கிய பாராமகால் பகுதி 66 மிட்டாக்களாகப் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டன. மொத்தத்தில் சேலம் ஜில்லாவில் 205 மிட்டாக்கள் உருவாயின. அதற்காக நியமிக்கப்பட்ட கமிஷனர் மிட்டாக்களை ஏலம் போடத் தீவிரமாக முனைந்தார்; ஏலம் கோர நினைப்பவர் களை ஊக்குவித்தார். மிட்டாதார்என்ற கௌரவத்திற்கு உந்தப்பட்டு சங்ககிரிக்கு அருகிலிருந்த ஒரு சின்னஞ்சிறிய மிட்டாவை ஒருவர் ஏலம் எடுக்கவும் வைத்தாராம் அவர். ஆனால் ஆவல் மிகுதியால் சில மிட்டாதார்கள் அதிக தொகைக்கு ஏலம் கூறி, மிட்டாவை எடுத்த பின்னர் ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய 'பேஷ்குஷ்' என்ற திறைப் பணத்தைச் செலுத்தத் திணறினர். பாக்கித் தொகைக்காக அவர்களின் மிட்டாவை திரும்ப எடுத்துக் கொண்டு, அம் மிட்டாதார்கள் கைதாகிய நிலையும் ஏற்பட்டது. அப்போது, சேலம் சிறை பல மிட்டாதார் முக்கியப் பிரமுகர்களின் இருப்பிடமாக மாறியதாக அரசுக் குறிப்பு தெரிவிக்கின்றது.

அது மட்டுமல்லாது, ஏலம் எடுத்த மிட்டாதார்கள் மறைந்தால் அவர்களின் வாரிசுகள் அந்த மிட்டாக்களைப் பிரித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அப்படித் திரும்பத் திரும்ப தொடர்ந்த கோரிக்கைகளினால் மிட்டாக்களின் எண்ணிக்கை கூடியது.

1799இல் கோயம்புத்தூர் ஜில்லாவின் வடக்கு மற்றும் தெற்குக் கலெக்டர்களான மாக்ளியாட் மற்றும் டி,பி. ஹூர்டிஸ் தங்களின் கோட்டங்களில் நில அளவையை மேற்கொண்டனர். அவர்கள் இருவரும் அலெக்சாண்டர் ரீடுவின் கீழ் பணியாற்றியவர்களாததால் ரீடு மேற்கொண்ட, விவசாயிகளிடம் நிலங்களை ஒப்படைத்து நேரடியாக வரி வசூல் செய்யும் முறையை ஆரம்பித்தனர். அவர்களின் காலத்திற்குப் பின் வில்லியம் கேரோ கலெக்டரான பின்பும் அம்முறை தொடர்ந்தது. ஆனால் 1807இல் மதராஸ் அரசாங்கம், கிராமங்கள் வாரியாக நிலங்களை ஒதுக்கி வரி வசூல் செய்ய கலெக்டரைக் கோரியது; அதன் மூலம் நிறைய விவசாயிகளிடம் அரசாங்கத்தின் நேரடித் தொடர்பு நிலை குறைந்து, வரிவசூல் வேலை சுலபமாகிவிடும் என நினைத்தது. அக்காலத்தில் அரசாங்கத்தின் வருவாய் பெரும்பாலும் நில வருவாயைப் பொருத்திருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். 1808 முதல் மூன்றாண்டுகளுக்குக் கிராமம் வாரியாக நிலத்தை ஒதுக்க வருவாய்க் கழகம் கேட்டுக் கொண்டது; அது நடைமுறைப் படுத்தப்பட்டது. பின்னர் 1811இல் பத்தாண்டுகளுக்கு ஒதுக்க முடிவானது.

இதனைக் கேள்வியுற்ற லண்டனிலிருந்த கம்பெனியின் தலைமையகம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ‘இந்த முறையானது கிட்டத்தட்ட ஜமீன்தாரி முறைக்கு ஒப்பானது; சேலம் ஜில்லாவிலும் பிற மாவட்டங்களிலும் அறிமுகமான மிட்டாதார் முறை தோல்வியுற்றது; அது சிறு விவசாயிகளின் உரிமை, நலன், உணர்வுகளைப் பாதித்துள்ளது’ எனத் தெரிவித்தது. ஏற்கனவே சேலம் ஜில்லாவில் ரீடு- மன்றோவின் ரயத்துவாரி முறையையொட்டி, கடப்பா ஜில்லாவில் மன்றோ கடைப்பிடித்த ரயத்துவாரி முறையைக் கொண்டு வரப் பணித்தது. அதனால் விளையும் நன்மைகள் இரண்டை தலைமையகம் எடுத்துக் கூறியது. முதலாவது நன்மை, தரிசு நிலங்களை விவசாயிகள் பயிர் செய்ய முன்வருவார்கள்- அதனால் அரசுக்கு வருவாய் கூடும்; ஜமீன்தார் முறையில் அதற்கு வாய்ப்பில்லை. அடுத்து இந்து வாரிசுரிமைப்படி,

ஜமீன்தாரி நிலங்கள் மீண்டும், மீண்டும் வாரிசுகளுக்குப் பிரிக்கப்பட்டு வந்தால், ஒரு காலத்தில் அந்தப் பிரிவினை நிலங்களும் ரயத்துவாரி நிலங்களை விவசாயிகளுக்கு வழங்கும் நிலை போலத்தான் ஆகும்..

ஆகவே, ரயத்துவாரி முறை கோயம்புத்தூரில் 1815 முதல் அமலுக்கு வந்தது. சேலம் ஜில்லாவில் மிட்டாதார்களிட மிருந்தது போக மீதி நிலங்கள் ரயத்துவாரி நிலங்களாயின.

**சேலம் மாவட்டத்தில் சத்திரங்கள்**

சேலத்தில் உதவி கலெக்டராக இருந்தபோதும் பின்னர் கலெக்டரான பின்பும், மாக்ளியாட் மேற்கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க வேலை- பிரயாணிகள் தங்குவதற்குப் பல்வேறு இடங்களில், நெடுஞ்சாலைகளிலும் குறுக்குச் சாலைகளிலும் சத்திரங்கள் கட்டுவதற்கான முயற்சிகளாகும். அவர் காலத்தில் கட்ட மேற்கொண்ட சத்திரங்கள்:

- **நெடுஞ்சாலைகளில் -**

ஆத்தூருக்குக் கிழக்கில் தியாகதுருகம் சாலையில் 12வது மைலில், ஆத்தூர், வாழப்பாடி, மேட்டுப்பட்டி (ஆத்தூர்- சேலம் சாலையில் 24 மைல் தூரத்தில் உள்ளது), காரிப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், சேலம் பெரிய பேட்டை, உத்தம சோழபுரம், மூனுசாவடி, பள்ளிபாளையம் (நாமக்கல்- திருச்சி சாலையில் உள்ளது), வாழவந்தி (நாமக்கல்- திருச்சி சாலை) வெள்ளாளப்பட்டி (சேலம்- தொப்பூர் சாலையில்), பள்ளப்பட்டி.

- **குறுக்குச் சாலைகளில் -**

நாமக்கல் - மோகனூர் இடையே,<br>
நாமக்கல் - பரமத்தி இடையே,<br>
நாமக்கல் - காட்டுப்புத்தூர் இடையே<br>
அனுமந்தராயன் கணவாயில் (ராசிபுரம்-ஆத்தூர் இடையே)<br>
ஆயில்பட்டி (”)<br>
ஈஸ்வரமூர்த்திப்பாளையம் (”)

*மல்லிக்கரை*
*கீரிப்பட்டி,*
*காட்டுப்புத்தூர்,*
*மோகனூர்,*
*புதுப்பாளையம் (பரமத்தி)*
*இடையாறு (பரமத்தி)*
*ஏழூர் (சேந்தமங்கலம்)*
*திருமலகிரி (சேலம்)*
*அன்னபுரம் (பேளூர்)*
*நாட்டாமங்கலம் (பேளூர்)*
*கோதுமலை (வீரகனூர்)*

*சத்திரத்தின் கட்டுமானச் செலவு இருபது பகோடாவிலிருந்து ஐம்பது பகோடா வரை வேறுபட்டிருந்தது. இவற்றில் பல 'மாக்ளியாட் சத்திரம்' என்று அழைக்கப்பட்டதாம்.*

*காவேரிபுரம் கணவாய் வழியில் ஐந்து ஓட்டுக்கூரை கொண்ட சத்திரங்களைக் கட்ட வருவாய்க் கழகம் அனுமதித்தது (செப்டம்பர், 1799). அப்படிக் கட்டிய ஒரு சத்திரத்தைத்தான் புக்கானன் சிக்க காவலில் குறிப்பிடுகிறார் போலும்... (பார்க்க: அத்தி. 6).*

**சந்தன மரங்கள்**

*வெட்டப்பட்ட சந்தன மரங்கள் விற்கப்படாமல் வைக்கப்பட்டிருந்ததாகப் புக்கானன் குறிப்பிட்டார் (பார்க்க: அத்தி. 8). ஆனால் புக்கானனின் அறிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்குச் செல்வதற்கு முன்பாகவே கலெக்டர் ஏற்பாடுகளைச் செய்தார் போலும்! சில விவரங்களைக் காண்போம்...*

*மதராஸ் வருவாய்க் கழகம் நவம்பர் 1800இல் சேலம் கலெக்டருக்கு எழுதியது- மாவட்டத்தில் விளையும் சந்தன மரங்களை ஆண்டுதோறும் விற்பனை செய்ய விளம்பரம் செய்யவிருப்பதாகவும், இருப்பில் உள்ள வெவ்வேற வகையான சந்தன மரக் கட்டைகளைத் தெரிவிக்கக் கோரியது. சீனாவில்*

சந்தன மரங்களுக்கு நல்ல கிராக்கி இருந்ததாகவும் தெரிவித்தது. சந்தன மரங்களின் பச்சைக் கிளைகளையும்வெட்டி பம்பாய்க்கு அனுப்பச் சொன்னது. டிசம்பர் 1800இல் 2464 மணங்கு எடையுள்ள 12,988 கட்டைகள் அனுப்பி வைக்கப் பட்டன. பிறகும் அனுப்பி வைக்கப்பட்டன. அனுப்பியதில் பதினேழு மணங்கு கட்டைகள் குறைவாக இருந்ததாகவும், வண்டிகளில் ஓட்டி வந்தவர்கள் அதற்குப் பொறுப்பென்றால், அதற்கான பணத்தை அவர்களிடமிருந்து பிடித்துக் கொள்ள வருவாய்க் கழகம் தெரிவித்தது. மேலும் கட்டைகளை அனுப்பி வைக்கக் கோரியது- சீனாவிற்குச் செல்லவிருந்த கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் என்பதையும் தெரிவித்தது.

சந்தன மரங்களை வெட்டுவதினூடே கம்பெனி சர்க்காருக்கு ஒரு பெரும் பிரச்சினையும் உருவானது. விவரம் கீழே...

**எல்லைப் பிரச்சினை**

மைசூர்- தாளவாடிப் பகுதிகளின் மக்களிடையே இரண்டு கிராமங்களின் எல்லைகள் பற்றிப் பிரச்சினை எழுந்தது... அர்தனஹள்ளியிலிருந்த சந்தன மரங்களைக் கம்பெனி ஒப்பந்ததாரரின் ஆட்கள் வெட்டச் சென்றபோது, அவர்கள் தடுக்கப்பட்டார்கள் - காரணம் அம்மரங்கள் மைசூர்ப் பகுதியினருக்குச் சொந்தமாம். குறிப்பிட்ட அந்த இடம் கம்பெனிக்குச் சொந்தமானது என்று தாளவாடியின் அமீன் (கோட்டைக்காவல் தலைவன்) எழுதியுள்ளார்... ‘இப் பிரச்சினை சம்பந்தமாக எதிர்காலத்தில் தொல்லைகள் நேராதிருக்க, ஐயம் எழுந்துள்ள பகுதியில் எல்லைக் கோட்டை நிர்ணயிக்க இரண்டு அரசாங்கங்களின் (மதராஸ், மைசூர்) பிரதிநிதிகளை அனுப்பி, ஒன்றாக ஆய்வு செய்து இறுதி முடிவு எடுக்க வேண்டும்...’ என்று கோயம்புத்தூர் கலெக்டர் வருவாய்க் கழகத்திற்கு எழுதினார் (மார்ச் 1807).

கோயம்புத்தூர் கலெக்டர் அனுப்பிய அதிகாரிகளும், மைசூர் அதிகாரிகளும் சேர்ந்து பிரச்சினைக்குரிய எல்லைக்

கோட்டைக் கண்டறியச் சென்றனர். மைசூர் அதிகாரியானவர், சர்வேயர் மேஜர் மெக்கன்ஸியிடமிருந்த வரைபடத்தை (அதைக் கம்பெனி அரசாங்கம் வழங்கியிருந்ததை) அடிப்படையாகக் கொண்டு எல்லைக் கோட்டை நிர்ணயிக்கக் கோரினார்... கலெக்டர் அதை ஏற்கவில்லை- ஏனெனில், மெக்கன்ஸியின் சர்வே மைசூர்ப் பிராந்தியத்தை அளப்பது சம்பந்தமாக உள்ளது; அந்த வரைபடம் மைசூர்ப் பிராந்தியத்திற்கு அப்பால் உள்ள இடத்தைக் குறிப்பிடாது என்பது அவர் வாதம். ஆகவே இரண்டு சர்வேயர்களை அனுப்பி அப்பகுதியைச் சரியாக அளந்து பார்க்க எழுதினார் கலெக்டர். ஏற்கனவே ஹுர்டிஸ் மேற்பார்வையில் செய்த சர்வே ஆவணங்களின் நகலையும் அளிக்கக் கோரினார் (ஏப்ரல் 1807).

மைசூர் அரசாங்கத்திற்கும், கோயம்புத்தூர் ஜில்லாவின் வட பகுதிக்குமான எல்லையாக அர்தனஹள்ளியை மைசூர் ராஜாவின் பிரதிநிதி கூற, அதை சர்வேயர் மேஜர் மெக்கன்ஸி* ஏற்றுக் கொண்டதாக கம்பெனியின் நில அளவை ஆய்வாளர் வருவாய்க் கழகத்திற்கு ஜூன் 1807இல் எழுதினார். அதுபற்றி விசாரிக்கத் தமது உதவியாளர்களைக் கோயம்புத்தூருக்கு அனுப்பவிருப்பதாகவும் தெரிவித்தார். அது சம்பந்தமாக தகுந்த நபரை அனுப்பி மைசூர்ப் பிரதிநிதியைச் சந்தித்து எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கவும் வருவாய்க் கழகம் எழுதியது.

கோயம்புத்தூர் கலெக்டர் மைசூரிலிருந்த கம்பெனியின் பிரதிநிதியிடம் குமாஸ்தா ஒருவரை (ராமராவ்) அனுப்பி, (எல்லையிலுள்ள) ஹாசனூர் மக்கள் கூறும் உரிமையைத் தெரிவிக்கச் செய்தார். கம்பெனி பிரதிநிதிக்கு (Resident) மேலும் விளக்கம் தேவைப்படுமாயின் உதவி சர்வேயரிடம் (ஒரு வெள்ளைக்காரரர்) கேட்கும்படித் தெரிவித்தார். பின்னர் அந்த வெள்ளைக்கார உதவி சர்வேயர் தந்த அறிக்கையையும் வரைபடத்தையும் கம்பெனி பிரதிநிதிக்கு அனுப்பினார்;

---

* இந்தியாவின் பூர்வ வரலாற்றை எழுதும் முயற்சியில், இவர் 1808இல் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசினால் நியமிக்கப்பட்டார். எல்லா கலெக்டர்களும் அவருக்கு ஒத்துழைப்பு நல்கக் கோரப்பட்டனர்.

மேலும் விசாரித்து இறுதி முடிவை எடுக்கும்படி அவரைக் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு தமிழ்நாட்டின் வடக்கே எல்லைப் பிரச்சினை ஒன்று அன்றும் முளைத்தது. கோயம்புத்தூர் கலெக்டர் கேரோ விடாப்பிடியாக அதில் நின்றார். அர்தனஹள்ளி, ஹாசனூர்ப் பகுதிகள் இன்று சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ளன. அந்தக் காலக்கட்டத்தில் திருச்சியிலிருந்து சீரங்கப்பட்டணம் வரை செல்ல மாற்றுத் தபால் வழியைத் தொடங்க கலெக்டர் திட்டமிட்டார். (1805). அதனால் தூரம் குறைவு (220 மைல்கள்தான்). ஈரோடு- சிக்கஹாசனூர் தபால் வழியை (Postal route) கஜல்கட்டிக் கணவாய் வழியாகத் தொடங்கி வைத்து மைசூரிலிருந்த கம்பெனி பிரதிநிதிக்கு அறிவித்தார் (ஜூன் 1808). மேற்கொண்டு அந்தத் தபால் வழியை சீரங்கப் பட்டணம் வரை கொண்டு செல்வது அவரது பொறுப்பு. அதற்கு முன்னர் சங்ககிரியிலிருந்து கரூருக்கும் ஈரோட்டிற்கும் புதிய தபால் வழிகளை ஏற்படுத்த கலெக்டர் மாக்ளியாட் திட்டமிட்டார். (டிசம்பர், 1800). அப்போதெல்லாம் தபால் அலுவலகங்கள் கலெக்டரின் கட்டுப்பாட்டில் இருந்தன. அப்போதே போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் என்ற உத்தியோகமும் இருந்தது.

மைசூர்ப் பக்கம் ஒரு எல்லைப் பிரச்சினை வந்ததுபோல கொச்சி ராஜ்ஜியத்தின் பக்கமும் ஒரு எல்லைப் பிரச்சினை- பாலக்காட்டுப் பகுதியில்- 1820இல் உதித்தது. அதன் முடிவு தனியே ஆய்வுக்குரியது.

## பாஸ்போர்ட்

மைசூர் நாட்டிலிருந்து, கஜல்கட்டி மற்றும் காவேரிபுரம் கணவாய்கள் வழியே வருபவர்கள் உள்ளூர் மொழிகளில் எழுதப்பட்ட 'பாஸ்போர்ட்' கொண்டுவர வேண்டும் எனக் கலெக்டர் உத்தரவிட்டார். அதை அந்தந்த ராணுவத் தளகர்த்தர் கண்காணிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார் (1802).

**பரிசுச் சீட்டு**

*1808ஆம் ஆண்டு வாக்கில் கம்பெனி அரசாங்கம் பரிசுச் சீட்டுகளை (லாட்டரி) விற்பனை செய்ய முன்வந்தது! ஏழெட்டு ஆண்டுகட்கு மேல் கோயம்புத்தூர் ஜில்லாவில் அவற்றின் விற்பனை நடைபெற்றது. வருவாயைப் பெருக்க கலெக்டர் அந்த வேலையையும் கவனித்தார்... ஐரோப்பியர் கலாச்சாரம் போலும்!*

**மாற்றுச்சீட்டு (Bill of Exchange)**

*கம்பெனி ஆட்சி ஜில்லாக்களில் துவங்கியபோது, கலெக்டர்கள் சந்தித்த பிரச்சினைகளில் ஒன்று- வரி வசூல் பணத்தில், செலவுகள் போக மிச்சத்தை மதராஸ் கோட்டை அலுவலகத்திற்கும் பிற இடங்களுக்கும் பத்திரமாக அனுப்ப வேண்டிய வேலை. பொன்னாகவும் வெள்ளியாகவும் நாணயங்கள் மூட்டை மூட்டையாக எடுத்துச் செல்லப்பட்டன. காகிதப் பணம் வராத காலம்.. ராணுவ வீரர்களின் பாதுகாப்புடன் வழிப்பறிக் கொள்ளை, நடைப்பயணம், நீண்ட தொலைவு போன்ற தொல்லைகள், இடையூறுகளிடையே பத்திரமாகப் போய்ச் சேர்க்க வேண்டியிருந்தது. அத் தொல்லைகளைத் தவிர்க்க அலெக்சாண்டர் ரீடு 1793-இல் வருவாய்க் கழகத்திற்கு எழுதினார். தற்கால வரைவோலை (Demand Draft) போன்று மாற்றுச் சீட்டு (Bill of Exchange) முறையைக் கொண்டு வந்து, தனியார் மூலம் குறிப்பிட்ட தொகையை மதராஸ், சேலம், கிருட்டிணகிரி போன்ற ஊர்களில் பணப் பரிமாற்றம் செய்யலாம் என்று கேட்டு அனுமதி கோரினார். பணத்தைப் பத்திரமாக அனுப்ப வேண்டிய பொறுப்பு குறிப்பிட்ட தனியார்களுக்குச் சென்றுவிடும் என்றும் எழுதினார். பரிட்சார்த்தமாகச் செயல்படுத்தவும் செய்தார்.*

*அக்டோபர் 1799இல் கலெக்டருக்கு வருவாய்க் கழகம் எழுதியது : புதிதாகக் காவிரிக்குத் தெற்கில் சேர்ந்துள்ள பகுதிகளின் உபரி வருவாயை (ராணுவ, பிற செலவுகள் போக) மதராஸில் மாற்றத் தக்க மாற்றுச் சீட்டை வாங்கி அனுப்ப அனுமதி தந்தது. பல்வேறு ராணுவ அதிகாரிகளுக்கும், வணிகப்*

பிரதிநிதிகளுக்கும் (இவர்கள் மாற்று இலாகாக்காரர்கள்) 'முன்பணம்' (advance) தரும்போது மாற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும் சேலம் கலெக்டருக்கு பிப்ரவரி, 1800இல் எழுதியது. வேறொரு கடிதத்தில் (பிப்ரவரி 11, 1800), 'ராஜதானியின் தெற்குப் பகுதிகளிலிருந்து மதராஸிற்குக் கொண்டு செல்ல சிரமங்கள் நேரிடுவதால், மதராஸ் தலைமையிடம், திருநெல்வேலி வணிகப் பிரதிநிதி அல்லது பிற பெரும் நகரங்களுக்குப் பணம் அனுப்ப வேண்டி வந்தால் மாற்றுச் சீட்டுகளை வாங்கி அனுப்பும் முயற்சிகளை மேற் கொள்ளவும்' என கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

ஆனால் மாற்றுச் சீட்டு முயற்சி முற்றிலுமாக அமலுக்கு வரவில்லை. பல ஆண்டுகள் கழித்தும் கூட, ரீடு விடுத்த வேண்டுகோள் போன்று, 1816இல் கோயம்புத்தூர்க் கலெக்டர், அனுமதி கோரி வருவாய்க் கழகத்திற்கு எழுதினார். ஆனால், இடையில் 1808க்கு முன்பாக அரசாங்க வங்கியில் செல்லத்தக்க காசோலை (CHEQUE) முறை அமலுக்கு வந்தது.

### எடையளவு

தென்னிந்தியாவில் நிலவிய எடையளவுகளைச் சீரமைக்க, மதராஸ் வருவாய்க் கழகம் புதிய எடையளவுகளை அறிவித்தது (ஜூன் 1800); மக்களிடமிருந்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டது. அதன்படி,

| | |
|---|---|
| 10 வராகன் (பகோடா) எடை | = 1 பலம் |
| 40 பலம் | = 1 வீசை |
| 8 வீசை | = 1 மணங்கு |
| 20 மணங்கு | = 1 பாரம் (Candy) |

ஜூலை 12, 1801 முதல் இந்த எடையளவைகள் அமலுக்கு வந்தன. இவற்றில் சில சிறிய எடையளவைகளும் (நிறை, தோலா, ராத்தல் போன்று) நடைமுறைக்கு வந்தன. இவை தமிழ் பேசும் ஜில்லாக்களில் நிலவின. தெலுங்கு, மலையாளம், கன்னடம், முகமதிய மொழிகள் பேசும் ஜில்லாக்களில் சிறிது மாறுதல்களுடன் நடப்பிற்கு வந்தன.

இந்த எடைளயவைகள் அடுத்த 150 ஆண்டுகளுக்கு மேல் (நாடு சுதந்திரம் பெற்ற பின்பும்) நடைமுறையில் இருந்தன. மெட்ரிக் அளவுகள் அமலுக்கு வந்த பின் (1957) இவை மெல்ல மெல்ல மறைந்தன. நாட்டின் சுதந்திரத்திற்கு முன் பிறந்தவர் களுக்கு இந்த எடையளவுகளின் பரிச்சயம் இன்றும் உள்ளது.

**அடிமைகள்**

கி.பி.1819இல் மலபாரிலிருந்து சர்க்யூட் நீதிபதி பாபர் (T.H.Baber) அரசாங்கத்திடம் ஒரு விளக்கம் கேட்டார் : அடிமைகளைக் கடத்தி வந்து, மலபாரில் ஏலம் மூலம் விற்பனை நடப்பதாகவும், அது பிரிட்டிஷ் சட்டத்திற்கு ஏற்புடையதா; அதை அனுமதிக்கலாமா? எனக் கேட்டார், ஜில்லா கலெக்டர்களிடம் அறிக்கை கேட்கப்பட்டது. சேலம் ஜில்லா கலெக்டர், 'இந்த ஜில்லாவில் அந்த மாதிரியான அடிமை முறை இருப்பதாகத் தெரியவில்லை. கம்பெனி அரசாங்கம் ஏற்பட்டது முதல் இதுதான் நிலை.... முந்தைய அரசாங்கத்தின் போது காவிரி நீர்ப் பாசனம் பகுதியில் சில இடங்களில் இருந்ததாகத் தெரிகிறது. இப்போது அவர்கள் பிற மக்கள் போல் சுதந்திரமாக உள்ளனர்' எனத் தெரிவித்தார்.

கோயம்புத்தூர்க் கலெக்டர் தந்த பதில் : 'அடிமை முறை சில கிராமங்களில் மட்டும் உள்ளது; ஆனால் அவ்வாறான விற்பனை அரிதாக நடக்கிறது. நல்ல நிலையிலுள்ள ஒரு அடிமையின் உச்ச விலை ஐம்பது ரூபாய். அடிமைகளின் குழந்தைகள் பிறப்பிலிருந்து அடிமைகளே. குழந்தை பிறக்கும்போது எஜமானர், ஒன்று அல்லது இரண்டு ரூபாய் பரிசளிப்பார். அடிமைகள்மீது எஜமானருக்கு அதிகாரம் உள்ளது - தண்டனை தருவது உட்பட...'

'பிரிட்டிஷ் அரசு வந்ததற்குப் பிறகு அடிமைகள் மீதான அதிகாரம் குறைந்துள்ளது; பிற கூலியாட்களை விட அந்த அடிமைகள் மேலாகவே நடத்தப்பட்டனர்; விளையும் பயிர்களில் 1/8 பங்கு அளவில் அடிமைகளின் செலவுக்காக எஜமானர்கள் ஒதுக்குகின்றனர்; சில இடங்களில் அடிமை களின் செலவுக்காக நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது' என்றும் தெரிவிக்கப்பட்டது.

# 13

# மீண்டும் காவிரியின் கரையோரமாக, காவிரியைக் கடந்தும்...

'பத்து மலபார் மணிநேரத் தூரம் (பத்து நாழிகை நடைத் தூரம்) என்று ஒரு நீண்ட இடைவெளியைக் கடந்து பாசூருக்குச் சென்றேன். பவானி ஆற்றிலிருந்து வரும் வாய்க்கால் இடப்புறமாக வந்து கொண்டிருக்கிறது. அது மேலும் மூன்று மலபார் மணிநேரத் தூரம் சென்று கொளாநல்லி என்ற ஊரை அடைகிறது.* வலதுபுறத்தில் மேட்டுப் பகுதி; அந்த மண்ணின் வளம் சுமார்தான். அதில் நன்றாக உள்ள நிலத்தில் பெரும்பகுதி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பாசூர் சமவெளியில் உள்ளது; 130 வீடுகள் உள்ளன; அவற்றில் நாற்பதில் பிராமணர்கள் குடியிருக்கின்றனர். ஒரு சிறு கோயில் உள்ளது; அதற்கு ஒரு பிராமண குருக்கள் உள்ளார்; மற்ற பிராமணர்கள் ஏதேனும் தொழில் செய்கின்றனர்; இனாமாகப் பெற்றுள்ள அவர்களது நிலத்தை குத்தகைக்கு விட்டுள்ளனர்; நெல் விளையும் நிலங்கள்

கி.பி.1800இல் காலிங்கராயன் வாய்க்கால் பழுதடைந்த நிலையிலிருந்தது; யுத்தம், கூடுதலான நிலவரி, குறைவான மக்கள் தொகை, முதலீட்டிற்குப் பணம் போதாமை போன்ற காரணங்களால் கொளாநல்லி வரை மட்டும் நீர்ப்பாசனச் சாகுபடி நடைபெற்றது; நீர்ப்பாசனப் பரப்பு, சுமார் 3500 ஏக்கர் மட்டுமே. அந்த வாய்க்காலின் இடதுகரை, அதன் அடிவரை செயற்கையாக உருவாக்கப்பட்டது; வலது கரை இயற்கை அமைப்பானது. அதன் தலைப்பகுதி பவானிக்கருகில் அணை நாசுவம்பாளையம் என்கிற இடத்தில் உள்ளது. பவானி ஆறு, காவிரியில் கலக்குமிடத்திற்குச் சற்று மேலே அணை அமைந்துள்ளது - கோயம்புத்தூர் மேனுவல் 2 - பக்.370.

அவர்களுக்குச் சொந்தம்... மழை இல்லை என்று மக்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள்...

'பாசூருக்கு அருகில் வெள்ளை படிகக் கற்பாறைகளைக் கண்டேன். அவை கிழமேற்காகப் படிந்து செங்குந்தாக நிற்கின்றன. கால் அங்குலம் முதல் ஒரு அங்குலம் வரையான கனத்தில் தகடுகள் போல் அப்பாறைகள் வெட்டியெடுக்கப் பட்டு விற்கப்படுகின்றன...' என்று பாசூரைப் பற்றிக் குறிப் பிட்டுள்ளார் புக்கானன்.

### கொடுமுடியில்

பாசூரில் ஒருநாள் இருந்து விட்டு நவம்பர் 10ஆம் தேதி எட்டு மலபார் மணி நேரத்தூரம் சென்று காவிரிக் கரையிலுள்ள கொடுமுடிக்குச் சென்றார். பாதையில் பல ஓடைகள் குறுக் கிட்டன. நிலங்கள் அனைத்திலும் சாகுபடி செய்யப்பட் டிருந்தன; அவற்றில் வேலிகள் போடப்பட்டிருந்தன. அவர் மேலும் எழுதுகிறார் :

'கடந்து வந்த தடத்தில் மரம்- செடிகள் வனம் போலத் தென்பட்டாலும் இங்கிலாந்திலுள்ளதைப் போல் அவ்வளவு அடர்த்தியான வனம் இல்லை. இருப்பினும், இந்தியாவில் நான் பார்த்த வரையில் இப்பகுதி மிகவும் அழகாகத் தென்படுகிறது. காவிரி புனிதமான நதி. பல குன்றுகள் இப்பகுதியைச் சுற்றிலும் பரவியுள்ளன. அவை அழகுக்கு அழகூட்டுகின்றன...

'இங்கு மண் சுமாராகவே உள்ளது; கொடுமுடிக்கருகில் அநேக நிலங்கள் தரிசாக உள்ளன. கொடுமுடியில் ஒரு கோயில் உள்ளது. வழக்கம் போல [பிற பகுதிகளில் சொல்வதைப் போல] அது மிகவும் தொன்மையானதாகச் சொல்லப்படுகிறது. அக்கோயிலுக்கு பதினோறு பிராமணர்களும், 21 வாத்தியக்காரர்களும் நாட்டியக்காரிகளும் உள்ளனர். கோயில் கட்டடம் சுமார்தான். இருப்பினும் இன்று விடுமுறை நாளாதலால் [தீபாவளி?] ஆண்-பெண், சிறுவர்-பெரியவர் என்று கூட்டம் நிறைந்துள்ளது. கூட்டத்தினரில் பலர் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினர். கொடுமுடியில் 118 வீடுகள்

உள்ளன. அவற்றில் 28 பிராமணர்களுடையவை. இது ஒரு புதிய நகரம். புதிய வீடுகளைக் கட்ட முன்பணம் கொடுக்கப்பட்டுள்ளது. வழியில் பார்த்த கொளாநல்லி ஆளரவமின்றி இருந்தது. [காரணம் ஏதேனும் உண்டோ?] அங்கிருந்து ஒரு வாய்க்கால் காவிரியிலிருந்து பிரிகிறது. அணைக்கட்டு எதுவுமின்றி வெட்டப்பட்டுள்ளது. நொய்ய லாற்றைக் கடந்தும் அது செல்வதால், கோடைக்காலத்தில் அவ்வாய்க்கால் மூலம் புகளூர் வரையுள்ள கழனிகளுக்குத் தண்ணீர் கிடைக்கிறது.

'இவ்வூரிலுள்ள பிராமணர்கள் முன்பு வேதியர்களாக இருந்தனர். முன்பு ஐதர் அலி அரசின்போது காவிரியின் மறுகரையில் (சேலம் ஜில்லா) வாழ்ந்து வந்தனர். அங்கு இனாம் நிலங்களை வைத்திருந்தனர். இப்போது அந்த நிலங்களை இழந்து விட்டனர். ['எவ்வாறு' எனக் குறிப்பிடவில்லை. ஒரு வேளை, 1792க்கு முன்பு சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்கள் ஒரே ஆட்சியின்கீழ் இருந்தபின், 1792இல் ஏற்பட்ட நாட்டுப் பிரிவினையின் போது சேலம் ஜில்லாப் பகுதியில் வசித்த அந்தப் பிராமணர்கள் தங்கள் நிலத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்..] மீதமிருக்கும் இங்குள்ள நிலங்களை அவர்களின் வேலையாட்களுக்குக் குத்தகைக்கு விட்டு சாகுபடி செய்து வருகின்றனர்.'

**புகளூர் வழியில் பார்த்த வாய்க்கால்**

அடுத்த நாள், நவம்பர் 11ஆம் தேதி 7½ மலபார் மணிநேரத் தூரம் கடந்து புகளூருக்குச் சென்றார் புக்கானன். அவ்வூர் நொய்யலுக்குத் தெற்கில் ஹுர்டிஸின் ஜில்லாவில் உள்ளது. கொடுமுடியில் காவிரியிலிருந்து பிரியும் வாய்க்கால் நொய்யலாற்றின் மேல் கட்டப்பட்டதை வழியில் கண்டார். அவ்வாய்க்காலைக் காட்டும் வரைபடத்தைத் தந்து அதில் காவிரி நீர் செல்லும் விதத்தை விளக்குகிறார்:




'மழைக் காலத்தில் 'அ' இடத்தில் காவிரியிலிருந்து தண்ணீர் செலுத்தப்பட்டு, 'ஆ' வழியே மீண்டும் காவிரியல் கொட்டப்படுகிறது. இவ்வகையில் 'இ' வழியே தண்ணீர் செல்கிறது. நொய்யலாற்றில் உள்ள தண்ணீரின் அளவு 'ஈ' 'உ' கால்வாயில் செல்லப் போதுமானதாக உள்ளது. ஆனால், கோடைக்காலத்தில் நொய்யலாற்றில் தண்ணீர் இல்லாமல் போகும்போது 'ஈ' இடத்திற்கு, 'அ, இ, ஈ' கால்வாய் வழியே காவிரி நீர் செலுத்தப்பட்டு, நொய்யலின் மேலுள்ள கால்வாயில் [ஈரோட்டில் உள்ளதைப் போல] கடந்து செல்கிறது. 'ஈ' இடத்தில் வாய்க்காலுக்கருகே கட்டப்பட்டுள்ள மண் அணைக்கட்டு இந்த ஏற்பாட்டிற்குத் துணைபுரிகிறது.

'இந்த வாய்க்கால் மூலம் புகளூர் கிராமத்தில் 200 காணி நிலங்களுக்குத் (265 ஏக்கர்) தண்ணீர் கிடைக்கிறது. மேலும் பல ஊர்களுக்கும் பாசன நீர் கிடைக்கிறது. நன்செய் நிலங்கள் முழுவதிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 3/5 பங்கு புன்செய் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ளதாக கிராமக் கணக்குப் பிள்ளை சொல்கிறார். இவ்வூர் ஒரு சிறிய கிராமம்; கடைகள் இல்லை; ஐதர் அலி காலத்திலிருந்த வீடுகளில் பாதியளவு வீடுகள்தான் இப்போது உள்ளன. இங்குள்ள மண் நல்ல வளமானது- குறிப்பாக நொய்யலாற்றுக்கருகில் உள்ள மண் மிகவும் வளமானது.

'நன்செய் நிலங்களெல்லாம் பிராமணர்களுக்குச் சொந்தமாயுள்ளது - முன்பு இனாம் நிலங்களாகக் கிடைத்தவை. அவற்றுக்கு திப்பு காலத்தில் 4/10 பங்கு தீர்வை வசூலிக்கப்பட்டது. சென்ற ஆண்டு அந்தத் தீர்வை பணமாக வசூலிக்கப்பட்டது - பத்து காணி நிலங்களுக்கு 22 ரூபாய் என்ற விகிதத்தில். இந்தத் தீர்வைக்குப் பின்பும் அந்த இனாமின் மதிப்பு கணிசமானதுதான். இந்த ஆண்டுக்கான தீர்வை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. அவற்றில் பாதியளவு நிலங்களில் ஆண்டிற்கு இருபோகம் நெல் விளைகிறது. நான்கு பிராமணர்கள் அந்த நிலங்கள் முழுவதையும் (265 ஏக்கர்) வைத்துள்ளார்கள் - அவர்களுக்குப் 'பட்டேல்' என்று பெயர். அந்த நிலங்கள் மற்ற பிராமணர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன- அவர்கள் தங்களின் பண்ணையாட்கள் மூலம் சாகுபடி செய்கிறார்கள்.'

**காவிரியைக் கடந்து – மாக்ளியாட் சந்திப்பு**

புகளூரில் இருந்தபோது, வட கோயம்புத்தூரின் கலெக்டர் மேஜர் மாக்ளியாட்டைக் காணச் சென்றார் புக்கானன் (நவம்பர், 12). புக்கானனின் பயணத்தின்போது அவர்கள் சந்தித்துக் கொண்டது அதுதான் முதன் முறை எனத் தெரிகிறது. ஏனெனில், பவானியிலிருந்தபோது மாக்ளியாட்டைப் பார்க்க முடியவில்லை; அவரது துணை கிடைத்திருந்தால் மிகவும் உதவிகரமாக இருந்திருக்கும் எனக் குறிப்பிட்டிருந்தார் (பார்க்க: அத்தி. 8). இதில் விசேஷமாகச் சொல்ல வேண்டியது ஒன்றுள்ளது. காவேரிபுரத்திற்குப் பின், தன் பயணத்தைக் காவிரியின் மேற்குப் புறமாக புக்கானன் மேற்கொண்டார். ஆனால் புகளூரில்தான் அவர் காவிரியைக் கடந்தார். காவிரியின் வடக்குப் புறமாகச் சென்று, [காவிரியின் திசை கொடுமுடிக்கும் புகளூருக்கும் இடையே மாறுகிறது]. பரமத்தியில் மாக்ளியாட்டைச் சந்தித்தார். பரமத்தி அப்போது சேலம் ஜில்லாவில் ஒரு தாலுகா தலைநகரம்; மணிமுத்தாற்றின் கரையில் அமைந்துள்ள ஊர். அந்தச் சந்திப்பைப் பற்றி புக்கானன் வாயிலாகக் கேட்போம்.

**பரமத்தியில் புக்கானன்**

'வட கோயம்புத்தூர்க் கோட்டத்தின் கலெக்டர் மேஜர் மாக்ளியாட்டைச் சந்திக்கச் சென்றேன். அன்றைய பொழுதை அவருடன் காவிரியின் கிழக்குப் பகுதியிலுள்ள [காவிரியின் வடக்குப் பகுதி எனச் சொல்வது சரியாக இருக்கும் - ஆனால் அவர் காவிரியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பரமத்தி தாலுகாவைப் பற்றிக் குறிப்பிட முனைந்தார் போலும்]. பரமத்தியில் கழித்தேன்; அன்றிரவில் புகளூருக்குத் திரும்பினேன். காவிரி ஆறு இங்கு 600 முதல் 800 கஜங்கள் (ஒரு கஜம் = மூன்று அடிகள்) அகலம் உள்ளது; தண்ணீரின் ஆழம் அதிகமில்லை; இந்த மழைக் காலத்திலும்கூட நாற்பது கஜங்கள் தூரம் அளவிற்குத்தான் ஒரு ஆள் நடந்து செல்வதில் சிரமம் உள்ளது.

'மேஜர் மாக்ளியாட் ஒரு பண்பாளர்; அவரது ஆட்சிக்குட்பட்டுள்ள மக்களால் மிகவும் நேசிக்கப்படுகிறார்; இந்துக்களின் பழக்க வழக்கங்களை அவர் நன்கு அறிந்துள்ளார் - அவர்களுடைய மத நம்பிக்கைகளின்மேல் அவர் போதுமான கவனம் செலுத்துகிறார். தங்களின் சாதி விதிமுறைகள் இவைதான் என சில சமயம் உள்ளூர் மக்கள் அடித்துக் கூறுவதற்கு ஐரோப்பியர்கள் அதிகமான மதிப்பளிக்கின்றனர் என்று அவர் கருதுகிறார். அதுபோல, சில வேலைகளைச் சில சாதியினர் செய்ய வேண்டுவதில்லை எனக் கூறப்படுவதை ஏற்க இயலாது என்றும் கருதுகிறார். பரம்பரைச் சாதியத் தலைவர்கள் தங்கள் சாதியினரின் தாவாக்களை விசாரித்து, அபராதம் விதித்தல் அல்லது சாதி விலக்கம் செய்தல் போன்றவற்றை அவர் அனுமதிப்பதில்லை. அது மட்டுமன்றி, அத்தலைவர்களின் கோபத்தினால் அல்லது நியாயமற்ற போக்கினால் சாதி விலக்கம் செய்யப்பட்ட நபர்கள் திரும்பவும் சமுதாயத்தில் சேர்ந்து வாழும் வழியைக் காண அவருக்குப் பிரச்சினை தோன்றியதில்லை. உதாரணமாக, சாதி விதிமுறைகளை மீறியதால் சாதியிலிருந்து விலக்கம் செய்யப்பட்ட ஒரு ஆள் அவரிடம் (மாக்ளியாட்) மனுச் செய்தால், அந்த வகுப்பைச்

சார்ந்த மிகவும் மரியாதைக் குரியவர்களைத் தாசில்தார் முன்னிலையில் அரசு அலுவலகமொன்றில் கூட ஏற்பாடு செய்வார்; தாசில்தார் விசாரிப்பார்; அங்குக் கூடியிருந்த வர்களிடம் அவர்களின் சாதி வழக்கத்தைக் கேட்டு, குற்றத்தின் தன்மையை முடிவு செய்து, உரிய தண்டனை வழங்குவார். [அதாவது சாதி விலக்கம் செய்த தண்டனையை மேல் முறையீடு போல அணுகுவார் எனத் தெரிகிறது]. அவ்வாறு செய்த முடிவை ஏற்றுக் கொள்ளாது, தொல்லை தரும் நபர் அந்த மாவட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவார்.

**வலங்கை – இடங்கை : ஊரைப் பிரித்தல்**

'அதுபோல வலங்கை, இடங்கை வழக்குகளுக்குத் தீர்வு காண்பதிலும் அவருக்குப் பெரும் தொல்லை தோன்றாது. இரண்டு தரப்பிலிருந்தும் விவரமறிந்த, தகுதியான முக்கியஸ் தர்களை அரசு அலுவலகங்களுக்கு வரவழைத்து அவர்களின் தாவாக்களைக் கேட்டு, இரு தரப்பும் ஒப்புக் கொள்ளும் வகையில் வழி காண்பார். அதை ஒரு ஒப்பந்தமாகச் செய்து, இருதரப்பினருக்கும் நகல்களைத் தருவார்; தாசில்தாருக்கும் ஒரு நகல் தரப்படும்- இரு தரப்பும் அதன்படி நடக்காவிட்டால் தண்டனை தர தாசில்தாருக்கு அதிகாரம் தருவார். ஏதேனும் ஒரு நகரத்தை அவ்விரு பிரிவினருக்குமாகப் (வலங்கை, இடங்கை) பிரிக்க வேண்டி வரும்போது, எதிர்த் தரப்பைச் சார்ந்த யாராவது தம் பிரிவினர் உள்ள பகுதியில் குடியிருக்கும் நிலை ஏற்பட்டால், அவரை எதிர்ப் பகுதிக்கு மாற்ற யாரேனும் கோரிக்கை வைத்தால், அக்குறிப்பிட்ட நபருக்காக அவர் மாற்றுத் தரப்பில் வீடு கட்டித் தர வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்டபோது மாற்றுத் தரப்பில் குடியிருக்க வேண்டி ஒருவரின் வீடு அமைந்து விட்டால், அவர் தான் விரும்பும்போது இடம் மாற்றிக் கொள்ளலாம்...

**நிலக் குத்தகை முறை**

'மேஜர் மாக்ளியாட் சொல்கிறார் - 'இப்பகுதியின் வழக்கப்படி, நிலத்திற்கான குத்தகையைத் தொடர்ந்து

செலுத்திக் கொண்டு வரும் ஒரு விவசாயியை அந்த நிலத்திலிருந்து அகற்ற முடியாது. ஆனால், முந்தைய அரசாங்கத்தின் வருவாய் அலுவலர்கள் தாங்கள் விரும்பும்போது, நல்ல நிலங்களில் உள்ள விவசாயியை அகற்றி தங்களுக்கு வேண்டியவருக்கு அளிப்பார்கள்...' - ஒரு பிராந்தியத்தின் தலைமை அதிகாரி விழிப்புடன் இல்லாமலிருந்தால் இந்த நிலை ஏற்படும்...

'ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பேரேடு உள்ளது- அதில் விளை நிலங்களின் மதிப்பு குறிப்பிடப்பட்டிருக்கும்; அந்த மதிப்பை அவ்வூரின் ராஜா, அல்லது அவரது ஆளுநர் நிர்ணயம் செய்வார்; அவ்வூரும் அவரது பெயரால் அழைக்கப்படும். அந்தப் பேரேடு அவ்வூர் கணக்குப் பிள்ளையின் வசம் இருக்கும்; அந்தக் கணக்குப்பிள்ளை வைத்திருக்கும் விவரங்களைச் சரிபார்க்க ஆள் கிடையாது - அதுபோல அவ்வூர்த் தலைவரையும் மேற்கொண்டு கேட்க ஆள் கிடையாது. இவர்கள் புரியும் ஊழல் வெளிப்படையாகத் தெரியாது. நிலங்களின் மதிப்பை அவர்கள் மாற்றி எழுதுவார்கள்; தங்கள் அல்லது தங்கள் நண்பர்களின் நிலங்களின் குத்தகை மதிப்பைக் குறைவாகக் காட்டுவார்கள்; மற்ற நிலங்கள் அல்லது குத்தகைக்கு எடுக்கப்படாத நிலங்களின் மதிப்பைக் கூட்டிக் காட்டுவார்கள்- மொத்தத்தில் அந்தக் கிராம நிலங்களின் வருவாய் மதிப்பு வித்தியாசப்படாமல் பார்த்துக் கொள்வார்கள்...

'மேஜர் மாக்ளியாட்டிற்கு இந்த மதிப்பீடுகளுக்கு உரிய கவனம் செலுத்தத் தேவையில்லை என எண்ணுகிறார். ஆகவே சேலம் பகுதியிலுள்ள தமது ஜில்லாவில் புதிய நிலவரி மதிப்பை முற்றிலும் மாற்றியுள்ளார். அந்தப் புதிய மதிப்பும் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு மட்டும் தொடர வேண்டுமெனக் கருதுகிறார்; பின்னர் அப்பகுதியின் வளர்ச்சி, தங்கம் - வெள்ளி போன்ற உலோகங்களின் மதிப்புக் குறைவு போன்றவற்றைக் கணக்கில் கொண்டு, நிலவரி மதிப்பைக் கூட்டும் வாய்ப்பை அரசாங்கம் மேற்கொள்ளலாம் என்றும் நினைக்கிறார். இதைக்

குறிப்பிட்ட சதவிகித அடிப்படையில் மாற்ற நினைத்துள்ளார் - அதற்கு எதிர்ப்பு கிளம்பும் என நான் கருதுகிறேன். இப்போதுள்ள நிலமதிப்பு வரும் சில ஆண்டுகள் கழித்து சரிவிகித வரிவிதிப்பிற்கு ஏற்றதாயிராது என்பதை அவர் ஒத்துக் கொள்கிறார்... ஆனால் குறிப்பிட்ட குத்தகைக் காலம் முடிந்த பின் புதிய வரியை நிர்ணயிப்பதில் பல தொல்லைகள் நேரிடும். புதிய வரி விகிதம் பல புகார்களுக்கு இடம் தரும். வலிமையற்ற அல்லது ஊழல் கலெக்டரின் நிர்வாகத்தில் அவ்வாறு நிகழ வாய்ப்புண்டு. ஆனால் கர்னல் ரீடுவால் நிர்வாகத்தில் வளர்க்கப்பட்டவர்கள்* கலெக்டர்களாக உள்ள சமயத்தில், அப்பிரச்சினைகள் அரசாங்கத்திற்கும் சரி, விவசாயிகளுக்கும் சரி- இரு தரப்பாருக்கும் நன்மை பயப்பதாகவே அமையும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

### நில வருவாயில் மோசடி

'நில வருவாயில் மோசடி நிகழ்வதை ஒரு அரசாங்கத்தால் சாதாரணமாகத் தவிர்க்க இயலாது என மேஜர் மாக்ளியாட் கருதுகிறார். ஒரு சிறிய பாளையக்காரரால் அது இயலும்; பெரிய அரசாங்கத்தில் அதைத் தடுக்க இயலாது. சேலம் பகுதியைக் கம்பெனி அரசாங்கம் பெற்றபோது, காவிரி வாய்க்கால் மூலம் நீர்ப்பாசனம் பெற்ற நன்செய் நிலங்கள் விளை பயிர்களுக்கேற்ப குத்தகைக்கு விடப்பட்டன. அப்போது இங்குள்ள நிலங்களில் பெரும் பகுதி தரிசாக இருந்தது; குத்தகை குறைவாக இருந்தது; அதை வசூலிப்பதும் கடினமாயிருந்தது. குத்தகையைப் பணமாகக் கட்டச் செய்ய மாற்றம் செய்தபோது முதலில் முணுமுணுப்புகள் வந்தன. ஆனால் இப்போது எல்லா நிலங்களிலும் பயிர் செய்யப்படு கின்றது; அதனால் வருவாய் கூடுகிறது. சாதகமான சூழ்நிலைக்கேற்ப நிலவரியை மிதமாகக் கூட்டி வசூலித்தல்

---

* சேலம் ஜில்லாவில் கலெக்டராயிருந்த அலெக்சாண்டர் ரீடு நாடு திரும்பிய பின்னரும், அவரின் நிர்வாகத்தை உணர்ந்து பாராட்டிய ஒரு சமகால ஆய்வாளரின் கருத்தாக இதைக் கருதலாம். அப்போது எல்லா கலெக்டர்களும் ஆங்கிலேயர்கள் அல்லது ஐரோப்பியர்கள் மட்டுமே.

எந்த நாட்டிற்கும் உகந்த நிலையாகும்; அது விவசாயிகளையும், அரசின் வருவாயையும் மேம்படுத்தும்.

**நேரடி நிலவரி வசூல்**

'தற்போது அரசு நிலங்கள், ஊர்த்தலைவர்கள் அல்லது பரம்பரை ஜமீன்தார்கள் மூலம் அல்லாமல் விவசாயிகளுக்கு நேரடியாகத் தரப்பட்டுள்ளது. ஊர்த்தலைவர்கள் விவசாயி களிடம் கடுமையாக நடந்து கொள்வார்கள். பரம்பரை ஜமீன்தார்களோ மக்களுக்குப் பாதுகாப்பளிப்பவர்களாகவும் வசூலில் நீக்குப் போக்காக நடந்து கொள்பவராக இருந்தாலும், நாட்டை வெளிநாட்டுக்காரரர்கள் ஆளும் நிலை வந்தால் அவர்கள் அரசியல் கெடுதலை உண்டு பண்ணுபவராகவே இருப்பர். நில வருவாயை வசூலிப்பதில் கர்னல் ரீடு கொண்டு வந்த நடைமுறைகள், ஜமீன்தார்கள் மூலம் வசூலிப்பதைவிட சுலபமாகவே இருக்கும் என நான் நம்புகிறேன். இதில் நடைமுறைக் குறைபாடு ஏதும் இருந்தால், அது வரி வசூலிப்பவரின் கடமை தவறுதல் அல்லது நேர்மை யின்மையால்தான் ஏற்படும் என எனக்குச் சொல்லப்படுகிறது. ஆனால் பரம்பரை ஜமீன்தார்கள் பற்றிய மேற்சொன்ன எனது கருத்துகள் அவர்களால் நில வருவாய் பாதிப்பு மற்றும் நாட்டின் அரசியல் நிலை பற்றியது மட்டும்தான். அவர்களால் விவசாய வளர்ச்சி கூடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் [ஏரி, குளம், கிணறு வெட்டுதல் போன்றவை மூலம்].

**இனாம் நிலங்கள்**

'சில இனாம் நிலங்கள் உள்ளன. மொத்தத்தில் அவை கணிசமானதல்ல. முன்பு பிராமணர்களுக்கு அளிக்கப்பட் டிருந்த நிலங்களை அவர்களுக்குத் திருப்பித் தர மேஜர் மாக்ளியாட் எண்ணுகிறார். அந்நிலங்களை விவசாயிகளுக்குக் குத்தகைக்கு விட்டால் கிடைக்கும் வருவாயைவிடக் குறைவான குத்தகைத் தொகைக்கு விட நினைக்கிறார்... ஐதர் அலி மற்றும் திப்பு சுல்தானால் முஸ்லிம் அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட இனாம் நிலங்கள் மற்றும் 'பென்ஷன்' தொகைகள் தொடர்கின்றன. கிராம தேவதைக் கோயில்

களுக்குச் சொந்தமான நிலங்கள் யாவும் அளக்கப்பட்டு, அவற்றின் வருவாய் மதிப்பை மேஜர் மாக்ளியாட் நேரிடை யாகப் பார்வையிட்டுள்ளார். அக்கோயில்களின் விசேஷம், பூஜைகளின் செலவுகளுக்குப் போக மீதமாக நிலங்கள் இருப்பதாகத் தெரிந்தவற்றைக் குறைத்து விட்டார்... பெரிய தெய்வங்கள் (சிவன், விஷ்ணு போன்ற) கொண்ட கோயில்களுக்கான நிலங்கள் யாவும் திருப்பி எடுக்கப்பட்டு விட்டன. பதிலாக, கோயில் அலுவலர்- ஊழியர்களுக்கு மாதாந்திர சம்பளம் பணமாகத் தரப்படுகிறது.

'மொத்தத்தில் இனாம் நிலங்கள் மிக மிகக் குறைவு. ஆனாலும் இனாம் நிலங்கள் பொது நன்மைக்கு ஏற்றதல்ல என மாக்ளியாட் கருதுகிறார். ஆனால் மற்ற நிலங்களைவிட இனாம் நிலங்களில் சாகுபடி நன்றாகச் செய்யப்படுகிறது என்றும் அவர் கருதுகிறார். எப்படியெனில், இனாம் நிலங்கள் மிகக் குறைந்த குத்தகைக்கு விடப்படுகிறது. ஆகவே இனாம்தார்கள் பிற நிலங்களின் ஆட்களை அங்கு வரச் செய்து நன்றாக விவசாயம் நடைபெறச் செய்கிறார்கள். அது அரசிடமிருந்து நேரடியாக நிலத்தைப் பெறும் விவசாயிகளை உதாசீனப் படுத்துவதாக உள்ளது. இப்போதுள்ள நிலையில், தங்களுக்கிருக்கும் நிலத்தைத் தரிசாகப் போடாமல் குறைந்த அளவு குத்தகைக் கிடைத்தால் போதும் என்று இனாம்தார்கள் திருப்திப்படு கிறார்கள். நாட்டில் ஜனத்தொகை கூடும்போது அவர்களின் குத்தகையை மற்ற நிலங்களின் குத்தகை அளவுக்கு உயர்த்துவார்கள்.

### கிராம அலுவலர்கள்

'கிராமத் தலைவர்கள்- கணக்குப்பிள்ளைகளின் உத்தியோகங்களுக்குப் பரம்பரை வழியில் நியமிப்பதில் நியாயம் இல்லை என மேஜர் மாக்ளியாட் கருதுகிறார். நிர்வாக முறைகேடுகள் காரணமாகப் பதவி நீக்கம் செய்யப்படும் ஒரு உத்தியோகஸ்தரின் மகன் பரம்பரையாக அப்பதவியில் நியமனம் பெறுவது கையூட்டு, ஊழல் மூலமாகத்தான் முடி கிறது... மாக்ளியாட்டின் போக்கிற்கு நான் உடன்பட்டாலும்,

உள்ளூர் மக்களின் வழக்கத்திற்கு மாறாகச் செயல்படுவது சரியில்லை என்று என்னிடம் பிறர் கூறுகிறார்கள்.

**மக்களின் நிலை**

'விவசாயிகளும் பண்ணையாட்களும் ஆட்சி மாற்றத்திற்கு முன்பு திப்புவின் அரசாங்க நாட்களில் என்ன உடை உடுத்தினார்களோ அதையே இப்போதும் தொடர்கிறார்கள்; அதே வீடுகளில்தான் குடியிருக்கிறார்கள்; மாற்றத்தை அவர்கள் வரவேற்கவில்லை. அவர்களுடைய பெண்கள் முன்பைவிட இப்போது அதிகத் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை அணிய ஆரம்பித்துள்ளார்கள் என மேஜர் மாக்ஸியாட் நினைக்கிறார். வியாபாரிகளும், உற்பத்தியாளர்களும் தங்கள் வாழ்க்கை முறையை மேம்படுத்த முனைகிறார்கள் - சாதாரணமாக, பிரமிடு அல்லது கூம்பு வடிவிலிருந்த அவர்களது வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றி வருகிறார்கள். அதற்காக அரசாங்கம் வட்டியில்லாக் கடன் வழங்குகிறது; அதைத் தவணை முறையில் செலுத்தலாம்.

**துணியின்மீது முத்திரை வரி**

'ஜவுளி உற்பத்தியாளர்கள் இப்போது திருப்தி கொண்டுள்ளார்கள். முன்பு நிலவிய தறி வரி, வீட்டு வரி, சுங்கவரி போன்றவைக்குப் பதிலாக வந்துள்ள முத்திரை வரியைச் செலுத்துவது சுலபமாக இருப்பதாக உணர்கிறார்கள். இவ்வரியை வசூலிப்பது அரசிற்கும் எளிதாக உள்ளதால் வசூல் கூடுகிறது. இப்போது அமைக்கப்பட்டுள்ள சங்கச் சாவடிகள் வணிகத்திற்கு இடையூறாக இல்லை. அதன் மூலம் அரசிற்குக் கிடைக்கும் வருவாய் கணிசமாக உள்ளது. நிர்ணயிக்கப் பட்டுள்ள வரி விகிதங்கள் அறிக்கையாக சுங்கச்சாவடிகளில் ஒட்டப்பட்டுள்ளன. தாசில்தார்களுக்கும் நகல்கள் தரப் பட்டுள்ளன...

**சிவில் வழக்குகள்**

'குடியுரிமை வழக்குகள் [அவற்றில் பெரும்பாலானவை நிலவரி/ நில உடமை போன்றவை] வெளிப்படையாக

நீதிமன்றங்களில் நடுவர்களால் தீர்க்கப்படுகின்றன. இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளும் நடுவர்களை நியமித்து, தீர்ப்பு கூறும்வரை அவர்கள் வெளியில் செல்லாமல் இருக்கப் பணிக்கப்படுகிறார்கள். அதனால் ஊழலும் ரகசியச் சதிகளும் தவிர்க்கப்படுகின்றன. அதற்காகக் கண்காணிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வகையான ஏற்பாடுகள் வங்காளத்திலிருப்பதைவிட மேம்பட்டதாக உள்ளன. இம்மாதிரியான தாசில்தாரின் ஒத்துழைப்பு வருவாய் வசூல், காவல் மற்றும் நீதி நிர்வாகத்திற்கும் ஏற்றதாக உள்ளது. மேலதிகாரியின் துடிப்பான மேற்பார்வை இல்லாவிட்டால் முறைகேடுகளுக்கு வழியுண்டாகும்.'

**காசுகள்**

'காசுகளின் பற்றாக்குறை இப்போது பெரிய குறையாக உள்ளது. ஒரே வகையான நாணயங்கள், அவற்றின் சில்லறைக் கூறுகளுடன் நடைமுறைக்கு வந்தால் மக்கள் வரவேற்பார்கள்; முணுமுணுப்பு ஏதுமின்றி பழைய காசுகளைக் கலெக்டர்களின் கருவூலங்களில் செலுத்தி, அதற்குண்டான புதிய நாணயங்களைப் பெற முன்வருவார்கள்; அதில் உள்ள ஒரே பிரச்சினை, தேவையான அளவு புதிய காசுகள் இல்லாததுதான் என மேஜர் மாக்ளியாட் நினைக்கிறார்...

**தோட்டங்கள்**

'தோட்டங்களுக்கு நீர் பாய்ச்ச கபிளை மற்றும் ஏற்றங்கள் மிக முக்கியமானவை. இவ்வகைகளில் சாகுபடி செய்வதால் குறைந்த அளவு நிலத்தில் பலருக்கு உணவு கிடைக்கிறது. நில வருவாயும் கூடுகிறது. மேட்டாங்காட்டு விவசாயத்தில் தண்ணீர் கிடைக்காமல் விவசாயம் பாதிப்பு என்ற நிலை வரும். தோட்டங்களுக்கு அந்த நிலை உண்டாவதில்லை. ஆகவே, மேஜர் மாக்ளியாட் கிணறுகளை வெட்ட விவசாயிகளுக்கு முன்பணம் வழங்கச் செய்துள்ளார். பதினெட்டு மாதங்கள் முதல் இரண்டு வருட காலங்களில் முன்பணத்தைத் திருப்பிச் செலுத்தலாம். கிணறு வெட்டிய பின், முதல் ஆண்டில்

மானாவாரி நிலத்திற்கான வரிதான்; இரண்டாம் ஆண்டில் பாதி அளவு உயர் வரி; மூன்றாம் ஆண்டு முதல் தோட்டங் களுக்கான முழு அளவு வரி வசூலிக்கப்படும்.

'கிணற்று நீர் மேலாகவே கிடைத்தால் ஏற்றம் மூலம் நீர் இறைப்பதை மாக்ளியாட் விரும்புகிறார்; நீர் ஆழத்தில் இருந்தால் கபிளை ஏற்றம் சிறந்தது என்கிறார். ஆனால் இந்த இரண்டு வகைகளில் எது மேலானது என்பதை அவர் தீர விசாரிக்கவில்லை...'

இவ்வாறு பரமத்திக்குச் சென்று கலெக்டர் மாக்ளி யாட்டுடன் கழித்த அன்றைய ஒரு பொழுதில் பரமத்தி தாலுகாவின் சமுதாய, அரசியல், விவசாய, தொழில் நிலைமைகளை அறிந்து எழுதியுள்ளார் புக்கானன். அந்தத் தாலுகாவில் சில இடங்களை மாக்ளியாட்டுடன் சுற்றியும் பார்த்திருப்பார். பரமத்தி தாலுகாவின் நிலை சேலம் மாவட்டத்தின் (தாலக்காடு) மொத்த நிலைமைக்கும் ஒரு 'மாதிரி' ஆய்வு போலக் குறிப்பிட்டுள்ளார்.



அடுத்த நாள், நவம்பர் 13, பத்து மலபார் மணி நேரத் தூரம் சென்று கரூரை அடைந்தார். வழியில் கணிசமான நிலங்கள் பயிரிடப்படாமல் இருந்தன. வேலிகளும் சிலவே இருந்தன. மண் வளம் சுமார்தான். வெள்ளை படிகப் பாறைகள் (Quartz) பல தென்பட்டன. கரூருக்கு அருகில் ஒரு பாறையிலிருந்து கற்கள் வெட்டி எடுப்பதைக் கண்டார். அது கருங்கல் பாறை- மேற்கொண்டு அங்கிருந்து அவர் குறிப்பிடுவதைப் பார்ப்போம்.

**கரூர்**

'கரூர் ஒரு பெரிய நகரம்; அமராவதி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. அங்கிருந்து சிறிது தொலைவில் ஒரு அழகான கோட்டை உள்ளது. அதில் ஒரு பெரிய கோயிலும் சிப்பாய்களின் பாதுகாப்புப் படைப்பிரிவும் உள்ளன. நகரில் ஆயிரம் வீடுகள் உள்ளன. அங்குள்ள வணிகர்கள் சிறு வியாபாரிகள். நெசவாளர்கள் அதிகம் இல்லை.

'சாகுபடி செய்யப்படாமலுள்ள நிலங்களைத் தமிழில் 'தரிசு' என்கிறார்கள்; முஸ்லிம்கள் 'பான்ஜூர்' என்கின்றனர். பயிரிடப்படும் நிலங்கள் 'சாகுபடி' நிலங்கள் எனப்படுகின்றன. நீர்ப்பாசனம் இல்லாத நிலங்கள் 'காடு' என்று அழைக்கப் படுகிறது. நீர்பாயும் நிலங்கள் 'தனவுடி' (Danwudi) எனப்படுகிறது. நன்செய் நிலங்கள் அனைத்தும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன; அவை முழுவதும் பிராமணர்களக்குச் சொந்தமானது. சென்ற ஆண்டு பாதியளவு புன்செய் நிலங்கள் தரிசாயிருந்தன. இந்த ஆண்டில் எவ்வளவு என்று இன்னும் கணக்கிடவில்லை. ஆறுகள், சாலைகள், பாறைகள், வனங்கள் போன்றவை கொண்ட நிலங்கள் மொத்த நிலங்களில் பத்து சதவிகிதத்திற்கு மேல் இராது எனத் தாசில்தார் சொல்கிறார். [இன்றையத் தேவையில் இது மிகக் குறைவு!]

'இப்பகுதியில் புகலூருக்குக் கீழே காவிரியிலிருந்து வரும் இரண்டு வாய்க்கால்கள் மூலம் நெற்பயிர் நிலங்களுக்கு நீர் கிடைக்கிறது. அமராவதி ஆற்றிலிருந்து பல வாய்க்கால்கள், அணைக்கட்டுகள் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது.

தண்ணீர் ஆண்டு முழுவதும் வருவதில்லை; ஆகவே சில பருவங்களில் ஒரு போகம் மட்டும் நெல் பயிராகிறது.

**கரும்பு சாகுபடி**

'இப்பகுதியில் கரும்பு அதிகம் பயிரிடப்படுகிறது. பத்து மாதப் பயிர். சில சமயங்களில் ரஸ்தாளி (Ratoons) கரும்பு பயிரிடப்படுகிறது.... ஒரு முறை கரும்பு பயிரிட்டபின் இரண்டு, மூன்று முறை நெல் பயிரிட்ட பிறகுதான் அடுத்த கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு காணி நிலத்தில் (32'x32' சதுரத்தில், நூறு குழிகள் பரப்பு) இரண்டாயிரம் துளைகள் போடப்படுகின்றன. ஒரு துளையில் மூன்று கரணைத் துண்டுகள் வைக்கப்படுகின்றன. நல்ல விளைச்சலில் 27½ சேர் கொண்ட 120 தோலா எடையுள்ள வெல்லம் தயாரிக்கலாம்... விலை மலிவாக உள்ளபோது ஒரு தோலா வெல்லம் அரை ரூபாய்க்கு விற்கிறது... காம்ப்பெல் (Campbell) என்பவர் வெல்லத்திலிருந்து சர்க்கரை தயாரிக்க ஆரம்பித்துள்ளார். அதற்கு கம்பெனி ஊக்கம் தருகிறது. அவர் கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிக்கு காணி ஒன்றுக்கு இருபது ரூபாய் முன்பணம் தருகிறார்; தயாராகும் வெல்லத்தில் பாதியை அவருக்குத் தந்துவிட வேண்டும். அந்தப் பாதி வெல்லத் திலிருந்து அவர் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும். விவசாயிக்குக் கிடைக்கும் பாதி வெல்லத்திலிருந்து கடனாகப் பெற்ற இருபது ரூபாயைத் திருப்பித் தர வேண்டும். அதாவது, விவசாயியின் பங்கு அரைவாசி விளைச்சல்...'

**ம**றுநாள் 7½ மலபார் மணிநேரத் தூரம் கடந்து குரும்பூர் (Cutamboor) என்ற சிறுகிராமத்தை அடைந்தார். அங்கு கடைகள் இல்லை. வழியில் அமராவதி ஆறு 400 கஜங்கள் அகல மாயிருந்தது. ஆற்றின் நீர் மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது; அன்று இரண்டு அடிகள் ஆழம் மட்டும் இருந்தது. சுலபமாக நடந்து கடக்க முடிந்தது. ஆற்றில் மணல் மண்டியிருந்தது; தாழ்வான கரைகள்; ஆகவே அங்கிருந்து நன்செய் நிலங்களுக்கு வாய்க்கால்கள் மூலம் நீரைக் கொண்டு செல்வது சுலபம்.

ஆற்றின் அருகில் நெல் விளைச்சல் பூமி கணிசமாக இருந்தது. முழுவதும் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. தூரம் செல்லச் செல்ல மண்வளம் சுமார்தான். பாறைகளும் தென்பட்டன. நொய்யலுக்குத் தெற்கிலிருந்த பகுதிகளில் மரங்கள் தென்படவில்லை...

**அரவக்குறிச்சி**

அங்கிருந்து இவ்வாறான தகவல்களைத் தரும் புக்கானன், அடுத்த நாள் (நவம்பர் 15) மேலும் 7½ மலபார் மணிநேரத் தொலைவு கடந்து அரவக்குறிச்சிக்குச் சென்றார். வழியில் பார்த்த பகுதி அழகாகத் தோன்றியதாம். ஆனால் மண் சுமாரான வளம்தான். நிலத்தில் வேலிகள் குறைவாகத்தான் இருந்தன. தாசில்தாரரோ மூன்றில் இரண்டு பங்கு நிலங்கள் சாகுபடியாகின்றன என்றார். ஆனால் புக்கானனின் கணிப்பில் கால் பாக நிலங்களில் மட்டும் சாகுபடி நடைபெற்றிருக்கும் எனக் கூறியுள்ளார். முக்கியப் பயிர்கள் சோளம், கம்பு மட்டும்தான். கொள்ளு, சாமை, பருத்தி ஆகியவை சிறு அளவில் பயிராயின.

அப்பகுதியில் அமராவதியில் நான்கு அணைகள் இருந்தன; அவை நான்கு கிராமங்களின் நன்செய் நிலங்களுக்குப் பாசனம் தந்தன. அந்த நன்செய் நிலங்கள் யாவும் பிராமணர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. வழியில் இரண்டு வாய்க்கால்கள் இருந்தன. அவை இரண்டு கிராமங்களுக்குப் பாசனம் செய்தன. அந்தக் கிராமங்களைக் குத்தகைக்கு எடுத்த பட்டேல்கள், சூத்திரர்கள் ஆவர். அப்பகுதி நன்செய் நிலங்கள் எதிலும் இரண்டு போகம் விளைந்ததில்லையாம்... அப்பகுதியில் ஒவ்வொரு கிராமத்திலும் தனி அளவைகள்தான்... அவை நில வருவாய் அலுவலர்களின் (பட்டேல், கணக்குப்பிள்ளை, மணியக்காரர் போன்றோர்) வினோதக் கண்டுபிடிப்புதான். ஏனெனில் அம்மாதிரியான குழப்பத்தில் விவசாயிகளைக் குழப்பி ஆதாயம் அடைவது அவர்களின் நோக்கம். - என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார் புக்கானன். அவர் மேலும் கூறுகிறார்.

**ஊர் உருவான விவரம்**

'அரவக்குறிச்சி என்பது 'அரவன்' என்ற வேடனின் இருப்பிடமாகும். அவன் ஒருவன் மட்டும் அங்கு குடியிருந்தான். வடக்கிலிருந்து வந்த ஒரு பாளையக்காரன் அங்கு ஒரு நகரை உருவாக்கினான். அவ்வூர் முதலில் மதுரையின்கீழ் இருந்தது. பின்னர் மைசூரின் கைக்குச் சென்றது; அந்த ராஜா ஒரு அழகான கோட்டையை ஊருக்கருகில் கட்டி, 'விஜயமங்கலம்' என்று பெயரிட்டான். ஐதர் அலி ஆட்சியின் இறுதியில் கர்னல் லேங்க் (Laing) அக்கோட்டையைப் பிடித்தார் (ஏப்ரல் 1783). அவரது படைப்பிரிவு அந்த நகரில் அமைக்கப்பட்டது. அச்சமயத்தில் அந்த நகரம் அழிக்கப்பட்டது.* பின்னர் அங்கு குடியிருப்புகள் இல்லை. ஹூர்டிஸ் வந்து அப்பகுதியை ஏற்ற பிறகுதான் மக்கள் திரும்பினர். இப்போது 250 குடும்பங்கள் உள்ளன. நன்றாகக் கட்டப்பட்ட வீடுகள் கொண்ட ஒரு புதிய கடைத்தெரு இப்போது உருவாகி வருகிறது. [அரவக்குறிச்சிக் காரர்கள் இதைக் கவனத்தில் கொள்ளலாம்]. ஆனால் மக்கள் ஏழ்மையில் உள்ளனர்.

'இந்த நகரை உருவாக்கிய பாளையக்காரனின் குடும்பம் எப்போதோ மறைந்து விட்டது. இங்குள்ள வயது முதிர்ந்த பிராமணரால்கூட இப்பகுதி எப்போது விஜயநகர ராஜாக்களின் கீழ் வந்தது எனக் கூற முடியவில்லை... ஆனால் அந்த ராஜாக்களைப் பற்றி அவர்கள் கேள்விப் பட்டிருக்கின்றனர். மக்கள் பெரும்பாலும் தமிழ் பேசுகின்றனர். ஆனால் அவர்களில் சிலர் தெலுங்கர்கள்; அந்தப் பாளையக்காரனுடன் வந்திருக்க வேண்டும் - விருப்பாச்சி மற்றும் பக்கத்து பாளையக் காரர்கள் அனைவரும் தெலுங்கு வம்சாவளியினர்; வடக்கிலிருந்து வந்தவர்கள். தீபகற்பத்தின் தெற்கில், கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதியிலுள்ள சூத்திரர்களின் தேசிய அடையாளமாகத் தமிழ் இருப்பதைக் காணலாம். அது

* 1784இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி இக்கோட்டை திப்பு சுல்தானிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. ஆனால் மீண்டும் 1790இல் நடந்த போரில் இக்கோட்டையை மீண்டும் ஆங்கிலேயர் கைப்பற்றினர். அப்போது அக்கோட்டை அழிக்கப்பட்டது. பின்னர், அந்த இடம் அருகிலுள்ள ஆண்டிப்பட்டி பாளையக்காரர் வசம் ஒப்படைக்கப்பட்டது. (கோயம்புத்தூர் மேனுவல் 2/ப.387).

அப்பகுதித் தமிழர்களின் பிராகிருதம், பாஷை அல்லது (நீச்ச) வழக்கு மொழியாகும். கர்நாடகப் பகுதி மக்களின் மொழி அரபி. அவர்கள் துலுக்கர் எனப்படுகின்றனர். தமிழ்ப் பிராமணர்கள் திராவிடர் எனப்படுகின்றனர்; அவர்களின் குடும்பத்தார் பேசும் மொழி நீச்ச மொழி என்று கருதப் பட்டாலும், அதில் பொதுமக்களின் தமிழைவிட சமஸ்கிருதக் கலவை தூக்கலாக இருக்கும்- இதிலிருந்து, சமஸ்கிருதம் பரவலாக வழக்கிலிருந்த வடநாட்டிலிருந்து இப்பிராமணர்கள் இங்கு வந்தவர்கள் என முடிவு செய்ய முடிகிறது. அவர்களு டைய பூர்வீகம் இந்துஸ்தானத்தில் யமுனை நதிக்கரையிலுள்ள கல்பி என்ற நகரம் எனத் தெரிகிறது.

**பிராமணர்கள்**

'இப்பகுதியில் பஞ்சாங்கிகள் என்கிற கிராம சோதிடர் களைத் தவிர பிற பிராமணர்கள் கீழ்நிலையிலுள்ள சாதியினருக்குப் புரோகிதம் செய்ய முன்வர மாட்டார்கள். ஒரு பஞ்சாங்கியின் மகனுக்குப் படிக்கத் தெரிந்தால், அவன் தனது தந்தைக்குப் பிறகு அந்த உத்தியோகத்தைப் பெறுகிறான்.

'வைதிக பிராமணர்கள் முன்பு இனாமாகப் பெற்றிருந்த நிலங்களை இப்போது குத்தகைதாரர்களாக ஏற்றுக் கொண் டிருக்கிறார்கள். அவர்கள் வைத்திருக்கும் கணக்கின் படியும்கூட, சூத்திரர்களிடமிருந்து வசூலிக்கும் வரியைவிடக் குறைவாகவே தங்களின் நிலங்களுக்கு வரி செலுத்துகிறார்கள்.

'பிராமணர்களில் சிலர் நன்றாகப் படிப்பறிவு கொண்ட வர்கள். அவர்கள் என்னிடம் பரத கண்டத்தின் 56 தேசங்கள் கொண்ட பட்டியல் ஒன்றைத் தந்தார்கள். அத்தேசங்களைப் பற்றி எனக்கு விவரித்துச் சொன்னார்கள். அந்தப் பட்டியலில் உள்ள தேசங்களையும், திருச்சிராப்பள்ளிக்கருகில் உள்ள சீரங்கம் கோயிலுள்ள ஒரு படித்த பிராமணர் என்னிடம் தந்த வேறொரு பட்டியலில் கண்ட 56 தேசங்களின் பட்டியலையும் தந்துள்ளேன்; அந்த (சீரங்கம்) பிராமணருக்கு பிரயாண அனுபவங்கள் அதிகம் உள்ளதால் அவர் இதுகுறித்து அதிகம் தெரிந்து வைத்துள்ளார்...'

இவ்வாறு புக்கானன் குறிப்பிட்டுள்ளவற்றில் அரவக்குறிச்சி பிராமணர்கள் தந்த பட்டியலிலுள்ள தேசங்களின் பெயர்கள் :

1) அங்கம்
2) வங்கம்
3) கலிங்கம்
4) காம்போஜம்
5) காமரூபம் (அஸ்ஸாம்)
6) சௌவீரா
7) சௌராஷ்டிரம்
8) மகாராஷ்டிரம்
9) மகதம்
10) மாளவம்
11) நேபாளம்
12) கேரளா (மலபார்)
13) சேரர் * (சேலம், கோயம்புத்தூர்)
14) சோழர் (தஞ்சாவூர்)
15) பாண்டியர் (மதுரை, திருநெல்வேலி)
16) பாஞ்சாலம்
17) வங்காளம்
18) கௌரவர்
19) மலையாளர் (மலையாளம்)
20) சிங்களம்
21) திராவிடம் (ஆர்க்காடு, மதராஸ்)
22) கர்நாடகம் (மைசூர், சீரா, கோலார்)
23) இலாடம்
24) மராட்டா
25) நட (Nata)
26) புளிண்டம் (Pulinda)
27) ஆந்திரம் (நெல்லூர் மற்றும் மதராஸிற்கு வடக்கிலுள்ள பகுதிகள்)
28) ஹூனர்
29) தசார் நாடு
30) போஜய் (விஜய நகரம்)
31) குரு (டெல்லி)

* இது கொங்குநாடு என்றாகிறது. பார்க்க: அத்தியாயம்-6.

32) காந்தாரம்
33) விதர்பா
34) விதேஹா
35) பாணலேகா (Banleka)
36) பார்பரம் (Barbara)
37) கேகயா
38) கோசலம் (அவுத்)
39) கந்தா (Kanta)
40) கிராடா
41) கூர்ஜரம் (குஜராத்)
42) இந்து
43) தென்கணம்
44) கங்கணா
45) வங்கணா
46) மத்சயா
47) மதுரா
48) சாலுவா
49) சேடி (Chedi)
50) சிந்து (இரான்)
51) அவந்தி (காசி)
52) முத்தாய் (Mudday)
53) யவனம்(மெக்கா)
54) சீனம்
55) கருக்ஷாய் (Karushay)
56) திரிகர்த்தா (அராபியாவின் ஒரு பகுதி)

*அடைப்புக்குறிக்குள் கண்டுள்ளவையும் புக்கானன் தந்துள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 56 தேசங்களும் கொண்ட பரத கண்டத்தைப் பற்றித் தான் அறிந்துள்ளவாறு எழுதுகிறார்:*

*‘பரத கண்டம் என்பது கடல் நீரால் சூழப்பட்டுள்ளது. அதில் மிகவும் பிரசித்தமான ஆறு பாகீரதி- கங்கை நதியின் வேறொரு பெயர். அந்த ஆற்றின் கங்கோத்திரியிலிருந்து சாகரம் (Sagara) வரையுள்ள பகுதி புனிதமானது; அந்தப் பகுதி தான் கங்கை அல்லது பாகீரதி எனப்படுகிறது. ஐரோப்பியர்*

களால் ஹுக்ளி என்று கூறப்படும் ஆறு உண்மையான கங்கை. ஹூக்ளியின் கிழக்குப் பகுதியில் வந்து கூடும் ஆறு பிரம்ம புத்திரா. இந்துக்கள் அதை பத்மாவதி என்று அழைக்கிறார்கள்; அது கங்கை அளவிற்குப் புனிதமானதாகக் கருதப்படுவ தில்லை. கங்கோத்திரியிலிருந்து சாகரம் வரையுள்ள பகுதியில் உள்ள ஐந்து தீர்த்தங்கள் மற்றவற்றைவிட மிகவும் புனித மானவை. அத்தீர்த்தங்களுக்கு தொலைதூரத்திலிருந்து யாத்திரி கர்கள் வருகிறார்கள்; தங்கள் உடல்களைச் சுத்தப்படுத்திக் கொள்ளவும், மதச் சடங்குகளில் பயன்படுத்த அங்குள்ள நீரை எடுத்துச் செல்லவும் வருகிறார்கள்.

'அந்தத் தீர்த்தங்கள் : கங்கோத்திரி, ஹரித்துவார், பிரயாகை (முஸ்லிம்களால் இலகாபாத் என்றழைக்கப் படுகிறது), உத்தரஜனகிரி மற்றும் சாகர் (Sagar) - சாகரின் முகத்துவாரத்தில் உள்ள பகுதி ஹூக்ளி ஆறு. இந்தத் தீர்த்தங்களுக்கெல்லாம் சென்று வந்துள்ள நாராயண சாஸ்திரி என்பவர் சொல்கிறார்: கங்கோத்திரியில் பனிக்கட்டி மலை போன்றதன் உச்சியிலிருந்து மூன்று ஓடைகள் விழுந்து ஓடுகின்றன. அவை ஓரிடத்தில் ஒன்றாகச் சேருகின்றன; அந்த இடம்தான் கங்கையின் உற்பத்தி இடமாகும்; அந்த இடத்திற்கு ஆட்கள் சென்று பார்க்கலாம்; அந்த இடம் ஹரித்துவாரி லிருந்து வடக்கு- மேற்குத் திசைகளில் இருபது நாள்கள் பயண தூரத்தில் உள்ளது... பிரயாகைதான் மிகவும் உன்னதமான தீர்த்தத் தலம்; காசி மிகவும் புனிதமான சேத்திரம் அல்லது சேவிக்கும் தலமாகும்...

'அரவக்குறிச்சிப் பகுதியில் சில முஸ்லிம் விவசாயக் குடும்பங்கள் உள்ளன. முன்பு அவர்கள் 'கண்டசாரா' சிப்பாய்களாக இருந்தனர். அவர்களுக்கு சம்பளத்திற்குப் பதிலாக வரியில்லாமல் நிலங்கள் ஒதுக்கப்பட்டன. கர்னல் லேங்க் இப்பகுதியைப் பிடித்த பிறகு, திப்பு சுல்தான் கண்டசாரா படையை நீக்கிவிட்டார். சிப்பாய்களாக இருந்த அந்த ஆட்கள் இப்போதும் அந்த நிலங்களை வைத்துள்ளார்கள் - மற்ற விவசாயிகள் போல் நிலவரி செலுத்துகிறார்கள்...'

*(கி.பி.1891இல் அரவக்குறிச்சியின் மக்கள் தொகை 4514, அவர்களில் இந்துக்கள் 3181 பேர்கள், முஸ்லிம்கள் 1179, கிறித்துவர்கள் 154).*

இவ்வாறு அரவக்குறிச்சிப் பகுதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள புக்கானன் அடுத்த நாள் மூலனூருக்குக் கிளம்பினார்.

(14)

# தாராபுரம் பகுதியில்...

'பத்து மலபார் மணிநேரத் தூரம் கடந்து **மூலனூருக்குச்** சென்றேன். இப்பகுதி நிலங்களில் வேலிகள் போடப் பட்டிருக்கின்றன; முன்தினம் வந்த வழியில் கண்டதை விடப் பாறைகள் குறைவு; ஆனாலும் சாகுபடியான நிலங்கள் குறைவுதான். வழியில் ஒரு இடத்தில் இரும்பு உலைக்களம் ஒன்றைக் கண்டேன் - மேஜர் மாக்ளியாட்டின் மாவட்டத்தில் (சென்னிமலை) பார்த்ததைப் போன்ற அமைப்பில் கருப்பு மணலிலிருந்து இரும்பு உருக்கப்படுகிறது. மூலனூரில் ஒரு சந்தை உள்ளது என்று அரவக்குறிச்சியில் என்னிடம் கூறினார்கள். ஆனால் இங்கு வந்த பிறகுதான் தெரிந்தது - ஒரு ராணுவ படையெடுப்பால் அந்த இடம் அழிக்கப்பட்டு விட்டது; பெரும்பாலும் கர்னல் ஃபுல்லார்ட்டனின் (Fullerton) படை செய்ததாக இருக்கும்; ஆனால் அது மீண்டும் உருவாக்கப்படவில்லை. மிச்சம் தென்படுபவை ஒரு கோயிலும் அதைச் சார்ந்த பிராமணர், நாட்டியப் பெண்கள், இசைக் கலைஞர் போன்றோரும்...

'பக்கத்து ஊர்ப் பகுதிகளில் மரம், செடிகள் வளர்ந்து அழகாகத் தென்படுகின்றன. நொய்யலின் தெற்குப் பகுதியில் சுண்ணாம்புக்கல் படிமங்கள், வடக்குப் பகுதியில் உள்ளதை விடக் குறைவில்லாமல் உள்ளன; சில இடங்களில் தொடர்ச்சி யாக அப்படிமங்கள் அமைந்துள்ளன... மூலனூரின் மேற்குப் பகுதியில் அப்படிமங்கள் திராட்சைக் கொத்துகள் போன்ற அமைப்பில் தென்படுகின்றன...

'கடந்த சில நாள்களாக வானிலை இதமாக மாறியுள்ளது. பகலிலும் மாலையிலும் வெயிலாக இருந்தாலும், கடுமையாக இல்லை. காலை நேரம் ரம்மியமாக உள்ளது.' என்று மூலனூர்ப் பகுதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள புக்கானன், மறு நாள் (நவம்பர், 17) நீண்ட பயணத்திற்குப் பிறகு தாராபுரத்திற்குச் சென்றார். அவ்வூருக்கருகில் இருந்த இரண்டு அருமையான வாய்க்கால்களைப் பற்றிக் கூறுகிறார். அவை நன்செய் நிலங்களுக்கு நீரைத் தந்ததையும், அதனால் நெற்பயிர் சாகுபடி நன்றாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். வழக்கம் போல, அங்குள்ள புன்செய் நிலங்களின் மண்வளம் சுமார்தான் என்றும் கூறியுள்ளார். அவற்றில் மிகக் குறைவான அளவு நிலங்களில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டிருந்ததாம். மேற்கொண்டு அவர் குறிப்பிடுவதை அவர் வாயால் கேட்போமே!

**தாராபுரம் — ஊர்**

'தாராபுரத்தில் ஒரு பெரிய மண் கோட்டை உள்ளது. அக்கோட்டைத் தலைவன், கர்னல் புல்லார்ட்டனின் படையெடுப்பின் போது (1783) சரணடைந்தானாம். ஆனால் அதற்கு முன் பெயரளவில் எதிர்ப்பைக் காட்ட முற்பட்ட அவன் கோட்டை வீரர்களில் சிலரை அகழியில் பதுங்கியவாறு கோட்டை வாயில் பக்கம் நிறுத்தினான். எதிரிப் படையின் பீரங்கிக் குண்டுகள் அவர்கள் தலைகளின் மேற்புறமாகச் சென்று கோட்டைமீது விழுந்தன. கோட்டை வாயில் திறக்கப்பட்டதும் குண்டு வீச்சு நின்றது. கம்பெனிப் படையினர் சாவகாசமாகக் கோட்டையினுள் புகுந்தனர் - இருதரப்பிலும் யாருக்கும் சேதம் இல்லை.*

---

* ஐதர் அலியின் மரணத்திற்குப் பின், திப்பு சுல்தான் – ஆங்கிலேயரிடையே நிகழ்ந்த இரண்டாம் மைசூர்ப் போர்க் காலத்தில், 1783 ஏப்ரல் மாதத்தில் கர்னல் ஃபுல்லார்ட்டன் (Fullerton), கர்னல் லேங்க் (Laing) இப்பகுதிகளில் தத்தம் படைப் பிரிவுகளுக்குத் தலைமை ஏற்று போர் புரிந்தனர். கர்னல் லேங்க் கரூர், அரவக்குறிச்சி மற்றும் திண்டுக்கல் கோட்டைகளைப் பிடித்தார். அதற்குப் பிறகு புல்லார்ட்டன் தாராபுரத்தைப் பிடித்தார். ஆனால், திப்பு – ஆங்கிலேயரிடையே மார்ச் 1784இல் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி இந்த நான்கு கோட்டைகளும் திப்புவிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

'அதற்கு முன்னர் இந்த நகரம் மிகப் பெரிதாயிருந்தது. ஆனால் இப்போதுதான் அழிவிலிருந்து மீண்டும் புணரமைப்புப் பெறுகிறது. மிஸ்டர் ஹுர்டிஸ் தெற்குக் கோயம் புத்தூரின் தலைமையிடமாக இவ்வூரை அமைத்துள்ளார். ஆகவே இந்த வளர்ச்சி விரைவில் கூடும். இங்குப் புதிய நகரம் ஒன்றை உருவாக்கிட அவர் திட்டம் வைத்துள்ளார்; அதிலுள்ள தெருக்கள் நீண்டும் அகலமாகவும் இருக்கும்; புதிய வீடுகள் பல கட்டப்பட்டுள்ளன.* இருப்பினும், நல்ல விளைச்சல் உள்ள காலங்ளில் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை விற்கச் சாதகமான விற்பனைச் சூழல் இல்லை என்பது ஒரு குறைபாடு...

'அடுத்த இரண்டு நாட்களை திரு.ஹுர்டிஸுடன் கழித்தேன். அவர் புத்திசாலியானதொரு இளைஞர். சாதிப் பிரிவினர்களிடையே ஏற்படும் வழக்குகளையும் வலங்கை, இடங்கைப் பிரிவினரிடையேயான பூசல்களையும், மேஜர் மாக்ளியாட் தீர்வு காணும் வகையில் இவரும் செய்கிறார். இவ்விருவரின் மாவட்டங்களை நிர்வகிப்பதில் எதிர்ப்படும் சூழ்நிலைகள் ஒன்று போலவே இருக்கின்றன. அவர்கள் இருவரும் இருவேறு அரசுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் (மாக்ளியாட் ராணுவச் சேவைப் பிரிவைச் சார்ந்தவர்; ஹுர்டிஸ், நிர்வாகச் சேவைப் பிரிவைச் சார்ந்தவர்), அவர்களிடையே பொறாமை இருப்பது போல் தோன்றினாலும் மிகவும் சுமுகமாகவே பழகுகின்றனர். அவர்களிடையே வெளிப்படும் பனிப்போர் என்னவெனில், பணிபுரிவதில் யார் முன்னிலையில் உள்ளார் என்பதை வெளிப்படுத்தும் முனைப்புதான்!

'அவர்கள் இருவரும் ஒரே வித நிர்வாக ஒழுங்கைப் பின்பற்றுகின்றனர் - அவர்கள் கச்சேரியில் இருக்கும்போது வரும் விஷயங்களுக்கு முடிவு காணும் வரை உள்ளூர் அரசு அலுவலர்கள் (தாசில்தார், மணியம், கணக்குப்பிள்ளை போன்றோர்) அங்கிருந்து கிளம்பக் கூடாது என்று முனைப்பு கொள்வார்கள்.

---

* தன் குடியிருப்பிற்காகவும், ஹுர்டிஸ் தாராபுரத்தில் ஒரு வீட்டைக் கட்டினார்.

'இங்கு நிலவரி மிகவும் அதிகம் என திரு.ஹூர்டிஸ் நினைக்கிறார். இந்தியாவின் பிற பகுதியிலுள்ளவர்களைப் போல் இங்குள்ள விவசாயிகளும் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளனர். ஆனால் அந்த ஏழ்மைக்கு நிலவரி உயர்வுதான் காரணம் என்பதைவிட, பிற காரணங்கள்தான் அதிகம் என நான் நினைக்கிறேன். ஹூர்டிஸ் சொல்வதன்படி சாகுபடி செய்யப்படாத நிலங்கள் தரிசு என்று கருத முடியாது. மழை, கால்நடைகள் போதாமையாலும் விவசாயிகள் தங்களிடமுள்ள நிலங்கள் அனைத்திலும் சாகுபடி செய்ய முடிவதில்லை. நிலங்களின் தீர்வை அதிகம் என நான் கருதவில்லை. தங்களிடம் உள்ள கால்நடைகளின் உழைப்பிற்கு ஏற்ப நிலங்களைக் குத்தகைக்கு எடுத்திருந்தால் அவர்கள் நல்ல நிலையில் இருக்க முடியும். இந்தியாவில் விவசாயிகளின் ஏழ்மைக்கு ஒரு முக்கியக் காரணம் ஒரு விவசாயியால் சாகுபடி செய்ய முடியும் அளவைவிட அதிக நிலங்களை அவனிடம் குத்தகைக்கு ஒப்படைப்பதுதான்... ஆகவே எல்லா நிலங்களும் சாகுபடியாகும் நிலங்களே என்று கணக்குப்படி இருக்கும். ஆனால் பாதியளவு நிலங்களைத் தரிசாக விட்டு மீதியை மட்டும் விவசாயிகளிடம் ஒப்படைத்தால் அவர்களின் நிலைமை அவ்வளவு மோசமாக இருக்காது. இங்கிலாந்தில் உள்ள ஒரு புத்திசாலியான விவசாயி, இரண்டு ஏக்கரில் அரைகுறையாகச் சாகுபடி செய்தால் கிடைக்கும் லாபத்தைவிட மேம்பாடு செய்துள்ள ஒரு ஏக்கரில் சாகுபடி செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்று சொல்வான்...

'பாளையக்காரர்களின் ஆட்சிக்காலத்தில் விவசாயிகளிடம் அடக்கு முறை அதிகம் நிலவியதாக ஹூர்டிஸ் கருதுகிறார். அப்போது, விவசாயிகளைத் தகாத முறைகளில் நெருக்கி, அதிகம் கறப்பார்கள் - ஆனால் பெயரளவில் குறைந்த அளவுத் தீர்வை இருப்பதாகத் தோன்றும். ஹூர்டிஸ் சொல்வதன்படி, பாளையக்காரர்கள் என்பவர்கள் தங்கள் பகுதி மக்களை நிர்வகிக்கும் அதிகாரம் பெற்றவர்கள். ஒவ்வொரு பாளையக் காரரும் அவரது பகுதியைக் காத்திட குறிப்பிட்ட அளவு படை வீரர்களை வைத்திருப்பார். அப்பாளையக்காரர்கள்

ராஜாவிற்குக் கணக்குக் காட்ட வேண்டும். மொத்த வருவாய், அதிலிருந்து தங்களது செலவுகள், ராணுவ வீரர்களின் சம்பளம் போக மீதி வருவாயை ராஜாவிற்கு அளிக்க வேண்டும். கிராமங்களின் தலைவர் (மணியக்காரர்) மற்றும் கணக்குப் பிள்ளையின் உத்தியோகம் குடும்பப் பரம்பரையினருக்கு உரியது என திரு.ஹூர்டிஸ் கருதுகிறார்...' (இதில் மாக்ளியாட்டின் மாற்றுக் கருத்தைக் காண்க - அத்தி. 13)

இவ்வாறு தாராபுரம் பகுதியைப் பற்றிக் குறிப்பிட்டு வந்த புக்கானன் அங்கு நிலவிய வீரராயப் பணம்; சுல்தானி, பகதூரி மற்றும் இக்கேரி வராகன்/ பகோடா; ஸ்டார் பகோடா, பரங்கிப்பேட்டை பகோடா; சுல்தானி பணம் போன்ற தங்க நாணயங்களையும், பாண்டிச்சேரி அல்லது சுல்தானி ரூபாய் மற்றும் கம்பெனியில் மதராஸ் ரூபாய் ஆகிய வெள்ளி ரூபாய்களையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்த நாணயங்களில் வீரராயப் பணம் அதிகமாகப் புழக்கத்தில் இருந்தது. பிற நாணயங்களுக்கான வீரராயப் பண மாற்று விகிதங்களையும் தந்துள்ளார்.

● தாராபுரத்தில் நிலவிய நிறுத்தல் அளவை :

24 நட்சத்திரப் பகோடா = 1 பலம்
100 பலம் = 1 தோலம் அல்லது 17.82 ராத்தல் (பவுண்டு)

● விவசாயிகள் பயன்படுத்திய புன்செய் தானியங்களின் முகத்தல் அளவைகள்

| | |
|---|---|
| 72 கம்பெனி ரூபாய்களின் எடை | = 1 படி |
| 4 படி | = 1 வல்லம் |
| 16 வல்லம் | = 1 மொடா (அ) கண்டகம் |
| 6 மொடா | = 1 பொதி |

● கடைகளில் நிலவிய அரிசிக்கான அளவைகள் :

| | |
|---|---|
| 84 சுல்தானி ரூபாய் எடை | = 1 படி |
| 3 படி | = 1 வல்லம் |

| | |
|---|---|
| 40 வல்லம் | = 1 கண்டகம் |
| 30 கண்டகம் | = 1 மா |

● நன்செய் நிலங்களின் நீட்டலளவை :

| | |
|---|---|
| 24x24 அடிகள் | = 1 குழி |
| 220 குழிகள் | = 1 மா அல்லது 2.8965 ஏக்கர் |

நன்செய் நிலங்கள் அங்கே எல்லா வகை சாதியினருக்கும் (அரசால்) குத்தகைக்கு விடப்பட்டன. [இந்த விஷயத்தில் தாராபுரத்தில் ஒரு மாற்றம் தென்படுகிறது]. முதல் தர ஒரு 'மா' நிலத்திற்கு ஆண்டிற்கு 160 பணம் அளவு குத்தகை கிடைத்தது. அது போல இரண்டாம் தரம், மூன்றாம் தரம், நான்காம் தரம் நிலங்கள் முறையே 140, 136, 118 பணங்கள் தந்தன. நெல் விளையும் நிலத்தில் வெற்றிலை பயிரிட்டால், ஒரு ஏக்கருக்கு 360 பணங்கள் கிடைக்கும். கரும்பு பயிரிட்டால் நெல் அளவுக்குத்தான் குத்தகை கிடைக்கும். இருப்பினும் கரும்பு அதிகம் பயிராகவில்லை. மற்ற பகுதிகளில் கரும்பு அதிகம் பயிரானது; தீர்வையும் அதிகம்.

மூன்று வகையான நெற் பயிர்கள் நாற்று மூலம் நடவு செய்யப்பட்டன. அவை ஆறு மாதப் பயிர்கள்; ஆண்டில் ஒரு போகம் மட்டும் சாகுபடியானது. கார் குறுவை என்ற நெல் கை விதைப்பு (முளை விதை) மூலம் பயிரானது; மூன்று மாதப் பயிர். அதைப் பயிரிட்டால், அதில் ஒரு போகமும், கேழ்வரகில் ஒரு போகமும் ஒரு ஆண்டில் எடுக்கப்பட்டன. விவசாயி களையும் வியாபாரிகளையும் கூட்டி வைத்து இவ்வாறான தகவல்களைச் சேகரித்து, நெல்லின் தரம், விளைச்சல் அளவு, அவற்றின் மதிப்பு போன்ற விவரங்களைத் தந்துள்ளார் புக்கானன். ஆனால் இங்கு விவசாயிகள் தெரிவிக்கும் விளைச்சல் குறைவாக உள்ளது; குறிப்பாக அரசின் தீர்வையைச் செலுத்தி விதை நெல்லுக்கானதைக் கழித்தால் மிஞ்சுவது கொஞ்சம்தான் என்று கணக்குச் சொல்லுகிறார்கள் என்கிறார். நல்லராயன் பாளையத்தில் (பவானி அருகில்) உள்ளதைவிட

இங்குத் தீர்வை மிகவும் குறைவு; இருப்பினும் விளைச்சலை விவசாயிகள் சரியாகச் சொல்வதில்லை; நல்லராயன் பாளையம் விவசாயிகள் கூடுதலான தீர்வையைச் செலுத்திய பின்னும், மிஞ்சும் தானியம் அதிகம் இருப்பதையும் கணிசமாக லாபம் தேறுவதையும் ஒத்துக் கொள்கிறார்கள்... ஆகவே தாராபுரத்தி லுள்ளவர்கள் சொல்வதை ஒரு பயணியான தான் கணக்குப் போட்டுப் பார்த்துத் தரும் விவரங்களில் அநேகத் தவறுகளைக் காண முடியும். குறைந்தது பத்து ஆண்டுகளாவது தங்கி ஒவ்வொரு பயிரின் விளைச்சல், செலவு போன்றவற்றைக் கணித்தால்தான் விளைச்சலைச் சரியாகக் கூற முடியும் என்றும் எழுதுகிறார் புக்கானன்.

தோட்டப் பயிர்கள் கபிளை மூலமும் ஏற்றம் மூலமும் நீர்ப் பாசனம் செய்யப்பட்டன என்று கூறும் அவர் மேலும் பல புதிய தகவல்களைத் தாராபுரத்திலிருந்து தந்துள்ளார். விவரம் :

ஆழத்திலிருந்து தண்ணீர் கிடைப்பதாயிருந்தால் கபிளை மூலம் நீர் இறைக்கப்பட்டது. ஒரு கபிளை மூலம் ஒரு வல்லம் நிலத்திற்கு நீர் பாய்ச்சலாமாம். தண்ணீர் சிறிது ஆழத்தில் கிடைத்தால் ஏற்றம் மூலம் இறைக்கப்பட்டது. நான்கு ஆட்கள் ஏற்றத்தின் பலகையில் நடந்து இறைப்பார்கள். ஒரு வல்லம் நிலத்திற்கு (4¼ ஏக்கர்) நீர் பாய்ச்ச ஒன்று அல்லது இரண்டு ஏற்றம் தேவைப்படும்; அது நீர் செல்லும் தூரத்தைப் பொருத்திருக்கும். ஆனால் இரண்டு ஏற்றங்களில் பத்து ஆட்களை அமர்த்தி நீர் பாய்ச்சினால், ஒரு கபிளை ஏற்றத்தில் ஒரு ஆள், இரண்டு மாடுகளுக்கு ஆகும் செலவைவிடக் குறைவாகவே இருக்கும். ஏற்றத்திற்கான ஆட்கள் தோட்டத்தில் பிற வேலைகளையும் செய்வர் என்பதைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

முக்கியப் பயிர்கள் புகையிலை, சோளம், கம்பு, ராகி மற்றும் பருத்தி. வசதியான விவசாயிகள் வாராந்திரச் சந்தைகளுக்குச் சென்று அறுவடையான தானியங்களை விற்பார்கள். குத்தகைத் தீர்வையைச் செலுத்தக் கைவசம் பணம் இல்லாத ஏழை விவசாயிகள் விளைச்சலை மொத்த

வியாபாரிகளுக்கு விற்பார்கள்; பொதுவாக அதில் அவர்களுக்கு இருபது சதவீதம் அளவிற்கு நட்டம் ஏற்படுமாம்.

விவசாய வேலையாட்கள் ஆண்டின் துவக்கத்திலேயே அடுத்த 12 மாதங்களுக்கு வேலை செய்யப் பணிக்கப் படுவார்கள். ஆண்டு முடிவிற்குப் பின் அவர்கள் வேறிடத்தில் சேர்ந்து கொள்ளலாம். ஆனால் முதலாளிக்குக் கடன் பாக்கி இருந்தால் அது இயலாது. பொதுவாக கலியாணம் மற்றும் பிற காரியங்களுக்காக அவர்கள் முன்பணம் பெறுவதால் அவர்களால் சுலபமாகப் பிற பண்ணையத்தில் சேர இயலாது. அவர்களின் ஊதியம் : மாதத்திற்கு இருபது வல்லம் மொத்த ரக நெல். மேலும் ஆண்டிற்கு நாலு பணம் மற்றும் ஒரு கண்டகம் மொத்த ரக அரிசியும் தரப்படும். கூடவே வீட்டு வாடகையும் தரப்படும். இந்த வேலையாட்களுக்கு சாதாரணமாக ஒரு மனைவி இருப்பாள். அவள் விதைப்பு சமயத்திலும் அறுவடை நேரத்திலும் அந்த முதலாளிக்காக தினக்கூலி அடிப்படையில் வேலை செய்வாள். ஒரு பெண்ணின் தினக்கூலியாக நான்கு படி தானியம் தரப்படும். ஒரு ஆளின் கூலி ஆறு படி தானியம். அந்த ஊழியத்தில் ஒரு வேலையாள் மாதத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை சிறிதளவு அசைவ உணவு சாப்பிட முடியும். பால் விலை அதிகம். வேலையாளின் சாதாரண சாப்பாடு பொங்கிய தானியம் ஆகும். அத்துடன் சிறிது உப்பு, கீரை/ மிளகாய்/ மிளகு மற்றும் சிறிது ஊறுகாய் சேர்த்துக் கொள்கிறான். கஞ்சியைக் குடித்துக் கொள்வான். அவனுடைய உடை மிகவும் குறைவு; அதுவும் அழுக்காகவே இருக்கும். அவனுடைய வீடு ஒரு சிறிய மண் குடிசை. புழு, பூச்சிகளால் உண்டாகும் நோயும் தோல் வியாதியும் சாதாரணமாக ஏற்படு கிறது. பெண்கள் உடல் முழுவதும் துணி அணிந்திருந்தாலும் அழுக்காகத் தோன்றுவார்கள்.

கோயம்புத்தூர்ப் பிராந்தியத்தின் நிலங்களில் ஹைட்ரோ குளோரிக் உப்பும், நைட்ரேட்டும் கலந்துள்ளன. அவற்றி லிருந்து சமையல் உப்பும் வெடியுப்பும் தயாரிக்கப்பட்டன. திப்புவின் காலத்தில் வெடியுப்பு காய்ச்சுபவர்கள் அரசிட

மிருந்து முன்பணம் பெற்று, நிலத்திலிருந்து வெடியுப்பு தயாரிப்பார்கள். அது இரு முறை காய்ச்சப்பட்டு அரசாங்கத்திற்கு ஒரு வல்லத்தை (நாலு படி) ஒரு வீரராயப் பணம் விலைக்குத் தருவார்கள். இங்கு நிலத்தில் இயற்கையாகவே வெடியுப்பு கலந்துள்ளது. 'பொட்டாஷ்' கலக்காமலே வெடியுப்பைத் தயாரிக்கின்றனர். அது வெயில் காலத்தில் மட்டும் கிடைப்பதால் புக்கானனால் அந்தச் செய்முறையைப் பார்க்க முடியவில்லை. அருகில் அவ்வுப்பு சேகரிக்கப்படும் இரண்டு இடங்களை அவர் பார்த்தார். அவ்விரண்டு இடங்களிலும் மணற்பரப்பாக நிலம் இருந்தது. அந்த நிலத்தில் மனிதர்கள், கால் நடைகளின் நடமாட்டம் தாராளமாக இருந்தது. ஜனவரி 10 முதல் பிப்ரவரி 10 வரை உப்பு கலந்த மண்ணைச் சுரண்டி எடுத்து, உப்பைப் பிரித்து, கொதிக்க வைத்து இரண்டு முறை சுத்திகரிக்கிறார்கள்...

இவ்வாறான தகவல்களுடன் தாராபுரத்தில் தனது பணியை முடித்துக் கொண்டு பொன்னாபுரத்திற்கு நவம்பர் 21ஆம் தேதி கிளம்பினார் புக்கானன்.

### பொன்னாபுரம்

'சுமார் பதினோறு மைல் தூரம் கடந்து பொன்னா புரத்திற்குச் சென்றேன். வழியில் பார்த்தவரை சாகுபடி செய்துள்ள நிலங்கள் குறைவுதான். ஆனால் மற்ற இடங்கள் உழப்பட்டிருந்தன. மரங்களும் வேலிகளும் இல்லாமல் நிலம் வெறுமையான இருந்தது. மண் வளம் குறைவு. சுண்ணாம்புக் கல் கலந்த காடுகள் அநேகம் காணப்பட்டன. பிற இடங்களில் பார்த்ததைவிட பொன்னாபுரத்தின் நிலப்படுகை கெட்டியாக உள்ளது. அந்த நிலங்களில் பல கிணறுகள் 12 அடிகள் முதல் 15 அடிகள் ஆழம் வரையில் வெட்டப்பட்டிருந்தன. பயணிகள் அவற்றை நன்கு பார்வையிட முடியும். சுண்ணாம்புப் படிமங்கள் மெதுவாக, பல ஆண்டுக்காலமாகச் சேர்த்து நீள வாக்கில் படிந்துள்ளன. அந்த நிலம் மிருதுவாக இருந்த காலம் தொட்டு, சுண்ணாம்புப் படிமங்களிடையே படிகம் (Quarts) மற்றும் இதர கற்கள் ஊடுருவிப் படர்ந்துள்ளன. அக்கற்கள்,

அப்படிமங்களின் மேல் திராட்சைக் கொத்து வடிவில் இறுகியுள்ளன.

‘பொன்னாபுரத்தில் ஒரு சிறிய கோட்டை உள்ளது. அதன் தலைவன் ஒரு சிறுவன். அவனுடைய பாட்டி அவனை என்னிடம் அழைத்து வந்தாள். கூட அவனுடைய உறவுக்கார ஆட்களும் வந்தனர். அவர்களெல்லாம் இந்த இடத்தின் முதன்மை விவசாயிகள். இப்பருவத்தில் இங்கு மழை மிகவும் குறைவு. அதனால்தான் இப்பகுதி நிலங்கள் தரிசாக உள்ளன போலும். ஆனால் பக்கத்துப் பகுதிகளிலுள்ள பாளையக்காரர் களால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள். குறிப்பாக மூன்று ஆண்டுகட்கு முன்பு (1797) ஏற்பட்ட கலவரத்தின்போது பாதிக்கப்பட்டதாகச் சொல் கிறார்கள்...’ என்று பொன்னாபுரத்தில் ஒரு நாளில் தான் கண்டு, கேட்டதைப் பதிவு செய்துள்ளார் புக்கானன்.

**மங்கலம்**

அன்றே 7½ மலபார் மணி நேரத்தூரம் சென்று, ஒரு பாளையக்காரருக்குச் சொந்தமான மங்கலம் (குடிமங்கலம்) என்ற ஊரை அடைந்தார். அது திறந்தவெளிக் கிராமம். சென்ற வழியில் இருந்த நிலங்களில் அதிகமாகக் கல், பாறைகள் தென்படவில்லை. ஆனால் அதிக நிலங்களில் சாகுபடியும் செய்யப்படவில்லை. அவ்வூரில் நாற்பது வீடுகள் மட்டும் இருந்தன. முன்பு நூறு வீடுகள் இருந்தனவாம். அதற்குக் காரணம் திப்பு சுல்தானின் அடக்கு முறையும் மழை யின்மையும் என்கிறார். அதனால் பல விவசாயிகள் வேறு ஊர்களுக்குச் சென்றுவிட்டனராம். அந்தப் பாளையக்காரன் (வேறெங்கும் அவர் கண்டிராத வகையில்) மிகவும் முட்டாள் போலத் தெரிந்தானாம்; பெரிய அளவில் துணையின்றி அவன் அங்கும், இங்கும் சென்று வந்தானாம்.

சுண்ணாம்புப் படிமம் படிந்திருந்த அந்த நிலங்களில் வெட்டப்பட்டிருந்த கிணறுகளில் தண்ணீர் கொஞ்ச ஆழத்திலேயே தென்பட்டது. இருப்பினும் தோட்டங்கள்

அதிக அளவில் தென்படவில்லை. கிணற்று நீரில் உப்புச் சுவை அதிகம். அக்கம் பக்கத்தில் மழையில்லாக் காலங்களில் நிலத்தைச் சுரண்டி, காய்ச்சி, உப்புப் படிமத்தைத் தனியே பிரித்து, சமையல் உப்பைத் தயாரிக்கிறார்கள்...

**பூசாரிப்பட்டி**

மங்கலத்தில் ஒரு நாள் தங்கியபின், ஏழு மலபார் மணி நேரத் தூரம் சென்று பூசாரிப்பட்டி கிராமத்திற்குச் சென்றார். அங்குச் சில கடைகள் இருந்தன. அவ்விடத்திலும் சுற்றுப் புறங்களிலும் நிலங்கள் வேலி போட்டுத் தடுக்கப்பட்டிருந்தன. அவை திருடர்கள், கொள்ளையர்களிடமிருந்து பாதுகாப்பிற் காகவும் அமைந்திருந்தனவாம். அநேகக் கள்வர்கள் ஆடு, மாடு களைக் கவர்ந்து செல்வார்கள். அருகில் பாளையக்காரர்கள் இருந்ததனால் கள்வர்களின் எண்ணிக்கையும் கூடுதலாக இருந்தன. (பாளையங்களின் ஆட்களையும் சமாளிக்க!) பூசாரிப்பட்டி அரசாங்கத்திற்குச் சேர்ந்தது. ஆனால் சுற்றிலும் பாளையக்காரர்கள் இருந்தனர்.

புக்கானன் அன்று கடந்து சென்ற சாலையில் பார்த்து வந்த பகுதிகள் தாராபுரத்திற்கு மேற்காக இருந்தவற்றைப் போலவே தென்பட்டனவாம். ஆனால் சில இடங்களில் மண் நன்றாக இருந்தனவாம்; சில இடங்களில் மிகவும் நன்றாக இருந்தன வாம். [புக்கானன் அதுவரை கடந்து வந்த பகுதிகளில் இங்குதான் தண்ணீர் பாயாத நிலங்களின் மண் நன்றாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார்!] கோயம்புத்தூரின் மலைகளும் ஆனைமலைகளின் தெற்குப்புறக் கணவாயைச் சூழ்ந்த மலைகளும் பூசாரிப்பட்டியிலிருந்து தென்பட்டன எனக் குறிப்பிட்டுள்ளார், புக்கானன்.

அடுத்ததாக அவர் சென்ற ஊர் பொள்ளாச்சி. Palachy எனக் குறிப்பிடுகிறார்!

## 15

# பொள்ளாச்சியில்...

'பூசாரிப்பட்டிலிருந்து ஆறு மலபார் மணிநேரத் தூரம் பயனித்து பொள்ளாச்சிக்குச் சென்றேன். அவ்வூரை நெருங்கி வந்தபோது சாகுபடி செய்திருந்த நிலங்கள் தென்படத் துவங்கின. நிலங்களில் நன்றாக வேலிகள் போடப்பட்டிருந்தன. வெளிப் பகுதிகள் பார்க்க அழகாகத் தோன்றின; தென்னந் தோப்புகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன; ஆனால் வேறு மரங்கள் தென்படவில்லை. இந்நகரில் 300 சுமாரான வீடுகள் உள்ளன. ஒரு சிறு கோயில் உள்ளது. இவ்வூரின் பெயர் ஒரு வேளாளரின் இரண்டாம் மனைவியின் காரணமாய் அழைக்கப்படுகிறது.* அந்த வேளாளர் இந்த ஊருக்கு வந்த சமயத்தில இப்பகுதி முழுவதும் வனமாக இருந்தது. அந்த இடத்தைச் சுத்தம் செய்து, அந்த ஆள் 'கொத்துக்காடு' வகையில் (பார்க்க: அத்தி. 6) சாகுபடி செய்ய ஆரம்பித்தான்... இந்த நகரம் வேகமாக வளர்ந்து வருகிறது; முக்கியத்துவம் பெற ஆரம்பித்துள்ளது; இப்போது தாசில்தாரின் தலைமையிட மாகியுள்ளது. பாலக்காட்டிற்குச் செல்ல அமைக்கப்பட்டு வரும் புதிய சாலையில் இவ்வூர் வருகிறது. அருகில் ஒரு சிறு கோட்டை உள்ளது...' என்று பொள்ளாச்சியைப் பற்றிக் குறிப்பிட்டு வருகிறார் புக்கானன்.

---

* ஆனால் பிற்காலத்திய நூல்கள் வேறு காரணப் பெயர்களைத் தருகின்றன. ஒன்று, பொருள்+ ஆட்சி = பொருளைக் கொண்டிருப்பவர் என்ற பொருளில் பெயர் வந்துள்ளது. மற்றொன்று, புள் + ஆட்சி = வனமாக இருந்த காலத்தில் பறவைகளின் ஆட்சி நிலவிய இடம்.

**ரோமானியக் காசுகள்**

'சமீபத்தில் இவ்வூருக்கருகில் நிறைய ரோமானிய வெள்ளி நாணயங்கள் கொண்ட ஒரு பானை தோண்டி எடுக்கப் பட்டது; அந்த நாணயங்களில் ஆறு காசுகளை திரு.ஹூர்டிஸ் எனக்குத் தந்தார். அவை இரண்டு வகையானவை. ஆனால் அவை அனைத்தும் ஒரே மதிப்புடையவை- ஒவ்வொன்றும் 56 தானியங்கள் எடையுள்ளது...' எனக் குறிப்பிட்டு வரும் புக்கானன் அந்த நாணயங்களின் முன் பக்கங்களில் இருந்த படம், பெயர்களை விவரிக்கிறார். ஒரு காசு அகஸ்தஸ் சீசர் (Caesar Augustus) உருவம் கொண்டது; அதன் பின்புறத்தில் இருவர் கேடயங்களைப் பிடித்தவாறு இருந்தனர் - இருவருக்கு மிடையே இரு ஈட்டிகள் இருந்தன. மற்றொரு நாணயத்தில் டைப்ரிஸ் (Tiberius Caesar) உருவம் பொரிக்கப்பட்டு அவர் கழுத்தைச் சுற்றி பெயர் எழுதப்பட்டிருந்தது. அதன் பின் பக்கத்தில் ஒரு ஆள் உட்கார்ந்து ஈட்டியை ஒரு கையில் பிடித்தவாறும், மறுகையில் மரத்தின் (*Pontifex Maximus*) ஒரு கிளையும் பொறிக்கப்பட்டிருந்தன.

**நில வருவாயும் விவசாய நிலையும்**

'இந்தத் தாலுகாவின் கணக்குகளைத் தாசில்தார் காட்டினார். அவை மைசூர் ராஜா சிக்கதேவராயர் (1673-1704) செய்த நில அளவையின்படியும் அவர் நிர்ணயித்த தீர்வையின்படியும் இருந்தன. தரிசு நிலங்கள் மிகக் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. ஆனால் வழிப்போக்கர் ஒருவரின் கண்களுக்குப் பொள்ளாச்சியைத் தொட்டடுத்த நிலங்களை விடுத்து மற்றப் பகுதி நிலங்கள் அனைத்தும் தரிசாகவே தெரியும்; இருந்தும் தாசில்தாரின் கணக்குகள், விளை நிலங்கள் அனைத்தும் தீர்வைக்குட்பட்டிருப்பதாகக் காட்டுகின்றன... [இது ஒரு வித்தியாசமான நிலை!]

'இங்கு நிலங்களைக் குத்தகைக்கு விடும் விதம் வியக்கத்தக்கது. உதவாத நிலம் மேய்ச்சலுக்கென்று பொதுவாக ஒதுக்கப்படுகிறது - அதற்குக் குத்தகை இல்லை. ஆனால் அதன் சரியான பரப்பளவு தாசில்தார் காட்டும் கணக்கைவிட மிக

அதிகமாயிருக்கும். ஏனெனில், சாகுபடி செய்யாத நிலங்கள் மிக அதிகமாகத் தென்படுவதை எங்கும் காணலாம். ஒவ்வொரு கிராமத்திலும் மீதியுள்ள நிலங்கள் விளை நிலங்களாகக் கருதப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகிறது. சில கிராமங்களில் ஒரு வல்லம் நிலத்திற்கு (சுமார் 4¼ ஏக்கர்) இருபது பணம் தீர்வை. பிற கிராமங்களில் ஒரு வல்லம் நிலத்திற்கு 50 பணம் வரை நிர்ணயிக்கப்படுகிறது... இவ்வாறு ஒரு கிராமத்தின் எல்லா நிலங்களையும் சேர்த்து சராசரி (குத்தகை) மதிப்பீடு நிர்ண யிக்கப்படுகிறது. பின்னர் விளை நிலங்கள் மண்ணின் தன்மையைப் பொருத்து மூன்று தரங்களாகப் பிரிக்கப்படு கின்றன; பிறகு அங்குள்ள விவசாயிகளையும் கூட்டி வைத்து அவர்களுக்குள் பிரிக்கப்படுகிறது - அந்தச் சந்திப்பில் வருவாய்த்துறை அலுவலர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. காரணம் - அவர்களின் தலையீட்டால் யாருக்கும் சாதக-பாதகம் விளையக் கூடாது என்பதற்காக.

'ஆனால் விவசாயிகளுக்கு மனக்குறை ஏற்படுகிறது. அவர்களிடம் உள்ள கால்நடைகளின் துணையுடன் விவசாயம் செய்ய இயலும் அளவைவிட அதிக நிலங்கள் திணிக்கப் படுகின்றன. உதாரணமாக, 17 வல்லம் நிலங்கள் ஒதுக்கப்படும் ஒருவரிடம் உள்ள கலப்பை, மாடுகள் மூலம் ஒன்பது வல்லம் நிலங்களில் மட்டும் சாகுபடி செய்ய முடியும். அந்த ஆளிடம் முழு அளவு கால்நடைகள் இருந்தாலும் அவரால் 11 அல்லது 12 வல்லம் நிலங்களை மட்டும் கவனித்துக் கொள்ள முடியும். மீதி நிலங்கள் சும்மா கிடக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் குத்தகைத் தொகை குறைக்கப்படுகிறது. சில கிராமங்களில் ஐந்தில் ஒரு பாகம்; பிற கிராமங்களில் மூன்றில் ஒரு பாகம் குறைக்கப்பட்டுள்ளது. ஒதுக்கிய நிலங்கள் முழுவதையும் பயிர் செய்ய முடியாத விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டத்தைக் கருத்தில் கொண்டு இந்தக் குறைப்பு - இம்மாதிரியான குத்தகை முறை கெடுதலை விளைவிக்கும்; குறைந்த அளவு குத்தகையை நிர்ணயிக்க வேண்டுவதற்காக, ஏழ்மையாக இருக்க வேண்டுமென்ற உத்தியை விவசாயிகள் தொடர்ந்து கூற வழிவகுக்கும்... ஒரு ஏர் உள்ள (ஒரு கலப்பை + 2மாடுகள்)

விவசாயியால் இரண்டு வல்லம் (8.569 ஏக்கர்) நிலங்களில் சாகுபடி செய்ய இயலும். சில விவசாயிகளிடம் பத்து ஏர்கள்கூட உள்ளன; ஆனால் ஒரு ஏர் மட்டும் உள்ளவர்கள்தான் அதிகம்...'

**விவசாயத் தொழிலாளர்கள்**

இரு வகைகளில் விவசாய வேலையாட்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டனராம்- படியாள், பங்காள் என்ற பெயர்களில். ஒரு படியாளுக்கு ஆண்டிற்கு மூன்று பொதி (29 வல்லம்) தானியமும் (அதன் மதிப்பு 48 வீரராயப் பணம்), பத்து பணம் ரொக்கமாகவும் ஒரு வீடும் வழங்கப்படும். அந்த வேலையாளின் மனைவி மக்களும் தகுதிக்கேற்ப வேலை செய்வார்கள் - அதற்காக ஊதியமும் தரப்படும். வேலையாள் ஒரு ஆண்டு முழுவதும் வேலை செய்ய சேர்த்துக் கொள்ளப்படுவான். ஆனால் முதலாளியிடம் அவன் கடன் பட்டிருந்தால், அக்கடனைத் திருப்பித் தராமல் அவனால் வேறு இடத்தில் சேர முடியாது.

பங்காள் என்பவன் ஒரு வசதிமிக்க விவசாயியிடம் (பண்ணாடி) வேலைக்குச் சேருவான். லாபத்தில் பங்கு என்ற கணக்கில் சேர்ந்து சாகுபடி வேலைகளில் ஈடுபடுவான். அந்த விவசாயி கால்நடைகள், விவசாயக் கருவிகள், விதை, பங்காளின் சாப்பாட்டுக்குத் தேவையான பணம் அல்லது தானியம் போன்றவற்றுக்கானதைக் கடனாகத் தருவான். பங்காளின் குடும்பத்திற்கு வீடும் தரப்படும். வேலைகள் முழுவதையும் பங்காட்கள் மற்றும் அவர்களது மனைவியர், மக்கள் செய்வார்கள். ஆனால் அந்த விவசாயி நிலத்திற்கான வரியை அறுவடையாகும் தானியத்தில் தனக்குக் கிடைக்கும் பங்கிலிருந்து செலுத்துவான். உதாரணமாக, அந்த நிலத்தின் விளைச்சல் 15 பங்குகளாகப் பிரிக்கப்படும் -

6 பாகம் விவசாயி அல்லது பண்ணாடிக்கு - வரி, விதை போன்ற செலவுகளுக்காக.

1 பாகம் லாபமாக

2 பாகம் கடனாகத் தந்த பணத்திற்கு வட்டியாக

6 பாகம் பங்காட்களுக்கு
மொத்தம் 15 பாகம்

பங்காட்கள் தாம் பெற்ற முன்பணத்தைத் திருப்பித் தந்துவிட வேண்டும். படியாட்கள் கிடைப்பார்களானால், ஒரு விவசாயி அவர்களை நியமிக்க விரும்புவான். ஆனால் படியாட்களைவிட பங்காள் முறையை வேலையாட்கள் விரும்புவார்கள். ஏனெனில் பதினைந்தில் ஆறு பங்கு உடல் உழைப்பிற்குக் கிடைக்கும் பணம் நல்ல கூலி. நிலவரி சுமாராக இருந்தால் அந்த அளவு ஊதியம் தர இயலும்...

## நில அளவையில் ஏமாற்று வேலை

நில அளவை கோயம்புத்தூரில் இருந்ததைப் போலவே பொள்ளாச்சியிலும் நிலவியதாம். ஒரு வல்லம் என்பது 4.284 ஏக்கர். ஆனால் புக்கானன், ஒரு வல்லம் எனப்பட்ட நிலத்தை அளந்து பார்த்தபோது அது 5.88 ஏக்கர் அளவிற்கு இருந்ததாம். அந்த மாதிரிதான் (5.88ஐ 4.284 என்று) கணக்கில் எழுதப்பட்டதாம். பிற ஊர்களில் எந்த மாதிரி கணக்கில் எழுதப்பட்டது எனத் தெரியவில்லை எனக் குறிப்பிடும் புக்கானன், தன்னுடைய கணக்குகளில் ஒரு வல்லம் நிலத்தை ஒப்புக் கொள்ளப்பட்ட நில அளவை அளவிலேயே குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார்.

## விளை பொருட்கள்

பொள்ளாச்சிப் பகுதியில் புன்செய்ப் பயிர்கள்தான் அதிகம். நல்ல மழை உள்ள ஒரு ஆண்டில் ஒரு ஏக்கரில் விளையும் தானியத்தின் அளவு, அதன் மதிப்பு போன்றவற்றை புக்கானன் தந்துள்ளார். அதன்படி, சோளம், சாமை, கம்பு, துவரை, மொச்சைக் கொட்டை, முத்துக் கொட்டை, தட்டப்பயிறு, கொள்ளு, உளுந்து, பச்சைப் பயிறு, எள்ளு, கடலை, பருத்தி போன்ற பயிர்கள் அதிகம் பயிராயின.

இனாம் நிலமாகத் தரப்பட்ட 240 வல்லம் (1029 ஏக்கர்) நிலங்களைத் தவிர, பொள்ளாச்சியைச் சுற்றியிருந்த பிற நிலங்கள் அனைத்தும் (அரசால்) குத்தகைக்கு விடப்பட்

டிருந்தன. முன்பு தீர்வை குறைவு. இப்போது அதிகம். ஆகவே, விவசாயிகளின் ஏழ்மை காரணத்தால் 1/5 பங்கு தீர்வை குறைக்கப்பட்டிருந்தது. எல்லா நிலங்களும் கம்பு, சோளம் பயிரிட ஏற்றவை. 26 வல்லம் (சுமார் 110 ஏக்கர்) நிலங்கள் மட்டும் கபிளை இயந்திரம் மூலம் சாகுபடி யாகின்றன; அதுவும் அக்கறையின்றி செய்யப்படுகிறது. ஆனால் அந்நிலங்களுக்குக் கூடுதல் குத்தகையும் கிடைப்ப தில்லை. அதனால் நன்மையும் ஏற்படுகிறது. காரணம், தொழில் வளர ஊக்கம் பிறக்கிறது. அப்பிராந்தியத்தின் (தென் கோயம்புத்தூர்) பெரும்பாலான இடங்களில் அதிக அளவுத் தீர்வை விதிக்கப்படுவதால் கபிளை ஏற்றத்தின் மூலம் உத்வேகத்துடன் சாகுபடி நடக்கிறது.

பொள்ளாச்சிப் பகுதியில் பயிர் சுழற்சியாக ஒரு பட்டத்தில் சாகுபடியான பயிர்கள், மகசூல் மதிப்பு, கிடைக்கும் லாபம் எவ்வளவு என்று மூன்று வகைகளாக புக்கானன் விவரித்துள்ளார் - ஆங்கிலப் பண மதிப்பின்படி (ஒரு பவுண்ட் = 20 ஷில்லிங்; ஒரு ஷில்லிங் = 12 பென்ஸ்).

| | மகசூல் மதிப்பு, ஏக்கருக்கு: | | |
|---|---|---|---|
| | பவுண்ட் | ஷில்லிங் | பென்ஸ் |
| 1) முதல் ஆண்டு:- | | | |
| கம்பு, ஊடு பயிர்களுடன் | 1 | 3 | 0 |
| இரண்டாம் ஆண்டு: | | | |
| முதல் பட்டம், சோளம் | 0 | 14 | 10 |
| இரண்டாம் பட்டம், கொள்ளு | 0 | 5 | 8 |
| மூன்றாம் ஆண்டு : புல், கால்நடைகளைக் கட்டி வைப்பதால் கிடைக்கும் எரு | 0 | 1 | 6 |
| மூன்று ஆண்டுகளில் மகசூல் | 2 | 5 | 0 |
| கழிக்க : தீர்வை | - | 17 | 4½ |
| கழிக்க : விதைகள் செலவு | - | 0 | 7½ |
| மூன்று ஆண்டுகளுக்கு கால்நடை மற்றும் ஆட்களின் உழைப்பிற்கு மிஞ்சுவது | 1 | 7 | 0 |

*2)* முதல் ஆண்டில் கம்பு சாகுபடி செய்து, இரண்டாம் ஆண்டில் சாமை, கொள்ளு பயிரிட்டு, மூன்றாம் ஆண்டில் புல் என்ற வகையில் மூன்று ஆண்டுகளின் நிகர லாபம், £ *1-8-1½.*

*3)* நான்கு ஆண்டுகளில், கம்பு/சோளம், பருத்தி/மூன்றாம் ஆண்டில் பருத்தியின் மீதி மகசூலாகக் கிடைக்கும் ¾ பங்கு/புல் என்ற வரிசையில் நான்கு ஆண்டுகளின் நிகர லாபம், £ *1-7-8½.*

**சாகுபடி செய்தல்**

மேலே கூறப்பட்ட பயிர்களின் சாகுபடி முறையையும் புக்கானன் விவரிக்கிறார். அவர் சொல்வதைக் கேட்போம்...

'புல் வளர்ந்துள்ள நிலத்தில் எத்தனை ஆடு- மாடுகளைக் கட்டி வைக்க முடியுமோ, அவற்றைக் கட்டி வைப்பதால் எரு கிடைக்கிறது. மே **26** முதல் ஜூலை **27**க்கான இடையில் நிலம் ஐந்து முறை உழப்படுகிறது. அந்தப் பருவத்தில் சில சமயங்களில் மழைத் தூறல் விழுகிறது. சில நாட்கள் கழித்து, பொதுவாக கனமழை பெய்ய ஆரம்பிக்கிறது. அப்படி மழை பெய்தால் விதைக்கம்பு தூவப்படுகிறது. பின்னர் ஏர் உழுது விதைகள் மூடப்படுகின்றன . இரண்டாம் அல்லது மூன்றாம் நாளில் நிலத்தில் ஆறு முழ இடைவெளிகளில் சால் ஓட்டபடுகிறது. அப்போது கூடவரும் ஒரு ஆள் அவரை, மொச்சை, கொட்டைமுத்து, தட்டைப்பயிறு போன்ற ஊடு பயிர் விதைகளை அந்தச் சால்களில் விட்டுக் கொண்டு வருகிறான். அப்போது இன்னொரு ஏர் பின் தொடர்கிறது. அந்த ஊடுபயிர் விதைகளை மூடும் வகையில் சால் பிடித்துச் செல்கிறது. ஊடுபயிர் விதைகள், எப்போதும் கலந்து விதைக்கப்படுவதில்லை. ஒரு ஊடுபயிர் விதைகள் நிலத்தின் ஒரு பகுதியிலும், மற்றொன்றின் விதைகள் வேறு பகுதியிலுமாக விதைக்கப்படுகின்றன... சில சமயம் தட்டைப் பயிறு கம்புடன் சேர்த்துத் தூவப்படுகிறது. ஒரு மாதம் கழித்து கம்புப் பயிர் **4** அல்லது **5** அங்குல உயரம் வளர்ந்திருக்கும். அப்போது நிலம் மீண்டும் உழப்படுகிறது. ஐந்து மாதங்களில் கம்பு முதிர்கிறது; அதற்கு இரண்டு மாதங்கள் கழித்து ஊடுபயிர்கள் அறுவடைக்குத் தயாராகின்றன. பயிர் முதிர்ந்த பின்,

பூட்டைகள் அறுக்கப்படுகின்றன. பூட்டைகளிலிருந்து தானியங்கள் உதிர்க்கப்பட்டு, சூரிய வெயிலில் இரண்டு, மூன்று நாள்களுக்குக் காய வைக்கப்படுகின்றன. ஒரு வருடம் வைத்திருந்தால் அதன் மதிப்பு குறைகிறது. இரண்டு வருடம் போனால் அது ஒன்றுக்கும் உதவாததாகிறது.

'கம்மந் தட்டு வீடுகளின் கூரைகளாக வேயப் பயன்படுகின்றது. அறுவடைக்குப் பின் கம்மந்தட்டு மார்ச் 12 முதல் ஏப்ரல் 10 வரை நிலத்தில் அப்படியே விடப்படுகின்றது. பிறகு வேருடன் பிடுங்கப்படுகிறது. தட்டுகள் அதிகம் இருப்பதால் அவற்றை நிலத்திலிருந்து பிடுங்கியதும், நிலம் நன்றாகத் தளருகிறது. ஆகவே நிலத்தை உழாமல் சோளம், உளுந்து, பச்சைப் பயிறு, எள்ளு போன்றவை மேலே சொன்ன பயிர் சுழற்சி முறைப்படி தூவப்பட்டு விதைக்கப்படுகின்றன. பிறகு ஒரு முறை நிலம் உழப்படுகிறது...' என்று விலாவரியாக சுழற்சிப் பயிர் சாகுபடியையும் விவரிக்கிறார்.

**மண்ணும் மருந்தும்**

'இங்குள்ள மண் செம்மண்ணும், கருப்பு நிறமான வண்டல் மண்ணும் கலந்த கலவை. பக்கத்துக் கிராமங்களில் கரிசல் மண் கொண்ட வளமான பூமி உள்ளது. அங்கே ஆண்டுதோறும் பருத்தி விளைகிறது. பருத்தியுடன் கொத்தமல்லியும் குதிரை ஓமச் செடியும் கலந்து விதைக்கப்படுகிறது.

'குதிரை ஓமம், குதிரைகளுக்கு வாயுத் தொல்லைகளைத் தவிர்க்கும் நிவாரணியாக இப்பகுதி மக்கள் கருதுகிறார்கள். மிளகு, வெங்காயம் போன்றவற்றுடன் இந்த இலைகளை அரைத்து வாரம் ஒருமுறை குதிரைகளுக்குத் தருகிறார்கள்...' எனக் குறிப்பிடுகிறார் புக்கானன்.

**பாளையக்காரர்கள்**

'ஆனைமலைப் பாளையக்காரர்கள் பன்னிரண்டு பேர்கள். அவர்களில் ஒருவரான கோபியண்ண கௌடா (Gopina Gauda) என்பவர் என்னிடம் தெரிவித்ததன்படி கூறுகிறேன்... ஆறு தலைமுறைகளுக்கு முன்னர், மதுரை ராஜா திருமலை நாயக்கர்

எங்களை இங்கு அனுப்பி வைத்தார். அவர்களில் பலர் தெலுங்கு மொழி வழியினர். ஆனால் ஒருவரும் மதுரை குடும்பப் பரம்பரையைச் சேர்ந்தவரல்ல. ஒவ்வொருவரும் தங்களின் நிலத்திற்கேற்ப ராஜாவிற்குத் திறை செலுத்த வேண்டும். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான 'கண்டாசாரா' என்ற உள்ளூர்க் காலாட் படையினரை வைத்திருக்க வேண்டும். ராஜா கேட்கும்போது, பாளையக்காரர்கள் தங்கள் வீரர்களுடன் போர்க்களத்தில் கலந்து கொள்ள வேண்டும். அப்போது ராஜாவிடமிருந்து அவர்களுக்கு 'பேட்டா' (படித் தொகை) கிடைக்கும். ஒவ்வொரு வீரனுக்கும் நிலம் ஒதுக்கப்படும். அவனோ, அவனது குடும்பத்தினரோ அதில் விவசாயம் செய்து உண்ணவும், உடுக்கவும் சம்பாதிக்கலாம். தலைமை வீரன் தளபதி போன்றவன். அவனுக்கு அதிக நிலம் ஒதுக்கப்படும். ஆனால் அவனது நிலத்திலிருந்து கிடைக்கும் லாபத்தில் வீரர்களுக்கு ஆயுதம் வழங்க வேண்டும் (வாள், வேல் போன்று). ஒவ்வொரு பாளையக்காரனின் நாட்டிலுள்ள சில கிராமங்கள் இவ்வாறு வீரர்களுக்கும் பிறருக்கும் பகிர்ந்தளிக்கப் படும். பிற கிராமங்கள் விவசாயிகளிடையே குத்தகைக்கு விடப்படும். அதில் கிடைக்கும் வருமானத்திலிருந்து பாளையக் காரன் தன் குடும்பச் செலவையும், ராஜாவிற்குச் செலுத்த வேண்டிய திறையையும் சமாளித்துக் கொள்ள வேண்டும்.

'தனது பகுதி மக்கள்மீது பிறப்பு முதல் இறப்பு வரையான நிர்வாக, உரிமையியல், ராணுவ அதிகாரங்கள் போன்றவை பாளையக்காரர் வசம் உள்ளன. ஆனை மலையின் 12 பாளையக்காரர்களில் ஐவர் ஒக்களியர் சாதியான (Vaycliar) தெலுங்கு வம்சத்தினர்; நால்வர் வேளாளர் (Vaylalar) என்கிற தமிழ்ச் சாதியினர்; ஒருவர் கோலார் தொட்டியர் - தெலுங்கு வழியானவர்; ஒருவர் போலோ (Poloa) என்னும் மலையாளச் சாதியார்; பன்னிரண்டாவது நபர் விருப்பாச்சி பாளையக்காரர் - அவர் இப்போது புரட்சிக்காரராக மாறியுள்ளார்.

'கோபியண்ண கௌடாவின் நாட்டில் அறுபது கிராமங்கள் உள்ளன; ஆயிரம் காலாட் படையினர் உள்ளனர்.

செலுத்த வேண்டிய திறை 40,000 வீரராயப் பணம் (சுமார் 951 இங்கிலாந்து பவுண்டுகள்) - இது போன்ற நிலை ஐதர் அலியின் காலம் வரை தொடர்ந்தது. ஐதர் அலி இவ்வாறான காலாட் படையினரின் சேவையை நிறுத்தி விட்டார்; பதிலாக ஒவ்வொரு பாளையக்காரருக்கும் தீர்வையின்றி இனாம் நிலங்களை ஒதுக்கித் தந்தார் - முன்பு பாளையக்காரரின் குடும்பச் செலவுக்குத் தேவையான வருவாய் வரும் அளவிற்கான நிலம் தரப்பட்டது.

'இப்போது கோபியண்ண கௌடாவிற்கு ஆறு கிராமங்கள் மட்டும் உள்ளன. அக்கிராமங்களின் மக்கள்மீது அவருக்கு முன்பிருந்த அதிகாரங்கள் தொடர்ந்தன. (ஜமீன்தார்கள் போன்ற நிலையை நினைவு கொள்ள வேண்டும்) - ஏனெனில் கிழக்குப் பகுதியிலிருக்கும் (தாராபுரம், கரூர்) ஊர்களில் உள்ளவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் அரசாங்கத்தின் சாதாரண அதிகாரிகள் அல்லது சிறு நிலச்சுவான்தார்கள்தானே பொறுப்பு என்பது அவரது கருத்து.

'திப்பு சுல்தான் ஆட்சிக்கு வந்த பிறகு இருந்த அசாஃப் (குட்டி கவர்னர் போன்றவர்) காதர் அலி கான் என்பவர் ஐதர் அலி இனாமாக ஒதுக்கிய நிலங்களுக்கு இப்பாளையக்காரர்கள் திறை செலுத்த வேண்டுமென நிர்பந்தித்தார். அத்துடன் அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்துக் கொண்டார். ஆனால் அவர்களுக்குக் கீழிருந்தவர்கள் மீது நிர்வாக, உரிமையியல், குற்றவியல் அதிகாரங்களைச் செலுத்த அனுமதித்தார். பத்து ஆண்டுகட்கு முன்பு, அவர்களைப் பிடித்து மதமாற்றம் செய்ய திப்பு முனைந்தார். ஆனால் அவர்கள் தப்பியோடி கொச்சி ராஜா நாட்டிற்குச் சென்று விட்டனர். திப்புவின் மரணம் வரை அவர்கள் அங்கேயே இருந்தனர். ஐதர் அலி இனாமாகத் தந்த நிலங்கள் இப்போது அவர்களுக்குத் திருப்பித் தரப்பட்டுள்ளன. - ஆனால் திப்பு சுல்தானுக்குச் செலுத்தி வந்த திறைப் பணத்தில் முக்கால் அளவிற்குத் திறை செலுத்த வேண்டும். மக்களின் மீதான அவர்களின் அதிகாரம் ஒரு தாசில்தாருக்கு உள்ள அளவிற்கு உண்டு; அத்துடன் அவர்களுடைய கிராம நிலங்களை

குத்தகைக்கு விடும் விஷயத்தில் அரசு தலையிடாது. உண்மையில், வங்காளத்தில் உள்ள ஜமீன்தார்கள் அளவிற்கு இவர்கள் உள்ளனர்- ஆனால் போலீஸ், நிர்வாக அதிகாரங்கள் சிறிதளவுதான் இவர்களிடம் உள்ளன; அத்துடன் இவர்கள் செலுத்த வேண்டிய திறைப் பணம் அதிகமில்லை. தனது வருவாயில் முக்கால் பாகத்தை அரசாங்கத்திற்குச் செலுத்து வதாக கோபியண்ண கௌடா குறைபட்டுக் கொள்கிறார். ஆனால் அது நாற்பது சதவிகிதம் அளவுதான் இருக்குமென திரு.ஹுர்டிஸ் கூறுகிறார்...

'முன்பு சமவெளிப் பகுதிகளில் (தாராபுரம், கரூர், திண்டுக்கல் பகுதிகளைக் குறிப்பிடுகிறார் போலும்) குழப்பம் நிலவியபோது [திப்பு சுல்தான் காலத்தில்?] இந்தப் பகுதிப் பாளையக்காரர்களின் நாடுகளுக்குள் நுழைவது எளிதல்ல. ஆகவே, அப்போது பெரும் துன்பத்திற்குள்ளானவர்கள் இப்பகுதிகளுக்கு ஓடி வந்து தஞ்சமடைந்தார்கள்... ஆனால் கம்பெனி அரசாங்கத்தில் துன்பம் விளைவிக்காதவர்களுக்குப் பாதுகாப்பு கிடைப்பதால், இங்கு வந்த அவர்கள் தங்களது முந்தைய ஊர்களுக்குத் திரும்பி விட்டனர்; அதன் காரணமாக இப்பாளையக்காரர்களின் கிராமங்களில் மக்கள் தொகை குறைந்து விட்டது. ஆயுதம் ஏந்திய காவலர்கள் இன்றி பாளையக்காரர்கள் தங்களின் குத்தகைப் பணத்தை வசூலிக்கிறார்கள். கண்டசாரா சிப்பாய்கள் தாசில்தார்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தாசில்தார்களிடம் வரி வசூல் செய்வதைவிட 'போலிஸ்' அலுவலர்களாகத்தான் வேலை பார்க்கிறார்கள்...' [Candasara Peon என்ற உத்தியோகம் அப்போது தோன்ற ஆரம்பித்தது].

இவ்வாறு, மதுரை திருமலை நாயக்கர் காலத்தில் (1623-1659) ஆனைமலைப் பகுதிக்கு வந்து பாளையக்காரர்களாகி, பின்னர் ஜமீன்தார்களான பன்னிரண்டு குடும்பங்களின் வரலாற்றுப் பின்னணியைப் புக்கானன் பதிவு செய்துள்ளார் - அதுவும் அன்று (கி.பி.1800) வாழ்ந்த ஒரு பாளையக்காரரின் நேர்க்காணல் மூலமாக.

**வெள்ளாளர்**

'கோயம்புத்தூர் பிராந்தியம் முழுவதிலும் வெள்ளாளர் என்னும் தமிழ்க் குடியினர் அநேகர் வாழ்கின்றனர். அவர்கள் சுத்த சூத்திரர்கள் என்கிற பெருமை கொண்டவர்கள். அவர்களில் வெவ்வேறு குழுவினர் உள்ளனர் - உதாரணமாக கார்காத்த, பாலவேளாளர், சோழகர், கொடிக்கால், கோட்டை, பாண்டிய மற்றும் செந்தலை வெள்ளாளர்கள் போன்ற கூட்டத்தார்கள். கடைசியாகக் குறிப்பிட்ட கூட்டத்தைச் சார்ந்தவர்கள் எனக்குத் தெரிவித்த தகவலின்படி -

'எல்லா வெள்ளாளரும் ஒன்றாகச் சேர்ந்து சாப்பிடலாம்; ஆனால் மேற்சொன்ன குழுவினர் தங்களுக்குள் திருமணத் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. வெள்ளாளர் என்பவர்கள் விவசாயிகளாகவும், விவசாய வேலைகளைச் செய்யும் வேலையாட்களாகவும் நிலத்தில் சாகுபடி செய்யும் தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்களின் பலர் கணக்குகளை எழுதவும் தமிழ்ப் புத்தகங்களைப் படிக்கவும் செய்கின்றனர். செந்தலை வெள்ளாளர் என்னும் கூட்டத்தைச் சார்ந்த காங்கயம் மன்றாடியார் என்பவர் காங்கயத்தில் வசிக்கிறார். முன்பு அவர் தமது சாதியினரின் வழக்குகளை விசாரித்துத் தீர்த்து வந்தார். ஆனால் அந்தப் பரம்பரைத் தலைவர்கள் நியாயமின்றி அவர்களின் வகுப்பைச் சேர்ந்தவர்களைச் சாதியிலிருந்து விலக்கி வைத்து பைசல் செய்தார்கள். அதைக் கண்ட திரு.ஹுர்டிஸ் சாதிய வழக்குகளை வெளிப்படையாக, அந்தந்த சாதிகளி லிருந்து விவரமறிந்தவர்கள் கொண்ட குழுவின் ஆலோசனை யின் பேரில், தாசில்தார் பைசல் செய்ய வேண்டுமென உத்தரவிட்டார். அந்த ஏற்பாட்டில் மக்களுக்குத் திருப்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

'வெள்ளாளர்கள் போதை தரும் பானங்களைக் குடிக்க அனுமதியில்லை. ஆனால் அவர்களில் உபதேசம் பெற்றிராத வர்கள் மாமிசம் சாப்பிடலாம். அவர்களின் முதல் மனைவிக்குக் குழந்தைகள் இருந்தால் அந்த நபர் மறு திருமணம் செய்ய இயலாது. அதுபோல அவர்கள் தங்கள் வீட்டில் வைப்பாட்டிகளையும் வைத்துக் கொள்வதில்லை. வயதுக்கு

வந்த பிறகு பெண்கள் திருமணத்திற்கு ஏற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனால் கைம்பெண்கள் மறுமணம் செய்ய அனுமதியில்லை; பிறரின் வைப்பாட்டிகளாகவும் இருக்க முடியாது. தனது சாதியைச் சேர்ந்த ஆணுடன் தகாத உறவு வைத்த ஒரு பெண், அந்தச் சங்கதி வெளிச்சத்திற்கு வந்து அவமானப்படாத வரை சாதாரணமாக விவாகரத்து செய்யப் படுவதில்லை. கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏற வேண்டும்- ஆனால் இது இப்போது அரிதாகவே நிகழ்கிறது. அவ்வாறு உடன்கட்டை ஏறிய பெண்களின் கல்லறை நினை விடங்கள் வணங்கத் தக்கவையாகக் கருதப்பட்டு, புனிதமானவர்களாகப் போற்றப்படுகிறார்கள்.

'அவர்கள் அனைவரும் சிவனை வழிபடுபவர்கள். ஆனால் தங்களின் குலதெய்வங்களாக சக்தியின் வெவ்வேறு உருவங் களை வழிபடுகின்றனர். அத்தெய்வங்களின் கோயில்களில் வெள்ளாளர்கள் ஆடு, கோழிகளைப் பலியிடுகின்றனர். அவர்களில் 'உபதேசம்' பெறாதவர்கள் அந்த மாமிசத்தை உண்கிறார்கள். கொங்கு நாட்டில் (சேர நாடு எனக் குறிப்பிடுகிறார்) உள்ள இக்கோயில்களில் பூசாரிகளாகப் பண்டாரங்கள் உள்ளனர். அவர்கள் சூத்திரர்கள்; சிவன் கோயில்களில் சேவை செய்வதற்காக இருப்பவர்கள் - விஷ்ணு கோயில்களில் சாத்தானியர்கள் உள்ளதைப் போல. உடல்நிலை சரியில்லாதபோது வெள்ளாளர்கள், தங்களின் குல தெய்வக் கோயில்களுக்கு நேர்த்திக் கடனாக அணிப் பொருட்களை அளிப்பதாக வேண்டிக் கொள்கிறார்கள் - அத்தெய்வங்கள் தான் அவர்களுக்கு வந்துள்ள நோய்க்குக் காரணம் என்று நினைக்கிறார்கள்... அவர்களின் நோய் சரியான பின்னர் குயவர்களிடம் சொல்லி, ஒரு குழந்தை அல்லது குதிரை உருவத்தைச் செய்து அந்தக் கோயில் வளாகத்தில் வைப்பர். இம்மாதிரியான வேண்டுதல் கோயம்புத்தூரின் எல்லாப் பகுதிகளிலும் நிலவுகிறது - ஆனால் இதை இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலும் நான் பார்த்ததில்லை.

'இறந்தவர்களின் உடல்களுக்கு உரிய சடங்குகள் செய்து எரித்தால், இறந்தவர்கள் ஈஸ்வரனின் பாதங்களை அடை

கிறார்கள் என அவர்கள் நம்புகிறார்கள். அவ்வாறு செய்யாவிட்டால் அந்த இறந்தவர்களின் நிலை என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. குடும்ப நிகழ்ச்சிகளில் மந்திரங்கள் ஓதுவதற்கு அவர்கள் புரோகிதர்களை நாடு வதில்லை. ஆனால் பஞ்சாங்கிகள் தாமே வந்து மந்திரங்களை ஓதினால், அவர்களுக்குத் தட்சிணை தந்து அனுப்புகிறார்கள். அவர்களின் குருவானவர் சிவ பிராமணர்கள். அவர்கள் வைதிக அல்லது லோகிக ஸ்மார்த்த பிராமணர்களை விடத் தாழ்ந்தவர்கள்; ஒவ்வொரு கிராமத்திற்கும் குருவானவர் ஆண்டுதோறும் வந்து, புனிதம் செய்யப்பட்ட இலைகளையும், புனித நீரையும் வழங்குவார். ஒவ்வொருவரிடமிருந்து ஒரு பணம் தட்சிணை பெறுவார். அவர்கள் விரும்பித் தரும் தானியங்களைப் பெறுவார். அவர்களில் சிலர் குருவிடமிருந்து உபதேசம் பெறுவர் - அதற்குத் தட்சிணையாக ஒரு பணத்திலிருந்து பத்துப் பணம் வரை தருவர். உபதேசம் செய்யும் குரு மண்ணால் லிங்கம் செய்து, அதன்மேல் பூக்கள் மற்றும் நீர் சொரிந்து பூஜை செய்வார்; உபதேசம் பெறுபவர் உடன் திருப்பிச் செய்வர். அவ்வாறு உபதேசம் பெற்றவர் மாமிச உணவு உண்ணக் கூடாது. உபதேசம் பெறாதவர்கள் அவ்வாறு பிரத்தியேக லிங்கம் இல்லாமல் வணங்கலாம்; பலியிட்ட மாமிச உணவை உண்ணலாம்...'

இவ்வாறு வெள்ளாளர்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார் புக்கானன். அடுத்ததாக ஹண்டி குரும்பர், தொட்டியர் என்னும் இரு வகுப்பினர் பற்றி எழுதுகிறார். ஹண்டி குரும்பர்களில் சிலர் இங்குக் குடிபெயர்ந்து வந்துள்ளனர். அவர்கள் காவல் துறையினருக்கு ஆயுதம் தாங்கிய சேதியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்; அவர்கள் கர்நாடகாவிலிருந்து வந்தவர்கள்; கனகிரி (Kana-giri) மற்றும் அனகுந்தியிலிருந்து வந்தவர்கள். தொட்டியர் என்பவர் தெலுங்கு பேசுபவர்கள். அதிக எண்ணிக்கையில் இங்குத் தங்கி வசிக்கின்றனர்; அறியாமை கொண்டவர்கள். ஆகவே அவர்களிடமிருந்து அவர்களுடைய பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ள இயலவில்லை என்கிறார்...

## 16

# ஆனைமலையும் அதற்குப் பிறகும்...

சென்னையில் தனது பயணத்தைத் துவங்கிய புக்கானன் காஞ்சிபுரம், பெங்களூரு, மைசூர், சீரங்கப்பட்டணம் போன்ற இடங்களைப் பார்த்து, தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியில் மாதேஸ்வரன் மலைகளுக்கிடையே உள்ள நடுக்காவல் கணவாய் வழியே வந்து சேரநாடு என்று அவர் அறிமுகப் படுத்தும் கொங்கு நாட்டிற்குள் புகுந்தார். அவ்வாறு வந்தவர், காவேரிபுரம், பவானி, கோபி செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், கோயம்புத்தூர், அவிநாசி, திருப்பூர், ஈரோடு, கொடுமுடி, பரமத்தி, கரூர், தாராபுரம், பொள்ளாச்சி என்று பல இடங்களுக்குச் சென்றவர் கொங்கு நாட்டில் தன் இறுதிக் கட்ட இடமாக ஆனைமலைக்கு 1800, நவம்பர் 27ஆம் நாள் சென்றார். பொள்ளாச்சியிலிருந்து கிளம்பிய பின் அவர் எழுதியதைக் காண்போம்.

'ஆளியாறை நெருங்கும் வரை நான் கடந்து வந்த நிலங்களில் நன்றாகச் சாகுபடி செய்யப்பட்டிருந்தது; வேலிகள் போடப்பட்டிருந்தன. அம்பராயன் பாளையம் (Umberayen Pallayam) என்னும் ஊரில் ஆற்றைக் கடந்தேன். முன்பு அது பெரிய ஊராக இருந்தது. இப்போது பெரும்பாலும் அழிந்துள்ளது; திப்புவுடன் நாயர்கள் நிகழ்த்திய சண்டைகளில் நாயர்கள் அழித்து விட்டனர். பிறகு ஆற்றின் கரையோரமாகச் சென்றேன்; இடது புறத்தில் ஒரு வாய்க்கால் சென்றது;

அதையொட்டி நெல் வயல்கள்... எனது வலப்புறத்தில் கானகம் தொடர்ந்தது. இவ்வூரில் முன்பு புன்செய்ப் பயிர்கள்தான் அதிகம் பயிரிடப்பட்டன. அவைகளும் நாயர்களால் அழிக்கப் பட்டன. உள்ளூர் மக்கள் அவர்களை முரடர்களாகவும் காட்டு மிராண்டிகளாகவும் கருதினர்.

'இந்த மலைகளிலும் அவற்றின் அருகிலும் அதிக அளவில் யானைகள் தென்படுவதால் இம்மலைக்கு 'ஆனைமலை' என்னும் பெயர் வழங்கப்படுகிறது. இந்த நகரத்தில் 400 வீடுகள் உள்ளன. ஆளியாற்றின் மேற்குப் புறத்தில் இவ்வூர் உள்ளது. கருநாடக மலைகளின் தெற்குப் பகுதி மற்றும் கன்னியாகுமரியிலிருந்து வரும் மலைகளுக்கு வடக்கின் இடையே உள்ள பெருவழிப்பாதை மலபாரிலிருந்து ஆர்க்காடு பிராந்தியத்திற்குச் செல்கிறது. இப்பகுதியை முன்பு ஆண்டுவந்த மதுரை ராஜாக்கள் இந்த ஆற்றின் அருகில் ஒரு கோட்டையைக் கட்டினர். ஆனால் அக்கோட்டை அழிந்த பிறகு, அதிலிருந்த பொருட்களை மைசூர் ராஜா எடுத்து, மேற்குப் புறமாகச் சிறிது தொலைவு தூரத்தில் ஒரு புதிய கோட்டையைக் கட்டினர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திப்பு அக்கோட்டையின் மராமத்து வேலைகளைப் பார்த்தார்; அதற்காகத் தேவைப்பட்ட பொருட்களுக்காக ஐந்து பெரிய கோயில்களை இடித்தார். அக்கோட்டை நேர்த்தியாக இல்லை; அது பொள்ளாச்சிப் பகுதியைச் சார்ந்தது...

'இப்பகுதியிலிருந்த புன்செய் நிலங்கள் இப்போது கானகமாக மாறியுள்ளது. மேற்குப் புறத்திலிருக்கும் எட்டுக் கிராமங்களை நாயர்கள் அழித்தனர்; பிறகு அங்கே மக்கள் குடிபெயர்ந்து வரவில்லை. ஆளியாற்றில் மூன்று அணைகள் உள்ளன. அவை நெல் விளையும் நிலங்களுக்குப் பாசன நீரைத் தருகின்றன. பெரும்பாலான நிலங்களில் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. முன்பு இங்கு ஒரு ஏரி இருந்தது. ஆளியாற்றின் கிளையாகிய சின்னாற்றிலிருந்து அதற்கு நீர் கிடைக்கும். ஆனால் அது அழியும் நிலைக்கு வந்துள்ளது. மராமத்து வேலைகள் இப்போது துவங்கியுள்ளன. சிக்கதேவராயர்

காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அளவைகளின்படி, ஆனைமலை கிராமத்தில் நீர்ப்பாசனம் பெற்ற நிலங்கள் 750 கண்டகங்கள் (சுமார் 3100 ஏக்கர்) ஆகும். கணக்குப் புத்தகங்களின்படி புன்செய் நிலங்கள் 400 புல்லா (ஒரு புல்லா = 4¼ ஏக்கர்). ஆனால் அவற்றில் முக்கால் பாகம் நிலங்கள் தரிசாகி விட்டன. மிச்சத்தில் 70 புல்லாவில் மட்டும் சாகுபடி செய்யப்படுகிறது. சுற்றுப்புறத்திலுள்ள பத்து கிராமங்களில் ஒருவர்கூட வசிக்கவில்லை. இதிலிருந்து தெரிவது என்ன வென்றால், பொள்ளாச்சியில் தாசில்தார் என்னிடம் காட்டிய கணக்குகள் சரியானவையல்ல... உள்ளூர் அதிகாரிகள் தரும் விவரங்களில் பெரும்பாலானவற்றை நம்பமுடிவதில்லை.

'மைசூர் ராஜா சிக்கதேவராயர் போட்ட உத்தரவின்படி இப்பகுதியில் நில அளவை மேற்கொள்ளப்பட்டபோது (உள்ளூர் அளவையின்படி) 25 அடி நீளம் கொண்ட கோல் எடுத்துக் கொள்ளப்பட்டது. அளவையின்போது நீளமான ஒரு கல்லின்மீது (முட்டுக்கல்) குறியீடு இடப்படும்; அளவையின் அடையாளமாக அது நிற்கும். அந்தக் கோலின் நீளம் 24½ ஆங்கில அடிகள். அவ்வாறான 20 கோல்கள் நீளம், 15 கோல்கள் அகலம் கொண்ட நீர்ப்பாசன நிலம் 4.134 ஏக்கர் கொண்ட தாகும்...

'... ஆனைமலையிலுள்ள விவசாயிகள் அனைவரும் சூத்திரர்கள். ஆட்கள் மற்றும் கால்நடைகளின் பற்றாக் குறையால், அவர்கள் ஒரு போகம் விளைச்சல் மட்டுமே எடுக்கின்றனர். ஆனால் இரு போகத்திற்கான நீர் உள்ளது. உள்ள நிலத்தில் பாதி இந்த ஆண்டிலும், மீதிப்பாதி அடுத்த ஆண்டிலும் பயிரிடப்படுகிறது. நெல்லும் வெற்றிலையும் மட்டுமே பாசன நிலங்களில் பயிராகின்றன. ஜூலை 13 முதல் ஆகஸ்ட் 13 வரை விதைப்பு மூலம் நெல் பயிரிடப்படுகிறது. முளை கட்டிய விதைகள் மே 10 முதல் டிசம்பர் 10 வரை எப்போது வேண்டுமானாலும் விதைப்பு செய்யப்படும். குறைந்த உழைப்பைக் கொண்டு பயிர் செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் நாற்று நடவு மூலம் நெல் பயிரிடும் முயற்சி மேற்

கொள்ளப் பட்டுள்ளது. ஆனால் ஆட்கள் பற்றாக்குறையால் இம்முறையில் சாகுபடி செய்தல் தொல்லை தருவதாக உள்ளது...'

என்று குறிப்பிட்டு வரும் புக்கானன் அப்பகுதியில் கிச்சடி, கார்த்திகைச் சம்பா, ஆனைக்கொம்பரி சம்பா, பெருஞ் சம்பா, மொளகு சம்பா, கையிறப்பு சம்பா போன்ற நெற்பயிர்களின் சாகுபடிக்குத் தேவையான விதை அளவு, பயிர்கள் விளையத் தேவையான நாட்கள், விளையும் நெல்லின் மதிப்பு, மிஞ்சும் தவிட்டின் மதிப்பு, நிலத் தீர்வை போன்ற விவரங்களை ஒவ்வொரு வகை நெல்லுக்கும் தந்துள்ளார். யானைகளினால் நெற்பயிருக்கு நேரிடும் சேதம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இருப்பதில் கிச்சடி நெல் அதிகம் விளைவதாகவும், அதன் பயிரை யானைகள் அதிகம் அழிப்பதில்லை என்றும், அதற்குக் காரணம் அதை அவை விரும்புவதில்லை என்றும் குறிப்பிடு கிறார். எருவையும், இலை- தழைகளையும் விவசாயிகள் நிலத்தில் இடுவதில்லையாம்...

மேற்கொண்டு அம்மலைகளில் விளையும் பொருட் களைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறார். அதன் விபரங்களை அவர் வாயிலாகக் கேட்போம் :

'இங்கு மலையப்பூதி (Malaya-Pudy) என்ற மலை கிராமத்தலைவன் உள்ளான். மலைகளின் தெற்குப் பகுதியில் மருந்து- மூலிகைகளைச் சேகரிக்க நிலத்தை குத்தகைக்கு விட்டுள்ளான். அவனுக்காக காடர் என்னும் மலைவாழ் மக்கள் அவற்றைச் சேகரிக்கிறார்கள். அம்மக்கள், அங்கிருந்து இரண்டு நாள் நடை தூரத்தில் உள்ள கிராமத்தில் வசிக்கின்றனர். 13 வீடுகள் உள்ளன. அத்தலைவனுக்கு அவ்வூரில் ஒரு வீடு உள்ளது. அவன் அவ்வப்போது அங்குச் சென்று அதுவரை சேகரித்த மருந்து, மூலிகைகளை வாங்கிக் கொண்டு பொதி மாடுகள் மூலம் கொண்டு வருகிறான். அவனுக்காக வேலை செய்யும் ஆட்கள் நாள் ஒன்றுக்கு நான்கு படி அரிசியை (அரை வீரராயப் பணத்தின் மதிப்பு) முன்பாகவே பெறுகிறார்கள். ஆண்டு முடிவில் கணக்கு நேர் செய்யப்படுகிறது. ஒவ்வொரு

பொருளுக்கும் ஒரு குறிப்பிட்ட விலை உண்டு. அதன் மதிப்பீட்டின்படி ஆண்டு முழுவதும் சேகரித்துத் தந்த பொருட்களை மதிப்பிட்டு மீதிப் பணம் கொடுக்கப்படுகிறது.

'திப்புவின் காலத்தில் குத்தகை எடுத்தவர் முப்பது கண்டராயப் பகோடாவை (அல்லது 6 பவுண்ட், 4 ஷில்லிங், 1 1/2 பென்ஸ் - அதாவது ஒரு பவுண்டிற்கு 4.838 பகோடா வீதம்) ஆண்டுக் குத்தகையாகத் தந்தார். இப்போது அது 150 பகோடாவாக உயர்த்தப் பட்டுள்ளது. காட்டில் யானை இறந்து பட்டால் அதன் தந்தத்தை அவர் வைத்துக் கொள்ளலாம். - முன்பு அதை அரசாங்கத்திடம் தந்துவிட வேண்டும். குத்தகைதாரர் எடுத்துக் கொள்ளும் பொருட்கள் :

1) நுணாப் பட்டை : துணி/நூலுக்குச் சிவப்பு நிறச் சாயம் கலக்கலாம்.

2) மாகளிக் கிழங்கு : உள்ளூர்வாசிகள் விரும்பும் ஊறுகாய் போட உதவும்; நன்னாரி வாசம் தரும்.

3) இஞ்சி

4) மஞ்சள்

5) மட்டிப்பால் : ஒரு வகை மரத்தின் பால். துணிகளைத் தூய்மையாக்க உதவும்.

6) குங்குலியம் (Conghi-lium) : ஒரு வித மரத்திலிருந்து கிடைக்கும் பசை - எரித்தால் நறுமணம் தரும்.

7) சீயக்காய்

8) தேன் மற்றும் மெழுகு :

நான்கு வகையான தேன்/தேனீக்கள் உள்ளன.

(i) மலைத்தேன். பெரிய தேனீக்கள் மலை இடுக்கு களில் கட்டும் அடை மூலம் கிடைக்கும் தேன். ஒரு அடை மூலம் நான்கு படி தேன் (12.3 அவுன்ஸ்) கிடைக்கும். இத்தேனைச் சேகரிக்கச் செல்பவரைத் தேனீக்கள் ஆக்ரோஷமாகக் கொட்டும். அவை,

அடை வைக்கும் இடமும் எளிதில் செல்ல முடியாததாக இருக்கும். ஒரு மூங்கில் ஏணியைக் கயிற்றின் மூலம் மலை உச்சியிலிருந்து தேன் உள்ள இடம் வரை இறக்குவார்கள். காடர் வகை ஆள் கையில் தீப்பந்தம் மூலம் தேனீக்களைத் தூர விரட்டியபின் தேனைச் சேகரிப்பான். அவ்வாறு சென்றவர்களின் இந்த ஆண்டில் இரண்டு பேர் இறந்தார்கள் - தேனீக்கள் பலமாகக் கொட்டியதால் கயிற்றில் தங்கள் பிடி நழுவியதால் மலையிலிருந்து விழுந்து மரணம் நேரிட்டது.

ii) தொடுகைத் தேன் : நடுத்தர அளவுள்ள தேனீக்கள் மரங்களின் பொந்துகளில் கட்டும் அடைகளிலிருந்து கிடைக்கும் தேன். மலைத் தேன் அளவைப் போல் நான்கில் ஒரு பங்கு இருக்கும். இத்தேனீக்கள் கொட்டு வதால் பெருமளவு பாதிப்பு இராது. பொந்தின் ஆழத்தினுள் தேனீக்கள் கட்டிய அடையைத் தேடித் தேனைச் சேகரிப்பதில் தோன்றும் தொல்லைதான் அதிகம்.

iii) கொசுத்தேன் : மிகவும் சிறிய அளவுள்ள தேனீக்கள் மரப் பொந்துகளில் அடையைக் கட்டும். சிறிதளவு தேன்தான் கிடைக்கும். தேனின் தரமும் குறைவுதான்.

iv) கொம்புத் தேன் : மரங்களின் கிளைகளைச் சுற்றி பெரிய தேனீக்கள் கட்டும் அடை மூலம் கிடைக்கும் தேன். தேனின் அளவு குறைவு; ஆனால் ருசி அதிகம். கிளைகளின் பக்கத்திலுள்ள சிறு கிளைகளை ஆட்டி, தேனீக்களைத் துரத்தி விடலாம்...

9) கஸ்தூரி மஞ்சள் : பெரிய மஞ்சள்- கஸ்தூரி மணம் வீசும். இதை சந்தனப் பொடியுடன் கலந்து இந்துப் பெண்கள் தங்கள் உடலில் தேய்த்துக் கொள்வர்...

10) லவங்கைப் பட்டை

11) தந்தம்.

'குத்தகைக்காரர், திருவாங்கூரைச் சேர்ந்த கிராமங்களில் உள்ளவர்களுடன் வணிகம் செய்கிறார். அவ்வூர்களில் முரட்டு மலைவாசிகள் வாழ்கின்றனர். அம்மலைகளின் மீது பத்து நாட்கள் அளவிற்கு நடந்து செல்லும் தூரத்தில் உள்ள கிராமங்களில் 10 அல்லது 12 குடிசைகளில் வசிக்கின்றனர். கொத்துக்காடு விவசாயம் செய்தபடி, மேற்சொன்ன பொருட்களையும் சேகரிக்கிறார்கள். மேலும், ஏலக்காய் அவர்களிடம் உள்ளது. அவர்கள் ஏலக்காயை ஆனைமலைக் குத்தகைதாரருக்கு விற்கிறார்கள். சனவரி மாதத்தில் அவற்றைக் கொண்டு வந்து அவரிடம் தருகிறார்கள். ஏலக்காய் சாகுபடியைப் பற்றி அவருக்குத் தெரியவில்லை. அவர் தெரிந்து வைத்திருப்பது ஒன்றுதான் - 'அம்மக்களின் முயற்சியின்றி தாமே வளரும் ஏலக்காய்ச் செடிகள் மூலம் ஏலக்காய் கிடைக்கிறது, - இங்குள்ள காடர்கள் சொல்வதன்படி, பக்கத்திலுள்ள திருவிதாங்கூர் மலைகளிலுள்ள மலைவாசிகள் ஏலக்காய் விளையும் இடங்களை அனுபவத்தின் மூலம் கண்டறிகிறார்கள். கானகத்தில் தென்படும் ஏலக்காய் மரங்களை வெட்டுகிறார்கள்; அதன் மூலம் அவ்விடத்தில் சூரிய ஒளி படர்கிறது - புதுச் செடிகள் வளர்கின்றன. மூன்று ஆண்டுகளில் அவை முதிர்கின்றன. மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் அவை நல்ல விளைச்சலைத் தந்து, பின்னர் இறக்கின்றன. அவ்வாறு செடிகள் வளர்ந்து வரும் சமயத்தில் கானகத்தின் வேறொரு இடத்தில் ஏலக்காய் மரங்களை வெட்டி புதுச்செடிகள் வளர வழி செய்கிறார்கள். ஜனவரி 10 முதல் பிப்ரவரி 9 வரை ஏலக்காய் பழங்கள் அறுவடைக்குத் தயாராகின்றன... ஏலக்காய் விதைகளும் இங்கு விற்கப்படு கின்றன... காட்டு மிளகுகளும் அந்த மலைகளில் கிடைக்கின்றன. ஆனால் அவற்றின் தரம் குறைவானது.

'கம்பெனியின் பாளையக்காரர்களில் ஒருவரான இருப்ப நாயக்கருக்குச் (Erupa Nayayaka) சொந்தமான சில குன்றுகளில் கிடைக்கும் 'கடுக்காய்'களை [ஒரு வித மருத்துவப் பழம். நெல்லிக்காய், தந்திரிக்காய், கடுக்காய் ஆகிய மூன்றும் சித்த

மருத்துவத்திற்கான திரிபலைகள் ஆகும்] எடுத்துக் கொள்ள குத்தகைதாரருக்கு உரிமம் தரப்பட்டுள்ளது.

'ஆனைமலையில் புளியமரக் குத்தகைதாரர்கள் மூவர் உள்ளனர். புளி, தேன், மிளகு, நுணாப் பட்டை ஆகியவற்றை நகரின் அருகிலுள்ள வனங்களிலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளனர் - சிறிதளவு குத்தகை தருகின்றனர். அந்தக் குத்தகைதாரர்களுக்கு 'மலசர்' எனப்படும் ஆட்கள் (இம்மக்களைப் பற்றி கோயம்புத்தூரிலும் பார்த்தோம். பார்க்க: அத்தி. 10) வேலை செய்கிறார்கள்; அவர்கள் இப்பகுதியில் மரம் வெட்டும் வேலைகளையும் செய்கின்றனர்.

'இங்கு பால மரங்கள் (Pula-tree or Nerium tinctorium) நிறைய உள்ளன. ஆனால் அவற்றிலிருந்து இப்போது நீலச் சாயம் செய்ய முன் வருபவர் யாரும் இல்லை. பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு தாராபுரத்திலிருந்து ஒரு ஆள் வந்தார். ஆனால் அவரைப் புலிகள் தூக்கிச் சென்று விட்டன. இந்த நகரில் உள்ள தோட்டங்களில் சில சந்தன மரங்கள் நடப்பட்டுள்ளன. ஆனால் அவை எதிர்பார்க்கும் அளவிற்கு வளரவில்லை. அவற்றின் இலைகள் பூசையின்போது சுவாமி சிலைகளுக்கு அர்ப்பணிக்கப் படுகின்றன. மலைகளில் அவை வளருவதில்லை.

'இம்மலைகளில் மேலும் சில நாட்கள் தங்கி, இங்குள்ள மரம், செடிகளைப் பற்றி அறிய விருப்பம் உண்டு. ஆனால் என்னுடன் வருபவர்கள் இங்கு வீசும் காற்றினால் உடல் சுகமில்லாமல் போகும் ஆபத்துள்ளது. அவர்களின் பாதிப் பேர்களுக்குக் காய்ச்சல் வரும் வாய்ப்பும் உள்ளது. காவேரிபுரம் கணவாயில் உள்ள மலைகளில் நான் அனுபவப்பட்டுள்ளேன்; ஆனால் இவ்விசயத்தில் காவேரிபுரம் மலைப் பகுதி ஆனைமலைப் பகுதியைவிட அதிக மோசமில்லை.

'இங்கு யானைகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டு வருகிறது - சில ஆண்டுகளாக அவற்றை வேட்டையாட யாரும் இல்லை. அவை ஆக்ரோஷமும் அழிவும் செய்யத் தக்கவை; தனியாகப் பயணம் செய்பவரை அவை கொல்கின்றன.

'காடர் என்கிற முரட்டு மலைச் சாதியினர் அருகிலுள்ள மலைகளில் வசிக்கின்றனர். அவர்கள் பேசும் மொழி நடை தமிழிலிருந்து வேறுபடுகிறது. குத்தகைக்காரருக்காகக் காட்டில் மூலிகை - மருந்துப் பொருட்களைச் சேகரிப்பதில் கிடைக்கும் வருமானத்தை வைத்துப் பிழைக்கிறார்கள். காட்டில் கிடைக்கும் கிழங்குகளை அவர்களின் பெண்கள் எடுத்து வருகிறார்கள். அம்மக்களிடம் மிருகம், பறவை யினங்களை வேட்டையாடுவதற்கான சாதனங்கள் இல்லை. காட்டில் இறக்கும் மிருகம், பறவைகளை உண்கிறார்கள். வீட்டு விலங்குகளை அவர்கள் வளர்ப்பதில்லை; நிலத்தில் பயிரிடுதலும் இல்லை. ஆனால் அவர்களின் உடை அக்கம் பக்கத்திலிருக்கும் விவசாய மக்களைப் போலவே உள்ளது. அவர்கள் வரி செலுத்துவதில்லை. அவர்களுக்குள் ஏற்படும் வழக்குகளைக் குத்தகைதாரர் தீர்த்து வைக்கிறார். ... அவர்கள் தங்கள் இனத்திலேயே திருமணம் புரிகிறார்கள். பல தார மணம் அனுமதிக்கப்படுகிறது. அப்படியான இரண்டாவது திருமணத்தின்போது அப்பெண்ணின் அம்மாவிற்குச் சில துணிகள், இரும்புக் கருவிகளை அந்த ஆள் பரிசளிப்பான். வந்திருப்போருக்கு விருந்துபசாரம் நடக்கும். ருதுவானதற்குப் பிறகு பெண்கள் திருமணத்திற்கு ஏற்றவளாகக் கருதப்படு கிறாள். கைம்பெண் திருமணத்திற்கு அனுமதி உண்டு. ஒரு பெண் கள்ள உறவு வைத்திருந்தால் கூட்டத்தார் முன்னிலையில் நிறுத்தி, விசாரித்து, அவளுடைய காதலனுடன் அவள் அனுப்பப்படுகிறாள். அக்காதலன், குத்தமாகக் கணவனிடம் பணம் தருவான். பிறகு அப்பெண்ணைத் தன்னுடன் அழைத்துச் செல்வான்.

'அவர்கள் மதுபானம் அருந்துவதில்லை. இறந்த உடலை அடக்கம் செய்கிறார்கள். இறந்த பிறகு நல்ல ஆத்மா தெய்வத்துடன் வாழும்; கெட்ட ஆத்மா, கெட்ட இடத்திற்குச் செல்லும் என நம்புகிறார்கள். அவர்களுடைய கோயில்கள் சிறிய குடிசைகள்தான். அவர்களின் கடவுள் சொரூபத்தையும், பேய்க்கொத்து அம்மன், (Pay-Cotu-Umman) காளியம்மன் என்னும் இரு பெண் தெய்வங்களின் உருவங்களையும்

வைத்துள்ளார்கள். இத்தெய்வங்கள், தமது பக்தர்களைப் புலி, யானை மற்றும் நோய்களிலிருந்து காப்பாற்றுவதாக நம்பு கின்றனர். அவர்களுக்குப் பூசாரிகள் இல்லை. ஆண்டிற்கொரு முறை எல்லா மக்களும் அக்கோயிலின் முன் கூடுகிறார்கள். பூக்களால் தெய்வங்களைப் பூசித்து, பொங்கலைப் படைக்கிறார்கள். சில சமயம் ஆட்டைப் பலியிடுகிறார்கள். மலைக்குக் கீழ் உள்ள இம்மக்கள், தாங்கள் விஷ்ணுவை வணங்குபவர் என்கிறார்கள். ஆனாலும் அவர்கள் செல்லு மிடங்களில் தென்படும் கடவுள் உருவங்களை வணங்கு கிறார்கள்.

'அவர்கள் கூறுவதன்படி, இம்மலைகளில் வசிக்கும் பிற மலைவாசிகளான விசாபூன் (Visabūn) அல்லது குறும்பன் (Corabun) என்பவர் அவர்களுடைய குருமார்கள். அக்குருமார்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். அவர்கள் தங்கள் குருவிற்குப் பரிசுப் பொருட்களை வழங்குவர்; குருவானவர் பூசை செய்யப்பட்ட திருநீறை அவர்களுக்குத் தருவார். அந்தக் குருமார்களுக்கும் பிராமணர்களுக்கும் தொடர்பேதும் இல்லை...'

இவ்வாறான தகவல்களுடன் தனது ஆனைமலை நகருக்கான வருகையை ஒரு நாளில் முடித்துக் கொள்கிறார் புக்கானன். அடுத்ததாக அவர் ஆனைமலைக் கணவாய் வழியே மேற்கு நோக்கிச் சென்றார். அது மலபார்ப் பகுதி. அடுத்த நாள் (நவம்பர் 28, 1800) அவர் சென்ற இடம் அக்கணவாய்ப் பகுதியிலுள்ள மின்னகரா (Mingara). அவ்வூர் ஆனைமலைக் காட்டின் மத்தியில் அமைந்துள்ளது. அது முன்னாளில் சமூரிய ராஜாவிற்குச் சொந்தமாயிருந்தது. இப்போது பொள்ளாச்சி தாசில்தார், ஆயுதமேந்திய பதினைந்து காவலர்களை அங்கு நிறுத்தியுள்ளார். அவர்கள் அங்குள்ள ஒரு குன்றின் மேலிருந்து வரும் ஒரு ஓடையின் கரையில் மூன்று குடிசைகளில் தனியே தங்கியுள்ளனர். உடல்நிலைக்கு ஆகாத பருவநிலை; 15 நாட்களுக்கு ஒரு முறைதான் அவர்கள் மாற்றி அனுப்பப் படுகிறார்கள். திருடர்களையும் ஆயுதமேந்திய கொள்ளைக்

காரர்களையும் தடுத்து நிறுத்துவதும், கள்ளக் கடத்தல், சட்ட விரோத ஊடுருவல்களைத் தடுப்பதும் அவர்களின் வேலை.

உயர்ந்த மரங்களின் மேல் அவர்கள் இரண்டு பரண்களை அமைத்திருந்தனர். எப்போதாவது தனியே வரும் ஆண் யானை அவர்களைத் தாக்க வரும்போது துப்பாக்கியால் சுட்டு அதைத் துரத்த முடியாத நிலையில் அவர்கள் அப்பரண்களின் மேல் ஏறிக் கொள்வார்கள். யானைக் கூட்டங்கள் அங்குள்ள ஓடையில் நீர் அருந்த வரும். ஆனால் முதல் வெடிச் சத்தத்தி லேயே பயமுறுத்தி அவற்றை ஓடச் செய்வார்கள். புலிகளினால் காவலர்களுக்குப் பெரும் தொல்லை நேராது. அவ்வழியே செல்லும் வியாபாரிகள் தண்ணீருக்காகவும் உணவு உண்பதற் காகவும் அங்குத் தங்குவர். அவர்கள் அக்காவலர்களின் துணையுடன் அங்கே இராத் தங்கலையும் மேற்கொள்வர். அந்தச் சாலை ஒரு பெருவழிப் பாதை; அங்கிருந்து ஆனைமலைக்கு பொதி ஏற்றிச் செல்லும் கால்நடைகளுக்கு வசதியான பாதை. சில இடங்களைத் தவிர பிற பாதை முழுவதும் வண்டிகள் செல்வது சுலபம். சிறிதளவு செலவு செய்தால் முழுப் பாதையையும் சீர் செய்துவிட முடியும் என்கிறார் புக்கானன்.

அங்குள்ள கானகம் புதர்கள், புற்கள் மண்டியிராமல் பார்க்க வசதியாயிருந்தது. அவற்றை விரிவாகக் காண மார்ச், ஏப்ரல் மாதங்கள்தான் உகந்தது என்கிறார் புக்கானன். அங்கிருந்து ஆனைமலை வரையிருந்த பூமியின் மண் பரவாயில்லை என்கிறார். தன்னுடன் மரம் வெட்டுபவர் சிலரை அழைத்துக் கொண்டு கானகத்தைப் பார்த்தவர், அங்கு தான் கண்ட 39 வகை மரங்களையும் அவற்றின் பயன்களையும் மரவெட்டிகள் தந்த தகவலின் பிரகாரம் குறிப்பிட்டுள்ளார். மரங்களின் பெயர்களைத் தமிழில் தந்துள்ளார்.

அங்குள்ள குன்றிலிருந்து வரும் ஒரு ஓடையில் இரும்புத் தாது கலந்து வந்ததைக் கண்டார் புக்கானன் - (சென்னிமலை, மூலனூர்ப் பகுதிகள் போன்று) கறுப்பு மணலுடன் கலந்து பட்டாணி அளவுகளில் வந்தது.

**மலபார்**

'மலபார்ப் பிராந்தியம் மூன்று ஆணையாளர்களால் நிர்வகிக்கப்படுகிறது. அவர்களுக்குக் கீழ் மாஜிஸ்திரேட்டு களும் கலெக்டார்களும் உள்ளனர். இந்த அதிகாரிகள் முன்பு பம்பாய் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள்; இப்போது புனித ஜார்ஜ் கோட்டை ராஜதானியுடன் இணைக்கப் பட்டுள்ளனர். இப்பிராந்தியத்தின் வருவாய், செலவுகளைக் காட்டிலும் மிகக் குறைவு...' என்று மலபாரைப் பற்றிச் சிறு அறிமுகத்துடன், அடுத்த நாள் (நவம்பர், 29) தான் மின்னகராவைத் தாண்டியதைக் குறிப்பிடுகிறார் புக்கானன். மின்னகராவை அடுத்துக் குறுக்கிட்ட ஒரு சிறிய ஆற்றைக் கடந்து மலபாருக்குள் சென்றதாகக் கூறுகிறார். முன்பு மலபார்ப் பகுதி சமூரிய (zamorin) ராஜாவிற்குச் சொந்தமானது. அந்த ராஜாவின் பெயரை மக்கள் குறிப்பிட்டுச் சொல்வதில்லையாம் - அவ்வளவு மரியாதை; பொதுவாக சமூரி ராஜா என்றே குறிப்பிட்டனர்.

அங்கிருந்து அவர் கொல்லங்கோட்டிற்குச் சென்றார்; அங்கு ஒரு மண் கோட்டை இருந்தது. அதை திப்பு சுல்தான் அழித்து விட்டார்... கொல்லங்கோட்டின் சுற்றுப்புறம் மிகவும் அழகாக, வங்காளத்திலிருந்த கிராமங்களைப் போல இருந்ததாம். ஆனால் வீடுகளின் அமைப்பு வேறு மாதிரி இருந்தது... அவ்வூரில் சுமார் ஆயிரம் வீடுகள் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவற்றில் கைக்கோளர் என்னும் தமிழ் நெசவாளர் குடும்பங்கள் வசித்து வந்தன; அவர்கள் தங்களுக்கு வேண்டிய பருத்திகளை கோயம்புத்தூரிலிருந்து இறக்குமதி செய்தனர். மலையாள மொழி வழக்கத்தில் இருந்தது; அம்மொழி, தமிழிலிருந்து கணிசமாக வேறுபட்டிருந்தது... என்று கொல்லங்கோட்டைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த நாள் அவர் பாலக்காட்டிற்குச் சென்றார். அங்கு மொத்தம் ஐந்து நாட்கள் தங்கினார். பின்னர் விலவங்கோடு, பொன்னானி, வடகரா, கோழிக்கோடு, மாஹே, தலைச்சேரி,

கண்ணனூர் போன்ற ஊர்களைப் பார்த்து விட்டு கருநாடக மாநிலத்திலுள்ள கனரா ஜில்லாவைப் பார்க்கச் சென்றார்.

ஜனவரி 15, 1801இல் தெற்கு கனரா மாவட்டத்திற்குச் சென்றவர் மங்களூர், உடுப்பி போன்ற இங்களைப் பார்த்தார். வட கனரா மாவட்டத்தையும் கண்டு (பிப்ரவரி 1801), கருநாடகம் மாநிலத்தின் சுதாப்புரம் (Soonda), சிர்சி, வனவாசி, இக்கேரி, தாவன்கரே, சித்தல துர்க்கம், சரவணபெலகொளா போன்ற ஊர்களைப் பார்த்து தனது குறிப்புகளைத் தந்துள்ளார். சரவணபெலகொளாவில் இருந்தபோது (மே 15, 1801) அவருக்குக் கண் நோய் கடுமையாக நேர்ந்தது. வெளியில் பார்க்கக் கண்கள் கூசும் அளவிற்கு நோய் இருந்தது. அதனால் சுருக்காக அவ்வூரைப் பார்த்து சீரங்கப்பட்டணத்திற்குத் திரும்பி விட்டார் (மே, 20). அங்குப் பதினைந்து நாட்கள் தங்கி தன் நோய் குணமாகி, கிழக்கி நோக்கிப் புறப்பட்டு மதராஸிற்குத் திரும்ப முற்பட்டார். அவ்வாறு அவர் சென்ற வழியில் சேலம் ஜில்லாவின் பாராமகால் பகுதிக்கு வந்தார். மீண்டும் அவர் தமிழ் நாட்டில் காலடி எடுத்து வைத்தார். அவ்வாறு அவர் வந்த இடம் தளி; நாள் ஜூன் 14, 1801.

அங்கிருந்து பாராமகால் பகுதியில் அவர் கண்டு, கேட்டவற்றைப் பின்னர் காண்போம்...

# 17

# கொங்குநாட்டில் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சிகள்

கி.பி. 1792ஆம் ஆண்டில் பாராமகால்-சேலம் மாவட்டங்கள் முழுவதையும் ஆங்கிலேயர்கள் ஆண்டனர். கலெக்டராக அலெக்சாண்டர் ரீடுவும், உதவி கலெக்டர்களாக தாமஸ் மன்றோ, கிரஹாம், மாக்ளியாட் ஆகியோரும் ஆட்சி புரிந்தனர் - இந்நால்வரும் ராணுவ அதிகாரிகளும் ஆவர். அப்போது திண்டுக்கல் பகுதியும் ஆங்கிலேயர் வசம் இருந்தது.

1799இல் திப்பு சுல்தானின் மரணத்திற்குப் பின்னர், அன்றைய கோயம்புத்தூர் மாவட்டம் ஆங்கிலேயருக்குக் கிடைத்த பகுதிகளில் ஒன்று. ஆக, கொங்குநாடு முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டது. 1799 ஜூலையில் ரீடுவின் கீழிருந்த பாராமகால்-சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு சேலம், கிருட்டிணகிரி என இரண்டு மாவட்டங் களாயின. கோயம்புத்தூர்ப் பகுதி வட கோயம்புத்தூர், தென் கோயம்புத்தூர் என்று இரண்டு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டும், சேலம்-வட கோயம்புத்தூர் ஒரு கலெக்டர் கீழும் (மாக்ளியாட்), திண்டுக்கல்-தெற்குக் கோயம்புத்தூர் ஒரு கலெக்டர் கீழும் (டி.பி. ஹூர்டிஸ் - ஏற்கனவே திண்டுக்கல் கலெக்டராயிருந்தவர்) கொண்டு வரப்பட்டன. 1799இல் கிருட்டிணகிரி மாவட்டத்துடன் ஓசூர், தேன்கனிக்

கோட்டைப் பகுதிகள் சேர்க்கப்பட்டன. கிரஹாம் அதன் கலெக்டர் ஆனார்.

**நிலவரி முறையில் மாற்றம்**

அக்காலத்திலும் அதற்கு முன்பிருந்த மன்னர்கள் காலத்திலும் நில வருவாய்தான் அரசாங்கத்தின் முக்கிய வருமானம். சேலம்-கிருட்டிணகிரி மாவட்டங்களில் ஏற்கனவே அலெக்சாண்டர் ரீடு கொண்டு வந்திருந்த நிலவரி முறை (ஜமீன்தாரி முறை இல்லாமல் நேரடியாக விவசாயிகளிடம் வரி வசூலிக்கும் முறை) தொடர்ந்தது. வட-தென் கோயம்புத்தூர் கோட்டங்களில் புதிய வரிவசூல் முறையைக் கொண்டு வருவதன் முன்னோட்டமாக நிலங்களை அளக்கும் வேலைகள் (சர்வே) தொடங்கப்பட்டன. ஏற்கனவே இருந்த கிராம அமைப்பு முறையையொட்டிய வரிவசூலும் தொடங்கியது. மாக்ளியாட்டைப் போல ஹுர்டிஸும் ரீடுவின் கீழ் உதவி கலெக்டராகப் பணியாற்றியவர்தான் (சில காலம்). ஆனால் அடிப்படையில் மாக்ளியாட் ஒரு ராணுவ அதிகாரி. ஹுர்டிஸ் நிர்வாகத் துறையிலிருந்து வந்த கலெக்டர். ஆகவே வட-தென் கோயம்புத்தூர்ப் பகுதிகளில் வரி விதிப்பு ஒரே மாதிரியாக அமையவில்லை. இருப்பினும் அவர்களின் வரி விதிப்பு நன்செய் நிலங்களுக்கு நிகர விளைச்சலில் பாதி அளவிற்கும், புன்செய் நிலங்களில் மொத்த விளைச்சலில் நாற்பது சதவிகிதமாகவும் இருந்தன. இவை அதிகம். விவசாயிகளின் கஷ்டங்களும் விசனங்களும் கூடின. நெருக்கிப் பிடித்து வரி வசூல் நடக்கலாயிற்று.

சேலம் ஜில்லாவில் ரீடுவிற்கு இருந்த தொலைநோக்குப் பார்வை இவர்கள் இருவருக்கும் இல்லை எனலாம். அத்துடன், 1801 செப்டம்பரில் மாக்ளியாட் மலபார் கலெக்டராக மாற்றப்பட்டார். அங்கு அவரால் பெருமளவில் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இரண்டு ஆண்டுகளில் வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டராக மாற்றப்பட்டார். திண்டுக்கல் கலெக்டராகத் தொடர்ந்த ஹுர்டிஸ் 1803 டிசம்பரில் பதவி உயர்வு பெற்று சென்னைக்குச் சென்றார்.

பவானியில் உதவி கலெக்டராயிருந்த வில்லியம் கேரோ என்பவர் 1802ஆம் ஆண்டு ஜூலை முதல் வட கோயம் புத்தூரின் கலெக்டராகப் பொறுப்பு வகித்தார். மலபாரில் முதன்மை கலெக்டராயிருந்த மாக்ளியாட் வட கோயம் புத்தூரின் மேலாண்மையையும் கவனித்து வந்தார். 1803 மே மாதம் முதல் கேரோ வட கோயம்புத்தூரின் கலெக்டராக நிரந்தரமாக்கப்பட்டார். பின்னர் நவம்பர் 1804 முதல் தென் கோயம்புத்தூர்க் கோட்டமும் இணைந்த கோயம்புத்தூர் ஜில்லாவின் கலெக்டராகத் தொடர்ந்தார் கேரோ.

**பாளையக்காரர்களின் வலிமை**

இப்படியான சூழலில் கி.பி. 1799க்கு முந்தைய நாற் பதாண்டு காலத்தில் மதுரைக்குத் தெற்கிலும் திருநெல்வேலி சீமையிலும் ஆங்கிலேயர்-பாளையக்காரர்களிடையே சண்டை, சச்சரவுகள் மூண்டு கொண்டிருந்தன. ஆர்க்காடு நவாபு ஆட்சியுரிமையில் சந்தா சாகிப் - முகமது அலி இடையே நிகழ்ந்த போட்டியில், சந்தா சாகிப்பின் சார்பில் பிரெஞ்சுக்காரரும், முகமது அலியின் பக்கம் ஆங்கிலேயரும் தத்தம் மூக்கை நுழைத்து பிறர் தலைகளை வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தனர். வெற்றி ஆங்கிலேயர் பக்கம் என்று முன்பே கண்டிருக்கிறோம்...

திருநெல்வேலி சீமையில் மட்டும் அப்போது 32 பாளையக் காரர்கள் இருந்தனர். மதுரை-ராமநாதபுரம் பாளையக்காரர் களும் இருந்தனர். மதுரை நாயக்க மன்னரில் கடைசியாக ஆட்சி புரிந்த ராணி மீனாட்சி வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்டபின் மதுரைக்குத் தெற்கிலிருந்த பாளையக்காரர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரமற்றதாக 'நவாப்' ஆட்சி திகழ்ந்தது. ஆனால் நவாப் முகமது அலியுடன் ஆங்கிலேயர் இருந்தனர். நவாப் சுகபோகங்களில் திளைத்திருக்க, பணம் ஈட்டவேண்டு மென்ற கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் சூழ்நிலைகளைப் பலவிதங்களில் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முனைந்தனர்.

அந்தச் சமயத்தில் தமிழ்நாட்டின் தெற்குப் பகுதி ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து வீரம் விளைவித்துக் கொண்டிருந்தது. ஆட்சியைப் பிடித்தல், அடக்குமுறை செய்தல் போன்ற சூழ்ச்சித் தந்திரங்களை மேற்கொண்டிருந்த ஆங்கிலேயருக்கு எதிராக பூலித்தேவரின் நெல்கட்டுஞ் செவ்வல், சிவகங்கை, பாஞ்சாலங்குறிச்சி, விருப்பாட்சி போன்ற ஊர்களின் பாளையக்காரர்கள் சுதந்திர வேட்கை கொண்டவர் களாகத் திகழ்ந்தனர்.

**சிவகங்கைச் சீமை**

ஆர்க்காடு நவாப் தனது அதிகாரத்தைச் செயல்படுத்தி வரி வசூலை மேற்கொள்ள மதுரைக்குத் தெற்கிலிருந்து பாளையங் களின்மீது கவனம் செலுத்த முற்பட்டார். அவருக்கு உதவியாக ஆங்கிலேயர், ராமநாதபுரம் சேதுபதி, புதுக்கோட்டை தொண்டைமான் ஆகியோர் இருந்தனர். அவர்கள் சிவகங்கையின் காளையார்கோவில் கோட்டையைத் தாக்கினர். சிவகங்கையின் மன்னன் முத்துவடுகநாதர் 1772இல் நயவஞ்சகமாக ஆங்கிலேயரால் கொல்லப்பட்டார். அவரது மனைவி வேலு நாச்சியார் அப்போது உடன்கட்டையேற முயன்றாள். அமைச்சர் தாண்டவராயப் பிள்ளை, மருது சகோதரர்கள் போன்றோர் வேலு நாச்சியாரைத் தடுத்து அரியணையில் ஏற்றினர். ஆங்கிலேயரின் எதிரிகளாயிருந்த ஐதர் அலி, பின்னர் திப்புவின் உதவியை அவர்கள் நாடினர். திண்டுக்கல் அவர்களுக்குப் பாதுகாப்பிடமாகத் திகழ்ந்தது.

நவாப் ஆட்சி நிலவினாலும், மக்கள் மனதில் வேலு நாச்சியார், மருது பாண்டியர் ஆகியோரே நிலைத்திருந்தனர். திறைப் பணத்தை நவாப்பின் ஆட்களால் திரட்ட முடியவில்லை. ஆகவே நவாபும் வெள்ளையரும் ஆட்சியை வேலு நாச்சியாரிடமே ஒப்படைத்தனர். ஆட்சிப் பொறுப்பை வேலு நாச்சியார் மருது சகோதரர்களிடம் ஒப்படைத்தார். அவர்களும் மக்கள் ஆதரவுடன் சிவகங்கையின் ஆட்சியை நடத்தி வந்தனர். நாட்கள் செல்லச் செல்ல பூசல்கள் படர்ந்து

வர, நவாப் ஆங்கிலேயரை எதிர்த்து 'கொரில்லா' போன்று பலவகைப் போர்களை அவர்கள் தொடுத்தனர்.

### பாஞ்சாலங்குறிச்சி

ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்ற இன்னொரு பாளையம் பாஞ்சாலங்குறிச்சி. அதன் பாளையக்காரன், கட்டபொம்மன். நவாபின் மேலாதிக்கம் தளர்வுற்றிருந்தபோது, தன்னாட்சி போன்று அதிகாரம் செலுத்தும் எண்ணம் கட்டபொம்மனுக்கும் வந்தது. நவாபின் சார்பில் ஆங்கிலேயர் திறைப்பணம் பெற முனைந்தனர். பூசல் தோன்றி போரிடும் நிலையும் ஏற்பட்டது. வீரபாண்டிய கட்டபொம்மன் (1760-1799) பட்டத்திற்கு வந்தது 1790ஆம் ஆண்டில். அவனுக்கு சிவத்தையா, ஊமைத்துரை என்று இரு சகோதரர்கள் இருந்தனர்.

திறைப்பணத்தைச் செலுத்துவதில் தன் முன்னோர்கள் காட்டி வந்த நீக்குப்போக்கான நிலையையே இந்தக் கட்ட பொம்மனும் கடைப்பிடிக்க நினைத்தான். ஆங்கிலேயரின் கெடுபிடி வரி வசூலால் பாளையக்காரர்கள் மத்தியில் அதிருப்தியும் கோபமும் உண்டாயின. கிபி. 1797இல் ராமநாதபுரத்தில் கலவரம் வெளிப்பட்டது. அதை அடக்க ஜாக்சன் என்ற கலெக்டர் அனுப்பப்பட்டான். கட்டபொம்மனுக்கு சேதி அனுப்பி தன்னைப் பேட்டி காண வருமாறு ஆட்களை அனுப்பினான், ஜாக்சன். தான் கட்டவேண்டிய திறைப்பணத்தின் விவரங்களைக் கேட்க கட்டபொம்மன் முன்வந்தான். அவனை இழுத்தடித்து, பேட்டி தர அவகாசம் இல்லாதவன்போல் காட்டிக் கொண்டு பல்வேறு ஊர்களில் வந்து சந்திக்குமாறு உதாசீனப்படுத்தி, அலைக் கழித்து, அவமதித்து கலெக்டர் சென்ற ஊர்களுக்கெல்லாம் தொடரச் செய்து, கடைசியாக 400 மைல் தூரம் சுற்றி வந்தபின் ராமநாதபுரம் மாளிகையில் பேட்டி காண அழைத்தான். மூன்று மணி நேரம் கணக்கைச் சரிபார்த்தான் (1798), கலெக்டர். கட்டபொம்மனை நிற்க வைத்துச் செய்த அவனுடைய செயல் அந்த ராஜகம்பளத்து வகையறா பாளையக்காரனை வன்மம் கொள்ள வைத்தது.

தன்னைக் கைது செய்ய கலெக்டர் இவ்வாறான தந்திரங்களைக் கையாள்கிறான் என யூகித்த கட்டபொம்மன், கலவரம் செய்து அங்கிருந்து தப்பித்துச் சென்றான். தவறு ஜாக்சன் மீதுதான் என்றானது. அவனை மாற்றி வேறு கலெக்டரை நியமித்தார்கள். அந்தக் கலெக்டர் காலத்திலும் கட்டபொம்மன் - வெள்ளையர் உரசல்கள் தொடர்ந்தன. இருப் பினும் சமயம் பார்த்திருந்த கம்பெனியார், சீரங்கப்பட்டணம் வீழ்ந்த பின்னர், மேஜர் பானெர்மன் தலைமையில் பெரும் படை ஒன்றை பாஞ்சாலங்குறிச்சிக்கு அனுப்பினர். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை தாக்கப்பட்டது (செப்டம்பர் 15, 1799). உணர்ச்சி பொங்கியிருந்த மக்கள் நாள் முழுவதும் கோட்டையைக் காத்தனர். பாஞ்சாலங்குறிச்சித் தளபதி வெள்ளையத் தேவனின் வேலால் ஆங்கிலப்படைத் தலைவன் காலின்ஸ் குத்திக் கொல்லப்பட்டான். இருதரப்பிலும் பல உயிர்கள் பறிபோயின. கோட்டையினுள் இருப்பதைவிட வெளியில் சென்று போரை நீடிக்கலாம் என்று கோட் டைக்குள்ளிருந்தவர் முடிவு செய்தனர். கட்டபொம்மன் உட்பட பலரும் தப்பிச் சென்றனர்.

தப்பியவர்களைப் பிடிக்க மேஜர் பானெர்மன் வீரர்களை அனுப்பினான். கட்டபொம்மனின் எதிரணியிலிருந்த எட்டயபுரம் பாளையக்காரன் அதற்கு உதவினான். கட்டபொம்மனுக்கு ஆதரவாயிருந்த பாளையங்களில் ஒன்றான கோலார்ப்பட்டிக் கோட்டையிலிருந்த கட்டபொம்மனை எட்டையபுரத்தான் கண்டுபிடித்தான். இருந்தும் கட்டபொம்மன் மீண்டும் தப்பித்துச் சென்றான். முக்கிய அலுவலரான சுப்பிரமணிய பிள்ளை கைதானார். பின்னர் அவர் தூக்கிலிடப்பட்டார். அவரது தலை பாஞ்சாலங்குறிச்சியில் மக்கள் கண்களில் படும்படி வைக்கப்பட்டதாம். நாகலாபுரம் பாளையக்காரனின் தம்பி சௌந்தர பாண்டிய நாயக்கரும் தூக்கிலிடப்பட்டான். சிக்காமலிருந்த வெள்ளையத் தேவனைப் பிடித்துத் தருபவனுக்கு ஆயிரம் வெள்ளி பரிசு அறிவிக்கப்பட்டது.

பணத்திற்கு ஆசைப்பட்டு வெள்ளையத் தேவனின் மாமனே அவனைப் பிடித்துக் கொடுத்தானாம்.

தப்பிச் சென்றிருந்த கட்டபொம்மன் புதுக்கோட்டைப் பகுதியில் தங்கியிருந்தான். புதுக்கோட்டை தொண்டைமான் கட்டபொம்மனைப் பிடித்துத் தந்தான். மேஜர் பானெர்மன் ராணுவ விசாரணை நடத்தினான். கட்டபொம்மனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அக்டோபர் 16ஆம் நாள் பிற பாளையக்காரர்கள் முன்னிலையில் கயத்தாறில் ஒரு புளிய மரத்தில் தூக்கிலிடப்பட்டான்.

## விருப்பாட்சி

மதுரை நாயக்க மன்னர்களின் பாளையங்களில் திண்டுக்கல் சீமைப் பகுதியிலிருந்த ஒரு முக்கியப் பாளையம் விருப்பாட்சி. 14ஆம் நூற்றாண்டு முதல் 'திருமலை' சின்னப்ப நாயக்கர் வம்சாவளியாக இப்பாளையக்காரர்கள் விளங்கினர். பல போர்க்களங்களில் மதுரை மன்னரின் தரப்பில் நின்று எதிரிகளுடன் தீரமாகப் போரிட்ட வரலாறு தொட்டிய கம்பளத்தாரான இப்பாளையத்தார்களுக்கு உண்டு. பழனி-திண்டுக்கல் சாலையில் சத்திரப்பட்டிக்கு மூன்று கல் தொலைவில் விருப்பாட்சி உள்ளது. இப்பாளையப்பட்டின் அதிகாரத்தில், ஐதர் அலி - திப்பு சுல்தான் மற்றும் வெள்ளையர் ஆட்சியின் தொடக்க ஆண்டுகள் முதல் கோபால் நாயக்கர் இருந்து வந்தார். கி.பி. 1800இல் அவர் 73 வயதுக்காரர்! பாளையப்பட்டுக்களின் வம்சாவளி இவரது பெயரை 'குப்பள சின்னப்ப நாயக்கர்' (கி.பி. 1762-1802) எனக் குறிப்பிடுகிறது. (திண்டுக்கல் தொல்லியல் கையேடு - பக். 25, மதுரை கஜட்டியர், 1906, பக். 311). பரம்பரை மன்னர்களின் கீழ் பாளையக்காரராக இருப்பதற்கும், முற்றிலும் புதிய சூழ்நிலையில் ஆங்கிலேய அதிகாரிகளின் ஆட்சிக்குட்பட்டு நடக்க வேண்டிய நிலைக்கும் மிகுந்த வேறுபாட்டை கோபால நாயக்கர் உணர்ந்திருந்தார் போலும். புதிய ஆட்சியை ஏற்றுக் கொண்டிருந்தாலும் பரங்கியரின் ஆட்சி, மாற்றார் ஆட்சி என்ற

நினைப்பு அவருக்கு வேம்பாய் கசந்தது. திண்டுக்கல் பகுதி ஆங்கிலேயருக்குக் கிடைத்தபோது (1790-92), அவர்களுக்குத் திறைப்பணத்தைச் செலுத்தி வந்தார். ஆனால் உள்ளுக்குள் அவர்களுக்கெதிராக வன்மத்தை வளர்த்து வந்தார்.

**தீரன் சின்னமலை**

நொய்யல் ஆற்றங்கரையிலிருக்கும் பழைய கோட்டை பட்டக்காரர் மன்றாடியார் வழித்தோன்றல் தீர்த்தகிரி. ஆங்கிலேயரின் ஆட்சி கோவை மண்டலத்தில் ஏற்பட்ட பின்னர் அவர்களுக்கெதிராக இம்மண்ணில் கிளர்ச்சிக் கொடியை உயர்த்திப் போராடியதொரு முக்கியமான போராளி தீர்த்தகிரி (1756-1805). 'மண்ணின் மைந்தன்' என்ற தன்மான உணர்வு தீர்த்தகிரியின் மனதில் ஐதர் அலி-திப்பு சுல்தான் ஆட்சியின்போதே வெளிப்பட்டது. ஒருமுறை தாராபுரம் பகுதியிலிருந்து வரி வசூல் பணத்துடன் காங்கேயம்-சென்னிமலை வழியே திரும்பிக் கொண்டிருந்த மைசூர்ப் படை வீரர்களைத் தடுத்து அப்பணத்தை தீர்த்தகிரியும் அவனது ஆட்களும் கைப்பற்றினர். நமது பணம் ஏன் மைசூர் செல்ல வேண்டும் என்ற சுதேசி உணர்வு அவர்களின் மனதில் கனன்று கொண்டிருந்ததன் வெளிப்பாடு அது. அப்போது, 'வழிப்பறி செய்யும் நீ யார்?' என்று படை வீரர்கள் கேட்க, 'சிவன்மலைக்கும் சென்னிமலைக்கும் இடையில் உள்ள 'சின்னமலை' எனப் பதில் தந்தான். அது முதல் தீர்த்தகிரியின் பெயர் சின்னமலை என்றாயிற்று.

ஆங்கிலேயர் ஆட்சி முற்றிலும் வேறுபட்டதாகவும், ஆட்சியாளர்கள் வித்தியாசமானவர்களாக இருந்ததும், மக்களை நெருக்கி வரி வசூல் செய்த கெடுபிடிகளும் சின்னமலையின் மனதைக் கிளர்ந்தெடுக்கச் செய்ததில் வியப்பில்லை. அவனுக்குத் துணையாக வீரர்கள் கூட்டம் இருந்தது. அங்கும் இங்குமாக பரங்கியரின் ஆட்சிக்கெதிராக கோவை மண்டலத்தில் வெளிப்பட்ட கிளர்ச்சிகளில் சின்னமலை பங்கேற்றான். கொங்கு நாட்டின் மேல்கரைப் பூந்துறை நாட்டின் தெற்கில் நொய்யலாற்றின் அருகில் உள்ள

ஓடாநிலை என்கிற ஊரில் கோட்டை கட்டி அதைத் தனது தலைமை இருப்பிடமாக்கினான்.

**கேரள வர்மன்**

மலபாரிலுள்ள 'வயநாடு', நீலகிரி மலைகளின் தொடர்ச்சியாக மேற்கிலுள்ள பகுதி. கோட்டயம் அருகே 'பழசி' என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு 'கேரள வர்மன்' என்னும் ராஜாக்கள் வயநாட்டை ஆண்டு வந்தனர். கி.பி. 1787-1788ஆம் ஆண்டுகளில் திப்பு சுல்தான் தொடுத்த அச்சுறுத்தல்களால் மூத்த கேரளவர்ம ராஜா இளைய கேரளவர்மன் பொறுப்பில் நாட்டை விட்டுவிட்டு திருவிதாங்கூர் நாட்டிற்கு ஓடினார். திப்புவின் அதிகாரத்தையும் மீறி வயநாட்டின் காடுகளில் ஒளிந்தவாறு நில வருவாயை வசூலித்து வந்தான் கேரள வர்மன்.

1792இல் சீரங்கப்பட்டணத்தின் தோல்விக்குப் பின், மலபார் (வயநாடு உட்பட) ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. திருவிதாங்கூர் சென்ற ராஜா திரும்பி வந்து ஆங்கிலேயரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவருடைய நாடு திருப்பித் தரப்பட்டது. வருவாயில் ஒரு பகுதியை கம்பெனி அரசாங்கத்திற்குத் தந்திட ஒப்பந்தம் ஏற்பட்டது. வருவாயைப் பங்கிட கேரள வர்மன் எதிர்ப்புக் காட்டினான். விளைவு - காட்டுப்பகுதி மக்களின் ஆதரவுடன் கம்பெனி அரசின் நடவடிக்கைகளை எதிர்த்தான். மலபார் பகுதியில் கிளர்ச்சிகள் தொடர்ந்தன. மலபார் விளைச்சலில் மிளகு முக்கியப் பொருள். ஆங்கிலேயரின் வருவாய் ஆதாரமான அக்கொடிகளை அழித்து விடவும் முனைவேன் என்று கேரள வர்மன் கோடிட்டுக் காட்டியதை அறிந்து, 1796இல் கம்பெனிப் படையொன்று 'பழசி'யைத் தாக்கி, பொருட்களையும் கேரளவர்மனின் பணம் 17,000 ரூபாயையும் கவர்ந்து சென்றது.

தப்பித்துச் சென்ற கேரளவர்மன் ஆங்கிலேயருடன் உறவுக்குக் கரம் கொடுக்க முன்வந்தான். 17,000 ரூபாய் பணத்தைத் தவிர நாட்டையும் பொருட்களையும் கம்பெனி அரசாங்கம் திருப்பித் தந்தது. ஏமாற்றமடைந்த 'பழசிராஜா'

மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபட்டான். மலைவாழ் மக்கள், விவசாயிகள், உள்ளூர்த் தலைவர்கள் என்று வெகுஜன ஆதரவு மட்டுமன்றி, மலபாரின் 'மாப்பிள்ளைமார்', பிற தலைவர்கள், கோயம்புத்தூர்ப் பிராந்தியக் கிளர்ச்சியாளர் போன்றோரின் ஒத்துழைப்பும் அவனுக்குக் கிடைத்தது. கிளர்ச்சியின் ஒரு களமாக கோயம்புத்தூர் மாறி வந்தது. கிளர்ச்சியின் தலைவர்கள் திப்பு சுல்தானின் உதவியை நாடவும் செய்தனர். எங்கும் 'கொரில்லா' தாக்குதல்கள் நடந்தன. மலைப்பகுதியான வயநாட்டின் மீது 'மைசூர்-ஆங்கிலேயர்' என இரு ஆட்சியாளர்களின் ஆட்சிகளும் அங்கு எடுபடாமல் இருந்தன. 1796இல் திப்புவையும் அவரது 'கங்கனிக் கோட்டை'யின் தலைவனையும் கேரளவர்மன் சந்தித்தான் - அவற்றை அறிந்த கூர்க் ராஜா (பிரிட்டிஷாரின் அத்தியந்த கூட்டாளி) ஆங்கிலேயருக்குத் தகவல் தந்தான். விளைவு?

பிரித்தாளும் சூழ்ச்சியை ஆங்கிலேயர் மேற்கொண்டனர். அவர்கள் சமரசத்திற்கு வந்தனர். கேரளவர்மனுடன் உடன்பாடு ஏற்பட்டது (23.7.1797). அவனுடைய 17,000 ரூபாய் திருப்பித் தரப்பட்டது. அவனுடைய குற்றங்கள் மன்னிக்கப்பட்டு, வருடத்திற்கு 8,000 ரூபாய் ஓய்வூதியம் தர முடிவானது. வயநாடு ஆங்கிலேயருடையதாயிற்று.

இருப்பினும், கிளர்ச்சியாளர்கள் கேரளவர்மனின் உடன்பாட்டை ஏற்கவில்லை. தங்களுக்குள் ரகசியத் தொடர்பில் இருந்தனர். கேரளவர்மன் திப்புவுடனும் ரகசியத் தொடர்பில் இருந்தான். கேரளவர்மனின் நம்பிக்கைக்குரிய ஏமன் நாயரை சீரங்கப்பட்டணத்திற்கு அனுப்பினால் கிளர்ச்சியாளருக்கு உதவ படையை அனுப்பி வைப்பதாகத் திப்பு தெரிவித்தார். ஆனால் ஏமன் நாயர் செல்லவில்லை. தமிழ்நாட்டுக் கிளர்ச்சியாளர்களோ கேரளவர்மனை மசிய வைத்து தங்களது போராட்டங்களின் தலைமையை ஏற்க வைக்க முயன்றனர். திப்புவின் மரணத்திற்குப் பின்னரும் கம்பெனியாருக்கு எதிரான பழசிராஜாவின் கிளர்ச்சி தொடர்ந்தது.

## கிளர்ச்சிகளின் ஏற்றமும் முடிவும்

மேலே குறிப்பிட்டவர்கள் அனைவரும் கி.பி. 1800லும் அதற்கு முன்பும் பின்பும் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள். அக்கிளர்ச்சிகள் கொங்கு நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கொங்கு நாட்டில் பிரதிபலித்த அக்கிளர்ச்சிகளில் பங்கேற்றோர் பலர் இருந்தனர். குறிப்பாகச் சிலரது பங்கேற்பைக் காண்போம்.

## கர்நாடகக் கிளர்ச்சிகள்

திப்பு சுல்தானின் மரணத்திற்குப் பின் மைசூரின் கனரா மாவட்டம் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. தாமஸ் மன்றோ அதன் முதல் கலெக்டர் ஆனார் (ஜூலை, 1799). தூந்தாஜி வாக் என்பவர் வடக்கு மைசூர்-சிமோகா பகுதியைச் சேர்ந்தவர். ஐதர் அலி - திப்பு சுல்தான் காலத்தவர். திப்புவின் மறைவுக்குப் பிறகு அங்கு தோன்றிய ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போராடியவர். கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரும் கம்பெனியாருக்கு எதிரான ஒரு போராளி. மேற்கு கர்நாடகத்தின் ‘பெல்லம்’ என்ற பகுதியின் நாயக்கராக இருந்தவர். அப்பகுதியில் வேறு சில குறிப்பிடத்தக்க கிளர்ச்சியாளர்கள் இருந்தனர். அவர்கள் வேலூர் சிறையிலிருந்த திப்புவின் மகன் ஃபத்தே ஐதரின் பெயரில் மக்கள் மத்தியில் செய்திகளைப் பரப்பி திப்பு-ஆங்கிலேயர் படைகளிலிருந்த முன்னாள் வீரர்களைத் திரட்டினர்.

தூந்தாஜியும் கிருஷ்ணப்ப நாயக்கரும் கனரா மாவட்டத்தில் ஆயுதங்களைப் பெறவும், ஆட்களைத் திரட்டவும், குதிரைப் படையைத் திரட்டவும் சக்தி வாய்ந்தவர்களாய் இருந்தனர். கனராவின் கலெக்டர் தாமஸ் மன்றோ அவர்களின் கிளர்ச்சிகளை அடக்கத் துடித்தார். ஆனால் போதிய படை வலிமை இல்லாமலிருந்ததால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இயலாமல் தவித்தார். இருப்பினும், ஆர்தர் வெல்லெஸ்லி (கவர்னர் ஜெனரலின் சகோதரர்/பின்னாளில், 1815இல் ஐரோப்பாவில் நெப்போலியனைத் தோற்கடித்தவர்) மைசூர், வங்காளம்,

பெங்களூரு போன்ற இடங்களிலிருந்து படைகளை வரவழைத்து தூந்தாஜியின் கிளர்ச்சிகளை முறியடிக்க முனைந்தார். அதன் விளைவாக சித்தலதுர்கம், சிங்கேரி, நாகர், சிமோகா, குத்தி, ஷிகர்ப்பூர் போன்ற பல இடங்களில் தூந்தாஜியின் போராளிகளுடன் தாக்குதல்கள் நடந்தன (ஜூலை-ஆகஸ்ட், 1799). அவற்றில் தூந்தாஜியும் நேரில் கலந்து கொண்டார். ஒரு கட்டத்தில் (ஷிகர்ப்பூர்) மும்முரமான போரிலிருந்து அவர் தப்பித்தும் சென்றார்.

## கர்நாடக—தமிழ்நாட்டுப் போராளிகளின் ஒருங்கிணைப்பு

தூந்தாஜி வாக் - கிருஷ்ணப்ப நாயக்கரின் போராட்டங்கள் தமிழ்நாடு-கொங்கு நாட்டுக் கிராமங்களில் பேசும் - விவாதப் பொருளாக உருவெடுத்தன. இங்கிருந்த கிளர்ச்சியாளர்கள் அங்கிருந்தவருடன் தொடர்பு கொண்டு தம் போராட்டங்களை வலுப்படுத்த முயன்றனர். ஏற்கனவே மருது பாண்டியர், ஊமைத்துரை, கோபால் நாயக்கர், கேரளவர்மன் போன்றோரிடம் ரகசிய/வெளிப்படைச் சந்திப்புகள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

பரமத்தி (நாமக்கல்) அப்பாவு (அப்பாஜி கவுர் என்று குறிப்பிடப்படுகிறார்), வெங்கடரமணய்யா, பெருந்துறை கிராமத் தலைவர் (படேல்) சின்னக் கவுண்டர், ஒசூரைச் சேர்ந்த ஃபத்தே முகமது, முகமது ஹாசம், ரமானுல்லா கான், மணப்பாறை லட்சுமி (லக்கம) நாயக்கர், தளி (ஆனைமலை) யாதுல் (எத்துல) நாயக்கர், கோயம்புத்தூர் நரசிங்கராவ், மைசூர் காஸி கான், ஈரோடு வாரணவாசி கவுண்டர், அரவக்குறிச்சி பெரியதம்பி, பொள்ளாச்சி தாசில்தார் சேசய்யா, சேலம் கான்-இஷா-கான் போன்று பல தலைவர்கள் வடக்கு-தெற்கு, கிழக்கு-மேற்கு என்று குறுக்கு-நெடுக்கில் தங்களிடையே தகவல் பரிவர்த்தனைகளையும், செயல் திட்டங்களையும் செய்து வந்தனர். அவற்றில் பல ரகசியமாகவும் தங்களுக்கான குறியீடுகளாகவும் செய்து கொண்டனர். தூரம், மொழி, மலை, வனம்போன்ற இயற்கை இடையூறுகள், பொருள் தேவை போன்றவற்றையும் தாண்டி கிளர்ச்சியாளர்களின்

ஒருங்கிணைப்பு ஏற்பட்டது. அவர்களிடையே பேசும் மொழி ஒரு தடையாக இல்லை. காரணம் ஒன்றுக்கு மேற்பட்ட பேச்சு மொழியை அவர்களில் பலர் அறிந்தவர்கள்.

- தூந்தாஜியை இங்கிருந்து சென்ற சின்னாக்கவுண்டர், பத்தே முகமது, முகமது ஹாசம், ரமானுல்லா கான் ஆகியோர் சந்தித்தனர்.
- அவர்கள் திரும்பி வந்தபோது, தனது நம்பிக்கைக்குரிய மூவரை தூந்தாஜி இப்பகுதிக்கு அனுப்பி வைத்தார். (ஏப்ரல், 1800)
- அப்பாஜியுடன் கலந்தாலோசித்து, வெங்கடரமணய்யா, அவரது சகோதரர் நரஹரியுடன் சென்று தூந்தாஜியைச் சந்தித்தார். அவர்களிடம் போராட்ட விவரங்களைக் கேட்டறிந்ததாகவும் தாம் படையுடன் இப்பகுதிக்கு வருவதாகவும் தூந்தாஜி பெரியதம்பிக்குக் கடிதம் எழுதினார். வெங்கடரமணய்யாவிடம் விருப்பாட்சி, பெருந்துறை, ஈரோடு, ராமகிரி போன்ற ஊர்களின் பாளையக்காரர்/தலைவர்களுக்கும் கடிதம் தந்தார் தூந்தாஜி.
- பிறிதொரு முறை அப்பாவு, சேலம் கான்-இஷா-கானின் உறவினர் ரிஜா சாகிப், கோபால் நாயக்கரின் வக்கீல் தும்மச்சி முதலி ஆகியோரும் தூந்தாஜியைச் சந்தித்தனர். தூந்தாஜியிடமிருந்து சிவகங்கை, மானாமதுரை, ஈரோடு, ஆனைமலை, அரவக்குறிச்சி, கரூர், காங்கேயம், பெருந்துறை, சத்தியமங்கலம் போன்ற மையங்களின் தலைவர்களுக்கு தூந்தாஜி (கன்னடத்தில்) எழுதிய உணர்ச்சிமிக்க கடிதங்களைக் கொண்டு வந்தனர், அப்பாஜி குழுவினர்.

### கோயம்புத்தூரைத் தாக்கும் திட்டம்

தங்களுக்குள் ஆலோசனைகளைப் பரிமாறிக்கொண்ட போராட்டத் தலைவர்களின் கவனம் கோயம்புத்தூர்க் கோட்டையின் மேல் பட்டது. அப்போது அக்கோட்டை

ஆங்கிலேயப் படையின் ஐந்தாவது ரெஜிமென்டின் தலைமையிடமாயிருந்தது; லெப்டினன்ட் கர்னல் மக்லிஸ்டர் என்பவரின் தலையில் இயங்கியது. மலபார், மேற்கு-தெற்கு தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய பகுதிகளின் நடவடிக்கைகளைக் காண உதவும் கேந்திரமாக கோயம்புத்தூர் அமைந்திருந்தது. ஆகவே, அக்கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றுவது அவசியமென நினைத்தனர். அதனால் அப்பகுதியில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் அகலும் என்பது அவர்களின் கணிப்பு.

1800 ஏப்ரல் இறுதியில் போராட்டக் குழுவின் முக்கியத் தலைவர்கள் பழனிக்கருகில் குன்றுகளடர்ந்த விருப்பாட்சிப் பகுதியில் சந்தித்தனர். தாக்குதல் நடத்த வேண்டிய நாளையும் முடிவு செய்தனர். அது ஜூன் 3, 1800. அந்தத் தேதி 'மொகரம்' அனுசரிக்கும் நாள். அந்த நாளில் முஸ்லிம் அரசர்கள் போரை நடத்த மாட்டார்கள். உதாரணமாகச் சொல்ல, கி.பி. 1790 செப்டம்பரில் திப்பு சுல்தான் - கர்னல் ஃபிளாயிட் படைகளுக்கிடையே சத்தியமங்கலம்-சேவூர்ப் பகுதிகளில் போர் நடந்தது. அப்போது ஒரு கட்டத்தில் இரண்டு படைகளும் போர்க்களங்களிலிருந்து பின்வாங்கிக் கொண்டன. திப்புவின் செயலுக்குக் காரணம் - 'மொகரம்' நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. போரைத் தொடர்ந்து நடத்த அவர் விருப்பம் கொள்ளவில்லை. நபிகள் நாயகத்தின் பேரன்கள் கொலை செய்யப்பட்டதன் (சகீத்) நினைவை அனுசரிக்கும் பத்து நாட்களுக்குப் போர் நிறுத்தம் செய்தார். பதினைந்து நாட்களுக்குப் பின்னர் திப்பு தன் படையை மீண்டும் நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே 'மொகரம்' நாளில் கோயம்புத்தூர் கோட்டையிலிருந்த கணிசமான முஸ்லிம் வீரர்கள் சண்டையில் ஈடுபட மாட்டார்கள்; தாக்குதலைத் தொடர அது ஏற்ற தருணமாயிருக்கும் என எண்ணினரோ, என்னவோ! குறிப்பாக, கோயம்புத்தூர் நகரைக் கைப்பற்றும் திட்டத்தை சேக் ஹுசேன் தலைமை ஏற்று நடத்தினான் என்று கலெக்டர் அறிக்கை

தந்தார் (15.6.1800). சேக் ஹுசேன் திப்புவின் ஆட்சியில் ஆமில்தாராக இருந்தவன்.

தனது குதிரைப் படையை அனுப்புவதாக தூந்தாஜி உறுதி அளித்திருந்தார். சுதேசிப் படையினர் 500 முதல் 600 பேர் வரை கோயம்புத்தூரில் மக்களோடு மக்களாக ஊடுருவினர். குறுவாள், கத்தி, கம்பு, நாட்டுத் துப்பாக்கி போன்றவை அவர்களது ஆயுதங்கள். கான்-இஷா-கான் தலைமையில் தூந்தாஜியின் குதிரைப்படை கஜல்கட்டிக் கணவாய் (சத்தியமங்கலம்) வழியே வருமென எதிர்பார்க்கப்பட்டது. கிளர்ச்சியாளர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.

- ஒசூர் ஃபத்தே முகமது, அரவக்குறிச்சி கௌரக் கவுண்டர் தலைமையில் ஒரு குழு தாராபுரத்தைக் கைப்பற்றவும்,
- இச்சிப்பட்டி ரமானுல்லா கான் தலைமையில் காங்கேயம் நோக்கி ஒரு குழுவும்,
- முகமது ஹாசம், பரமத்தி அப்பாவு, சாமையா ஆகியோர் தலைமையில் மூன்று குழுக்கள் தனித்தனியே கோயம்புத்தூரைக் கைப்பற்றவும் புறப்பட்டன.

விருப்பாட்சி, தாராபுரம், தலைமலை, சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் சுதேசிப் படையினரின் நடமாட்டம் வெளிப்படையாகத் தெரிய வந்தது. மேற்கு கர்நாடகத்தின் கிருஷ்ணப்பாவின் படையினர் மீது ஆங்கிலேயப் படைகள் ஏப்ரல்-மே மாதத்தில் தாக்குதல் நடத்தியது. கிருஷ்ணப்பா அதை எதிர்கொண்டிருந்தார். வடக்கிலிருந்து அந்தப் பகுதி வழியே வந்து கோயம்புத்தூர்ப் பகுதிக்கு வர எண்ணியிருந்த தூந்தாஜி படையினரின் திட்டம் தடைபட்டது.

கோயம்புத்தூர்த் தாக்குதல் நாளான ஜூன் 3க்கு முன்பே அங்குக் குழுமியிருந்த போராட்ட வீரர்கள் தங்களின் உணர்ச்சிப் பெருக்கால் அங்கும் இங்குமாகத் தாக்குதல் முயற்சிகளைத் தொடுத்தனர். கோயம்புத்தூர் தாசில்தார் உளவு அறிந்து கொண்டார். கோட்டைத் தாக்குதல் நேரிடும்என்று படைத்தலைவருக்குத் தகவல் தந்தார். கோட்டைக்குள்ளிருந்த

படை வெளிப்பட்டது. போராளிகளை விஞ்சியது அப்படை. கோயம்புத்தூர் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டது. கேப்டன் ஜோன்ஸ் தலைமையிலான படை கிளர்ச்சியாளர்களைக் கைது செய்தது. கேப்டன் இன்ஸும் அவனது படையினரும் 17 பேர்களை ஜூன் 1ஆம் தேதி காலையிலேயே கைது செய்தனர். வெளியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட படையுதவி வந்து சேராததும் கிளர்ச்சியின் தோல்விக்கு ஒரு காரணம்.

போராட்டக்காரர்கள் அங்கும் இங்குமாகத் தப்பிச் சென்றனர். கம்பெனிப் படை அவர்களை மேற்கு மலைப் பகுதி வரைத் துரத்தியது. பரமத்தி அப்பாவு கைதானார். கான்-இஷா-கான், தாசில்தார் சேசய்யா, ஃபத்தே முகமது, முகமது ஹாசம், ரமானுல்லா கான், சேக் அகமது, நரசிங்கராவ் என்று மொத்தத்தில் 49 பேர் கோயம்புத்தூர், தலைமலை, சத்தியமங்கலம், பல்லடம் போன்ற ஊர்களில் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களின் பட்டியலில் கண்ட வேறு சில பெயர்கள்: சின்னாக் கவுண்டர், கோவிந்த சிங், சேக் ஹுசேன், நஞ்சையா (இருவர்), வெங்கடராமையா, நஞ்ச கவுண்டர், அரசப்ப கவுண்டர், சாமையா, சின்னான், குமாரசாமி, சேக் அப்துல் காதர், சேக் மாதர், வீரா, சேக் முகமது, பழனி, வேலு, மாரிமுத்து, காளி, ஆண்டி, கருப்பன், குப்பன்... சேக் ஹுசேனை கஜல்கட்டிக் கணவாய் அருகில் ஜமால் கான் என்பவன் பிடித்துத் தந்தான். அவனுக்கு நல்லதொரு குதிரை பரிசாகத் தரப்பட்டது. கேப்டன் ஜோன்ஸின் படை வீரர்களுக்கு பின்னர் வெகுமதிகள் வழங்கப்பட்டன. சத்தியமங்கலம் தாசில்தாருக்கு 20 பகோடா மதிப்புள் சால்வை அளித்து கம்பெனி அரசாங்கம் கௌரவம் செய்தது.*

கைதானவர்களின்மேல் 'ராணுவ விசாரணை' (General Sepoy Court Martial) நடைபெற வேண்டுமென முடிவாயிற்று. கவர்னர் எட்வர்ட் கிளைவிடமிருந்து கலெக்டர் மாக்ளியாட் டிற்குத் தாக்கீது வந்தது. அதன்படி, மேஜர் இன்ஸின்

* Guide to Coimbatore district / பக். 121, 122. கலெக்டரின் கடிதங்கள் 3.6.1800, 16.6.1800.

இசைவுடன் லெப்டினன்ட் பார்க்கர் (Lt. H.R. Barker) துணை நீதிபதி - வக்கீலாகவும் (Deputy Judge: Advocate) மேலும் ஐந்து உறுப்பினர் கொண்ட ராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டது. அத்துடன் கர்னல் மக்லிஸ்டர் ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டும். அக்குழுவின் மூத்த உறுப்பினர் ராணுவ விசாரணையின் தலைவர். விசாரணை சத்தியமங்கலத்தில் நடைபெற்றது. கேப்டன் இன்ஸ் - அவனது படை அதிகாரிகள், தாங்கள் கைது செய்த 17 பேர் மீது வழக்கு தொடுத்தனர் (prosecution). மற்றவர்கள் மீது சத்தியமங்கலம் தாசில்தார் வழக்கு தொடுத்தார். (கலெக்டர் மாக்ளியாட்டின் கடிதம் நாள்:14.7.1800) 'அப்பாவு, சின்னான், சேக் மாதர், குமாரசாமி ஆகியோரை ராணுவ விசாரணையில் சேர்க்க வேண்டாம்; ஏனெனில் கிளர்ச்சி செய்ததற்கான சாட்சியத்தை அவர்கள் தரவேண்டியுள்ளது, என்று மாக்ளியாட் பார்க்கருக்கு அறிவுறுத்தினார். (கடிதம் நாள் 15.7.1800). கைதானவர்களில் மற்றவர்களைவிட அப்பாவு கவுண்டரிடம்தான் கிளர்ச்சி பற்றி அதிக விவரங்கள் உள்ளன - அவர்தான் பிடிபட்ட கும்பலின் தலைவர் என்றும் மாக்ளியாட் தெரிவித்தார்.

'சிப்பாய் ராணுவ விசாரணை'யின் முடிவில் பரமத்தி அப்பாவு உட்பட 42 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டது. தீர்ப்பின் முடிவை கலெக்டர் அரசாங்கத்திற்குத் தெரிவித்தார் (2.9.1800). அக்கடிதத்தில், 'இந்தக் கிளர்ச்சியின் பின்புலம் விருப்பாட்சி பாளையக்காரர்தான்' என்றும், அந்தப் பாளையக்காரருக்கு கம்பெனியின் சார்பில் அப்பாளையத்தின் உரிமை எவ்வாறு வழங்கப்பட்டது' என்றும் மாக்ளியாட் தெரிவித்தார்.

இதற்கிடையே, தலைமலைக் காட்டுப் பகுதியில் பிடிபட்டவருள் ஒருவரான முகமது ஹாசம் வசம் பல கடிதங்கள் இருந்தன. பிடிபடுவதற்கு முன் அவர் அவற்றை அழித்து விட்டார். (வேறு பல கடிதங்கள் பிற கிளர்ச்சியாளர் மூலம் கலெக்டரின் கைக்குக் கிடைத்தன). இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, துன்புறுத்தி, இழுத்துச்

செல்லப்பட்ட அவர் துன்புறுத்தும் விசாரணையில் கிளர்ச்சியின் ரகசியங்களை வெளிப்படுத்த விரும்பாமல், ஜூன் 8ஆம் தேதி (1800) தனது கழுத்தை அறுத்துத் தற்கொலை செய்து கொண்டார்; அக்கிளர்ச்சியில் பூத்ததொரு தியாக மலராக மாறினார்.

தூக்குத் தண்டனை பெற்ற 42 பேரும் கொங்கு மண்ணில் திறந்த வெளிகளில் நடப்பட்ட கம்பங்களில் தூக்கிலிடப் பட்டனர். அக்காட்சிகளைக் கண்டு பொது மக்கள் அச்சப்பட வேண்டும் என்பது கம்பெனி அரசின் எச்சரிக்கை அது... கோயம்புத்தூரில் 6 பேர், தாராபுரத்தில் 8 பேர், சத்தியமங்கலத்தில் 7 பேர், பிற இடங்களில் 21 பேர் என 42 பேர்களும் தங்கள் இன்னுயிரை நீத்தனர் - தாய் மண்ணில் அடிமை விலங்கை அறுத்தெறிய அவர்கள் செய்த முயற்சிகளுக்கான பரிசு அது. அவர்கள் தியாகத் தீபங்கள் ஆயினர்.

கொங்கு நாட்டில் கிபி. 1800இல் நடந்த கிளர்ச்சி இவ்வாறு சோக முடிவைக் கண்டது.

### கிளர்ச்சிக்குப் பிந்தைய நிகழ்வுகள்

**கோ**யம்புத்தூர்க் கிளர்ச்சி தோல்வியுற்றாலும், சோகக் களையுடன் முடிவுற்றாலும், எஞ்சியிருந்த தலைவர்களின் சுதந்திர உணர்வு முடிவுறவில்லை. ‘சுதந்திரம் எமது பிறப்புரிமை’ என்பது ஆழ்மன வேட்கையாகும். அது தொடர்கதையாகத் தொடர்ந்ததில் வியப்பில்லை.

**கொ**ங்கு மண்டலம் - கோயம்புத்தூர் கோட்டையைப் பிடிக்கும் கிளர்ச்சியாளர்களின் போரில் நேரடியாகக் கலந்து கொள்ளா விட்டாலும், தூந்தாஜி வாக்கின் தொடர்பும் ஆதரவும் அக்கிளர்ச்சிக்குத் தகுந்த உரமூட்டுவதாயிருந்தன. அவர் கர்நாடக மாநிலத்தில் மிகப்பெரிய அளவில் கிளர்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார். அவருடைய போர்க்களம் மைசூர் நாட்டிலிருந்து சோலாப்பூர் வரை பரந்து பட்டிருந்தது. 1799 ஜூலையில் கனராவின் (அன்றைய சேலம்

மாவட்டத்தை விடப் பெரிய பகுதி) கலெக்டராகப் பதவியேற்ற தாமஸ் மன்றோ, சர்வதேசப் போர்க்களங்களைக் கண்ட ஆர்தர் வெல்லெஸ்லி போன்ற பெரும் ஆங்கிலத் தளபதிகளின் படைகளை அவர் எதிர்கொள்ள வேண்டிய நிலையிலிருந்தார். (கர்னல் வெல்லெஸ்லி மேஜர் தாமஸ் மன்றோ - இருவரும் தங்களிடையே ஜூலை-ஆகஸ்ட் 1799இல் பறிமாறிக்கொண்ட பல கடிதங்களில் தூந்தியாவின் (Doondiah/ Dhoondheah) பல போர்க்கள நடவடிக்கைகளைப் பற்றி விவரிப்பதை இங்கு நினைவு கூரலாம்). அவ்வாறான நிலையிலும் தூந்தியா வாக் தீரத்துடன் போரிட்டார். இறுதியில் ரெய்ச்சூர் பகுதியில் சின்னூருக்கு அருகில் கோனக்கல் கிராமத்தில் 1800 செப்டம்பர் 10ஆம் நாள் நடந்த உக்கிரமான போரை வெல்லெஸ்லி தலைமையேற்று நடத்தினார். போராளிகளின் பலம் ஆங்கிலப் படையைவிட வீரர்களின் எண்ணிக்கையிலும் ஆயுதங்களின் பலத்திலும் மிகவும் குறைவாயிருந்தது. தாக்குதலில் போராளிகளில் பலர் மாண்டனர். அன்று மாலை இறந்துபட்டவர்களின் உடல்களைப் புரட்டிப் பார்த்ததில் தூந்தாஜியும் சாய்க்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அப்போது அவருக்கு வயது அறுபது. கர்நாடக-மராத்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் அங்கே வீரத்தின் விளைநிலமாய் வீழ்ந்து கிடந்த தூந்தாஜியின் புகழ் மங்காது!

**தெ**ன் தமிழ்நாட்டில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட சமயத்தில் அவனுடைய இளவல்கள் செவத்தையாவும், ஊமைத்துரையும் உறவினர்களும் பாளையங்கோட்டையில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். பதினைந்து மாதங்கள் கழித்து அவர்கள் தப்பித்துச் சென்றனர். அது மக்களிடையே எழுச்சியையும் கம்பெனி அரசுக்கு அதிர்ச்சியையும் தந்தது. விளைவு? 1799இல் நொறுக்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மறுபடியும் விரைந்து உருவானது. கம்பெனியார் திகைத்தனர். மீண்டும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை தாக்கப்பட்டது. மே 1801இல் கர்னல் அக்நியு தலைமையில் பெரும்படை தாக்குதல் நடத்திற்று. மூர்க்கத்தனமான

அப்போர் மே 22, 1801இல் இடி, மின்னல், கடும் மழைக்கிடையே இரவில் நடந்தது. போராளியரில் ஆயிரம் பேர்களுக்கு மேல் தங்கள் இன்னுயிரை இழந்தனர். இறந்து கிடந்தவரிடையே கிடந்த ஊமைத்துரை பலத்த காயங்களுடன் தப்பிச் சென்று கமுதியில் மருது பாண்டியருடன் சேர்ந்தான்.

சிவகங்கையின் சின்னமருது ஊமைத்துரையைத் தம் தலைநகர் சிறுவயலுக்கு அழைத்துச் சென்றான். சிவகங்கையில் கம்பெனியாரின் தந்திரம் வேறு வடிவம் கொண்டது. சிவகங்கையின் அசல் வாரிசு என்று உய்யத்தேவரை அங்கீகரித்தனர். அவருடைய ஒத்துழைப்பைப் பெற்று போராளியர் மருது சகோதரர்களைத் தீர்க்க கம்பெனியார் முடிவு செய்தனர். அதற்கும் கர்னல் அக்நியு வியூகம் வகுத்து காளையார் கோயிலைத் தாக்கி சிறுவயலைக் கைப்பற்றினான். ஊமைத்துரையும் செவத்தையாவும் தப்பிச் சென்றனர். நத்தம் வழியே சென்று திண்டுக்கல்லை அடைந்து விருப்பாட்சிக்குச் சென்றனர். அவர்களுடன் 600 பேர் வந்தனர். 4000 படை வீரர்கள் அளவுக்கு மேலும் ஆட்களைத் திரட்டினர். திண்டுக்கல் பகுதியில் ஆங்கிலேய தளகர்த்தராயிருந்த கர்னல் இன்ஸ், 1801 மார்ச்சில் தொடுத்த போரில் விருப்பாட்சி கோபால நாயக்கர் தப்பித்துச் சென்றார். விருப்பாட்சியை இன்ஸ் கைப்பற்றினார். இப்போது ஊமைத்துரையும் செவத்தையாவும் விருப்பாட்சியை மீட்டனர். கம்பெனியார் திகைத்தாலும், சுதாரித்துக் கொண்டு கர்னல் இன்ஸ் (Col. Inns) தலைமையிலான படை திண்டுக்கல் பள்ளத்தாக்கில் அவர்களைத் துரத்தியது. உணவும் நீருமின்றி போராட்ட வீரர்களை 50 மைல் தூரத்திற்குத் துரத்திச் சென்று, அவர்களைக் களைப்படைய வைத்து வத்தலகுண்டு அருகில் அவர்களைத் தோற்கடித்தார்கள். ஊமைத்துரையும் செவத்தையாவும் கைதாயினர். பின்னர் அவர்கள் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே பலரும் பார்க்கத் தூக்கிலிடப்பட்டனர் (நவம்பர் 16, 1801). அத்துடன் பாஞ்சாலங்குறிச்சியின் தீரமும் வீரமும் ஒரு நிலையில் ஓய்வு

கொள்ளும் காலம் வந்தது. அப்பாளையத்தின் வீரம் இன்றும் தமிழ் மண்ணில் தன் புகழை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது!

கர்னல் அக்நியுவின் முனைப்பான தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் மருது சகோதரர்கள் சிங்கம்புணரிக் காடுகளில் தஞ்சம் புகுந்தனர். அக்டோபர் 19இல் சோழபுரம் போரில் மருது பாண்டியன் காயங்களுடன் பிடிபட்டான். சின்ன மருதுவை காளையார் கோயிலில் பிடித்தனர். அவர்கள் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டனர் (அக்டோபர் 24, 1801). சிவகங்கைச் சீமை காட்டிய விடுதலைப் போராட்டம் அந்தத் தியாக மூர்த்திகளின் மறைவில் அமைதிகொள்ள முனைந்தது.

தென்பாண்டிப் போராளித் தலைவர்களில் தூக்கிலிடப் பட்டோர் போக, கடுங்குற்றம் புரிந்தவர்களாக அறிவிக்கப் பட்ட 72 பேர் நாடு கடத்தப்பட்டனர். அவர்களில் திண்டுக்கல்-விருப்பாட்சி போராளியரும் இருந்தனர். பினாங்கு அருகிலுள்ள 'வேலஸ் இளவரசர் தீவு' (Prince of Wales) என்ற தீவிற்கு கைவிலங்கிட்டு தீவாந்திரத் தண்டனையாக அனுப்பப் பட்டனர். மொழி, புதிய இயற்கைச் சூழ்நிலை, எதிர்காலம் என்ன என்று புரியாத புதிய நிலையில் கைகளில் விலங்குடன் 1802 பிப்ரவரி 11ஆம் நாள் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கப்பலில் அனுப்பப்பட்டனர். 76 நாட்கள் பயணத்திற்குப் பிறகு அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டும் அந்தத் தீவை அடைந்தனராம். பிறர், இடையில் மாண்டனர். அவர்கள் தியாகச் சுடர்களாயினர்.

**கோ**யம்புத்தூர் கோட்டைத் தாக்குதலில் தீரன் சின்னமலை தனக்குரியமுறையில் விருப்பாட்சி, மைசூர், காங்கேயம், பெருந்துறை போன்ற இடங்களில் போராளியரின் ஆலோசனைகளிலும் திட்டங்களிலும் பங்கெடுத்துக் கொண்டான். அக்கிளர்ச்சி தோற்றபின் தனக்கான பாதையில் கம்பெனியாரை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டான். திப்புவின் படையிலிருந்து பின்னர் ஆங்கிலேயர் படையில் சேர்ந்த

சுபேதார் வேலப்பனுடன் அவன் தொடர்பிலிருந்தான். ஆங்கிலப் படையின் போரிடும் நுணுக்கங்களையும் தந்திரங்களையும் வேலப்பன் வாயிலாக அறிந்து கொண்டான். ஈரோட்டுப் பகுதியில் சின்னமலை எதிர்கொண்ட மூன்று போர்கள் குறிப்பிடும்படியானவை. கி.பி. 1801இல் கர்னல் மாக்ஸ்வெல் தலைமையில் வந்த படையை எதிர்கொண்டு தோற்கடித்தான். மீண்டும் 1802இல் மாக்ஸ்வெல் படையுடன் வந்தபோது அப்படையைத் தோற்கடித்து ஈரோடு வரை புறமுதுகிடச் செய்தான். பிறகு 1804இல் ஜெனரல் ஹாரிஸ் தலைமையில் வந்த கம்பெனிப் படையை அரச்சலூரில் தாக்கித் தோற்கடித்தான். திப்பு சுல்தான் 1799ல் மரணமுற்ற நான்காம் மைசூர்ப் போரின்போது ஆங்கிலேயப் படைக்கு முக்கியத் தலைமையேற்று நடத்தியர் ஹாரிஸ் என்பது குறிப்பிடத்தக்கது (பார்க்க: அத்தி. 6). நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த சின்னமலையின் போராட்ட காலத்தில் (1800-05) கம்பெனியார் மேற்கொண்ட வரிவசூலில் சுணக்கம் காண சின்னமலையின் துடிப்பான, விழிப்பான, கொரில்லா வகைத் தாக்குதல்கள் முக்கிய காரணங்களாகும்.

தங்கள் வருவாய் இழப்பை என்றும் தாங்கிக்கொள்ள முடியாத கம்பெனி அரசாங்கம் சின்னமலையைப் பிடிக்கத் தந்திரங்களை மேற்கொண்டது. கடைசியாக சின்னமலையின் சமையலாள் தந்த ரகசியத் துப்பு மூலம் அவனைப் பிடித்தனர். பீரங்கிகள் கொண்டு ஓடாநிலை கோட்டையைத் தகர்த்தனர். சிறை பிடிக்கப்பட்ட சின்னமலை சங்ககிரி கோட்டையில் வைக்கப்பட்டு அங்கேயே தூக்கிலிடப்பட்டான் (31.7.1805). சங்ககிரியின் மலைக்கோட்டை, சின்னமலை என்னும் தீரனின் விடாமுயற்சியையும், அடிபணிய மறுத்த வீர உணர்ச்சியையும் கண்டு இன்றும் வியந்து உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது.



சங்ககிரி மலையும் கோட்டையும்

மலபாரில் கம்பெனியாருக்கெதிராகப் போராட்டங்களில் தொடர்ந்து கொண்டிருந்த கேரளவர்மனை ஒடுக்கவும் கர்னல் வெல்லெஸ்லி திட்டம் வகுத்தார். ஆங்கிலேயருக்குக் கைவந்த கலையான, எதிரியின் கையாளைத் தம் வயப்படுத்தும் வசியத்தை இங்கும் கைக்கொண்டனர். ஏமன் நாயரைப் பிடித்தனர். கேரளவர்மனின் இடது கரமாகத் திகழ்ந்த அவன் போராளிகளுக்குத் துரோகம் இழைக்க முற்பட்டான். கிளர்ச்சியாளர்களின் திட்டங்களையும் சமயோசிதங்களையும் கம்பெனிப் படையினருக்கு அவ்வப்போது தெரிவிக்கத் துணிந்தான்.

கேரளவர்மனுக்கு வெற்றிகள் கிடைத்து வந்தாலும் பின்னடைவுகளும் நேரிட்டன. அவனுடைய தளம் மலைப்பகுதி என்பது அவனுக்குச் சாதகமான நிலை. அது அவனைப் பாதுகாத்து வந்தது. ஒருகட்டத்தில், காட்டிக் கொடுத்த ஏமன் நாயர் திரும்பவும் கேரளவர்மனுடன் ஒத்துழைத்தான். கம்பெனிப்படை அவர்களைப் பிடிக்க

இயலாமல் போராடியது. அவர்களின் தலைக்கு பரிசும் அறிவித்தது. இறுதியில், கேப்டன்கள் பாபர் (Captain Baber) மற்றும் கிளாப்ஹாம் (Clapham) தலைமையில் வந்த ஒரு படை தீவிரத் தாக்குதலில் ஈடுபட்டது. 15 மணி நேரம் நடந்த அந்தச் சண்டையில் கேரளவர்மன் கொல்லப்பட்டான். அந்த மரணம் மலபாரில் கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த சுதந்திரப் போர்த்தீயின் இறுதிக் கிரியையாக மாறியது. 'பழசி ராஜா' என்ற அந்த மன்னன் வயநாடு மட்டுமல்ல, நீலமலைக்கும் ராஜா போன்றே திகழ்ந்தான்.

**கொ**ங்கு மண்டலத்தின் 1800ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு விருப்பாட்சியின் கோபால நாயக்கர்தான் பின்புலமாகத் திகழ்ந்தார் என்று கலெக்டர் மாக்ளியாட் குறிப்பிட்டுள்ளார். கோபாலரின் தூண்டுதலின் பேரில்தான் கிளர்ச்சிகள் நடைபெற்றதாக லெப்டினன்ட் பார்க்கருக்கு எழுதிய கடிதத்தில் மாக்ளியாட் கூறினார்.(கடிதம் நாள்: 14 ஜூலை, 1800). அந்தப் பெருமைக்குரியவரான அவர் பல்வேறு கிளர்ச்சியாளர்-தலைவர்களை ஒருங்கிணைக்கக் காரண மாயிருந்தார். மருது சகோதரர்கள், ஊமைத்துரை போன் றோரிடமும் அவருக்குத் தொடர்பிருந்தது. கோயம்புத்தூரை 1800 ஜூன் 3ஆம் தேதி அன்று தாக்கும் திட்டமும் விருப்பாட்சி மண்ணில்தான் முடிவானது. இடையன்கோட்டை, நத்தம், மேலூர், மணப்பாறை, தளி போன்ற பாளையக்காரர்களுடன் அவர் நெருங்கிய ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்தார். உளவறிந்து, கலக்கம் கொண்ட திண்டுக்கல் கலெக்டர் ஹுர்டிஸ் கோபால நாயக்கருக்குத் தாக்கீதுகளை அனுப்பினார். இவர் அவற்றைப் பொருட்படுத்தவில்லை.

'குப்பள நாயக்கர் கம்பெனிஅதிகாரத்திற்கு அடங்காமல் இருந்தார்' என்று மதுரை கெஜட்டியர் குறிப்பிடுகிறது (1906/ பக். 311). ஒரு கட்டத்தில், கன்னிவாடி பாளையக்காரர் இறந்தபின் அதன் உரிமையை இவர் எடுத்துக் கொண்டார். இவையெல்லாம் அவர்மீது போர் தொடுக்க கம்பெனி யாருக்குக் காரணங்களாயின. கர்னல் இன்ஸின் படை

தயாரானது. கோபால நாயக்கரை சரணடையும்படி இன்ஃஸ் எச்சரிக்கை விடுத்தார். கோபாலர் அதைப் பொருட்படுத்த வில்லை. அதுபோல தளியின் யாதுல் (எத்துல) நாயக்கருக்கும் எச்சரிக்கை சென்றது. அவரும் பொருட்படுத்தவில்லை. ஆகவே இருமுனைத் தாக்குதலை நடத்த இன்ஸ் முனைந்தார். 1801 மார்ச் 21ஆம் தேதி அவரது தலைமையிலான படை விருப்பாட்சியைத் தாக்கிக் கைப்பற்றியது. கோபால நாயக்கர் அங்கிருந்து தப்பித்துச் சென்றார்.

மலபார் பகுதியிலிருந்த கர்னல் இன்ஸின் வேறொரு படை விருப்பாட்சியை நோக்கி 1801 ஏப்ரல் 8ஆம் நாள் கிளம்பியது; 12ஆம் தேதி தளிக்குச் சென்றது. ஆனைமலைப் பகுதியைச் சுற்றி வளைத்துப்பிடிக்க ஒரு வாரத்திற்கும் மேலாயிற்று. பின்னர் அப்படை விருப்பாட்சியை நோக்கிச் சென்றது. விருப்பாட்சி யிடமிருந்த 700 வீரர்களால் ஆங்கிலப் படையைச் சமாளிக்க முடியவில்லை. பல்வேறு இடங்களில் துரத்திச் சென்று ஆங்கிலப் படை தாக்குதல்களை நடத்தியது. களைத்துப்போன விருப்பாட்சிப் படையினர் வீழும் சமயம் வந்தது. கோபால நாயக்கரைப் பிடித்துத் தருபவருக்கு 2000 ரூபாய் பரிசு அறிவிக்கப்பட்டது. ஏனைய முக்கியத் தலைவர்களைப் பிடிக்க உதவுபவருக்கு 500 ரூபாய் வழங்குவதாக அந்த அறிவிப்பு கூறியது. விருப்பாட்சிப் போராளியர்களின் நடவடிக்கை பற்றிய துப்பு கிடைத்தது. இறுதியில் 1801 மே மாதம் 4ஆம் நாள் கோபால நாயக்கர் பிடிபட்டார். அவரும் அவருக்குத் துணையாயிருந்த போராளிகளும் பின்னர் தேவதானப் பட்டியில் (பெரியகுளத்திற்குக் கிழக்கில் 7 கல் தொலைவு) தூக்கிலிடப்பட்டனர். கோபால நாயக்கரின் மூத்த மகன் முத்துவேல் நாயக்கரும் உடன் தூக்கிலிடப்பட்டான். கோபால நாயக்கரின் மனைவியும், 16 வயது மகனும் உட்பட 22 பேர் கைது செய்யப்பட்டு திண்டுக்கல் மலைக்கோட்டையில் காவலில் வைக்கப்பட்டனர்.

விருப்பாட்சியின் கோபால நாயக்கர் வரலாற்று நாயகர் ஆனார். அவர் தூக்கிலிடப்பட்ட மலைப்பகுதியும்

விருப்பாட்சியும் அவர் மனத்திட்பத்தையும் தியாகத்தையும் என்றும் நினைவில் கொள்ளும்!

மேற்குறிப்பிட்ட பாளையக்காரர்கள் - கிளர்ச்சி யாளர்கள் அடக்கப்பட்ட பின்னர், கி.பி. 1801 இறுதி முதல் கொங்குநாட்டில் மட்டுமன்றி தமிழ்நாடு முழுவதும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி தடையின்றி படர ஆரம்பித்தது.

**புக்கானன் தொட்டுக் காட்டும் கிளர்ச்சிக் காட்சிகள்**

டாக்டர் புக்கானன் காவேரிபுரத்தில் தொடங்கி ஆனைமலை வழியே மலபாருக்குச் சென்ற தனது பயணத்தில் கொங்கு நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிராக நிகழ்ந்த கிளர்ச்சிகளை அங்கும் இங்குமாகத் தொட்டுக் காட்டியுள்ளார். வெள்ளையரான அவர் எழுதித் தந்துள்ள செய்திகளைக் காண்போம்.

இடையில் அவரது பயணத்தின்போது பவானி போன்ற சில இடங்களில் அவருக்கு முழு ஒத்துழைப்பு கிடைக்காமல் போனதற்கு கொங்குநாட்டில் நிலவிய கிளர்ச்சி நிலையும் ஒரு காரணம் எனலாம். அவர் வந்ததற்கு ஒரு மாதம் முன்புதான் 42 போராளிகள் பல இடங்களில் மக்கள் பார்த்திருக்க தூக்கிலிடப்பட்டனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அத்துடன், சென்னையிலிருந்து சீரங்கப்பட்டணத்திற்குச் சென்றவர், அங்கிருந்து நேராக கனரா மாவட்டத்தைப் பார்த்து வருவதாகத்தான் அவரது பயணத்திட்டம் இருந்தது (ஜூன் முதல் வாரம், 1800). ஆனால், ‘மைசூர் நாட்டின் வடக்கு-மேற்குப் பகுதி தூந்தாஜியின் (Dundia) கிளர்ச்சிகளின் காரணமாக அமைதியிழந்து இருப்பதால், அந்தப் பகுதிக்கான எனது பயணத்தை இறுதியில் வைத்துக் கொள்வேன். நான் அனுப்பவிருக்கும் கேள்விகளுக்குரிய விவரங்களை அவர்கள் சேகரித்துத் தர போதிய அவகாசம் தரவேண்டும்...’ என்று தூந்தாஜியின் போராட்டங்களைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளார் (Buchanan, I, பக்கம் 136).

கிளர்ச்சியாளர்கள் குறித்து, பவானியிலிருந்து புக்கானன் தந்துள்ள குறிப்புகளைநினைவு கொள்வோம். (பார்க்க: அத்தி.8) தூந்தாஜியைப் (Dundia) பற்றியும் கொங்குப் பகுதியைச் சேர்ந்த எட்டு கிராமங்களின் தலைவர்கள் தூந்தாஜியைச் சந்தித்துவிட்டுத் திரும்பி வந்ததையும், சத்தியமங்கலத்தைத் தாக்கிதையும், முப்பது பேர் கைதாகி தூக்கிலிடப்பட்டதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். பவானி தாசில்தாரிடமிருந்து அவர் கேட்டுத் தந்துள்ள தகவல்கள் அவை.

தணாயக்கன் கோட்டையிலிருந்து (அக்டோபர் 24 / பார்க்க: அத்தி. 9) வயநாட்டு நாயர்கள் நீலகிரி மலையில் செய்த கொள்ளை முயற்சியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் கேரளவர்மனின் ஆட்கள் எனக் கொள்ளலாம். நீலகிரியில் பழசி ராஜாவின் நடமாட்டம் / நடவடிக்கைகளை அவை குறிக்கின்றன.

பொன்னாபுரத்தில் (நவம்பர் 21 / பார்க்க: அத்தி. 14) கோட்டை இருந்ததையும், அதனுடைய அப்போதைய (1800) தலைவன் ஒரு சிறுவன் என்றும், அக்கம்பக்கத்துப் பாளையக்காரர்கள் கி.பி. 1797இல் செய்த கிளர்ச்சியின்போது அச்சிறுவனின் குடும்பம் மிகவும் பாதிக்கப்பட்டதாகச் சொன்னார்கள் என்கிறார் புக்கானன். மூன்று ஆண்டுகட்கு முன்னர் நடந்த பாளையக்காரர்களின் கிளர்ச்சி திப்பு சுல்தான் ஆட்சிக் காலத்தில் நடந்ததாக எண்ணலாம். பாளையக் காரர்களிடையே பகை எனவும் கருதலாம். 1800ஆம் ஆண்டுக் கிளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்த விருப்பாட்சி மற்றும் தளி பாளையங்கள் பொன்னாபுரத்தின் இரு பக்கங்களில் இருந்தவையாகும்.

பொள்ளாச்சிக்குச் சென்றபோது, (நவம்பர் 24) அப்பகுதிப் பாளையக்காரர்கள் பற்றிக் குறிப்பிட்டு வந்த புக்கானன் விருப்பாட்சிப் பாளையக்காரர் அப்போது புரட்சியாளராக மாறியுள்ளார் எனக் குறித்துள்ளார் (பார்க்க: அத்தி. 15) கோபால நாயக்கர் பற்றிய பதிவு அது.

ஆனைமலையிலிருந்து புக்கானன் தரும் குறிப்புகளில் (பார்க்க: அத்தி. 16) அப்பகுதியில் நாயர்களுக்கும் திப்பு சுல்தானுக்குமிடையே இருந்த பகை உறவைத் தொட்டுக் காட்டியுள்ளார். கேரளவர்மனுக்கு திப்பு-ஆங்கிலேயர் என்று இருவரிடமும் ஒவ்வொரு சமயத்தில் எதிர்ப்பு இருந்ததை இது உணர்த்துகிறது.

ஆகவே, புக்கானனும் கி.பி. 1800இல் கொங்குநாட்டில் நடந்த கிளர்ச்சிகளின் போக்குகளில் சில சம்பவங்களைத் தொட்டுக் காட்டியுள்ளார். அக்கிளர்ச்சிகளை வெள்ளை ஆட்சியாளர்களின் பார்வையில் வெளிப்படுத்தியுள்ளமைக்கு அவை சான்றுகளாகும்.

# 18

# பாராமகாலைப் பார்த்து சென்னை திரும்புதல்

இன்றைய தருமபுரி, கிருட்டிணகிரி மாவட்டங்கள் மற்றும் திருப்பத்தூர், வாணியம்பாடி தாலுகாக்கள் கொண்ட பகுதிகள் கி.பி.1800இல் கிருட்டிணகிரி மாவட்டமாக இருந்தது; தலைநகரம், கிருட்டிணகிரி. (பார்க்க: அத்தி. 7). சரவணபெலகொளாவில் கண் நோயினால் அவதியுற்ற புக்கானன், தன் உடல் நலம் கருதி பதினைந்து நாட்கள் சீரங்கப்பட்டணத்தில் தங்கினார். அங்கிருந்து சென்னைக்குத் திரும்ப வேண்டும்...

ஜூன் 4ஆம் தேதி இளம் காலையில் சீரங்கப்பட்டணத்தை விட்டுக் கிளம்பினார். தன்னுடன் வந்தவர்கள் தங்கியிருந்த கூடாரங்களருகே சென்றபோது அவருக்கு ஆச்சரியம் காத்திருந்தது. முந்தின இரவில் வீசிய புயற் காற்றினால் கூடாரங்கள் ஒடிந்து கீழே விழுந்திருந்தன! அவருடைய ஆட்கள் புகலிடம் தேடி அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று விட்டதாகத் தெரிந்தது! ஆகவே, மேலும் ஒரு நாள் அவர் அங்கேயே தங்க நேர்ந்தது. உடன் வந்தவர்களைத் தேடி, அவர்களை ஒருங்கிணைத்து மீண்டும் கிளம்புவதில் தொல்லைகளும் நேர்ந்தன. முதல் தொல்லை- கூடாரங்களைப் பழுது பார்த்தல்... இரண்டாவது- அவருடைய ஆட்களில் பலர்

முந்தின இரவு நன்றாக மது அருந்தியிருந்ததால் அதி போதையில் தம் வசம் இழந்திருந்தனர்...

அடுத்த நாள் (ஜூன் 5, 1801) தான் சீரங்கப்பட்டணத்தில் தங்கியிருந்த காரிகாட் (Kari-ghat) பகுதியிலிருந்து கிளம்பி காவிரிக் கரையின் இடது புறமாக அரிக்கரே (Arikere), பண்ணூரு (Bannur), சொசிலே (Sosile) ஆகிய ஊர்களைப் பார்த்து கிரிக்காவல், மலவல்லி, கங்கணஹள்ளி, மலாலவாடி போன்ற ஊர்களுக்கும் சென்று தகவல்களைத் தந்துள்ளார். பின்னர் மலாலவாடியிலிருந்து நான்கு கோஸ் தூரம் சென்று தற்போது கிருட்டிணகிரி மாவட்டத்திலுள்ள **தளியை** அடைந்தார் (ஜூன் 14). அங்கிருந்து அவர் குறிப்பிடுவதைக் காண்போம்.

'மலாலவாடியை விட்டகன்றதும் ஒரு மலைப் பிராந்தியத்திற்குள் நுழைந்தேன். தளியை அடையும் வரை மலைப் பகுதிகள்தான். கருநாடகத்தைச் சார்ந்த இவ்வூர், கம்பெனி ஆட்சியிலுள்ள பாராமகால் பிராந்தியத்துடன் இணைக்கப்பட்டது; கருநாடகத்திற்குச் செல்ல நுழைவாசல் போன்று அமைந்துள்ளது. வழியில், சுவர்ணரேகா என்னும் சிறு நதியை மூன்று முறை மாறி மாறிக் கடந்து வந்தேன்.

**தளி**

'ஒரு சிறு கோட்டைக்கருகே தளி உள்ளது; அறுபது வீடுகள் உள்ளன. காரன்வாலிஸ் பிரபு இதை ஆக்கிரமித்ததற்கு முன் இங்கே சுமார் ஐநூறு வீடுகள் இருந்தன. அச்சமயத்தில் (1791) அவர் பெங்களூரைக் கைப்பற்றிய போது பெங்களூர்வாசிகளில் பலர் தளிக்கு வந்துவிட்டனர். திப்பு சுல்தானிடம் சொல்லி ஐநூறு குதிரைகள், இரண்டாயிரம் வீரர்கள் கொண்ட படையைத் தங்களின் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்தனர். ஓசூரிலிருந்த பிரட்டிஷாரின் படைப் பிரிவினர் அதைக் கேள்விப் பட்டதும், இரவோடு இரவாகக் கிளம்பி அடுத்த நாள் விடியற் காலையில் தளிக்கு அதிர்ச்சியைத் தந்தனர். தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட திப்புவின் படையினர்

எதிர்ப்பேதும் காட்டாமல் ஓடிவிட்டனர். கிடைத்ததைக் கொள்ளையடித்த ஆக்கிரமிப்பாளர்கள் இந்நகரையும் அழித்தனர். சில நாட்கள் கழித்து, திப்புவின் அதிகாரி ஒருவர் (பௌஜ்தார்) ஆட்களுடன் வந்து, நிலத்தடியில் புதைத்து வைத்திருந்த தானியங்களைத் தோண்டி எடுத்துச் சென்றார். அதற்குப் பிறகு, தானிய வியாபாரிகளான லம்பாடிகள் வந்து மிச்சம் மீதியிருந்த தானியங்களை எடுத்துச் சென்று விட்டனர். அதனால் மக்களில் பலர் பசியால் வாடி மடிந்தனர். பின் திப்புவின் ஆட்சி தொடர்ந்தபோது (1792-98) இங்கிருந்து காலி செய்து சென்ற மக்களில் சிலர் திரும்பி வந்தனர். ஆனால் அவர்களில் பலர் பாராமகால் பகுதியிலேயே தங்கி விட்டனர். காரணம் - கர்னல் ரீடுவின் ஆட்சியில் கிடைத்த பாதுகாப்பு உணர்வு. இப்போது (1801) அவர்கள் ஓரிருவராகத் தினந்தினம் திரும்பி வந்த வண்ணம் உள்ளனர்...

'தளி, முன்பு தேன்கனிக் கோட்டை பாளையக்காரனுக்குச் சொந்தமாயிருந்தது. அந்தப் பாளையக்காரனுக்கு பாலஹள்ளி என்னும் ஊரும் உடைமையாயிருந்தது. அதனால் 'வல்லாள ராஜா' (Ballala Raja) என்ற பெயரைத் தன் பெயருடன் சேர்த்துக் கொண்டான். ஆனால் கருநாடகத்தை ஆண்ட வல்லாள (Ballala) அரசர்களுக்கும் இந்தப் பாளையக்காரனுக்கும் உறவு கிடையாது. அவனுடைய பாளையத்தை சென்னப்பட்டணத்தின் ஜெகதேவராயன் வென்று தனதாக்கிக் கொண்டான். (கி.பி.1577க்குப் பிறகு). அந்த ஜெகதேவராயனின் வழியினரைப் பின்னர் மைசூர் ராஜ வமிசத்தார் தோற்கடித்தனர்.

**பாராமகாலுடன் இணைந்த பகுதிகள்**

'தேன்கனிக் கோட்டை தாலுகாவில் தளி உள்ளது. சீரங்கப்பட்டணத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு (1799) இத்தாலுகாவுடன் கருநாடகத்தின் வேறு சில தாலுகாக்களும் பாராமகாலுடன் சேர்க்கப்பட்டன. அவை: ஓசூர், தேன்கனிக் கோட்டை, கெலமங்கலம், ரத்தினகிரி, வெங்கடகிரி கோட்டை மற்றும் காவிரிக்கு இடதுபுறம் உள்ள ஆலம்பாடி தாலுகாவின் பகுதிகள். இவற்றுடன் புங்கனூர், பெத்தநாயக்கன்

துருகம், பெங்களூரு, சூளகிரி மற்றும் அங்குசகிரி பாளையங்களும் பாராமகாலுடன் இணைக்கப்பட்டன.

**பாளையக்காரர்கள்**

'மேற்கூறிய பாளையக்காரர்களிடம் அவர்களுடைய ஊர்கள் திருப்பித் தரப்பட்டன. ஆனால் வங்காளத்தில் உள்ள ஜமீன்தார்களைப் போன்ற நிலைக்கு அவர்கள் கொண்டு வரப்பட்டனர். (அதிகாரங்கள் குறைவு). அவர்கள் குறிப்பிட்ட அளவு திறையை ஆண்டுதோறும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். அவ்வூர்களிலுள்ள மக்கள் மீது அவர்களுக்கு அதிகாரம் இராது. அம்மக்களின் பாதுகாப்பிற்காக ஒவ்வொரு பாளையத்திற்கும் ஒரு அதிகாரி (சிரஸ்ததார்) நியமிக்கப் பட்டார். அரசாங்கத்தின் வருவாய் மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கான சம்பளத்தைப் பாளையக்காரர்கள் கொடுக்க வேண்டும். நிலவருவாயில் சுமார் கால் பாகம் அளவிற்கு அப்பாளையக்காரர்களுக்கு லாபம் கிடைக்கும். இப்பகுதிகள் இனி வளர்ச்சி காணும்போது அவர்களுடைய லாபமும் கூடும்.

'பாராமகாலைச் சேர்ந்த மக்கள் இப்பகுதிகளில் வந்து குடியேறுவதற்கான வாய்ப்பு குறைவு. காரணம், மழைக் காலத்தில் இப்பகுதிகளில் குளிர் அதிகம்; அது அவர்களுக்கு ஒத்துக் கொள்ளாது; அத்துடன் சுகாதாரக் கேடாகவும் இருக்கும்...

**விளை நிலங்கள்**

'தேன்களிக் கோட்டையின் பிரதான அலுவலரான தாசில்தார் ஒரு புத்திசாலி. அவருடைய தாலுகாவிலுள்ள விளை நிலங்களில் சாகுபடி மேற்கொள்ள இப்போது 2,700 ஏர்கள் உள்ளன என்கிறார்; ஆனால் இப்பகுதியிலுள்ள விளை நிலங்கள் அனைத்திலும் பயிர்செய்ய மேலும் 6,000 ஏர்கள் வேண்டும் என்றும் கூறுகிறார். பாராமகாலுடன் இணைக்கப் பட்டுள்ள கருநாடகத்தின் பிற பகுதிகளிலும் சாகுபடி மேற்கொள்ள முடியாத தரிசு நிலங்கள் இதே அளவிற்கு இருக்கும். ஆனால், நான் கண்டறிந்த வரையில், இப்பகுதி

நிலங்கள் மைசூர் ராஜாவின் ராஜ்ஜியத்திலுள்ள நல்ல நிலங்களைப் போன்று நல்ல நிலையிலேயே உள்ளன... அங்கே மராத்தியப் படையினர் கடந்து சென்ற நிலங்களை விட இவை நன்றாகவே உள்ளன. தாசில்தார் கூறுவதைப் போல அவருடைய தாலுகாவில் பாறைகள் மற்றும் மேட்டுப்பாங்கான நிலங்கள் சுமார் கால் பாகம் இருக்கும்...

'அண்மையிலுள்ள காட்டுப் பகுதிகளில் கருப்பு நிற மணலிலிருந்து இரும்பு உருக்கப்படுகிறது... இங்கிருந்து தெற்கில் ஆலம்பாடி தாலுகாவில் ஒரு குன்று உள்ளது. அதில் சந்தன மரங்கள் வளர்ந்துள்ளன. அம்மரங்களில் தகுதியான வற்றை வெட்டிக்கொள்ள ஒரு நபருக்கு, கலெக்டர் கேப்டன் கிரகாம் அனுமதி தந்திருந்தார்; விலை முன்னூறு பகோடா. நன்கு வளர்ந்து, முதிர்ந்த மரங்களை மட்டும் வெட்ட வேண்டும் என்பது நிபந்தனை. ஆனால் அந்த ஆளோ கண்களில் தென்பட்ட குச்சிகள் போன்றவற்றையும்கூட வெட்டிக் கொண்டான். ஆகவே, அடுத்த பத்து ஆண்டுகளில் வெட்டிக் கொள்ளும் அளவிற்கான சந்தன மரங்கள் இருக்காது...

'தானிய வியாபாரிகளான லம்பாடிகள் தங்களின் வியாபாரங்களை முடித்த பின்னர், தளிக்கு மேற்கிலுள்ள காடுகளில் தங்களின் கால்நடைகளை எட்டு அல்லது பத்து நாட்களுக்கு மேய்ப்பர். பிறகு அவர்கள் திராவிட நாட்டிற்கு (ஆர்க்காடு) ராகி, அவரை, துவரை, எள்ளு, பயிறு போன்ற தானியங்களை ஏற்றிச் சென்று விற்ற பின், திரும்பும் வழியில் உப்பு, அரிசி போன்ற பொருட்களை வாங்கி வருவர்.

'இப்பகுதியிலுள்ள ஏரி, குளங்கள் அனைத்தும் நல்ல பராமரிப்பில் உள்ளன. ஆனால் அவற்றில் ஏழெட்டு மட்டும் குறிப்பிடத் தக்கவை. பாராமகாலுடன் இணைந்த இப்பகுதிகளில் நெல் சாகுபடி முக்கியமானது அல்ல. இங்கு பல குட்டைகள் (சிறிய ஏரிகள்) உள்ளன. அவற்றிலிருந்து ஏற்றம் மூலம் பாசனம் செய்யப்படுகிறது. அதனால் காய்கறித் தோட்டங்களில் நல்ல விளைச்சல் பெற முடிகிறது. தென்னை, பாக்கு போன்ற தோப்புகள் பல உள்ளன.




சென்னைக்குத் திரும்பும்போது
பாராமகால் வழியே புக்கானன்
சென்ற இடங்கள் (ஜூன், 1801)

'பெங்களூரைத் தவிர்த்து, இங்கு இணைக்கப்பட்ட பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நேர்த்தியாக இருப்பதில்லை. ஆகவே அவை சாமானிய மக்களின் உபயோகத் திற்கு மட்டும் பயன்படுகின்றன. அரிசி பெருமளவில் சேலத்திலிருந்து வருகிறது; பெங்களூரிலிருந்தும் வருகிறது.

**பிராமணர்கள்**

'தளியிலுள்ள கோபாலன் கோயில், மைசூர் ராஜா கிருஷ்ணராஜ உடையாரின் ஆட்சியில் தளவாய் தொட்டை யாவின் மகன் வீரராஜையாவால் சாலிவாகன ஆண்டு 1640இல் (கி.பி.1718) கட்டப்பட்டதாக* அல்லது இடித்துத் திரும்பக் கட்டப்பட்டதாக, இன்றும் உள்ள ஒரு பட்டயத்தின் மூலம் (சன்னது) அறிய முடிகிறது. எண்பது ஆண்டுகள்தான் ஆகியிருப்பினும் இக்காயில் மிகவும் பழுதடைந்துள்ளது. இக்கோயிலின் தேர் (சிற்பங்கள்) குறிப்பிடத்தக்க அளவில் நாணமற்றதாக உள்ளது.** இப்போது அது பயனற்றுப் போயுள்ளது. இக்கோயிலின் சொத்துக்கள் அனைத்தையும் ஐதர் அலியும் திப்புவும் திரும்ப எடுத்துக் கொண்டார்கள். இங்குள்ள பிராமணர்கள் அதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை. ஆனால் மானியம் கிடைக்காததால் அவர்களுடைய உணர்வுகள் தூண்டி விடப்பட்டுள்ளன. அவர்களில் சிலர் மிகவும் புத்திசாலிகள் என்பதைக் கண்டேன்...

'.... இங்குள்ள பிராமணர்கள் என்னை ஒரு அழகிய ஏரிக்கு அழைத்துச் சென்றனர். (சங்கம பசவன் அனைக்கட்டு?) அங்கு ஒரு கல்வெட்டு உள்ளது. அதன்படி, அந்த ஏரியை அமைத்தவர், அருகிலுள்ள நாகமங்கலம் நகரைச் சேர்ந்த (கருநாடக மாநிலத்தில் உள்ளது) ஒரு வியாபாரி. அது விஜயநகரத்தின் அச்சுதராயர் ஆட்சியில் சாலிவாகன ஆண்டு

---

* இந்தக் கோயில் கட்டப்பட்டதை முனைவர் எம். ஆரோக்கியசாமியும் கொங்கு நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகக் கூறுகிறார். – 'The Kongu Country.' பக். 377

** பேரூர்க் கோயிலில் காணப்பட்ட சிலைகள் இவ்வாறு அமைந்திருந்ததாகப் புக்கானன் குறிப்பிடுவதைக் காண்க : அத். 10.

1452இல் (கி.பி.1530) கட்டப்பட்டது. அந்த ஏரியிலிருந்து பாசனம் பெற்ற நிலங்கள் அனைத்தும் ஜங்கமர், பிராமணர் போன்ற ஆன்மீக மக்களுக்கு உரியதாயிருந்தன. ஆனால் இப்போது அவை அரசாங்கத்தின் கைக்கு வந்துள்ளன; அந்த நிலங்களின் முந்தைய உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள் ளனர். அந்த நிலங்களிலிருந்து வரும் வருமானம் நீதி நிர்வாகம், பாதுகாப்பு போன்ற அரசுச் செலவினங்களுக்குச் செல்கின்றது. அருகில் வடமேற்காக உள்ள சனத் குமார நதியிலிருந்து (சின்னாறு) வரும் நீரால் அந்த ஏரி நிறைகிறது. அந்த ஆறு இது போன்ற பல ஏரிகளை நிரப்பி, பல நன்செய் நிலங்களுக் நீரைத் தந்து ஆலம்பாடிக்கு அருகில் காவிரியில் கலக்கிறது...'

**பஞ்சாட்சரபுரம்**

இவ்வாறு தளியைப் பற்றி ஒரு நாளில் தான் கவனித்ததை எழுதியுள்ள புக்கானன், அடுத்த நாள் (ஜூன் 15) மூன்று 'கோஸ்' தூரம் சென்று பஞ்சாட்சரபுரத்தை அடைந்தார். அங்கும் ஒரு நாள் இருந்தார். பஞ்சாட்சரபுரம் என்பது ஐந்து எழுத்துகளைக் குறிக்கும் ஊர் என்கிறார். அது ஒரு சிறு கிராமம்; கடை எதுவும் இல்லை. அது சமவெளிப் பகுதி. விவசாயம் செய்யத் தகுதியான நிலங்களும், பல சிறிய ஏரிகளும் இருந்தன. நீர்ப்பாசனம் பெற்ற நிலங்களும் பனந்தோப்புகளும் தென்பட்டனவாம். ஆனால் மொத்தத்தில் நிலங்கள் தரிசாகவே இருந்தனவாம். விளை நிலங்களில் பாதியளவு தரிசு; ஆனால் அந்நிலங்கள் மைசூர் ராஜாங்கத்தின் பிற பகுதிகளில் இருந்ததைவிட நல்ல நிலங்கள் எனக் குறிப்பிடுகிறார்.

காரன்வாலிஸ் பிரபுவின் தலைமையில் வந்த ஆங்கிலேயப் படையினரின் (கி.பி.1791/1792) ஒரு பகுதி அவ்வூரைக் கொள்ளையடித்தும் தீக்கரையாக்கியதாம். ஆனால், தளபதி ஹாரிஸ் படையெடுத்து வந்தபோது (1799), அதே போன்ற அழிவை திப்பு சுல்தானின் படை செய்ததாம். 1801இல் பயங்கரத் தொற்று நோய் அங்கு பரவியது; கடந்த இளவேனிற் காலத்திற்கு முந்தைய (மார்ச் மாதத்திற்கு முன்) ஐந்து

மாதங்களில் அந்நோய் பெரும் அழிவைத் தந்ததாம். புக்கானன் வருகையின்போது அது தணிந்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

## கெலமங்கலம்

அடுத்த நாள் மூன்று 'கோஸ்' தூரம் கடந்து அவர் சென்ற ஊர் கெலமங்கலம். வழியில் காடுகள் அடர்ந்த இரண்டு குறுகிய மலைப் பாதைகளைக் கடந்து சென்றார். தளி முதல் கெலமங்கலம் வரையான ஊர்கள் 1799இல், திப்புவின் மறை விற்குப் பிறகு, சேலம் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. கெலமங்கலத்தில் இரண்டு நாட்கள் தங்கினார். அருகிலுள்ள ஊர்களைப் பற்றி விசாரித்து, அண்மையில் பாராமகாலுடன் இணைக்கப்பட்ட பகுதிகளின் நிலையை விரிவாக எழுதுவது அவரது நோக்கம். அவர் குறிப்பிடுவதைக் காண்போம்:

'கடந்து வந்த மலைப்பாதைகளில் தானிய வியாபாரி களான லம்பாடிகள் அடிக்கடி சென்று வருவர். அவர்கள் அமைதிக் காலங்களில்கூட கொள்ளையடிக்க முயல்வர். வனத்திற்கு அருகிலுள்ள சிறிய கிராமங்களில் அவர்கள் அவ்வப்போது களவாடுவர்; கொலையும் புரிவர். ஆயுதங்கள் இல்லாமல் அப்பகுதிகளில் தனியாகச் செல்வது அவ்வளவு பத்திரம் இல்லை. கடந்த இரண்டு போர்களில் (1792 மற்றும் 1799) அவர்கள் செய்த சேவைக்குச்* சலுகைகள் காட்டப் பட்டன. அவர்களின் இயல்பான மூர்க்கத்தனத்திற்கு அச்சலுகைகள் எருவூட்டுவதாக அமைந்து விட்டன. அவர்களை அடக்குவதற்காக சமீபத்தில் ராணுவ நடவடிக்கைகளைக் கூட மேற்கொள்ள வேண்டியிருந்தது.

'கெலமங்கலத்தில் ஒரு சிறு கோட்டையும், இரண்டு ஏரிகளும், இரண்டு பேட்டைகளும் (புறநகர்) உள்ளன. ஒரு தாசில்தார் உள்ளார். (கெலமங்கலத்தில் அதிகத் தகவல்களைத் திரட்டுவதற்கு அவர் உதவியிருப்பார்). கோயம்புத்தூர்ப் பிராந்தியத்தில் உள்ளதைப் போன்றே இங்கும் நிர்வாகம் மிக

---

* முக்கியமாக ஆங்கிலேயப் படைகளுக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்தல்.

நன்றாக உள்ளது. காரன்வாலிஸ் பிரபுவின் ஆக்கிரமிப்பிற்கு முன் (1791) இவ்வூரில் ஐநூறு வீடுகள் இருந்தன. அந்தப் போரிலும், அதற்குப் பின் நடந்த யுத்தத்திலும் (1799) அவ்வீடுகள் எரிக்கப்பட்டுவிட்டதால், கேப்டன் கிரகாம் கலெக்டராகப் பொறுப்பேற்ற போது (1799) இவ்வூர்வாசிகள் ஊரைக் காலி செய்துவிட்டுப் போயிருந்தனர். அப்போதிருந்து இதுவரை முன்னூறு வீடுகள் திரும்பக் கட்டப்பட்டுள்ளன.

'கெலமங்கலமும் ஓசூரும் இப்போது இரண்டு தாலுகாக்கள். இவையிரண்டும் முன்பு பாகலூர் பாளையக்காரருக்கு உடைமையாயிருந்தன. இவ்விரண்டு ஊர்களிலும் பாதுகாப்பு குறைவாக இருந்ததால், மைசூர்ப் பாளையக்காரர்கள் இவற்றைக் கைப்பற்ற முனைந்தனர். ஆனால் பாகலூர் பாளையக்காரர் அம்முயற்சிகளை எதிர்த்து வந்தார்- ஐதர் அலி சீரங்கப்பட்டணத்தின் ஆட்சியைப் பிடிக்கும் வரை தொடர்ந்து எதிர்த்தார். காரன்வாலிஸ் பிரபு சீரங்கப்பட்டணத்தின்மீது தொடுத்த போரின்போது பாகலூர்ப் பாளையக்காரரின் வாரிசு, கேப்டன் ரீடுவின் படையுடன் சேர்ந்து கொண்டான். உணவு தானியங்களைச் சேகரிப்பதில் அவருக்கு உதவியாக இருந்தான். சீரங்கப்பட்டணத்தில் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கைக்குப் பிறகு (கி.பி.1792) பாகலூர்ப் பாளையத்தின் வாரிசு, ரீடுவுடன் சேர்ந்து பாராமகாலுக்கு வந்தான். சீரங்கப்பட்டணம் வீழ்ந்த பிறகு (1799) பாகலூர் இப்பிராந்தியத்துடன் (பாராமகால்) இணைக்கப்பட்டது. அந்த நபர், ஐதர் அலி கைப்பற்றிய பாகலூர்ப் பகுதிக்கு பாளையக்காரனாக நியமிக்கப்பட்டான். ஆனால் கெலமங்கலமும் ஓசூரும் ஆங்கிலேயரின் உடைமையாக இருந்து வருகின்றன...'

என்று கெலமங்கலம், ஓசூர்ப் பகுதிகளின் அண்மைக்கால வரலாற்றைத் தெரிவிக்கிறார் புக்கானன். அவ்விரு ஊர்களில்,

ஒரு கண்டகம் அளவை = *5.693* புஷல் (bushel/ஒரு புஷல் சுமார் *36.4* லிட்டர்கள்)

ஒரு மணங்கு பாக்கு எடை = *30.335* ராத்தல் (lb)

ஒரு மணங்கு புகையிலை மற்றும் வெல்லம் எடை = *24.268* ராத்தல் (lb)

எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அங்கு விளைந்த சில பொருட்களின் விலைவாசியையும் குறிப்பிட்டுள்ளார். உதாரணத்திற்கு,

| பொருள் | | விலை: (சுல்தானி பணம்) | அளவு | விலை: ஆங்கில நாணயத்தில் | |
|---|---|---|---|---|---|
| | | | | ஷில்லிங் | பென்ஸ் |
| நெல் ஒரு கண்டகம் | | 8 | ஒரு புஷல் | 0 | 10.523 |
| ராகி | ” | 8 | ” | 0 | 10.523 |
| அவரை | ” | 11 | ” | 1 | 2.469 |
| துவரை | ” | 12 | ” | 1 | 3.785 |
| சாமை | ” | 4 | ” | 0 | 5.261 |
| எள்ளு | ” | 30 | ” | 3 | 2.564 |
| கொள்ளு | ” | 5 | ” | 0 | 6.577 |
| கோதுமை | ” | 40 | ” | 4 | 4.614 |
| கொத்தமல்லி | ” | 16 | ” | 1 | 9.047 |
| ஓமம் | ” | 32 | ” | 3 | 6.093 |
| உப்பு | ” | 28 | ” | 3 | 0.939 |
| புகையிலை ஒரு மணங்கு | | 7 | - | - | - |
| வெல்லம் (கரும்பு) | ” | 4 | - | - | - |
| பாக்கு | ” | 25 | - | - | - |

ஏர் உழத் தகுதியான எருதுவின் விலை 30 முதல் 40 பணம். வெட்டுவதற்குத் தகுதியான செம்மறி ஆடு அல்லது வெள்ளாட்டின் விலை மூன்று பணம்.

அங்குப் புன்செய் நிலங்கள்தான் அதிக அளவு விளை நிலங்கள். நிலத்தின் அளவை, குறிப்பிட்ட நிலத்திற்குத் தேவையான ராகி விதை அளவையைப் பொருத்திருந்ததாம்... ஆறு கொலகா (Colagas) அளவு ராகி விதைகள் தேவைப்படும்

நிலத்தை அளந்து பார்த்தபோது 1,68,249 சதுர அடிகள் இருந்தன. அதாவது ஒரு கொலகா நிலம் என்பது 81/100* ஏக்கருக்குச் சமம் என்கிறார் புக்கானன்.

கெலமங்கலம் பகுதியிலிருந்த நிலத்தின் தன்மைகள், விளைவிக்கப்பட்ட பயிர்கள் போன்றவற்றை அவர் மிக விரிவாகத் தந்துள்ளார். அவர் குறிப்பிட்டுள்ளவற்றில் சிலதைக் காண்போம்.

**புன்செய் நிலங்கள்**

● 'இங்குள்ள ஒவ்வொரு கிராமத்திலும் புன்செய் நிலங்கள் மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால், சில கிராமங்களின் முதல் தர நிலங்கள் கடைசித் தர நிலங்கள் போன்றே உள்ளன... இதனால் நில வருவாயை நிர்ணயிப்பதில் வித்தியாசம் ஏற்படுகிறது... சில கிராமங்களில் முதல் தர நிலம் ஒரு கொலகாவிற்கு பத்துப் பணம்; பிற கிராமங்களில் அது மூன்று பணமாக உள்ளது...

● 'அந்தந்த கிராமத்தின் அருகில் உள்ள நிலங்கள்தான் இந்த அளவு வருவாய் தரும்... தூரத்திலுள்ள நிலங்களை ஏற்று சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு விருப்பமில்லை. ஒரு பருவத்தில், அருகிலுள்ள நிலங்களில் அவர்கள் சாகுபடி செய்தபின், தூரத்திலுள்ள நிலங்களில் சிறிதளவிலாவது பயிர் செய்விக்க அக்கிராமத்தின் ஒரு குட்டி அதிகாரி (உடாரி-Wudary), தோட்டியின் துணையுடன் சென்ற விவசாயிகளை நச்சரிப்பான். அதன் மூலம் ரொக்கமாகவோ விளைச்சலாகவோ சிறிதளவானது வருவாய் வரும்...

● 'மழைக்காலம் சீக்கிரம் வந்தால் முதல்தர நிலத்தில் ராகியைப் பயிர் செய்ய ஏற்பாடு நடைபெறும்; கூடவே அவரை, துவரை, போன்ற ஊடுபயிர்களும் விதைக்கப்படும். மழை வரத் தாமதமானால் சாமை விதைக்கப்படும்; அதற்கும் காலம் கடந்து விட்டால் கொள்ளு விதைக்கப்படும்...

* 1,68,249 சதுர அடிகள் என்பது 3.86 ஏக்கர் என்றாகிறது. புக்கானனின் நூலில் அச்சுப்பிழை போல் தோன்றுகிறது. ஓர் ஏக்கர் என்பது 43,560 சதுர அடிகள் என்று கலெக்டர் ரீடு நிர்ணயித்தார். (பார்க்க: அத்தி. 7). இன்றும் நாம் அதை அனுசரிக்கிறோம்.

● 'இரண்டாம் தர புன்செய் நிலத்தில் ராகியும் அதற்கேற்ற ஊடு பயிர்களும் அடிக்கடி பயிரிடப்படுகின்றன. ஆனால் முதல்தர நிலத்தில் கிடைப்பதைப் போல் பாதியளவுதான் விளைச்சல் இருக்கும்- இந்தப் பாதியும் விதைச் செலவு, குத்தகைச் செலவுக்குமே (நிலவரி) சரியாக இருக்கும். இங்குள்ள விவசாயிகளோ பாதியளவு விளைச்சலை மறைக்க முயல்வர் என்பது கண்கூடு... இந்த வகை நிலங்களில் சாமையும் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. பாசிப் பருப்பு, எள்ளு, ஆமணக்கு போன்றவையும் சிறிதளவு நிலங்களில் பயிராகின்றன.

● 'மழை பொய்க்கும் ஆண்டில் இரண்டாம் வகை நிலத்தில் கொள்ளு விதைக்கப்படுகிறது. ஆனால் மழை உள்ள பருவங்களில் முதல் தர, இரண்டாம் தர நிலங்களில் கிடைக்கும் மகசூல் மூன்றாம் தர நிலங்களில் கிடைப்பதைவிட அதிகம் இராது! மூன்றாம் வகை நிலங்களில் பொதுவாகக் கொள்ளு பயிரிடப்படுகிறது...

## தோட்டப் பயிர்கள்

தோட்டங்களாக உள்ள புன்செய் நிலங்கள் விவசாயி களுக்கு அடிக்கடி குத்தகைக்கு விடப்படுகின்றன. சுமார் மூன்று ஏக்கர் தோட்டத்திற்கு ஒரு ஏற்றம் மூலம் இறைக்கப்படும் நீர் போதுமானது. ஏற்றத்தின் மரத்தின்மீது நடந்து செல்ல ஒரு ஆள், மற்றும் இரண்டு நபர்கள் இருந்தால் அத்தோட்டத்தைக் கவனித்துக் கொள்ள இயலும்... இத்தோட்டங்களில் பாதியளவை திராவிட தேசத்திலிருந்து (ஆர்க்காடு) வந்து குடியிருக்கும் திகுளர் (Tigular) இனத்தவர்களும் மீதியை இங்குள்ள விவசாயிகளும் சாகுபடி செய்கின்றனர். இத்தோட் டங்களில் பயிராகும் பொருட்கள்: கோதுமை, சோளம், ராகி, வெங்காயம், பூண்டு, மஞ்சள், புகையிலை, கசகசா, கொத்தமல்லி, ஓமம், கீரை போன்றவை. இவற்றில் கோதுமை, கொத்தமல்லி, ஓமம், கசகசா, புகையிலை, பூண்டு, மஞ்சள் போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

'இவ்வகையான தோட்டங்களுக்கு ஏற்றம் மூலம் நீர் பாய்கிறது. புன்செய் நிலங்களாக இருப்பினும், அவற்றில் சில நெல் விளையும் நிலங்களும் உண்டு. அவற்றிற்கு ஏரிகளிலிருந்து நீர் கிடைக்கிறது. இந்த நிலங்கள் தொடர்ந்து பயிராகி வருகின்றன; பெரும்பாலும் நாலைந்து பயிர்கள் ஒரே நேரத்தில் பயிரிடப்படுகின்றன...

**புகையிலை**

'தோட்டங்களிலும், நன்செய் நிலங்களிலும், பிற புன்செய் நிலங்களிலும் கூட புகையிலை பயிரிடப்படுகிறது. தோட்டம் மற்றும் பிற புன்செய் நிலங்களுக்கு ஒரே அளவு குத்தகைதான் வசூலிக்கப்படுகிறது. நன்செய் நிலத்தில் பயிராகும் புகை யிலைக்குப் பாதியளவு விளைச்சல் குத்தகை.

'புன்செய் நிலத்தில் புகையிலைப் பயிரிட்டால் அருகிலுள்ள கிணற்றிலிருந்து குடங்களில் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. மே மாதத்தில் நிலம் 14 அல்லது 15 தடவை உழப்படும். அடுத்த மாதத்தில் இரண்டு முழ இடைவெளியில் ஏர் உழவு ஓட்டப்பட்டு நிலம் தண்ணீரால் நிரப்பப்படுகிறது. அந்த ஏர்க்கால்களில் புகையிலை நாற்றுகள் ஒன்பது அங்குல இடைவெளிகளில் நடப்படுகின்றன. நாற்றுகளின் வேர் அருகில் சிறிதளவு சாணம் வைக்கப்படும். பின்னர் நாற்றுகள், அகன்ற இலைகளைக் கொண்டு மூடப்படும்; ஒரு நாளைக்கு ஒரு முறை வீதம் நான்கு தடவை தண்ணீர் ஊற்றப்படும். பிறகு மூடப்பட்ட இலைகளை எடுத்து விட்டு, நான்கு நாட்களில் மூன்று முறை தண்ணீர் ஊற்றப்படும். அதுவரை மழை வராவிட்டால் இருபதாம் நாள் வரை நீர் ஊற்றுதல் தொடரும். ஒரு மாதம் கழித்த பின் மண் வெட்டியால் களையெடுத்து, மண்ணைச் செதுக்கி செடிகளின்மீது புரப்புவார்கள். இரண்டாம் மாதம் முடிந்த பிறகு, இம்மாதிரி மீண்டும் செய்யப்படும்; அப்போது செடிகளில் ஆறு முதல் ஒன்பது இலைகளை மட்டும் விட்டு மற்ற இலைகளைப் பறித்து விடுவார்கள். பிறகு செடிகளின் நடுவில் புதிதாக வரும் இலைகள் எட்டு அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறை நீக்கப்படும்.

'இலைகள் வெள்ளை நிறமாக மாறத் துவங்கினால், புகையிலை வெட்டுவதற்குத் தயார் நிலை என்பதாகும். நிலத்திலிருந்து செடிகளை வெட்டியபின், அடுத்த நாள் வரை அவை அங்கேயே கிடத்தப்படுகின்றன. பிறகு வேறொரு இடத்தில் சூரிய வெளிச்சத்தில் காய வைக்கப்படுகின்றன. அவ்வாறு ஒன்பது பகலும் ஒன்பது இரவும் வைக்கப்படும். பத்தாவது நாள் காலை, நிலத்தில் வைக்கோல் பரப்பப்பட்டு, புகையிலைகள் குவியலாக வைக்கப்படும்; புகையிலைக் கால்கள் சுற்று வளைவில் இருக்குமாறு கிடத்தப்படும். அக்குவியலை வைக்கோல்கள் கொண்டு மூடி அதன்மேல் கல்லைக் கொண்டு பாரம் வைக்கப்படும். அக்குவியல் அவ்வாறு ஒன்பது நாட்களுக்கு இருக்கும். பிறகு தண்டுகள் எடுக்கப்பட்டு, ஆறு முதல் பத்து தண்டுகள் கொண்ட கட்டுகள் கட்டப்படும். அந்தக் கட்டுகளைப் பின்னர் ஒரு குவியலாக வைத்து வைக்கோல்கள் கொண்டு மூடி, அதன்மேல் பெரிய கல்லை வைத்து பாரம் ஏற்றுவார்கள். ஒவ்வொரு நாள் மாலையிலும் அக்குவியலைப் பிரித்து, ஒவ்வொரு கட்டையும் கைகளால் பிரித்துப் பார்த்து இதமாக்கி மீண்டும் முன்பு போலவே குவியலாக வைப்பார்கள்.

'ஐந்தாம் நாள் மாலை அவற்றைப் பரப்பி இரவு முழுவதும் பனி படருமாறு வைப்பார்கள். அடுத்த நாள் மீண்டும் குவியலாக வைக்கப்படும். இவ்வாறு மூன்று நாட்களுக்குத் திருப்பிச் செய்யப்பட்டு பனியில் வைப்பார்கள். பிறகு புகையிலை விற்பனைக்குத் தயாராகும். பெரிய இலைகள் நன்றாகப் பராமரிக்கப்பட்டு ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யுமளவிற்குத் தயாரிக்கப்படுவது போல் தெரிகிறது... இந்தியாவில் உபயோகிக்கும் இலைகள் முழுவதும் காய வைக்கப்படுகின்றன. ஆனால் பெரிய இலைகள் சற்று ஈரப் பதமாகவும் மிருதுவாகவும் இருக்குமாறு செய்யப்படுகின்றன. அவ்விலைகளின் சுவையைக் கூறும் அளவுக்கு நான் தேர்ந்தவனல்ல...

'ஒரு மணங்கு புகையிலையை ஐந்து பணத்திற்கு விவசாயிகள் மதிப்பிடுகிறார்கள்... புகையிலை அறுவடை

இலையுதிர் காலத்தின் (autumn) முதல் அல்லது இரண்டாம் மாதத்தில் நடைபெறுகிறது. இவ்வாறு தொடர்ந்து மூன்று ஆண்டுகளில் அதே நிலத்தில் புகையிலை பயிரிடப்படுகிறது. நான்காவது முறை பயிரிடப்படுவதற்கு முன்பு வேறு ஏதேனும் பயிரை ஒரு ஆண்டிற்காவது விளைவிக்க வேண்டும்- அப்பயிரின் இரண்டாம் போகம் சாதாரணமாக மேற்கொள்ளப் படுவதில்லை...

'தோட்டப் பயிர்களில் வெள்ளைப் பூண்டு அதிகம் பயிரிடப்படுகிறது. கசகசா, முள்ளங்கி போன்றவையும் பயிராகின்றன...'

என்று கூறி வரும் புக்கானன் இப்பயிர்களின் நடவு, விளைச்சல் முறை, அறுவடை போன்றவற்றையும் குறிப்பிட்டுள்ளார். அபின் என்பது கசகசாச் செடியிலிருந்து பெறப்படும் பால்; அது மருந்தாகவும் போதைப் பொருளாகவும் உட்கொள்ளப் படுகிறது. கசகசாச் செடியின் விளைச்சல் பற்றி புக்கானன் கூறுவதைப் பார்ப்போம் :

**கசகசாச் செடி**

'திகுளர் (Tigular) வகுப்பைச் சேர்ந்த சில ஏழைகள் அபின் தயாரிக்கின்றனர். பொதுவாக கசகசாச் செடிகளின் பழங்களுக்குச் சேதாரம் ஏற்படாமல், அவற்றின் விதைகள் முதிரும் அளவிற்கு விடப்படுகின்றன. அப்பழங்களிலிருந்து சாற்றை (அபின்) எடுக்கும்போது விதைகள் குறைகின்றன. இங்கு அபினுக்கு மதிப்பு அதிகம். வசதி படைத்தவர் உண்ணும் மிட்டாய், கேக் போன்ற பொருட்களில் அது சேர்க்கப்படுகிறது.

'மூன்று மாதத் துவக்கத்திலிருந்து அபின் வரும் அளவிற்குக் கசகசாச் செடிகள் தகுதி பெறுகின்றன. பழத்தை ஒரு முள் கொண்டு கீறுவார்கள். அதிலிருந்து வெளிவரும் சாறு, காற்று பட்டதும் சிறிது நேரத்தில் கெட்டியாகும். அதை வழித்து ஒரு கலத்தில் சேமிப்பார்கள். அது சிறந்த அபினாகும். இச்செடிகளை விளைவிப்பவர்களின் கூற்றுப்படி, ஒரு சேர்

அபின் 15 பணத்திற்கு விற்கப்படுகிறது. ஏன் அவ்வளவு விலைக்குப் போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஒன்று மட்டும் புரிகிறது - முந்தைய அரசு (திப்பு சுல்தான்) அதற்குத் தடை விதித்திருந்தது; போதை தரும் இப்பொருளை உபயோகித்தால் கடும் தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தன. அதனால் விலை கிராக்கியாகியிருக்கும்.

'விதைகள் முதிரும் அளவிற்கு விட்டால், பழங்களின் ஓடுகளை வெல்லம், தண்ணீர் கொண்டு அடித்துக் கலக்கி போதை தரும் பானமாகச் செய்யப்படுகிறது. போதைக்காக, அதை முஸ்லிம்களும் இந்துக்களும் அருந்துகிறார்கள்.'

### நெல் குத்துதல்

இவ்வாறு குறிப்பிட்டு வரும் புக்கானன் அங்கே பயிராகிய நெல் வகைகளையும் (கன்னடப் பெயர்கள்) பயிரிடும் முறைகளையும் குறிப்பிட்டுள்ளார். விளைந்த நெல்லை விவசாயியே வேக வைத்து அரிசியாக்கினால் பாதியளவு தானியம் தேறும் என்கிறார். ஆட்களை வைத்துச் செய்தால் நாற்பது சதம்தான் அரிசி கிடைக்கும். பத்து சதம் ஆள் கூலிக்குச் சேர்ந்து விடுமாம். இந்தியாவின் பிற பகுதிகளிலும் அந்த அளவு கூலி நிலவியது என்கிறார். நெல்லை அரிசியாக்க, நெல்லை வேக வைத்து, உரலில் இட்டு, ஐந்து அல்லது ஆறு அடி நீளம், மூன்று அங்குல விட்டமுள்ள, இரு முனைகளிலும் இரும்புப் பூண் போட்ட தடி (stick/உலக்கை) மூலம் குத்தி, பிறகு அரிசியையும் உமியையும் பிரித்தெடுக்கிறார்கள் என்று நெல்லை அரிசியாக்கும் முறையையும் எழுதியுள்ளார்.

### கரும்பு

'இந்தத் தாலுகாவில் கரும்பு அதிக அளவில் பயிராகிறது. நான்கு வகைக் கரும்புகள்: ரஸ்தாளி (Restali), பட்டாபட்டி (Puttaputti), மரக்காபு (Mara-cabo) மற்றும் சித்துவாசன் (Chittu-wasun). இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு மண்ணில் பயிராகிறது. கடைசி இரண்டு வகைக் கரும்புகளிலிருந்து கிடைக்கும் வெல்லத்தின் அளவு முதல் இரு வகைக்

கரும்புகளிலிருந்து கிடைக்கம் வெல்லத்தின் அளவை விடக் கால் பங்கு குறைவுதான். ரஸ்தாளியிலிருந்து பெறும் வெல்லத் திற்கு மற்ற வகைகளிலிருந்து பெறும் வெல்லத்தைவிட அதிக விலை கிடைக்கிறது! பட்டாபட்டி மற்றும் ஐந்தாவதாக உள்ள காரிக் கோபு (Cari-cabo) ஆகியவற்றிற்கு நல்ல மண் கொண்ட நிலம் வேண்டும். ரஸ்தாளியும் பட்டாபட்டியும் பயிராகும் முறை :

'முதலில் நிலம் இரண்டு முறை உழப்படுகிறது. 4, 8, 12 மற்றும் 16ஆம் நாட்களில் மீண்டும் இரண்டிரண்டு முறை உழப்படும். காட்டில் கிடைக்கும் சுள்ளிகளைச் சிறுசிறு துண்டுகளாக்கி, சாணத்துடன் சேர்த்து எருவாக இடப்படும். அதன் பிறகு, நிலம் இரண்டு முறை உழப்படுகிறது. நிலத்தைப் பாத்திகளாகப் பிரித்து, தண்ணீர் பாய 9 அங்குல அகல, ஆழத்தில் கால்வாய் வழி செய்யப்படும். விதைக் கரும்புகள் மூன்று கணுக்கள் கொண்ட துண்டுகளாக வெட்டப்படு கின்றன. அக்கால்வாய்களில் தண்ணீர் பாய்ச்சிய பின்னர் ஒவ்வொன்றிலும் வரிசையாக விதைக் கரும்புத் துண்டுகள் படுக்கை வாட்டில் மண் மூடும் அளவில் நிலத்தில் வைக்கப்படுகின்றன. கரும்புத் துண்டுகளுக்கிடையில் ஒன்பது அங்குல இடைவெளி விடப்படுகிறது - அவ்வாறு பாத்திகளில் தண்ணீர் பாயும் கால்வாய்கள் அனைத்திலும் கரும்புத் துண்டுகள் வைக்கப்படுகின்றன. ஒரு ஏக்கரில் சுமார் 3942 கரும்புத் துண்டுகள் வைக்கப்படுகின்றன. ஐந்து நாட்களுக்கொரு முறை நீர் பாய்ச்சப்படுகிறது.

'பத்தாம் நாள், களைக் கொத்து மூலம் களைகள் நீக்கப்படுகின்றன. இருபதாம் நாள் மீண்டும் மண்வெட்டி மூலம் களைகள் எடுக்கப்படுகின்றன. பாத்திகளில் உள்ள மண் எடுக்கப்பட்டு ஏற்கனவே பதிக்கப்பட்டுள்ள கரும்புத் துண்டுகளின் மேல் விசிறப்படுகிறது. இதனால் ஒவ்வொரு ப்பாத்தியிலும் நீர் செல்ல கால்வாய் போல் அமையும்... இந்த நேரத்தில் கரும்பின் இலைகள் சுமார் ஒன்பது அங்குல நீளம் வளர்ந்திருக்கும். முப்பதாவது நாள் வரை மேலும் தண்ணீர் தேவைப்படாது. அப்போது, பாம்பு ஊர்ந்து செல்வது போல

கால்வாய்கள் திருத்தப்படும் - இரண்டு வரிசைக் கரும்புகள் ஒவ்வொரு வளைவிலும் வருமாறு அமைக்கப்படும். காண்க, ஒரு பாத்தியின் அமைப்புப் படம் :



'மழை இல்லாவிட்டால் கரும்பு முதிரும் வரை எட்டு நாட்களுக்கு ஒரு முறை இக்கால்வாய்களில் நீர் பாய்ச்ச வேண்டும். கரும்பு வளர ஆரம்பித்ததும் மூன்று முதல் ஐந்து செடிகளின் தோகைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டுவார்கள் - அதனால் வெளிச்சம் தென்படாதவாறு செய்வார்கள். இதைக் கவனமாகச் செய்ய வேண்டும்; ஏனெனில் கரும்பின் தண்டு நிலத்திலிருந்து அப்போதுதான் வர ஆரம்பித்திருக்கும். இப்படிச் செய்யா விட்டால் கரும்பின் தோல் பகுதி கெட்டியாகும்; சாறின் அளவு குறையும்... கரும்பு அறுவடை பதின்மூன்று மாதத்திற்குப் பிறகு நடைபெறுகிறது. ஒரு மாதத்திற்குள் எல்லா கரும்புகளும் வெட்டப்படுகின்றன... மறுமுறை அந்த நிலத்தில் கரும்பு பயிரிடுவதற்கு முன் நெல் சாகுபடி செய்ய வேண்டும்.

'கரும்பு மகசூலைப் பகுத்து அரசாங்கத்திற்கான குத்தகையைச் செலுத்த வேண்டும். அது கீழ்க்கண்ட முறையில் செய்யப்படுகிறது. 360 மணங்கு வெல்லம் தயாரிக்க உதவும் நிலத்தில் மிஞ்சும் அறுவடையைக் காண்போம்:

| தினச்செலவு | சேர் (Seer) எடை | பணம் |
|---|---|---|
| இரும்புக் கொதிகலம் (பாய்லர்) - அரசாங்கத்திற்கானது - வாடகை | 1½ | 1 |
| ஆலை வாடகை | 1½ | 1 |
| நீர் கண்டி (பாசனத் தண்ணீர் திறந்து விடுபவன்) | 1½ | 0 |
| ஷான்பாக் (கிராமக் கணக்குப்பிள்ளை) | 1½ | 0 |
| கொல்லன் (வேலையாள்) | 1½ | 0 |
| கொல்லன் - விநாயகருக்குப் பூசாரியாக | ¾ | 0 |
| எண்ணெய், வெண்ணெய், எலுமிச்சை | 0 | ½ |
| மொத்தம் | 8¼ | 2½ |

அந்த ஆலை, பொதுவாக அறுபது நாட்களுக்கு வேலை செய்கிறது; நாள் ஒன்றுக்கு 6 மணங்கு வீதம்

| | பணம் |
|---|---|
| தினசரிச் செலவு, ரொக்கம் 2½ பணம் வீதம் | 150 |
| வெல்லம் 8¼ சேர் வீதம் * = 12¾ மணங்கு. மணங்கு 4 பணம் விலைவீதம் | 51 |
| | 201 |
| விளைச்சல் மதிப்பு: 360 மணங்கு × 4 பணம் வீதம் | 1440 |
| மீதி வருவாய் | 1239 |
| ஒவ்வொரு ஆலைக்கான ஆண்டுச் செலவு: | |
| சுங்கச் சாவடி | 5 |
| தச்சு வேலையாள் மற்றும் இரும்பு வேலையாள் | 5 |
| பலியிட இரண்டு ஆடுகள் | 4 |
| | 14 |
| ஆக, மிச்ச வருவாய்: (1239-14) | 1225 பணம் |

* இந்த மாதிரியான அளவைகள் அக்காலத்தில், ஒரே ராஜ்ஜியத்தில் வெவ்வேறு பகுதிகளில் மாறுபட்டிருந்ததைக் காண முடிகிறது.

இந்த வருவாயை விவசாயியும், நிலத்தின் உடைமையாள ராக அரசாங்கமும் சரி பாதியாகப் பிரித்துக் கொள்கிறார்கள்'

கரும்பு சாகுபடி மூலம் விவசாயிக்குக் கிடைக்கும் வருமானம், அரசாங்கத்தின் நிலவரியைக் கணக்கிடும் முறை, நன்செய் நிலத்தின் நிலவரி விகிதம் (50%) போன்றவற்றை புக்கானன் தந்துள்ள மேற்சொன்ன கணக்கு தெளிவு படுத்துகிறது. கெலமங்கலத்தில் இருந்த பாக்குத் தோட்டங்கள், அவற்றில் செய்த பாக்கு சாகுபடி, வெற்றிலைத் தோட்டங்கள் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் குறிப்பிடுவன வற்றைக் காண்போம்.

## இனாம் நிலங்கள்

'இந்தத் தாலுகாவில் நிலங்கள் அரசுக்குச் சொந்தமானவை. ஆனால் பாளையங்களின் நிலங்கள், வைதிக பிராமணர்கள், கோயில்கள், முஸ்லிம் மத குருக்கள், வருவாய் மற்றும் காவல்துறைகளின் சிறு அதிகாரிகள், ஏரிகளை வெட்டி நிர்வகிக்கும் *கரைக்கட்டு கொடிகை* (Caray-cuttu codigy - கன்னடப் பெயர்) ஆகியோருக்கு வழங்கியுள்ள நிலங்கள் அரசாங்கத்திற்குரிய நிலங்களில் வராது. *கௌடா, ஷான்பாக், நீர்கண்டி* போன்றோருக்குத் தந்துள்ள இனாம் நிலங்களை அவர்கள் விற்கலாம். ஆனால், அவற்றில் பரம்பரைப் பதவிகளை மாறுதல் செய்யும்போது அப்பதவிக்கான நிலங்களுடன் மாறுதலாகும்.

'வசதிமிக்க ஒருவர் தன்னுடைய செலவில் பாசனத்திற்காக ஏரியை வெட்டி, நிர்வகித்தால் அதனால் நீர் பாயும் நிலங்களில் கால் பகுதி அவருக்கு இனாமாகத் தரப்படுகிறது. ஆனால் அந்த ஏரியை நல்ல நிலையில் வைத்திருப்பது அவரது பொறுப்பு. பொதுவாக அந்த நபர் அந்த ஏரியை நல்ல நிலையில் வைத்திருப்பார் - அரசாங்கத்தின் செலவில் கட்டப்பட்ட ஏரிகள் அல்லது இவ்வாறு தனியார் வெட்டி, பிறகு பராமரிக்கப்படாமல் இருந்து அரசாங்கத்திற்கு வந்த ஏரிகள் போன்றவற்றைவிட நல்ல பராமரிப்பில் வைத்திருப்பார். அதற்கான காரணத்தை உள்ளூர் மக்கள் சொல்வது

ஏற்புடையது. - அந்தத் தனிப்பட்ட நபரின் ஏரியை அவர்கள் வற்புறுத்தி நல்ல பராமரிப்பில் இருக்கச் செய்ய முடியும்; ஆனால் அரசாங்க ஏரிகளுக்கு எஜமானர் இல்லாததால் [அரசாங்க அதிகாரிகளைச் செய்ய வைக்க முடியாத நிலை!] அவை நல்ல பராமரிப்பில் இருக்கச் செய்ய முடிவதில்லை என்கிறார்கள். ஆகவே, தனியார் ஏரிகளை ஊக்குவிக்க நினைக்கிறார்கள். அவ்வாறான தனியார் ஏரி பராமரிப்பின்றி அரசின் கைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டால், வேறு வசதிமிக்க குடும்பத்திற்குத் தந்து நல்ல நிலையில் வைத்திருக்க விரும்பு கிறார்கள். இதற்காக கால்பகுதி பாசன நிலங்கள் அந்தக் குடும்பத்திற்குச் செல்வதில் அவர்களுக்கு ஆட்சேபனை இல்லை... சில இடங்களில் கோட்டைகளைக் கட்டி அவற்றைப் பராமரித்து வருபவர்களுக்கும் இனாம் நிலங்கள் வழங்கப்படுகின்றன...

### நில உடைமை அளவும் வேலையாட்களும்

'ஐந்து ஏர்கள் வைத்திருப்பவர் (கூட, பத்து மாடுகள்!) நல்ல சொத்து உடையவராகக் கருதப்படுகிறார். ஒரு ஏர் கொண்டு 1¼ ஏக்கர் நெல் வயலையும், 3¼ ஏக்கர் புன்செய் நிலங்களையும் சாகுபடி செய்யலாம். இதை எல்லா விவசாயிகளும் சாதாரணமாகச் செய்வார்கள். ஆனால் அந்த அளவு நிலங்களில் அந்த ஆள் பயிர் செய்துள்ளதைக் கண்டதும், அந்த ஊரின் கீழ்நிலை நிர்வாக அதிகாரியை ('உடாரி'; Wudary; கன்னடம்) அனுப்புவார்கள். அவன் அங்குச் சென்று மேலும் 3 1/4 ஏக்கர் புன்செய் நிலத்தைச் சாகுபடி செய்விக்க வற்புறுத்துவான் [அரசின் வருவாயைக் கூட்ட ஒரு உபாயம்!] ... இம்மாதிரிச் செய்வது வழக்கமாக இருந்தாலும், இந்த வற்புறுத்தலில் எனக்கு உடன்பாடில்லை.

'சாகுபடி வேலைகளை விவசாயிகளும் அவர்களது குடும்பத்தினரும் செய்கின்றனர். சில வசதியான விவசாயிகள் ஒரு ஆண்டு வேலைக்காக வேலையாட்களை நியமிக்கிறார்கள். விதைப்பு, அறுவடை சமயங்களில் அதிக ஆட்களை தினக்கூலிக்கு ஏற்பாடு செய்கிறார்கள். அடிமை முறை இல்லை.

ஒரு ஏர் ஓட்டுபவனுக்கு ஆண்டுக் கூலியாக 3½ கண்டகம் ராகியும் (28 பணம் மதிப்பு), தங்க ஒரு குடிசையும், 16 பணம் ரொக்கமாகவும் தரப்படுகிறது... வேலையாட்களுக்குப் பொதுவாகத் திருமணம் மற்றும் பிற காரியங்களுக்காக முன்பணம் தரப்படுகிறது. அந்தப் பணம் தவணை முறையில் பிடித்துக் கொள்ளப்படுகிறது. அதிகக் கடன் தந்து, கடன் சுமையை ஏற்றி வேலைக்காரர்களை அடிமைகளாக்கிக் கொள்ள இங்குள்ள விவசாயிகள் விருப்பம் கொள்வதில்லை. தினக் கூலியாக வரும் ஆண்-பெண் ஆளுக்கு மொத்த ரக நெல் அல்லது பிற தானியம் தரப்படுகிறது.

**கால்நடைகளும் எருவும்**

'இங்கு இலைகளை எருவாகப் பயன்படுத்துவதில்லை. கால்நடைகள் தின்று மிச்சம் வைக்கும் வைக்கோல்- பிற தானியத் தட்டுகள் போன்றவற்றை எடுத்து சாணம், சாம்பல், வீட்டுக் குப்பைகள் போன்றவற்றுடன் சேர்த்து எருக்குழியில் கிடத்துகிறார்கள். இதில் உள்ள பெரும் குறை- பயிறுகளின் வைக்கோல், இலைகளை எருவாகப் பயன்படுத்தாமை...

'இப்பகுதிகளில் இனப்பெருக்கத்திற்காகத் தனியே கால்நடைகளை வைத்திருப்பதில்லை. ஒவ்வொரு விவசாயியும் சில பசுக்களையும் பெண் எருமைகளையும் வைத்துள்ளான் - அவற்றின் பயன் என்னவென்பது தெளிவு. பெரும்பாலான பிராமணர்களும், வசதிமிக்கவர்களும் பாலுக்காகப் பசுக்களையும் பெண் எருமைகளையும் வைத்துள்ளனர். ஆண் கால்நடைகள் உழைக்கத் தகுதி பெறும் அளவுக்கு வளர்ந்த பிறகு விற்கப்படுகின்றன. அதன் மூலம் இப்பகுதியின் ஏற்றுமதி கூடுகிறது... தானிய வியாபாரிகளிடம் (லம்பாடிகள்) நிறைய ஆண், பெண் கால்நடைகள் உள்ளன - ஆனால் அவை கிராமங் களில் உள்ளவற்றைவிட உயர்வானவை அல்ல... விவசாயிகள் அநேக செம்மறி, வெள்ளாடுகளை வைத்துள்ளனர். பகற்பொழுதில் மேய்ச்சலுக்காக அவற்றைக் காட்டிற்குக் கொண்டு செல்கிறார்கள்; இரவில் கிராமத்திற்கு அருகிலுள்ள விளை நிலங்களில் கட்டி வைக்கிறார்கள். கழுதைகள் அநேகம் உள்ளன. பன்றிகளும் உள்ளன. கருநாடகத்தின் எல்லாப்

பகுதிகளிலும் கீழ்நிலையிலுள்ள மக்கள் பன்றிக் கறியை உண்கின்றனர். ஆகவே, இந்தியாவில் சில பகுதிகளில் உள்ளதைப் போல அல்லாமல் இங்குப் பன்றிகள் மனிதக் கழிவுகளை உண்ண அனுமதிப்பதில்லை. இந்தப் பகுதியில் முன்பு கால்நடைகளின் எண்ணிக்கை மிக அதிகம்- குறிப்பாகக் காடுகள் நிறைந்த ஆலம்பாடியைச் சார்ந்த கிராமங்களில் மிக அதிகமிருந்தன. ஆனால், கால்நடைகளின் தொற்றுநோய் காரணமாக அவற்றின் எண்ணிக்கை மிகக் கணிசமாகக் குறைந்து போயுள்ளது - அந்த நோய், காரன்வாலிஸ் பிரபு இந்தப் பகுதியை ஆக்கிரமிப்புச் (1791/92) செய்த நாசத்திற்குப் பிறகும், சென்ற யுத்தத்தின்போது (1799) நிஜாமின் துருப்புக் களாலும் லம்பாடிகளாலும் இழைக்கப்பட்ட நாசத்தாலும் விளைந்ததாகும்...'

**வராகன் ஹள்ளி**

இவ்வாறான குறிப்புகளுடன் கெலமங்கலத்தில் தனது பணியை முடித்துக் கொண்டு ஜூன் 18ஆம் தேதி இரண்டு கோஸ் தூரம் உள்ள வராகன் ஹள்ளிக்குச் சென்றார். புதர்கள் மண்டிய சிறு குன்றுகளடர்ந்த பகுதியினிடையே விளை நிலங்கள் தென்பட்டன. தாசில்தாரின் கூற்றுப்படி முதல் தர விளை நிலங்கள் இருபது சதவிகிதமும் இரண்டாம், மூன்றாம், நான்காம் தர விளை நிலங்கள் முறையே 40%, 20%, 20% அளவுக்கு இருந்தனவாம். முதல்தர நிலத்தில் பெரும்பாலும் ராகியும் அதன் ஊடுபயிர்களும் விளைவிக்கப்பட்டன. விளைச்சல் பற்றி இங்குள்ள விவசாயிகள் கூறிய அளவு கெலமங்கல விவசாயிகள் கூறியதைப் போல் இரண்டு மடங்கு இருந்ததாம். இத்தனைக்கும் மண், பருவநிலை, விவசாய முறை எல்லாம் இரண்டு இடங்களிலும் ஒரே மாதிரியிருக்கும் பொழுது இரு ஊர் விவசாயிகள் கூறும் விளைச்சல் வித்தி யாசத்தைச் சுட்டிக் காட்டுகிறார் புக்கானன்... வராகன்ஹள்ளி ரத்தினகிரிப் பகுதியைச் சேர்ந்தது. ராயக்கோட்டை தாலுகா வில் இருந்தது. ராயக்கோட்டை தாசில்தார், கர்னல் ரீடுவின் கீழ் பணியாற்றி அவரால் பழக்கப்பட்டவர். அப்படிப்பட்ட அதிகாரிகள் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள அதிகாரிகளை

விட மிகவும் உயர்ந்தவர்கள் என்றும், அப்படிப்பட்ட தாசில்தார் கூறுவதில் அதிக நம்பிக்கை கொள்ளலாம் என்றும் விசேஷமாகக் குறிப்பிடுகிறார்...

ரத்தினகிரியும் ராயக்கோட்டையும் முன்பு சென்னப் பட்டணம் (கருநாடக மாநிலம்) ஜெகதேவராயரின் ஆளுகை யில் இருந்தன. பிறகு அவற்றை மராத்தியர்கள் கைப்பற்றினர். மராத்தியர்களிடமிருந்து மைசூர் ராஜாக்கள் கைப்பற்றினர். அப்பகுதி கருநாடகத்தைச் சேர்ந்ததாயிருந்தாலும், மக்கள் தெலுங்கும் கன்னடமும் கலந்த மொழி பேசினர். காரணம்- அப்பகுதிப் பாளையக்காரர்கள் தெலுங்கு மொழியினர். அது அந்தக் கலப்பட மொழிக்குக் காரணமாயிருந்திருக்கும் என்கிறார் புக்கானன்.

**ராயக்கோட்டை**

அடுத்ததாக அவர் சென்ற இடம் ராயக்கோட்டை (ஜூன், 19); மூன்று கோஸ் தூரம். அவர் குறிப்பிடுகிறார்:

'எனது ஆய்வு ராயக்கோட்டையுடன் முடிவுற்றது... ஆனால் மதராஸ் செல்லும் வரை நான் காண்பனவற்றைக் குறித்து வைப்பேன்... கர்நாடக தேசத்தின் கடைசி இடம் ராயக்கோட்டை. பொதுவாக அது பாராமகாலுடன் சேர்ந்தது என்று கணக்கிடப்படுகிறது. ஏனெனில், காரன்வாலிஸ் பிரபு திப்புவுடன் செய்த அமைதி உடன்படிக்கையின்படி (1792) ராயக்கோட்டை பாராமகாலுடன் சேர்க்கப்பட்டது.

'பாராமகாலில் உள்ள பன்னிரண்டு இடங்களும் திராவிட தேசத்தில் உள்ளன. அத்தேசம், மேற்கில் உள்ள மலைத் தொடர் முதல் கிழக்கில் கடல் உள்ள பகுதி வரையாகும். அந்தப் பன்னிரண்டு இடங்களாவன.*

---

* இப்பெயர்கள் புக்கானன் தந்துள்ளபடி. இப்பன்னிரண்டு பெயர்களில் சில, இன்றைய பெயர்களுடன் வேறுபடுகின்றன. (உதாரணம் : வாரன கடை, கடோர கடை). வேறு சில, மற்ற நூல்கள் குறிப்பிடுவனவற்றுடன் மாறுபடுகின்றன. (உ.ம்: திருப்பத்தூர், வாணியம்பாடி, தட்டக்கல்).

'இராயக்கோட்டை வரலாறும் பண்பாடும்' என்கிற நூல் (2009), பாராமகாலில் அடங்கும் ஊர்களாகக் குறிப்பிடும் இடங்கள் (பக்.34): ஜெகதேவி, நாகமலைதுர்கம், மல்லப்பாடிதுர்கம், தட்டக்கல், மகாராசகடை, காவேரிப்பட்டணம், மத்தூர், ககளகிரி (உச்சிக்கல்) அல்லது பெரியமலை, கிருஷ்ணகிரி, வீரபத்திரதுர்கம், போளுதிம்ம ராயன் துர்கம் மற்றும் இராயக்கோட்டை.

1) கிருஷ்ணகிரி
2) ஜகதேவி
3) வாரனகடை (Varina ghada)
4) காவலகடை (Cavila ghada)
5) மகாராஜகடை
6) புஜாங்க கடை (Bujungaghada)
7) கடோரா கடை (Catoragarh)
8) திருப்பத்தூர்
9) வாணியம்பாடி
10) ககனகடை (Gagana ghada)
11) சுதர்சன கடை
12) தட்டக்கல் (Tatucallu ghada)

'அனகுந்திராய மன்னரின் வீழ்ச்சிக்குப் பிறகு, ராயக் கோட்டை உள்ளிட்ட பாராமகால், சென்னப்பட்டணம் பாளையக்காரர் ஜெகதேவராயரின் கீழ் வந்தது. அவருடைய குடும்பம் வீழ்ந்த பிறகு அவருடைய நாட்டை கடப்பா நவாபும் மைசூர் ராஜாவும் பங்கிட்டுக் கொண்டனர். கடப்பா நவாப் பாராமகாலை எடுத்துக் கொண்டார். மைசூர் ராஜா கருநாடகத்திலிருந்த சென்னப்பட்டணம் பகுதியை எடுத்துக் கொண்டார் (கெலமங்கலம் உட்பட). ஐதர் அலி வந்த பின் பாராமகாலை மைசூருடன் இணைத்துக் கொண்டார்.

'காரன்வாலிஸ் பிரபு மேற்கொண்ட யுத்தத்தின்போது மேஜர் கௌடி (Major Gowdie) ராயக்கோட்டையைப் பிடித்தார் (1791). அப்போதிலிருந்து இவ்வூர் பிரிட்டிஷாரின் ஆளுகையில் தொடர்கிறது. கருநாடகத்திற்கான திறவுகோல் போன்றுள்ள இங்குள்ள மலைக்கோட்டை, அடிவாரத்திலுள்ள கோட்டை போன்ற கட்டுமானங்களைப் பாதுகாக்க சிரமங்கள் மேற் கொள்ளப்பட்டன. வசதியான வீடுகளை அதிகாரிகள் கட்டி யுள்ளனர். மலை, குன்று, வனம் போன்று இவ்வூரைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழல் அவர்கள் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது.



ராயக்கோட்டை

*'இங்கு வெப்பநிலை மிதமாக உள்ளது. இங்குள்ள ராணுவத் தளகர்த்தர் கர்னல் லெய்டன்* (Colonel Leighton) தெரிவித்ததன்படி, ஆண்டின் அதிக வெயில் மாதமான கடந்த ஏப்ரல் மாதத்தில் வெப்பநிலை 82 டிகிரிக்கு (பாரன்ஹீட்) மேல் செல்லவில்லை. தற்போதைய நிலையில் (ஜூன் மாதம்) வெப்பம் பகலில் அதிகமாக 72 டிகிரியும் காலை சூரிய உதயத்தின்போது 64 டிகிரியுமாக உள்ளது.*

*'எல்லைப்புற ஊராக இருப்பதால் இவ்வூரின் மக்கள் கன்னடம், தமிழ், தெலுங்கு கலந்த மொழியில் பேசு கிறார்கள்...'*

---

* கர்னல் அளவிலான உயர் ராணுவ அதிகாரி ராயக்கோட்டையில் இருந்தமை, அந்த ஊர் சிறந்த ராணுவ மையமாகத் திகழ்ந்ததை உணர்த்துகிறது. அந்தக் காலகட்டத்தில் சங்ககிரியில் கேப்டன் அல்லது மேஜர் அந்தஸ்திலான ராணுவ அதிகாரிகளே இருந்தனர். புக்கானன் வருகையின்போது ராணுவ அதிகாரிகளான கிருட்டிணகிரி கலெக்டர் கிரகாம் கேப்டன் அந்தஸ்திலும், சேலம் கலெக்டர் மாக்ளியாட் மேஜர் அந்தஸ்திலும் இருந்தனர். 1799இல் சேலம்- பாராமகால் மாவட்டக் கலெக்டராக இருந்த அலெக்சாண்டர் ரீடு, கர்னல் நிலையில் இருந்தார்.

**கிருட்டிணகிரி**

'ஜூன் 20ஆம் தேதி 17 மைல் தூரம்** கடந்து கிருஷ்ண கிரிக்குச் சென்றேன். சாலை நன்றாக உள்ளது. அதிலிருந்து பிரியும் கிளைச் சாலைகள் புதர்கள் மண்டி மாசு படிந்திருந்தன. செல்லும் வழியில் தட்சிண பினாகினி என்னும் பெண் ணாற்றைக் கடந்தேன். இவை முறையே சமஸ்கிருத மற்றும் தமிழ்ப் பெயர்கள். கிருட்டிணகிரிக்கு அருகே சமவெளிப் பகுதி தென்பட்டது. அதில் பாறைகளும் குன்றுகளும் படர்ந் திருந்தன.

'கிருட்டிணகிரி 700 அடிகள் உயரத்தில் உள்ளது. நிலம் தரிசாகவும், ஏற்ற இறக்கமாகவும் உள்ளது. சமவெளியில் நெல் விளையும் பூமி அதிகம் உள்ளது. நீர்ப்பாசனம் நன்றாக இருந்தாலும் மண்வளம் சுமார்தான். இங்கே ஒரு சிறு கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது (தௌளதாபாத்). அருமையான சாலைகள் போடப்பட்டுள்ளன. ஐரோப்பிய கனவான்களுக் காக வசதி மிக்க வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இப்போது காலநிலை குளிராக உள்ளது. மேற்கத்திக் காற்று வேகமாக வீசுகிறது. அக்காற்று கொண்டு வரும் மேகக் கூட்டங்கள் சூரியனின் வெப்பத்தைத் தணிக்கின்றன.

'21-ஆம் தேதி கலெக்டர் கேப்டன் கிரகாமுடன் கிருட்டிணகிரியில் தங்கினேன். அவர் கர்னல் ரீடுவின் மேற்பார்வையில் வளர்க்கப்பட்டவர். கிருட்டிணகிரியிலிருந்து செஞ்சி வழியாக மதராசுக்குத் திரும்ப நினைத்திருந்தேன். ஆனால் கேப்டன் கிரகாம் அந்த வழியில் செல்ல வேண்டாம் எனத் தடுத்து விட்டார். காரணம்- அந்த வழியில் மக்கள் நெருக்கம் குறைவு; தேவையான பொருட்களை வாங்குவதில் சிரமம் தோன்றும் எனத் தெரிவித்தார்.

'ஜூன் 22ஆம் தேதி 12 மைல் தூரம் கடந்து **மல்லப் பாடி**க்குச் சென்றேன். சாலை மிக நன்றாக இருந்தது. இங்கும்

** தூரத்தின் அளவை, ஆங்கில 'மைல்' கணக்கில் குறிப்பிடுகிறார். 1792 முதல் இப்பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியதால், கோஸ், நாழிகை தூரம் போன்ற பழைய தூர அளவைகள் மறையத் துவங்கின போலும்!

கிருட்டிணகிரிக்கு அருகில் இருந்ததைப் போன்ற சமவெளிப் பகுதி தென்பட்டது. சிறு குன்றுகளும் பாறைகளும் கூடப் பரவியிருந்தன. மண் வளம் சுமார்தான்; தரிசு நிலங்கள்; புதர் மண்டியிருந்தது. பாராமகாலின் நடுப்பகுதியில் இவ்வூர் அமைந்திருந்தாலும் இது பாராமகாலைச் சார்ந்தது இல்லை; ஆர்க்காட்டைச் சார்ந்தது. ஆர்க்காடு நவாப் இவ்வூரைத் தனது சகோதரி ஒருவருக்கு ஜாகீராகத் தந்துள்ளார். ஊர் மோசமான நிலையில் உள்ளது. மக்களின் மொழி தமிழ்.

'ஜூன் 23 ஆம் தேதி பதினைந்து மைல் கடந்து **திருப்பத்தூருக்குச்** சென்றேன்... இந்தச் சமவெளிப் பகுதிகளிடையேயான வழித்தடம் நேற்று கடந்து வந்த வழித் தடத்தைவிட அகலமாக இருக்கிறது. நிலங்களில் சாகுபடி நன்றாகச் செய்யப்பட்டுள்ளது... திருப்பத்தூர் ஒரு பெரிய கிராமம். நேர்த்தியாக வேயப்பட்ட நல்ல ஓட்டு வீடுகள் உள்ளன. கருநாடகத்தில் வேறு எங்கும் இந்த நிலையைக் காண இயலாது. இங்குள்ள ஓட்டு வீடுகளின் கூரைகள் மதராஸிலிருந்து வந்து வேலையாட்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கலாம். ஐரோப்பியர்களுடன் பழக்கம் கொண்டுள்ள மதராஸ் வேலையாட்கள் கலை நுட்பத்துடன் வேலை செய்யக் கற்றுக் கொண்டுள்ளார்கள். இவ்வூரில் சர்க்கரை தயாரிப்பதற்கும் பட்டுப்புழுக்கள் வளர்ப்பதற்கும் கர்னல் ரீடு முயற்சி மேற்கொண்டார். மேற்கிந்தியத் தீவிலிருந்து வந்த திருவாளர் லைட் (Mr.Light) என்கிற வங்காளத்துக்காரர் இவற்றை மேற்பார்வையிட அமர்த்தப்பட்டார். ஆனால் இவ்விரண்டு முயற்சிகளும் வெற்றி காணவில்லை.

'ஜூன் 24ஆம் தேதி 14 மைல்கள் கடந்து **வாணியம்பாடி**யை அடைந்தேன். ஒரு மண் கோட்டை கொண்ட பாதுகாப்பு அரண் உள்ள ஊர் இது (அன்று சேலம் மாவட்டம்). பார்க்க நன்றாக உள்ளது. மரங்கள் அடர்ந்துள்ளன... பாலாற்றங் கரையில் அமைந்துள்ளது... வாணியம்பாடியில் குறிப்பிடத் தக்க இரண்டு கோயில்கள் உள்ளன. ஈஸ்வரன் கோயிலில் இருபதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. அவை

விக்கிரமாதித்தியன் காலம் தொட்டு மிகப் பழமை வாய்ந்தவை யென்று சொல்லப்படுகிறது. விஷ்ணு கோயிலில் அல்லாளப் பெருமாள் குடி கொண்டுள்ளார். அக்கோயில் சுவரில் ஆறு கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் மூன்றின் படிகளை மட்டும் எடுக்க எனக்கு நேரம் இருந்தது. அவையும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் படவில்லை. அதன்படி, நரசிங்க தேவராயர் காலத்தில் சர்வஜித்து ஆண்டு மகம் மாதம் இரண்டாம் நாள் அன்று ஒரு கிராமத்தை இப்பெருமாள் கோயிலுக்கு அளித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது கல்வெட்டு சாலிவாகன ஆண்டு 1460 (கி.பி. 1538), சித்திரை மாதம் 12ஆம் நாளுக்குரியது. அதில் வீரப் பிரதாப சதாசிவ ராயரின் மகன் நைய தேவர், அல்லாளப் பெருமாளுக்கு ஒரு கிராமத்தை வழங்கிய செய்தி உள்ளது. மூன்றாவது கல்வெட்டு சாலிவாகன ஆண்டு 1464 (கி.பி.1542) கார்த்திகை மாதம் 15ஆம் நாளில் எழுதப்பட்டது. அதில் சதாசிவராயரின் மகன்களான வெங்கடாத்திரி ராஜாவும், ராமராஜாவும் தலா ஒரு கிராமத்தை அக்கோயிலுக்கு வழங்கியுள்ளனர். அவர்கள் அனகுந்தி வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் போலும். ஆனால் இதிலுள்ள தேதி ராமப்பாவின் ஆண்டிற்குச் சேர்ந்ததா என உறுதி செய்ய முடியவில்லை... இம்மூன்று கல்வெட்டுகளின் பிரதிகள் வங்காள அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டுள்ளன....

'ஜூன் 25 ஆம் தேதி 13 மைல்கள் கடந்து **ஆம்பூருக்குச்** சென்றேன். கடந்து வந்த சாலை பாலாறு ஓடும் ஒரு அழகிய பள்ளத்தாக்கினிடையே சென்றது. வாணியம்பாடிக்கருகே இப்பள்ளத்தாக்குப் பகுதியில் போதுமான அளவில் விவசாயம் செய்யப்பட்டுள்ளது; போதுமான மக்கள் தொகையும் உள்ளது. ஆம்பூருக்கு அருகில் பனைமரங்கள் அதிக அளவில் வளர்ந்துள்ளன. ஆனால் அவை பெரும்பாலும் பயன்படுத்தப் படாமல் உள்ளன. காரணம்... இரண்டு முறை ஐதர் அலி படையெடுத்துச் சென்றபோது இப்பகுதி வழியே நாசங்களை விளைவித்ததாகும்... ஆம்பூருக்கருகில் பாராமகாலின் எல்லை முடிந்து, ஆர்க்காட்டின் பிராந்தியம் ஆரம்பிக்கிறது. கிருட்டிணகிரியிலிருந்து இதுவரை வந்த சாலை மிக

நேர்த்தியாக உள்து. எல்லையோர ஊரான ஆம்பூர் நகரத்திற்கு மலைக்கோட்டையின் பாதுகாப்பு உள்ளது. அதில் பிரிட்டிஷாரின் பட்டாளம் இன்னும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது...'

இவ்வாறு குறிப்பிட்டு வரும் புக்கானன் பாராமகாலின் எல்லையைக் கடந்து சென்ற ஊராக ஆம்பூரைக் குறிப்பிட்டுள்ளார். ஆக, கருநாடகத்தைக் கடந்து இதுவரை அவர் பார்த்து வந்த பகுதிகள் அன்றைய சேலம் மாவட்டத்தைச் சேர்ந்ததாகும். ராயக்கோட்டையிலேயே தனது ஆய்வுகளை முடித்துக் கொண்டதாகக் குறிப்பிட்ட புக்கானன் தனது சுற்றுப் பயணத்தை விரைவில் முடித்துக் கொள்ளவிருக்கிறார்.

கொங்கு நாட்டின் இரண்டு முக்கிய மாவட்டங்களான கோயம்புத்தூர் மற்றும் சேலத்தை புக்கானன் சுற்றிப் பார்த்துவிட்டகன்ற இடம் ஆம்பூர். இத்துடன் நாம் அவருக்கு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடை தருவோம். ஊக்கம், மனத்திட்பம், மதிநுணுக்கம், தளரா முயற்சி போன்ற குணங்களுடன் அவர் கொங்கு நாட்டைக் கண்டு, கேட்டு, அறிந்து சேகரித்தச் செய்திகளை முறைப்படுத்தித் தந்துள்ளமைக்கு நன்றி கூறும் தருணமும் இதுவாகும். அவர் தரும் செய்திகளில் அல்லது விதத்தில் நமக்கு உடன்பாடில்லா இடங்களும் இருக்கக்கூடும். அவர் ஒரு வெளிநாட்டுக்காரர்; நமது மொழி, கலாச்சாரத்தை ஆழமாக அறியாதவர்; அவர் வந்து சென்ற காலம் குறைவானது போன்றவை அவற்றுக்குக் காரணங்களாக அமைந்திருக்கலாம். ஆனாலும், நமது வணக்கத்திற்கும் நன்றிக்கும் அவர் உரியவர் என்பது தெளிவு!

## 19

# சென்னையை அடைதல் - பயணத்தின் முடிவு

**ஆ**ம்பூரைத் தாண்டியபின் பத்தாவது நாளில் சென்னைக்குத் திரும்பினார் புக்கானன். அடுத்த நாள் (26.6.1801) அவர் பதின்மூன்று மைல் தூரம் கடந்து அன்னவன் நெல்லூர் என்னும் கிராமத்தை அடைந்தார். பாலாற்றங்கரைக்கருகில் உள்ள அவ்வூர்ப் பகுதியில் நெல் வயல்கள் அதிகம் தென்பட்டதாகக் குறிப்பிடுகிறார் - அவ்வயல்களுக்கு வாய்க்கால்கள் மூலமாக நீர்ப்பாசனம் கிடைத்ததாம்.

**விருஞ்சிபுரம்**

மறுநாள் (ஜூன் 27) பதினோறு மைல்கள் சென்று பாலாற்றைக் கடந்து, விருஞ்சிபுரத்தை அடைந்தார். சென்னையிலிருந்து புறப்பட்டு வந்தபோது ஏற்கனவே அவர் இவ்வூருக்கு வந்துள்ளார் (மே 1, 1800). அவர் இப்போது குறிப்பிடுகிறார்:

'முன்பு இது பெரிய ஊராக விளங்கியது. இந்து மற்றும் முஸ்லிம்கள் காலத்தில் பல அரசாங்கக் கட்டடங்கள் இருந்தன. அவையெல்லாம் ஐதர் அலி மேற்கொண்ட யுத்தங்களின்போது அழிக்கப்பட்டன. ஈஸ்வரனுடைய ஒரு பெரிய கோயில் தப்பியது. அக்கோயிலைச் சுற்றி பெரிய அளவிலான 'கிரானைட்' கற்கள் கொண்ட மதிற்சுவர்கள் இருந்தன. ஐதர்

அலிக்குக் கோயில்களை அழிப்பதில் ஆர்வம் இருந்ததில்லை. அக்கோயில் சுவர்களில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவை கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. அவை மிகவும் பழமை வாய்ந்தவை என்று சொல்லப்படுகிறது. இவ்வூர்ப் பிராமணர்கள் அவற்றின் படிகளை எடுத்து எனக்கு அனுப்புவதாகக் கூறினார்கள். ஆனால் சொன்னதை அவர்கள் செய்யவில்லை. அவர்கள் நவாபைப் பற்றிக் குற்றம் சொல்வதில் ஈடுபாடு காட்டினார்கள். நவாபோ, இக்கோயிலுக்கு வருடம் ஆயிரம் பகோடா மானியம் வழங்குகிறார்...'

அடுத்த நாள் எட்டு மைல் தூரம் சென்று, வேலூருக்குக் கிழக்கில் சிறிது தொலைவில் உள்ள ஒரு இடத்தில் தங்கினார். ஐதர் மற்றும் திப்புவின் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்காகக் கட்டப்பட்டு வந்தகட்டடங்களைப் பார்த்தார். முஸ்லிம் களுக்கான பாணியில் அக்கட்டடங்கள் உருவாயினவாம். கட்டடங்களின் கலையம்சம் நவநாகரிகமாயிருந்ததாம். தாராள இடவசதியிருந்தன- சீரங்கப்பட்டணம் அரண்மனையி லிருந்ததைவிட இடவசதி கூடுதலாகியிருந்ததாம்.... என்கிற மாதிரிக் குறிப்பிட்டு வரும் புக்கானன், திப்பு சுல்தானின் மூன்று மகன்களின் படங்களையும் காட்டியுள்ளார். அவற்றில் மூத்த மகன் ஃபத்தே ஐதரின் (Fatah Hyder) படம் :



**ஜூ**ன் 29ஆம் நாள் அவர் பதிநான்கு மைல்கள் கடந்து வாலாஜாபேட்டை என்கிற வாலாஜாபாத்திற்குச் சென்றார். அடுத்த நாளும் அவர் அங்கேயே தங்கினார். அந்நகரைக் கட்டச் செய்தவர், முந்தைய நவாப் மொகமது அலி வாலாஜா எனக் குறிப்பிட்டுள்ளார். (இவரது பெயரால்தான் சென்னை வாலாஜா சாலை அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது - இவர் தனது இருப்பிடத்தை மாற்றியிருந்தார்).

**ஒச்சூர் சத்திரம்**

ஜூலை 1ஆம் தேதி சிறிது தூரம் சென்று ஒச்சூர் சத்திரத்தை அடைந்தார். சென்ற வழியில் நீர்ப்பாசனம் மிக நன்றாக இருந்ததாம் - பல ஏரிகள் இருந்தனவாம். ஜூலை மாதத்திலும் நெற்பயிர்கள் நன்கு விளைந்திருக்கக் கண்டாராம். அவர் எழுதுகிறார்:

'ஒச்சூர், பயணிகளுக்காகக் கட்டப்பட்ட ஓடுகளால் வேய்ந்ததொரு கட்டடம். இவ்வாறான கட்டடம் உள்ளூர் மொழியில் 'சாவடி' என்று அழைக்கப்படுகிறது. அதைத்தான் ஆங்கிலத்தில் 'சௌல்ட்ரி' (Choultry) என்று அழைக்கின்றனர் போலும்.* நீண்ட கூடம் அமைக்கப்பட்ட அம்மாதிரியான கட்டடம் ஒன்றில் உள்ளூர் அதிகாரிகள் தங்களின் காரியாலயத்தையும் அமைத்துப் பணிபுரிகின்றனர். அதன் பின்பகுதியில் பயணியர் தங்குவதற்காகக் கட்டப்பட்ட கட்டடங்களை 'சத்திரம்' என்று மக்கள் அழைக்கின்றனர். மதராஸிற்கு அருகில் 40 அல்லது 50 மைல்கள் தூரத்திற்குள் அவ்வாறான பயனுள்ள கட்டடங்கள் பல உள்ளன. அவற்றை வசதிமிக்க உள்ளூர் வணிகர்கள் கட்டுகின்றனர்...

'இங்கு அழகியதொரு குளம் உள்ளது. நிலத்தை வெட்டி சதுர வடிவில் உருவாக்கப்பட்டது. அதன் ஓரங்களில்

* சேலம் மாவட்டத்தில் இதுபோன்றதொரு சாவடி ஆங்கிலேயர் ஒருவரின் பெயர் கொண்டு விளங்கும் இடம், 'மகுடஞ்சாவடி'. சேலத்திலிருந்து மேற்கில் இருபது கி.மீ. தூரத்திலுள்ளது. 'மாக்டொனால்ட்' என்ற ஆங்கிலேய ராணுவ அதிகாரியால் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு சாவடி கட்டப்பட்டது. அவ்வூரின் பெயர் 'மாக்டொனால்ட் சௌல்ட்ரி' என்று (MacDonald Choultry) ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது.

'கிரானைட்' கற்களால் செய்யப்பட்ட படிகள் அமைக்கப் பட்டுள்ளன. பயணியர் பயன்பாட்டிற்கான இடமாகவோ, அருகிலுள்ள மக்களின் பயன்பாட்டிற்கோ அவ்வாறு அமைக்கப்படும் நீர்நிலையைத் தமிழில் 'குளம்' என்றும், கன்னடத்தில் 'குண்டை' (Cuntay) என்றும், தெலுங்கிலும் தெற்கத்தி முஸ்லிம்களாலும் குண்டா (gunta) என்றும் அழைக்கப்படுகிறது. அதுவே கோயிலில் அமைக்கப் பட்டிருந்தால் கல்யாணி, சரோவர், தீர்த்தம் அல்லது புஷ்கர்ணி என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்படுகிறது...'

**காஞ்சிபுரம்**

ஜூலை 2 அன்று கம்பெனியின் ஆட்சிப் பகுதியாகிய காஞ்சிபுரத்திற்குச் சென்றார். கடந்த ஆண்டு கோடையில் அவர் காஞ்சிக்குச் சென்றபோது (ஏப்ரல் 26, 1800) பார்த்ததைவிட இப்போது அப்பகுதியில் பசுமை அதிகம் தென்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். காரணம் - இந்தப் பருவத்தில் பெய்யும் மழை கடந்த ஆண்டில் அவர் வந்திருந்த போது துவங்க வில்லை; இந்த ஆண்டு ஜூன் மாத மழை வழக்கத்தைவிட நன்றாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

**வீரப்பெருமாள் சத்திரம்**

அடுத்த நாள் அவர் வீரப்பெருமாள் சத்திரத்திற்குச் சென்றார். ஏற்கனவே, ஏப்ரல் 25, 1800 அன்று அவர் அங்குச் சென்றிருந்தார். இப்போது அவர் தரும் புதிய தகவலைக் காண்போம்:

'இங்குள்ள சத்திரத்தைக் கட்டியவர் வீரப்பெருமாள் என்ற மதராஸ் 'துபாஷி'. மதராஸில் இருமொழி பேசுபவர்களாக மூன்று வகுப்பினர் உள்ளனர். அவர்கள் மொழி பெயர்ப் பாளர்கள்; சூத்திரர் வகுப்பினர். அதில் முதல் பிரிவினர் வங்காளத்தில் உள்ள கயஸ்தா போன்றவர்கள்; இவர்கள் கணக்குப்பிள்ளை என்று இங்கு அழைக்கப்படுகின்றனர். ஆனால் கணக்கு எழுதும் கர்ணம் உத்தியோகம் பார்க்கும் பிராமணர் மற்றும் சூத்திரர் அனைவரையும் கணக்குப்பிள்ளை

என்றே ஐரோப்பியர்கள் குறிப்பிடுகின்றனர்... 'துபாஷி' வேலை பார்க்கும் அடுத்த பிரிவினர், படிப்பறிவு கொண்ட கொல்லர் அல்லது யாதவர்கள். அவர்களில் சிலர் தெலுங்கு பேசுபவர்; மற்றவர் திராவிட தேசத்தவர்கள். இவ்வகுப்பினரின் இயல்பான தொழில் ஆடு-மாடுகளை வளர்ப்பது. இவர்களில் உள்ள துபாஷிகளில் சிலர் தங்கள் வகுப்பினரின் பரம்பரைத் தொழிலை விட்டுவிட்டனர். அவர்கள் தம்மை மிக உயர்வாக மதிக்கின்றனர் - காரணம், கிருஷ்ண பகவானுக்குச் சொந்தக் காரர்கள் என்பதால். அதனால், தங்களின் பெயர்களை விஷ்ணுவின் நாமத்தில் வைத்துக் கொள்கின்றனர்; உதாரணமாக, ராமப்பிள்ளை, நாராயணப் பிள்ளை போன்று - மொழி பெயர்ப்பாளர்களில் மூன்றாவது வகையினர், வேளாளர் ஆவர். அவர்கள் உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். அவர்களைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன் (பார்க்க: அத்தி. 15). இவர்களில் படித்தவர்கள், உழவு வேலையை விடுத்து, தங்களை முதலிகள் என்று பெயர் கொண்டுள்ளனர். அவர்கள் தமிழர்கள்; அவர்கள் திராவிட தேசத்தைவிட அதிக அளவில் சேர, சோழ, பாண்டிய நாடுகளிலும், அருகிலுள்ள இலங்கைத் தீவிலும் வசிக்கின்றனர். இம்மூன்று வகுப்பினரில் ஒவ்வொரு வகுப்பினரும் தாம் மற்ற இருவரைக் காட்டிலும் உயர்ந்தவர் என்று கூறிக் கொள்வராம்'....

## திருப்பெரும்புதூர்

அடுத்ததாகப் புக்கானன் சென்ற ஊர் ஸ்ரீபெரும்புதூர். அங்குள்ள கோயில், ராமானுசர், வைணவத்தின் பதினெட்டு ஆழ்வார்கள், எட்டு ஆச்சாரியர்கள், கலியுகம் முதல் இப் பகுதியை ஆண்ட மன்னர்களின் பட்டியல் போன்ற விவரங்களைத் தந்துள்ளார். அவற்றில் ஒரு பகுதி.

'ஜூலை 4ஆம் நாள் : நான் ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்றேன். சாலையிலிருந்து சுமார் ஒரு மைல் தள்ளி உள்ளே அமைந்துள்ளது இவ்வூர். இங்கு ஒரு புகழ்பெற்ற கோயிலும் அக்ரகாரமும் உள்ளன. ராமானுஜாச்சாரியார் பிறந்து பெரும் கீர்த்தி பெற்ற இவ்வூரைக் காண நான் விருப்பமுடன் இருந்

தேன். இங்குள்ள கோயிலுக்கு அரசாங்கம் ஆண்டுதோறும் 250 பகோடாக்கள் மானியம் வழங்குகிறது. இக்கோயிலைச் சார்ந்த 53 வைதிக திருவைணவ பிராமணர்களுக்கு இத்தொகை மிகவும் குறைவு. பிறர் காணிக்கைகளுடன் அவர்கள் வசதியுடனிருக்க முடிகிறது. இவ்வூரின் நிர்வாக அதிகாரியான அமீன், இங்குள்ள படித்த பிராமணர்களைக் கூட்டி வந்தார். அவர்கள் தெரிவித்ததன்படி இங்கே முதலில் ஒரு விஷ்ணு கோயில் இருந்தது; பிறகு, ராமானுசர் பிறந்த ஊரானதால் இக்கோயிலின் புகழ் பெருகிற்று; கோயில் விரிவு பெற்றது. அந்த ஆச்சாரியரின் திருவுருவமும் கோயிலில் அமைக்கப் பட்டுள்ளது. கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் இக்கோயில் இப்போதுள்ள பெரிய அளவாக விரிவாக்கப் பட்டது...

'ராமானுசருக்கு முன் இப்பகுதியில் புத்த மதத்தினரும் சாலிவாகனரும் அதிகம் இருந்தனர். இப்போது அவர்கள் அநேகமாக இல்லை எனத் தெரிகிறது...'

திருப்பெரும்புதூரை விட்டுக் கிளம்பியதும் சென் னைக்குத் திரும்பியதை 'சுருக்'காக முடிக்கின்றார் புக்கானன். அவருடைய முழு சுற்றுப்பயணத்திலும் கொங்குநாட்டுப் பயணத்தில் அவர் எதிர்பார்த்த சில தகவல்கள் அவருக்குக் கிடைக்கவில்லை எனவும் குறைபட்டுக் கொள்கிறார். அவர் கூறுவதைக் கேட்போம்.

'ஜூலை 5 ஆம் நாள் நான் கண்டத்துறைக்குத் திரும்பி னேன். அடுத்த நாள் மதராஸிற்கு வந்தேன். கிழக்கு மலைத் தொடரைக் கடந்து வந்தபோது அப்பகுதிகள் முன்னேறி வருவதற்கான அறிகுறிகளைக் காண முடிந்தது. குறிப்பாக ஐரோப்பிய நகரமான மதராஸை நெருங்கி வர, வர முன்னேற்றம் இன்னும் கூடுதலாகத் தெரிந்தது.

'எனக்கு ஒரு பெரும் ஏமாற்றம் உள்ளது. பாராமகால் மற்றும் கோயமுத்தூரை மேலாண்மை செய்யும் கனவான் களிடம் (கிரகாம் மற்றும் மாக்ளியாட்-ஐக் குறிப்பிடுகிறார்!) நான் அனுப்பி வைத்த கேள்விகளுக்கான பதில் வந்து

சேரவில்லை. அவர்களின் உதவி எனக்குத் தேவையாயிருந்தது. அவர்களுடைய திறமையும் விஷய ஞானமும் எனக்கு உதவியிருக்கக் கூடும். - நான் தந்துள்ள விவரங்களில் ஏதேனும் தவறுகள் நேர்ந்திருந்தால் அவற்றைக் களைய அவர்களின் பதில் உதவி புரிந்திருக்கும். இதற்குமேல் அதிக விவரங்களைப் பெற ஒரு பயணியால் முயற்சியை மேற்கொள்ள இயலாது...' என்று தனது ஆதங்கம் ஒன்றை வெளிப்படுத்தியுள்ளார் புக்கானன்.

**கொ**ங்குநாட்டுப் பகுதிகள் குறித்து மேலும் சரியான, கூடுதல் விவரங்களைப் பெற்றுத் தர புக்கானன் காட்டிய முனைப்பிற்கு நாம் வணக்கம் கூறுவோம்! அவருக்கிருந்த ஒரு மனக்குறையை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இருப்பினும், அவர் தந்துள்ள விவரங்களை இருநூற்றுப் பத்து ஆண்டுகள் கழித்து அசை போட்டுப் பார்ப்பதில் இன்பமும் சுகமும் தோன்றுகிறதல்லவா!!

## 20

# டாக்டர் புக்கானன் - வாழ்க்கைக் குறிப்பு

*டாக்டர் பிரான்சிஸ் புக்கானன் 15.2.1762இல் பிறந்தார். இங்கிலாந்திலுள்ள ஸ்காட்லாந்தின் பெர்த்ஷையர் என்னும் பகுதியைச் சேர்ந்தவர். இளமையில் முறையாகக் கல்வி பயின்று எடின்பரோ பல்கலைக் கழகத்தில் மருத்துவத்தில் பட்டம் பெற்றார் (1783). தாவரவியலையும் தனியாகப் படித்தார். கப்பற் பயணங்களில் மருத்துவராகப் பணியாற்றி வந்த அவர், அப்பயணங்களினால் உடல் நலம் குன்றியதால் அவ்வேலையை விட்டகன்றார். பின்னர், கிழக்கிந்தியக் கம்பெனியின் வங்காளப் பிரிவில் மருத்துவர் (Surgeon) பணியில் நியமனம் பெற்றார் (1794). அவ்வாறு அவர் மருத்வராகப் பணியாற்றி வந்த நேரத்தில் இறுதி (நான்காவது) மைசூர்ப் போர் தென்னிந்தியாவில் நிகழ்ந்தது.*

*புக்கானனின் படிப்பையும் ஊக்கத்தையும் கண்ட கவர்னர் ஜெனரல் மார்க்விஸ் வெல்லெஸ்லி பிரபு, அவரைத் தென்னிந்தியாவிற்கு அனுப்ப முடிவு செய்தார். போரில் நிகழ்ந்த திப்பு சுல்தானின் மரணத்திற்குப் பிறகு மைசூர் ராஜாவின் கீழிருந்த பகுதிகளையும், இறுதி மைசூர்ப் போரிலும் அதற்கு முந்தைய போர்களிலும் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கிடைத்த பகுதிகளுக்குச் சென்று, அங்கு நிலவிய 'வேளாண்மை,*

தொழில்கள் மற்றும் வணிகம், மதம், மக்களின் வாழ்வியல் முறைகள், வரலாறு மற்றும் இயற்கை வளங்கள், புராதன அமைப்புகள்' போன்றவற்றை விசாரித்து அறிக்கைத் தருமாறு பணிக்கப்பட்டார் (24.2.1800). அவருக்களித்த உத்தரவில் மூன்றாவது மைசூர்ப் போரின் முடிவில் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கிடைத்த பகுதிகளில் ஒன்றான (அன்றைய) பாராமகால்- சேலம் ஜில்லாவைப் பற்றிக் குறிப்பிடப்பட வில்லை. அந்தப் பணியை பாராமகால்- சேலம் கலெக்டராக இருந்து (தலைநகர் திருப்பத்தூர்), பணி ஓய்வு பெற்று தாய் நாடான இங்கிலாந்திற்குத் திரும்பும் முன் சென்னையி லிருந்தபடி அலெக்சாண்டர் ரீடு செய்து கொண்டிருந்தார். மதராஸிலிருந்து புக்கானன் கிளம்புவதற்கு முன் (23.4.1800) சேலம் ஜில்லா பற்றிய தனது அறிக்கையை சென்னை வருவாய் வாரியத்திடம் அலெக்சாண்டர் ரீடு சமர்ப்பித்தார் (4.4.1800) என்பது குறிப்பிடத்தக்கது.

புக்கானன் செல்லவிருந்த சாலை வழிகளைக் காட்ட மேஜர் கிராஃபோர்டு (Major C.Crawford) உருவாக்கிய வரைபடம் அவருக்குத் தரப்பட்டது. மேஜர் ரென்னலின் (Major Rennel) சாலை வரைபடமும் அவருக்குத் தரப்பட்டது. அவற்றைப் பார்த்து தடங்களைப் பிடித்துச் சென்றார் புக்கானன். அவர் சென்ற இடங்களில் கலெக்டர் முதல் கணக்குப்பிள்ளை வரையான அரசு அலுவலர்கள் அவருக்கு வேண்டிய உதவி களையும், தகவல்களையும் தரப் பணிக்கப் பட்டிருந்தனர். சில இடங்களில் அவருடைய எதிர்ப்பார்ப்புகளின்படி அலு வலர்கள் அவருக்குக் கைகொடுக்கவில்லை. [உதாரணம் : பவானி/16-17, அக்டோபர், 1800; வட கோயம்புத்தூர் கலெக்டர் மாக்ளியாட் அவரை வந்து பார்க்கவில்லை. இத்த னைக்கும் அவ்விருவரும் இங்கிலாந்தின் ஸ்காட்லாந்துக் காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது - புக்கானனைவிட மாக்ளியாட் வயதில் மூத்தவர்.]

புக்கானன் தனது பிரயாணங்களை முடித்த சமயத்தில் கர்னல் மெக்கன்ஸி (Lt.Clonel Mackensie) ஒரு வரைபடத்தைத்

தந்தார். அதில் இடம் பெற்றிருந்த இயற்கை அமைப்பு, சாலைகள் போன்ற விவரங்கள் மற்ற இரண்டு வரைபடங்களை விட மேம்பட்ட தகவல்களைத் தெரிவித்தனவென்று அவர் குறிப்பிட்டுள்ளார். அவற்றைக் கண்டு, தான் எழுதியவற்றில் சிலதைத் திருத்தம் செய்ததாகவும் கூறுகிறார். தகுந்த நேரத்தில் மெக்கன்ஸியின் வரைபடம் கிடைத்திருந்தால் மேலும் விவரங்களைக் கண்டு, குறிப்பிட்டிருக்க முடியும் என்கிறார் அவர்.

ஜூலை 6, 1801 அன்று சென்னைக்குத் திரும்பினார், புக்கானன். பின்னர் கல்கத்தாவிற்குச் சென்றார். பர்மா, அந்தமான் தீவுகள் நேபாளம், வங்காளம் போன்ற பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் அவர் அனுப்பப்பட்டார் (1802-1809). அவர் எழுதியவற்றுள் பிரம்மபுத்திரா நதியின் மீன்கள், நேபாளத்தின் வரலாறு, வங்கம் சம்பந்தமான ஆய்வறிக்கைகள் போன்றவை அடங்கும். இடையில் கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபுவின் மருத்துவராக 1803-1804இல் பணிபுரிந்தார். 1814இல் அவர் கல்கத்தாவிலுள்ள தாவரவியல் தோட்டத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். கல்கத்தாவின் அலிப்பூர் மிருகக்காட்சிச் சாலையை அமைக்க அவர் காரணமாயிருந்தார்.

புக்கானனின் உடல்நிலை சரியில்லாமற் போனதினால் 1815இல் தாய்நாட்டிற்குத் திரும்ப முடிவு செய்தார். திரும்பிய பின்னர் அவரது தாய்வழிச் சொத்துக்களுக்கு வாரிசானார். அதன் நிமித்தமாக அவரது பெயரில் மாற்றமும் ஏற்பட்டது. தாய்வழியின் பரம்பரைப் பெயரான 'ஹாமில்டன்' (Hamilton) என்பதைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டார். 'பிரான்சிஸ் ஹாமில்டன்' என்று பெயர் மாறியது. ஆயினும் மற்றவர்கள் அவரை 'பிரான்சிஸ் ஹாமில்டன் புக்கானன்' என்று குறிப்பிட்டு வருகின்றனர். 15.6.1829 அன்று அவர் இங்கிலாந்தில் காலமானார்.

O

# உதவிய நூல்கள்


1. A journey from Madras thorugh the countries of Mysore, Canara and Malabar ... Francis Buchanan M.D., F.R.S. - 1807

2. Report to the President and Members of Revenue Board by Alexander Read - April 4, 1800

3. The Life of Sir Thomas Munro - G.R.Gleig- 1830/1849

4. Thirty years in India-Major Henry Bevan-1839

5. The History of Hyder Shah alias Hyder Ali Khan Bahadur and of his son Tippoo Sultan - By M.M.D.L.T., General in the army of the Mogul Empire- Revised and corrected by H.H.Prince Gholam Mohammed, the only Surviving son of Tippoo Sultan - 1855.

6. History of Mysore - Mark wilks - 1869

7. Salem District Manual - H.LeFanu - 1883

8. Mysore - A Gazetteer- B.Lewis Rice - 1897

9. Coimbatore District manual, Vol.II - Sir Harold stuart, I.C.S. - 1898

10. Baramahal Records.

11. Guide to Records, Salem/ Coimbatore

12. History of the Nayaks of Madura - A Sathianatha Aiyar - 1924

13. The Kongu country - Dr. M. Arokiasamy, 1956

14. District Gazetteer, Coimbatore - B.S. Baliga - 1966

15. District Gazetteer, Salem - A Ramaswamy - 1967

16. History of the Wodeyars of Mysore - A.Satyanarayana - 1996.

17. Tipu Sultan - B.Sheik Ali, 1982

18. District Gazetteer, The Nilgiris - 1995

19. தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும் - கே.கே.பிள்ளை.

*20. தமிழக வரலாறும் பண்பாடும் - 1976 - வி.டி. செல்லம்.*

*21. திண்டுக்கல் மாவட்டத் தொல்லியல் கையேடு - 2007 - தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.*

*23. தென்னாட்டுப் போர்க்களங்கள் - கா.அப்பாதுரை*

*23. விடுதலைப் போரில் விருப்பாச்சி கோபால் நாயக்கர், எம்.பி. மணிவேல், 2003.*

*24. வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த தீரன் சின்னமலைக் கவுண்டர், செ. இராசு, 1996.*

*25. 1800-1801 முதல் விடுதலைப் போர், டாக்டர் கே.ராஜய்யன் - தமிழில்: பொன். சின்னத்தம்பி முருகேசன், 2012*

○○○

*இந்நூலின் முந்நூறு பிரதிகளைப்
பெற்றுக்கொள்ள இசைந்துள்ள மஹேந்ரா கல்வி
நிறுவனங்களின் நிறுவனர்*

**எம்.ஜி. பாரத்குமார்**

*(காளிப்பட்டி அஞ்சல் - 637 501, திருச்செங்கோடு
தாலுகா) அவர்களுக்கு நூல்
வெளியீட்டாளர்களின் நன்றி உரித்தாகின்றது.*



பிரான்சிஸ் ஹாமில்டன் புக்கானன்
(கி.பி. 1762-1829)



**முனைவர் புலவர் செ. இராசு**
தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் கல்வெட்டியல் துறையின் மேனாள் தலைவர். கொங்குநாடு சார்ந்த பல ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். தமிழ்நாடு அரசின் உ.வே.சா. விருதினைப் பெற்றவர் (2012).



**இடைப்பாடி அமுதன்**
தொலை தொடர்புத்துறை- பி.எஸ்.என்.எல்-இல் துணைப் பொது மேலா-ளராக (நிதி) ஓய்வு பெற்றவர். இவர் ஒரு 'காஸ்ட் அக்கௌண்டன்ட்' கொங்குநாடு சார்ந்த இவரது மூன்றாவது நூல் இது.



இவ்விருவரும் எனது மதிப்புமிகு நண்பர்கள். 'கொங்குநாட்டு வரலாறு' குறித்து பல கோணங்களில் தமக்கேயுரிய வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள். டாக்டர் பிரான்சிஸ் புக்கானன், அலெக்சாண்டர் ரீடு போன்றோர் கி.பி. 1800இல் எழுதியுள்ள கொங்குநாடு பற்றிய குறிப்புகளை முக்கிய ஆதாரமாகக் கொண்டும், வேறு பல நூல்களை ஆய்ந்தும் தமிழில் இந்நூலைத் தந்துள்ளனர். படித்து, பாதுகாத்துப் பயன்பெற வேண்டிய நூல்...

**புலவர் வெ. இரா. துரைசாமி,**
**நாமகிரிப்பேட்டை.**